தமிழ் அக இலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு

அழகப்பா பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

சி. பரமேஸ்வரி எம்.ஏ., எம்.பில்.,

(பதிவு எண் : 815)

நெறியாளர்

முனைவர். **சு. இராசாராம்** எம்.ஏ., (தமிழ்) எம்.ஏ., (மொழியியல்)

எம்.பில்., பி.எட்., பிஎச். டி.,

இணைப் பேராசிரியர்

தமிழ்த்துறை

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் 'ஏ' தகுதி பெற்றது)

காரைக்குடி - 630 003.

செப்டம்பர் - 2008.

முனைவர் சு.இராசாராம், எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ.,(மொழியியல்),
எம்.பில்.,பி.எட்.,பிஎச்.டி.,

இணைப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

அழகப்பா பல்கலைக்கழகம்,

காரைக்குடி - 630 003.

நாள் : 26.09.08

நெறியாளர் சான்றிதழ்

"தமிழ் அக இலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு" என்னும் தலைப்பில் **செல்வி.சி.பரமேஸ்வரி** அவர்கள் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் செய்த இவ்வாய்வு, அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும் இவ்வாய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

26/9/2008

துறைத்தலைவர்
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-630 003

(முனைவர் சு.இராசாராம்)

நெறியாளர்

முனைவர் சு. இராசாராம்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-630 003

சி.பரமேஸ்வரி, எம்.ஏ.,எம்.பில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள் : 26.09.08

ஆய்வாளர் உறுதிமொழி

"தமிழ் அக இலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு" என்னும் தலைப்பில் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்வாய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

சி.பரமேஸ்வரி.
(சி.பரமேஸ்வரி)
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்

முனைவர் சு.இராசாராம், எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ.,(மொழியியல்), எம்.பில்.,பி.எட்.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நன்றியுரை

"தமிழ் அக இலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள அனுமதி வழங்கிய அழகப்பா பல்கலைக் கழகத்திற்கும் தமிழ்த்துறைக்கும் எனது உளம் கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆய்வுத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இவ்வாய்வு சிறப்புற உறுதுணை புரிந்த ஆய்வு நெறியாளர் முனைவர் **சு.இராசாராம்** அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

பல்வேறு அறிவுரைகளைக் கூறி ஆய்வு செய்யத் தூண்டிய தெய்வத்திரு. முனைவர் **இரா.பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கு என்றும் எனது நன்றி உரியதாகும்.

ஆய்விற்குரிய நூல்களை வழங்கி, தன்னம்பிக்கையை ஊட்டி வழிப்படுத்திய முனைவர் **சே.செந்தமிழ்ப்பாவை** அவர்களுக்கு எனது நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆய்வினை விரைந்து முடிக்கத் தூண்டிய பேராசிரியர் **ம.கார்மேகம்**, முனைவர் **க.காந்தி**, பேராசிரியர் **சே.கோச்சடை** அவர்களுக்கும் அழகப்பா அரசு கலைக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **ம.துரை**, முனைவர் **கே.கண்ணாத்தாள்**, முனைவர் **ச.முருகேசன்**, பேராசிரியர் **மா.சிதம்பரம்** மற்றுமுள்ள அனைத்துப் பேராசிரியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்கான நூல்களைத் தந்துதவிய அழகப்பா பல்கலைக் கழக மைய நூலகர், நூலக அலுவலர்கள், அழகப்பா பல்கலைக் கழக அலுவலர்கள் ஆகியோருக்கு எனது நன்றி.

கல்வி வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவி, இந்நல்நிலைக்கு உயர்த்திய எனது ஆருயிர்ப் பெற்றோர் **மு.சின்னையா, சி.ராஜம்** அவர்களுக்கும் எனது அன்புச் சகோதரர் **சி.தென்னரசு-தெ.முத்துலெட்சுமி**, சகோதரி **ஜா.கலைச்செல்வி-ஆ.ஜான்போஸ்**, மைத்துனர் **அ.அற்புதசாமி** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

ஆய்வில் என்னை ஊக்கப்படுத்திய நண்பர்கள் முனைவர் **சோ.முத்தமிழ்ச்செல்வன்**, முனைவர் **க.சொல்லேருழவன்**, முனைவர் **ப.சு.செல்வமீனா, க.சுப்பிரமணியன், கு.கலைவாணி, கரு.மணிமேகலை, இர.தாமரைச்செல்வி, சொ.அழகுமாலா, த.கண்ணன், இரா.குணசீலன், இராம.தேவணன், ச.கணேஷ்குமார்** ஆகியோருக்கு எனது உளம் கலந்த நன்றி.

இவ்வாய்வேட்டைச் செம்மையாகவும் நேர்த்தியாகவும் கணினியில் அச்சாக்கம் செய்த காரைக்குடி மகேஷ் கம்யூட்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் கட்டமைப்புச் செய்த ரவி அச்சகத்தாருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

சி.பரமேஸ்வரி

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1. அக.விளக்.	-	அகப்பொருள் விளக்கம்
2. ஆ.இ.	-	ஆண்டு இல்லை
3. ஆ.உ.	-	ஆய்வுரை
4. இல.விளக்.	-	இலக்கண விளக்கம்
5. இறை.	-	இறையனாரகப்பொருள்
6. உ.	-	உரை எண்
7. உ.ஆ.	-	உரையாசிரியர்
8. கட்.	-	கட்டுரை
9. கு.உ.	-	குறிப்புரை
10. குறிஞ்.நடை.	-	குறிஞ்சி நடையியல்
11. குறிஞ்.நெய்.நடை.	-	குறிஞ்சி, நெய்தல் நடையியல்
12. குறுந்.	-	குறுந்தொகை
13. சுவாமி.	-	சுவாமிநாதம்
14. சூ.	-	சூத்திரம்
15. செ.உ.ப.	-	செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர்
16. தி.கு.உ.	-	திருத்தமும் குறிப்புரையும்
17. தொ.ஆ.	-	தொகுப்பு ஆசிரியர்
18. தொ.கு.	-	தொகுப்பும் குறிப்பும்
19. தொல்.	-	தொல்காப்பியம்
20. நூ.	-	நூற்பா
21. நெய்.நடை.	-	நெய்தல் நடையியல்
22. ப.	-	பக்கம்
23. ப.ஆ.	-	பதிப்பாசிரியர்

24. ப.உ.	-	பதிப்பும் உரையும்
25. பக்.	-	பக்கங்கள்
26. பாலை நடை.	-	பாலை நடையியல்
27. மருத நடை.	-	மருத நடையியல்
28. முல்.நடை.	-	முல்லை நடையியல்
29. முல்.பாலைநடை.	-	முல்லை, பாலை நடையியல்
30. மேலது	-	மேலே குறிப்பிட்டது
31. வ.எண்.	-	வரிசை எண்
32. வி.உ.	-	விளக்கவுரை
33. வீர.	-	வீரசோழியம்
34. P.	-	Page

பொருளடக்கம்

		10. கூத்தர் கூற்று	
		11. பரத்தை கூற்று	
		12. காமக்கிழத்தி கூற்று	
		13. அறிவர் கூற்று	
		14. கண்டோர் கூற்று	
		15. இளையோர் கூற்று	
		16. வாயில்கள் கூற்று	
		17. பாகன் கூற்று	
		18. கட்டுவிச்சி கூற்று	
		19. உழையர் கூற்று	
		20. இல்லோர் கூற்று	
		21. கலந்துடன் வருவோர் கூற்று	
		22. தமர் கூற்று	
		23. ஊரார் கூற்று	
		24. அயலோர் கூற்று	

முன்னுரை

முன்னுரை

உலக மொழிகளுள் தமிழ் காலத்தால் பழமை வாய்ந்தது. இம்மொழியில் காலந்தோறும் பல்வேறு இலக்கணங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் பொருளிலக்கணம் மனிதனின் அக வாழ்வையும் புற வாழ்வையும் எடுத்துரைப்பது. இவற்றின் இலக்கணத்தை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகிய இயல்கள் விளக்குகின்றன. அக வாழ்க்கையில் இன்றியமையாததாகத் திகழும் மாந்தரது கூற்றுகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகிய இயல்கள் மொழிகின்றன.

தொல்காப்பியம் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூற்றினைக் குறிப்பிடும். ஒருவர் தன்னுடைய உள்ளக் கருத்தினைப் பிறருக்குத் தெரிவிக்கும்போது கூறினோர் இன்னார் என்பதைக் கேட்போருக்குத் தெரிவிக்கும் விதத்தில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்துரைப்பது கூற்று எனப்படும். அக இலக்கணங்களில் மாந்தரது கூற்றுகளை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் மாந்தரது செயல்முறைகள் கூற்றுகளாக வளர்ச்சி பெற்ற தன்மையினை உணர இயலும்.

ஆய்வுத் தலைப்பு

தமிழ் அக இலக்கணங்களில் வரையறுக்கப்பட்டுள்ள அக மாந்தரது கூற்றுகளை ஒப்பிட்டு ஆராயும் நிலையில், **"தமிழ் அக இலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு"** என்பது இவ்வாய்வுத் தலைப்பாகும்.

கருதுகோள்

அக இலக்கணங்களில் சிறப்பிடம் பெறுவது மாந்தரது கூற்றுகளாகும். தொல்காப்பியமும் இதற்குப் பின்னால் தோன்றிய அக இலக்கணங்களும் வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றியனவாகும். இவற்றால் தொல்காப்பிய மாந்தர் கூற்றுகள் பின் வந்த அக இலக்கணங்களில் மாறாதிருப்பது, வளர்ச்சி பெற்றிருக்கும் தன்மை, வீழ்ச்சி, தொல்காப்பியத்தில் கூறாது பிற அக இலக்கணங்களில் மொழியப்படும் புதிய கூற்றுகள் ஆகியவை இவ்வாய்வின் கருதுகோள்களாகும்.

ஆய்வு முன்னோடிகள்

கூற்று விளக்கத்தை ஆராயும் தனித்தொரு ஆய்வாகவும் அக இலக்கணங்களில் மாந்தரது கூற்றுகளை ஒப்பிட்டு ஆராயும் முழுமைபெற்ற ஆய்வாகவும் அமையும் இவ்வாய்விற்கு முன்னோடிகளாகப் பல ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தொல்காப்பிய மாந்தரது கூற்று முறைகளை இலக்கியங்களோடு பொருத்திப் பார்க்கும் விதத்தில் 'அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் ஆ.இராமகிருஷ்ணன், 'தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை - ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் நா.பாலகிருட்டினன், 'தொல்காப்பியப் பொருளதிகாரவழி அகநானூறு- ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் இரா.செகதீசன் ஆகியோர் அமைகின்றனர். தொல்காப்பியம் மொழிந்த மாந்தரில், குறிப்பிட்ட மாந்தரை மட்டும் இலக்கியத்தோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் 'அகப்பொருள் பாடல்களில் தோழி' என்னும் தலைப்பில் ஈ.கோ.பாஸ்கரதாஸ், 'சங்க இலக்கியத்தில் தோழி' என்னும் தலைப்பில் சரளா ராசகோபாலன், 'பாணர்' என்ற தலைப்பில் இரா.இளங்குமரன், 'அக மாந்தர்களில் கண்டோர்' என்னும் தலைப்பில் சு.இராசாராம்,

‘அகப்பாடல்களில் செவிலி’ என்ற தலைப்பில் சா.இரமேஷ் ஆகியோர் திகழ்கின்றனர். அகப்பொருளை வரலாற்று நோக்கில் காணும் விதத்தில் ‘தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பார்வை’ என்ற தலைப்பில் த.வசந்தாள் ஆய்வு செய்துள்ளார்.

தொல்காப்பிய மாந்தரது கூற்றுகளைப் பற்றிய முன்னாய்வு அக இலக்கியங்களோடு மட்டும் ஒப்பிட்டு நோக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆயின், தொல்காப்பியத்திற்குப் பின்னால் தோன்றிய அக இலக்கணக் கூற்றுகளை இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராயப்படவேண்டும். அக இலக்கணங்களில் மாந்தர் கூற்றுகளை ஒப்பிட்டு ஆராயப்படுவதற்கு மேற்கண்ட ஆய்வுகள் முன் ஆய்வுகளாக அமைகின்றன.

ஆய்வு எல்லை

தொல்காப்பியம் முதல் அறுவகை இலக்கணம் வரையிலான அக இலக்கணங்கள் ஆய்வு எல்லையாக அமைகின்றன. இத்தகைய அக இலக்கணங்களில் மாந்தரது கூற்றுகள் ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன.

சான்றாதாரங்கள்

கூற்று பற்றிய அகப்பொருள் இலக்கண நூல்களாகிய தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகியவை முதன்மைச் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன. இவை தொடர்பான இலக்கியங்கள், திறனாய்வு நூல்கள், கலைக் களஞ்சியங்கள், அகராதிகள், ஆய்வுக் கட்டுரைகள், மலர்கள், ஆய்வேடுகள் என்பன துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறைகள்

கூற்று குறித்துப் பல்வேறு கருத்துகள் அக இலக்கணங்களில் காணப்படுகின்றன. அவற்றைக் கால அடிப்படையில் வரையறை செய்வதில் வரலாற்றியல் அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. கூற்றுகளைப் பல்வேறு துறைகளுக்குள் பகுத்துக் காணுமிடத்து பகுப்பாய்வு அணுகுமுறை கையாளப்படுகிறது. இத்தகைய துறைகளை விளக்கி உரைக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது. அக இலக்கணங்களில் கூற்றுகளை ஒப்பிட்டு ஆராயும் வகையில் ஒப்பியல் அணுகுமுறை செய்யப்படுகிறது.

ஆய்வுப் பகுப்பு

"தமிழ் அக இலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு" என்னும் இவ்வாய்வானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன,

1. கூற்று - விளக்கம்
2. தலைவன் கூற்று
3. தலைவி கூற்று
4. தோழி கூற்று
5. பிற மாந்தர் கூற்று

என்பனவாகும்.

இயல் விளக்கங்கள்

முன்னுரையில் ஆய்வுத் தலைப்பு, கருதுகோள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு எல்லை, சான்றாதாரங்கள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுப் பகுப்பு, இயல் விளக்கங்கள் என்பன விளக்கப்படுகின்றன.

'**கூற்று-விளக்கம்**' என்னும் முதலாவது இயலில் 'கிளவி' - சொல்லாட்சியும் விளக்கமும், கூற்றைக் குறிக்கும் பிற சொல்லாட்சிகள், 'கூற்று' என்ற சொல் பயின்று வரும் இடங்கள், கூற்று - விளக்கம், கூற்று நிகழ்த்தும் சூழல், கூற்று - உட்கூறுகள், பிற்கால அக இலக்கணங்களில் கூற்று, கூற்று நிகழ்த்தும் மாந்தர், யார் யாரோடு கூற்று நிகழ்த்தற்குரியர் என்பது, தம்மொடு தாம் பேசுதற்குரியோர், பிற பொருள்களுடன் கூற்று நிகழ்த்துதல், கூற்றிற்கு உரிமை இல்லாதோர், கூற்று - நாடகப் பாங்கினது ஆகியவை விளக்கப்படுகின்றன.

'**தலைவன் கூற்று**' என்பது இரண்டாவது இயலாகும். இதில் இயற்கைப்புணர்ச்சி, வன்புறை, பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழி மதியுடம்பாடு, தோழியிற் கூட்டம், இருவகைக்குறி, வரைவுமுடுக்கம், ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிவு, உடன்போக்கு, உடன்போக்கிடையீடு, மீட்சி, தன்மனை வரைதல், வரைவுமலிவு, வரைந்து கோடல், மலிவு, ஊடல், பிரிவு ஆகிய சூழல்களில் தலைவன் கூற்று நிகழ்த்துதல் அக இலக்கணங்களில் இடம்பெற்றுள்ளமை மாற்றமின்மை, வளர்ச்சி, வீழ்ச்சி, புதிய கூற்று என்ற நிலையில் ஒப்பிடப்பட்டு ஆராயப்படுகின்றன.

மூன்றாவது இயலாகத் '**தலைவி கூற்று**' அமைகிறது. இதில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழி மதியுடம்பாடு, குறைநயத்தல், இருவகைக்குறி, ஒருவழித்தணத்தல், வரைவு வேட்கை, உடன்போக்கு, உடன்போக்கிடையீடு, மீட்சி, வரைவு மலிவு, மலிவு, ஊடல், பிரிவு என்ற சூழல்களில் தலைவி கூற்று நிகழ்த்துதல் அக இலக்கணங்களில் வரையறுக்கப்பட்டுள்ள தன்மை மாற்றமின்மை, வளர்ச்சி, வீழ்ச்சி, புதிய கூற்று என்ற நிலையில் பொருத்தி விளக்கப்படுகிறது.

'தோழி கூற்று' என்பது நான்காவது இயலாகத் திகழ்கின்றது. இதில் மதியுடம்பாடு, சேட்படை, மடல் விலக்கு, குறை நேர்தல், குறைநயப்பித்தல், இருவகைக் குறி, ஒருவழித்தணத்தல், வரைவுவேட்கை, வரைவு நீட்டிப்பு, வரைவுகடாதல், அறத்தொடு நிற்றல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு, உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், வரைவுமலிவு, வரைந்து கோடல், இல்வாழ்க்கை, ஊடல், பிரிவு ஆகிய சூழல்களில் தோழி கூற்று நிகழ்த்துதல் அக இலக்கணங்களில் இடம்பெற்றுள்ளமை மாற்றமின்மை, வளர்ச்சி, வீழ்ச்சி, புதிய கூற்று என்னும் தன்மையில் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன.

'பிற மாந்தர் கூற்று' என்பது ஐந்தாவது இயலாக அமைகின்றது. பார்ப்பான், கற்பொடு புணர்ந்த கவ்வை, உடன்போக்கிடையீடு, பிரிவு ஆகிய சூழல்களிலும் பாங்கன், பாங்கற் கூட்டத்திலும்; செவிலி, அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், இல்வாழ்க்கை ஆகிய சூழல்களிலும் நற்றாய், அறத்தொடு நிற்றல், கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், உடன்போக்கிடையீடு, பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களிலும் செவிலி நற்றாய் இருவர்க்கும் பொதுவான கூற்றுகளை அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை ஆகிய சூழல்களிலும் பாணன், பரத்தையிற்பிரிவு, வினைவயிற்பிரிவு ஆகிய சூழல்களிலும் கூத்தர், ஊடலிலும் கூற்றுகள் மொழிவர். விறலியின் கூற்றுகள் அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை. பரத்தை, பரத்தையிற் பிரிவிலும் ; காமக்கிழத்தி, ஊடல், இல்வாழ்க்கை ஆகிய சூழல்களிலும் அறிவர், இல்வாழ்க்கையிலும்; கண்டோர், வரைவு முடுக்கம், உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, வரைந்து கோடல், பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களிலும் இளையோர்,

பொருள்வயிற் பிரிவிலும்; வாயில்கள், பரத்தையிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு ஆகிய சூழல்களிலும் கூற்றுகள் நிகழ்த்துவர்.

தொல்காப்பியம் கூற்றுக்குரியோராக வரையறுத்துக் கூறப்படாத பாகன், பொருள்வயிற் பிரிவிலும்; கட்டுவிச்சி, அறத்தொடு நிற்றலிலும்; உழையர், பரத்தையிற் பிரிவிலும் ; இல்லோர், வரைபொருட் பிரிதல், வரைந்து கோடல், பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களிலும் கலந்துடன் வருவோர், கற்பொடு புணர்ந்த கவ்வையிலும்; தமர், அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, உடன்போக்கிடையீடு, இல்வாழ்க்கை ஆகிய சூழல்களிலும் ஊரார், உடன்போக்கு, பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களிலும் அயலோர், உடன்போக்கிலும் கூற்றுகள் மொழிவர். இத்தகைய சூழல்களில் பிறமாந்தர் நிகழ்த்தும் கூற்றுகளை மாற்றமின்மை, வளர்ச்சி, வீழ்ச்சி, புதிய கூற்று என்ற நிலையில் அக இலக்கணங்களோடு ஒப்பிட்டு அறியப்படுகிறது.

ஆய்வில் கண்ட முடிவுகள் முடிவுரையாக இடம்பெற்றுள்ளது.

ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள், துணைநூற்பட்டியலாக அமைக்கப்பட்டுள்ளது. அக மாந்தர் கூற்று பற்றிய அட்டவணைகள் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் ஒன்று

கூற்று - விளக்கம்

கூற்று - விளக்கம்

தமிழின் தலைசிறந்த நூலாகிய தொல்காப்பியம் நவில்தொறும் நூல் நயம் பயப்பது. இந்நூல் பொருளதிகாரச் செய்யுளியல் மாத்திரை முதலாக இழைபு ஈறாக முப்பத்துநான்கு செய்யுள் உறுப்புக்களைக் குறிப்பிடும். இவ்வுறுப்புக்களுள் ஒன்றாகிய 'கூற்று' அகத்திணையில் சிறப்புக்குரியதாகும். இக்கூற்று பற்றிக் காலந்தோறும் தோன்றிய இலக்கணங்களும் அறிஞர் பெருமக்களும் பல்வேறு கருத்துகளைக் கூறியுள்ளனர். அவற்றைத் தொகுத்து ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

'கிளவி' - சொல்லாட்சியும் விளக்கமும்

தொல்காப்பியம், அகத்திணை மாந்தர்களின் கூற்றாக எடுத்துரைக்கும் 'கிளவி'யைச் செய்யுள் உறுப்பாகக் குறிப்பிடவில்லை. பொருளதிகாரத்தில் நற்றாய், தலைவன், தோழி, செவிலி, அறிவர், இளையோர் ஆகிய ஒவ்வொரு மாந்தரின் கூற்றுகளையும் தொகுத்துரைக்குமிடத்தில் 'கிளவி' என்ற சொல்லை இயம்பும்.

நற்றாய்க்குரிய கூற்றுகளைத் தொகுத்துக் கூறுமிடத்தில்,

"ஆகிய கிளவியும் அவ்வழி உரிய"

(தொல்.982 ; 8)

என்று குறிப்பிடும். இதில் வரும் 'கிளவி' என்பதற்கு இளம்பூரணரும்[1] சோமசுந்தரபாரதியாரும்[2] 'கூற்று' என்பர். நச்சினார்க்கினியர் "கிளவி"[3] என்றே சுட்டுவர்.

தலைவனுக்குரிய கூற்றுகளை,

"பேராச்சிறப்பின் இருநான்கு கிளவியும்;"

(தொல்.1048 ; 6)

என்று தொகுத்துரைக்கும். இதில் வரும் 'கிளவி' என்பதற்கு இளம்பூரணர், "கிளவி"[4] என்றே பொருளுரைப்பர்.

தோழிக்குரிய கூற்றுகளைத் தொகுத்துரைக்கும் தொல்காப்பியம்,

"எஞ்சாது கிளந்த இரு நான்கு கிளவியும்"

(தொல்.1060;13)

என்று இயம்பும். இவ்வடியில் வரும் 'கிளவி' என்பதற்கு இளம்பூரணர் "கூற்று"[5] என்றும் நச்சினார்க்கினியர் "கிளவி"[6] என்றும் சுட்டுவர்.

"வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக்குரிய என்மனார் புலவர்"

(தொல்.1096 ; 31-32)

என்பதில் வரும் 'கிளவி' என்பதை இளம்பூரணரும்,[7] நச்சினார்க்கினியரும்[8] 'கிளவி' என்றே கூறுவர்.

"இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியோடு
அன்னவை பிறவும் செவிலி மேன"

(தொல்.1061 ; 12-13)

என செவிலி கூற்றைத் தொகுத்துரைப்பதில் வரும் 'கிளவி' என்பதற்கு இளம்பூரணரும்[9] நச்சினார்க்கினியரும்[10] 'கிளவி' என்றே பொருளுரைப்பர்.

அறிவர்க்குரிய கூற்றுகளைத் தொகுத்துரைக்கும் நூற்பாவில்,

"சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய"

(தொல்.1100)

என்று இயம்பும். இதில் வரும் 'கிளவி' என்பதற்கு, இளம்பூரணரும்[11] நச்சினார்க்கினியரும்[12] 'கிளவி' என்றே உரைப்பர்.

இளையோர்க்குரிய கூற்றுகளைத் தொகுத்துரைக்கும் நூற்பாவில்,

"தோற்றம் சான்ற அன்னவை பிறவும்

இளையோர்க் குரிய கிளவி என்ப"

(தொல்.1116 ; 4 5)

என்றுரைக்கும். இதில் வரும் 'கிளவி' என்பதற்கு நச்சினார்க்கினியர் "கூற்றென்று"[13] பொருளுரைப்பர்.

இவற்றை நோக்கும்போது, தொல்காப்பியம் மாந்தர் கூற்றுகளைக் குறிக்க 'கிளவி' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளமையும், உரையாசிரியர்கள் 'கிளவி' என்பதற்கு 'கூற்று', 'கிளவி' என்ற இரு சொற்களைப் பயன்படுத்தியுள்ளமையும் தெளிவாகும்.

கூற்றைக் குறிக்கும் பிற சொல்லாட்சிகள்

தொல்காப்பியம் தலைவன், தலைவி, கண்டோர் முதலியோரது கூற்றுகளைக் குறிக்க 'கிளவி' என்ற சொல்லைக் குறிப்பதோடு உரைத்திறம், செப்பல், மொழிதல் ஆகிய சொற்களையும் இயம்பும்.

"உரைத்திற நாட்டம் கிழவோன் மேன"

(தொல்.987 : 24)

என்பதில் வரும் 'உரைத்திறம்' என்பதற்கு இளம்பூரணர், 'உரையாடுதல்'[14] என்றும் நச்சினார்க்கினியர் 'கூற்று நிகழும் கூறுபாடு'[15] என்றும், சோமசுந்தரபாரதியார் "கூற்றுவகை நாடுதல்"[16] என்றும் பொருளுரைப்பர்.

"கிழவோள் செப்பல் கிழவதென்ப"

(தொல்.1093 ; 43)

என்பதில் 'செப்பல்' என்பதற்கு இளம்பூரணர் "கூற்று"[17] என்றும் நச்சினார்க்கினியர் 'உரிமையுடைத்து'[18] என்றும் மொழிவர்.

"கண்டோர் மொழிதல் கண்டது என்ப"

(தொல்.986 ; 9)

என்பதில் வரும் 'மொழிதல்' என்பதற்கு இளம்பூரணர் "சொல்லுதல்"[19] என்றும் நச்சினார்க்கினியர் "கூறுதல்"[20] என்றும் இயம்புவர்.

இவற்றால் 'உரைத்திறம்' என்பதற்கு 'உரையாடுதல்', 'கூற்று நிகழும் கூறுபாடு', 'கூற்றுவகை நாடுதல்' என்றும் செப்பல் என்பதற்கு 'கூற்று', 'உரிமையுடைத்து' என்றும் 'மொழிதல்' என்பதற்கு 'சொல்லுதல்', 'கூறுதல்' என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொள்வது புலனாகும்.

'கூற்று' என்ற சொல் பயின்று வரும் இடங்கள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் 'கூற்று' என்ற சொல் இல்லை. சொல்லதிகாரத்தில் ஐந்து இடங்களிலும் பொருளதிகாரத்தில் ஒன்பது இடங்களிலும் 'கூற்று' என்ற சொல் பயின்று வந்துள்ளது.

"குறித்தோன் கூற்றம்"

(தொல்.539)

என்பதில் வரும் 'கூற்றம்' என்பதற்கு இளம்பூரணர் 'சொல்லக் கருதுமேல்'[21] என்பர்.

"கூற்று வயின்"

(தொல்.771 ; 2)

என்பதற்கு 'கூற்றிடத்து'[22] என்றும்

"இழிந்தோன் கூற்றே"

(தொல்.928)

"ஒப்போன் கூற்றே"

(தொல்.929)

"உயர்ந்தோன் கூற்றே"

(தொல்.930)

என்பவற்றில் வரும் 'கூற்று' என்பதற்கு 'கூற்று'[23] என்றும் பொருள் கூறுவர் சேனாவரையர்.

"தத்தம் கூற்றை"

(தொல்.1020 ; 1)

என்பதில் வரும் 'கூற்று' என்பதற்கு இளம்பூரணர் 'இயல்பு'[24] என்றும் நச்சினார்க்கினியர் "கூறுபாடுகள்"[25] என்றும் சோமசுந்தரபாரதியார் "துறை"[26] என்றும் பொருளுரைப்பர்.

"அல்ல கூற்றுமொழி"

(தொல்.1056 ; 2)

என்பதிலுள்ள 'கூற்று' என்பதற்கு இளம்பூரணர் "கூற்று"[27] என்றும் நச்சினார்க்கினியர் "கூற்றாற் கூறும்"[28] என்றும் பொருள் சுட்டுவர்.

"தத்தம் கூற்றே"

(தொல்.1187 ; 2)

இவற்றில் வரும் 'கூற்று' என்பதற்கு இளம்பூரணர் 'கூறுபாடு'[29] என்றும் நச்சினார்க்கினியர் 'கூற்று'[30] என்றும் பொருளுரைப்பர்.

"ஈரமில் கூற்றம்"

(தொல்.1210 ; 2)

என்பதில் வரும் 'கூற்று' என்பதற்கு இளம்பூரணர் 'கூற்று'[31] என்பர். பேராசிரியர் 'சொல்'[32] என்றும் க.வெள்ளைவாரணன் 'மொழி'[33] என்றும் குறிப்பிடுவர்.

"கூற்று வகை"

(தொல்.1259 ; 5)

என்பதற்கு நச்சினார்க்கினியர் "கூறுதல்"[34] என்றும் பேராசிரியர் 'சொல்லுதல்'[35] என்றும் பொருளுரைப்பர்.

"கூற்றும் மாற்றமும்"

(தொல்.1412 ; 1)

என்பதில் வரும் 'கூற்று' என்பதற்கு இளம்பூரணர் 'கூற்று'[36] என்றும் நச்சினார்க்கினியரும்[37] பேராசிரியரும்[38] 'கூறுதல்' என்றும் பொருள் கூறுவர்.

"கூற்றிடை"

(தொல்.1421 ; 6)

என்பதிலுள்ள 'கூற்று' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'கூறுகின்ற பொருளை"[39] என்றும் பேராசிரியர்

"சொல்லுகின்ற பொருளை"[40] என்றும் இயம்புவர்.

"கூற்று அவண்"

(தொல்.1447 ; 4)

என்பதிலுள்ள 'கூற்று' என்பதற்கு இளம்பூரணர் 'கூறுதல்'[41] என்பர்.

"கூற்று அவண்"

(தொல்.1509)

இதில் வரும் 'கூற்று' என்பதற்குப் பேராசிரியர் "கூறுதல்"[42] என்று மொழிவர்.

இவற்றால் கூற்று என்ற சொல்லை விளக்குவதற்கு உரையாசிரியர்கள் சொல்லக் கருதுதல், கூற்று, இயல்பு, கூறுபாடுகள், துறை, கூற்றாற் கூறுதல், சொல், மொழி என்று பல்வேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகும்.

கூற்று - விளக்கம்

செய்யுட்குரிய உறுப்புக்களைத் தொல்காப்பியம்,

"மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ,
யாத்த சீரே அடி யாப்பு எனாஅ,
மரபே தூக்கே தொடைவகை எனாஅ,
நோக்கே பாவே அளவியல் எனாஅத்
திணையே கைகோள் கூற்று வகை எனாஅக்...."

(தொல்.1259 ; 1-5)

என்னும் நூற்பாவில் குறிப்பிடும். செய்யுள் உறுப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி நூற்பாக்களில் விளக்கம் கூறிட, 'கூற்றுவகை' என்பதற்கு இலக்கணம் சுட்டவில்லை. அவ்விடத்தில் 'கூற்று' தொடர்பாக பல்வேறு நூற்பாக்களை எடுத்துரைக்கும்.

களவொழுக்கத்தில் கூற்று நிகழ்த்துவோரைக் குறிப்பிடும் தொல்காப்பியம்,

"களவினில் கிளவிக்கு உரியர் என்ப"

(தொல்.1445 ; 4)

என்று இயம்பும்.

இதில் வரும் 'கிளவி' என்பதற்கு இளம்பூரணர் 'கூறுதல்'[43] என்று பொருள் வகுப்பர். நச்சினார்க்கினியர் "கூறினாராக"[44] என்பர். பேராசிரியரும்[45] இக்கருத்தினராவர்.

கற்பில் கூற்றுக்குரியோரைப் பற்றிய நூற்பா,

"முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொல்நெறி மரபின் கற்பிற்குரியர்"

(தொல்.1446 ; 4-5)

என்று சுட்டும்.

இதிலுள்ள 'கிளந்த' என்பதற்கு இளம்பூரணர் "சொல்லப்பட்ட"[46] என்பர். நச்சினார்க்கினியர் "கூறிய"[47] என்று பொருளுரைப்பர்.

கூற்றிற்கு உரிமை இல்லாதோர் பற்றிய நூற்பா,

"கொண்டு எடுத்து மொழியப்படுதல் அல்லது
கூற்று அவண் இன்மை யாப்புறத் தோன்றும்"

(தொல்.1447 ; 3-4)

என்று சுட்டும்.

இதில் வரும் 'கூற்று' என்பதற்கு க.வெள்ளைவாரணன், "கூறினாராக"[48] என்பர்.

தலைவனோடும் தலைவியோடும் நற்றாய் கூற்று நிகழ்த்துவதில்லை. இதனை,

"கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது"

(தொல்.1448)

என்று இயம்பும். இதில் உள்ள 'கூறல்' என்பதற்கு இளம்பூரணர் "கூற்று"[49] என்றும் நச்சினார்க்கினியர் "கூறுதல்"[50] என்றும் சுட்டுவர். பேராசிரியரும்[51] இக்கருத்தினராவர்.

கண்டோரைக் கூற்று நிகழ்த்துதற்குரியோராகக் குறிப்பிடும்போது,

"ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்டதென்ப"

(தொல்.1449)

என்று இயம்பும். இதிலுள்ள 'மொழிதல்' என்பதற்கு இளம்பூரணர் "கூறுதல்"[52] என்பர். நச்சினார்க்கினியரும்[53] பேராசிரியரும்[54] 'மொழிதல்' என்றே சுட்டுவர்.

தலைவியை உடன்கொண்டு போகும் இடைச்சுரத்தின்கண் தலைவியிடம், தலைவன் வழக்குநெறி ஆணையால் கூற்று நிகழ்த்துவான். இதனை,

"இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு
வழக்கியல் ஆணையின் கிளத்தற்கும் உரியன்"

(தொல்.1450) .

என்னும் நூற்பா உணர்த்தும். இதில் வரும் 'கிளத்தல்' என்பதற்கு இளம்பூரணர் 'கூறுதல்'[55] என்றும் நச்சினார்க்கினியரும்[56] பேராசிரியரும்[57] 'கிளத்தல்' என்றும் கருத்துரைப்பர்.

யார் யாரோடு கூற்று நிகழ்த்துவதற்குரியர் என்று குறிப்பிட்டோரைத் தவிர்த்த தலைவன் தலைவியல்லாத ஏனைய மாந்தர், தலைமக்களிடம் கூற்று நிகழ்த்துவர். இதனை,

"ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்கு உரியர் முன்னத்தின் எடுத்தே"

(தொல்.1451)

என்பது சுட்டும். இந்நூற்பாவில் வரும் 'கிளவி' என்பதற்கு இளம்பூரணர் 'சொல்லுதல்'[58] என்று பொருளுரைப்பர். நச்சினார்க்கினியர் 'கூற்று'[59] என்பர். பேராசிரியரும்[60] இக்கருத்தினராவர்.

இவற்றிலிருந்து தொல்காப்பியம் கூற்றுவகை பற்றிய நூற்பாக்களில் கூற்றைக் குறிக்க 'கிளவி', 'கிளந்த', 'கூற்று', 'கூறல்', 'மொழிதல்,' 'கிளத்தல்,' 'கிளவி' என்று வெவ்வேறு சொற்களை எடுத்தாளுவது புலனாகும். இதற்கு உரைவகுத்த உரையாசிரியர்கள் கூறுதல், சொல்லுதல், கூற்று, மொழிதல், கிளத்தல் என்று பொருளுரைப்பது தெளிவாகும்.

கூற்று என்பதற்கு அகராதிகளும் உரையாசிரியர்களும் திறனாய்வாளர்களும் பல்வேறு விளக்கங்களைக் கூறியுள்ளனர். அவற்றைத் தொகுத்து நோக்குவது 'கூற்று' என்பதற்குரிய விளக்கத்தைப் புலப்படுத்தும். கூற்று என்பதற்கு மதுரைத் தமிழ்ப் பேரகராதி, "கூற்று - காலன், சொல், நமன், கொலைத்தொழில் செய்வது, கூற்றம் போல்வது"[61] என்று சுட்டும். தமிழ் லெக்சிகன் 'கூறுகை, மொழி, கூறத்தக்கது, யமன், காலன்'[62] என்றும் தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி, "கூற்றுவகை - அச்செய்யுள் கேட்டாரை இது சொல்லுகின்றார் இன்னாரென உணர்வித்தல்"[63] என்றும் சுட்டும். மணிமேகலைத் தமிழ்ச் சொல் அகராதி, "கூற்று - யமன், காலன், சொல், கொலைத்தொழில், வரலாறு, கூறத்தக்கது"[64] என்று இயம்பும். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, "கூற்று - காலன், சொல், நமன்"[65] என்றுரைக்கும். நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியும்"[66] இதனை எடுத்துரைக்கும். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "(ஒருவர்) சொன்னது ; (ஒருவரால்) கூறப்பட்டது"[67] என்றும் "ஒன்றைப் பற்றிய தன் கருத்தை வாய்மொழியாகவோ எழுத்து வடிவிலோ வெளிப்படுத்தியது"[68] என்றும் செந்தமிழ் அகராதி, "கூற்று- கூறுகை, மொழி, இயமன்"[69] என்றும் மொழியும். வாழ்வியற் களஞ்சியம், "உள்ளச் செயலாகிய தீர்ப்பின் விளைவை ஒருவர் சொற்கள் மூலம் வெளியிடுவதைக் கூற்று அல்லது உரை என்பர். ஒன்றின் உண்மை அல்லது இன்மையைக் கூறுவதே கூற்றின் சிறப்பியல்பு ஆகும். ஒன்றைப் பற்றி உடன்பாடாகவோ, எதிர்மறையாகவோ கூறப்படுவதே கூற்று (Proposition) என்பது தத்துவமேதை அரிசுடாட்டிலின் கருத்தாகும்"[70] என்று குறிப்பிடும். நச்சினார்க்கினியர், "கூற்றுவகையென்றது அச்செய்யுட் கேட்டோரை இது கூறுகின்றோரின்னோரென அறிவித்தலை"[71] என்றும் பேராசிரியர் "கூற்றுவகையென்பது,

அச்செய்யுள் கேட்டாரை இது சொல்லுகின்றார் இன்னாரென உணர்வித்தல்"[72] என்றும் மொழிவர். ஞா.தேவநேயன்[73], க.வெள்ளைவாரணன்[74] ஆகியோர் நச்சினார்க்கினியரைப் பின்பற்றியும் மு.இராகவையங்கார்[75] பேராசிரியரைப் பின்பற்றியும் கருத்துரைப்பர். புலவர் குழந்தை, "கூற்றாவது, அகத்திணை பற்றிப் பேச்சு நிகழ்த்துதற்குரியோர் இன்னாரென்பது. இன்னார் இன்ன இடத்தில் இன்னாரிடம் கூறுவர் என்பதால், பண்டு இவ்வகப்பொருள் வழக்கம் மிகவும் இன்றியமையாததொன்றாகக் கருதப்பட்டுப் பலவகை இலக்கண வரம்புக்குட்பட்டு நடந்து வந்ததென்பது விளங்குகிறது"[76] என்றும் ந.சுப்புரெட்டியார், "செய்யுள் கேட்டாரை 'இது கூறுகின்றார் இன்னார்' என உணர்வித்தல் கூற்று எனப்படும்"[77] என்றும் ச.பாலசுந்தரம் "கூற்றுவகை - இதனைக் கூறினோர் இவர் என உணர்த்தும் கூறுவோர் வகையும்"[78] என்றும் கருத்துரைப்பர்.

இவ்வாறு கூறப்பட்டுள்ள பல்வேறு விளக்கங்களிலிருந்து கூற்று என்பதை, சொல்லுதல், மொழிதல், கூறுதல் என்னும் சொற்கள் உணர்த்துவது தெளிவாகும். அகத்திணை நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கும் கேட்பதற்கும் மாந்தர் பலர் படைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் தன்னுடைய உள்ளக் கருத்தைப் பிறரொருவருக்குத் தெரிவிக்க முற்படும்போது கூறினோர் இன்னார் என்பதைக் கேட்பவருக்குத் தெரிவிக்கும் வகையில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்துரைப்பது கூற்று என்பது புலனாகும்.

கூற்று நிகழ்த்தும் சூழல்

மாந்தர், கேட்பதற்குரிய தகுதியுடையோரிடம் இடம், காலம் இவைகளுக்குட்பட்டு கூற்று நிகழ்த்துதல் வேண்டும். இதனை இந்திரா மனுவேல், "தொல்காப்பியம் காட்டும் அகமரபு சங்க இலக்கியப்

பாடல்கள் காட்டும் அகமரபை ஒத்த ஒன்று. இங்கு ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட அகமரபுகளுக்கேற்ப ஒரு குறிப்பிட்ட பாத்திரம் கூறும் கூற்றாக அமைகின்றது”[79] என்பர். ச.சிவகாமியும் “ஒன்றினைக் கூறுதற்குரிய தகுதியுடையோர் அதனைக் கேட்பதற்குரிய மரபுடையோரிடம் கூறும் செய்தி, இடம், காலம், கூறுமுறை முதலான கட்டுகளுக்குட்பட்டு நேரிடையாக அல்லது மறைமுகமாக உணர்த்துவது கூற்று எனலாம்”[80] என்றுரைப்பர்.

கூற்று - உட்கூறுகள்

தொல்காப்பியம் குறிப்பிடும் மாந்தர் கூற்றில் பல்வேறு உட்கூறுகள் அமைந்துள்ளன. இக்கூற்றுகளின் மூலம் கூற்றாளரின் மன ஓட்டங்கள், கூற்று நிகழ்த்துபவர், கேட்போர் யார் என்பது, நோக்கம், செய்தி, இதனால் விளையக்கூடிய பயன் போன்றவை வெளிப்படும். இதனை வ.சுப.மாணிக்கனார், ‘காதல் மாந்தர்களின் உள்ளோட்டங்கள், உணர்வுகள், உணர்ச்சிகள், வேட்கைகள் ஆகியன விளங்குகின்றன’[81] என்பர். மாந்தர் கூற்றிற்குச் சிறப்புத் தருவது மன ஓட்டங்கள் என்பதை, ஆ.இராமகிருஷ்ணன், “சங்க அக இலக்கியங்கள் அனைத்தும் அகமாந்தரின் கூற்று அடிப்படையில் அமைந்த பாடல்களின் தொகுப்பே ஆகும். இலக்கண இலக்கியங்கள் இங்ஙனம் அகத்திணை மாந்தரின் கூற்றுக்கு முழுமுதல் சிறப்புத் தருதற்குப் பாத்திரங்களின் மன ஓட்டங்களைத் துலக்கமாகக் காட்ட விரும்பியமை காரணமாகலாம்”[82] என்றும் இந்திரா மனுவேல், “தொல்காப்பியர் தரும் அக இலக்கணம் பெரும்பாலும் பாத்திரங்களின் கூற்றுகளினாலேயே அமைகின்றது. இந்தக் கூற்றுக்களின் பொது அமைப்பை நோக்கும்போது அவை கூற்றாளர், கேட்போர், சூழல், பொருள் (content), செய்தி (message), நோக்கம் (purpose), பயன் (result), வெளியீட்டுத்தொடர், கூற்றுடன் நிற்கும் உணர்வுச் சூழல்,

கூற்றாளன் உளப்பாங்கு (attitude), கேட்போன் உளப்பாங்கு, கூற்றின் தொனி, கூற்றுக்குக் காரணமாகும் பிறிதொரு கூற்று, கூற்றின் பின்னணியும் மரபு, கூற்றில் பயன்படும் உத்தி, கூற்றின் வெளியீட்டு முறை என்ற பல கூறுகளை உள்ளடக்கியுள்ளன"[83] என்றும் உரைப்பார்.

பிற்கால அக இலக்கணங்களில் கூற்று

தொல்காப்பியத்தையடுத்துத் தோன்றிய அக இலக்கண நூல்களாகிய இறையனாரகப்பொருள், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவற்றில் 'கூற்று' பற்றிய குறிப்புகள் உள்ளன.

இறையனாரகப் பொருள்

இந்நூல் அகப்பொருட் பாடல்களை உரைக்கும் மரபை,

"திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்தல் ஆறே" (இறை.56)

என்று குறிப்பிடும். இதில் வரும் 'கூற்று' என்பதற்கு நக்கீரர், "கூறுதற்கு உரியாரை அறிந்து, அவருள் இன்னார் கூறினார் இப்பாட்டு என்பது அறிவது"[84] என்பர்.

வீரசோழியம்

இந்நூல் அகப்பொருள் உரைகளின் வகைகளாக இருபத்தேழினைச் சுட்டும். அவற்றுள் ஒன்றாக 'கிளவி' சுட்டப் பட்டுள்ளது. இதனை,

"சட்டக மேதிணை கைகோள் நடைசுட் டிடங்கிளவி"
(வீர.88;1)

என்பது உணர்த்தும். இதில் இடம்பெறும் 'கிளவி' என்பதற்கு "இனிக் கிளவி என்பது, கூற்றெனக் கொள்க. அது,

நெஞ்சுக் குரைத்தல் கேட்போர்க் குரைத்தல்

அந்தர மருங்கின வறிதரக் கூறலென

வந்த வகையின மூவகைக் கூற்றே"[85]

என்று குறிப்பிடும்.

அகப்பொருள் விளக்கம்

இந்நூல் அகப்பாட்டுறுப்புக்களாகப் பன்னிரண்டினைச் சுட்டும். இதனுள் ஒன்றாக, 'கூற்று' குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

"திணையே கைகோள் கூற்றே கேட்போர்

இடனே காலம் பயனே முன்னம்

மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்று

அப்பால் ஆறிரண் டகப்பாட் டுறுப்பே"

(அக.விளக். 211)

என்பது சுட்டும். இலக்கண விளக்கமும் (560) சுவாமிநாதமும் (124) அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றி அகப்பாட்டுறுப்புக்களுள், ஒன்றாகக் கூற்றைக் குறிப்பிட்டுள்ளன.

இவற்றால் கூற்று பற்றிய கருத்து வளர்ச்சி தொல்காப்பியத்தையடுத்துத் தோன்றிய அகப்பொருள் இலக்கண நூல்களிலும் தொடர்ந்து இடம்பெற்றிருப்பது நன்கு விளங்கும்.

கூற்று நிகழ்த்தும் மாந்தர்

களவிலும் கற்பிலும் கூற்று நிகழ்த்தும் மாந்தரோடு பிற மாந்தரும் இடம்பெறுவர். இவர்களுள் யாரேனும் ஒருவரை முன்னிலைப்படுத்திக் கூற்றுகள் அமையும்.

களவில் கூற்றுக்குரியோர்

களவில் கூற்றுக்குரியோர் பற்றி, தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் குறிப்பிடும்.

தொல்காப்பியம் களவில் கூற்று நிகழ்த்தும் மாந்தராக அறுவரைக் குறிப்பிடும். இதனை,

"பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி,
சீர்த்தகு சிறப்பின் கிழவன், கிழத்தியோடு,
அளவியல் மரபின் அறுவகை யோரும்
களவினில் கிளவிக்கு உரியர் என்ப"

(தொல்.1445)

என்னும் நூற்பா சுட்டும்.

இறையனாரகப்பொருளில் நக்கீரர், "கூறுதற்கு உரியாரைச் செம்பூட்சேயார் கூற்றியலுள்ளும், தொல்காப்பியனார் பொருட்பாலுள்ளும் கண்டுகொள்க"[86] என்று கூறி, 'தொல்காப்பிய நூற்பாவை'[87] எடுத்துக்காட்டுவர்.

வீரசோழியம் களவு, கற்பு என்று பாகுபடுத்தாமல் இருவகைக் கைகோளிலும் கூற்றிற்குரியோராக, பதின்மூன்று மாந்தர்களைச் சுட்டும். இதனை,

"தலைமகன் தலைவி தோழி தாயே
கலைமருங் காப்பிற் செவிலி பாங்கன்
சீறியாட் பாணன் கண்டோர் கட்டு
வேலன் விறலி நலத்தகை யூரே
சேரி யயலோ டின்னன பிறவும்
ஆகு மென்ப வறிந்திசி னோரே"[88]

என்பது குறிப்பிடும்.

அகப்பொருள் விளக்கம் (213), இலக்கண விளக்கம் (562;1-4) சுவாமிநாதம் (124;4-6) ஆகியவை தொல்காப்பியக் கருத்தைப் பின்பற்றும்.

கற்பில் கூற்றிற்குரியோர்

கற்பில் கூற்றுக்குரியோரைப் பற்றித் தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கணங்கள் குறிப்பிடும்.

தொல்காப்பியம், களவில் கூற்றிற்குரியோராகக் குறிப்பிட்ட அறுவரையும் சேர்த்துப் பன்னிரண்டு மாந்தர்களைக் குறிப்பிடும். இதனை,

"பாணன், கூத்தன், விறலி, பரத்தை,
யாணம் சான்ற அறிவர், கண்டோர்,
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொல்நெறி மரபின் கற்பிற்குரியர்" (தொல்.1446)

என்பதன் மூலம் அறிய இயலும்.

இந்நூற்பாவில் வரும் 'தொன்னெறி மரபிற் கற்பிற்குரியர்' என்பதற்கு இளம்பூரணர் 'தொன்னெறி மரபிற் கற்பு' என்றதனான் அவர் குலந்தோறுந் தொன்றுபட்டு வருகின்ற நெறியையுடைத்தென்று கொள்க"[89] என்பர். பாகனுந், தூதனுங் கற்பில் கூற்றுக்குரியர். இவர் புறத்திற்குச் சிறந்தவர் என்பதை நச்சினார்க்கினியர், "தொன்னெறிமரபின் என்றதனால் பாகனும் தூது கூறலு மமையும். அவை புறப்பொருட்குச் சிறந்தன"[90] என்பர். பேராசிரியரும்[91] இக்கருத்தினராவர்.

நச்சினார்க்கினியர், பேராசிரியர் கருத்துப்படி பாகனும், தூதனும் அகத்திற்குச் சிறந்தவரல்லர் என்பர். எனவே, தொன்றுதொட்டு வரும் நெறிமுறையினையுடைய கற்பில் கூற்று நிகழ்த்துவோராக, பாணன், கூத்தன், விறலி, பரத்தை அறிவர், கண்டோர், பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய பன்னிருவரை வரையறுப்பர்.

இறையனாரகப்பொருளில் நக்கீரர், தொல்காப்பிய நூற்பாவை[92] எடுத்துக்காட்டுவர்.

அகப்பொருள் விளக்கம் ‘நற்றாய், கண்டோர், பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர், தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், பாங்கி, செவிலி (அக.விளக்.214) ஆகிய பதின்மூன்று மாந்தர்களைக் குறிப்பிடும். இலக்கண விளக்கம் (562;5-10) தொல்காப்பியத்தைப் பின்பற்றும்.

“தொன்னெறி மரபிற்”

(இல.விளக்.562 ; 9)

என்பதற்கு புலவர் சேயொளி, “தொன்னெறி மரபென்றதனாற் பாகனுந் தூதனுங் கூறவும் அமையும். அவர் ஏனையர் போலச் சிறப்பிலராயினும் எனக் கொள்க”[93] என்பர். சுவாமிநாதம் (124;4-8) அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றும்.

தொல்காப்பியம் கற்பில் கூற்றிற்குரியோராகப் பன்னிரண்டு மாந்தர்களைக் குறிப்பிடும். இறையனாரகப்பொருளில் நக்கீரர், தொல்காப்பிய நூற்பாவை எடுத்துரைப்பர். வீரசோழியம் ‘பதின்மூன்று மாந்தர்களைச் சுட்டி’ தொல்காப்பியம் குறிப்பிட்ட கூத்தன், பரத்தை, அறிவர், பார்ப்பான் ஆகியோரைக் கூறவில்லை. தொல்காப்பியம்

குறிப்பிடாத தாய், கட்டுவேலன், ஊரார், சேரியோர், அயலோர் முதலியோரை வீரசோழியம் குறிப்பிடும். தொல்காப்பியம் நற்றாயைச் சுட்டாதிருக்க, அகப்பொருள் விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை இவரைக் குறிப்பிடும்.

தொல்காப்பியம் கூறிய தோழியை, அகப்பொருள் விளக்கம் ‘பாங்கி’ என்றும் சுவாமிநாதம் ‘சகி’ என்றும் சுட்டும். தொல்காப்பியம் கூறிய ‘கிழவனை’ வீரசோழிய உரையாசிரியர் ‘தலைமகன்’ என்றும் அகப்பொருள் விளக்கம் ‘தலைவன்’ என்றும் சுவாமிநாதம் ‘அண்ணல்’ என்றும் இயம்பும். தொல்காப்பியம் கூறிய ‘கிழத்தி’யை, வீரசோழிய உரையாசிரியர், அகப்பொருள் விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை ‘தலைவி’ என்று சுட்டும். அகப்பொருள் விளக்கம் இயம்பிய நற்றாயை வீரசோழிய உரையாசிரியரும் சுவாமிநாதமும் ‘தாய்’ என்று குறிப்பிடும். தொல்காப்பியம் கூறிய ‘அறிவரை’ சுவாமிநாதம் ‘அறிவோர்’ என்று மொழியும்.

யார் யாரோடு கூற்று நிகழ்த்துதற்குரியர்

அக இலக்கணங்கள் கூற்றுக்குரியோரைக் குறிப்பிடுவதோடு மட்டுமின்றி யார் யாருடன் கூற்று நிகழ்த்துதற்குரியர் என்பதையும் சுட்டுகிறது.

தலைவன்

தலைவன், தலைவியை உடன்கொண்டு போகும் இடைச்சுரத்தின்கண் உலகியல் நெறியினை மனதிற்கொண்டு தனது ஆற்றல் தோன்ற நீதிநூல் மொழியினை எடுத்துரைப்பான். இதனைத் தொல்காப்பியம்,

“இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு
வழக்கியல் ஆணையின் கிளத்தற்கும் உரியன்”

(தொல்.1450)

என்று சுட்டும். இதற்குப் பேராசிரியர், "இடைச்சுரத்து உடன்போகிய கிழத்தியொடும் கிழவன் நீதிநூல் வகையாற் கிளத்தற்கு முரியன்"[94] என்று குறிப்பிட்டு "நீதிநூல் வகையாற் கிளத்தலென்பது கிழத்தி தன் தமர் இடைச்சுரத்துக்குக் கண்ணுறின் அவர் கேட்பத் தலைவிக்குச் சொல்லுவானாய் வழக்கியல் கூறுதலுமுரியனென்பது"[95] என்பர். இக்கருத்தை அகப்பொருள் விளக்கம்,

"தமர்வரின் இடைச்சுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோன் ஆணையுங் கூறும்"

(அக.விளக்.216)

என்று பின்பற்றும். இலக்கண விளக்கமும் (567) இதனையே சுட்டும்.

தலைமக்கள் உடன்போக்கில் செல்லும்போது தலைவன், தலைவியின் தமர் பின்தொடர்ந்து வருவதையறிந்து அவர்கள் கேட்கும்படி நீதிநூற் கருத்துக்களைக் கூறுவான். இதனைத் தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம் ஆகிய அனைத்து அக இலக்கணங்களும் குறிப்பிடும்.

தலைவி

தொல்காப்பியம், தலைவி எம்மாந்தருடன் கூற்று நிகழ்த்துவாள் என்பதை எடுத்துரைக்கவில்லை. அகப்பொருள் விளக்கம், புணர்ந்துடன்போய் மீண்ட தலைவி பிரியுங் காலத்துத் தலைவனோடு சுரத்தியல்பு கூறலும் தலைவன் பிரிந்த காலத்து வருந்தி நெஞ்சொடும் பிறரொடும் சுரத்தியல்பு சொல்லலும் உரியள் என்று வரையறுக்கும். இதனை,

"உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சுரத்தியல் பேசலும்

பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்

சொல்லலும் உரியள் சொல்லுங் காலை"

(அக.விளக்.217)

என்னும் நூற்பா நன்குணர்த்தும். இலக்கண விளக்கமும் (568) இக்கருத்தினது.

நற்றாய்

நற்றாய், தலைமக்களோடு கூற்று நிகழ்த்துதல் இல்லை. இவர்களல்லாத ஏனையோரிடம் கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

"கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்

நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது"

(தொல்.1448)

என்று சுட்டும்.

அகப்பொருள் விளக்கம், நற்றாய், தலைமக்களோடு கூற்று நிகழ்த்துதல் இல்லை என்பதைச் சுட்டுவதோடு தலைவி, தலைவனுடன் புணர்ந்து உடன்போனது அறிந்த பின்னர் அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், நோயறிவோர், செவிலி, பாங்கி, கண்டோர் ஆகியோருடன் கூற்று நிகழ்த்துவாள் என்றும் குறிப்பிடும். இதனை,

"தலைவன் றலைவியொடு நற்றாய் கூறாள்"

(அக.விளக்.218)

"புணர்ந்துடன் போய துணர்ந்த பின்னர்

அந்தணர் தெய்வம் அயலோர் அறிவர்

சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியொடு

கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய்"

(அக.விளக்.219)

என்னும் நூற்பாக்கள் நன்குணர்த்தும்.

இலக்கண விளக்கம் (564, 565 ; 1-4) அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றி இலக்கணம் கூறும். சுவாமிநாதம் முற்கூறிய அக இலக்கணங்களிலிருந்து வேறுபட்டு,

> "தருநற்றாய் இறைஇறைவி யுடன்வெளியிற் கூறாள்
> தாய் உடன்போக்கு உணர்ந்தபின்பு செவிலி, தெய்வம், அயலோர்,
> இருபிறப்போர், சகி, அறிஞர், நோய்அறிவோ ருடனு"
>
> (சுவாமி.125 ; 3-5)

என்று 'கண்டோரை' விடுத்து இலக்கணம் வகுக்கும்.

இவற்றால் தலைமக்களோடு நற்றாய் கூற்று நிகழ்த்துதல் இல்லை என்று தொல்காப்பியம் சுட்டுவதும் அகப்பொருள் விளக்கம் தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதோடு அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், நோயறிவோர், செவிலி, பாங்கி, கண்டோர் ஆகியோருடன் கூற்று நிகழ்த்துவதாக விரித்துரைப்பதும் தெளிவாகும். இலக்கண விளக்கம், அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றுவதும் சுவாமிநாதம், அகப்பொருள் விளக்கம் கூறிய 'கண்டோரை'ச் சுட்டாததும் விளங்கும். அகப்பொருள் விளக்கம் கூறிய 'அந்தணரை' சுவாமிநாதம் 'இருபிறப்போர்' என்றும் அகப்பொருள் விளக்கம் இயம்பிய 'அறிவரை' இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் 'அறிஞர்' என்றும் சொல்லாட்சியில் வேறுபடுவது குறிப்பிடத்தக்கது.

செவிலி

தொல்காப்பியம், செவிலி எம்மாந்தரோடு கூற்று நிகழ்த்துவாள் என்று சுட்டவில்லை. அகப்பொருள் விளக்கம், தலைவி தலைவனோடு உடன்போனமை அறிந்த பின்னர் நற்றாய், தோழி முதலியோரோடு கூற்று நிகழ்த்துவாள் என்று இயம்பும். இதனை,

"தாயொடும் பாங்கி தான்முத லாரொடுஞ்
சேயிழை செவிலியுஞ் செப்பு மாங்கே"

(அக.விளக்.220)

என்று சுட்டும்.

இலக்கண விளக்கம், (565 ; 5-7), அகப்பொருள் விளக்கக் கருத்தினது. சுவாமிநாதம் தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்றதுணர்ந்து தெய்வம், அயலோர், அந்தணர், சகி, அறிஞர், நோயறிவோர், தாய் இவர்களோடு கூற்று நிகழ்த்துவாள் என்று இயம்பும். இதனை,

"தாய் உடன்போக்கு உணர்ந்தபின்பு செவிலி, தெய்வம், அயலோர்,
இருபிறப்போர், சகி, அறிஞர், நோய்அறிவோ ருடனு
மியற்செவிலி இவரோடும் தாயொடும் கூறற்கு அமையும்"

(சுவாமி.125;4-6)

என்பது உணர்த்தும்.

இவற்றில் செவிலி, பிற மாந்தர்களில் யாருடன் கூற்று நிகழ்த்துவாள் என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை என்பதும் அகப்பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் 'தாயொடும் பாங்கி தான்முதலாரொடும்' என்று மொத்தமாகக் குறிப்பிட்டிருப்பதும் சுவாமிநாதம் தெய்வம், அயலோர், அந்தணர், சகி, அறிஞர், நோய் அறிவோர், தாய் என்று விரிவாகச் சுட்டுவதும் தெளிவாகும்.

கண்டோர்

கண்டோர் எம்மாந்தரிடம் கூற்று நிகழ்த்துவர் என்பதைத் தொல்காப்பியம்,

"ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்டதென்ப"

(தொல்.1449)

என்று குறிப்பிடும். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், "ஒண்டொடி மாதராவார் நற்றாயுந் தோழியுஞ் செவிலியும். இவரொடுந் தலைவனொடுந் தலைவியொடுங் கண்டோர் கூறுதல் காணப்பட்டது என்றவாறு"[96] என விளக்குவர்.

நச்சினார்க்கினியர், "ஒள்ளிய தொடியினையுடைய செவிலியோடும், தலைவனோடும், தலைவியோடும் இடைச்சுரத்துக் கண்டோர் மொழிந்தன முதனூலிற் கண்டது என்றவாறு"[97] என்று ஒண்டொடி மாதரைச் 'செவிலி' என்று இயம்புவர். பேராசிரியர், "ஒண்டொடி மாதர் கிழவன்' எனவே அவ்விருவர் கூட்டத்துக்கண்ணுமன்றி அவ்விருவரோடும் தனித்துக் கூற்றில்லை யென்றவாறு"[98] என்பர். க.வெள்ளைவாரணன், "நற்றாயும் தோழியும் தலைமகளைத் தேடிப் புறத்தே செல்லாராதலின் 'ஒண்டொடிமாதர்' என்றது செவிலியையே யெனக்கொண்டு நச்சினார்க்கினியர் எழுதிய இவ்வுரை முன்னிவருரையினும் சிறப்புடையதாக அமைந்துளது. 'கிழத்தியொடு' எனப் பின்னுள்ள ஒடுவுருபினை ஒண்டொடி மாதரொடு, கிழவனொடு என முன்னரும் விரித்துப் பொருள் வரையப்பட்டது"[99] என்பர்.

இவற்றிலிருந்து ஒண்டொடி மாதருக்கு இளம்பூரணர், நற்றாய், தோழி, செவிலி ஆகிய மூவரைச் சுட்டுவதும் பேராசிரியர், தலைவன், தலைவி ஆகிய இருவரைச் சுட்டுவதும் நச்சினார்க்கினியர் 'செவிலி'யை மட்டும் சுட்டுவதும் க.வெள்ளைவாரணன், நச்சினார்க்கினியர் கருத்தையே வலியுறுத்துவதும் தெளிவாகும்.

தலைவனும், தலைவியும் உடன்போக்கில் சென்றபோது அவர்களைத் தேடிச் செல்வோராக இலக்கியங்களில் பெரும்பாலும் குறிப்பிடப்படுவது செவிலியாகும். அவ்வாறு தேடிச் செல்லும்போது செவிலியுடனும் சிறுபான்மை, நற்றாய், தோழியுடனும் கண்டோர் பேசுதல் மரபு.

கண்டோர் கூற்று நிகழ்த்துதற்குரியோராக அகப்பொருள் விளக்கம்,

"தாயர் பாங்கியர் தலைவன் தலைவியோ
டேயும் என்ப கண்டோர் கூற்றே" (அக.விளக்.221)

என்று இயம்பும். இலக்கண விளக்கமும் (566) இதனையே கூறும். இதற்குப் புலவர் சேயொளி, "நற்றாயுஞ் செவிலித்தாயும் அவள் மகளாகிய உயிர்ப்பாங்கியும் ஏனைப் பாங்கியருந் தலைவனுந் தலைவியுமாகிய இவரோடு கண்டோர் கூறுதல் பொருந்துமென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு"[100] என்பர்.

கண்டோர், தலைவி, தோழி, பெற்றோர் ஆகியோருடன் கூற்று நிகழ்த்துவதோடு மட்டுமின்றி, பாலைவனத்தில் தலைவியின் சுற்றத்தாரைக் கண்டபோது தலைமக்கள் பற்றிக் கூறுவர் என்பதை சுவாமிநாதம்,

"அரியகண்டோர் இறைவிசகி யாபெற்றோர்க்கு உரைப்பார்
அணைசொல்லுஞ் சுரத்துஇறைவிக்கு இறைதமர்காண் பொழுதே"
(சுவாமி.125 ; 7-8)

என்று இயம்பும்.

இவற்றால் நற்றாய், செவிலி, தோழி, தலைவன், தலைவி ஆகியோருடன் கண்டோர் கூற்று நிகழ்த்துவர் என்று தொல்காப்பியம் குறிப்பிட, அகப்பொருள் விளக்கம் இவற்றுடன் தோழியைத்

'தோழியர்' என்று பன்மையில் இயம்பும். இதனை இலக்கண விளக்கம் பின்பற்றும். சுவாமிநாதம், தலைவனை விடுத்து தலைவி, தோழி, பெற்றோர், தலைவியின் சுற்றத்தார் ஆகியோருடன் கூற்று நிகழ்த்துவதாகக் குறிப்பிடும். தொல்காப்பியம் கூறிய 'கிழவன் கிழத்தியை' அகப்பொருள் விளக்கம் 'தலைவன் தலைவி' என்றும் சுவாமிநாதம் 'இறை, இறைவி' என்றும் சொல்லாட்சியில் மாறுபட்டு இயம்பும்.

ஒழிந்தோர்

பிற மாந்தர் தலைமக்களிடம் கூற்று நிகழ்த்துவதை,

"ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்கு உரியர் முன்னத்தின் எடுத்தே"

(தொல்.1451)

என்பது உணர்த்தும். இதில் வரும் 'ஒழிந்தோர்' என்பதற்கு இளம்பூரணர், "தலைவனையுந் தலைவியையும் ஒழிந்த பதின்மரும்"[101] என்று பொருளுரைப்பர். நச்சினார்க்கினியர், "தலைவனுந் தலைவியும் ஒழிந்தோராவார் கண்டோர்"[102] என்பர். பேராசிரியரும்[103] இக்கருத்தினராவர்.

அகப்பொருள் விளக்கம் தலைமக்களோடு கூற்று நிகழ்த்தும் பிறமாந்தரை,

"சாற்றா எழுவருந் தலைவன் தலைவியோ
டேற்றன கூறுப இடந்தொறும் இடந்தொறும்"

(அக.விளக்.222)

என்று சுட்டும். இதற்கு உரை வகுத்த கா.ர.கோவிந்தராச முதலியார், "இச்சூத்திரத்தில் 'சாற்றா எழுவரும்' என்று பாடங்கொண்டு, அதற்கு மேற்சொல்லப்படாத பார்ப்பானும், பாங்கனும், பாணனும், கூத்தரும்,

விறலியும், பரத்தையரும், அறிவரும் என்று உரை கூறப்பட்டிருக்கின்றது. இதிற் பாங்கியின் கூற்று விடப்பட்டிருக்கின்றது. அ.கு அவர்களும், த.க.அவர்களும் தாங்கள் எழுதிய புத்துரையில், 'சாற்றா அனைவரும்' என்று பாடங்கொண்டு, அதற்குப் பார்ப்பான், பாகன், பாங்கி, பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர் என்னும் எண்மரும் என்று பொருள் கூறினார்கள்"[104] என்பர்.

இலக்கண விளக்கத்தில் உள்ள,

"சாற்றா வனைவருந் தலைவன் றலைவியோ
டேற்றன கூறுப விடந்தொறு மிடந்தொறும்"

(இல.விளக்.569)

என்னும் நூற்பாவிற்கு உரை வகுத்த புலவர் சேயொளி, "மேல் விதந்து ஓதப்படாத பார்ப்பானும் பாங்கனும் பாங்கியும் பாணனுங் கூத்தனும் விறலியும் பரத்தையும் அறிவருமாகிய அனைவருந் தலைவனோடுந் தலைவியோடும் இடந்தொறு மிடந்தொறும் பொருந்துவனவற்றைக் கூறுவர்"[105] என்பர். சுவாமிநாதமும்,

"காணும்இடந் தொறும்இங்ஙன் கூறாதார், எவருங்
காளைகன்னி யொடும்உரைப்பார்"

(சுவாமி.126 ; 1-2)

என்று சுட்டும். இதற்கு உரை வகுத்த செ.வை.சண்முகம், "கூற்றிற்குரிய ஏனையோர் தலைவனோடும் தலைவியோடும் அவர்களைக் காணும்போதெல்லாம் உரைப்பர்"[106] என்றுரைப்பர்.

தொல்காப்பியம் களவிலும் கற்பிலும் கூற்றிற்குரியோராக, பன்னிரண்டு மாந்தர்களைக் குறிப்பிட்டு நற்றாயைக் கூறவில்லை. இன்னார், இன்னாரோடு கூற்று நிகழ்த்துதற்குரியர் என்கின்ற நூற்பாக்களுள் 'நற்றாய்க்கு' இடம் வகுக்கப்பட்டுள்ளது. நற்றாய்,

கண்டோர், தலைவன் ஆகியோர் யாருடன் கூற்று நிகழ்த்துதற்குரியர் என்பது கூறப்பட்டுள்ளது. இவர்களைத் தவிர்த்த பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவி, பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர் ஆகியோரை ஒழிந்தோராகக் கொண்டு பதின்மரும் தலைமக்களுடன் கூற்று நிகழ்த்துவதற்குரியோராவர்.

அகப்பொருள் விளக்கம் தலைவன், தலைவி, நற்றாய், செவிலி, கண்டோர் ஆகியோர் எம்மாந்தருடன் கூற்று நிகழ்த்துவர் என்பதைக் குறிப்பிட்டுள்ளது. எனவே, இவர்களல்லாத பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர், பார்ப்பான், பாங்கன், பாங்கி ஆகிய எண்மரும் தலைமக்களுடன் கூற்று நிகழ்த்துதற்குரியர். இலக்கண விளக்கமும் இதனைப் பின்பற்றும்.

சுவாமிநாதம், தலைவன் தலைவியைத் தவிர்த்து நற்றாய், செவிலி, கண்டோர் ஆகியோர் யாருடன் கூற்று நிகழ்த்துவர் என்பதை எடுத்துரைக்கும். அகப்பொருள் விளக்கம் இவர்களல்லாத பிற மாந்தரைத் தலைமக்களுடன் கூற்று நிகழ்த்துவதற்குரியோராகக் குறிப்பிடும்.

யார், யாருடன் கூற்று நிகழ்த்துவர் என்று கூறியோரைத் தவிர்த்த ஏனையோரைத் தொல்காப்பியம் 'ஒழிந்தோர்' என்றும் அகப்பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் 'சாற்றா வனைவரும்' என்றும் சுவாமிநாதம் 'இங்ஙன் கூறாதார்' என்றும் இயம்பும்.

தம்மொடு தாம் பேசுதற்குரியோர்

மாந்தர், தம் கருத்துக்களைப் பிற மாந்தரிடம் கூற இயலாமல் இருக்கும் நிலையில் தமக்குள் தனிமொழியில் பேசுவர். ந.பலராம ஐயர், "நாடக பாத்திரருள் ஒருவன் அரங்கின்கண் தானே தனக்குள்ளாகப்

பேசிக்கொள்ளும் தனிமொழி, தற்கூற்றெனப் பெயர்பெறுமென்று புலவர் கூறினர்"[107] என்பர். ஆ.அமிர்தகௌரி, "தனிமொழி என்பது மாந்தர் தமக்குத் தாமே பேசிக்கொள்வது"[108] என்று சுட்டுவர்.

தலைவன் முதலாகிய அனைவரும் யார், யாரோடு கூற்று நிகழ்த்துவர் என்பது மட்டுமின்றி, கூற்றிற்குரிய அனைத்து மாந்தர்களும் தம்மொடு தாமே கூறற்குரியர். இக்கருத்து பற்றிய இலக்கணத்தை அகப்பொருள் விளக்கம்,

"இறையோன் முதலோர் யாரொடு மின்றித்
தம்மோடு தாமே சாற்றியும் அமைப"

(அக.விளக்.224)

என்றும் இலக்கண விளக்கம்,

"எம்முறை யோரு மியாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியு மமைவர்"

(இல.விளக்.572)

என்றும் சுவாமிநாதம்,

"விளம்பும்அனை வருந்தாந்தம்மொடுசொல்லும்"

(சுவாமி.126 ; 6)

என்றும் குறிப்பிடும்.

பிற பொருள்களுடன் கூற்று நிகழ்த்துதல்

தலைவனும் தலைவியும் காமம் இடையீடுபட்ட நிலையில் பிற பொருள்களுடன் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமங் கண்ணிய மரபிடை தெரிய,
எட்டன் பகுதியும் விளங்க, ஒட்டிய
உறுப்புடையது போல், உணர்வுடையது போல்,

மறுத்துரைப்பது போல், நெஞ்சொடு புணர்ந்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்,
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்,
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்து இருவர்க்கும் உரிய பால் கிளவி"

(தொல்.1142)

என்றுரைக்கும். இவை கனவின்கண்ணும் நிகழும் என்பதை,

"கனவும் உரித்தால் அவ்விடத் தான"

(தொல்.1143)

என்று இயம்பும்.

தலைவி, நெஞ்சு முதலிய பொருள்களிடம் தன் சொல்லைக் கேட்பது போலவும் தனக்கு அவை இன்சொல் சொல்வது போலவும் ஏவல் செய்வது போலவும் தன்னைத் தேற்றுவதைப் போலவும் கூற்று நிகழ்த்துவதை அகப்பொருள் விளக்கம்,

"நெஞ்சு நாணு நிறைசேர் அறிவும்
செஞ்சுடர்ப் பருதியும் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியும் கானலும்
உள்ளுறுத் தியன்றவும் ஒழிந்தவை பிறவும்
தன்சொற் கேட்குந போலவும் தனக்கவை
இச்சொற் சொல்லுந போலவும் ஏவல்
செய்குந போலவும் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்"

(அக.விளக்.223)

என்று சுட்டும். இலக்கண விளக்கம் (570) தொல்காப்பியத்தைப் பின்பற்றும். சுவாமிநாதம்,

"............ .... காமமிகு தியினால்
வாணுதலும் இறைவனுஞ்சொல் வனபோற்கேட் பனபோல்
மறுப்பனபோல் அஃறிணைப்பண் பினவொடும் நெஞ்சோடுமே
வீணுரையாய், உவமஉரு பகமயங்கச் சொலுவார்;"

(சுவாமி.126 ; 2-5)

என்றுரைக்கும்.

இவற்றால் தொல்காப்பியம் தலைமக்கள் காமம் மிக்க கழிபடர் கிளவியில் நெஞ்சு, அஃறிணைப் பொருட்களுடன் கூற்று நிகழ்த்துவதாகச் சுட்டுவதும் அகப்பொருள் விளக்கம், 'தலைவி'யை மட்டும் குறிப்பிடுவதும் இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதும் புலனாகும்.

கூற்றிற்கு உரிமை இல்லாதோர்

தலைவி வாழும் ஒரே ஊரில் வாழ்பவர், அவளது அயல் வீட்டில் உள்ளோர், அவளது தெருவில் உள்ளோர், நோயின் கூறுபாட்டினைக் குறிப்பால் அறிவோர், அவளது தந்தை, தமையன் ஆகியோரது கருத்தை, தோழி முதலியோரைக் கொண்டு கூற்று நிகழ்த்துவோரே தவிர, இவர்கள் தாமே கூற்று நிகழ்த்துதல் இல்லை. இதனைத் தொல்காப்பியம்,

"ஊரும், அயலும், சேரியோரும்,
நோய் மருங்கு அறிநரும், தந்தையும், தன்னையும்,
கொண்டு எடுத்து மொழியப்படுதல் அல்லது
கூற்று அவண் இன்மை யாப்புறத் தோன்றும்"

(தொல்.1447)

என்று குறிப்பிடும். இந்நூற்பாவில் வரும் 'கொண்டெடுத்து மொழியப்படுதல்' என்பதற்கு இளம்பூரணர், "ஊரிலுள்ளாருஞ் சேரியிலுள்ளாருஞ் அயன்மனையுள்ளாரும் நோய்ப்பக்கங் குறிப்பினா லறிவாருந் தந்தையுந் தமையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனையுட்கொண்டு பிறிதொன்றை யெடுத்து மொழியினல்லது பட்டாங்குக் கூறுதலின்மை வலியுறுத்தத் தோன்றும் என்றவாறு"[109] என்பர். பேராசிரியர், பிறரொரு மாந்தர் கூற்றைப் பிறரொருவர் எடுத்துக்காட்டும் வகையில் அமைவது என்பதை, "'கொண்டெடுத்து மொழியப்படுத லல்ல' தென்பது இவர் கூற்றாகப் பிறர் சொல்லினல்லது இவர்தாங் கூறாரென்றவாறு"[110] என்பர். கா.சுப்பிரமணியபிள்ளை, "ஊராரும், அயலாரும், சேரியோரும், தந்தையும், அன்னையும் கூறியதாகப் பிறர் சில சொல்லுவதன்றி அவர்கள் நேராகக் கூற்று நிகழ்த்தற்குரியரல்லர்"[111] என்பர். புலவர் குழந்தை, 'ஊரார், அயலார், சேரியார், நோய்மருங்கறிஞர், தந்தை, தன்னை இவர்கள் களவு, கற்பு இரண்டிற்கும் உரியர். ஆனால், இவர்கள் கூறுவதாக, முன் இருவகைக் கைகோளின் கூற்றிற்கும் உரியராகக் கூறிய பன்னிருவருங் கூறுவதல்லது, இவ்வறுவருங் கூறுவதாகச் செய்யுள் செய்தல் மரபன்று'[112] என்றுரைப்பர். ந.சுப்புரெட்டியார், "தலைமகள் வாழும் ஒரே ஊரில் உள்ளவர்கள், அவளது அயல்மனையில் உள்ளார், சேரியில் உள்ளார், அவளது நோயின் கூறுபாட்டினைக் குறிப்பினால் அறிவோர், தந்தை, தமையன் ஆகிய இன்னோர் கூற்றாகப் பிறர்கொண்டு கூறின் அல்லது இவர் தாமே கூறினாராகச் செய்யுள் செய்தல் இல்லை"[113] என்று இயம்புவர். ஒருவர் தம்முடைய கூற்றிற்குள், கூற்றிற்கு உரிமையில்லா மாந்தரின் கூற்றை அப்படியே பெயர்த்துக் கூறுதல் என்பதை ஆ.அமிர்தகௌரி, "பேசுவோர் தம்முடைய பேச்சுக்குள்ளே பிறிதொருவர் பேச்சை எடுத்துக் கூறுதல் கொண்டெடுத்து மொழிதல் எனக் கூறப்படும்"[114] என்றும் "கொண்டெடுத்து மொழிதல் என்னும்

தொடரைக் கூர்ந்து நோக்கின், எடுத்து மொழிதல் என்பது போதுமானதாகும். ஆனால்,'கொண்டு' என்று ஒரு சொல் கூடுதலாகச் சேர்ந்துள்ளமை பொருள் கருதியே எனத் தோன்றுகின்றது. பிற ஒரு பேச்சை அப்படியே பெயர்த்து உரைத்தல் என்பதை இச்சொல் உணர்த்துகின்றது. இதனால், உரையாடற் பண்பு மிகுதியும் ஒளிர்கின்றது"[115] என்றும் உரைப்பர்.

அகப்பொருளகத்து கூற்றிற்கு உரிமை இல்லாதோரை அகப்பொருள் விளக்கம்,

"பயந்தோன் றன்னை உயங்குநோ யறிவோர்
ஊரவர் அயலோர் சேரியோர் என்றிவர்
முகத்துரை நிகழா அகப்பொரு ளகத்தே"

(அக.விளக்.215)

என்று குறிப்படும். இந்நூற்பாவின் உரையானது, "பயந்தோன் முதலாகச் சொல்லப்பட்டவர் முகத்துச் சொல் நிகழா அகப்பொருளகத்து என்றவாறு. எனவே அவை, பிறரால் எடுத்துப் பிறரால் ஓர் சொற்றந்து அடுத்துக் கூறப்படும் எனக்கொள்க"[116] என்று சுட்டும்.

இலக்கண விளக்கம் ***(563)*** *தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதோடு "கொண்டெடுத்து மொழிதல் இவர் கூற்றாகப் பிறர் கூறுதல்"[117] என்று விளக்கியுரைக்கும். சுவாமிநாதம்,*

"உரியபயந் தோன், தம்முன் சேரியார்நோய் அறிவோர்,
ஊர்அயலோர், இவர்மொழிமுன் னிலையின்நிக ழாவாம்"

(சுவாமி.125 ; 1-2)

என்று அகப்பொருள் விளக்கக் கருத்தைத் தழுவியுரைக்கும்.

இவற்றால் கூற்றிற்கு உரிமையில்லா மாந்தரின் கருத்தைக் கூற்றிற்கு உரிமையுடையோர் எடுத்துக்கூறும் வகையில் அமைவது கொண்டெடுத்து மொழிதல் என்பது தெளிவாகும். தொல்காப்பியம் கூற்று நிகழ்த்துதற்கு உரிமை இல்லாதோராக ஊரார், அயலோர், சேரியோர், நோயின் தன்மையைக் குறிப்பால் அறிவோர், தந்தை, தமையன் ஆகியோரைக் குறிப்பிடுவதும் அகப்பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் இதனையே பின்பற்றுவதும் விளங்கும். தொல்காப்பியம் சுட்டிய 'தந்தையை' அகப்பொருள் விளக்கமும் சுவாமிநாதமும் 'பயந்தோன்' என்று குறிப்பிடுவதும் தொல்காப்பியம் குறிப்பிட்ட 'தன்னை'யை, சுவாமிநாதம் 'தம்முன்' என்று குறிப்பிடுவதும் புலனாகும். தம்முன் என்பதற்கு 'உடன் பிறந்த அண்ணன்' என்று சுவாமிநாதம் சுட்டுவது நோக்கத்தக்கது.

கூற்று - நாடகப் பாங்கினது

ஒருவர், தான் கூற விரும்பும் செய்தியைக் கேட்போருக்குத் தெரிவித்தலாகிய கூற்றுமுறை அகத்திணைக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கூற்றாளர், அகத்திணை நிகழ்ச்சிகளைக் கேட்போருக்கு எடுத்துக் கூறுதல் என்ற முறையில் கூற்று நாடகப் பாங்கினது. இதனைத் தொல்காப்பியம்,

"நாடக வழக்கினும்"

(தொல்.999:1)

என்று சுட்டும். இதற்கு இளம்பூரணர், "நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும்

அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்"[118] என்பர். நச்சினார்க்கினியர், "புனைந்துரைவகையானும்"[119] என்றும் சோமசுந்தர பாரதியார், "உலகியலை ஒட்டி உயர் குறிக்கோளோடு சுவைபடக் காட்டும் 'பொருநு' வகை மரபுகளோடும்"[120] என்றும் இயம்புவர். வ.சுப.மாணிக்கனார், "அகத்திணை முற்றும் கூற்று வகையான் அமைந்த நாடகப் பாங்கினதாயினும், அக்கூற்றுக்கள் மக்கள் பெயர் பெறா"[121] என்றும் ந.சுப்புரெட்டியார், "அகத்திணை முற்றும் கூற்று வகையால் அமைந்த நாடகப் பாங்கினது"[122] என்றும் குறிப்பிடுவர்.

இவற்றிலிருந்து தொல்காப்பியக் கூற்றானது, களவு, கற்பு பற்றிய அகத்திணை நிகழ்ச்சிகளைக் கேட்போருக்கு உரைத்தலாகிய நாடகப் பண்பு அமைந்துள்ளதை அறிய இயலும்.

தொல்காப்பியத்தில் நாடகத் தன்மைக் கூறுகளான கூற்று நிகழ்த்தும் சூழல், இயற்கைக் குறியீடுகள், கூற்று நிகழ்த்தும் அக மாந்தர், கேட்போரிடம் உரைத்தல் போன்றவை காணப்படும். இதனை பொ.நா.கமலா, "தொல்காப்பியத்தில் நிகழ்வுப் பனுவல் தொடர்பான அரங்கக் குறிகள் பல காணப்பெறுகின்றன. பொருளதிகாரத்தில் அகமரபை விளக்குமிடத்து இவை மிகுதியும் இடம்பெறுகின்றன. அரங்கக் குறிகளின் அமைவாகிய (System of theatrical signs) அரங்கமொழி, அரங்கில் கூற்று நிகழ்த்தும் முறைமை, கூற்று நிகழ்த்துதற்குரிய இடங்கள், கூற்று நிகழ்த்தும் அகமாந்தர், கூற்றில் இயற்கைக் குறியீடுகள் (Natural Symbols) இடம்பெறுமாறு ஆகியவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இக்கருத்துக்களைத் தொகுத்துக் காணின் அரங்க மரபுக்குரிய அரங்க மொழியினைத்

தொல்காப்பியம் திட்ப நுட்பமாக வரையறுத்துள்ளமை புலனாகிறது"[123] என்றும் "பாத்திரங்களின் கூற்று, நாடகத் தனிமொழி (Dramatic Monologue) முறையில் அமைவன. கேட்போரை முன்னிறுத்தி நாடகக் கூற்று நிகழும். கூற்று என்பது பேசுபவர்_கேட்பவர் தொடர்புடைய ஒரு மொழிதலே. எனவே அஃது ஓர் அரங்கக் குறியே. குறிப்பிட்ட சூழலில், குறிப்பிட்ட பாத்திரம், குறிப்பிட்ட கேட்போர் முன் கூற்று நிகழ்த்துவதாக அக நாடகம் அமையும்"[124] என்றும் குறிப்பிடுவர்.

நாடகக் கூறுகளுள் முதன்மையானது உரையாடல். ஒருவர் கூற்றிற்கு, மறுமொழி பகரும் 'கூற்றும் மாற்றமும்' என்பது 'உரையாடல்' வடிவத்தைக் குறிக்கும். இதனைத் தொல்காப்பியம்,

"கூற்றும் மாற்றமும் இடைஇடை மிடைந்தும்
போக்கின்றாகல் உறழ்கலிக்கு இயல்பே"

(தொல்.1412)

என்று இயம்பும். இவ்வுரையாடல் என்பதற்கு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, "சொல்லல், பேசல்"[125] என்று பொருள் விளக்கம் செய்கின்றது. "நாடகப் பண்புகள் பல; அவற்றுள் உரையாடல் ஒன்று"[126] என்பர் ஆ.அமிர்தகௌரி.

தலைவன் கூற்று நிகழ்த்தும்போது, மாறுபடக் கூறுதல் 'பாங்கனுக்கு' உரியது. இதனைத் தொல்காப்பியம்,

"மொழி எதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே"

(தொல்.1128)

என்பதன் மூலம் அறிய இயலும். எனவே, நாடகப் பண்புகளுள் ஒன்றாகிய உரையாடல் பண்பு தொல்காப்பியத்தில் உள்ளதை அறிய இயலும்.

பிறரது கருத்தை எடுத்துக் கூறும் வகையில் அமையும் கொண்டெடுத்து மொழிதலானது, "ஒரு பேச்சுக்குள் அமைந்த மற்றொரு பேச்சு ஆகும். இக்கொண்டெடுத்து மொழிதல் பெரும்பாலும் பின்னோக்கு நிகழ்ச்சியைக் காட்டுகின்றது. இந்த அமைப்பு நாடகக் காட்சியின் முழுமைக்குப் பயன்படுகின்றது"[127] என்பர்.

மாந்தரின் தனிமைச் சூழல், தனிமொழிக்கு அடிப்படையாகும். இத்தனிமொழியில் மாந்தர் தமக்குத் தாமே கூற்று நிகழ்த்துவர். இத்தற்கூற்று பற்றி ந.பலராம ஐயர், கேட்பாரின்றித் தனக்குள்ளே பேசிக்கொள்ளும் பேச்சாம் ; ஆதலின் 'தனிமொழி' என்றும் பெயர்பெறும். இதனை வடநூலார் ஸ்வகதம் என்றும் ஆத்மகதம் என்றுங் கூறுப. ஆங்கிலத்தில் 'Soliloquy' என்பது இஃதாம்"[128] என்பர். ப.நீலகண்டன், "நாடக அமைப்பில் கையாளப்பட்ட ஒரு சிறப்பான உத்தி 'தனிமொழி' (Soliloquy) ஆகும். நாடக மாந்தர்கள் சில சமயம் தம் கருத்துக்களைப் பிறிதொரு நாடகத் துணைமாந்தரிடம் கூற முடியாமலிருக்கலாம். எனவே, நாடக மாந்தர்கள் தனிமையில் நின்று 'தனிமொழி' பேசுவது தேவையாகிறது"[129] என்று குறிப்பர்.

அகத்திணை நிகழ்ச்சிகளைக் கேட்போருக்கு உரைத்தல், உரையாடல், பின்னோக்கு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டும் வகையிலுள்ள கொண்டெடுத்து மொழிதல், தமக்குள் பேசிக்கொள்ளுதல், அஃறிணைப் பொருட்களுடன் உரைத்தல் ஆகிய நாடகக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு கூற்றானது நாடகப் பாங்கினது என்பதை அறிந்துகொள்ள இயலும்.

தொகுப்புரை

தொல்காப்பியம் மாந்தர் கூற்றுகளைக் குறிப்பிட கிளவி, உரைத்திறம், செப்பல், மொழிதல் ஆகிய சொற்களைப் பயன்படுத்தும். இச்சொற்களுக்கு உரையாசிரியர்கள் கிளவி, கூற்று, உரையாடுதல், கூற்று நிகழும் கூறுபாடு, கூற்று வகை நாடுதல், உரிமை, சொல்லுதல், கூறுதல் என்று பொருளுரைப்பர்.

தொல்காப்பியத்தில் பதினான்கு இடங்களில் 'கூற்று' என்ற சொல் மொழியப்பட்டுள்ளது. இக் கூற்றிற்கு உரையாசிரியர்கள் சொல்லக்கருதுதல், கூற்று, இயல்பு, கூறுபாடுகள், துறை, கூற்றாற் கூறுதல், சொல், மொழி என்று கருத்துரைப்பர்.

செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகிய 'கூற்றுவகை' பற்றிய நூற்பாக்களில் கிளவி, கிளந்த, கூற்று, கூறல், மொழிதல், கிளத்தல் என்று வெவ்வேறு சொற்களைத் தொல்காப்பியம் கூற்றைக் குறிக்கப் பயன்படுத்தும். இதற்கு உரையாசிரியர்கள் கிளவி, கூறுதல், சொல்லுதல், கூற்று, மொழிதல், கிளத்தல் என்பர்.

அகராதிகள், வாழ்வியற் களஞ்சியம், உரையாசிரியர்கள், திறனாய்வாளர்கள் கருத்துப்படி சொல்லுதல், மொழிதல், கூறுதல் என்பன கூற்றைக் குறிக்கும் வேறு சொற்களாகவும் கூற்று என்பது ஒருவர் தன் உள்ளக் கருத்தைக் கேட்பவருக்கு இன்னார் என்பது புலப்பட நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உணர்த்துவது என்பதும்தெளிவாகும்.

மாந்தர் கேட்பதற்குரிய தகுதியுடையோரிடம் இடம், காலம் போன்ற சூழல்களுக்கு உட்பட்டுக் கூறவேண்டும். இக்கூற்றுகளின் மூலம் கூற்றாளரின் எண்ண ஓட்டங்களைத் தெரிந்துகொள்ள முடியும்.

கூற்று என்பதற்குப் பிற அக இலக்கணங்கள் கூற்று, கிளவி என்ற சொற்களைப் பயன்படுத்தும். இவரால் இச்செய்யுள் கூறப்பட்டது மட்டுமின்றி, நெஞ்சிடமும் கேட்போரிடமும் வெட்ட வெளியினைப் பார்த்தும் உரைத்தல் என்ற வகையில் கூற்று அமையும் என்று இயம்பும்.

தொல்காப்பியம் களவிலும் கற்பிலும் கூற்றுக்குரியோராகப் பன்னிரண்டு மாந்தர்களைக் குறிப்பிடும். பிற அக இலக்கணங்கள் எண்ணிக்கையிலும் மாந்தரிலும் சொல்லாட்சியிலும் வேறுபடும்.

தொல்காப்பியம் யார் யாரோடு கூற்று நிகழ்த்துதற்குரியோர்என வரையறுக்கும் போது நற்றாய், கண்டோர், தலைவன் ஆகியோருக்கு இடம் சுட்டப்பட்டுள்ளது. இவர்களல்லாத பிற மாந்தர் தலைமக்களுடன் கூற்று நிகழ்த்துவர். அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய அக இலக்கணங்களும் யார் யாருடன் கூற்று நிகழ்த்துதற்குரியர் என்பதை வரையறுக்கும்.

தம்மொடு தாமும் காமம் மிக்க கழிபடர் கிளவியாலும் கூற்று நிகழ்த்தும் மரபைத் தொல்காப்பியமும் பிற அக இலக்கணங்களும் கூறும்.

கூற்றிற்கு உரிமையில்லாதோரைப் பற்றித் தொல்காப்பியமும் பிற அக இலக்கணங்களும் எடுத்தியம்பும்.

அக மாந்தர், பிற மாந்தரிடம் கூறும் முன்னிலைக் கூற்று, நெஞ்சொடு கிளத்தல் போன்ற கூறுகளை அடிப்படையாகக் கொண்டு கூற்று நாடகப் பாங்கில் அமையக் கூடியது என்பது தெளிவாகும்.

சான்றெண் விளக்கம்

1. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் உரைவளம், ப.354
2. மேலது, ப.366
3. மேலது, ப.357
4. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.81
5. மேலது, ப.298
6. மேலது, ப. 349
7. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.156
8. மேலது, ப.177
9. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.408
10. மேலது, ப.424
11. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்), கற்பியல், ப.214
12. மேலது, ப.214
13. மேலது, ப. 245
14. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.438
15. மேலது, ப.445
16. மேலது, ப.453
17. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.98
18. மேலது, ப.135

19. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் உரைவளம், ப.413

20. மேலது, ப.414

21. தி.வே.கோபாலையர், ந.அரணமுறுவல் (ப.ஆ), தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணம், ப.94

22. பேரா.கந்தசாமியார், ஞா.தேவநேயப் பாவாணர் (கு.உ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை, ப.193

23. மேலது, ப.356

24. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் புறத்திணை இயல் உரைவளம், ப.168

25. மேலது, ப.169

26. மேலது, ப.171

27. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.185

28. மேலது, ப.186

29. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) பொருளியல், ப.158

30. மேலது, ப.158

31. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம், ப.127

32. மேலது, ப.129

33. மேலது, ப.134

34. க.வெள்ளைவாரணன் (ஆ.உ), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.15

35. மேலது, ப.6

36. மேலது, ப.807

37. மேலது, ப.812

38. மேலது, ப.808

39. மேலது, ப.847

40. மேலது, ப.846

41. மேலது, ப.920

42. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் உரைவளம், ப.17

43. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.913

44. மேலது, ப.915

45. மேலது, ப.913

46. மேலது, ப.916

47. மேலது, ப.918

48. மேலது, ப.922

49. மேலது, ப.922

50. மேலது, ப.923

51. மேலது, ப.922

52. மேலது, ப.924

53. மேலது, ப.925

54. மேலது, ப.924

55. மேலது, ப.926

56. மேலது, ப.927

57. மேலது, ப.926

58. மேலது, ப.929

59. மேலது, ப.930

60. மேலது, ப. 929

61. இ.மா.கோபாலகிருஷ்ணக் கோனார், மதுரைத் தமிழ்ப் பேரகராதி (முதல் பாகம்), ப.711

62. தமிழ் லெக்சிகன், தொகுதி II, ப.1080

63. தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி முதலியன, ப.201

64. மணிமேகலைத் தமிழ்ச்சொல் அகராதி, ப.232

65. பி.இராமனாதன், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, தொகுதி - ஒன்று, ப.463

66. நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.516

67. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.351

68. மேலது, ப.351

69. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.218

70. எஸ்.இலட்சுமணன், வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு, ப.945

71. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.15

72. மேலது, ப.6

73. ஞா.தேவநேயன், ஒப்பியன் மொழிநூல், முதன் மடலம், திராவிடம் முதற்பாகம் (தமிழ்), பக்.104-105

74. க.வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம், ப.271

75. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.168

76. புலவர் குழந்தை (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற் பகுதி), பக்.55 – 56

77. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.373

78. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம் III செய்யுளியல் & மரபியல், ப.2

79. இந்திரா மனுவேல், தொல்காப்பியத்தில் பொருள் தளமும் பொருள் கூறுகளும் (கட்.), தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்), செ.ஜான்லாறன்ஸ், கு.பகவதி, (ப.ஆ.), ப.51

80. ச.சிவகாமி, தொல்காப்பியக் கூற்றுப் பகுப்பாய்வு (கட்.), 'தொல்காப்பிய ஆய்வுகள்' இ.ப.த.மன்றம், அறிஞர் வ.சுப.மாணிக்கனார் அறக்கட்டளைக் கட்டுரைகள், மு.முருகையன் (ப.ஆ.), மற்றும் பலர், ப.3

81. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.292

82. ஆ.இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு, ப.26

83. இந்திராமனுவேல், தொல்காப்பியத்தில் பொருள் தளமும் பொருள் கூறுகளும் (கட்.), தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்), செ.ஜான்லாறன்ஸ், கு.பகவதி (ப.ஆ.), ப.53

84. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.199

85. கா.ர.கோவிந்தராச முதலியார் (ப.ஆ.), வீரசோழியம் பெருந்தேவனார் இயற்றிய உரையுடன், ப.98

86. நக்கீரனார் (உ.ஆ), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.199

87. மேலது, ப.199

88. கா.ர.கோவிந்தராச முதலியார் (ப.ஆ.), வீரசோழியம் பெருந்தேவனார் இயற்றிய உரையுடன், ப.99

89. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.917

90. மேலது, ப.918

91. மேலது, ப.917

92. நக்கீரனார் (உ.ஆ), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.199

93. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.253

94. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.926

95. மேலது, ப.927

96. மேலது, ப.924

97. மேலது, ப.925

98. மேலது, ப.924

99. மேலது, ப.925

100. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கணவிளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.257

101. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.929

102. மேலது, ப.930

103. மேலது, ப.929

104. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.276.

105. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.259

106. செ.வை.சண்முகம் (ப.உ.), சுவாமிநாதம், ப.218

107. ந.பலராம ஐயர் (உ.ஆ.), நாடகவியல், ப.202

108. ஆ.அமிர்தகௌரி, சங்க இலக்கியத்தில் உரையாடல், ப.185

109. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.920

110. மேலது, ப.920

111. கா.சுப்பிரமணியபிள்ளை, பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, ப.137

112. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.144

113. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.374

114. ஆ.அமிர்தகௌரி, சங்க இலக்கியத்தில் உரையாடல், ப.25

115. மேலது, ப.26

116. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.273

117. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.254

118. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.585

119. மேலது, ப.587

120. மேலது, ப.592

121. வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல், ப.334

122. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப.422

123. பொ.நா.கமலா, தொல்காப்பியத்தில் நவீன சிந்தனைகள், பக்.31-32

124. மேலது, ப.37

125. பி.இராமனாதன், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி தொகுதி - ஒன்று, ப.261

126. ஆ.அமிர்தகௌரி, சங்க இலக்கியத்தில் உரையாடல், ப.5

127. மேலது, ப.26

128. ந.பலராம ஐயர் (உ.ஆ.), நாடகவியல், ப.202

129. ப.நீலகண்டன், நாடக மேடை, ப.28

இயல் இரண்டு

தலைவன் கூற்று

தலைவன் கூற்று

தலைவன், அகவொழுக்கத்தில் சிறப்புடைய மாந்தராவான். நல்லூழின் வயத்தால் எய்தப்பெறும் எல்லா உயர்வுகளையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவன். கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் சிறந்தவன். உயர்குடியில் பிறந்தவன். தான், தலைவி மீது கொண்ட காதலை நிலைநாட்டுவதில் உறுதியுடன் திகழ்பவன். தலைவனது கூற்றுகளின் வாயிலாக அவனது மன நிலைகளைத் தெளிவாக உணர்ந்துகொள்ள இயலும். இவ்வகையில் தொல்காப்பியத்தில் அமைந்த தலைவன் கூற்றுகளைப் பின்வந்த அக இலக்கணங்களோடு ஒப்பிட்டு அறிவது இவ்வியலின் நோக்கமாக அமைகிறது.

தலைவன்

தலைவனுக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"

(தொல்.1044)

என்று இயம்பும். இதற்கு இளம்பூரணர், "பெருமையாவது - பழியும் பாவமும் அஞ்சுதல். உரன் என்பது - அறிவு"[1] என்பர். நச்சினார்க்கினியர், "பெருமையும் - அறிவும் ஆற்றலும் புகழுங் கொடையும் ஆராய்தலும், பண்பும், நண்பும், பழிபாவ மஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமைப் பகுதியும், உரனும் - கடைப் பிடியும் நிறையுங் கலங்காது துணிதலும் முதலிய வலியின் பகுதியும், ஆடூஉ மேன - தலைவன் கண்ண என்றவாறு"[2] என்றுரைப்பர்.

இறையனாரகப்பொருள் உரையில் நக்கீரர், "தலைமகற்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன குணம்"[3] என்று இயம்புவர். கா.ர.கோவிந்தராச முதலியார், "உரனெனினும் அறிவெனினும் ஒக்கும். பெருமையென்பது பழியும் பாவமுமஞ்சுதல். அறிவென்பது

தக்கதறிதல்"[4] என்று மொழிவர். புலவர் சேயொளியும்[5] கு.சுந்தரமூர்த்தியும்[6] நச்சினார்க்கினியர் கருத்தினை எடுத்துரைப்பர். செ.வை.சண்முகம், "பெருமையும், உரனும் நிறைந்த தலைவனைப் பொருந்தும் குணம்"[7] என்றுரைப்பர். இவற்றால் தலைவன் தக்கதனை அறிந்து செயல்படக்கூடிய பண்பினை உடையவன் என்பது விளங்கும்.

கூற்று - வரையறை

தொல்காப்பியம் கூறும் தலைவன் கூற்றுகள் (987, 1047, 1048, 1049, 1092) எண்பத்து நான்கு. இவன் களவிலும் (1445) கற்பிலும் (1446) கூற்று நிகழ்த்தற்கு உரியவன்.

சூழல்

தலைவன் களவில் இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழி மதியுடம்பாடு, தோழியிற் கூட்டம், இருவகைக்குறி, வரைவுமுடுக்கம், ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு உடன்போக்கு, உடன்போக்கிடையீடு, மீட்சி, தன்மனைவரைதல், வரைவு மலிவு, வரைந்துகோடல், மலிவு, ஊடல், பிரிவு ஆகிய சூழல்களில் கூற்று நிகழ்த்துதற்குரியன்.

இயற்கைப் புணர்ச்சி

தெய்வத்தாலோ, தலைவியாலோ எதிர்ப்பட்ட தலைவனும் தலைவியும் வேட்கை மிகவினால் கூடுவது இயற்கைப் புணர்ச்சி. கா.ர.கோவிந்தராச முதலியார், "இயற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற் பெறவும்படும் தலைமகளாற் பெறவும்படும்"[8] என்பர். புலவர் சேயொளியும்[9] செ.வை.சண்முகமும்[10] இக்கருத்தினர். "அவ்வியற்கைப் புணர்ச்சி தெய்வத்தாற் பெறுங்காலத்து முயற்சியின்றித் தானே முடிவதாம் என்றவாறு. எனவே, அப்புணர்ச்சி

தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சியானே முடிவதாகும்” என்று கா.ர.கோவிந்தராச முதலியாரும்[11] புலவர் சேயொளியும்[12] மொழிவர்.

இவ்வாறு தெய்வத்தாலோ, தலைவியாலோ எதிர்ப்பட்ட தலைவனும் தலைவியும் பிறப்பு, குடிமை, ஆண்மை முதலிய பத்துவகைப் பண்பால் (தொல்.1219) “ஒத்தார் இருவர் தாமே கூடுங் கூட்டம்”[13] காமப்புணர்ச்சி என்றும் “காமப் புணர்ச்சியெனினும், இயற்கைப் புணர்ச்சியெனினும், முன்னுறு புணர்ச்சியெனினும், தெய்வப் புணர்ச்சியெனினும் ஒக்கும். இவையெல்லாம் காரணப்பெயர்”[14] என்றும் உரைப்பர் இளம்பூரணர். “ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வயத்தால் ஓரிடத்தெதிர்ப்பட்டுப் பிறரறியாமல் காமங் காரணமாகக் கூடும் கூட்டம் காமக் கூட்டம் எனப்படும். அது பிறரறியாமல் மறைவில் கூடுதலின் களவுப் புணர்ச்சி எனப்படும் ; ஊழ் (இயற்கை) வயத்தாற் கூடுதலின் இயற்கைப் புணர்ச்சி எனப்படும் ; பின்னர் நிகழவிருக்கும் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் ஆகியவற்றுக்கு முன்னர் நிகழ்தலின் முன்னுறு புணர்ச்சி எனப்படும்”[15] என்று ஆ.சிவலிங்கனார் தெய்வப் புணர்ச்சியைத் தவிர மற்றவற்றிற்கு விளக்கம் கூறுவர்.

தொல்காப்பியம் களவொழுக்கத்தின் நான்கு நிலைகளை எடுத்துரைக்கும்போது,

“காமப் புணர்ச்சியும்”

(தொல்.1442 : 1)

என்று இயம்பும். இக்காமப் புணர்ச்சி என்பதற்கு நக்கீரர், “தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம் உணர்வினரன்றி வேட்கை மிகவினாற் புணர்வது”[16] என்றுரைப்பர். “ஊழினால் தலைமகன், தலைமகளை எதிர்ப்பட அவ்விருவரும் மனமியைந்து தாமே கூடுதல்”[17] என்பர் கா.ர.கோவிந்தராச முதலியார்.

இத்தகைய சூழலில் தொல்காப்பியத்தில் (1047, 1048) தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன பதினான்கு. பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.2) உரை ஒன்று, தமிழ் நெறி விளக்கம் (15) மூன்று, வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஐந்து, அகப்பொருள் விளக்கம் (125, 127) பதினைந்து, களவியற்காரிகை (25) இரண்டு, மாறனகப்பொருள் (17, 19) பதினேழு, இலக்கண விளக்கம் (493, 495) பதினைந்து, முத்துவீரியம் (836) ஐந்து, சுவாமிநாதம் (87) பதினைந்து எனத் தலைவன் கூற்று நிகழ்த்தும் சூழல்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

தலைவன், தலைவியின் மெய் தீண்டல், படைத்து மொழிதல், தலைவியைத் தழுவ விரும்பிக் கூறல், மனதில் இடையூறாய் நிகழ்ந்தது யாவையெனல், புணர்ச்சி நிகழாது காலம் நீட இரங்கல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற அக இலக்கணங்களிலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளன.

தலைவன், தெளிவகப்படுத்தியது காரணமாகக் காதல் வெள்ளம் புரண்டோடத் தலைவியின் மெய்யைத் தீண்டிப் பயில்வதைத் தொல்காப்பியம்,

"மெய்தொட்டுப் பயிறல்"

(தொல்.1048 ; 1)

என்று இயம்பும். இதனையே அகப்பொருள் விளக்கம் (127;3), மாறனகப்பொருள் (19;3), இலக்கண விளக்கம் (495;3) சுவாமிநாதம் (87;4) ஆகிய நூல்களும் பின்பற்றியுரைக்கின்றன.

தலைவன், தலைவியின் ஐம்பால் முதலிய கடை குழன்று சிதைவின்றிருந்தாலும், சிதைந்தது போலக் கருதி அதனைத்

திருத்துவதற்காகத் தொட்டவன் ஒரு காரணம் பொய்யாகப் படைத்து உரைப்பதை,

"பொய்பாராட்டல்"

(தொல்.1048 ; 1)

என்று மொழியும். இதனையே அகப்பொருள் விளக்கமும் (127;3) மாறனகப் பொருளும் (19 ; 3) இலக்கண விளக்கமும் (495;3) சுவாமிநாதமும் (87 ; 5) சுட்டுகின்றன.

தலைவனின் பொய் பாராட்டலுக்குத் தலைவி இடம் கொடுக்க, அவளைத் தழுவ விரும்பிக் கூறுவதைத் (1048 ; 2) தொல்காப்பியம் நவிலும். அகப்பொருள் விளக்கம் (127 ; 4), மாறனகப்பொருள் (19;4), இலக்கண விளக்கம் (495 ; 4), சுவாமிநாதம் (87 ; 5) ஆகியனவும் இக்கருத்தின.

தலைவி பெருநாணம் உடையவளாதலால், தலைவனின் தழுவலுக்கு இடையூறாய் நிற்க, நின் மனத்து நிகழ்ந்தவை யாவையென வினவுவான். இதனைத் தொல்காப்பியம்,

"இடையூறு கிளத்தல்"

(தொல்.1048 ; 2)

என்று சுட்டும். இதனை அடியொற்றியே அகப்பொருள் விளக்கம் (127;5), மாறனகப்பொருள் (19;5), இலக்கண விளக்கம் (495;5), சுவாமிநாதம் (87;6) ஆகிய நூல்களும் மொழிகின்றன.

தலைவன், தலைவியின் இடையூற்றால் புணர்ச்சி நிகழப்பெறாது பொழுது நீண்டதற்கு இரங்கி, இரக்கந்தோன்றக் கூறுவதைத் (1048;3) தொல்காப்பியம் சுட்டும். அகப்பொருள் விளக்கம் (127;5), மாறனகப்பொருள் (19;6), இலக்கண விளக்கம் (495;5), சுவாமிநாதம் (87;6) ஆகியவையும் இதனைக் குறிப்பிடும்.

வளர்ச்சி

தலைவன் விரும்பிய புணர்ச்சியைப் பெறுதல், முன்னிலைப்படுத்திக் கூறல், அழகு நலத்தினைப் பாராட்டடல், முறுவற்குறிப்பை அறிதல், புணர்ச்சிக்கு உடன்பட்டதனைக் கூறல், தெளிவுபடுத்தல் ஆகியன பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

இயற்கைப் புணர்ச்சியில் தெய்வப் புணர்ச்சியின்போது, தலைவன் விரும்பிய புணர்ச்சியை விரைவாகப் பெற்றவழிக் கூற்று நிகழ்த்துவதை,

"சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி"

(தொல்.1048;4)

என்று தொல்காப்பியம் சுட்டும்.

இதனை அகப்பொருள் விளக்கமானது தலைவன், தலைவியைக் கலந்தவழி மகிழ்தல், அவளது அழகு நலத்தினைப் பாராட்டடல், புணர்ச்சியால் கலைந்த அணிகளைத் திருத்தமுற அணிதல் (125;1-2) ஆகியனவற்றை மொழிகின்றன. இவற்றையே மாறனகப்பொருள் (17;1-3), இலக்கண விளக்கம் (493;1-2), சுவாமிநாதம் (87;1-2) ஆகிய நூல்களும் தழுவியுரைக்கின்றன.

இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவன், தனியாக நின்ற தலைவியை எதிர்ப்படுவான். அவளது காமக்குறிப்புண்மை அறிந்து வேட்கையால் சார நினைப்பான். தலைவியும் தன்மீது வேட்கைக் குறிப்புடையளாயினும் குலத்தின்வழி வந்த இயற்கையன்மையால் நாணம், அச்சம் மீதூர அக்குறிப்பில்லாதாரைப் போல் நிற்பாள். அப்போது தலைவன், அவளை முன்னிலைப்படுத்திக் கூற்று நிகழ்த்துவதைத் (1047;1) தொல்காப்பியம் மொழியும்.

இதனை வீரசோழியம், தலைவன் தலைவி மீது கொண்ட விருப்பத்தினைக் கூறல் (குறிஞ். நடை ; 3-4) என்று சுட்டும். அகப்பொருள் விளக்கமானது தலைவன் தலைவிமீது கொண்ட விருப்பினால் 'இரந்து பின்னிற்றற்கு எண்ணல்,' 'இரந்து பின்னிலை நிற்றல்,' 'முன்னிலைப் படுத்திக் கூறல்' (127 ; 1-2) என்று மொழியும். இவற்றையே மாறனகப்பொருளும் (19 ; 1-2) இலக்கண விளக்கமும் (495;1-2) பின்பற்றுகின்றன. முத்துவீரியம், தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் புணர்ச்சி இன்பத்தின் இயல்புரைத்தல், புணராத முன்பிருந்த வேட்கையன்பு புணர்ந்த பின்பும் அவ்வாறே வளர்வதால் தலைவியை மகிழ்ந்துரைத்தல் (836;1), இலக்கண விளக்கத்தைப் (495;1-2) பின்பற்றித் தலைவன், தலைவியிடமிருந்து ஒரு சொல் கேட்க விரும்பல் (836;2) ஆகியனவற்றை மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (495;1-2) தழுவி சுவாமிநாதம் (87;4) குறிப்பிடும்.

தலைவன், தலைவியின் மிகுந்த அழகு நலத்தினைப் புகழ்ந்துரைப்பதை,

"நன்னயம் உரைத்தல்"

(தொல்.1047;2)

என்று தொல்காப்பியம் மொழியும்.

இதனையே தமிழ்நெறி விளக்கம் 'தன்னயம்' (15;1) என்று கூறும். இதனைத் தழுவி வீரசோழியம் 'நன்னலம் புகழ்தல்' (குறிஞ்.நடை;5), 'பொன்னவிர் பூவையைப் புணர்ப்ப துரைத்தல்' (குறிஞ்.நடை;6) என்று கூறும். இதனைத் (குறிஞ்.நடை ; 5) தழுவிக் களவியற்காரிகை 'நயப்பு' (25;1) என்று மொழியும். இதனை அடியொற்றி முத்துவீரியம் 'நலம் புனைந்துரைத்தல்' (836;2) என்று குறிப்பிடும்.

தலைவனின் நலம் பாராட்டலைக் கேட்ட தலைவிக்கு இயல்பாக, அகத்துத் தோன்றும் மகிழ்வால் புறத்தில் முறுவற் குறிப்புத் தோன்றும். அந்நிலையைத் தலைவன் அறிவதைத் (1047;2-3) தொல்காப்பியம் கூறும்.

இதனையே அகப்பொருள் விளக்கம் 'முறுவற் குறிப்புணர்தல்' (127;7) என்று இயம்பும். இதனையே மாறனகப்பொருள் (19;7) பின்பற்றுவதோடு முறுவற் குறிப்பினை 'வியத்தல்', அவளிடமிருந்து 'மொழி பெற விரும்பல்' (19;7-8) என்று கூடுதலாக இரண்டினை விரித்துரைக்கும். இதனைப் (19;7) பின்பற்றி இலக்கண விளக்கமும் (495;7) சுவாமிநாதமும் (87;7) உரைக்கும்.

தலைவி, புணர்ச்சிக்கு உடன்பட அதனைக் கூறுவதைத் (1048;3) தொல்காப்பியம் இயம்பும். இக்கூற்றினை அகப்பொருள் விளக்கமானது தலைவி முயங்கற்கு உடன்பட்ட தன்மையை வலியுறுத்திக் கூறல், புணர்ச்சியால் மகிழ்தல், தலைவியின் நலத்தினைப் புகழ்தல் (127;7-8) என்று விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (19;8-9), இலக்கண விளக்கம் (495;7-8), சுவாமிநாதம் (87;8) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தலைவன், தலைவியிடம் நின்னைப் பிரியேன், பிரியினும் உயிர் தரியேன் என்று கூறி, தலைவியைத் தெளிவுபடுத்துவதைத் (1047;4) தொல்காப்பியம் கூறும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.2) உரையானது "பிரிவச்சம்"[18] என்று கூறும். இதனைத் தழுவி தமிழ்நெறி விளக்கம் (15;1) மொழிவதுடன் தலைவியின் உள்ளப் பண்பைத் தலைவன் அறிந்து 'தெளிதல்', (15;1), என்பதைக் கூடுதலாக மொழியும். வீரசோழியம்,

தலைவன் தலைவியைப் பிரியக் கருதுதலையும் (குறிஞ்.நடை;7), தமிழ்நெறி விளக்கத்தைப் (15;1) பின்பற்றிப் 'பிரிவின்மை பேசல்' (குறிஞ்.நடை ; 7) என்பதையும் இயம்பும். இதனைத் (குறிஞ்.நடை; 7) தழுவி, களவியற் காரிகையும் (25;1) முத்துவீரியமும் (836;3) உரைக்கின்றன.

வீழ்ச்சி

தலைவன், தலைவியை முன்னிலைப்படுத்தித் தான் சொல்லுகின்ற சொல்லின்வழித் தலைவியை நிற்க வேண்டுதலின்போதும் தலைவியைப் பிரிவதால் தலைவன், தன் அகத்தே நிகழும் நோயால் புறத்து நிகழும் தளர்வினைக் குறிப்பால் எடுத்துக் கூறுதலின் போதும் தலைவனின் பொலிவிழவைக் கண்ட தலைவியிடத்து நின்னைப் பிரிந்திருத்தல் தன்னால் இயலாது என்று தன் உள்ளத்தின் வேட்கையினைக் கூறுதலின்போதும் (1047;1, 3-4) கூற்றுகள் நிகழ்த்துவான். இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் சுட்டப்படவில்லை.

வன்புறை

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைச் சந்தித்த தலைவன், பிரிவின் காரணமாக வருந்தும் தலைவியை நோக்கித் தான் பிரிகின்ற இடம் அண்மையில் உள்ளது என்று கூறி ஆற்றுவிப்பான். இதனை நக்கீரர்,"வன்புறை என்பது வற்புறுத்துவது. அஃதியாங்ஙனமோ எனின், அணித்து எம் இடம் என்பது"[19] என்று சுட்டுவர். கா.ர.கோவிந்தராச முதலியார், "தலைவி ஐயுற்றவழித் தலைவன் ஐயுறவு தீர வற்புறுத்திக் கூறல். வன்பு-வலிமை. உறை-உறுத்தல்"[20] என்றும் "வன்புறுத்தலான் வன்புறை என்று பெயராயிற்று"[21] என்றும் கூறுவர்.

இத்தகைய சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினைத் தொல்காப்பியம் (1048) இயம்பும். இறையனாரகப்பொருள் (சூ.2) உரை, தமிழ்நெறி விளக்கம் (15), வீரசோழியம் (குறிஞ்.நடை..) ஒவ்வொன்றிலும் ஒன்று, அகப்பொருள் விளக்கம் (129) ஆறு, களவியற்காரிகை (25) ஒன்று, மாறனகப்பொருள் (21) ஏழு, இலக்கண விளக்கம் (497) ஆறு, முத்துவீரியம் (836) நான்கு, சுவாமிநாதம் (88) ஆறு எனப் பிற அக இலக்கணங்களில் தலைவன் கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் புணர்ந்த தலைவன், பிரியும்போது வருந்தும் தலைவியைத் தேற்றிக் கூறுவதை,

"தீராத் தேற்றம்"

(தொல்.1048;5)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனைப் பற்றி இறையனாரகப்பொருள் (சூ.2) உரையானது இயற்கைப் புணர்ச்சி இறுதியில் தலைவன், ஆற்றாத தலைவியிடம் 'எனது ஊர் அண்மையில் உள்ளது' என்று வற்புறுத்துவதைக்[22] கூறும். இதனையே தமிழ்நெறி விளக்கம் (15;2) தழுவும். வீரசோழியம், புணர்ச்சியின்கண் தலைவி அணிந்த அணிகலன்கள் வேறுபட, தலைவன் தலைவிக்கு அவள் தோழி அணிவித்தாற் போலத் திருத்தியமைக்கும் 'பெருமை செய்தலை' (குறிஞ்.நடை;8) இயம்பும். இவ்வாறு தலைவனது கையால் அணியும்போது, தோழியால் அணியப்பட்ட அணிகள் வேறுபடும், இவ்வேறுபாட்டைத் தோழி அறிந்தால் ஐயம் தோன்றும் என்று தலைவி நாணத்தால் முகம் வேறுபட, அவ்வேறுபாட்டைத் தலைவன் அறிந்து அவளைத்

தெளிவித்தல், தலைவன் வருவானோ, வாரானோ என்றெண்ணி முகம் வேறுபட்டவளைத் தலைவன் குறிப்பால் உணர்ந்து தனது காதலை எடுத்துரைத்தல், மீண்டும் தலைவி தெளிவில்லாது இருப்பதையறிந்து ஊழ்வினைத் தன்மையாகிய 'தெய்வத்திறம் பேசல்,' தலைவியிடம் 'நின்னைப் பிரியேன்' என்றல், 'பிரிந்து வருகென்றல்' (129;1-3), இறையனாரகப்பொருள் (சூ.2) உரையைப் பின்பற்றி 'இடம் அணித்து என்றல்' (129;4) ஆகிய கூற்றுகளை அகப்பொருள் விளக்கமானது விரித்துரைக்கின்றன. இதனையே (129;4) களவியற்காரிகை (25;1) பின்பற்றும். இதனையும் அகப்பொருள் விளக்கக் (129;1-3) கூற்றுகளையும் மாறனகப்பொருள் (21;1-4) பின்பற்றுவதோடு தலைவியை விடுத்த தலைவன் மீண்டும் அவளைக் கூடுதற்கு வாய்ப்புத் தருமாறு அவளைக் கூட்டிவைத்த தெய்வத்தின் திருவடி இரண்டினை வேண்டலைக் (21;4) கூடுதலாக மொழியும். இதனைப் (21;1-4) பின்பற்றி இலக்கண விளக்கம் (497;1-4) உரைக்கும். முத்துவீரியம், நின்னைப் பிரியேன் என்பதைக் கேட்ட தலைவி, பிரிவென்பது உண்டென்பதை அறிந்து பிரிவாற்றாது வருந்த, இதனையறிந்த தலைவன் இவள் வருந்துவது பிரிந்தால் கூடுதல் அரிதென்று கருதியோ அறிகிலேன் என்று அவளது வருத்தமறிதல், தலைவியிடம் பிரிந்தேனாயினும் பிரிவில்லையெனத் தெய்வ அருள் கூறல் (836;3-4), இலக்கண விளக்கத்தைப் (497;4) பின்பற்றி 'அணிமை கூறல்' (836;4), நீ போய் விளையாடு, யான் போய் வருகிறேன் என்று தலைவியை 'ஆடிடத்துய்த்தல்' (836;5) ஆகியனவற்றை விரித்துரைக்கின்றன. இதனையும் (836;4) இலக்கண விளக்கத்தையும் (497;1-3) அடியொற்றி சுவாமிநாதம் (88;2-4) இயம்பும்.

பிரிவுழி மகிழ்ச்சி

தலைவனைச் சந்தித்தத் தலைவி, பிரிந்து போகும்போது அவள் போகின்ற தன்மையைக் கண்டு தலைவன் மகிழ்தல் பிரிவுழி மகிழ்ச்சியாகும். இத்தகைய சூழலில் அகப்பொருள் விளக்கம் (131), மாறனகப்பொருள் (23), இலக்கண விளக்கம் (499), சுவாமிநாதம் (88) ஆகிய ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு கூற்றுகள் மொழியப்பட்டுள்ளன.

புதிய கூற்று.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைச் சந்தித்த தலைவன், அவளை ஆயக்கூட்டத்திற்குச் செல்லும்படி விடுக்க தலைவி, புணர்ச்சிக் களத்தினின்றும் பெயர்ந்து போகின்றதைக் கண்டு தன் நெஞ்சொடு கூறல், தன்னைத் தேடி வந்த பாகனிடம் தலைவி செல்வதைக் காட்டிக் கூறல் (131 ; 1-2) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் இயம்பும். இதனையே மாறனகப் பொருள் (23 ; 1-2) இலக்கண விளக்கம் (499;1-2), சுவாமிநாதம் (88;6-7) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன. இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இல்லாத புதிய கூற்றுகளாகும்.

பிரிவுழிக் கலங்கல்

இயற்கைப் புணர்ச்சியில் தம்மைச் சந்தித்த தலைவி பிரிந்து செல்லும்போது தலைவன் கலங்கிக் கூறுதல் பிரிவுழிக் கலங்கல். இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (1048) ஓர் இடத்திலும் பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.2) உரையில் ஒன்று, தமிழ்நெறி விளக்கத்தில் (15) மூன்று, வீரசோழியத்தில் (குறிஞ்.நடை.) நான்கு, அகப்பொருள் விளக்கத்தில் (133) ஐந்து, களவியற்காரிகையில் (25) நான்கு, மாறனகப்பொருள் (25), இலக்கண விளக்கம் (501), ஒவ்வொன்றிலும் ஐந்து, முத்துவீரியத்தில் (836, 837) மூன்று, சுவாமிநாதத்தில் (89) ஐந்து எனத் தலைவன், கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவனைச் சந்தித்த தலைவி பிரிந்து செல்லும்போது தலைவன் கலக்கமுறுவதைத் (1048;7) தொல்காப்பியம் இயம்பும்.

இதனை தலைவியை ஆடிடத்துய்த்து அகன்ற தலைவன், அவள் தன்னைக் காணாமல் மறைந்து நின்று காண்பான். அப்போது தலைவியை ஆயக்கூட்டம் வழிபடுதலைக் கண்டு, இத்தகைய சிறப்புடையாளை இனி எய்துதல் அருமையுடையதாகும் என்றும் இவளைத் தனித்துக் கூடியது என்ன மாயமோ என்றும் மயங்கி, 'தலைவன் தலைவியது அருமை அறிந்து' ஆற்றாதவனாயிருப்பதை[23] இறையனாரகப்பொருள் (சூ.2) உரை இயம்பும். இதனைப் பின்பற்றி, தமிழ்நெறி விளக்கம் 'எய்துதல் அருமை' (15 ; 2), தலைவன் தலைவி மீது கொண்ட அன்பின் மிகுதியால் 'உயிரெனக் கூறல்', தலைவியை அளித்த தெய்வம் மீண்டும் அவளைக் காணத் துணை செய்யும் என்று தனது மனதைத் தேற்றிக் கொண்டு பெயர்தல் (15;3) என்று விரித்துரைக்கும். இதனைப் (15 ;2-3) பின்பற்றி வீரசோழியம் 'பெறற்கரி தென்றல்,' 'உறுதெய்வம் பேணல்' (குறிஞ்.நடை.8-9), தனக்குத் தலைவியைக் கூட்டுவித்த ஊழ்வினையாகிய தெய்வத்தை வலிந்து கூறல், தன் உயிர்த் தோழனைக் கண்டு, தன் நிலையைக் கூறினால் அவளைப் பெறுவது உறுதியென்று பாங்கனை நினைத்தல் (குறிஞ்.நடை;9-10) ஆகியனவற்றை மொழிகின்றன. இதனைப் (குறிஞ்.நடை ; 8) பின்பற்றி அகப்பொருள் விளக்கம் 'ஆய வெள்ளம் வழிபடக் கண்டு இது மாயமோ என்றல்' (133 ; 1-2), தலைவி ஆயக் கூட்டத்திற் செல்லும்போது தன் உயிர்த் தோழியைப் பலமுறை கடைக்கண்ணால் பார்ப்பதுணர்ந்து அவளைத் தலைவன் தூதாகப் பெற்று உய்வதாகக் கூறல், தலைவியின் 'பண்பினைப் பாராட்டல்', அவளைப் 'பெற்றாரை வாழ்த்தல்', அன்றிரவில் தலைவியின் மீது

கொண்ட வேட்கை மிகுதியால் துயில் வரப்பெறாது வருந்துதல் (133;2-4) என்று கூறும். இதனைத் (133;1-2) தழுவிக் களவியற்காரிகை 'எய்துதற் கருமை' என்றல், 'பாங்கியை உணர்தல்' (25;2-3), தமிழ்நெறி விளக்கத்தை (15;3) அடியொற்றி 'உயிரென வியத்தல்' (25;2), வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை ; 10) தழுவி 'பாங்கனை நினைதல்' (25;3) ஆகிய கூற்றுகளை எடுத்தியம்பும். இதனையும் (25;3) அகப்பொருள் விளக்கத்தையும் (133;1-4) தழுவி மாறனகப்பொருளும் (25;1-5) இலக்கண விளக்கமும் (501;1-4) உரைக்கின்றன. இதனைத் தழுவி (501;1-2) முத்துவீரியம் 'அருமை யறிதல்', 'பாங்கியை அறிதல்' (836;5-6), களவியற்காரிகையைத் (25;3) தழுவிப் பாங்கனை 'நினைதலையும்' (837;1) குறிப்பிடும். இதனையும் (836;5-6) இலக்கண விளக்கத்தையும் (501;3-4) பின்பற்றி சுவாமிநாதம் (89;1-4) குறிப்பிடும். இவ்வாறு பிற அக இலக்கணங்களில் பிரிவுழிக் கலங்கல் கூற்றுக்ள் வளர்ச்சி பெற்றுள்ளன.

இடந்தலைப்பாடு

தலைவன், தலைவியை முதல்நாள் கண்ட அவ்விடத்தில் மறுநாளும் சந்தித்தல் இடந்தலைப்பாடாகும். இதனை நக்கீரர், "யான் இவளை எய்திற்று விதியானே ; இன்னும் அவ்விதி கைதருமேற் காண்பல்' எனப் பாங்கற்குச் சொல்லாதே தான் முன் எதிர்ப்பட்ட இடம் நோக்கிச் செல்லும்"[24] என்பர். இளம்பூரணர், "இடந்தலைப்பாடாவது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிற்றை ஞான்றும் அவ்விடத்துச் சென்று எதிர்ப்படுதல்"[25] என்றுரைப்பர். "இடம் தலைப்பாடு என்பது, அதே இடத்தில் மறுநாளும் இருவரும் எதிர்ப்படுதல். தலைப்பாடு - தலைப்படுதல் - கூடுதல். தலைவனும் தலைவியும் வினையினால் தலைப்படுதலால், இங்ஙனம் கூடுவது இடந்தலைப்பாடு எனப்படும். இஃது இரண்டொரு

நாள் கழித்து நடைபெறினும் மறுநாளே நடப்பதாகக் கூறுதல் புலனெறி வழக்கமாகும்”[26] என்று கூறுவர் ந.சுப்புரெட்டியார்.

இச்சூழலில் தொல்காப்பியம் தலைவன் மொழியும் கூற்றாக ஒன்றினைக் (1048) கூறும். பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.3) உரை இரண்டு, வீரசோழியம் (குறிஞ்.நடை.) எட்டு, அகப்பொருள் விளக்கம் (135) ஐந்து, களவியற்காரிகை (28) ஆறு, மாறனகப்பொருள் (27), இலக்கண விளக்கம் (503) ஒவ்வொன்றிலும் முறையே ஐந்து, முத்துவீரியம் (837, 838) பத்து, சுவாமிநாதம் (89) ஐந்து எனத் தலைவனுக்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவை தொல்காப்பியத்தை அடுத்துத் தோன்றிய அக இலக்கணங்கள் பெற்றுள்ள வளர்ச்சியை நன்குணர்த்தும்.

வளர்ச்சி

இடந்தலைப்பாட்டினையொட்டி நிகழும் இன்பத்தினைப் பெற்றவழி அகத்துத் தோன்றும் பெருமகிழ்வினைத் தொல்காப்பியம்,

“பெற்றவழி மகிழ்ச்சியும்”

(தொல்.1048;7)

என்று மொழியும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.3) உரையானது தலைவன், இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைத் தந்த விதி இன்னும் அவ்விடத்திற் சென்றால் தருமென நினைத்து ஆர்வத்தால் தான் முன்பு எதிர்ப்பட்ட ‘பொழிலிடைச் சேறல்’[27] தலைவியைக் கூடிய பொழிலைக் கண்டதும் தலைவியைக் கண்டதைப் போன்று வியந்து மகிழ்வதாகிய ‘பொழில்கண்டு உவத்தல்’[28] ஆகியனவற்றை இயம்பும். வீரசோழியம், தலைவன் முதல் நாள் தலைவியைச் சந்தித்த இடம் நோக்கி ‘அகறல்’, அவ்விடத்தை ‘அணுகல்’, தலைவியை நினைத்து ‘இடத்தொடு

புலம்பல்', தலைவி தனது வரவினை எதிர்நோக்கி நிற்கும் நிலை பற்றித் தன் மனதொடு வினவல், தலைவியைக் காணுதல், தலைவன் தன் உள்ளத்து விருப்பினைத் தனது பார்வையால் வெளியிட்டு அவளது குறிப்பினை ஆர்வத்தால் எதிர்நோக்கியிருத்தல், தலைவனது புகழுரை கேட்டு நாணிக் கண் புதைக்க, அவளது குறிப்பறியாது சார்தல் ஆகாமையின் அவளது உள்ளக் கருத்தை அறிதற்கு 'ஆற்றாது மொழிதல்', தலைவனது உள்ளக் கருத்தை உடன்பட்டுத் தலைவி புன்னகை புரிய, அதனை அறிந்து கூடுதல் (குறிஞ்.நடை;10-13,15,17) என்று விரித்துரைக்கும். இறையனாரகப்பொருள் (சூ.3) உரையைப் பின்பற்றி அகப்பொருள் விளக்கமானது 'தந்த தெய்வம் தருமெனச் சேறல்' (135;1), வீரசோழியத்தைப் (குறிஞ்.நடை ; 12) பின்பற்றி 'முந்துறக் காண்டல்' (135;2), தலைவியின் உடன்பாட்டுக் குறிப்பினை அறிந்த தலைவன் 'முயங்குதல்', 'புகழ்தல்', தலைவன் தலைவியிடம் என்னுயிர் நினக்கு அடிமையாயிற்று என்று கூறி 'ஆயக் கூட்டத்தில் விடுவித்தல்' (135;2-3) ஆகியனவற்றை மொழியும். இறையனாரகப்பொருள் (சூ.3) உரையைப் பின்பற்றிக் களவியற்காரிகை 'பொழில் கண்டு வியத்தல்' (28;1), 'திருவே எனல்' (28;1), வீரசோழியத்தைப் (குறிஞ்.நடை;15) பின்பற்றி திருவேயென உரைக்கக் கேட்ட தலைவி நாணத்தாற் கண் புதைக்க 'ஆற்றாது உரைத்தல்' (28;2), தலைவியின் குழலும் கோதையும் திருத்துவானாய்ச் சென்று அணைதல், பிறகு அவ்வின்பம் சொல்லி மகிழ்தல், தலைவியை ஆயத்துய்த்துப் பிரிவாற்றாது வருந்தியிருத்தல் (28;2-3) என்று விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கத்தைப் (135;1-3) பின்பற்றி மாறனகப்பொருளும் (27;1-3) இலக்கண விளக்கமும் (503;1-3) இயம்புகின்றன. இதனைப் (503;1,3) பின்பற்றி முத்துவீரியம் 'பொழிலிடைச் சேறல்' (838;1), 'ஆயத்துய்த்தல்' (837;16-17), களவியற்காரிகையைத் (28;1-3) தழுவி 'பொழில் கண்டு

மகிழ்தல்' 'கண்புதைக்க வருந்தல்,' 'மருங்கணைதல்,' 'நின்று வருந்தல்' (837;11, 14-15, 17), தலைவன், தலைவியை நோக்கி 'என்னுயிர் இவ்வாறு நிற்பதென வியந்து கூறல்,' யாரும் இல்லாத இடத்தில் தனியே நின்று செய்கின்ற தவம் யாதோவென 'தளர்வகன்றுரைத்தல்,' தலைவியைச் சார வேண்டி அவளைப் பெரும்பான்மை கூறி, அவளிடமிருந்து 'மொழி பெற வருந்துதல்,' விசும்பும் நிலனும் ஒருங்கு பெற வரினும் தலைவியை மறந்து பிரிவின்கண் முயலேனென 'இன்றியமையாமை இயம்பல்' (837;12-13, 16) என்று மொழியும். இதனையும் (837;16-17) இலக்கண விளக்கத்தையும் (503;1-2) தழுவி சுவாமிநாதம் (89;6-7) குறிப்பிடும்.

பாங்கற் கூட்டம்

தலைவியை எதிர்ப்பட்டுப் பிரிந்து சென்ற தலைவன், தன் உயிர்த் தோழனை அடைந்து தனக்கு ஏற்பட்ட உறவினை எடுத்துக் கூறுவான். பிறகு, எனக்கு உதவி செய்யவேண்டுமென்று கூற, அத்தோழன் தலைவியின் இயலிடம் கேட்டு, குறிவழிச் சென்று, தலைவியை ஒரு தனியிடத்துக் கண்டுவந்து கூற, தலைவன் சென்று அவளைக் கூடுதல் பாங்கற் கூட்டமாகும். இளம்பூரணர், "பாங்கற் கூட்டமாவது, இப்புணர்ச்சி பாங்கற்கு உரைத்து, நீ யெமக்குத் துணையாக வேண்டுமென்ற அவன் குறிவழிச் சென்று தலைமகள் நின்ற நிலையை யுணர்த்தச் சென்று கூடுதல்"[29] என்பர். தி.சு.பாலசுந்தரம் பிள்ளையவர்கள், "பாங்கற்கூட்டமென்பது, தலைமகன் தன் தலைவியோடு முதற்கூட்டம் பெற்றுப் பிரிந்த மறுநாள், மீண்டும் அவளைக் காண்பதற்கு விழைந்து அதற்குத் துணையாய் நிற்கும்படி வேண்டிக்கொள்ளுதற்காகத் தன் பாங்கனொடு கூடுதலாகும்"[30] என்று மொழிவர்.

தொல்காப்பியம் (1048) இக்கூட்டத்தில் தலைவன் மாட்டு நிகழும் கூற்றுகளாக இரண்டினை இயம்பும். பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப் பொருள் (சூ.3) உரை, தமிழ்நெறி விளக்கம் (16), வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஒவ்வொன்றிலும் முறையே ஐந்து, அகப்பொருள் விளக்கம் (137) பதினொன்று, களவியற்காரிகை (26, 27) நான்கு, மாறனகப்பொருள் (29) பன்னிரண்டு, இலக்கண விளக்கம் (505) பதினொன்று, முத்துவீரியம் (837) ஆறு, சுவாமிநாதம் (90, 91) பதினொன்று எனப் பாங்கற்கூட்டத் தலைவன் கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

பாங்கன் கூறும் நல்லொழுக்கங்களை மறுத்தல், பாங்கன் தலைவனது ஆற்றாமையை நீக்க முற்படுதல் ஆகிய சூழல்களில் தலைவனது கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

இடந்தலைப்பாட்டில் தலைவியைச் சந்தித்த தலைவன் காம நுகர்ச்சியை நினைக்காமல், இவளாலே இல்லறம் நடக்க வேண்டும் என்ற நினைப்புடன் சோர்வாலும் காதல் மிகுதியாலும் வரும் நிலை கண்டு பாங்கன் வினவுவான். அதற்குத் தலைவன் மறுமொழி பகர்வான். பாங்கன், உலகத்து நிலைநிற்கும் நல்லொழுக்கங்களை நினைப்பித்துக் கூறுவான். அப்போது தலைவன், பாங்கன் கூறியனவற்றை மறுத்துக் கூற்று நிகழ்த்துவான். இதனைத் தொல்காப்பியம்,

"நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்"

(தொல்.1048;8)

என்று குறிப்பிடும். இதனை விளக்குமிடத்து நச்சினார்க்கினியர், "பாங்கன் உலகத்து நிலைநிற்கின்ற நற்குணங்களை அவனை நினைப்பித்துக் கழறிக் கூறினும் அக் கழறியவற்றை மறுத்துத் தன்

நெஞ்சின் நிகழும் வருத்தங்களை அவற்குக் கூறினும்"[31] என்று இயம்புவர்.

இக்கூற்றினை இறையனாரகப்பொருள் (சூ.3) உரையானது தலைவன், தலைவியைக் கண்டதும் என் உள்ளமானது பள்ளத்து வழி வெள்ளம்போல ஓடி இவ்வகை ஆயிற்றென்று 'உற்றதுரைத்தல்'[32] இதனைக் கேட்ட பாங்கன் கழறவும் கேளானாய்ப் பின்னும் வேட்கை வயத்தனாய், என்னாற் காணப்பட்ட தலைவியைக் காணவில்லை. கண்டனையாயிற் கழறமாட்டாய் என்று அவனோடு மறுத்துரைத்தல்[33] ஆகியனவற்றை மொழியும். இதனைப் பின்பற்றித் தமிழ்நெறி விளக்கம் 'விடுத்தல்,' 'மறுத்தல்' (16;1) என்று கூறும். இதனைப் பின்பற்றி வீரசோழியமும் 'அவ்வயிற் புணர்ச்சியைப் பாங்கற்கு உணர்த்தல்,' பாங்கன் கூறியதை மறுத்துரைத்துத் 'தேங்கமழ் தாரோன் தெரியான் செப்பல்' (குறிஞ்.நடை ; 17-19) என்று மொழியும். அகப்பொருள் விளக்கமானது 'தலைவன் பாங்கனைச் சார்தல்' (137;1), வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை ; 17-19) தழுவி 'தலைவன் உற்றது உரைத்தல்,' 'தலைவன் கழற்றெதிர் மறுத்தல்' (137;2-4), பாங்கனை எதிர்மறுத்த தலைவன், தலைவியிடத்துத் தனக்குள்ள விருப்பத்தைத் தன்னால் தாங்கமுடியாது வலியழிந்து கூறல் (137;5-6) ஆகியனவாக விரித்துரைக்கும். இதனை (137:2-4) தழுவிக் களவியற் காரிகை (26;1-2) சுட்டும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் (137;1, 5-6) மாறனகப்பொருள் (29;1-6) பின்பற்றுவதோடு தலைவன், பாங்கனைத் 'தலைவி இருக்கும் பொழிலிடத்திற்குச் செல்ல வேண்டுதல்' (29;7) என்று கூடுதலாக ஒன்றினையும் மொழியும். இதனை (29;1-6) அடியொற்றி இலக்கண விளக்கம் (505;1-6) குறிப்பிடும். இதனைப் (505;2-6) பின்பற்றி முத்துவீரியம் 'உற்றது உரைத்தல்', 'மறுத்தல்,' 'வலியழி வுரைத்தல்' (837;1-3), இவ்வாறு வலியழிந்த தலைவன், தான்

செய்த நல்வினையும் தனக்குப் பயன்தரவில்லையென்று விதியொடு நொந்துரைத்தல் (837;3) என்று விரித்துரைக்கும். இதனையும் (837;1-3) இலக்கண விளக்கத்தையும் (505;1) பின்பற்றி சுவாமிநாதம் (90;2-5) குறிப்பிடும்.

தலைவனுக்கு நிகழும் குற்றங்களை வெளிப்படக் காட்டிய பாங்கன், அவனது ஆற்றாமை மிகுதி கண்டு அதனை நீக்குவதற்கு விரும்பும்போது தலைவனிடத்துக் கூற்று நிகழும். இதனைத் தொல்காப்பியம்,

"குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்"

(தொல்.1048;9)

என்றுரைக்கும்.

இக்கூற்றானது, இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைச் சந்தித்த தலைவன் ஆற்றானாய்த் திகழ, அவனிடம் பாங்கன் இயலிடம் கேட்க, தலைவன் தான் அவளை எய்தியது போலப் பெரியதோர் ஆறுதலடைந்து என்னாற் காணப்பட்டவள் இத்தன்மையள், இவ்விடத்தில் கண்டேன் என்று 'இயலிடம் கூறுதல்,'[34] தலைவியைப் பொழிலிடை எதிர்ப்பட்ட தலைவன், அவளிடமிருந்து 'மொழி பெற வருந்துதல்'[35] தலைவன், தலைவியின் குழலும் கோதையும் திருத்துவான் போன்று அவளது அருகில் சென்று 'மருங்கணைதல்'[36] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.3) உரையானது இயம்பும். இதிலிருந்து (சூ.3) சிறிது வேறுபட்டு தமிழ்நெறி விளக்கமானது, தலைவன், தலைவியைக் கண்ட இடத்தைக் கூறல் (16;2), இறையனாரகப்பொருள் (சூ.3) உரையைத் தழுவி 'ஆற்றான் கிளத்தல்' (16;4), பாங்கன் மூலம் தலைவியைக் கூடிய தலைவன், அவளைத் தோழியர் இருக்கும் இடத்திற்குச் செல்லுமாறு சிறிது தூரம் உடன்சென்று

வழியனுப்பிவிட்டுப் பிரிதல் (16;5) என்று விரித்துரைக்கும். இறையனாரகப்பொருள் (சூ.3) உரையைப் பின்பற்றி வீரசோழியம், 'அண்ணல் கவற்சிக்கு அவள் வடிவும் இடனுந் திண்ணிதிற் செப்பல்' (குறிஞ்.நடை ; 22-23), தலைவன், தலைவியைக் கூடியபின் முன்பு அடங்கியிருந்த அறிவும் நிறையும் வெளிப்படுதல், இவ்வாறு மேலோங்கிய நிலையில் இனி அவளைக் கூடுதல் திருமணத்தின் பின்னரே என்பதை விளக்கிக் கூறல் (குறிஞ்.நடை;25-26) என்று மொழியும். இதனைப் (குறிஞ்.நடை;22-23) பின்பற்றி அகப்பொருள் விளக்கமானது 'அவன் அஃது இவ்விடத் திவ்வியற் றென்றல்' (137 ; 8-9), பாங்கன் மூலம் அவயவம் உணர்ந்த தலைவன் அப்பொழில் நோக்கிச் செல்லல்,' 'தலைவியைக் காண்டல்,' 'கலவியால் மகிழ்தல்,' 'புகழ்தல்,' இவ்வாறு புகழ்ந்த தலைவன், தலைவியிடம் இனி வரும்போது 'நின் உயிர்த் தோழியோடு வருக எனல்' (137;14-16), தமிழ்நெறி விளக்கத்தைத் (16;5) தழுவிப் 'பாங்கியிற் கூட்டல்' (137;16-17) ஆகியனவற்றை விரித்துரைக்கும். இதனைத் (137;8-9) தழுவிக் களவியற் காரிகையானது 'வினவுந் தகைமை இடத்தியல் கூறல்' (27;1), தலைவனிடம் இயலிடம் கேட்டு, குறிவழிச் சென்று மீண்ட பாங்கன் தலைவியின் நிலை கூற அவயவயங்களை நினைந்து அவள் என்னுயிரே எனத் தலைவன் தேறுதல் (27;4) என்று மொழியும். இதனையும் (27;1) அகப்பொருள் விளக்கத்தையும் (137;14-17) தழுவி மாறனகப்பொருளும் (29;8-9, 17-21) இலக்கண விளக்கமும் (505;8-9, 14-17) சுட்டும். இதனைத் (505;8-9, 14) தழுவி முத்துவீரியம் 'இயலிடம் கூறல்', 'அவ்விடத்து ஏகல்' (837;5,9) என்று இயம்பும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் (505;14-17) தழுவி சுவாமிநாதம் (90;6, 91;2-4) குறிப்பிடும்.

தோழி மதியுடம்பாடு

தோழியின் மூலம் தனது குறையை முடிக்க விரும்பும் தலைவன், அவளை மதியுடம்படுத்தபின்னல்லது தனது குறையை முடிக்க வேண்டும் என்று கருதித் தோழியை மதியுடம்படுத்தல் உண்டு. இத்தகைய மதியுடம்படுத்தலை இளம்பூரணர், "புணர்ச்சியுணர்தல்"[37] என்று குறிப்பிடுவர். "பாங்கி தன் அறிவினுடன் தலைவன் தலைவி என்னும் இருவர் அறிவினையும் ஒன்றுபடுத்து உணர்தலின் மதியுடம்படுத்தல் என்று பெயராயிற்று. மதி - அறிவு. உடம்படுத்தல்- ஒன்றுபடுத்தியுணர்தல்"[38] என்பர் க.வெள்ளைவாரணன். இவ்வாறு மூவர் அறிவையும் ஒன்றுபடுத்தி உணரும் தோழியிடம், தலைவன் தனது குறையை வெளிப்படக் கூறானாய் சில குறிப்பு மொழிகள் கூறி மதியுடம்படுத்துவான். ந.சுப்புரெட்டியார், "மதி என்பது அறிவு; உடம்பாடு என்பது உடம்படச் செய்தல். அஃதாவது, தோழியின் அறிவை ஒருப்படச் செய்தல்"[39] என்பர். இச்சூழலில் தொல்காப்பியத்தில் (1048) தலைவன் நிகழ்த்தும் கூற்றுகள் இரண்டு. இறையனாரகப் பொருள் (சூ.6) உரையில் ஐந்து, தமிழ்நெறி விளக்கத்தில் (17) மூன்று, வீரசோழியத்தில் (குறிஞ்.நடை.) ஒன்று, களவியற்காரிகையில் (29, 30) ஆறு, முத்துவீரியத்தில் (839, 842) பதினொன்று, சுவாமிநாதத்தில் (92) ஏழு எனப் பிற அக இலக்கணங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தோழியை இரந்து பின்னிற்றல், ஊர் பேர் போன்றவை வினவிக் குறையுறுதல் ஆகிய கூற்றுகள் தொல்காப்பியத்தையடுத்த பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றவையாகும்.

பாங்கற் கூட்டத்துள் தலைவியைப் பெற்று இன்புற்ற தலைவன், திருமணம் செய்துகொள்ளாது களவிற் புணர்ச்சியைப் பெரிதும் விரும்புவான். அப்போது தலைவியுடன் ஒன்றித் தோன்றும் தோழியைக் கண்டு 'இவளை இரந்து பின்னிற்பல்' என்னும் உள்ளத்தனாய் அவ்விரத்தலை வலியுறுத்திக் கூறும்போது கூற்று நிகழ்த்துவான். இதனை,

"பெட்டவாயில் பெற்று இரவுவலி யுறுப்பினும்"

(தொல்.1048;10)

என்று தொல்காப்பியம் நவிலும்.

இதனைத் தமிழ்நெறி விளக்கமானது, தலைவி தன் தோழியைப் பலமுறை கடைக்கண்ணால் பார்ப்பதுணர்ந்து, இவள்தான் தலைவியின் தோழி என்பதைத் தலைவன் உணர்தல், தழையும் கண்ணியும் கொண்டு தோழியை இரந்து குறையுறல் (17;1) என்று மொழியும். இதனைத் (17;1) தழுவிக் களவியற்காரிகை 'இயற்றுஞ் செழுந்தழையுங் கண்ணியுங் கொண்டு இகுளையிடத் தயர்பின் செலவைக் குறையுறல்' (29;1-3) என்று கூறும். முத்துவீரியமானது, தலைவி, தன் கண்ணாற் காட்டப்பட்ட தோழியிடம் நம் குறையுள்ளது சொல்வோமென்று அவளை நோக்கிச் 'சேறல்', தெய்வத்தின் அருளால் அவ்விருவரும் ஓரிடத்தில் இருப்பக் கண்டு, தன் குறை கூறத் 'துணிதல்' (839;1) என்று சுட்டும். களவியற்காரிகையை (29;1-3) அடியொற்றி சுவாமிநாதம் 'சிலதியைக் கண்டு இரவுறுத்தல்' (92;4) என்று கூறும்.

தலைவியும் தோழியும் ஒருங்கிருக்கும்போது, தலைவன் அவர்களிடத்துச் சென்று, ஊராயினும் பேராயினும் கெடுதியாயினும் பிறவாயினும் நீர்மையினால் தன் குறிப்புத் தோன்றக் கூறித் தலைவன், தோழியைக் குறையுறுவதைத் (1048;11-13) தொல்காப்பியம் இயம்பும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.6) உரையானது தோழியிடம் குறை கூறத் துணிந்த தலைவன், தனது குறையை வெளிப்படக் கூறினால் இவள் மறுக்கவும் கூடுமென நின்னத்து, தனது குறையைத் தானே அறியுமளவும் கரந்த மொழியால் குறையுறுவதே காரியமென உட்கொண்டு வேட்டை கருதிச் செல்வான். அப்போது தலைவியும் தோழியும் ஒருங்கிருக்கும்போது அவ்விடத்திற்குப் புதியவன் போலச் சென்று 'பதியும் பெயரும் வினாதல்'[40] இவ்விடத்து 'யானை வரக் கண்டீரா' எனல்,[41] 'கலைமான் வரக் கண்டீரா' எனல்,[42] "வழி வினாதல்"[43] இவ்வாறு தலைவன் வினவியதற்கு இருவரிடமிருந்தும் விடையின்மையின் நீர் பேசாதொழிந்தது என்னவென்று வருந்தி வினவல்[44] என்று விரித்துரைக்கும். இவற்றைத் தழுவித் தமிழ்நெறி விளக்கமானது தலைவன், இருவரும் உடனாய வழித் தோழியை 'மதியுடனாக்கல்' (17;2) என்று ஒட்டுமொத்தமாக இயம்பும். வீரசோழியமானது தலைவன், தனக்குத் தலைவி உரிமையுடையவள் போல புதிதாக வந்தவர் கூறத் தகாத சொற்களைத் தோழியிடம் கூறி உரையாடல் (குறிஞ்.நடை;30) என்று கூறும். இறையனாரகப்பொருள் (சூ.6) உரையைக் களவியற்காரிகை (30;1-3) தழுவி, 'பதியும் பெயரும் வினாதலை' (சூ.6) 'பதி வினாதல்' (30;1) என்று மட்டும் மாறுபட்டு உரைக்கும். களவியற்காரிகையையும் (30 ; 1-3) இறையனாரகப்பொருள் (சூ.6) உரை இயம்பும் பெயர் வினாதலுடன் 'பிற வினாதலையும்' கூடுதலாக முத்துவீரியம் (839;1-3) மொழிவதுடன் தலைவன், தலைவியிடம் இத்தழை நும் அல்குற்குத் தகுமாயின் அணிவீரென தழை காட்டித் தன் 'கருத்தறிவித்தல்', நும் அல்குல் பாரமாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று 'இடை வினாதல்' (839;3-4), தோழியிடம், நான் உங்களுக்கு எல்லாத் தொழிலும் செய்யவல்லேன், நீயிர் வேண்டுவதைக் கூறுமினென்று

'குறையுற்று நிற்றல்' (842;1) என்று விரித்துரைக்கும். இதனைத் (839;2,1,3) தழுவி சுவாமிநாதம் (92;4-5) கூறுவதோடு அவர்களது 'உள்ளக் கருத்தை வினவல்,' 'பார்க்க விரும்பல்,' மீண்டும் தலைவன் கையுறை கொண்டு ஊர், பேர் முதலியவை கேட்டல்' (92;5-7) என்பனவற்றையும் விரித்துரைக்கும்.

தோழியிற் கூட்டம்

தலைவன், களவொழுக்கமானது நீண்ட நாள் தொடர்ந்து நிகழவேண்டுமென்று விரும்புவான். அதனால், தலைவியின் உயிர்த்தோழியை இரந்து பின்னின்று, அவள் வாயிலாகத் தலைவியைக் கூடுவான். இவ்வாறு கூடுதல் தோழியிற் கூட்டமாகும். இதனை "இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல்"[45] என்பர் இளம்பூரணர்.

இக்கூட்டத்தின்போது தொல்காப்பியத்தில் (1048, 1049) தலைவன் மொழியும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன எட்டு. பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.9) உரை ஒன்று, தமிழ்நெறி விளக்கம் (17), வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஒவ்வொன்றிலும் நான்கு, அகப்பொருள் விளக்கம் (144, 145, 146) பதினெட்டு, களவியற்காரிகை (34) மூன்று, மாறனகப்பொருள் (36,37,38) இருபது, இலக்கண விளக்கம் (509) பதினெட்டு, முத்துவீரியம் (844, 846) எட்டு, சுவாமிநாதம் (93,94,95) பதினெட்டு என இச்சூழலில் தலைவன் கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தோழியிற் கூட்டத்தில் தலைவியின் தன்மை மொழிதல், தோழி தன்னை எள்ளி நகையாடுதல், தோழியிடம் பலமுறை சென்று இரத்தல்,

தலைவியை மடலேறியாவது பெறுவேன் என்றல் ஆகிய இவ்விடங்களில் தலைவனது கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவன், தலைவியும் தோழியும் இருக்குமிடத்திற்குச் சென்று இவளிடத்து இவன் வேட்கை உள்ளதென்று மெய்யெனத் தோழி உணரும் வகையில் தலைவியின் தன்மை கூறுவான். இதனைத் தொல்காப்பியம்,

"............... .... தோழி
குறைஅவள் சார்த்தி மெய்யுறக் கூறலும்"

(தொல்.1048;13-14)

என்று இயம்பும்.

இதனை அகப்பொருள் விளக்கமானது, தலைவன் தலைவி மீது தன் உள்ளத்தில் கொண்ட காதலைக் கூறல், தலைவியை உயர்த்திக் கூறல், தலைவியின் தன்மை இயம்பல், தலைவியின் துணையின்றித் தான் உயிர்வாழ முடியாத தன்மையைக் கூறல், தோழி, தலைவனிடம் நின் குறையை நீயே சென்று தலைவியிடம் கூறுக என்றுரைக்க, தலைவன் உன் கருத்து நன்றன்றெனப் பழித்துரைத்தல், அப்போது தோழி, தலைவியின் பேதைமைத் தன்மையைக் கூற, தலைவன் அவளை நோக்கித் தலைவி முதிர்ந்த அறிவினையுடையவள் என்றல், தான் வருந்துகின்ற நிலையைக் கூறல், இவற்றைக் கேட்ட தோழி, உலகில் வேட்கை கொண்டோர் சான்றோரை முன்னிட்டு வரைந்து கொள்வர். அவ்வாறு நீயும் வரைந்துகொள்ளெனக் கூற, 'தலைவன் மறுத்துரைத்தல்,' தலைவன், தான் கொண்டு வந்த கையுறையைப் புகழ்ந்து கூறல், தோழி கையுறை ஏற்க மறுக்க, தலைவன் ஆற்றாது நெஞ்சுடன் புலந்து கூறல் (144;1-7,9-11,13-17) என்று விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (36;1-7,9-11,13-17), இலக்கண விளக்கம்

(509;1-7,9-11,13-17), சுவாமிநாதம் (93;4-8,94;1-4) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தலைவன், அன்பு தோன்றும் உள்ளத்துடன் தன்னைத் தோழி எள்ளி நகையாடும்போது கூற்று நிகழ்த்துவதைத் (1049;2) தொல்காப்பியம் இயம்பும்.

இக்கூற்றினைத் தமிழ்நெறி விளக்கமானது தலைவன், தான் தலைவி மீது கொண்ட காதலைத் தோழியிடம் வெளிப்படையாகக் கூறாமல் பல்வேறு நிலையில் இரந்து குறையுறுவான். அப்போது தலைவனைத் தொடர்ந்து சேட்படுத்திய தோழி, நீ என்னை மறைத்த காரியம், இனி நினக்கு முடியாதென அவனொடு நகைத்துக் கூற, அவளது நகை கொண்டாற்றல், இவ்வாறு மகிழ்ந்த தலைவன், தோழியிடம் தலைவி பெறுதற்கு அரியவள் என்றுரைத்து நகையாடினால் என் உள்ளமானது தாங்காது, எனது உள்ளமானது உய்யுமாறு 'நகாதுரையென்றல்' (17;7) என்பனவற்றைக் கூறும். முத்துவீரியம் தலைவன், தோழியிடம் இத்தழையை வாங்கிக்கொண்டு எனது குறையை முடித்தருள வேண்டுமென்று சந்தனத் 'தழை கொண்டு சேறல்' (846;1), தமிழ்நெறி விளக்கத்தைத் (17;7) தழுவி 'நகை கண்டு மகிழ்தல்' (846;11) ஆகியனவற்றை மொழியும்.

தோழி, தொடர்ந்து சேட்படுத்தவும் பின்னிற்றலில் வெறுப்படையாத தலைவன் பலகாலும் சென்று இரப்பதை,

"தண்டாது இரப்பினும்"

(தொல்.1048;15)

என்று தொல்காப்பியம் இயம்பும். இதற்கு நச்சினார்க்கினியர், "இடந்தலைப்பாடு முதலிய கூட்டங்களான் அமையாது பின்னும் பகற் குறியையும் இரவுக் குறியையும் வேண்டினும்"[46] என்று கூறி மேலும்

"'இரட்டுறமொழிதல்' என்பதனால் 'தண்டாது' என்பதற்குத் தவிராது இரப்பினுமெனப் பொருள் கூறிக் கையுறை கொண்டு வந்து கூறுவனவும், நீரேவுவன யான் செய்வேனெனக் கூறுவனவும், தோழி நின்னாற் கருதப்படுவாளை அறியேனென்றுழி அவன் அறியக் கூறுவனவும், பிறவும் வேறுபட வருவன வெல்லாம் இதன்கண் அடக்குக"[47] என்பர்.

இச்சூழலைத் தமிழ்நெறி விளக்கமானது, தழை கொண்டு சென்ற தலைவன், தோழியிடம் இத்தழை வாங்கிக் கொண்டு எனது குறையை முடித்தருள வேண்டுமென்று 'கையுறை எளிமை காட்டல்' (17;8) என்று மொழியும். வீரசோழியம், தலைவன் தான் காதல் வேட்கையால் வருந்தும் தன்மை கூறல், அப்போது தோழி, தலைவனைப் பல்வேறு வகையில் சேட்படுத்தி, என்னுடைய தோழியர் எண்ணிறந்தார் உளர். அவருள் நினது நினைவு யாரிடத்தென்று அறியாள் போல வினவியவிடத்து என்னாற் கருதப்பட்டாளுக்கு 'வடிவிது என்றல்', இவ்வாறு கூறியும் தழை வாங்க மறுப்பதையறிந்து ஆற்றானாதல் (குறிஞ்.நடை;34,41) என விரித்துரைக்கும். இதனைத் (குறிஞ்.நடை;34) தழுவி முத்துவீரியம் 'அவையவங் கூறல்' (846;12), தலைவன், தனக்கு அன்று தோழியைத் தனது கண்ணால் காட்டிய தலைவியின் கண்ணை நினைந்து நயந்து கூறல் (846;13) என்பனவற்றை மொழியும்.

தோழி, தலைவனிடம் இவ்விடத்துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்படுத்துவாள். அப்போது இரந்து குறைபெறாது வருந்திய தலைவன், இவளால் காரியம் இன்றெனக் கருதி மடலேறியாவது தலைவியைப் பெறுவேன் என்றுரைப்பான். இதனைத் தொல்காப்பியம்,

"........... .... தோழி
நீக்கலினாகிய நிலைமையும் நோக்கி
மடன்மா கூறும் இடனுமார் உண்டே"

(தொல்.1048 ; 18-20)

என்று குறிப்பிடும். இவ்வாறு கூறுவதை நோக்கத் தலைவன் மடலேறுவேன் என்று கூறுவானே ஒழிய மடலேறமாட்டான் என்பதும் மடலேறின் அது ஐந்திணைப் பாற்படாமல் "ஏறிய மடல்திறம்" (தொல்.997;1) எனப் பெருந்திணைப்பாற்படும் என்பதும் கருத்தென்று பெறப்படும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.9) உரையானது தலைவன், தோழியிடம் கையுறை கொண்டு சென்று இரந்து, 'இந்நாளெல்லாம் என் குறை நின்னால் முடியுமென்று நின்னை வந்து இரந்தேன். இனி நின்னால் முடியாமையின் யான் மடலூர்ந்தாயினும் இக்குறை முடித்துக் கொள்வேன் என்று 'மடலூர்தலை'[48] மொழியும். இவ்வுரையைத் (சூ.9) தழுவித் தமிழ்நெறி விளக்கமும் (17:10) வீரசோழியமும் (குறிஞ்.நடை; 41) இயம்பும். அகப்பொருள் விளக்கம், தலைவன், தலைவியைப் பெறுதற்கு 'மடலேறுதலே தக்கவழி எனத் தன்னுள் நினைத்தல்' தலைவியைப் பெற இயலாதவர் மடலேறிப் பெறுதல் உலக வழக்கமென்று மடலேற்றினை 'உலகின்மேல் வைத்துரைத்தல்' (145;1-3), இறையனாரகப் பொருள் (சூ.9) உரையைத் தழுவி இம்மடலேற்றினைத் தன்மேல் வைத்துரைத்தல் (145;3-4), தோழி, தலைவனிடம் தலைவியின் அவயவம் எழுதல் அரிதென்று கூற, யான் ஓவியம் வரைவதில் வல்லவன் என்று தனக்குள்ள திறமையைப் புகழ்தல், தலைவி, தன்னைப் பார்வை முதலியவற்றால் வருத்திய வண்ணமுரைத்தல், 'செவ்வி எளிமை செப்பல்', தோழி தலைவியிடத்துக் கொண்டுள்ள நட்பை ஏன் என்னிடம் மறைக்கின்றாய், இவ்வாறு செய்தால் நின் கருத்து முற்றாதென நகைத்துக் கூற, அந்நகை பொறாது தலைவன் புலந்து கூறல், இந்நிலையில் தோழி, தலைவனைத் தேற்றிக் கையுறை ஏற்றுக் கொள்ள தலைவன் ஆற்றல் (145;6, 146;2-5,7-9) என்று விரித்துரைக்கும். இதனைத் (145;2-4) தழுவி, களவியற்காரிகை

(34;2-4) கூறுவதோடு தலைவனைத் தோழி சேட்படுத்த, வருந்தல் (34;6) என்றும் மொழியும். இதனையும் (34;2-4) அகப்பொருள் விளக்கத்தையும் (145;1-2,6,146;2-5,7-9) அடியொற்றி மாறனகப்பொருள் (37;1-4, 6, 38;1-4, 6,8) பின்பற்றுவதோடு தலைவன் தன்னைத்தானே புகழ்ந்துரைத்த நிலையில் தலைவியின் உருவைக் கிழியில் எழுதுமுன், ஒரு பெண்ணுக்காக இவ்வாறு மயங்கிப் பித்தனாகி அவளது உருவினை எழுதி மடலேறும் நிலைக்கு வந்துவிட்டேனே என்று இரங்கல், தலைவியின் உருவைக் கிழியில் எழுதிப் பின் வருந்துதல் (37;7) என்று கூடுதலாக இரண்டினைச் சுட்டும். இதனைத் (37;1-4, 6, 38;1-4,6,8) தழுவி இலக்கண விளக்கம் (509;19-22, 24, 28-31, 33-35) குறிப்பிடும். முத்துவீரியம், தலைவியும் தோழியும் ஒருங்கிருந்த நிலையில் அவ்விருவரிடமும் சென்று நீயிர் அருளாமையினால் என்னுயிர் அழிகின்றது என 'ஆற்றாது உரைத்தல்' (844;1), இலக்கண விளக்கத்தைத் (509;20-22) தழுவி 'உலகின் மேல் வைத்தல்,' 'தன் துணிவு உரைத்தல்' (844;1-2), இவ்வாறு கூறியும் சொல்லாடாத தோழியிடம் நாளை நின்னூர்த் தெருவில் மடலேறி வருவேன் என்று உரைத்தல் (844;2) என்று மொழியும். இந்நூலையும் (844;1-2) இலக்கண விளக்கத்தையும் (509;19-20,24,28-31,33-35) அடியொற்றி சுவாமிநாதம் (94:5-8;95;2-5) இலக்கணம் வகுக்கும்.

வீழ்ச்சி

தலைவியின் இளமைப் பண்பு கூறித் தோழி தன்னை நீக்கும் போதும் குறியெதிர்ப்பட்டும் கையுறை மறுக்கப்பட்டுக் கொடுக்கப்பெற்றும் இரந்து பின்னின்றான், அங்ஙனம் குறியெதிர்ப்பாடின்றி ஆற்றானாய் இரந்து பின்னிற்றலை ஒழிந்தவிடத்தும் தலைவன், தலைவியைச் சார்த்தி வருந்திக் கூறுகின்ற கூற்றினைத் தோழி உணராமல், தலைவி தானே தலைவனைக் கூடிய

வகையிலும் மதியுடம்பட்ட தோழி, நீ கூறியதை நான் தலைவியிடம் கூற மறந்துவிட்டேன் எனத் தோழி கூறின், அவ்விடத்துத் தன்னோடு கூடாமையால் தலைவிக்கு உண்டான வருத்தத்தையும் அதனை அவள் ஆற்றியிருந்த பெருமையையும் கூறுமிடத்தும் கூற்று நிகழ்த்துவதைத் (1049;1, 1048;15-18) தொல்காப்பியம் இயம்பும். இக்கூற்றுகளைப் பிற அக இலக்கணங்கள் எதுவும் இயம்பவில்லை.

இருவகைக் குறி

தலைவியாலும் தோழியாலும் குறியிடங்கள் காட்டப்பெற்று அவ்விடங்களில் தலைவன், பகலிலும் இரவிலும் தலைவியைச் சந்தித்தல் இருவகைக் குறியாகும். இது இருவகைப்படும் என்பதைத் தொல்காப்பியம்,

"குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியத் தோன்றும் ஆற்றது என்ப"

(தொல்.1076)

என்று மொழியும். புலவர் குழந்தை, "குறியிடமாவது - தலைவியும் தோழியும் குறித்த இடத்தே தலைவன் சென்று தலைவியைக் கூடுதலாம்"[49] என்பர்.

தொல்காப்பியம், மனையுள் புகாது அங்குள்ளோர் கூறும் சொற்கள் கேட்கும் அணிமைக்கண் அமைவது இரவுக்குறி (1077) என்றும் ஊரின் மதிற்புறமாய்த் தலைவி அறிந்து சேர்தற்குத் தகுதியுடைய இடம் பகற்குறி (1078) என்றும் மொழியும்.

பகற்குறி, இரவுக்குறிச் சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1049) மூன்றினைக் குறிப்பிடும். இறையனாரகப் பொருள் (சூ.17) உரையில் ஒன்று, தமிழ்நெறி விளக்கம் (17, 18), வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஒவ்வொன்றிலும் முறையே

மூன்று, அகப்பொருள் விளக்கம் (149, 154, 156, 158, 160) இருபத்தொன்று, களவியற்காரிகை (உ.36, 37, 38, 44, 53, 59, 63) ஏழு, மாறனகப்பொருள் (41, 46, 48, 50, 52), இலக்கண விளக்கம் (509, 513, 515, 517, 519) ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று, முத்துவீரியம் (847, 848) பதினாறு, சுவாமிநாதம் (96, 98, 99, 100, 101) இருபத்தொன்று எனப் பிற அக இலக்கணங்களில் இச்சூழலில் தலைவன் கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

இருவகைக் குறியிலும் தலைவியைச் சந்தித்த தலைவன் வருந்துதல், தோழியின் உடன்பாட்டினைப் பெற்று மகிழ்தல், இரவுக்குறியில் வழியருமை கூறியவிடத்துக் கூற்று நிகழ்த்துதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவன், இருவகைக் குறியிலும் பரிந்த உள்ளத்தினனாய் வருந்திக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"பரிவுற்று மெலியினும்"

(தொல்.1049;1)

என்று இயம்பும். இதன் உரையில் நச்சினார்க்கினியர், "'பரிவுற்று மெலியினும்' என்றதனானே புணர்ந்து நீங்குந் தலைவன் ஆற்றாது கூறுவனவும், வறும்புனங் கண்டு கூறுவனவும், இற்செறிப்பறிவுறுப்ப ஆற்றானாய்க் கூறுவனவும், தோழி இற்புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொளீஇக் கூறுவனவும், இரவுக் குறிக்கண் வருகின்றான் தலைவியை ஐயுற்றுப் பாங்கற்குக் கூறுவனவும், பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதன் கண் அமைக்க"[50] என்றுரைப்பர்.

ஒருசார் பகற்குறி

பகற்குறியில் தலைவியைச் சந்தித்த தலைவன் மறுநாள் தன் வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்து வந்து நிற்க, தலைவியைத் தோழி குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக் கூறத் தலைவன் வருந்திப் போதல் ஒருசார் பகற்குறியாகும்.

இச்சூழலில் தோழி செறிப்பறிவுறுத்திய நிலையில் இனி இத்தினைப்புனம் காப்பாரல்லர் என்று தலைவன் வருந்தித் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலை அகப்பொருள் விளக்கம் (154;12-13) கூறும். இதனையே மாறனகப்பொருள் (46;12-13), இலக்கண விளக்கம் (513;12-13), சுவாமிநாதம் (98;3-4) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

பகற்குறி இடையீடு

பகற்குறியில் தலைவியைச் சந்திக்க வந்த தலைவன் குறிக்கண் செல்லாது இடையீடுபட்டுப் போதல் பகற்குறி இடையீடாகும். இச்சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாக அகப்பொருள் விளக்கம், தலைவியும் தோழியும் புனங்காவலை விட்டுப் போன பின்னர் தலைவன் குறியிடமாகிய புனத்திடைச் சென்று தலைவியைக் காணாது காலம் நீட்டித்தலால் அவளை நினைந்து இரங்கல், தலைவி இல்லாத வறும்புனங் கண்டு வருந்துதல், இவ்வாறு வருந்தியவன் தலைவி ஊர் நோக்கி அறிவு மயங்கிக் கூறல் (156;4-7) ஆகியனவாக விரித்துரைக்கும். களவியற்காரிகை, தலைவியை ஆடிடத்துய்த்த தோழி, தலைவனிடம் சென்று வரைவு கடாவ, இதற்கு முன் கடவுளாகத்தான் நினைத்திருந்தேன், இவளை மக்களுள் ஒருவள் என்பதை இன்றறிந்தேனென்று கூறி வரைவு மறுத்தல்,[51] அகப்பொருள் விளக்கத்தைத் (156;6) தழுவி "புனங்கண்டழிதல்"[52] ஆகியனவற்றை மொழியும். இதனையும் (உ.53) அகப்பொருள் விளக்கத்தையும்

(156;4-7) தழுவி மாறனகப்பொருளும் (48;4-8) இலக்கண விளக்கமும் (515;4-7) இலக்கணம் வகுக்கும். களவியற்காரிகையைத் (உ.44) தழுவி முத்துவீரியம் 'வரைவுடம்படாது மிகுத்துரைத்தல்' (847;8-9), இலக்கண விளக்கத்தைப் (515;6-7) பின்பற்றி 'வறும்புனங் காண்டல்,' 'பயில்பதி நோக்கிப் பதி மிக வாடல்' (847;20-21) ஆகியனவற்றை எடுத்துரைக்கும். இதனையும் (847;20-21) இலக்கண விளக்கத்தையும் (515;4-5) தழுவி சுவாமிநாதம் (98;7-8) மொழியும்.

இரவுக்குறி

தலைவனும் தலைவியும் இரவில் சந்திக்கும் இடம் இரவுக்குறி எனப்படும். இச்சூழலில் தோழி, இரவுக்குறி வந்த தலைவனிடம் தலைவியை வரைவு பயப்பக் கூறி வரவு விலக்க, அவன் வரைவுடம்படாது ஆற்றாதுரைத்தல், அப்போது தோழி, தலைவனிடம் ஊர் போய்ச் சேர்ந்த செய்தியை யாம் அறியும்படிக் குறிசெய் என்று கூற எம்பதிக்குச் செல்லல் எளிது, வருந்தாதே என்று கூறி 'திருமகட் புணர்ந்தவன் செல்லல்' (158 ; 21, 23) என்று அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனையே மாறனகப்பொருளும் (50;22-24) இலக்கண விளக்கமும் (517;21,23) எடுத்துரைக்கும். இதனைத் (517;21) தழுவி முத்துவீரியம் 'வரைவுடம்படாது ஆற்றாதுரைத்தல்' (848;13) என்று இயம்பும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (517;23) தழுவி சுவாமிநாதம் (100;6,8) மொழியும்.

இரவுக்குறி இடையீடு

தலைவன், இரவுக்குறி வந்து ஒழுகிநின்ற காலத்து, அவன் வரவினை அறிவிக்கும் குறிப்பு அவனால் அன்றிப் பிறிதொன்றால் நிகழ்தல் அல்லகுறி. அப்பொழுது தலைவி குறியில்லாததனைக் குறியாகக் கருதிக்கொண்டு அவ்விடம் புகுவாள். தலைவி, தலைவன்

செய்த குறியல்ல என உண்மை அறியும் போது தான் வந்து சென்றதைத் தலைவன் உணரும் பொருட்டு, இலை, பூக்களைப் பறித்துப் போட்டு அடையாளம் செய்துவிட்டு மனைக்குச் செல்வாள். பின்னர்த் தலைவனே வந்து குறி செய்வான். அப்போது தலைவி, தலைவன் செய்த குறி என்று உணர்ந்தாலும் குறியிடம் போக இயலாமல் போகாதிருப்பது இரவுக்குறி இடையீடு எனப்படும். ந.சுப்புரெட்டியார், "அல்லகுறி - தவறுதலான குறி"[53] என்பர்.

இத்தகைய சூழலில் தலைவன், குறியிடத்தில் நெடுநேரம் நின்றும், தலைவி அல்லகுறிப்பட்டு அங்கு வராமையால் குறியெதிர்பெறாது நெஞ்சொடு வருந்தியுரைத்தலை[54] இறையனாரகப்பொருள் (சூ.17) உரை இயம்பும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் 'நோதல்' (18;8) என்று கூறும். அகப்பொருள் விளக்கமானது, தலைவன் வருந்திக் குறியிடத்திலிருந்து திரும்பிப் போதல், அல்ல குறிப்பட்ட குற்றத்தைத் தலைவி மீது ஏற்றிக் கூறல் (160;4,8) ஆகியனவற்றை இயம்பும். இதனைத் (160;4) தழுவிக் களவியற் காரிகையானது "இரவுக்குறி கழிதல்"[55] என்று உரைக்கும். இதனையும் (உ.63) அகப்பொருள் விளக்கத்தையும் (160;8) தழுவி மாறனகப் பொருள் (52;4,9-10), இலக்கண விளக்கம் (519;4,8), சுவாமிநாதம் (101;4,6-7) ஆகிய நூல்கள் இலக்கணம் வகுக்கும்.

தலைவன், தோழியின் உடன்பாட்டினைப் பெற்று இருவகைக் குறியிலும் தலைவியைக் கூடி மகிழ்ந்த பின்னர் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"அவள்பெற்று மலியினும்"

(தொல்.1049;2)

என்று மொழியும்.

பகற்குறி

பகற்குறியில் தலைவியை எதிர்ப்பட்டுப் புணர்ந்த தலைவன் அவளது குலைந்த ஒப்பனைகளைத் திருத்த ஆற்றாளாகிய தலைவியிடம் தோழி புனையுமாறு புனைந்ததாகத் தலைவன் தன்னுள் நினைத்து தோழியறிய அவளிடம் புகழ்ந்துரைத்தல், இதனைக் கேட்ட தலைவி, இனி நமக்கொரு குறையில்லையென நினைத்து முகமலர, இதனைக் கண்ட தலைவன், தானும் தலைவியும் மனம் பொருந்தியிருக்கும் நிலையைத் தன்னுள் மகிழ்ந்துரைத்தல் (17;17) ஆகியனவற்றைத் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது குறியிடத்துத் தனியாக நின்ற தலைவியைத் தலைவன் எதிர்ப்படுதல், அவளது இடையை அணைத்தல் (149;4-5), தமிழ்நெறி விளக்கத்தைப் (17;17) பின்பற்றித் தலைவியைப் புகழ்தல் (149;5), ஆயக்கூட்டத்திற் செல்ல விடுத்தல், தோழியின் மூலம் விருந்துண்டு செல்க என்பதைக் கேட்ட தலைவன் அவ்விருந்தை ஏற்றுக்கொண்டு அங்கு தங்குவதற்கு விரும்பல் (149;6, 10-11) என்று விரித்துரைக்கும். இதனைத் (149;4-5) தழுவிக் களவியற்காரிகை "எதிர்ப்படுதல்"[56] தமிழ்நெறிவிளக்கத்தை அடியொற்றி (17;17) தலைவியைக் "கோலஞ்செய்து உரைத்தல்"[57] "உண்மகிழ்ந் துரைத்தல்"[58] என்பனவற்றை மொழியும். இந்நூலையும் (உ.36) அகப்பொருள் விளக்கத்தையும் (149;5-6, 10-11) அடியொற்றி மாறனகப்பொருளும் (41 ; 4-5, 10-11) இலக்கண விளக்கமும் (509;52-54, 58-59) குறிப்பிடுகின்றன. முத்துவீரியமானது தலைவியைக் குறியிடத்து எதிர்ப்பட்ட தலைவன் மகிழ்ந்து புகழ்ந்துரைத்தல் (847;3), இலக்கண விளக்கத்தைத் (509;53-54) தழுவி 'மருங்கணைதல்,' 'அறிவறிவித்தல்' 'ஆயத்துய்த்தல்' (847;3-5), களவியற்காரிகையைப் (உ.38) பின்பற்றி 'உண்மகிழ்தல்' (847;4) ஆகியனவற்றை விரித்துரைக்கும். இந்நூலையும் (847;3-5) இலக்கண விளக்கத்தையும் (509;52-53, 58-59) அடியொற்றி சுவாமிநாதம் (96;5-6;8) உரைக்கும்.

இரவுக்குறி

இக்குறியில் தலைவன், தலைவியிடம் 'குறியிடம் வினவல்', தலைவி நாட்டவர் அணியும் ஆடை, சூடும் பூ, சந்தனம் ஆகியனவற்றை அணிந்து கொண்டு தலைவியைக் காண வருதல், குறியிடத்து நின்ற தலைவியைச் சந்தித்தல் (குறிஞ்.நடை ; 52, 54, 56) ஆகியனவற்றை வீரசோழியம் கூறும். அகப்பொருள் விளக்கம் தலைவன், தலைவி நாட்டு 'அணியியல் வினவுதல்' (158;4-5), வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை;56) தழுவி 'வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்' (158;14), தலைவி தன்னை எதிர்ப்பட்ட தலைவனிடத்து வழியருமை நினைந்து இரங்க, தான் அச்சமின்றி வந்தேன் என்று அவளைத் 'தேற்றல்', 'புணர்தல்,' 'புகழ்தல்', தோழியோடு இல்லிற்குச் செல்வாயாக வென்று விடுத்தல் (158;16-18) ஆகியனவாக விரித்துரைக்கும். இதனைத் (158;14) தழுவிக் களவியற்காரிகை "குறியெதிர்ப் படுதல்"[59] என்று மொழியும். இந்நூலையும் (உ.59) அகப்பொருள் விளக்கத்தையும் (158;4-5, 16-18) தழுவி மாறனகப்பொருளும் (50;5,14,16-18) இலக்கண விளக்கமும் (517;4-5, 14, 16-18) உரைக்கும். இதனைத் (517;4-5) தழுவி முத்துவீரியமானது 'உட்கொண்டு வினாதல்' (848;3), தன் 'தளர்வு அகன்று உரைத்தல்', இதனைக் கேட்ட தலைவி நாணம் கொள்ள அவளது இருமருங்குல் தாங்கி அணைதல், தலைவியின் முகமலர்ச்சி கண்டு மகிழ்தல், தலைவியைத் தோழியோடு உன் ஆயத்திடை சென்று துயில்வாயாகவென்று 'பள்ளியிடத் துய்த்தல்' (848;9-11) என்று விரித்துரைக்கும். இதனையும் (848;3) இலக்கண விளக்கத்தையும் (517;14, 16-18) அடியொற்றி சுவாமிநாதம் (99;5, 100;2-4) குறிப்பிடும்.

தலைவியும் தோழியும் தலைவன் வரும் வழியருமை கூறியவிடத்துக் கூற்று நிகழ்த்துவதை,

"ஆற்றிடை யுறுதலும்"

(தொல்.1049;3)

என்று இயம்பும். இதனை அகப்பொருள் விளக்கம், தலைவன், தோழியிடம் இன்றைய இரவிற்கு நான் உங்கள் சீறூருக்கு விருந்தினன், என்னை ஏற்றுக் கொள்வாயாகவென்று இரவுக்குறி வேண்டல், கொடிய வழியில் வருதல் எமக்கு அரிதென்று எனத் 'தலைவன் நெறியினது எளிமை கூறல்' (158;1-3) ஆகியனவற்றை மொழியும். இவற்றையே மாறனகப்பொருளும் (50;1,3) இலக்கண விளக்கமும் (517;1-3) பின்பற்றுகின்றன. இதனைத் (517;1) தழுவி முத்துவீரியம் 'இரவுக்குறி வேண்டல்' (848;1), அப்போது தோழி, வழியருமை கூறி மறுக்க, இதனைக் கேட்ட தலைவன், அடைவதற்கு அரியாளை விரும்பும் நெஞ்சே, நீ மெலிகின்றாய், நான் இதற்கு ஆற்றேனென்று 'நெஞ்சுடைந்து வருந்தல்' (848;2) ஆகியனவற்றைக் குறிப்பிடும். இந்நூலையும் (848;1) இலக்கணவிளக்கத்தையும் (517;2-3) தழுவி சுவாமிநாதம் (99;2-4) கூறும்.

வரைவு முடுக்கம்

தோழி, தலைவனிடம் இருவகைக் குறியிலும் தலைவியைக் கூடிச் செல்லும்போது களவு வெளிப்பட்டால் இல்லோர் தலைவியை இற்செறிப்பர் எனவும், வழியாலும் பொழுதாலும் இடையூறு நேருமெனவும் அச்சமுற்று, இவ்வாறு ஒழுகுதல் உமது குடிப்பிறப்பிற்கும் சிறப்பிற்கும் பொருந்தாமையின், நீ இவளை மணந்துகொள்வதே தகுதியெனக் கூறி வரைவுமுடுக்குவாள். இந்நிலையில் வீரசோழியம் (நெய்.நடை.), முத்துவீரியம் (851) ஒவ்வொன்றிலும் தலைவன் மொழியும் கூற்று ஒன்று என வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்றுகள்

தலைவன் மீண்டும் குறியிடத்துத் தலைவியைக் காணச் செல்வதை (நெய்.நடை;20) வீரசோழியம் மொழியும். அப்போது தோழி, தலைவனை வரைவுகடாவ, அவன், தலைவி வாழும் இவ்விடத்தைத் தெய்வ மகளிர் இடம் என்றே நான் கருதுகின்றேன். அன்றி, குறத்தியர் இடமாயின் கூறுகவென்று வரைவு மறுத்துரைப்பதை (851;2) முத்துவீரியம் சுட்டும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை. பின் வந்த அக இலக்கண நூல்களே சுட்டியுள்ளன.

ஒருவழித்தணத்தல்

தலைவன், ஒருவழியாகத் தன் ஊருக்குப் போய்வருகிறேன் என்று சொல்லிப் பிரிவது ஒருவழித்தணத்தல். இதனைத் தொல்காப்பியம், 'இட்டுப்பிரிவு" (தொல்.1057;6) என்று இயம்பும். புலவர் குழந்தை, "இட்டுப்பிரிவு - சிறுபிரிவு. இது, ஒருவழித்தணத்தல் எனவும் படும். ஒருவழி - சிலநாள், தணத்தல் - பிரிதல்"[60] என்று இயம்புவர்.

இத்தகைய சூழலில் அகப்பொருள் விளக்கம் (168), மாறனகப்பொருள் (60), இலக்கண விளக்கம் (525), சுவாமிநாதம் (105) ஆகிய நூல்கள் ஒவ்வொன்றும் மூன்று கூற்றுகளைத் தலைவனுக்குரியதாக வரையறுக்கும்.

புதிய கூற்றுகள்

தலைவன், தோழியிடம் தன் ஊருக்குச் சென்று வந்து மீண்ட பிறகு தலைவியைத் திருமணம் செய்துகொள்கிறேன், நான் வரும் வரைக்கும் தலைவியை ஆற்றிக்கொண்டிரு என்று 'தன் பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்,' தோழி தலைவனைச் செல்ல வேண்டாமென்று தடுக்க, அவளை உடன்படுத்தி, நீங்குதல் பொருட்டு

வேண்டிக்கொள்ளல், ஒருவழித்தணந்த தலைவன், திரும்பி வந்து ஊரார் தூற்றும் அலர் மொழியைப் பொறுத்து எங்ஙனம் ஆற்றியிருந்தீரென்று தோழியிடம் நொந்து வினவுதல் (168;1-3, 9-10) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் கூறும். இவற்றையே மாறனகப்பொருள் (60;1,3,11), இலக்கண விளக்கம் (525;1-3, 9-10) சுவாமிநாதம் (105;5-8) ஆகிய நூல்களும் எடுத்துரைக்கின்றன. இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு

வரைவை இடையிலே வைத்து, வரைதற்கு வேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல் சூழலில் அகப்பொருள் விளக்கம் (170), மாறனகப்பொருள் (62), இலக்கண விளக்கம் (527) ஆகிய ஒவ்வொன்றிலும் முறையே ஆறு, முத்துவீரியம் (852) இரண்டு, சுவாமிநாதம் (106, 107) ஆறு எனத் தலைவன் கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலில் தலைவன், தோழியிடம் இப்பிரிவினைத் தலைவிக்கு உணர்த்துவாயாக என்றல், தோழியிடம் காலம் தாழ்க்காமல் விரைவில் வருவேன் என்று கூறி நீங்கல், இவ்வாறு சென்ற தலைவன் பொருள் முற்றிய பின் தலைவியை நினைந்து வருந்துதல், மீண்டு வரும்போது தேர்ப்பாகனிடம் தனது தேரை விரைந்து செலுத்துவாயாக என்றல், தன் தேருக்கு முன்னால் விரைந்து செல்லும் மேகத்திடம், தன் வரவைத் தலைவியிடம் சொல்ல வேண்டல், தன் இல்லிற்கு வந்தவிடத்துத் தலைவியை நினைத்ததுண்டோ என்று வினவிய தோழியிடம் தான் கடத்தற்கரிய வழியில் சென்றாலும் தலைவி தன் நெஞ்சைவிட்டு நீங்கவில்லையென்று

'நினைத்தமை கூறல்' (170;1,3,12-14, 17) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் மொழியும். இவற்றையே மாறனகப்பொருளும் (62;1,3,14-16,20), இலக்கண விளக்கமும் (527;1,3, 12-14, 17) தழுவியுரைக்கின்றன. இதனைத் (527;1) தழுவி முத்துவீரியம் 'வரைபொருட்கு ஏகலை உரையவட்கு என்றல்' (852;2), தலைவியிடம் சொல்லாது நீங்கல் (852;3) என்று குறிப்பிடும். இதனையும் (852;2) இலக்கண விளக்கத்தையும் (527; 3, 12-14, 17) அடியொற்றி சுவாமிநாதம் (106;3-4, 107;2-4, 6) இயம்பும். இக்கூற்றுகள் அனைத்தும் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகள் ஆகும்.

உடன்போக்கு

தலைவியின் பெற்றோர், தலைவனுக்கு மணம் முடிக்க மறுக்கும் நிலை, அம்பலும் அலரும் களவினை வெளிப்படுத்தும் எனத் தலைவி அஞ்சிய நிலை, இற்செறிப்பிலிருந்து தலைவியை மீட்க வேண்டிய நிலை இம்மூவகை நிலையிலும் தலைவனும் தோழியும் ஒருவருக்கொருவர் ஆராய்ந்து தலைவன், தலைவியைத் தன் ஊருக்கு உடனழைத்துச் செல்வான். இவ்வாறு தலைவியை உடனழைத்துச் செல்வதைத் தொல்காப்பியம், "கொண்டுதலைக் கழிதலும்" (தொல்.961;1) என்று இயம்பும். இதற்கு இளம்பூரணர், "கொண்டு தலைக்கழிதலாவது உடன்கொண்டு பெயர்தல்"[61] என்பர். "விரும்பிய பெண்ணை விரும்பிய ஆடவன் மணக்க முடியாதவாறு பெற்றோர்கள் உளநிலை தடையாக இருக்குமேல் காதலன் தன் காதலியை அவள் பெற்றோர்கள் அறியாமல் கொண்டு செல்வான். இவ்வாறு கொண்டு செல்வதைக் 'கொண்டுதலைக் கழிதல்'"[62] என்று சி.இலக்குவனாரும் "அம்பலும் அலரும் களவினை வெளிப்படுத்தும் எனத் தலைவி அஞ்சிய நிலையிலும், இற்செறிப்புக் கடுமையினின்று அவளை உய்விக்க விரும்பிய நிலையிலும், வரைவு தனக்கு மறுக்கப்பட்ட நிலையிலும்

தலைவன் தோழியோடு ஆராய்ந்து முன்கூட்டியே ஒரு நன்னாள் தேர்ந்தெடுத்து அந்நாளில் யாருமறியாவண்ணம் தலைவியைத் தன்னூர் அழைத்துச் செல்வது உடன்போக்கு எனப்படும்"[63] என்று நா.பாலகிருட்டினனும் மொழிவர்.

இச்சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (987) சுட்டுவன ஆறு. பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.23) உரை, தமிழ்நெறி விளக்கம் (23) ஒவ்வொன்றிலும் ஒன்று, வீரசோழியம் (பாலை நடை.), அகப்பொருள் விளக்கம் (182) ஒவ்வொன்றிலும் ஆறு, களவியற்காரிகை (51) ஒன்று, மாறனகப்பொருள் (80), இலக்கண விளக்கம் (536) ஒவ்வொன்றிலும் முறையே ஆறு, முத்துவீரியம் (850) ஒன்பது, சுவாமிநாதம் (111, 112) ஆறு என இச்சூழலுக்குரிய தலைவன் கூற்றுகளை வரையறுத்துள்ளன.

மாற்றமின்மை

தலைவியை உடன்கொண்டு செல்லுதலைத் தவிர்த்தல், துணிதல் ஆகிய கூற்றுகள் தொல்காப்பியத்தில் சுட்டப்படுவது போல பிற அக இலக்கணங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தலைவியை உடன்போக்கில் கொண்டுபோதலைத் தவிர்க்குமிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"விடுப்பினும்"

(தொல்.987;2)

என்றுரைக்கும். இதனையே அகப்பொருள் விளக்கமானது தலைவன், தலைவியின் மென்மைத் தன்மையைக் கூறி அவளை உடன்கொண்டு செல்ல மறுப்பதை 'ஆங்கவன் மறுத்தல்' (182;2) என்று கூறும். இதனையே மாறனகப்பொருள் (80;2), இலக்கண விளக்கம் (536;2), சுவாமிநாதம் (111 ; 3) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தலைவன், தோழியோடு ஆராய்ந்து உடன்போக்கினைத் துணியுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் (987;2) தொல்காப்பியம் கூறும். இதனை அகப்பொருள் விளக்கமானது 'தலைவன் போக்குடன்படுதல்' (182;3) என்று இயம்பும். இதனையே மாறனகப்பொருளும் (80;3) இலக்கண விளக்கமும் (536;3) சுவாமிநாதமும் (111;4) பின்பற்றுகின்றன.

வளர்ச்சி

உடன்போக்கிற்குரிய பருவம் குறித்து ஆராய்தலின்போதும் சுரத்திடைச் செல்லும்போதும் நிகழ்த்தும் கூற்றுகள் பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சிபெற்றுள்ளன.

தலைவன், உடன்போக்கிற்குரிய பருவம் குறித்து ஆராயும்போது கூற்று நிகழ்த்துவதைத் (987;1) தொல்காப்பியம் சுட்டும். இதனை முத்துவீரியம் தலைவன், உடன்போக்கு உடம்படுத்திய தோழியிடம் தலைவியின் மெல்லிய அடிக்கு யான் செல்லும் வெஞ்சுரம் தகாது. எம்பதியும் சேய்மையுடையது. அதனால் நீ கருதுகின்ற காரியம் மிகவும் அருமையுடையது என்றல், தோழி, தலைவியைக் குறியிடம் நிறுத்திப்போக, தலைவன் அவ்விடத்தே நின்று அனிச்சம் பூப்போலும் தலைவியின் அடியோடு தான் போகின்ற வழி நினைந்து தன்னுள்ளம் வாடுதல் (850;7,13) ஆகியனவற்றை எடுத்துரைக்கும்.

தலைவன், தலைவியை உடன்கொண்டு செல்லும் சுரத்திடத்துக் கூற்று நிகழ்த்துவான். இதனைத் தொல்காப்பியம்,

"சுரத்தும்"

(தொல்.987;1)

என்று இயம்பும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) தலைவன், தலைவியிடம் நின்னைச் சுரவழியில் அழைத்துக்கொண்டு நின்னொடு போதலால் இவ்வழியானது குளிர்ச்சியை உடையதாயிருக்கின்றது. இனி நின் சீறடி வருந்தாமல் மெல்லச் செல்வாயாகவென 'மெல்லக் கொண்டேகல்'[64] என்று சுட்டும். இதனைத் தழுவி, தமிழ்நெறி விளக்கம் 'மகிழ்ச்சி' (23;1) என்று இயம்பும். இதனை அடியொற்றி வீரசோழியமானது 'வெற்பிடைப் போதல்' (பாலை நடை ; 6), உடன்போக்கின்கண் தலைவி நடை தளர்ந்தவழி அவளுக்கு ஓய்வளித்து உரையாடல், தலைமக்களிடம் கண்டோர் இவ்விரவுப் பொழுதில் தங்கிச் செல்லுமாறு கூற, தலைவன் நுமது ஊரில் தங்குதல் இயலாது, எம்மூருக்குச் செல்லவேண்டும் என்று மொழிதல், தூரத்தில் சிலர் வரக்கண்டு தலைவி பயங்கொள்ள நுமர் வரின் அஞ்சுவேன், பிறர் வரின் அஞ்சேன் என்றல், இப்போதே நம் பதியை அடைந்துவிடுவோமென்று இடைவழியில் தங்குவதாகிய 'பதியுடன்படுத்தல்', 'வறுஞ்சுரங் கடந்தவர் வளநாடு புகுதல்' (பாலை நடை ; 7-8, 10, 13, 20) என விரிவாக எடுத்தியம்பும். இதனைத் தழுவி (பாலை நடை ; 6, 13) அகப்பொருள் விளக்கமானது 'அவன் சுரத்துய்த்தல்', 'அசைவறிந்திருத்தல்' (182;10), அவளது கூந்தலுக்கு மலரைச் சூட்டி மகிழ்தல், 'தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல்' (182;11, 13-14) ஆகியனவற்றை மொழியும். இதனைத் (182;10) தழுவிக் களவியற்காரிகையானது 'சுரத்துய்த்தல்' (51;1-2) என்று கூறும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் (182;10-11, 13-14) தழுவி மாறனகப்பொருளும் (80;10-11, 14-15) இலக்கண விளக்கமும் (536;10-11, 13-14) உரைக்கும். இதனைத் (536;10-11, 13-14) தழுவி, முத்துவீரியமானது 'பையக் கொண்டேகல்' 'வழியயர்வு அகற்றல்,' 'சேயிழையாளுடன் வழி விளையாடல்', 'பதிபரி சுரைத்தல்' (850;16-18,20-21,24), வீரசோழியத்தை (பாலை நடை;10)

அடியொற்றி 'பயங்கெட உரைத்தல்' (850 ; 17), அப்பெரிய நகர்தான் நம்முடைய நகரென 'நகரங் காட்டல்' (850;23). ஆகியனவற்றைக் கூறும். இதனையும் (850;18, 20-21, 24) இலக்கண விளக்கத்தையும் (536;10) தழுவி சுவாமிநாதம் (111;8, 112;1-3) இலக்கணம் வகுக்கும்.

வீழ்ச்சி

தலைவியின் தமர், தனக்கு வரைவு மறுத்தவழியும் தலைவன், தலைவியை உடனழைத்துச் செல்லும்போது இடைச்சுரத்தில் தலைவியை அவள் தமர் பெயர்த்துச் செல்ல வந்தபோது, தலைவி மிகவும் வருந்தித் தமர்பாற் செல்லாது, தலைவனைச் சார்ந்தமை கண்டோர், இவள் 'தலைவன் உடைமையாய்க் கற்பொடு கூடிவிட்டாள்' எனப் பலரும் அறியக் கூறுமிடத்தும் (987;1, 3-6) தலைவனிடத்துக் கூற்று நிகழும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பின் வந்த அக இலக்கண நூல்களில் இல்லை.

புதிய கூற்று

தோழி, தலைவனிடம் வரைவுகடாயவிடத்துத் தோழியின் மூலம் அருவிலை கேட்ட தலைவன், நீ அவளது அருமை கருதாது அவளது அவயவயங்களில் உண்டாகிய நயத்தைப் பற்றிவிடாது நடுங்கி நின்றாய். இனி மதியைப் பிடித்துத் தரவேண்டி அழும் அறியாக் குழவியைப் போலக் கிடந்தரற்றுவாயாக எனத் தன் நெஞ்சொடு அழிந்து கூறுவதை முத்துவீரியம், 'அன்ன மென்னடையாள் அருமை கேட்டழிதல்' (850;4) என்று இயம்பும். இக்கூற்று தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றாகும்.

உடன்போக்கிடையீடு

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் செல்லும்போது உண்டாகும் தடை உடன்போக்கிடையீடு எனப்படும். இதனை கே.ராஜகோபாலாச்சாரியார், "தலைவி உடன்போனதை அறிந்த அவளது தமையன்மார் வில்லும் வாளும் ஏந்தினராய் அவர்களைத் தேடிச் சென்று, உடன்போதல் நிறைவேறாதபடி இடையிட்டுத் தடுத்தலும், தலைவன், தலைவியை அவர்களிடம் விடுத்துத் தனியே தன்னூர் திரும்பலும் நேர்வதுண்டு. இதை உடன்போக்கிடையீடு"[65] என்றுரைப்பர்.

இச்சூழலில் பிற அக இலக்கணங்களான, தமிழ்நெறி விளக்கம் *(23)*, அகப்பொருள் விளக்கம் *(198)*, மாறனகப்பொருள் *(95)*, இலக்கண விளக்கம் *(547)*, சுவாமிநாதம் *(116)* ஆகிய ஒவ்வொன்றிலும் முறையே ஒவ்வொரு கூற்று தலைவனுக்குரியதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்றுகள்

தலைவனும் தலைவியும் உடன்போக்கில் செல்லும்போது தலைவியின் சுற்றத்தார் அவளை உடனழைத்துக் கொண்டுவரச் செல்வர். அப்போது தம்மைத் தொடர்ந்து வருவோர் தலைவியின் தமரென்று அறிந்து மறைந்து கொள்ளலைத் *(23;5)* தமிழ்நெறி விளக்கம் இயம்பும். அகப்பொருள் விளக்கமானது தலைவியை விடுத்து நீங்குவதைக் *(198;7)* கூறும். இதனையே மாறனகப்பொருள் *(95;7)*, இலக்கண விளக்கம் *(547;6)*, சுவாமிநாதம் *(116;6)* ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன. இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன.

மீட்சி

மீட்சி என்பது மீண்டு வருதல். செவிலி, புதல்வியைக் காணாது மீண்டு வருதலும் உடன்போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலும் மீட்சி எனப்படும். இதனை கே.ராஜகோபாலாச்சாரியார், "தலைவியைத் தன்னுடன் அழைத்துச் சென்ற தலைவன் அவளைத் தன்பதியில் முறைப்படி மணந்தேனும், அல்லது மணந்து கொள்ளாமலேனும் சில காலம் சென்றபின் அவளோடு அவளது பிறந்தகம் செல்லுதல் மீட்சி ஆகும்"[66] என்று மொழிவர். இத்தகைய சூழலில் தலைவன் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் சுட்டவில்லை. பிற அக இலக்கணங்களான தமிழ்நெறி விளக்கம் (23), அகப்பொருள் விளக்கம் (191), மாறனகப்பொருள் (91), இலக்கண விளக்கம் (540), சுவாமிநாதம் (114) ஆகியவற்றில் முறையே ஒவ்வொன்று என இச்சூழலில் தலைவன் கூற்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

புதிய கூற்றுகள்

உடன்போக்கில் சென்றோர் திரும்பி வருவதாகிய 'பெயர்ந்தனன் வருதலைத்' (23;6) தமிழ்நெறி விளக்கம் சுட்டும். அகப்பொருள் விளக்கமானது மீண்ட தலைவன், தலைவியின் ஊரைத் தாம் சார்ந்தமை கூறுவதை (191;2) இயம்பும். இதனையே மாறனகப்பொருள் (91;3), இலக்கண விளக்கம் (540;2), சுவாமிநாதம் (114;6-7) ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

தன்மனை வரைதல்

உடன்போக்கில் சென்ற தலைவன், தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று, தன் மனையில் திருமணம் செய்து கொள்ளுதல் தன்மனை வரைதல் எனப்படும். இச்சூழலில் அகப்பொருள் விளக்கம்

(194), மாறனகப்பொருள் (92), இலக்கண விளக்கம் (543), சுவாமிநாதம் (115) ஆகியவற்றில் ஒவ்வொரு கூற்று தலைவனுக்குரியதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்றுகள்

தலைவியைத் தனது இல்லத்தில் திருமணம் செய்து கொண்ட தலைவன், அவளது இல்லத்திற்கு வந்தவுடன் தோழியிடம் தான் திருமணம் செய்து கொண்டமையை நும் சுற்றத்தாருக்குக் கூறென்றுரைத்தலை அகப்பொருள் விளக்கமானது (194;4-6) மொழியும். இதனையே மாறனகப்பொருள் (92;6-7), இலக்கண விளக்கம் (543;4-6), சுவாமிநாதம் (115;6-7) ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

வரைவு மலிவு

வரைவு தொடங்கி நடக்கும் முயற்சி வரைவு மலிதலாகும். இச்சூழலில் பிற அக இலக்கணங்களான அகப்பொருள் விளக்கம் (174), மாறனகப்பொருள் (70), இலக்கண விளக்கம் (531), சுவாமிநாதம் (108) ஆகியவற்றில் ஒவ்வொரு கூற்று தலைவனுக்குரியதாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

புதிய கூற்று

தலைவி, தலைவனை மணக்கும் பொருட்டுக் கடவுளை வணங்குவதைக் கண்டு தலைவன் மகிழ்வதை (174;8) அகப்பொருள் விளக்கம் கூறும். இதனைத் தழுவி மாறனகப்பொருள் (70;7-8), இலக்கண விளக்கம் (531;8), சுவாமிநாதம் (108;8) ஆகிய நூல்கள் கூறுகின்றன.

வரைந்து கோடல்

தலைவன், தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுதலைப் பற்றிய மூன்று கூற்றுகள் (82) மாறனகப்பொருளில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தலைவன், தலைவியைத் திருமணம் செய்யும் நாளன்று தலைவியின் தந்தை அவளது வலக்கையைத் தலைவனது வலக்கை மீது வைத்து, நீர் பெய்து அக்கினி சாட்சியாக அவளைக் கொடுக்க, வேள்வித் தீயில் செய்யும் சடங்குகளைச் செய்து அவளை மணத்தல், அருமறைச் சடங்கிற்கு இடப்பட்ட தருப்பைப் புல்லைப் பார்த்துத் தலைவன் புன்முறுவல் செய்தல், திருமணமானபின் மூன்று நாள் கூட்டமின்மைக்குரிய காரணத்தைத் தலைவிக்குக் கூறல் (82;3, 6-8) ஆகியனவற்றை மாறனகப்பொருள் மொழியும். இவை தொல்காப்பியம் முதலிய அக இலக்கணங்களில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

மலிவு

களவு முற்றி மணந்து கொண்ட தலைவனும் தலைவியும் தனது மனக்குறை தீர இல்லொழுக்கம், இடையறாத புணர்ச்சி முதலியவற்றால் மகிழ்ந்திருப்பது மலிவு எனப்படும். இதனைப் பேராசிரியர், "இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றான் மகிழ்தல்"[67] என்றும் ந.சுப்புரெட்டியார், "மலிவு என்பது, இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றால் மகிழ்தல். அஃதாவது களவு முற்றி மணந்து கொண்ட காதலர் மனக்குறை தீரக் கூடிக் கலந்து இன்புற்று வாழ்தல். மலிவு - மகிழ்ச்சி. இம்மலிவுக்காலத்தே தலைவனும் தலைவியும் களவுக்காலத்தே நிகழ்ந்தவற்றை ஒருவர் மற்றவரோடு கூறி இன்புறுவர்"[68] என்றும் கூறுவர்.

இத்தகைய 'மலிவு' பற்றிய சூழலில் தொல்காப்பியம் (1092) தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகப் பதினைந்தினைக் குறிப்பிடும். பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (203), மாறனகப்பொருள் (100), இலக்கண விளக்கம் (552) ஆகிய நூல்கள் ஒவ்வொரு கூற்றையும் சுவாமிநாதம் (118) இரண்டு கூற்றுகளையும் தலைவனுக்குரியதாக வரையறுத்துள்ளன.

வீழ்ச்சி

தலைவன், தலைவியைத் திருமணம் செய்த நாளிரவில் இயற்கைப் புணர்ச்சி இடையீடால், நெஞ்சில் இருந்த தடை நீங்கி அச்சமின்றிப் புணர்ந்த புணர்ச்சியின்போதும்

நீக்கமுடியாத மகிழ்ச்சி மிகுதியாக வருங்காலத்தும்

தலைவன், தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவி இல்லறம் நிகழ்த்தும் உரிமையை எய்தியவிடத்தும்

தலைவி, அறம், பொருள், இன்பங்களில் வழுவாமல் தன் குலத்திற்கேற்ற மனைவாழ்க்கையை நடத்துதற்கண்ணும்

தலைவியை இல்லறத் தலைமையில் நிறுத்தி, களவுக் காலத்துக் குற்றம் சான்ற பொருளை எடுத்துக் கூறுதற்கண்ணும்

களவின்கண் அஞ்சாமல் காத்த தெய்வம் உண்டென்று தோழி கூறியவழி, அத்தெய்வம் இன்னும் காக்குமென்று ஏத்திக் கூறுமிடத்தும்

தலைவன், தலைவியினுடைய துன்பந்தீர, காதல் மிகுதியால் அன்பு கலந்த சொற்களால் கூற்று நிகழ்த்துதலின்போதும்

தலைவன், தலைவியிடம் நினது கையால் தொட்டு எதனைக் கொடுத்தாலும், அது வானோர் அமிழ்தம் போன்று உள்ளது. இதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் ஆக்கிதற்கண்ணும் பூத்தொடுத்தற்கண்ணும் கூற்று நிகழ்த்துதலின் போதும்

தலைவன் அந்தணர், சான்றோர், சிறப்பு மிக்க பிறர் ஆகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைக் குறிப்பால் காட்டிய இடத்தினும்

தலைவி, தலைவனிடம் களவுக் காலத்தில் நிகழ்ந்த அரிய செயல்களைக் கற்புக் காலத்தில் தனித்துச் சுழன்ற உள்ளத்தோடு வினவும்போதும்

தலைவன், களவுக் காலத்தில் ஒழுக்கக் குறைபாட்டால் நிகழ்ந்த குற்றங்கள் யாவும் ஆகாயத்தெழுத்துப்போல சிறிதுமின்றி மறைந்தொழிந்தன என்று கூறி, அதற்குத் தக ஒழுகுமிடத்தும்

அத்தகு துன்பங்கள் இனி நினக்கு வரும் என்று வருந்தாதே என்றும் எனக்கு வருமென்று அஞ்சாதே எனக் கூறுமிடத்தும்

தலைவன், தலைவிக்குத் தவறு செய்த காலத்தும்

தலைவன், தன்னால் உண்டாகிய பொறையையும் பெருமையையும் உடைய மகவைத் தலைவி வயிற்றிலே கொள்ளவும் ஆராய்ந்து கூறுதலில் வல்லாரோடு கலந்து அதற்குரிய சிறப்பைச் செய்யுமிடத்தும்

புதல்வனைப் பெற்ற தலைவி எண்ணெய் நீராடுதலை விரும்பியவிடத்து முனிவர்க்கும் தேவர்க்கும் பெருஞ்சிறப்புக்களைச் செய்யுமிடத்தும் (1092;1-30) தலைவனிடத்துக் கூற்றுகள் நிகழும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தலைவன், தலைவிக்கு முன்பு தோழியிடம் நின் துணைவி என்மீது கொண்ட அன்பினால் இல்லறம் வாய்க்கப்பெற்றது எனப் புகழ்தலை (203;1) அகப்பொருள் விளக்கமானது இயம்பும். இதனையே மாறனகப்பொருளும் (100;1) இலக்கண விளக்கமும் (552;1) தழுவியுரைக்கின்றன. இதனோடு சுவாமிநாதம் (118;1) தோழி,

திருமணம் முடியுமட்டும் பொறுத்திருந்தமையைக் கேட்க, தலைவன் பதில் கூறலைக் (118;4-5) கூடுதலாக மொழியும்.

ஊடல்

தலைவன் பரத்தமை ஒழுக்கம் கொண்டொழுகுவதாகக் கருதி தலைவி மனம் வேறுபடுதல் ஊடல் எனப்படும். இச்சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (987;1092) ஐந்திணை இயம்பும். இறையனாரகப்பொருள் (சூ.43, 50) உரை இரண்டு, தமிழ்நெறி விளக்கம் (25) ஒன்று, வீரசோழியம் (மருத நடை.) பதினெட்டு, அகப்பொருள் விளக்கம் (205,206) ஏழு, மாறனகப்பொருள் (102,103,104) ஒன்பது, இலக்கண விளக்கம் (554, 555) ஏழு, முத்துவீரியம் (861) ஐந்து, சுவாமிநாதம் (120, 121, 122) பத்து எனத் தலைவனுக்குரிய கூற்றுகளை வரையறுக்கும்.

வளர்ச்சி

பரத்தையிற் பிரிந்த தலைவன் மீண்டு வந்து தலைவியிடம் இரத்தல், தன்னிடத்துத் தவறில்லை என்றல், தலைவியின் சீறடி தொட்டு இரத்தல், வாயில்களோடு உரையாடுதல் ஆகிய நிலைகளில் தலைவன் கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவன், பரத்தையிற் பிரிந்த காரணத்தினால் தலைவியை இரத்தற்கண் கூற்று நிகழ்த்துவதை,

> "பரத்தையின் அகற்சியின் பரிந்தோள் குறுகி
> இரத்தலும்"
>
> (தொல்.987;22-23)

என்று இயம்பும்.

இதனை இறையனாரகப்பொருளானது (சூ.50) தலைவன், தலைவியுடன் ஊடல் நீங்கி பள்ளியில் மகிழ்ந்திருக்கும் போது, இத்தலைவியைத் தவிர வேறு யார் பொருந்துவார்கள் என்று ‘தன் நெஞ்சிற்குரைத்தலை’[69] மொழியும். வீரசோழியமானது தலைவி, தான் புதல்வனைப் பெற்றமையைப் பரத்தையரிடத்துள்ள தலைவனுக்குத் தெரிவிக்கக் கருதித் தன் தோழிக்கு வெள்ளணி அணிந்து அவளை அனுப்ப, தலைவன் அக்குறிப்பை உணர்தல், பரத்தையிடத்து மீண்ட தலைவன் தலைவியுடன் பள்ளியில் மகிழ்ந்திருத்தல் (மருத நடை ; 22-23) ஆகியனவற்றை மொழியும். அகப்பொருள் விளக்கமானது வெள்ளணியைக் கண்டு உணர்ந்த தலைவன், தோழியிடம் சென்று எனது குறையை நினைந்து ஊடல் கொள்ளாது என்னை எதிர்கொள்ள நீ விரைந்து சென்று அவளிடத்துள்ள புலவியை நீக்குவாய் என்று அத்தோழியை வாயிலாகத் தலைவன் வேண்டிக் கோடல், தலைவி நெய்யாடியதைக் கேட்ட தலைவன் தன் மனத்துத் தலைவியைக் கண்ட நாளினும் காதல் தன்மை மிகுந்தது என்று கூறல், மீண்டு வந்த தலைவனிடம் தலைவி புலந்துரைக்க, அவன் விருந்தொடு செல்ல, அப்போது தலைவி பொறுத்தல் கண்டு மகிழ்தல் (206;1-2, 4, 9-10) ஆகியனவற்றை இயம்பும். இவற்றையே மாறனகப்பொருள் (103;1-2, 5, 12-13), இலக்கண விளக்கம் (555;1-2, 4, 9-10) ஆகிய நூல்களும் உரைக்கின்றன. இதனைத் தழுவி சுவாமிநாதம் (120;5-7, 121;4) உரைப்பதோடு தலைவன் தன் மனத்து உவகை கொண்ட நிலையில் ‘ஊடல் இலா மகவேந்தல்’ (121;1) என்று கூடுதலாக ஒன்றினை மொழியும்.

தலைவன், தன்பால் தவறில்லையென்று ஊடல் உணர்த்துமிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"தெளித்தலும்"

(தொல்.987;23)

என்று இயம்பும். இதனை வீரசோழியமானது தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்து தலைவியைப் பிரிந்திருக்க மனம் பொறாதவனாகி இல்லத்துப் புகுதல், தன்னிடத்து ஊடல் கொண்ட தலைவியைப் பலவாறு தெளிவித்து வேண்டவும், அவள் புலவி தணியாளாக அவளிடத்துச் சினம் கொண்டு வருந்தியுரைத்தல், தானும் ஊடிய தலைவியைத் தோழி முதலியோர் சொற்கேட்டுத் தலைவியின் கோபத்தைத் தணிவித்து வழிபட்டுக் கூடி இன்புறுதல் (மருத நடை ; 24, 26-27) ஆகியனவற்றை மொழியும்.

தலைவி, தலைவனைக் கூடப்பெறாத ஆற்றாமையால் தழுவற் பயன் பொருந்தி தலையணையைத் தழுவித் தலைவனைத் தழுவாது வருந்திக் கிடப்பாள். அப்போது தலைவியை அணுகி, தான் கூடுதலைக் கருதின நிறையழிந்த காலத்தில் அவளது மெல்லிய சீறடியைத் தீண்டி இரக்கும்போது கூற்று நிகழ்த்துவதைத் (1092;31-34) தொல்காப்பியம் இயம்பும்.

இதனை வீரசோழியமானது தலைவி, தலைவனுடைய இரண்டாம் மனைவி, காமக்கிழத்தி ஆகியோரிடம் நட்புறவோடு பழகும் தன்மை தலைவனுக்குப் புலனாதல், தலைவியைப் புகழ்தல், தலைவனும் தலைவியும் பள்ளியுள் மகிழ்தல், 'புணர்தல்,' (மருத நடை;35-36) ஆகியனவற்றை மொழியும். அகப்பொருள் விளக்கமானது தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க விருந்தினரோடு செல்ல வாயில் நேர்ந்த தலைவி ஊடல் கொள்ள, சினவாதே என்று அவளது அடிகளில் விழுந்து வணங்கல், அப்போது தலைவி, நீ என் காலில் வணங்குதலை எங்கையராகிய பரத்தையர் கண்டால் நினக்கு

இழிவுண்டாகும் என்று கூற யாரையும் எனக்குத் தெரியாது என்றல், மீண்டும் தலைவி ஊடல் கொள்ள, அன்று பாலை நிலத்தில் தனக்கொரு துணையாய் வந்தவள் அல்லள் என்று ஊடல் கொள்ளல் (206;10-12, 14, 17) ஆகியனவற்றைக் குறிப்பிடுகின்றன. இவற்றையே மாறனகப்பொருள் (103;17, 19, 22) பின்பற்றுவதோடு தலைவி, படுக்கையில் திரும்பிப் படுத்தது கண்டு தலைவன் வருந்துவதைக் (103;14-16) கூடுதலாக மொழியும். இவற்றையே (103;17,19,22) இலக்கண விளக்கமும் (555;10-12, 14, 17) உரைக்கும். இவற்றோடு சுவாமிநாதம் (121;5-7, 122;1-2) 'மணத்தல்' (122;5) என்பதனையும் கூடுதலாக இயம்பும்.

தலைவி, தன்பால் கொண்ட ஊடலைத் தணிக்கும்பொருட்டு வாயில்களோடு உரையாடுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதை,

"ஏனை வாயில் எதிரொடு"

(தொல்.1092;57)

என்று கூறும். இதனை வாயில் பெறாத தலைவன் புலந்துரைத்தல் (25;3) என்று தமிழ்நெறி விளக்கம் இயம்பும். பரத்தையிடத்துப் பிரிந்த தலைவன், தலைவியை நினையாது வேறொன்றின்மேல் உள்ளத்தைச் செலுத்தினாலும் அவள் என்னை நினைந்து என் உள்ளத்தில் புகுகின்றாள். அதனால் பிரிந்திருத்தல் அரிது என்று வியந்து கூறல், இவ்வாறு பரத்தையிடமிருந்து தலைவியின் நினைவோடு மீண்டு வந்த தலைவன், வாயில் பெறாது வாயிற்கண் நின்று தன் மகனும் வந்து என்னை அணைகின்றான் இல்லை, யான் எவ்வாறு தலைவியை அடைவேனென்று 'வாயில் பெறாது மகன்றிற நினைதல்', தலைவி மீது கொண்ட வேட்கையால் உண்டாகிய வாட்டத்தை நீக்காத தன்மை யாதென்று 'வாயிற்கணின்று தோழிக்கு உரைத்தல்', தணிக்கத் தணியாது தலைவியின் ஊடல் நீடுவதால் நெஞ்சமே, நீ வருந்தாதே என்று

நெஞ்சிற்குக் கூறி வாடியுரைத்தல், தலைவியிடம் நாம் கொடிய வழியில் சென்று பள்ளியிலிருக்கும்போது நினது மெல்லிய மார்பகங்கள் என் மார்பிடை வந்து அடர்க்கத் தங்கிய சிறிய துயிற்கு மாறுகண்டிலம், அதனை உள்ளியும் அறிதியோ என்று 'முன்னிகழ்வுரைத்து ஊடல் தீர்த்தல்' (861;21-23, 33, 36) ஆகியனவற்றை முத்துவீரியம் இயம்பும்.

வீழ்ச்சி

தலைவனிடத்துத் தலைவி ஊடல் மிகுந்து காணப்படுவாள். இதனால் தலைவியைக் கூடுதற்கு இயலாமல் பிற பிற பெண்டிரை எடுத்துக்காட்டி ஊடல் உணர்த்துவது (1092;35-36) தொல்காப்பியத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது.

புதிய கூற்றுகள்

தலைவி, செவ்வணி அணிந்து தோழியை விடுக்கும்போது, நம் தலைவியின் பூப்புற்ற தன்மையை நமக்கு அறிவித்தற்கேயாகும் என்று 'தலைவன் தன் நெஞ்சிற்குரைத்தலை'[70] இறையனாரகப்பொருள் (சூ.43) உரை மொழியும். வீரசோழியமானது தலைவன், பரத்தையரிடம் நினது இல்லத்திற்கு விருந்திற்கு வருகின்றேன் என்று 'விழவு விரும்புதல்,' பரத்தையரிடத்துப் பொழிலில் மகிழ்ந்திருத்தல், புனலாட்டயர்தல், இல்லிடைப் பரத்தையர், இயலிடைப் பரத்தையர், காதற் பரத்தையர், நயப்புப் பரத்தையர் ஆகிய நால்வருடன் புணர்தல், பரத்தையர் உலகியல் நோக்கித் தலைவனை விடுக்க அவர்களிடமிருந்து அகறல், இல்லத்திற்குப் புகுதல், தலைவி வாயில் நேராது வெகுண்டுரைத்தலால் விருந்தினர்களுடன் புகுதல், புதல்வரொடு புகுதல், செவ்வணி அணிந்த தோழியைக் கண்டதும் தலைவன் ஒப்பனையோடு தன் இல்லத்திற்கு வந்து தங்குதல் (மருத நடை ; 3-9, 15, 17, 20) ஆகியனவற்றை விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது தலைவன்

'புணர்ச்சியின் மகிழ்தலைக்' (205;14) கூறும். இதனையே மாறனகப்பொருளும் (102;14) இலக்கண விளக்கமும் (554;14) பின்பற்றுகின்றன. வீரசோழியத்தைத் (மருத நடை ; 9) தழுவி, சுவாமிநாதமானது 'விடலில் தலைவன் படர்தல்' (120;1-2), இலக்கண விளக்கத்தை (554;14) அடியொற்றிப் 'புணர்ந்திடல்' (120;3) என்று கூறும்.

தலைவி, தலைவனின் கண்களைத் தன் கையால் பொத்தியவழி, அவன் எல்லாத் தலைவியர்க்கும் பொதுவாக அமையுமாறு என் கண்களை நீ அன்போடு பொத்தியதன் காரணம் என்னவென்று கூறலை (104;7-9) மாறனகப்பொருள் மட்டும் மொழியும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாது பிற அக இலக்கணங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ள கூற்றுகளாகும்.

பிரிவு

தலைவன், தலைவியோடு இல்வாழ்க்கையில் இருக்கும்போது ஓதல், பகை, வேந்தர்க்குற்றுழி, தூது, காவல், பொருள்வயிற்பிரிதல் காரணமாகப் பிரிந்து செல்வான். தொல்காப்பியம்,

"ஓதல், பகையே, தூது இவை பிரிவே"

(தொல்.971)

என்பதன் மூலம் ஓதல், பகை, தூதுப் பிரிவுகளையும்

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய,
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

(தொல்.974)

என்பதன் வழியாகக் காவல், பொருள்வயிற் பிரிவு ஆகியவற்றையும் எடுத்துரைக்கும்.

ஓதற் பிரிவு

இது தலைவன் கல்வியின் காரணமாகப் பிரியும் பிரிவு. இதனை இளம்பூரணர், "ஓதற்குப் பிரிதலாவது தமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே. அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல்"[71] என்றுரைப்பர். தொல்காப்பியம் (987) இப்பிரிவின்போது தலைவன் மொழியும் கூற்றாக ஒன்றினை மொழியும். இறையனாரகப்பொருள் (சூ.36) உரை, முத்துவீரியம் (856) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒன்று என இப்பிரிவில் தலைவனுக்குரிய கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி

தலைவன் ஓதல், படைக்கலம் பயிறல், பொருள்வயிற் பிரிதல் காரணமாகப் பிரியுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத்தானும்"

(தொல்.987;12-13)

என்று இயம்பும். கல்வி காரணமாகப் பிரிவதை இறையனாரகப்பொருள் (சூ.36) உரையானது தலைவியை வரைந்து கொண்ட பின்னர் ஓதற்குப் பிரியலுறும் தலைவன், தோழியால் தலைவிக்குப் பிரிவுணர்த்தல்"[72] என்றும் முத்துவீரியமானது கற்றாரே அளவில்லாத பெருமையுடையராவரெனத் தோழிக்குக் 'கல்வி நலங் கூறுதல்' (856;2) என்றும் உணர்த்தும்.

பகைவயிற் பிரிவு

இப்பிரிவானது போர் காரணமாகப் பிரியும் பிரிவாகும். இதனை இளம்பூரணர், "பகைவயிற் பிரிதலாவது மாற்று வேந்தரோடு போர் கருதிப் பிரிதல்"[73] என்று இயம்புவர். இப்பிரிவின்போது, தொல்காப்பியத்தில் (987) தலைவன் மொழியும் கூற்றுகள் நான்கு.

வீழ்ச்சி

தலைவன், தோழியிடம் பிரிவால் வரும் புகழும், பிரியாமையால் வரும் குற்றமும் எடுத்துக் கூறி, தலைவியை யான் வருந்துணையும் ஆற்றியிருத்தல் வேண்டுமெனக் கூறும்போதும் தன்வலியும் துணைவலியும் வினைவலியும் என்ற மூன்றினையும் ஆராய்ந்து பகைவயிற் பிரியுமிடத்தும் தலைவன், பகைப்புலங்களின் அருமை கூறிப் பிரியும்போதும் தோற்றமிக்க புகழினராகிய வேற்று வேந்தரது பெருமையைக் கருதிப் பிரியும்போதும் (987;14, 17-18) கூற்று நிகழ்த்துவான். இக்கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்பெறவில்லை.

வேந்தர்க்குற்றுழிப் பிரிவு

தலைவன் தன் நண்பனாகிய அரசனுக்குப் பகை வேந்தர்களால் இடையூறு நேர்ந்தவழி அவ்விடையூற்றைத் தீர்த்தற் பொருட்டுத் துணையாகப் பிரிதல் வேந்தர்க்குற்றுழிப் பிரிவு எனப்படும். இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (987) தலைவன் நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினை இயம்பும். இறையனாரகப்பொருள் (சூ.39), முத்துவீரியம் (859) ஒவ்வொன்றும் முறையே ஆறு கூற்றுகளைத் தலைவனுக்குரியதாக வரையறுக்கும்.

வளர்ச்சி

தலைவன், வேந்தர்க்குற்றுழிப் பிரியும் பிரிவின்கண் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

> "ஆகித்தோன்றும் பாங்கோர் பாங்கினும்"
>
> (தொல்.987;16)

என்று சுட்டும்.

இக்கூற்றினை இறையனாரகப்பொருள் (சூ.39) உரையானது தலைவன், தோழியின் மூலம் 'வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவுணர்த்தல்'[74] என்று கூறும். முத்துவீரியமானது பிரிந்த தலைவன், கார்காலமாகிய இரவின்கண் எனது பிரிவால் தலைவி எவ்வாறிருப்பாளோ என்று 'கார் காலத்தை நோக்கி வருந்தியுரைத்தல்,' பனியானது உலகெங்கும் காணப்படுதலால் தனித்திருக்கும் தலைவி, எவ்வாறு பொறுக்கமுடியும், எனக்கும் ஆற்றுதல் அரிது என்று தலைவன், தலைவியின் துயரை நினைந்து 'பின்பனிக்கு இரங்கி உரைத்தல்' (859;2-3, 5-6) ஆகியனவற்றை மொழியும்.

புதிய கூற்றுகள்

தலைவன், தான் குறித்த பருவ வரவின்கண் வினைமுற்றி மீள்கின்ற காலத்தில் தேர்ப்பாகனிடம் தலைவி எத்தகைய துன்பத்தை அனுபவிக்கின்றாளோ என்று தன் உள்ள நிலையை நினைந்து கூறல்,"[75] வினை முற்றிய நிலையில் கயலையும் வில்லையும் கொண்டு ஒரு திருமுகம் வந்து நின்றது, இனி விரைவில் போவாயாகவெனத் தேர்ப்பாகன் கேட்பத் தலைவியின் முகம் நினைந்து கூறல்"[76] வினை முற்றுப் பெற்றது; கார்காலமும் வந்தது; தலைவியின் நெடுநகருக்கு இன்றே செல்லும் வண்ணம் தேரினைச் செலுத்துவாயாகவென்று 'பாகற்கு உரைத்தல்,'[77] தேர்ப்பாகன், விரைந்து தேரைச் செலுத்த வேண்டும் என்பதற்காக முற்பட்டுச் செல்லும் முகிலிடம் இத்தேர் செல்வதற்கு முன் செல்லாதே என்று முகிலிடம் கூறல்,"[78] வினை முற்றிப் புகுந்த தலைவன் 'தலைவியோடு இனிதிருந்தேன்' என்று தோழிக்குக் கூறல்'[79] ஆகியவையாக இறையனாரகப்பொருள் (சூ.39) உரையானது விரித்துரைக்கும். இவ்வுரையைத் தழுவி முத்துவீரியமானது, 'நிலைமை நினைந்துரைத்தல்', 'வினைமுற்றி நினைதல்', 'முகிலொடு கூறல்' (859;11, 10, 11), தோழி, தலைவனிடம் நீர் வினையிடத்து எம்மை மறந்தீரோ

என்று கேட்க, தலைவி என் நெஞ்சைவிட்டு நீங்கவில்லையென்று 'மறவாமை கூறல்' (859 ; 12) ஆகியனவற்றை மொழியும்.

இவ்வாறு வேந்தர்க்குற்றுழிப் பிரிந்த தலைவன் பருவ வரவில் வினைமுற்றி மீளும் சூழலில் கூற்று நிகழ்த்துதல் தொல்காப்பியத்தில் சுட்டப்பெறவில்லை. பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப் பட்டுள்ளன.

தூதிற்பிரிவு

அரசர் இருவர் தம்மிற் பொருதுநின்றவழி அவரைச் சந்து செய்விப்பதற்குத் தலைவன் பிரியும் பிரிவு தூதிற்பிரிவாகும். இதனை, "தூதிற்குப் பிரிதலாவது இருபெரு வேந்தரைச் சந்து செய்தற் பொருட்டுப் பிரிதல்"[80] என்றுரைப்பர் இளம்பூரணர். இத்தகைய பிரிவின்போது தொல்காப்பியம் (987) தலைவன் நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினை இயம்பும்.

வீழ்ச்சி

தலைவன், இருபெரு வேந்தர் இகலியவழிச் சந்து செய்தற்குத் தூதாகிச் செல்லும்போது கூற்று நிகழ்த்துவதை (987;15) மொழியும். இக்கூற்றானது பிற அக இலக்கணங்களில் இயம்பவில்லை.

காவற்பிரிவு

தலைவன், காவல் பொருட்டுப் பிரிதல் காவற்பிரிவாகும். இதனை இளம்பூரணர், "நெறியின் ஒழுகாதாரை நெறியின் ஒழுகப் பண்ணுதல்"[81] என்று மொழிவர். இத்தகைய பிரிவின்போது தலைவன் நிகழ்த்தும் கூற்றாக தொல்காப்பியமும் (987) இறையனாரகப்பொருள் (சூ.36) உரையும் ஒன்றைக் குறிப்பிடும்.

மாற்றமின்மை

தலைவன், நாடு காத்தற் பொருட்டுப் பிரியும் பிரிவின்போது கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"காவற்பாங்கின் ஆங்கோர் பக்கமும்"

(தொல்.987;21)

என்று சுட்டும். இதனையே இறையனாரகப்பொருள் (சூ.36) உரையானது, "காவற் பிரிவுணர்த்தல்"[82] என்று கூறும்.

பொருள்வயிற்பிரிவு

தலைவன் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு பொருள்வயிற் பிரிவாகும். தொல்காப்பியம் இத்தகைய சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகப் (1092) பத்தினைக் குறிப்பிடும். இறையனாரகப்பொருள் (சூ.39, 51) உரை, தமிழ்நெறி விளக்கம் (24) ஒவ்வொன்றிலும் முறையே மூன்று, வீரசோழியம் (முல்., பாலை நடை..), முத்துவீரியம் (860) ஒவ்வொன்றிலும் முறையே ஒன்பது என இச்சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளை வரையறுக்கும்.

வளர்ச்சி

தலைவன் பொருள் காரணமாக வேற்று நாட்டிற்குப் பிரிதல், பிரியேன் என்றவன் பிரிதல், இடைச்சுரத்தில் சென்றவன் மீண்டு வருதலைக் கருதுதல் ஆகிய நிலைகளில் தலைவனது கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவன், தலைவியை விடுத்துப் பொருள் காரணமாக வேற்று நாட்டிற்குப் பிரியும் துன்பத்தின்கண் கூற்று நிகழ்த்துவதை,

"வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்தானும்"

(தொல்.1092;45)

என்று இயம்பும். இதில் வரும் 'விழுமத்தானும்' என்பதற்கு

நச்சினார்க்கினியர், "பிரியக் கருதியவன் பள்ளியிடத்துக் கனவிற் கூறுவனவும், போவேமோ தவிர்வேமோ என வருந்திக் கூறுவனவும், இவள் நலன் திரியுமென்றலும், பிரியுங்கொலென்று ஐயுற்ற தலைவியை ஐயந்தீரக் கூறலும், நெஞ்சிற்குச் சொல்லி அழுங்குதலும் பிறவுமாம்"[83] என்பர்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.39) உரையானது தலைவன், பொருள்வயிற் பிரிய நினைப்பதைத் தோழிக்கு உணர்த்தும் கூற்றாக"[84] மொழியும். இதனையே (சூ.39) தமிழ்நெறிவிளக்கமானது 'பிரிவகை உணர்த்தல்' (24;1), தோழி, தலைவியின் நிலைமை கூறிச் செலவழுங்குவிக்கத் தலைவன் செலவழுங்கல் (24;1-2) என விரித்துரைக்கும். வீரசோழியமானது தலைவன் பொருள்வயிற் பிரிதல் (பாலை நடை ; 26), தமிழ்நெறி விளக்கத்தைத் (24;1) தழுவி 'பிரிவுணர்த்தல்' (பாலை நடை ; 26) பொருளின் சிறப்பினைப் பொதுவகையாற் கூறிய அளவில், தன் குறிப்பினை அறிந்து ஆற்றாளாயினாள், இனி என்னாற் பிரிவுணர்த்தல் அரிது, நீயே கூறென்று தோழிக்குத் தலைவியின் ஆற்றாத் தன்மை கூறல், தலைவியின் ஆற்றாமை உணர்ந்து 'ஆற்றானாதல்,' தலைவியிடம் தன் கருத்தை ஏற்குமாறு 'உலகியல் உரைத்தல்,' 'பின்னர் பிரிதல்' (பாலை நடை;27-30) என்று விரித்துரைக்கும். இதனைத் (பாலை நடை;27) தழுவி முத்துவீரியமானது 'வாட்டங் கூறல்' (860;1) என்று மொழியும்.

தலைவன், தலைவியை நின்னிற் பிரியேன் என்று கூறிய உறுதிமொழியைப் பிழைத்துப் பிரிதற்குத் துணிதற்கண் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"தான் அவள் பிழைத்த நிலையின் கண்ணும்"

(தொல்.1092;42)

என்று கூறும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.51) உரையானது தோழி, தலைவியிடம் தலைவன் பிரிவைக் கூற அதற்கு அவள் ஆற்றாதவளாயிருப்பாள். அப்போது தலைவன், தலைவி ஆற்றுவாளாயின் பிரியலாம், ஆற்றாளாயின் பிரிதல் கூடாது என எண்ணித் தலைவியிடத்துச் செல்வான். தலைவி ஆற்றாதிருப்பதை அறிந்த தலைவன், தன் எண்ணத்தைக் கூறினால் உய்யாள் என்று தன் நெஞ்சிற்குரைத்தல்",[85] தலைவியின் பிரிவாற்றாமையை எண்ணித் தலைவன் தன் பொருள்வயிற் பிரியும் போக்கினை ஒழிதல்"[86] என்று மொழியும். தமிழ்நெறி விளக்கமானது தலைவன் இடைச்சுரத்துச் 'செலவுடன் மயங்கலைக்' (24;5) கூறும். வீரசோழியம் 'பொருள்வயி னிற்றலை' (முல்.நடை ; 20) மொழியும்.

தலைவன், தலைவியைப் பிரிந்து சுரத்திடையே செல்லும்போது, அவளது நினைவுவர வருத்தம் மிகுந்த நிலையில் மீண்டு வருதலைக் கருதுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதை,

"மீட்டுவர ஆய்ந்த வகையின் கண்ணும்"

(தொல்.1092;46)

என்று இயம்பும்.

இதனை வீரசோழியமானது, தலைவன், தலைவியை நினைந்து பொருள்மேற் செல்வதற்கு உடம்படாது நெஞ்சொடு கூறி 'பெருஞ்சுரத் தழுங்கல்', மீண்டும் தலைவனது மனமானது பொருள் வலிக்க, தலைவி தன் பிரிவிற்கு உடன்படாள் என்பதை உணர்ந்த தலைவன், அவளொடு சிலநாள் கூடி இன்புற்று அவள் மனத்தைத் தன்வயப்படுத்தி உடன்படச் செய்ய தான் அவளோடு இல்லத்தில் தங்குதல் (பாலை நடை;30-31) என்று குறிப்பிடும். முத்துவீரியமானது தலைவன், பொருளீட்டப்

பொருள் வலித்த நெஞ்சொடு செல்லும்போது காணும் திசைதோறும், தலைவியின் உருவு தோன்றியதென, அவளை நினைந்து மேற்போகமாட்டாது வருந்தி மீள நினைத்தல், பொருள்மேற் செல்கின்ற உள்ளத்தனாய் மீளமாட்டாது, நீ ஏதுக்குப் போக முயல்கின்றாயெனத் தன் நெஞ்சொடு நோதல், தலைவியை விட்டுப் பொருள்வயிற் பிரியும் பிரிவை எளிதாக்கி, பிரியக் கருதுகிறாயே என்று பின்னும் நெஞ்சொடு புலந்து கூறல் (860;6-7), வீரசோழியத்தை (பாலை நடை;30) அடியொற்றி 'நெஞ்சொடு மறுத்தல்' (860;8) ஆகியனவற்றை மொழியும்.

வீழ்ச்சி

தலைவன், பிரிவு நிமித்தமாக வருந்திய மனையாளையும் காமக்கிழத்தியையும் அவ்வருத்தத்தினின்று நீக்கும்போதும்

நீண்ட தொலைவு பிரியும் பிரிவின்கண் நின்று அஞ்சிய வருத்தத்தின்போதும்

தலைவனுடன் போக வேண்டுமெனக் கூறிய தலைவியும் உடன் கூட்டிச் செல்க என அறியாமை தோன்றக் கூறிய தோழியும் கூறுமிடத்து அவர்களிடத்தும்

தலைவன், முன்பு பொருளீட்டக் கடத்தற்கரிய வழியினைக் கடந்து சென்று வருந்தியவன், மீண்டும் அந்நெறியில் போக நினைத்தவழியும்

தலைவன், பொருட்குப் பிரியலுற்று, இடைச்சுரத்தில் தலைவியை நினைத்து வருந்துவான். அப்போது பொருளைவிடக் காமம் வலிமையுடையது எனக் கருதுமிடத்தும்

தலைவியைப் பிரிந்து சென்றால், அப்பிரிவுக் காலத்தில் அவளது நிலை என்னாகுமோ என்று அஞ்சுமிடத்தும்

வாழும் நாள் சில என்பதைக் கூறி, இளமையின் அருமையைக் கூறி, முயற்சியின் சிறப்பைச் சொல்லி, தகுதியது அமைதியும், பொருள் இன்மையின் இளிவு, பொருள் உடைமையின் உயர்ச்சி, அன்பினது பெருக்கம், பிரிவினது அருமையையும் கூறி பொருளீட்டப் பிரியும் காலத்தினும் கூற்று நிகழ்த்துதல் (1092;37-39, 43-44, 40-41, 987;7-11) தொல்காப்பியத்தில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

பொருள்வயிற் பிரிந்த தலைவன், குறித்த பருவத்தில் பொருள் முற்றி மீண்டு வருமிடத்து, மாலைப் பொழுதில் ஏறு வரவு கண்டு இரங்கி உரைத்தல், இக்கார்காலத்தில் என்னை நினைத்து ஆற்றாளெனப் 'பருவங் கண்டிரங்கல்,' பருவங் கண்டு விரைவில் வரும் தலைவன், இவ்விடத்து எல்லாம் முற்பட்டுச் சென்றாலும், அவளது வருத்தத்தை நீக்கும் பொருட்டு முதுபெண்டிர், இல்லுறை தெய்வத்திற்குப் பூசை செய்யும் பெரிய நகரத்திற்கு என்னைவிட முற்பட்டுச் செல்லாதிருப்பாயாக என்று முற்பட்டுப் போகும் 'முகிலொடு கூறல்', விரைந்து வந்த தலைவன், இளைஞர் எதிர்கொள்ள இல்லிடைப் புகுந்து தலைவியுடன் பள்ளியிடத்தானாயிருக்கும்போது, இத்தலைவியைப் பிரிந்து, பொருள்தேட நான் வெய்ய சுரம் சென்ற துன்பம் எல்லாம், தலைவியை அணைதற்கு முன்பு மாய்ந்தது என்று 'உண்மகிழ்ந்துரைத்தல்' (860;9-10, 12) ஆகிய கூற்றுகளை முத்துவீரியம் மட்டும் மொழியும்.

வினையிடம்

வினைவயிற் பிரிந்த தலைவன் வினையிடத்து நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (987, 1092) மூன்றையும் வீரசோழியம் (முல்.நடை.) ஆறினையும் மொழிகின்றன.

வளர்ச்சி

தலைவன், பாசறையிலிருந்து தலைவியை நினைத்துப் புலம்புதலின்போது கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"பாசறைப் புலம்பலும்"

(தொல்.987;19)

என்று இயம்பும்.

இதனை வீரசோழியம், தலைவன் மனம் தளருமாறு வாடைக்காற்று கடுமையாக வீசுதல், பருவம் வந்தும் செயல் முற்றுப்பெறாதபோது தலைவி நினைவோடு உறங்கி அவளைக் கனவில் கண்டு கண் விழித்ததும் அவளைக் காணாமையால் பெரிதும் வருந்துதல், தன்னுடைய பிரிவால் தலைவி வருந்துவாள் என்று இரங்கல், தன் செயல் முடிவுபெறாத நிலையில் தலைவிக்குத் தன் வரவு குறித்துத் தூது விடுத்தல், குறித்த பருவத்து வராதவழி, தலைவி தலைவனிடத்துத் தன் நிலையைக் கூறி வரத் தூது விடுப்ப, அத்தூதுவனை எதிர் கொண்டழைத்துத் தலைவன் அவளது நிலையை வினவுதல், தூது வரப் பெற்ற தலைவன் தன் செயலை விரைவில் முடித்து மீண்டு வந்து தலைவியின் தனிமைத் துயரைப் போக்குதல் (முல்.நடை;20-25) என விரித்துரைக்கும்.

வீழ்ச்சி

வினையிடத்துப் பலவாகிய சிறப்புகளைப் பெற்றவிடத்தும் தலைவன், பாகனிடம் வினை முடித்த காலத்தில் தான் இனிச் செய்ய விரும்பும் வினையைப் பற்றிக் கூறுமிடத்தும் கூற்று நிகழ்த்தல் (1092;47, 987;19-20) தொல்காப்பியத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினைமுற்றி மீளல்

வினைமேற் சென்ற தலைவன், தான் சென்ற வினை முடித்துத் திரும்பி வருவான். அவ்வாறு திரும்பி வரும்போது தேர்ப்பாகனிடத்துக்

கூற்று நிகழ்த்துவான். இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (1092) தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாக இரண்டினை இயம்பும். தமிழ்நெறி விளக்கம் (24) ஒன்றையும் வீரசோழியம் (முல்.நடை.) ஐந்தினையும் குறிப்பிடுகின்றன.

வளர்ச்சி

வினை முற்றி மீண்டு வரும் தலைவன், தேர்ப்பாகனோடு கூற்று நிகழ்த்துவதைத் (1092;48) தொல்காப்பியம் சுட்டும். இக்கூற்று பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது.

தமிழ்நெறி விளக்கம் பொருள்வயிற் பிரிந்த தலைவன், தனது வினையை முடித்த நிலையில் தலைவியின் நினைவு வர அவ்விடம் விட்டு நெஞ்சிற்குச் சொல்லிப் பெயர்தல் (24;8-9) எனக் கூறும். வீரசோழியம் தூதுவரக் கண்ட தலைவன், அத்தூதுவனிடம் தான் விரைவில் மீளும் செய்தியைச் சொல்லி விடுத்தல், தேரேறித் தலைவியைச் சந்திக்க நினைத்து வருதல், தலைவன் தேர்மீது ஏறுதல், தன்னைப் பிரிந்து வாடியிருக்கும் தலைவியின் நிலையைத் தன் உள்ளத்தோடு ஆராய்ந்து அறிதல், பாகனிடம் தன் நகர் காட்டுதல் (முல்.நடை ; 26-27, 30-31) என விரித்துரைக்கும்.

வீழ்ச்சி

தலைவன், தான் மேற்கொண்ட வினையை முடித்து வந்த காலத்தில் விருந்தொடு நல்லவற்றைக் காண விரும்புமிடத்துக் கூற்று நிகழ்த்துதல் (1092;53-54) தொல்காப்பியத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது. இக்கூற்று பிற்கால அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

இனிதிருத்தல்

வினைமுற்றி மீண்ட தலைவன், தலைவியோடு இல்லறத்தில் இன்புற்று இனிதிருத்தல் சூழலில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1092) மூன்றினைச் சுட்டும். பிற அக இலக்கணமாகிய வீரசோழியம் (முல்.நடை.) ஐந்தினைக் குறிப்பிடும்.

வீழ்ச்சி

வினைமுற்றி மீண்ட தலைவனிடம், அருஞ்சுரத்து வருத்தமுற்றீரோ எனவும் எம்மை நினைந்தீரோ எனவும் வினவியவிடத்தும்

தலைவன், தான் சென்ற இடத்து வருத்தத்தை மிகவும் விளங்கக் கூறி, நனவினால் சேறலின்றிக் கனவினால் சுரத்திடைச் சென்ற தன்னுடைய நிலையைக் கூறுமிடத்தும்

தலைவன், வினைமுற்றித் திரும்பியவிடத்து, மங்கலமாக மாலையேந்திய பெண்டிரும் மக்களும் உறவினரும் எதிர்கொண்டு வரவேற்குமிடத்து மகிழ்ந்தும் தலைவன் கூற்று நிகழ்த்துவான் (1092;49-52, 55-56).

இக்கூற்றுகள் பற்றிப் பிற அக இலக்கணங்களில் எவ்விதக் குறிப்பும் இல்லை.

புதிய கூற்றுகள்

தலைவன் தனது இல்லத்தை அடைதல், தலைவியின் புலவியை நீக்குதல், நாணத்தொடு தன்னை வரவேற்கும் தலைவி தன் வருகையால் பெற்ற மகிழ்ச்சியைக் கண்டு தன்னுள் கூறிக் கொள்ளல், பள்ளியிடத்துத் தலைவன் களித்தல், 'முல்லை நல்லியாழ் முறைமையிற் கேட்டல்' (முல்.நடை;32-36) ஆகியன வீரசோழியத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளன.

தொகுப்புரை

தலைவன் எதையும் அறிந்து செயல்படக்கூடிய தன்மை வாய்ந்தவன்.

தொல்காப்பியம் மொழியும் தலைவன் கூற்றுகள் எண்பத்துநான்கு.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவன், தலைவியின் மேனியைத் தீண்டல், பொய்யாகப் படைத்து மொழிதல், தலைவியைத் தழுவ விரும்பிக் கூற்று நிகழ்த்தல், இடையூறு வினவல், புணர்ச்சி நிகழப் பெறாது காலம் நீட்டிக்க வருந்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற்கால அக இலக்கணங்களான அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியம் தலைவன், புணர்ச்சியைப் பெற்றவழிக் கூற்று நிகழ்த்துவதை, அகப்பொருள் விளக்கமானது கலந்துழி மகிழ்தல், நலத்தினைப் பாராட்டல், ஏற்புற அணிதல் என்று விரித்துரைக்கும். இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றுகின்றன.

தலைவன், தலைவியை முன்னிலையாக்கிக் கூறும் தொல்காப்பியக் கூற்றை வீரசோழியம் தலைவி மீது கொண்டுள்ள விருப்பம் கூறல் என்று மொழியும். இரந்து பின்னிற்றற்கு எண்ணுதல், இரந்து நிற்றல், முன்னிலையாக்கல் என்று அகப்பொருள் விளக்கமானது விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றுகின்றன. முத்துவீரியமானது கலவி உரைத்தல், இருவயினொத்தல், என்று இயம்புவதோடு இலக்கண விளக்கத்தைத்

தழுவும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் உரைக்கும்.

தொல்காப்பியம் மொழியும் தலைவியின் நலத்தினைப் பாராட்டுவதைத் தமிழ்நெறி விளக்கம் இயம்பும். இதனைத் தழுவி வீரசோழியம் கூறுவதுடன் தலைவியைப் புணர்ப்ப துரைத்தல் என்று விரித்துரைக்கும். இதனைத் தழுவிக் களவியற்காரிகையும் முத்துவீரியமும் மொழியும்.

தலைவியின் முறுவற் குறிப்பைத் தலைவன் அறியும் தொல்காப்பியக் கூற்றினை அகப்பொருள் விளக்கம் கூறும். இதனை மாறனகப்பொருள் பின்பற்றுவதோடு நகை வியத்தல், மொழி பெற விரும்பல் என்று கூடுதலாக இரு கூற்றுகளை இயம்பும். இதனைத் தழுவி இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் உரைக்கும்.

தலைவி, புணர்ச்சிக்கு உடன்பட்டதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை முயங்குதல் உறுத்தல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல் என்று அகப்பொருள் விளக்கம் கூறும். இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் குறிப்பிடுகின்றன.

தலைவன், தலைவியைத் தெளிவுபடுத்துவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை இறையனாரகப்பொருள் உரை இயம்பும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் தழுவுவதுடன் தெளிதலைக் கூடுதலாக மொழியும். இதனை அடியொற்றி உரைப்பதுடன் வீரசோழியம் பிரிவுநனி கருதுதலையும் மொழியும். இதனையே களவியற்காரிகையும் முத்துவீரியமும் பின்பற்றுகின்றன.

இயற்கைப் புணர்ச்சியில் தொல்காப்பியம் (1047;1,3-4) மொழியும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியவில்லை.

தலைவியைத் தேற்றிக் கூறுவதைத் தொல்காப்பியம் வன்புறை என்று கூறும். இறையனாரகப்பொருள் உரையானது எமது ஊர் அணிமையில் உள்ளது என்று வற்புறுத்தலை மொழியும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் தழுவும். வீரசோழியமானது பெருமை செய்துரைத்தலைக் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கம் அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல், நயப்புரைத்தல், தெய்வத்தன்மை பேசல், பிரியேன் என்றல், பிரிந்து வருகென்றல் என்று உரைத்தலோடு இறையனாரகப்பொருள் உரையைப் பின்பற்றி விரித்துரைக்கும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் மாறனகப்பொருள் பின்பற்றுவதோடு இருபதமும் வேண்டல் என்ற ஒன்றைக் கூடுதலாகக் கூறும். இதனை இலக்கண விளக்கம் தழுவியுரைக்கும். முத்துவீரியமானது பருவரலறிதல், அருட்குணமுரைத்தல், ஆடிடத்துய்த்தல் என்று குறிப்பிடுவதுடன் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி உரைக்கும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் உரைக்கும்.

பிரிவுழி மகிழ்ச்சியில் தலைவியின் செலவுகண்டு உளத்தொடு சொல்லல், பாகனொடு சொல்லல் ஆகிய அகப்பொருள் விளக்கக் கூற்றுகளை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் பின்பற்றுகின்றன.

தலைவி பிரியும்போது தலைவன் கலக்கமுறுதலாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை இறையனாரகப்பொருள் உரையானது தலைவியின் அருமையறிதல் என்று கூறும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் கூறுவதோடு உயிரென மொழிதல், ஆற்றிப் பெயர்தல் என்று விரித்துரைக்கும். இதனைப் பின்பற்றி வீரசோழியம் மொழிவதோடு

ஊழ்வினை வலித்தல், தோழனை நினைத்தல் என்பதையும் கூறும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம் இயம்புவதுடன் வாயில்பெற்று உய்தல், பண்பு பாராட்டடல், பெற்றாரை வாழ்த்துதல், துயில் வரப்பெறாது வருத்தம் கொள்ளல் ஆகியனவாக விரித்துரைக்கும். இதனையும் தமிழ்நெறி விளக்கத்தையும் வீரசோழியத்தையும் தழுவிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். முத்துவீரியமானது களவியற்காரிகையையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி உரைக்கும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் உரைக்கும்.

இடந்தலைப்பாட்டினையொட்டி அகத்துத் தோன்றும் மகிழ்வினைத் தலைவன் வெளிப்படுத்துவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றினை இறையனாரகப்பொருள் உரையானது பொழில் நோக்கிச் செல்லல், அதனைக் கண்டு மகிழ்தல் என்று கூறும். வீரசோழியமானது அகறல், அணுகுதல், இடத்தொடு புலம்புதல், மனத்தொடு வினவுதல், மாதரைக் காண்டல், அவனது குறிப்பினை எதிர்நோக்கியிருத்தல், ஆற்றான் மொழிதல், புணர்தல் என்று விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது இறையனாரகப்பொருள் உரையையும் வீரசோழியத்தையும் பின்பற்றி மொழிவதோடு முயங்கல், தலைவியைப் புகழ்தல், தோழியர் கூட்டத்து விடுவித்தல் என்றும் விரித்துரைக்கும். களவியற்காரிகையானது, இறையனாரகப்பொருள் உரை, வீரசோழியம் ஆகியனவற்றைத் தழுவுவதுடன் திருவே என்றுரைத்தல், மருங்கணைதல், புணர்ச்சி மகிழ்தல், பிரிவாற்றாது வருந்துதல் என்று விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கத்தை மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் தழுவியுரைக்கின்றன. முத்துவீரியம் களவியற்காரிகை, இலக்கண விளக்கம் ஆகியனவற்றை அடியொற்றி

உரைப்பதுடன் வியந்துரைத்தல், தளர்வினை நீக்கியுரைத்தல், மொழி பெற வருந்தியுரைத்தல், இன்றியமையாமை எடுத்துரைத்தல் என்று விரித்துரைக்கும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் உரைக்கும்.

பாங்கற் கூட்டத்தில் தொல்காப்பியம் பாங்கன் கூறியதை மறுத்துக் கூற்று நிகழ்த்துவதை இறையனாரகப்பொருள் உரையானது உற்றதை எடுத்துரைத்தல், கழற்றெதிர் மறுத்தல் எனக் கூறும். இதனைத் தமிழ்நெறி விளக்கமும் வீரசோழியமும் தழுவும். அகப்பொருள் விளக்கமானது வீரசோழியத்தைத் தழுவி இயம்புவதுடன் பாங்கனை அடைதல், வலிமையிழந்து கூறுதல் என்றும் விரித்துரைக்கும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை கூறும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் மாறனகப்பொருள் தழுவுவதோடு பொழில் நோக்கிச் செல்ல வேண்டுவதைக் கூடுதலாக மொழியும். இதனை இலக்கண விளக்கம் பின்பற்றும். முத்துவீரியம், இலக்கண விளக்கத்தைத் தழுவுவதுடன் விதியொடு வெறுத்தல் என்றும் கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் கூறும்.

பாங்கன், தலைவனது ஆற்றாமையை நீக்க முற்படுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதாக மொழியும் தொல்காப்பியக் கூற்றினை இறையனாரகப் பொருள் உரையானது இயலிடம் கூறல், தலைவியிடத்து மொழி பெற வருந்தல், மருங்கணைதல் என்று விரித்துரைக்கும். தமிழ்நெறி விளக்கமானது இறையனாரகப்பொருள் உரையைச் சுட்டுவதோடு தலைவியை விடுத்தல் என்றும் கூறும். இறையனாரகப்பொருள் உரையைத் தழுவி வீரசோழியம் மொழிவதோடு அறிவும் நிறையும் வெளிப்படல், வேறிடங் காட்டுதல் என்றும் இயம்பும். அகப்பொருள் விளக்கமானது தமிழ்நெறி விளக்கம், வீரசோழியத்தைப் பின்பற்றி

மொழிவதோடு பொழில் நோக்கிச் செல்லுதல், தலைவியைப் பார்த்தல், கலவியின் மகிழ்தல், புகழ்தல், தோழியொடு வருகெனக் கூறல் என்று விரித்துரைக்கும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை கூறுவதோடு அவயவந் தேறுதல் என்றும் கூறும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் மொழியும். இதனைத் தழுவி முத்துவீரியமும் சுவாமிநாதமும் குறிப்பிடும்.

தோழி மதியுடம்பாட்டில் தலைவன் தோழியை இரந்து வலியுறுத்திக் கூற்று நிகழ்த்துவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை, தமிழ்நெறி விளக்கமானது தோழியை உணர்தல், இரந்து குறையுறல் என்று மொழியும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை கூறும். முத்துவீரியமானது தோழியை நோக்கிச் சேறல், குறைகூறத் துணிதல் என்று மொழியும். களவியற்காரிகையைத் தழுவி சுவாமிநாதம் இயம்பும்.

தோழியிடம் ஊர் பேர் முதலியவற்றை வினவிக் குறையுறுமிடத்துக் கூறும் தொல்காப்பியக் கூற்றை பதி, பெயர் வினாதல், வேழம் வினாதல், கலைமான் வினாதல், வழி வினவுதல், மொழி பெறாது கூறல் என இறையனாரகப்பொருள் உரையானது விரித்துரைக்கும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் மொத்தமாக மதியுடனாக்குதல் என்று மொழியும். வீரசோழியம் தலைவி உரிமையுடையவள் போலப் புதிதாக வந்தவர் கூறத்தகாத சொற்களைக் கூறி உரையாடல் என்று கூறும். இறையனாரகப்பொருள் உரையைக் களவியற்காரிகை தழுவியுரைப்பதோடு பதி வினவல் என்பதை மட்டும் குறிப்பிடும். இதனையும் இறையனாரகப்பொருள் உரையையும் தழுவி முத்துவீரியம் உரைப்பதோடு பிற வினவுதல், தலைவியிடம் கருத்தினை

அறிவித்தல், இடை வினவுதல், குறைகூறி நிற்றல் எனவும் விரித்துரைக்கும். இதனைத் தழுவி சுவாமிநாதம் கூறுவதுடன் நெஞ்சம் வினவல், முகம் புகுதல், மீண்டும் கையுறை கொண்டு வினவல் என்றும் மொழியும்.

தோழியிற்கூட்டத்தில் தலைவியின் தன்மையை எடுத்துரைக்கும் விதத்தில் தலைவன் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை தன் உள்ளக் காதல் கூறல், தலைவியை உயர்த்தி மொழிதல், தலைவி தன்மை இயம்பல், இன்றியமையாமை கூறல், தோழியைப் பழித்தல், தலைவியின் மூதறிவுடைமை மொழிதல், தன்நிலை கூறல், வரைவு மறுத்தல், கையுறை புகழ்தல், ஆற்றா நெஞ்சொடு புலத்தல் என்று அகப்பொருள் விளக்கம் கூறும். இவற்றையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றுகின்றன.

தோழி, எள்ளி நகையாடுமிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலைத் தமிழ்நெறி விளக்கமானது நகைகொண்டாற்றல், நகாதுரையென்றல் என்று குறிப்பிடும். முத்துவீரியமானது தழையைக் கொண்டு சேறலைக் கூறுவதோடு தமிழ்நெறி விளக்கத்தையும் தழுவிக் கூறும்.

தலைவன் பலமுறை சென்று தோழியிடம் இரப்பதாகத் தொல்காப்பியம் கூறுதலைத் தமிழ்நெறி விளக்கமானது கையுறை எளிமை காட்டி வேண்டல் என்று கூறும். வீரசோழியமானது வருந்தும் நிலை கூறல், வடிவிது என்றல் ஆற்றானாதல் என விரித்துரைக்கும். இதனைத் தழுவி முத்துவீரியம் கூறுவதோடு கண்ணயந்துரைத்தல் என்பதையும் மொழியும்.

தொல்காப்பியம் மடலேறியாவது தலைவியைப் பெறுவேன் என்றுரைப்பதை இறையனாரகப்பொருள் உரையானது மடலூர்தல் என்று கூறும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கமும் வீரசோழியமும் மொழியும். அகப்பொருள் விளக்கமானது இறையனாரகப்பொருள் உரையைத் தழுவிக் கூறுவதோடு மடலே பொருளென மதித்தல், உலகின்மீது வைத்து மொழிதல், தன்னைத் தானே புகழ்தல், தலைவி வருத்திய வண்ணமுரைத்தல், செவ்வி எளிமை கூறல், நகைபெறாது புலம்பல், ஆற்றுதல் என்று விரித்துக் கூறும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை கூறுவதோடு சேட்படைக்கு அழிதலையும் மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் மாறனகப்பொருள் தழுவியுரைப்பதோடு எழுது முன் இரங்கல், எழுதியிரங்கல் என்று கூடுதலாக இரண்டினையும் இயம்பும். இந்நூலினை இலக்கண விளக்கம் தழுவியுரைக்கும். முத்துவீரியமானது இலக்கணவிளக்கத்தைப் பின்பற்றி மொழிவதோடு ஆற்றாது கூறல், மடலேறி வருவேன் என்றுரைத்தல் என்றும் இயம்பும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் கூறும்.

தோழியிற் கூட்டத்தில் இடம்பெற்றுள்ள தொல்காப்பியக் *(1049;1, 1048;15-18)* கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

இருவகைக் குறியிலும் தலைவன் வருந்திக் கூறுவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை ஒருசார் பகற்குறியில் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல் என்று அகப்பொருள் விளக்கம் இயம்பும். இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றுகின்றன.

பகற்குறி இடையீட்டில் அகப்பொருள் விளக்கமானது குறிவயின் நீடு சென்று இரங்கல், வறுங்களை நாடி மறுகல், தலைவி ஊர் நோக்கி மதி மயங்கல் என்று விரித்துரைக்கும். களவியற்காரிகையானது தலைவியை மக்களுள் ஒருவளென்று இன்றறிந்தேன் என்றுரைப்பதோடு, அகப்பொருள் விளக்கத்தைத் தழுவிக் கூறும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். முத்துவீரியம், களவியற்காரிகையையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் உரைக்கும்.

இரவுக்குறியில் அகப்பொருள் விளக்கமானது தலைவன் மயங்கல், பதி நோக்கிச் செல்லல் என்று கூறும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் எடுத்துரைக்கின்றன. இதனைத் தழுவி முத்துவீரியம் கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் குறிப்பிடும்.

இரவுக்குறி இடையீட்டில் குறியெதிர் பெறாது நெஞ்சொடு கூறலை இறையனாரகப்பொருள் உரை கூறும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் தழுவும். அகப்பொருள் விளக்கமானது தலைவன் குறியிடத்திலிருந்து திரும்பிச் செல்லல், தலைவி மீது குறிபிழைப்பேற்றல் என்று கூறும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவி மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றுகின்றன:

இருவகைக் குறியிலும் தலைவியைக் கூடி மகிழ்ந்த பின் கூற்று நிகழ்த்துவதாகியத் தொல்காப்பியக் கூற்றினை, பகற்குறியில் தலைவன் தலைவியிடம் புனைந்தது புகழ்ந்துரைத்தல், மனம் பொருந்தியிருக்கும்

நிலைமை கூறல் என்று தமிழ்நெறி விளக்கம் கூறும். அகப்பொருள் விளக்கமானது தலைவியை எதிர்ப்படல், இயைதல், விடுத்தல், விருந்தினை விரும்பல் என்று மொழிவதோடு தமிழ்நெறி விளக்கத்தையும் பின்பற்றும். இதனையும் தமிழ்நெறி விளக்கத்தையும் தழுவிக் களவியற் காரிகை கூறும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தைத் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் மொழியும். முத்துவீரியமானது மகிழ்ந்து புகழ்தல் என்று உரைப்பதோடு களவியற்காரிகையையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி உரைக்கும். இதனையும் இலக்கணவிளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் கூறும்.

இரவுக்குறியில் தலைவன் எய்துகுறி வினவல், தலைவி நாட்டவர் அணிதலை அணிந்து கொண்டு வருதல், குறியிடத்துச் சந்தித்தல் ஆகியனவற்றை வீரசோழியம் மொழியும். இதைத் தழுவி அகப்பொருள் விளக்கம் மொழிவதோடு அணியியல் வினவல், தலைவியைத் தேற்றுதல், புணர்தல், புகழ்தல், இல்வயின் விடுத்தல் என்றும் விரித்துரைக்கும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை கூறும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் பின்பற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். இந்நூலைத் தழுவி முத்துவீரியம் மொழிவதுடன் தளர்வு அகன்று கூறல், மருங்கணைதல், தலைவி முகங்கண்டு மகிழ்தல், பள்ளியிடத்துச் சென்று துயில்வாயாகவென்றல் என்று விரித்துரைக்கும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் இயம்பும்.

தலைவன் வரும் வழியருமை கூறியவிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துவதாகக் கூறும் தொல்காப்பியத்தை இருட்குறி வேண்டல், நெறியினது எளிமை கூறல் என்று அகப்பொருள் விளக்கம் கூறும். இதனைத் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும்

உரைக்கும். இதனைத் தழுவி முத்துவீரியம் மொழிவதோடு தலைவன் வருந்துதலையும் குறிப்பிடும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் தழுவியது சுவாமிநாதம்.

வரைவு முடுக்கத்தின் போது குறியிடத்துத் தலைவன் செல்லுதலை வீரசோழியம் கூறும். முத்துவீரியமானது தலைவன் வரைவு மறுத்துரைத்தலைக் குறிப்பிடும்.

ஒருவழித்தணத்தலின்போது தலைவன் தன் பதிக்கு அகற்சி சாற்றல், நீங்கல் வேண்டுதல், தோழியொடு நொந்து வினவுதல் ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் கூறும். இவற்றையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலில் தோழியிடம் தனது பிரிவைத் தலைவியிடம் உணர்த்தக் கூறல், நீங்குதல், தலைவியை நினைந்து புலம்பல், மீண்டு வருமிடத்துப் பாகனிடம் உரைத்தல், மேகத்திடம் கூறல், நினைத்தமை மொழிதல் ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கமானது கூறும். இவற்றையே மாறனகப் பொருளும் இலக்கண விளக்கமும் தழுவியுரைக்கின்றன. இதனைத் தழுவி முத்துவீரியம் மொழிதலுடன் தலைவியிடம் சொல்லாது பிரிந்ததையும் கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் உரைக்கும்.

உடன்போக்கில் தலைவியைக் கொண்டு செல்லத் தவிர்த்தல், உடன்போக்கினைத் துணிதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகளையே அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் தழுவியுரைக்கின்றன.

தலைவன் உடன்போக்கிற்குரிய பருவத் தன்மை குறித்து ஆராய்வதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை முத்துவீரியமானது அருமை உரைத்தல், தலைவியின் அடி நினைந்து உளம் வாடல் என்று விரித்துரைக்கும்.

தலைவன் சுரத்திடத்துக் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுவதை இறையனாரகப்பொருள் உரையானது தலைவியை மெல்லக் கொண்டு செல்லல் என்று கூறும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் தழுவும். இதனைப் பின்பற்றி வீரசோழியம் மொழிவதுடன் தளர்ந்தோளிடத்து உரையாடல், கண்டோரிடத்து நும் ஊரில் தங்குதல் இயலாதென்றல், நுமர் வரின் அஞ்சுவேன், பிறருக்கு அஞ்சேன் என்றல், இடைவழியில் தங்கல், வளநாடு புகுதல் என்று விரித்துரைக்கும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம் இயம்புவதுடன் மலர்சூட்டி மகிழ்தல், தன்பதி அடைந்தமை கூறல் என்று கூறும். இதனைப் பின்பற்றிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் உரைக்கின்றன. இதனையும் வீரசோழியத்தையும் அடியொற்றி முத்துவீரியம் மொழிவதோடு நகர் காட்டல் என்ற ஒன்றையும் கூறும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் உரைக்கும்.

உடன்போக்கின்போது தொல்காப்பியம் (987;1, 3-6) மொழியும் கூற்றுகளைப் பிற அக இலக்கணங்கள் கூறவில்லை.

தோழியின் மூலம் அருவிலை கேட்ட தலைவன் நெஞ்சொடு வருந்துவதை முத்துவீரியம் கூறும்.

உடன்போக்கிடையீட்டில் தலைவன் தமரென்று அறிந்து மறைதலைத் தமிழ்நெறி விளக்கம் கூறும். அகப்பொருள் விளக்கமானது தலைவியை விடுத்தகறலைக் கூற, இதனை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

உடன்போக்கில் சென்றவர் திருப்பி வருதலைத் தமிழ்நெறி விளக்கம் மீட்சியில் கூறும். அகப்பொருள் விளக்கமானது தலைவியின் ஊர் சார்ந்தமை கூறலைக் கூற, இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தன்மனை வரைதலில் தோழியிடம் யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு என்றலை அகப்பொருள் விளக்கம் கூறும். இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

வரைவு மலிவில் தலைவி கடவுளை வணங்குதலைக் கண்டு தலைவன் மகிழ்வதை அகப்பொருள் விளக்கம் கூற இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

வரைந்துகோடலில் தலைவன் தலைவியைக் கோடல், தருப்பைப் புல்லைக் கண்டு மகிழ்தல், தலைவியிடம் தெளித்துரைத்தல் ஆகியவற்றை மாறனகப்பொருள் மொழியும்.

மலிவு பற்றிய தொல்காப்பியக் (1092;1-30) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

மலிவில் தலைவன் தலைவி முன்பு தோழியைப் புகழ்வதை அகப்பொருள் விளக்கம் கூற இதனையே மாறனகப்பொருளும்

இலக்கணவிளக்கமும் தழுவும். சுவாமிநாதம் இதனை உரைப்பதோடு தோழியிடம் பொறுத்தமை கூறலைக் கூடுதலாக மொழியும்.

ஊடலின்போது தலைவன் இரந்து வேண்டுவதாக மொழியும் தொல்காப்பியக் கூற்றினை தலைவி ஊடல் நீங்கிப் பள்ளியிடத்திலிருக்கும்போது நெஞ்சிற்குரைத்தலென்று இறையனாரகப்பொருள் உரை கூறும். வீரசோழியமானது தலைவன், வெள்ளணி கண்டு உணர்தல், பள்ளியுள் மகிழ்தல் என்று மொழியும். அகப்பொருள் விளக்கமானது தோழியை வாயிலாகக் கொண்டு வாயில் வேண்டல், தன் மனத்து உவகை கூறல், விருந்தொடு செல்லப் பொறுத்தல் கண்டு மகிழ்ச்சி கொள்ளல் என்று விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றுகின்றன. இதனை சுவாமிநாதம் அடியொற்றி உரைப்பதோடு ஊடல் கொள்ளாத மகவினைக் கொண்டு செல்வதைக் கூடுதலாக மொழியும்.

தலைவன் தன்னிடத்துத் தவறில்லை என்று தலைவிக்கு உணர்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதை வீரசோழியமானது ஆற்றாதவனாகி இல்லிற்குள் புகுதல், தலைவியிடத்து ஊடல், தலைவியின் ஊடல் தணித்து இன்புறல் என்று விரித்துரைக்கும்.

தொல்காப்பியம் தலைவியின் மெல்லிய சீறடி தொட்டு இரந்து வேண்டுவதை வீரசோழியமானது தலைவி, இரண்டாம் மனைவி காமக்கிழத்தியோடு பழகும் தன்மை தலைவனுக்குப் புலனாகுதல், புகழ்தல், பள்ளியுள் மகிழ்தல், புணர்தல் என்று விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது சீறடி தொழல், யாரையும் அறியேன் என்றல், ஊடல் கொள்ளல் ஆகியனவற்றை மொழியும். இதனையே மாறனகப்பொருள் பின்பற்றுவதோடு தலைவி பள்ளியிடத்துத்

திரும்பிப் படுத்தலைக் கண்டு வருந்துதலைக் கூடுதலாக இயம்பும். இதனையே இலக்கண விளக்கமும் பின்பற்றும். இந்நூலைச் சுவாமிநாதம் தழுவுவதுடன் மணத்தலைக் கூடுதலாக மொழியும்.

வாயில்களிடத்து உரையாடுமிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் இயம்புவதைத் தமிழ்நெறி விளக்கமானது தலைவன் புலத்தல் என்று கூறும். முத்துவீரியமானது இயல்புனைந்துரைத்தல், வாயில் பெறாத தலைவன், தன் மகனும் தன்னை அணைகின்றானில்லை என்று வருந்தல், தலைவி தனது வாட்டத்தை நீக்காத தன்மை யாதென்றல், ஊடல் நீட வாடியுரைத்தல், முன்னிகழ்வு இயம்பல் என்று விரித்துரைக்கும்.

ஊடலின்போது மொழியும் தொல்காப்பியக் (1092;35-36) கூற்றைப் பிற அக இலக்கணங்கள் மொழியவில்லை.

ஊடலின்போது தலைவி செவ்வணி விடுக்கத் தலைவன் தன் நெஞ்சிற்குரைத்தலை இறையனாரகப் பொருள் உரை கூறும். வீரசோழியம் பரத்தையரிடத்து விழவினை விரும்புதல், பொழில் மகிழ்ந்திருத்தல், புனலாட்டயர்தல், இற்பரத்தை போன்ற நால்வருடன் புணர்தல், அகறல், இல்லிற்குப் புகுதல், விருந்தொடு புகுதல், புதல்வரொடு புகுதல், தன் இல்லத்தில் தங்குதல் என விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கம் புணர்ச்சியால் மகிழ்தலைக் கூற, இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறுகின்றன. இதனையும் வீரசோழியத்தையும் தழுவி சுவாமிநாதம் கூறும்.

என் கண்களைப் பொத்தியதன் காரணம் என்னவென்று தலைவன் வினவுதல் மாறனகப்பொருளில் மட்டும் கூறப்பட்டுள்ளது.

தலைவன் ஓதல், படைக்கலம் பயிறல், பொருள்வயிற் பிரிவின் காரணமாகப் பிரிந்து செல்லுமிடத்துக் கூற்று நிகழ்த்துவான்.

இறையனாரகப்பொருள் உரையானது ஓதல் காரணமாகப் பிரியும் தலைவன் பிரிவுணர்த்தலை மொழியும், முத்துவீரியமானது கல்வி நலமுரைத்தலைக் கூறும்.

பகைவயிற் பிரிவு பற்றிய தொல்காப்பியக் (987;14, 17-18) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

வேந்தர்க்குற்றுழிப் பிரிவின்கண் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை இறையனாரகப்பொருள் உரை தலைவன் பிரிவுணர்த்தல் என்று கூறும். முத்துவீரியமானது கார் நோக்கி வருந்தியுரைத்தல், பின்பனிக்கு இரங்கல் என்று விரித்துரைக்கும்.

தலைவன் தன் உள்ளத்து நிலையை நினைந்து கூறல், வினைமுற்றிய நிலையில் தலைவியை நினைந்து கூறல், பாகனிடம் உரைத்தல், முகிலொடு கூறல், தலைவியோடு இனிது இருந்ததைக் கூறல் என்று இறையனாரகப்பொருள் உரையானது விரித்துரைக்கும். இதனைத் தழுவி முத்துவீரியம் கூறுவதுடன் தலைவியை மறவாமை கூறலையும் கூறும்.

தூதிற்பிரிவில் கூறும் தொல்காப்பியக் (987;15) கூற்றானது பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

நாடு காத்தற் பிரிவின்போது தலைவன் கூற்று நிகழ்த்துவதாக இயம்பும் தொல்காப்பியக் கூற்றையே இறையனாரகப்பொருள் உரையும் கூறும்.

தலைவன் பொருள்வயிற் பிரியும் சூழலில் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதை இறையனாரகப்பொருள் உரையானது பொருட்பிரிவுணர்த்தல் என்று கூறும். இதனைத் தழுவி தமிழ்நெறி விளக்கம் கூறுவதுடன் செலவழுங்கலையும் மொழியும்.

வீரசோழியமானது தமிழ்நெறி விளக்கத்தைத் தழுவி இயம்புவதுடன் பொருள்வயிற் பிரிதல், தலைவியின் ஆற்றாமை கூறல், ஆற்றானாதல், உலகியல் உரைத்தல், பிரிதல் என்று விரித்துரைக்கும். இதனைத் தழுவி முத்துவீரியம் கூறும்.

தலைவன் பிரியேன் என்பதைத் தவிர்த்துப் பிரிதலைத் துணியுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் சுட்டுவதை இறையனாரகப்பொருள் உரையானது நெஞ்சிற்குரைத்தல், செலவழுங்கல் என்று கூறும். தமிழ்நெறி விளக்கம் செலவுடன் மயங்கிக் கூறல் என்றும் வீரசோழியம் பொருள்வயிற்பிரிய நிற்றல் என்றும் கூறும்.

சுரத்திடையில் தலைவியின் நினைவு வர மீண்டு வருதலைக் கருதியவிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை வீரசோழியமானது நெஞ்சொடு கூறி அழுங்கல், தலைவியின் மனதைத் தன் வயப்படுத்த அவளோடு தங்கல் என்று கூறும். முத்துவீரியமானது வீரசோழியத்தைப் பின்பற்றுவதுடன் தலைவி உருவம் தோன்றியதென மீள நினைத்தல், நெஞ்சொடு நொந்துரைத்தல், நெஞ்சொடு புலத்தல் என்றும் மொழியும்.

பொருள்வயிற் பிரிவின்கண் கூறும் தொல்காப்பியக் (1092;37-39, 43-44, 40-41, 987;7-11) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

பொருள்வயிற் பிரிந்த சூழலில் முத்துவீரியமானது ஏறு வரவு கண்டு இரங்கி மொழிதல், பருவங்கண்டிரங்கல், முகிலிடம் கூறுதல், உள்ளம் மகிழ்ந்துரைத்தல் ஆகியனவாக விரித்துரைக்கும்.

வினைமேற் சென்ற தலைவன் பாசறையிடத்துப் புலம்புவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை வீரசோழியமானது தலைவன் வாடைக்காற்றால் மனம் தளர்தல், கனவினரற்றல், தலைவி புலம்புவாள்

என்று இரங்குதல், தூது விடுத்தல், தூதெதிர் கோடல், தலைவியின் புலம்பலைத் தீர்த்தல் என மொழியும்.

வினையிடத்து நிகழும் தொல்காப்பியக் (1092;47, 987;19-20) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

வினை முற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனிடம் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதைத் தமிழ்நெறி விளக்கமானது நெஞ்சிற்குச் சொல்லி வினையிடம் விட்டு மீளுதல் எனக் கூறும். வீரசோழியமானது தூதுவனிடம் மீளும் செய்தியைக் கூறல், தேரேறித் தலைவியைச் சந்திக்க வருதல், தேர்மீது ஏறல், தலைவியின் நிலையை ஆராய்தல், நன்னகர் காட்டல் என்று விரித்துரைக்கும்.

இச்சூழலில் கூறும் தொல்காப்பியக் (1092;53-54) கூற்றானது பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

இல்லத்தில் தலைமக்கள் இனிதிருத்தல் பற்றிய தொல்காப்பியக் (1092;49-52;55-56) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

இச்சூழலில் தலைவன் இல்லத்திற்கு வந்து சேருதல், புலவியை நீக்கல், நாணத்தால் தன்னை வரவேற்கும் தலைவியைக் கண்டு மகிழ்தல், சேர்க்கையில் மகிழ்தல், முல்லை நல்லியாழ் கேட்டல் ஆகிய கூற்றுகள் வீரசோழியத்தில் மட்டுமே உள்ளன.

சான்றெண் விளக்கம்

1. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.50
2. மேலது, ப.53
3. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.33
4. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.27
5. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.34
6. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.231
7. செ.வை.சண்முகம் (ப.உ.), சுவாமிநாதம், ப.171
8. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.26
9. புலவர் சேயொளி, (ப.ஆ.), இலக்கண விளக்கம், பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.33
10. செ.வை.சண்முகம் (ப.உ.), சுவாமிநாதம், ப.171
11. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.26
12. புலவர் சேயொளி, (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.33
13. ஆ.சிவலிங்கனார் (தொல்.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.3
14. மேலது, ப.3
15. மேலது, பக்.17-18
16. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.31

17. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம், (பழைய உரையுடன்), ப.299

18. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.44

19. மேலது, ப.45

20. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம், (பழைய உரையுடன்), ப.299

21. மேலது, ப.72

22. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.45

23. மேலது, ப.46

24. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.57

25. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.3

26. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.89

27. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.57

28. மேலது, ப.57

29. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.3

30. தி.சு.பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார்), பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, ப.8

31. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.102

32. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.49

33. மேலது, ப.50

34. மேலது, ப.52

35. மேலது, ப.55

36. மேலது, ப.56

37. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.451

38. மேலது, ப.454

39. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.100

40. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.66

41. மேலது, ப.66

42. மேலது, ப.67

43. மேலது, ப.67

44. மேலது, ப.67

45. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.3

46. மேலது, ப.115

47. மேலது, ப.117

48. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.75

49. புலவர் குழந்தை (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பகுதி), ப.151

50. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.134

51. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.44), ப.88

52. மேலது, (உ.53), ப.96

53. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.109

54. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.103

55. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.63), ப.104

56. மேலது (உ.36), ப.82

57. மேலது (உ.37), ப.83

58. மேலது (உ.38), ப.83

59. மேலது (உ.59), ப.101

60. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.188

61. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.187

62. சி.இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.143

63. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை - ஓர் ஆய்வு, ப.36

64. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.124

65. கே.ராஜகோபாலாச்சாரியார், இலக்கண விளக்கம் (பொருளியல்), பக்.171-172

66. மேலது, ப.169

67. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.907

68. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக்.168-169

69. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.188

70. மேலது, ப.180

71. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.286

72. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.162

73. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.286

74. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.164

75. மேலது, ப.165

76. மேலது, ப.166

77. மேலது, ப.166

78. மேலது, ப.168

79. மேலது, ப.169

80. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.286

81. மேலது, ப.320

82. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.162

83. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.61

84. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.169

85. மேலது, ப.189

86. மேலது, ப.189

இயல் மூன்று

தலைவி கூற்று

தலைவி கூற்று

தொல்காப்பியம் முதலான அக இலக்கணங்களில் சித்திரிக்கப்படும் தலைவி, பேசுந்திறன், அறிவுத்திறன், பண்பாட்டுணர்வு மிக்கவளாகக் காணப்படுவதோடு உயர்ந்த குடிப்பிறப்பும் மனையறத்திற்குரிய மாண்பும் கொண்டவளாகத் திகழக்கூடியவள். இத்தகைய சிறப்பு வாய்ந்த தலைவி நிகழ்த்தும் தொல்காப்பியக் கூற்றுகளைப் பின்வந்த அக இலக்கணங்களோடு ஒப்பிட்டு ஆய்வது இவ்வியலின் நோக்கமாக அமைகிறது.

தலைவி

தலைவிக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பன நிலைபெற்ற குணங்களாகும். தொல்காப்பியம்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"

(தொல்.1045)

என்று தலைவியின் இலக்கணத்தை இயம்பும். இதற்கு உரை வகுத்த இளம்பூரணர், "அச்சமும், நாணும், பேதைமையும் இம் மூன்றும் நாடோறு முந்துறுதல் பெண்டிர்க்கு இயல்பு என்றவாறு"[1] என்பர்.

இறையனாரகப்பொருள் உரையில் நக்கீரர், "தலைமகட்கு நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன குணம்; அவற்றுள், நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை; மடம் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை; அச்சம் என்பது பெண்மையின் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது; பயிர்ப்பு என்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை"[2] என்பர். இவற்றுள் 'பயிர்ப்பு' என்பதனைத் தலைவிக்குரிய குணங்களுள் கூடுதலாக இயம்புவர். அகப்பொருள்

விளக்கமானது,

"நன்னுதற் கச்சமும் நாணும் மடனும்
மன்னிய குணங்க ளாதலின்"

(அக.விளக்.35:2-3)

என்று இயம்பும். இதன் உரையில் கா.ர.கோவிந்தராச முதலியார், "அச்சமென்பது காணாததொன்று கண்டாற் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணமென்பது பெண்டிர்க் கியல்பாகிய குணம். மடமென்பது பேதைமையெனக் கொள்க"[3] என்பர். அகப்பொருள் விளக்கத்தையே (35:2-3) இலக்கண விளக்கம் (404:2-3) பின்பற்றுவதோடு இதன் உரையில் புலவர் சேயொளி, "அச்சமாவது, தன் அன்பு காரணத்தாற் தோன்றிய உட்கு. நாணாவது, காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ளவொடுக்கம். மடமாவது, செவிலியர் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை"[4] என்பர். தொல்காப்பியத்தையே (1045), முத்துவீரியம் (832) பின்பற்றும். இதன் உரையில் கு.சுந்தரமூர்த்தி, "அன்பு காரணத்திற் றோன்றிய அச்சமும், காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோருள்ள வொடுக்கமும், செவிலியர் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமையும் இம்மூன்று முதலியன நிச்சமும் பெண்பாற் குரியன"[5] என்பர். செ.வை.சண்முகம், "தலைமகளுக்கு நாணும், மடமும்"[6] என்று இரண்டினை மட்டும் இயம்புவர்.

தலைவி கூற்றில் எண்ணிக்கை வேறுபாடு

தொல்காப்பியம், தலைவி கூற்றாக நவில்வனவற்றை இளம்பூரணர் அறுபது[7] ஆகவும் நச்சினார்க்கினியர் எழுபத்திரண்டு[8] ஆகவும் இயம்புவர்.

இவ்வாறு கூற்றுகளின் எண்ணிக்கையில் இவர்கள் வேறுபடக் காரணம் களவியலில், "இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்..."

(தொல்.1053) எனத் தொடங்கும் நூற்பாவின்கண் அமைந்த அனைத்துக் கூற்றுகளையும் இளம்பூரணர், "இது தோழியிற் கூடிய தலைமகன் வரைந்தெய்துங்காறும் கூறும் பொருண்மை யுணர்த்துதல் நுதலிற்று"[9] என்று தலைவன் கூற்றாகவும் நச்சினார்க்கினியர், "இது, மேற்றலைவற்குரிய கிளவி கூறிப் பாங்கனிமித்தம் அவன்கண் நிகழும் பகுதியுங்கூறி அம்முறையானே தலைவிக்குரிய கிளவி கூறுகின்றது"[10] என்று தலைவி கூற்றாகவும் கற்பியலில், இளம்பூரணர் ஒரே கூற்றாகக் கொண்ட தலைவி கூற்றை[11] நச்சினார்க்கினியர் மூன்று கூற்றுகளாகக்[12] கொண்டதுமாகும்.

தொல்காப்பிய (1053) நூற்பாவினை இளம்பூரணர், நச்சினார்க்கினியரன்றி, பிற உரையாசிரியர், துறையாசிரியர் முதலியோர் தலைவன் கூற்றாகவும் தலைவி கூற்றாகவும் கொள்வர்.

தலைவன் கூற்றாகக் கொள்வோர்

அகப்பொருள் விளக்கம், 'பாங்கியிற் கூட்டம்' பற்றிய நூற்பாவின் உரையில் கா.ர.கோவிந்தராச முதலியார், "இதனுட் பாங்கி கூற்றாயின வெல்லாங் கூட்டற்கும், வேட்டற்கும் உரியன; தலைமகன் கூற்றாயினவெல்லாம் கூடற்கும், கூட்டற்கும் உரியவெனக் கொள்க. இம்மூன்று சூத்திரத்துள்ளும் எடுத்தோதப்பட்ட கிளவிகள், பாங்கி கூற்றுள்,

"நன்னயம் பெற்றுழி நயம்புரி"

என்பதனாலும், தலைமகன் கூற்றுள்,

"வேளா ணெதிரும் விருந்தின்"

என்பதனாலுங் கொள்ளப்பட்டன"[13] என்பர். இவ்வாறு கூறுவதால் தலைவன் கூற்றாகக் கருதியது தெளிவாகின்றது. க.வெள்ளைவாரணன்,[14] க.ரத்தினம்[15] ஆகியோரும் இளம்பூரணர் வழிநின்று தலைவன் கூற்றாகக் கொள்வர்.

தலைவி கூற்றாகக் கொள்வோர்

குறுந்தொகையில் தலைவி கூற்றாக அமைந்த பாடல்களுக்கு, தலைவி கூற்றுகளின் அடிப்படையில் துறை அமைந்திருக்கின்றது.

"அம்ம வாழி-தோழி! புன்னை..."

(குறுந்.296)

என்ற பாடலுக்கு அமைந்த துறை விளக்கமானது, "காணும் பொழுதிற் காணாப் பொழுது பெரிதாகலின், ஆற்றாளாய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது"[16] என்பதாகும். இது,

"காணா வகையில் பொழுதுநனி இகப்பினும்"

(தொல்.1053;2)

என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்ததாகும்.

"நிலத்தினும் பெரிதே ; வானினும் உயர்ந்தன்று..."

(குறுந்.3)

என்ற பாடலுக்கு "தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற்பழித்த வழி, தலைமகள் இயற்பட மொழிந்தது"[17] என்று துறை விளக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது,

"வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்"

(தொல்.1053;11-12)

என்னும் கூற்றின் அடிப்படையில் அமைந்ததாகும். இவற்றின் மூலம் குறுந்தொகைக்குத் துறையமைத்த துறையாசிரியர், மேற்கண்ட நூற்பாக்களைத் தலைவி கூற்றாகக் கொண்டனர் என்பதை அறிய இயலும்.

நச்சினார்க்கினியர் வழிநின்று தொல்காப்பிய (1053) நூற்பாவினைத் தலைவி கூற்றாகக் கொள்வோரில் கா.சுப்பிரமணியபிள்ளை,[18] சி.இலக்குவனார்[19] ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

தலைவி கூற்றென்று துணிதல்

தொல்காப்பியம் மொழியும் "புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇ" (1053;14) என்னும் கூற்றிற்கு இளம்பூரணர், "குற்றம்பட வந்த மறுத்தலொடு கூட என்றவாறு. அஃது அவர் மறுத்தற்கண்ணுந் தலைமகன் மாட்டுக் கூற்று நிகழும் என்றவாறு"[20] என்று தலைவி தமர் மறுத்தற்கண் தலைவனிடத்துக் கூற்று நிகழும் என விளக்கம் தருவர். தொல்காப்பியத்தில் தலைவன் கூற்றாகிய "ஒன்றாத் தமரினும்" (987;1) என்பதற்கு "வரைவு உடன்படாத தமர் கண்ணும்"[21] என்று இளம்பூரணர் உரை வகுப்பர்.

இவற்றால் இரண்டு கூற்றிற்கும் ஒரே கருத்தைக் கூறியிருப்பது புலனாகும். எனவே இளம்பூரணர், தலைவன் கூற்றாகக் கொண்ட தொல்காப்பிய (1053) நூற்பாவினைத் தலைவி கூற்றாகக் கொள்ள இயலும். நச்சினார்க்கினியர், தொல்காப்பியக் (1053) கூற்றுகளுக்கு குறுந்தொகை, கலித்தொகை போன்ற பாடல்களை[22] எடுத்துக்காட்டி விளக்கம் கொடுத்துள்ளார். அவை அக்கூற்றுகளுக்குத் தகுந்தவாறு அமைந்துள்ளன.

தொல்காப்பியம் தலைவனைப் பற்றித் தொடர்ந்து மூன்று நூற்பாக்களில் (1047, 1048, 1049) குறிப்பிட்டு, அதற்கடுத்து பாங்கனிமித்தமும், அவன்கண் நிகழும் பகுதிகளும் (1050, 1051, 1052) கூறி, அதற்குப் பிறகு "இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும்" (தொல்.1053) என்று தொடங்கும் நூற்பாவினை அமைத்துள்ளது.

இந்நூற்பாவிற்கு அடுத்துள்ள ஆறு நூற்பாக்களும் (1054, 1055, 1056, 1057, 1058, 1059) தலைவியைப் பற்றியே உள்ளன. தலைவனைப் பற்றிய நூற்பாக்களின் இடையில் பாங்கனிமித்தம் பற்றிய நூற்பாவினை எடுத்துரைத்து மீண்டும் தலைவன் கூற்றினைக் குறிப்பிட்டிருக்காது. பாங்கனிமித்தம் பற்றிய நூற்பாக்களுக்கு முன்பே சுட்டப்பட்டிருக்கும். எனவே, இவைகளை அடிப்படையாகக் கொண்டு "இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும்" (1053) என்னும் நூற்பாவினைத் தலைவி கூற்றாகக் கொள்வதே பொருத்தமுடையது.

குறிப்புரை புலப்படுத்தல்

தலைவி இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் ஆகிய மூன்றிடங்களிலும் சொல்லுதற்குத் தக்க இடத்தின்கண் கூற்றாலன்றிக் குறிப்பால் மட்டும் தன் வேட்கையைப் புலப்படுத்துவாள்.

"மறைந்து அவன் காண்டல்"

(தொல்.1057;1)

என்னும் தலைவி கூற்றிற்கு உரை வகுத்த இளம்பூரணர், "தலைவிக்கு இயற்கைப் புணர்ச்சி முதலாகக் களவின்கட், 'குறிப்பினு மிடத்தினுமல்லது' (களவியல் - 18) நிகழ்ச்சியில்லாவற்றினும் கூற்று நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று"[23] என்பர். நச்சினார்க்கினியர் இக்கூட்டங்களில் தலைவியிடத்துக் கூற்றே நிகழாது என்பர். இதனை, "தோழியிற் கூட்டத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவளென்பதூஉம், நிகழுங்கால் நாணும் மடனும் பெரும்பான்மை கெட்டு அக்கூற்று நிகழுமென்பதூஉம்"[24] என்று இயம்புவர்.

தலைவியிடத்து நிலைபெற்று வருகின்ற நாணமும் மடனும் பெண்மைக்கு இயல்பாகலின், காமவொழுக்கத்தின்கண் தலைவி,

தலைவன்மீது கொண்ட காம வேட்கையானது குறிப்பினும் இடத்தினும் புலப்படும். இதனை,

"காமத் திணையில் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள் வயினான"

(தொல்.1054)

என்று தொல்காப்பியம் இயம்பும்.

குறிப்புரையாவது தலைவன் தலைவியின் இரு கண்களும் ஒருவர் அறிவை ஒருவர் அறிவோடு ஒருப்படுத்துதற்குத் தத்தம் வேட்கையொடு காம உணர்வினைக் கூட்டி உரைப்பதாகும். இதனை,

"நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்"

(தொல்.1042)

என்பதன் மூலம் அறிய இயலும்.

'இடத்தினும்' என்பதற்கு இளம்பூரணர், "சொல்லுதற்குத் தக்க விடத்தினானாதல் தோற்றுவதல்லது, புலப்பட்டு நிகழாதென்றவாறாயிற்று"[25] என்பர்.

சொல்லுதற்குத் தக்க இடத்தினால் வேட்கை புலப்படுதல் பற்றி,

"சொல்எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்
அல்ல கூற்றுமொழி அவள் வயினான"

(தொல்.1056)

என்று இயம்பும். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், "தலைவன் இயற்கைப் புணர்ச்சி கருதிக் கூறுஞ் சொல்லெதிர் தான் வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்குடம்பட்ட நெறியைக் கூறுதல்

அருமையுடைத் தாதலான் அதற்கு உடம்பாடல்லாத கூற்றுமொழி தலைவியிடத்தன என்றவாறு ; என்றது இசைவில்லாதாரைப் போலக் கூறுதல்"[26] என்பர். 'நாணும் மடனும் நீங்கிய சொல்லை தோழியிடத்துக் கூறுதல் அருமையுடைத்தல்ல வாகையினாலே குறிப்பானன்றிக் கூற்றாற் கூறும் மொழி தலைவிக்குப் பொருந்தின என்றவாறு[27] என்றுரைப்பர் நச்சினார்க்கினியர்.

தலைவி, தலைவனது கூற்றிற்கு எதிர்மொழி கூறும்போது இசைவு இல்லாதாரைப் போலக் கூறுவாள் என்று இளம்பூரணரும் தோழியிடத்துக், குறிப்பானன்றிக் கூற்றாற் கூறுவாள் என்று நச்சினார்க்கினியரும் மொழிவர்.

க.வெள்ளைவாரணன், "இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவன் தன்னை நோக்கி வினவும் வினாவுக்குத் தலைவி வெளிப்பட மறுமொழி கூறுதல் என்பது அவளது பெண் தன்மைக்கு மிகவும் அருமையுடையாததலின் கூற்று மொழியல்லாத குறிப்பு மொழிகளே அவள்பால் தோன்றும்"[28] என்பர்.

கூற்று - வரையறை

தொல்காப்பியம், குறிப்பிடும் தலைவி கூற்றுகள் (1053, 1057, 1058, 1059, 1093) எழுபத்தியிரண்டு. இவள் களவிலும் (1445) கற்பிலும் (1446) கூற்று நிகழ்த்துவதற்கு உரியவள்.

சூழல்

தலைவி, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழி மதியுடம்பாடு, குறைநயத்தல், இருவகைக் குறி, ஒருவழித்தணத்தல், வரைவுவேட்கை, உடன்போக்கு,

உடன்போக்கிடையீடு, மீட்சி, வரைவுமலிவு, மலிவு, ஊடல், பிரிவு ஆகிய சூழல்களில் கூற்று நிகழ்த்துவதற்குரியவள்.

இயற்கைப் புணர்ச்சி

தலைவனும் தலைவியும் பொழிலிடத்து எதிர்ப்பட்டுத் தம்முள் ஒத்த அன்பினராகக் கூடுவது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். புலவர் குழந்தை, "இயற்கைப் புணர்ச்சியாவது - ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டு, ஒருவரையொருவர் காதலிப்பது. புணர்தல் - கூடுதல் - எதிர்ப்படுதல்"[29] என்பர்.

இத்தகைய சூழலில் தொல்காப்பியத்தில் (1057) தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன ஏழு. பிற அக இலக்கணங்களான வீரசோழியம் (குறிஞ்.நடை.), அகப்பொருள் விளக்கம் (127) ஒவ்வொன்றிலும் மூன்று, மாறனகப்பொருள் (19) இரண்டு, இலக்கண விளக்கம் (495), சுவாமிநாதம் (87) ஒவ்வொன்றிலும் முறையே மூன்று எனத் தலைவி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

தலைவி, தலைவன் தன்னைச் சார நினைத்தவழி உடன்படாது மறுத்தல், அவனை ஏற்றுக்கொள்ள விரும்பல், முறுவற் குறிப்பைத் தோற்றுவித்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற அக இலக்கணங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தலைவன், தலைவியின் வேட்கைக் குறிப்புக் கண்டு சாரலுற்றவழித் தலைவி அதற்குடம்படாது மறுத்துரைப்பதைத் தொல்காப்பியம்,

"வழிபாடு மறுத்தல்"

(தொல்.1057;3)

என்று சுட்டும். இதனையே வீரசோழியம் 'நாணின மழுங்கல்' (குறிஞ்.நடை;5) என்று இயம்பும். அகப்பொருள் விளக்கம் (127;4), மாறனகப்பொருள் (19;4), இலக்கண விளக்கம் (495;4), சுவாமிநாதம் (87;5-6) ஆகியனவும் இக்கருத்தினது.

கூட்டத்திற்கு உடன்படாது மறுத்த தலைவியே மீண்டும் அவனை ஏற்றுக்கொள்ளுதலை விரும்பியவிடத்துக் கூற்று நிகழ்த்துவதை,

"மறுத்து எதிர்கோடல்"

(தொல்.1057;3)

என்று நவிலும். இதனைத் தழுவியே வீரசோழியம் தன்னைச் சார்தல் இயலாத தலைவனுடைய துயரத்திற்கு அஞ்சித் தன் நாணத்தை விடுத்து அவனுக்குப் புணர்ச்சி விருப்பத்தைத் தெரிவிக்கும் அன்புப் பார்வையால் நோக்கும் 'அஞ்சியனோக்க'மென்று (குறிஞ்.நடை;15) மறுத்தெதிர்கோடலை மொழியும். இதனை அடியொற்றி அகப்பொருள் விளக்கம் (127;6), மாறனகப்பொருள் (19;6), இலக்கண விளக்கம் (495;6), சுவாமிநாதம் (87;7) ஆகியனவும் குறிப்பிடுகின்றன.

தலைவி குற்றந் தீர்ந்த முறுவலைச் சிறிது தோற்றுவிப்பதைத் தொல்காப்பியம்,

"பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்"

(தொல்.1057;4)

என்று சுட்டும். இதனையே வீரசோழியம் 'ஏற்ற வுவகையோ டினியவண் முறுவல்' (குறிஞ்.நடை ;16) என்று இயம்பும். அகப்பொருள் விளக்கம் (127;6), இலக்கண விளக்கம் (495;6), சுவாமிநாதம் (87;7) ஆகியனவும் இக்கருத்தினவாகும்.

வீழ்ச்சி

இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவிக்குரிய கூற்றுகளாகப் பின் வருவன தொல்காப்பியத்தில் (1057 : 1-2, 5) வரையறுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

தலைவி, தலைவன் தன்னைப் புணர்ந்து நீங்கும்போது அவன் மறையுமளவும், காதல் மிகுதியால் காணுமிடத்தும்

தலைவி, தலைவன் தன்னைக் காணாமல் நாணம் மிகுதியால் மறைந்து ஒழுகினும் தன் பொலிவழிவினைத் தலைவனுக்குக் காட்ட விரும்பியவிடத்தும்

தலைவி, தலைவன்மீது கொண்ட வேட்கையால் தலைவன் கூறிய சொற்கேட்டு எதிர்மொழி கூறாது மயங்கி நிற்குமிடத்தும் .

தலைவன் கையகப்பட்ட பின்பு என்செய்தோமாயினோம் என்று கலக்கமுற்றவிடத்தும் கூற்றுகள் நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்திற்குப் பின்னர் வளர்ச்சி பெறவில்லை.

இடந்தலைப்பாடு

தலைவன், இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு பாங்கன் அறியத் தலைவியைக் கூடுதலில்லாமல் முதல்நாள் கூடிய அதே இடத்தில் மறுநாளும் தலைவியை எதிர்ப்படுதல் இடந்தலைப்பாடு எனப்படும். புலவர் குழந்தை,"இடந்தலைப்பாடு - முன் தலைவியைக் கூடிய அதே இடத்து மறுநாளும் தலைவன் சென்று தலைவியைக் கூடுதல். இடம் - அதே இடத்தில். தலைப்பாடு - தலைப்படுதல், கூடுதல் - சேர்தல்"[30] என்பர்.

இத்தகைய சூழலில் தொல்காப்பியம் தலைவி நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினை (1057) இயம்பும். பிற அக இலக்கணங்களாகிய வீரசோழியம் (குறிஞ்.நடை.), முத்துவீரியம் (837) ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகளை இச்சூழலில் தலைவிக்குரியதாக வரையறுக்கின்றன.

வளர்ச்சி

தலைவிக்கு முன்புள்ள நாணத்தினும் மிகுந்த நாணம் வந்தவிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"நாணுமிக வரினும்"

(தொல்.1057;5)

என்று மொழியும். இதனை வீரசோழியம் (குறிஞ்.நடை;13-14) பொழிலிடைச் சென்ற தலைவன், தலைவியின் குறிப்பறியாது அவளை அணுகுதல் கூடாமையின் வருந்தி நிற்கும்போது, அவள் ஆர்வ நோக்கத்தோடு அவனது தனிமைத் துயரைத் தீர்க்கும் 'வனம்புலம் பகற்றல்,' தலைவன் தலைவியிடம் பல்வேறு பாராட்டு மொழிகளைக் கூற, நாணம் கொண்டு தன் கண்களை மறைத்துக் கொள்ளல் என விரித்துரைக்கும். முத்துவீரியமானது, இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவன், தலைவியிடம் நின்னைப் பிரியேன், பிரியின் ஆற்றேன் என்று கூறிப் பிரிந்தவன் வேட்கை மிகுதியால் ஆயத்திடை வருவரோ என்னும் நாணத்தினாலும் ஆற்றாமையால் இறந்துபடுவரோ என்னும் அச்சத்தினாலும் தலைவனை நினைந்து மெலிதல், தலைவி நாணத்தால் கண் புதைக்கக் கண்டு தலைவன் வருந்த, தலைவி ஒருநாளும் தன்னை விட்டு நீங்காத நாணமானது அழலைச் சேர்ந்த மெழுகுபோல தன்னை விட்டு நீங்குக என்று 'நாண் விட வருந்துதல்' (837;10-11, 14) என்று விரித்துரைக்கும்.

பாங்கற் கூட்டம்

தலைவியைச் சந்தித்த தலைவன் மீண்டும் பாங்கன் மூலமாகத் தலைவியைக் கூடுதல் பாங்கற்கூட்டமாகும். இத்தகைய சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றாக வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஒன்றினை மொழியும். இக்கூற்றானது தொல்காப்பியத்தில் சுட்டப்படவில்லை.

புதிய கூற்று

வீரசோழியம், பாங்கற் கூட்டத்தின் இறுதியில் அறிவும் நிறையும் மேலோங்கப்பட்ட நிலையில் தலைவன் களவொழுக்கத்தை இத்துடன் தவிர்த்து, தன்னை முறையாக மணந்த பின்னரே கூடுவதாகக் கூறிய அவனது பெருந்தன்மையை 'இலங்கிழை உணர்தல்' (குறிஞ்.நடை.;26) என இயம்பும். இது தொல்காப்பியம் கூறாத புதிய கூற்றாகும்.

தோழி மதியுடம்பாடு

இயற்கைப் புணர்ச்சியிலும் இடந்தலைப்பாட்டிலும் பாங்கற் கூட்டத்திலும் தலைவியைக் கண்டு கூடின தலைவன், தலைவியைத் திருமணம் செய்துகொள்ளாமல் மீண்டும் களவிற் புணர்ச்சியை விரும்புவான். இவ்வாறு விரும்பிய தலைவன், தலைவியின் தோழிக்குத் தன் கருத்தறிவித்து அவளது அறிவு தன் செயலுக்கு உடன்படும்படிச் செய்வான். இது மதியுடம்படுத்துதலெனப்படும். தி.சு.பாலசுந்தரம் பிள்ளையவர்கள், "தோழியின்பாற் சென்று குறைகூறித் தன் கருத்தறிவித்து அவள் மதியைத் தன் எண்ணத்துக்கு ஒத்து வருமாறு உடம்படுத்தலே மதியுடம்படுத்துத லெனப்படும்"[31] என்பர்.

இத்தகைய சூழலில் தொல்காப்பியம் தலைவிக்குரியதாக (1057) ஒன்றினை இயம்பும். பிற அக இலக்கணமாகிய களவியற் காரிகையும் (31) ஒரு கூற்றை வரையறுக்கும்.

மாற்றமின்மை

தோழி, தனது அறிவாற்றலால் தலைவியின் கூட்டமுண்மையை ஆராய முற்படுவாள். தலைவியின் கண் சிவப்பும், நுதல் வேறுபாடும் கண்டு வினவுவாள். அப்போது தலைவி, தோழி அறியாமலும் செவிலி அறியாமலும் மறைத்துக் கூறுவாள். இதனை,

"நெறிப்பட்டு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்"

(தொல்.1057;16)

என்று குறிப்பிடும். இதனையே களவியற்காரிகை, தலைவியின் மேனி வேறுபாட்டினைக் கண்டு வினவிய தோழியிடம், 'சுனையாடியதால்' இவ்வாறு ஏற்பட்டது என்று மறைத்துரைப்பதாக (31;2) மொழியும்.

குறைநயத்தல்

தோழி, தலைவனது குறையை முடித்தற்குத் தலைவியிடம் சென்று குறைநயப்பிக்கும்போது தலைவி கூற்று நிகழ்த்துவாள். தொல்காப்பியம் (1057) இத்தகைய சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாக இரண்டினை இயம்பும். வீரசோழியம் (குறிஞ்.நடை.), தமிழ்நெறி விளக்கம் (17) ஒவ்வொன்றிலும் முறையே ஒன்று, அகப்பொருள் விளக்கம் (147,148) நான்கு, களவியற் காரிகை (உ.30) ஒன்று, மாறனகப்பொருள் (39,40), இலக்கண விளக்கம் (509) ஒவ்வொன்றிலும் நான்கு, முத்துவீரியம் (845) மூன்று, சுவாமிநாதம் (95, 96) நான்கு எனப் பிற அக இலக்கணங்களில் இவளது கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வீழ்ச்சி

தோழி, தலைவனது குறைநயக்கச் செய்ய வேண்டித் தலைவியிடம் சென்று 'தலைவன் நின்பொருட்டு மடலேறுவேன் என்கின்றான்' என்றுரைக்கத் தலைவி பொய்யெனக் கூறல்,

ஊழ்வயத்தால் மனமொத்த காதலராகியக்கால் தலைவனுக்குள்ள உறுகுறை தெளித்து மனம் அழிவின்றிப் பெருமை சான்ற இயல்புடன் நிற்குமிடத்துக் கூற்று நிகழ்த்தல் (1057;21,17-20) ஆகிய இரண்டும் தொல்காப்பியத்தில் மட்டும் இடம்பெற்றுள்ள கூற்றுகளாகும். இவற்றைப் பிற அக இலக்கணங்கள் கூறவில்லை.

புதிய கூற்றுகள்

தோழி, தலைவியிடம் தலைவனது குறை நயப்பிக்க அவள் ஆற்றாமையால் மறுமொழி கூறாது நாணம் கொண்டு அவ்விடம் விட்டு நீங்குதலைத் தமிழ்நெறி விளக்கம் (17;12) சுட்டும். தோழி, தலைவனது குறைநேர்ந்து தலைவியிடம் சென்று குறை நயப்பிக்கத் தனது நாணம் அழிதலைப் பொறுத்துக் கொண்டு தலைவனைக் கூடுதற்கு உடன்படுவதை வீரசோழியம் (குறிஞ்.நடை;43) இயம்பும். தலைவி, தோழி கூறியதை மனதிற் கொள்ளாது வேறொன்றை நாணத்தொடு கூறல், தோழி, தலைவன் உன்மேல் ஆசை கொண்டவனாய் வந்தான் என்றுரைப்பதைக் கேட்ட தலைவி, புதியவராய்க் கையில் தழையுடன் வந்தவரை நீ இவ்வாறு கூறுவது பொருந்துவதன்று எனத் தோழியைத் தலைவி மறைத்துக் கூறல், 'வஞ்சித்து முனிதல்', 'தலைவனது கையுறையை ஏற்றுக் கொள்ளுதல்' (147;2-3, 5, 148;4-6) என அகப்பொருள் விளக்கம் விரித்துரைக்கும். இதனைப் (147;2-3) பின்பற்றிக் களவியற்காரிகை 'நாணொடு கூறலை'[32] இயம்பும். இந்நூலையும் (உ.30) அகப்பொருள் விளக்கத்தையும் (147;5, 148;4-6) தழுவி மாறனகப்பொருளும் (39;3,5,40;4-5) இலக்கண விளக்கமும் (509;37-38, 40, 46-48) சுட்டும். இதனைத் (509;37-38, 46-47) தழுவி முத்துவீரியம் 'அறியாள் போறல்', 'வஞ்சித்து உரைத்தல்' (845;2-3), தலைவன் மடலேறத் துணிகின்றானெனத் தோழி கூறக் கேட்ட தலைவி, ஆற்றாளாய் அவனைக் காணத் 'தன் மனத்தொடு நேர்தல்' (845;4) என்று இயம்பும். இதனையும் (845;2-3) இலக்கண விளக்கத்தையும் (509;40, 47-48) தழுவி சுவாமிநாதம் (95;6-7, 96;2-3) மொழியும். இவையனைத்தும் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

இருவகைக் குறி

தலைவன் தலைவியைச் சந்திப்பதற்குத் தலைவியும் தோழியும் சுட்டும் இடம் குறியிடம் எனப்படும். இக்குறியிடத்துக் கூட்டம் பகலிலும் இரவிலும் நடைபெறுவதுண்டு.

இருவகைக் குறியில் தொல்காப்பியம் (1053, 1057) தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கூறுவன பதினொன்று. இறையனாரகப்பொருள் (சூ.18) உரை, தமிழ்நெறி விளக்கம் (18) ஒவ்வொன்றிலும் ஒன்று, வீரசோழியம் (குறிஞ்.,நெய்.நடை.) நான்கு, அகப்பொருள் விளக்கம் (154, 156, 158, 160, 161) இருபத்தொன்று, களவியற் காரிகை (உ.40, 41) இரண்டு, மாறனகப்பொருள் (46, 48, 50, 52, 53) இருபத்திரண்டு, இலக்கண விளக்கம் (513, 515, 517, 519) இருபத்தொன்று, முத்துவீரியம் (848) ஆறு, சுவாமிநாதம் (97, 98, 99, 100, 101, 102) இருபத்தொன்று என இச்சூழலில் தலைவி கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவி, தலைவன் பகல், இரவுக்குறிகளில் சந்திக்க வரக் காலம் தாழ்க்கும்போது வருந்துதல், பிரிந்தவழிக் கலங்கல், தோழி கூறியதனை ஏற்றுக்கொள்ளாதிருத்தல், அல்லகுறிப்பட்ட தலைவி குறியிடம் சென்று மயங்கல், தலைவனைக் காண வேட்கை கொள்ளல் ஆகிய கூற்றுகள் தொல்காப்பியம் தோன்றிய காலத்திற்குப் பின் வந்த அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவி, குறித்த இடத்திற்குத் தலைவன் வரக் காலம் தாழ்க்கும்போது அவனைக் காணாப் பொழுது பெரிதாகத் தோன்றினும் வருந்திக் கூறுவதைத் தொல்காப்பியம் (1053;2) இயம்பும்.

இதனை அகப்பொருள் விளக்கமானது தலைவன், குறியிடம் வாராமல் காலம் நீட்டிக்கத் 'தலைவி வருந்துதல்,' அப்போது தனக்கு முன்னால் தோழி நிற்பதையறிந்து அவள் மீதுள்ள வெறுப்பால் அவளை நோக்கிக் கூறாது, பிறரிடம் கூறுவதுபோல் 'முன்னிலைப் புறமொழி மொழிதல்,' இதனைக் கேட்ட தோழி, தலைவியை உபசரிக்க அவள் அவ்வெறுப்பு நீங்கி 'இன்னுயிர்த் தோழியொடு பகர்தல்,' தலைவன், தன்னைவிட்டு நீங்கற்கு அருமையைத் தலைவி நினைந்து 'தன்னுள் இரங்கலென்று' (154;3-7) விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (46;2-7), இலக்கண விளக்கம் (513;3-7), சுவாமிநாதம் (97;5-8) ஆகியனவும் பின்பற்றுகின்றன.

தலைவன் பிரிந்தவழித் தலைவி கலக்கமுறுவதைத் தொல்காப்பியம் (1057;9) நவிலும்.

இதனைப் பகற்குறியில் வந்து ஒழுகுகின்ற தலைவனைக் காணும் பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலின் காதல் மிகுதியால் தலைவி 'நெஞ்சொடு வருந்துவதாக'[33] இறையனாரகப்பொருள் (சூ.18) உரை இயம்பும். இவ்வாறு ஆற்றாளாகிய தலைவி மாலைப்பொழுதில் கடல், கழி, தாழை, கானல், பெண்ணை, புள், இருள், மதி, பொழுது, காற்று முதலாகிய பல்வேறு பொருள்களுடன் இரந்து குறையுறுதல், இப்பொருள்களுடன் தன் ஆற்றாமையைக் கூறி 'வாய்விட்டுப் புலம்புதல்,' இவ்வாறு வருந்திய தலைவி, தலைவன் தன்னைக் கைவிடான் என்பது போன்ற ஆறுதல் மொழிகளைத் தன்னுள் கூறிக் கொள்ளல் ஆகியனவற்றை வீரசோழியம் (நெய்.நடை;3-9) விரித்துரைக்கும். இதனைப் (நெய்.நடை;3-7) பின்பற்றி, அகப்பொருள் விளக்கம், தலைவி 'மாலைப்பொழுது கண்டிரங்குவதை'க் (154;1-2) குறிப்பிடும். வீரசோழியத்தையும் (நெய்.நடை ; 8) அகப்பொருள்

விளக்கத்தையும் (154;1-2) பின்பற்றிக் களவியற்காரிகை 'வாய்விடு கிளவி',[34] 'பொழுதினுக்கு இரங்கல்'[35] என்று மொழியும். இந்நூலை (உ.41) மாறனகப்பொருள் (46;1), இலக்கண விளக்கம் (513;1-2), சுவாமிநாதம் (97;3-4) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தலைவி, தோழி கூறியவற்றை ஏற்றுக்கொள்ளாத போது கூற்று நிகழ்த்துவதை,

"கூறிய வாயில் கொள்ளாக் காலையும்"

(தொல்.1057;11)

என்று மொழியும்.

இதனைத் தோழி, தலைவியிடம் இரவுக்குறி நயப்பித்தவழி, அவள் இரவுக் குறியிடத்துத் தலைவன் வரும் வழியிடை ஏதங் கருதி மனம் தளர்வதை வீரசோழியம் (குறிஞ்.நடை;51) இயம்பும். இக்கருத்தினை அகப்பொருள் விளக்கம் (158;8) பின்பற்றுவதோடு தலைவனது ஆற்றானாகிய நிலைமை கேட்டு 'தோழியிடம் உடம்பட்டு நேர்ந்துரைப்பதை' (158;9) மொழியும். இவற்றையே மாறனகப்பொருளும் (50;8-9) இலக்கண விளக்கமும் (517;8-9) பின்பற்றும். முத்துவீரியம், தலைவன் இரவு வரவு கேட்ட தலைவி, தனக்கவன் செய்த உதவியை நினைத்து, சிங்கம் திரியும் இரவின்கண் தலைவனை வாவென்று கூறுதல் தகுமோ என்று 'ஏதங் கூறல்' (848;5), இலக்கண விளக்கத்தைப் (517;9) பின்பற்றிக் 'குறைதனை நேர்தல்' (848;6) ஆகியனவற்றை மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (517;8) அடியொற்றி சுவாமிநாதம் (99;6-7) குறிப்பிடும்.

தலைவன், இரவுக்குறியின்போது செய்யும் குறி, பிறிதொன்றால் நிகழத் தலைவி, தலைவன் குறியை ஒத்தவழி, அதனை மெய்யாக

உணர்ந்து அவ்வழிச் சென்று மயங்கியவிடத்துக் கூற்று நிகழ்த்துவதை,

"குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்"

(தொல்.1057;24)

என்று மொழியும்.

இதனைத் தலைவி அல்லகுறிப்பட்டுத் தலைவனைக் காணாமையால் மீண்டும் விடியற்காலத்தில் வந்து 'தான் குறி மருண்டமையைத் தோழிக்கு உணர்த்துதல்,' குறியிடத்திற்குத் தலைவன் வந்துபோன அடையாளத்தைக் காண்பதற்காக இருள் நீங்கிய விடியற்காலத்தில் சென்று 'வறுங்களங் கண்டு வருந்துதல்,' இவற்றைத் தன் துணையாகிய தோழியிடம் உரைத்தல், தோழி, இரவுக்குறி வந்த தலைவனிடம் தலைவி அல்லகுறிப்பட்ட செய்தியைக் கூற, அவன் தலைவி மீது இக்குற்றத்தை ஏற்றிக் கூறியதனைத் தோழி, தலைவியிடம் கூற அவள் 'குறி பிழைத்தது என் தவறு அன்று என்று நொந்துரைத்தல்' (160;1-2, 4-5, 11) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் குறிப்பிடும். இவற்றையே மாறனகப்பொருள் (52;2,4-5, 7,13) பின்பற்றுவதோடு வறுங்களங் கண்டு வருந்திய தலைவி, 'நறுந்துணர் அலர்க்குறி நாட்ட முற்றினைவாள்' (52;6) என்று கூடுதலாக ஒன்றினையும் எடுத்துரைக்கும். இதனையே (52;2,4-5,7,13) இலக்கண விளக்கமும் (519 ; 1-2, 4-5, 11) சுவாமிநாதமும் (101;2-5,8) பின்பற்றுகின்றன.

தலைவி, குறியிடம் சென்று தலைவனைக் காணாது அல்லகுறிப்பட்டு வருந்தித் திரும்பிச் செல்வாள். தலைவன் குறியிடத்து வாராமல் இருக்கமாட்டான் என்பதைத் தலைவி அறிவாளாகையால், குறியிடத்து வந்தவன் தான் வந்து போனமையைத் தலைவி அறிதற்கு ஏதாவது அடையாளம் வைத்துவிட்டுப் போவான். அந்த அடையாளம் காணும் விருப்பால் மறுநாள் சென்று அங்கு தலைவன் வைத்துச் சென்ற

அடையாளத்தைக் கண்டு மனம் கலங்குவாள். பிறகு தலைவனைக் காணும் வேட்கையால் செய்வதறியாது மயக்கத்தோடு வருத்தமுற்றுக் கூறுவதைத் (1053;3-5) தொல்காப்பியம் மொழியும்.

இதனை முத்துவீரியம், அல்ல குறிப்பட்ட தலைவி, தலைவனைக் காண 'காமம் மிக்க கழிபடர் கிளவியால்' கேளாதனவற்றைக் கேட்பனவாகப் புலந்து கூறுதல், இரவில் தலைவன் இடையீடெல்லாம் நீங்கி வந்தாலும் எதிர்ப்படுதல் அரிதென்று 'காப்புச் சிறைமிக்கு வருந்துதல்,' தலைவனை இவ்விடத்து வரக் கண்டிலையோ என்று 'தன்னுள் கையாறெய்தி வினவுதல்,' தலைவனை எதிர்ப்படமாட்டாது வருந்திய தலைவி இரவெல்லாம் என்னைப்போல நீயும் துன்பமுற்றுக் கலங்கித் தெளியவில்லை. இவ்விடத்து உன்னையும் அகன்று சென்றார் அருளவில்லையே எனத் தனது துயரத்தைக் 'கடலொடு சேர்த்துக் கூறலென்று' (848;19-20, 22-23) விரித்துரைக்கும்.

வீழ்ச்சி

தலைவன், பகற்குறி இரவுக்குறி ஆகிய இருவகைக் குறியும் பிழைத்தவிடத்தும்

மனையகம் புகுதற்கு ஒவ்வாத தலைவன், உண்டிக் காலத்தில் விருந்தினனாகத் தலைவி இல்லத்திற்குச் செல்ல அப்போது அவள் தாய் அவனை விருந்தேற்று நீக்கி நிறுத்தற்பகுதியும்

தலைவி, தலைவனை விருந்தினராக வரவழைக்க விரும்பி தோழியைத் தலைவனிடம் சொல்ல வேண்டுமிடத்தும்

தலைவி, தலைவனோடு கூட்டம் பெற்றவழி மகிழும்போதும்

தலைவன் குறியிடம் வருவதற்கு இடையீடாகக் காவலர் திகழ்தலால், அவன் வருதல் அரிதெனத் தோழி, தலைவிக்குக் கூறுதற்கண்ணும்

இருவகைக் குறியிலும் எத்தகைய இடையூறுமில்லாமல் தலைவி, தலைவனொடு கூடி மகிழும்போதும் (1053;1, 6-7, 8, 1057;9, 10, 34) தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் மொழிவன பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

புதிய கூற்றுகள்

பகற்குறி இடையீட்டின்போது தோழி, தலைவியைச் சோலைக்குச் செல்ல வேண்டாம் என்று கூற, 'தலைவி தான் விளையாடிய இடங்களை நோக்கி வருந்திக் கூறுவதை அகப்பொருள் விளக்கம் (156;2-3) மொழியும். இதனையே மாறனகப்பொருள் (48;3), இலக்கண விளக்கம் (515;2-3), சுவாமிநாதம் (98;6) ஆகியனவும் பின்பற்றும்.

இரவுக்குறியில் தலைவனைச் சந்தித்த தலைவி, 'தலைவன் வரும் வழியினது அருமையை நினைந்து இரங்கல்', 'தலைவனை இரவில் வரவேண்டாமென்று குறி விலக்கல்' (158;15,17) ஆகிய கூற்றுகளை அகப்பொருள் விளக்கம் மொழியும். இவ்வாறே மாறனகப்பொருள் (50;15,17), இலக்கண விளக்கம் (517;15,17), சுவாமிநாதம் (100;2-4) ஆகியனவும் உரைக்கின்றன.

இரவுக்குறியில் வந்தொழுகும் தலைவனைக் காணும் பொழுதிற் காணாப் பொழுது பெரிதாகலின் காதல் மிகுதியால் தன் ஆற்றாமையைக் கூறிப் புலம்புவதைத் (18;1) தமிழ்நெறி விளக்கம் எடுத்துரைக்கும்.

இரவுக்குறியில் தலைவி, தலைவனைச் சந்திப்பதற்குரிய பல்வேறு இடையூறுகளாக, தாய் விழித்திருத்தல், தாய் தூங்கியபின் ஊரிலிருக்கும் நாய் தூங்காதிருத்தல், நாய் தூங்கினும் ஊரிலுள்ளார்

தூங்காதிருத்தல், நகரைக் காப்போர் துடியடித்துக் கொண்டு ஊரினைச் சுற்றி வருதல், தலைவன் வருவதற்கு இடையூறாக நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டுதல் ஆகியனவற்றால் சந்திக்க இயலாது வருந்துவதை (161;1-3) அகப்பொருள் விளக்கம் எடுத்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (53;1-4), இலக்கண விளக்கம் (519;12-14), சுவாமிநாதம் (102;1-3) ஆகிய இலக்கண நூல்களும் உரைக்கின்றன.

ஒருவழித்தணத்தல்

தலைவன், களவொழுக்கத்தினை விரும்பி இருவகைக் குறியிலும் சென்று தலைவியோடு கூட்டம் நிகழ்த்தி வர, களவு வெளிப்பட்டு அலராகும். அஃதறிந்த தலைவன், சிலகாலம் அவ்வலரடங்குமாறு கூட்டம் நீங்கித் தன் ஊருக்கு ஒருவழிப் போய் வருகிறேன் என்று கூறிப் போதல் ஒருவழித்தணத்தல் எனப்படும். இத்தகைய சூழலில் தொல்காப்பியத்தில் (1057) தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன ஆறு. அகப்பொருள் விளக்கம் (168), மாறனகப்பொருள் (60), இலக்கண விளக்கம் (525) ஆகிய ஒவ்வொன்றிலும் இரண்டு, முத்துவீரியம் (849) பத்து, சுவாமிநாதம் (105) ஒன்று என இச்சூழலில் தலைவிக்குரிய கூற்றுகள் பிற இலக்கணங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

ஒருவழித்தணந்த தலைவன் வாராது, தனது வரவை நீட்டிக்கும்போது தலைவி வருந்தித் தனது துன்ப நிலையைச் சொல்லி இரங்கும்போது கூற்று நிகழ்த்துவாள். இதனை,

"விட்டு உயிர்த்து அழுங்கினும்"

(தொல்.1057;7)

என்று இயம்பும்.

இதனை அகப்பொருள்விளக்கம், இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவன், தலைவியிடம் 'நின்னைப் பிரியேன்' என்று சூளுரைத்தவன் ஒருவழித்தணத்தலின்போது தன் வரவை நீட்டிக்கத் தலைவி ஆற்றாது தன் 'நெஞ்சொடு புலத்தல்,' 'காமம் மிக்க கழிபடர் கிளவியால்' கூற்று நிகழ்த்தல் (168;4-6) ஆகியனவற்றை எடுத்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருளும் (60;5-7) இலக்கண விளக்கமும் (525;4-6) பின்பற்றுகின்றன. இலக்கண விளக்கம் மொழியும் 'சென்றோன் நீடலிற் காமமிக்க கழிபடர் கிளவியானது' (525;5-6), முத்துவீரியத்தில், தலைவி காமம் மிக்க நிலையில் கடலிடம் என்னை விட்டுப் பிரிந்தவர், மீண்டு வருவதைப் பற்றி உன்னிடம் உரைத்தாரோ என்று வினவல், கடல் பதில் கூறாமையின் நீ இவ்வாறு பதில் கூறாதிருப்பதற்குக் காரணமென்னவென 'கடலொடு புலத்தல்,' என்னை விட்டுப் பிரிந்த தலைவர் அகன்றே விடுவரோ அறியேன், நீ உரைப்பாயாகவென்று 'அன்னமொடு ஆய்ந்து கேட்டல்,' மீண்டும் கடலிடம் அவருடைய பெரிய தேர் போன வழியை, மீளும் வரைக்கும் உனது அலைகளால் அழிக்காதே, என்னுயிருக்குப் பற்றுக்கோடு அதனைத் தவிர வேறில்லையென்று 'கடலுக்குரைத்தல்,' கடற்தெய்வத்தை நோக்கி, தலைவனை இவ்விடத்தே தர வேண்டுமென 'கடலிழைத்து வருந்தல்,' தலைவன் நின்னைப் பிரியேன் என்று கூறிய சூளுரையும் என் மேனியை நோயுற்றார் மேனியாகச் செய்கின்றன, நான் உய்யும் வழி யாதென்று 'சுடரொடு புலம்பல்,' கதிரவன் மறைந்தான், அன்னங்கள் இவ்விடத்தை விட்டு உறங்குமிடத்தை அடைந்தன, இனி யான் எவ்வாறு ஆற்றுவேனென்று 'பொழுது கண்டு மயங்கல்,' பறவைக் கூட்டங்களும் தம் உள்ளத்து நோயை இன்னும் அறியவில்லையென்று 'பறவையொடு வருந்தல்,' சூரியன் மறைந்துவிட்டதால் இவள் எங்ஙனம் ஆற்றுவாளென்று வருந்தித் தாமரைப் பூவானது ஞாயிற்றை நோக்கித்

தன் மலராகிய கைகளால் தலைவன் விரைந்து வரவேண்டுமென்று கூப்பி இரந்து நிற்க அதனைக் கண்டு தலைவி, இது என்மீது அன்புடையதென்று 'பரிவுற்றுரைத்தல்,' உலகமெல்லாம் துயிலுகின்ற நேரத்தில், தான் துயிலாமைக்குரிய காரணத்தைத் தலைவனிடம் கூறாமல் அன்னமானது தன் சேவலொடு துயிலுகின்றது என்று 'அன்னத்தோடு அழிந்து கூறல்' (849;1-6) என்று பலவாக விரித்துரைக்கும். இலக்கண விளக்கத்தைப் (525;4-5) பின்பற்றி, சுவாமிநாதம் 'நெஞ்சொடு புலத்தலை' (105;6) மட்டும் மொழியும். இவ்வாறு பிற அக இலக்கணங்களில் தொல்காப்பியத் தலைவி கூற்று ஒருவழித்தணத்தல் சூழலில் வளர்ச்சி பெற்றுள்ளன.

வீழ்ச்சி

தலைவன் ஒருவழித்தணந்தவிடத்துத் தலைவி ஆற்றாமல் தோழியிடம் கூறுமிடத்தும்

ஒருவழித்தணந்த தலைவன் வருதற்குக் காவலாகிய இடையூறிருப்பதால் அவனும் வருதலைத் தவிர்ப்பான், அப்போது தலைவி, தலைவன் தன்னை அரியனாகச் செய்து கொண்டு என்னை மறந்தான் என்று கூறுமிடத்தும்

ஒருவழித்தணந்த தலைவன் வந்தவிடத்து அலராகுமென்றஞ்சி இகழ்ந்த வழியும்

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு முதலிய கூட்டங்களில் தலைவன் தெளிவித்த மொழியைப் பொய்த்துவிட்டான் என்று கூறி வருந்தும்போதும்

தலைவன் வருவதற்கு இடையீடாக இருக்க, அதனால் அவன் வாராது பொய்த்துவிடுவானோ என்ற அச்சம் மிக்குழியும் (1057;6-8) தலைவி கூற்று நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில்

மட்டுமே கூறப்பட்டுள்ளன. இவை பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

வரைவு வேட்கை

இருவகைக் குறியிலும் தலைவனைக் கூடி மகிழ்ந்த தலைவி, ஊரில் எழுந்த அலரை எண்ணித் துயருறுவாள். தலைவனைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற வேட்கையுடையவளாகக் காணப்படுவாள். இவ்வேட்கையானது களவில், தலைவன் இரவுக்குறியிடத்து வரும் நிலையில் பொழுதும் ஆறும் இன்னாமை கூறியும் களவினைச் செவிலித்தாய் அறிந்தாளென்றும் தன்னை இற்செறித்த நிலையிலும் வெறியாட்டெடுக்குமிடத்தும் வேற்று வரைவின்போதும் தோழியைக் கொண்டு வரைவுகடாவச் சொல்லுமிடத்தும் தோழியிடத்து அறத்தொடு நிற்கும்போதும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் வாராது வரைவு நீட்டிக்குமிடத்தும் எனப் பல்வேறு சூழல்களில் தலைவி கூற்று நிகழ்த்துவாள்.

பொழுதும் வழியருமையும் மொழிதல்

தலைவன் தன்னைச் சந்திப்பதற்குப் பொழுதும் ஆறும் அச்சம் தரக்கூடியதாக இருப்பதை எண்ணித் தன்னை விரைவில் வரைந்துகொள்ள வேண்டுமென்ற வேட்கையுடையவளாகத் தலைவி காணப்படுவாள். அப்பொழுது தோழியிடம் கூறி, தலைவனை வரைவுகடாவும்படிக் கூறுவாள். இத்தகைய சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்று தொல்காப்பியத்தில் (1057) ஒன்று. அகப்பொருள் விளக்கம் (164) பன்னிரண்டு, களவியற்காரிகை (உ.64,65,70,71) நான்கு, மாறனகப்பொருள் (56), இலக்கண விளக்கம் (521), சுவாமிநாதம் (102,103) ஒவ்வொன்றிலும் முறையே பன்னிரண்டு எனப் பிற அக இலக்கணங்கள் இச்சூழலில் கூற்றுகளை வரையறுத்துள்ளன.

வளர்ச்சி

தலைவன் இரவுக்குறியில் வருங்கால் காலமும் இடமும் கொடுமை உடையனவாய் விளங்குவதை அறிந்து தான் துன்புற்று மனமழிந்து வருந்தும்போது கூற்று நிகழ்த்துவதை,

"பொழுதும் ஆறும் புரைவது அன்மையின்
அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்"

(தொல்.1057;31-32)

என்று இயம்பும். இக்கூற்று அகப்பொருள் விளக்கத்தில் தலைவி, தோழியிடம் தலைவன் தன்னைச் சந்திக்க வருதல் அருமையுடையதாகும் என்றல், அவனது ஊருக்குப் போக மனம் துணிதல், அப்போது தோழி, தலைவனது இயல்பைப் பழித்துக்கூற இயற்பட மொழிதல், தலைவன் கனவில் வந்து கூடியது போன்று கனவு கண்ட தலைவி, கண் விழித்த பின்பு பொய்யாய்ப் போன துன்பத்தைத் தோழியிடம் கூறல், பிரிவுத் துன்பத்தால் தன் 'கவினழிவுரைத்தல்,' தோழியிடம் தனது துயரத்தைத் தலைவனுக்கு உரைக்க வேண்டல், ஊரார் கூறும் பழிமொழியைக் கண்டஞ்சிய தன் அச்சத்தைத் தோழியிடம் உரைத்தல், தலைவன் இரவுக்குறியில் வருமிடத்து வழியருமையை எண்ணி அச்சம் கொள்ளல், தலைவனைக் காணும் வேட்கை விருப்பத்தால் கூற்று நிகழ்த்துதல், தலைவி ஆற்றாத நிலையில் தனது துயரத்தைப் பிற பொருளின்மீது ஏற்றியுரைத்தல், தோழியிடம் தலைவன் வரும் வழியை விலக்கென்றல், அவன் வரும் இரவுக்குறியை விலக்கென்றல் (164;3-8, 10-14) என்று விரித்துரைக்கும். இதனைப் (164;12-13) பின்பற்றிக் களவியற்காரிகை காம மிக்கக் 'கழிபடர் கிளவியால்' கூறல்[36] 'தன்னுட் கையாறெய்தி உரைத்தல்'[37] என்றும் இவ்வாறு வேட்கை மிகவால் வருந்திய தலைவி காப்பு மிகுதியால் கையற்றுக் கலங்கல்,[38] தலைவனை எதிர்ப்படமாட்டாது வருந்திய

தலைவி கடலிடம் நீ இன்னும் கலங்கித் தெளியவில்லை, உன்னை அணைந்து சென்றவர் உளரோவென்று தலைவி தான் பட்ட துயரத்தைக் 'கடலுடன் கூறல்'[39] என விரித்துரைக்கும். இதனையும் (உ.64,70) அகப்பொருள் விளக்கக் (164;3-8, 10-11, 14) கூற்றுகளையும் அடியொற்றி மாறனகப்பொருள் (56;3-4, 6-8, 10-14), இலக்கண விளக்கம் (521;3-8, 10-14), சுவாமிநாதம் (102;6-8, 103;1-4) ஆகிய இலக்கணங்களும் கூறியுள்ளன. இவ்வாறு பொழுதும் ஆறும் இன்னாமைச் சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

செவிலி அறிந்தமை

செவிலி, தனது களவொழுக்கத்தை அறிந்தவிடத்துத் தலைவி கூற்று நிகழ்த்துதல் உண்டு. இச்சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1057) கூறுவது ஒன்று. பிற அக இலக்கணங்களான அகப்பொருள் விளக்கம் (164), மாறனகப்பொருள் (56), இலக்கண விளக்கம் (521), சுவாமிநாதம் (102) ஆகிய ஒவ்வொன்றிலும் முறையே ஒரு கூற்று என வரையறுக்கப்பட்டுள்ளது.

மாற்றமின்மை

தலைவியின் மேனி வேறுபாடு கண்டோ, அலர் அறிந்தோ செயல் மாறுபாடுகளைக் கண்டோ செவிலி களவினை அறியுமிடத்துத் தலைவிபால் கூற்றுத் தோன்றுவதைத் தொல்காப்பியம்,

"களவு அறிவுரினும்"

(தொல்.1057;25)

என்று சுட்டும். இதனையே அகப்பொருள் விளக்கமானது, தலைவியின் துன்பத்தைக் கண்டு தோழி வினவ, அவள் தனது களவொழுக்கத்தைச் செவிலித்தாய் அறிந்தமையைக் கூறுவதாக (164;1-2) மொழியும்.

இவ்வாறே மாறனகப்பொருள் (56;2), இலக்கண விளக்கம் (521;1-2), சுவாமிநாதம் (102;5-6) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

இற்செறிப்பு

தலைவியின் களவு நடவடிக்கைகளைப் பற்றிச் செவிலித்தாய் முதலானோர் மனதில் ஐயம் ஏற்படும்போது அவளை இற்செறிப்பர். ஈ.கோ.பாஸ்கரதாஸ், "தலைவி வெளியே செல்லுதலையும், அவள் போக்கில் தோன்றியுள்ள சிறு மாறுதல்களையும் தாய் முதலியோர் அறிந்தனர். எனவே, தாய், செவிலி முதலானோர் அவளை வெளியில் விடாது, வீட்டினுள் காவல் காக்கத் தொடங்கினர். வீட்டினுள் வைத்துக் காவல் காத்தல் 'இற்செறித்தல்' எனப்படும். இல்லத்தின்கண் தலைவியைப் பாதுகாத்தலே இற்செறித்தல் ஆகும்"[40] என்பர். இத்தகைய சூழலில் தொல்காப்பியத்தில் (1057) தலைவிக்குரியனவாகக் கூறப்படும் கூற்றுகள் நான்கு. பிற அக இலக்கணங்களான இறையனாரகப் பொருளில் (சூ.30) நான்கு, தமிழ்நெறி விளக்கத்தில் (19) ஒன்று என இச்சூழலில் தலைவி கூற்றுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

வளர்ச்சி

காப்பு மிகுதியால் படும் துன்பத்தைத் தோழியிடம் கூறாமல் தானே தனித்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் (1057;14) இயம்பும். இதனை இறையனாரகப்பொருள் (சூ.30) தலைவி, தலைவனைக் காணும் வேட்கை விருப்பத்தால் காணும் பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலின் அஃறிணைப் பொருள்களிடம் தன் உள்ள வேட்கையை ஆற்றாமை மீதூர வெளிப்படுத்தல்,[41] தலைவி, காப்பு மிகுதியால் கையற்றுக் கலங்கல்,[42] தலைவன், இரவுக்குறியில் வரும் வழியானது அச்சத்தன்மை வாய்ந்தது என்றெண்ணி வருந்தல்,[43]

தலைவி ஆற்றாத நிலையில் ‘எம்போல்வார் உளரோ’ என்று பிற பொருளின்மீது ஏற்றியுரைத்தல்[44] ஆகியனவற்றை எடுத்துரைக்கும். இவ்வுரையைப் பின்பற்றித் தமிழ்நெறி விளக்கம் ‘காப்பிடை யீட்டிற் கையறு கிளவி’ (19;2) என மொழியும்.

வீழ்ச்சி

மேனி வேறுபாடு கண்டோ, அலர் முதலிய காரணத்தாலோ தமர் தன்னை இற்செறித்த நிலையிலும் அந்நிலையில் தலைவனைக் காணப்பெறாது கலங்கி, நினைத்து இன்புறுதற்குரிய அரிய மறைப்பொருளைத் தோழிக்குச் சொல்லுமிடத்தும் இற்செறிப்பால் தான் குறியிடம் சேர முடியாமையால் தலைவன் குறியிடத்து வந்து தன்னைக் காணாது சென்றபின், தமக்குப் பயன்படாத வறுங்களத்தை நினைந்து இற்செறிப்பால் வரமுடியாதென்பதை முன்னரே தலைவற்குக் கூறாத தவறு தனதென்று தெளிந்து தோழியிடம் கூற்று நிகழ்த்துமிடத்தும் (1057;26, 12-13, 27-29) கூற்று நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

வெறியாட்டு

தலைவியின் மேனி வேறுபாட்டினை அறிந்த செவிலி வெறியாடுகளம் அமைத்து, வேலனை அழைத்து, தலைவிக்கு உற்றநோய் இன்னதெனச் சொல்லும்படிக் கேட்க, அவன் வெறியாடி அவளுக்குற்ற நோயைக் கூறுதலுண்டு. ஈ.கோ.பாஸ்கரதாஸ், “தன் காதலனைக் காண வேண்டும் என்னும் ஏக்கமும், காண இயலுமோ என்னும் ஐயமும் தலைவியின் மன நோய்க்குக் காரணமாயின. அத்தகைய மனநோயினை ‘வெறி’ என்னும் பெயரால், அகப்பொருள் இலக்கண நூல்கள் குறிப்பிடும். வேலைக் கையில் கொண்டு வெறியாடுவோன் ‘வேலன்’

எனப்படுவான். வெறியாடலாவது மனநோயினை அறியும் முயற்சியேயாகும். வேலனுக்கு ஆவேசம் தோன்றி 'வாக்குச்' சொல்லுவான். இந்த ஆவேசத்தையும் 'வெறி' என ஒரு சாரார் குறிப்பர்"[45] என்பர். இச்சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்று தொல்காப்பியத்தில் (1057) ஒன்று. பிற அக இலக்கணங்களான தமிழ்நெறி விளக்கத்தில் (22) மூன்று, வீரசோழியம் (குறிஞ்.நடை.) அகப்பொருள் விளக்கம் (164) ஒவ்வொன்றிலும் ஒன்று, களவியற்காரிகையில் (47) இரண்டு, மாறனகப்பொருள் (56), இலக்கண விளக்கம் (521) ஒவ்வொன்றிலும் ஒன்று, முத்துவீரியத்தில் (852) இரண்டு, சுவாமிநாதத்தில் (103) ஒன்று என வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவியை இற்செறித்தவழி அவளது மேனி வேறுபடும். அவ்வேறுபாட்டினைக் கண்ட செவிலி, இது எதனால் ஆயிற்று என வேலனை வினவி, வெறியாட்டெடுக்க முற்படுவாள். அச்சமயத்தில் தலைவி அஞ்சும் அச்சத்தின்கண் கூற்று நிகழ்த்துவாள். இதனை,

"வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்"

(தொல்.1057;23)

என்று இயம்பும்.

இதனைத் தமிழ்நெறிவிளக்கம் செவிலித்தாய், வெறியாட்டெடுப்பக் கண்டு தலைவி ஆற்றாளாய் இரங்குதல், அந்நிலையில் தோழி, தலைவியிடம் அறத்தொடு நிற்க வினவிய வழி, அவள் களவொழுக்கத்தை உணர்த்திப் பின் இல்லறம் நடத்துவதைவிட, செவிலிக்கு உணர்த்தாது தலைவன் பிரிவினால் ஏற்பட்ட நோயினால் என்னுயிரை இப்போதே நீக்கத் துணிந்துள்ளேன் என்றல், இந்நிலையில் தலைவி, தோழியிடம் என் காம நோயானது மிகுந்த நிலையில் ஆற்றாது

அறத்தொடு நிற்க வேண்டல் (22;5-7) ஆகிய கூற்றுகளை இயம்பும். இதனைப் (22;5) பின்பற்றி, வீரசோழியம் 'ஒண்ணுதல் அழுங்கலை' (குறிஞ்.நடை ;64) மொழியும். தலைவி தோழியைக் கொண்டு வெறியினை விலக்குவிப்பதை அகப்பொருள் விளக்கம் (164;15) சுட்டும். வீரசோழியத்தை (குறிஞ்.நடை;64) அடியொற்றிக் களவியற்காரிகை 'வெறியினுக்கு அழிதல்' (47;1-2), இவ்வாறு இரங்கிய தலைவி, நாணைத் துறந்தும் தோழியைக் கொண்டு வெறி விலக்குவிக்க நினைத்தல் (47;2) என்பனவற்றை எடுத்துரைக்கும். அகப்பொருள் விளக்கத்தை (164;15), மாறனகப்பொருளும் (56;14) இலக்கண விளக்கமும் (521;15) பின்பற்றும். களவியற்காரிகையைத் (47;1-2) தழுவி, முத்துவீரியம் 'இன்னலெய்தல்,' 'விலக்க நினைத்தல்' (852;13-14) என்று குறிப்பிடும். இலக்கண விளக்கத்தை (521;15) அடியொற்றி சுவாமிநாதம் (103;4) மொழியும். இவ்வாறு தொல்காப்பியத்தில் வெறியாட்டுச் சூழலில் கூறப்பட்ட கூற்றுகள் பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

வேற்று வரைவு

தலைவியை அவளது தமர் வேற்றவருக்குத் திருமணம் செய்து கொடுக்க முற்படுவர். இந்நிலையில் தொல்காப்பியம் (1057) தலைவி நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினை இயம்பும். பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (164), மாறனகப்பொருள் (56), இலக்கண விளக்கம் (521), சுவாமிநாதம் (103) ஆகிய ஒவ்வொன்றும் இரண்டிரண்டு கூற்றுகளை வரையறுத்துள்ளன.

வளர்ச்சி

தலைவி, தன்னை நொதுமலர் வரையக் கருதின், உயிர் செல்லுமாறு துன்பம் பயத்தலால் அத்துன்பம் நீக்க வேண்டித்

தோழியிடம் கூற்று நிகழ்த்துவதைத் (1057;14-15) தொல்காப்பியம் சுட்டும்.

இக்கூற்றை அகப்பொருள் விளக்கமானது தலைவி, தோழியிடம் தன்னைப் பிறர் வரைய வருகின்றமையைக் கூறி, அவரது வரைவை விலக்க வேண்டுதல், தோழியிடம் தலைவனது வரைவை ஏற்றுக் கொள்ளும்படிக் குரவர்க்குச் சொல்லென்று கூறல் (164;15-16) என விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (56;14-15), இலக்கண விளக்கம் (521;15-16), சுவாமிநாதம் (103;5-6) ஆகியனவும் உரைக்கின்றன.

தோழியை வரைவுகடாவச் செய்தல்

தலைவி, தலைவனை வரைந்துகொள்ள வேண்டுமென்ற வேட்கை உடையவளாகக் காணப்படுவாள். தோழியைக் கொண்டு தலைவனிடம் வரைவுகடாவச் செய்வாள். இச்சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1053, 1057) நான்கினை மொழியும். தமிழ்நெறி விளக்கம் (22) ஒன்று, வீரசோழியம் (குறிஞ்.நடை.) இரண்டு, முத்துவீரியம் (851) ஒன்று எனப் பிற அக இலக்கணங்களில் இவளது கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவனின் தமர் வரைவொடு வந்தபோது கூற்று நிகழ்த்துவதை,

"வரைவு தலைவரினும்"

(தொல்.1057;25)

என்று இயம்பும். இதனைத் தமிழ்நெறிவிளக்கம், தலைவி தலைவனுக்குத் தம் உறவினர் தன்னை மணம் செய்து கொடுக்க மறுத்தவழி ஆற்றாதவளாய்த் திகழ்வாளென்று (22;10) மொழியும். இதனைப் பின்பற்றி வீரசோழியம் 'கரைந்ததற்கிரங்கல்'

(குறிஞ்.நடை;72) என்றும் இவ்வாறு வருந்திய தலைவி, தன் தமர் வரைவு மறுக்காதவாறு தோழியை அறத்தொடு நிற்க வேண்டல் (குறிஞ்.நடை;73) என்றும் விரித்துரைக்கும்.

தலைவன் வரைவுடம்படாமையால் தோழி தலைவனொடு புலந்து கூறக் கேட்டு தலைவி தலைவனிடம் கடத்தற்கரிய வழியில் வந்தவாறு எப்படியென்று வினவும்போது அதற்கு அவர் இருள் சூழ்ந்த வழி என்று கூறினால் நாம் செல்லுதல் அரிது, தலைவனுடன் சென்றால் அவ்வாறு சொல்லுதல் இயலாதென்று தான் செல்லுதலை நினைத்துக் கூறுவதை (851;11) முத்துவீரியம் குறிப்பிடும்.

வீழ்ச்சி

தோழி, தலைவனை வரைவுகடாதற் பொருட்டு அவனை இயற்பழித்தவழி அவனது இயல்பு தோன்றத் தலைவி மொழியுமிடத்தும் தலைவனுக்குத் தலைவியின் தமர் வரைவுடம்பட்டதனைத் தலைவி விரும்பிக் கூறுமிடத்தும் தலைவன் வரைவிற்குப் புறத்ததாகிய நொதுமலர் வரைவின்கண் தலைவி தன்னுயர்ச்சிக்கு ஏற்ப மறுத்துத் தலைவன் வரையுமாறு நீ கூறெனத் தோழியிடம் கூறும்போதும் (1053;11-14) கூற்று நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன; பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

அறத்தொடு நிற்றல்

தலைவி, தன்னை இற்செறித்துக் காவல் மிகுந்த நிலையில் கலங்கித் தம் எண்ணத்திற்கு இடையூறு ஏற்படுமென்று மனம் நோவாள். இந்நிலையில் தோழிக்குத் தன் உள்ளக் கருத்தைக் கூறித் தலைவி அறத்தொடு நிற்பாள். இதனை,

"மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித்தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்"

(தொல்.1057;12-13)

என்பது உணர்த்தும். இதில் உள்ள 'நினைத்தல் சான்ற அருமறை' என்பதற்கு ஈ.கோ.பாஸ்கரதாஸ், " 'அருமறை உயிர்த்தல்' என்னும் தொடர் அறத்தொடு நிற்றலைக் குறிப்பதாகும். எண்ணி எண்ணிப் பார்த்து, மறைபொருளைச் சொல்லிவிட வேண்டும் என்ற நிலை ஏற்படுகையில் தலைவி, தன் உள்ளக் குறிப்பை வெளிப்பட்டமையின் 'நினைத்தல் சான்ற அருமறை' யாயிற்று"[46] என்பர். புலவர் குழந்தை, "அறத்தொடு நிலையாவது - தான் கொண்ட ஒழுக்கத்தின்கண் நிற்றல், அறம் - ஒழுக்கம். அதாவது, களவொழுக்கம் முதிர்ந்து கற்பொழுக்கம் ஒழுகுதல். நிலை - அதில் நிலைபெற எண்ணுதல். கற்பொழுக்கத்தின்கண் நிற்றலை வெளியிடுதலாம். தலைவனையே மணந்து கொள்கிறேன் என்னும் தன் கருத்தைத் தலைவி கூறுதலென்க"[47] என்று குறிப்பிடுவர். இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (1058) தலைவி மொழியும் கூற்றாக ஒன்றை மொழியும். தமிழ்நெறி விளக்கம் (22), வீரசோழியம் (குறிஞ்.நடை..) ஒவ்வொன்றிலும் முறையே ஒன்று, அகப்பொருள் விளக்கம் (176) ஏழு, களவியற்காரிகை (47) ஒன்று, மாறனகப்பொருள் (72), இலக்கண விளக்கம் (533) ஒவ்வொன்றிலும் ஏழு, முத்துவீரியம் (852) இரண்டு, சுவாமிநாதம் (109) ஏழு எனப் பிற அக இலக்கணங்களில் கூற்றுகள் வகுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவி, தோழியிடம் தனது களவொழுக்கத்தினைச் செவிலியிடம் கூற வேண்டுவதைத் (1058;3) தொல்காப்பியம் சுட்டும்.

இதனைத் தமிழ்நெறி விளக்கமானது, தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலென்று (22;1-2) மொழியும். இவ்வாறு தன்து களவொழுக்கத்தைத் தோழியிடம் எடுத்துரைத்து செவிலியிடம் கூற வேண்டுவதை வீரசோழியம் (குறிஞ்.நடை ; 65) கூறும். தலைவியின் துன்பத்தை ஆற்றிச் செயலற்ற தோழி, அவளது கண்ணீரைத் துடைத்துழி, தலைவி அழுததற்கான காரணத்தைக் கூறுதல், தலைவன், களவொழுக்கத்தின்போது 'நின்னைப் பிரியேன்' என்று தெய்வத்தின்மீது சூளுற்றுக் கூறியதை மெய்யென்று தெளிந்து அதனைத் தோழிக்குக் கூறல், இவ்வாறு சூளுற்றவன் என்னை விட்டுப் பிரிந்தான் என்றல், இவ்வாறு கூறியதும் தோழி, தலைவனைப் பழித்துக் கூற, தலைவி 'இயற்பட மொழிதல்,' முன்பு சூளுறவு செய்த தலைவன் இப்போது பிரிந்து சென்றான், தெய்வமும் கொடுந்தெய்வமாதலால் சீறாதபடி, 'அவர் எங்கட்குக் குற்றம் செய்தார் அல்லர், நீ பொறுத்துக்கொள்' என்று வேண்டிக்கோடற்கு இருவரும் போவோம் என்றுரைத்தல், தனது மேனி வேறுபாடு, ஊரார் அலர் தூற்றல் இவற்றால் நற்றாய் தன்னை 'இல்வயிற் செறித்ததைக்' கூறல், செவிலி செறிந்த இருட்குறியிடத்துத் தலைவன் வரக் கண்டாள் என்று தனது களவொழுக்கத்தைத் தோழியிடம் எடுத்துரைத்தல் (176;1-8) என்பனவற்றை அகப்பொருள் விளக்கம் விரிவாக எடுத்துரைக்கும். தமிழ்நெறி விளக்கத்தைப் (22;1-2) பின்பற்றிக் களவியற் காரிகை 'தலைவி அறத்தொடு நிற்றலை' (47;2-3) இயம்பும். அகப்பொருள் விளக்கத்தை (176;1-8) அடியொற்றி மாறனகப்பொருளும் (72;2-8) இலக்கண விளக்கமும் (533;1-8) மொழியும். இதனைத் (533 ; 1-2) தழுவி முத்துவீரியம் 'நிலைமை உரைத்தலை'யும் (852;14) களவியற்காரிகையைத் (47;2-3) தழுவி 'அறத்தொடு நிற்றலையும்' (852;15) எடுத்துரைக்கும். இந்நூலையும் (852;14) இலக்கண விளக்கத்தையும் (533;2-8) அடியொற்றி

சுவாமிநாதம் (109;2-6) விளம்பும். இவ்வாறு அறத்தொடு நிற்றல் சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

வரைவிடைப் பிரிவு

தலைவன், தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிப் பொருள் காரணமாகப் பிரிந்து செல்வான். இவ்வாறு பிரிந்து சென்ற தலைவன் வரைவினை நீட்டிக்க, தலைவி ஆற்றாது வருந்துவாள். இச்சூழல் வரைவிடைப் பிரிவு எனப்படும். இத்தகைய வரைவிடைப் பிரிவில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகள் தொல்காப்பியத்தில் (1053, 1057, 1058, 1059) ஒன்பது. இறையனாரகப்பொருள் (சூ.25) உரை இரண்டு, அகப்பொருள் விளக்கம் (170) ஆறு, களவியற்காரிகை (49, 50) இரண்டு, மாறனகப்பொருள் (62) ஏழு, இலக்கண விளக்கம் (527) ஆறு, முத்துவீரியம் (852) ஆறு, சுவாமிநாதம் (106, 107) ஆறு எனப் பிற அக இலக்கணங்கள் தலைவி கூற்றுகளை வகுக்கும்.

மாற்றமின்மை

தலைவன், பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைவியின் ஆற்றாமையுணர்ந்த தோழி, தலைவியை ஆற்றுவிக்க வேண்டித் தலைவனை இயற்பழிப்பாள். அப்போது தலைவி அவனது இயல்பு தோன்றக் கூறுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதை,

"வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்"

(தொல்.1057;30)

என்று இயம்பும். இதனையே இறையனாரகப்பொருள் (சூ.25) உரை 'இயற்பட மொழிதல்'[48] என்றும் களவியற்காரிகை 'இயற்படவே விளம்பல்' (50;2) என்றும் எடுத்துரைக்கும்.

வளர்ச்சி

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியும் காலத்துத் தலைவி ஆற்றாமல் வருத்தமுறும்போது கூற்று நிகழ்த்துவதைத் (1058;1) தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனை, தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைவி வருந்த, இவ்வாறு ஆற்றாதிருத்தல் தகாதென்ற தோழியிடம் அவரது பிரிவிற்காக வருந்தவில்லை; அவர் சென்ற காட்டின் தன்மையை நினைத்து வருந்துகின்றேன்; அயலார் இதனை வேறுபட உணர்ந்தார் என்று 'தலைவி ஊரவர் தன்மை கூறுதலை'[49] இறையனாரகப்பொருள் (சூ.25) உரை மொழியும். தலைவனது பிரிவைத் தோழியால் கூறக்கேட்ட 'பூங்குழை இரங்கல்,' இதனையறிந்த தோழி, இவ்வாறு வருந்துவது என்னவென்று கழறிக்கூற, தலைவி மனத்தினால் நொந்து கொடுஞ்சொற் சொல்லல், தலைவன் கூறிச் சென்ற பருவம் வந்தும் வாராதிருத்தலால் 'பருவங் கண்டு பெருமகள் புலம்பல்,' அவளது புலம்பலைத் தேற்றக் கருதி, இம்மேகமானது கார்காலத்தில் வந்த மேகமன்றென்று மறுத்துக் கூற, இது கார்காலமேயென்று 'மறுத்தல்,' அப்போது தோழி, தலைவன் தான் வருகின்ற செய்தியைத் தெரிவிப்பதற்கு அனுப்பிய தூதாக இக்கார்காலம் வந்ததென்று கூற 'பிணைவிழி ஆற்றலென்று' (170; 5-6,8-9,11) அகப்பொருள் விளக்கம் கூற்றுகளை விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (62;5-7, 9-10, 14) பின்பற்றுவதோடு தலைவி கார்காலமென்று மறுத்துரைத்து 'வன்பொறை எதிரழிவாளென்று (62;11) கூடுதலாக ஒன்றினை இயம்பும். இதனைத் தழுவி (62;5-7, 9-10, 14) இலக்கண விளக்கம் (527;5-6, 8-9, 11) மொழியும். முத்துவீரியம், தலைவனது பிரிவால் ஆற்றாதிருந்த தலைவி, தனது நெஞ்சிடம் குற்றம் தீர்ந்த ஒழுக்கத்துப் பிரிந்த இப்பிரிவை, நம்மைக் கெடுக்குமென்று நீ கருதினால்

நமக்கின்புற்று வாழும் நெறி வேறுளதோவெனத் தலைவி நெஞ்சின் வருத்தம் தீர 'நெஞ்சொடு கூறல்,' அன்று என்னை விட்டு அவரது தேர்ப்பின் சென்ற நெஞ்சம், இன்றும் அவ்வாறு செய்யாது என்னை வருத்துகின்றது என்று 'நெஞ்சொடு வருந்துதல்,' தோழி, தலைவியிடம் நின் வேறுபாடு கண்டு அயலோர் ஐயுறுவராதலால் நீ ஆற்றவேண்டுமென்று கூற அதற்குத் தலைவி, தலைவன் வரைவு நீடுதலால் தனக்கோர் பற்றுக்கோடின்றி வருந்துகின்ற எனக்கு அவன் வரைவு மிக இனிது என்று தனக்குள் ஆற்றாது, தனது மன வலிமை இழந்து 'வன்புறையழிந்து கூறல்,' தோழி, தலைவன் கூறிச் சென்றபடி வருவான் என்பதைக் கேட்ட தலைவி, நான் ஆற்றியிருந்தாலும் என் நெஞ்சமானது என்வயின் நிற்காமலிருக்கக் காரணம் நான் முன் செய்த தீவினையோவென்று 'அன்னவன் மெய்யுரை தேறாது புலம்பல்,' தூது வரவு உரைப்பக் கேட்ட தலைவி, காதலர் தூது இன்று வந்திருப்பது என்செயக் கருதியென்று அறிகின்றிலேனென்று 'தூது கண்டழுங்கல்' (852;4-9) ஆகிய கூற்றுகளை விரித்துரைக்கும். இலக்கண விளக்கத்தைச் (527;5-6, 8-9, 11) சுவாமிநாதம் (106;5-6, 8, 107;1-2) பின்பற்றும்.

வீழ்ச்சி

தலைவி வரைவிடைப் பிரிந்த காலத்தில்,

தலைவனைப் பிரிந்தமையால் அவன்மீது அன்பு மிகுந்து காணப்படினும் தலைவன் பிரிவால் வருந்திய தலைவியை ஆற்றுவிக்கும் பொருட்டுத் தோழி, அவள் கண்ணீரைத் துடைக்கும்போதும் வரைவு நீட்டித்த தலைவன், வரையாத நாளில் செவிலி முதலானோரை எதிர்ப்படினும் தலைவன், வரைவு நீட்டித்தானாயினும் தலைவன்பால் அன்புமிகுந்து தோன்றும்போதும் தலைவன் பொருள்வயிற் பிரியும் பிரிவின்கண்ணும் (1057;33, 22, 1058;2, 1057;33, 1053;9) உயிரினும் நாணம் சிறந்தது. அதனினும்

குற்றம் தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது என முன்னோர் கூறிய கூற்றை உட்கொண்டு தலைவன் உள்ள இடத்திற்குச் செல்லும்போதும் தலைவி, தலைவன் உள்ள இடத்திற்குத் தான் செல்லும் மனவலிமையின்றிச் 'செல்வாம்' என்னும் வருத்தமில்லாச் சொல்லைக் கூறுமிடத்தும் *(1059;1-5)* கூற்றுகள் நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

பொருள்வயிற் பிரிந்த தலைவனது தேரிலுள்ள வலம்புரிச் சங்கு ஒலிக்க வருவதையறிந்து தலைவி வாழ்த்துவதை அகப்பொருள் விளக்கம் *(170;16)* மொழியும். தோழி, தலைவிக்குத் தேர் வரவு கூற, மணமுரசு கேட்டு இல்லோர் மனையை அலங்கரிக்க, தலைவி இந்நகரின்கண் முழங்கிய முரசம் யாவருக்கோ அறிகின்றிலேன் எனக் கலக்கமுறுவதைக் களவியற்காரிகை *(49;1)* எடுத்தியம்பும். அகப்பொருள் விளக்கத்திலிருந்து *(170;16)* சிறிது மாறுபட்டு மாறனகப்பொருள் 'கிளையொடும் அதனைக் கிளிமொழி வாழ்த்தல்' *(62;18)* என்று மொழியும். அகப்பொருள் விளக்கத்தைத் *(170;16)* தழுவி இலக்கண விளக்கமும் *(527;16)*, களவியற்காரிகையை *(49;1)* அடியொற்றி முத்துவீரியம் 'ஐயுற்றுக் கலங்கலையும்' *(852;20)* இயம்பும். இலக்கண விளக்கத்தைப் *(527;16)* பின்பற்றி சுவாமிநாதம் *(107;5)* மொழியும்.

உடன்போக்கு

தலைவி தோழி ஆகிய இருவரது உடன்பாட்டுடன் தலைவன், தலைவியைத் தன்னூருக்கு அழைத்துச் செல்லுதல் உடன்போக்கு எனப்படும். புலவர் குழந்தை, "தலைவியின் பெற்றோர், தலைவியைக்

குறியிடம் செல்லவிடாமல் இற்செறித்துத் தம் காதலன்புக் கிடையூறு செய்யின், தலைவி தோழி இவர்களின் உடன்பாட்டுடன் தலைவன் தலைவியைத் தன்னூர்க் கழைத்துச் செல்வான். இது, கொண்டுதலைக் கழிதல் எனப்படும்[50] என்பர். இச்சூழலில் தொல்காப்பியம் (1053) தலைவி நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினை இயம்பும். இறையனாரகப்பொருள் (சூ.23) உரை, தமிழ்நெறி விளக்கம் (20) ஒவ்வொன்றிலும் ஒன்று, வீரசோழியம் (பாலை நடையியல்) இரண்டு, அகப்பொருள் விளக்கம் (182) மூன்று, களவியற்காரிகை (உ.81) ஒன்று, மாறனகப்பொருள் (80), இலக்கண விளக்கம் (536) ஒவ்வொன்றிலும் மூன்று, முத்துவீரியம் (850) இரண்டு, சுவாமிநாதம் (111) மூன்று என இச்சூழலில் தலைவிக்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவன், தலைவியை வரைந்து கொள்ள இயலாத நிலையில் உடன்போக்குச் செல்ல முற்படுவான். அப்போது தலைவியின் நாணம், அவள் நெஞ்சினை வருத்துதலின், அவள் அதனைக் கைவிடுதலின்போது கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

‘நாணுநெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும்”

(தொல்.1053;10)

என்று குறிப்பிடும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது, தோழி தலைவியிடம் உடன்போக்கு நயப்பித்தவழி அவள், ஒரு நாளும் தன்னை விட்டு நீங்காத நாணமானது தலைவன் மீது வைத்த விருப்பம் இடையே புகுந்து தள்ள ‘நாணிழந்து வருந்துவதை’[51] இயம்பும். இதனைத் தமிழ்நெறி விளக்கம், ‘விரும்பின னேர்ந்த பாவக்கிளவி’ (20;5) என்றும் வீரசோழியம், ‘மடவோள் தன்திற மாண்புற நோக்கல்’ (பாலை

நடை;4) என்றும் கூறும். இதனை அடியொற்றி அகப்பொருள் விளக்கமானது, 'தலைவி நாணழிபிரங்கல்' (182;4-5), நாணழிந்து வருந்திய தலைவியிடம் தோழி, கற்பின் மேன்மையைக் கூற, நாணத்தைக் கைவிட்டு உடன்போக்குச் செல்ல 'ஒருப்பட்டெழுதல்,' அப்போது தோழி, தலைவியிடம் காட்டு வழியின் இயல்பைக் கூற, தலைவி யான் செல்லும் சுரமானது சொல்லில் கொடியவளாகிய நம் அன்னையைப் போல்வார் சூழ்ந்திருக்கும் இல்லினும் கொடியதோ என்றுரைத்தல் (182;6-8) ஆகியனவற்றை விரித்துரைக்கும். இதனைத் (182;4-5) தழுவிக் களவியற்காரிகை தோழி, தலைவியிடம் உடன்போக்கு நயப்பிக்க நாணழிந்து வருந்துவதைக் கூறும் 'செலவுடன் படுத்தலை'[52] மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் (182;6-8) அடியொற்றி, மாறனகப்பொருளும் (80;4-5, 7-8) இலக்கண விளக்கமும் (536;4-8) அமைகின்றன. முத்துவீரியம், தோழியின் மூலம் தலைவன் தன்னை உடன்கொண்டு போகவுள்ளான் என்பதைக் கேட்ட தலைவி, நீரில்லாத சுரவழியில் உடன்கொண்டு போகக் காரணமென்னவென்று அவனது 'துணிவு கேட்டல்' (850;10), இலக்கண விளக்கத்தைத் (536;4-5) தழுவித் தனது 'நாணத்தைவிடல்' (850;11) ஆகியனவற்றை மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (536;6-8) அடியொற்றி சுவாமிநாதம் (111;5-6) இயம்பும். இவ்வாறு பிற அக இலக்கணங்களில் உடன்போக்குச் சூழல் கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

புதிய கூற்று

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சுரத்தில் செல்லும்போது தளர்ந்து வருத்தமடைவதை வீரசோழியம், 'மெல்லியல் தளர்தல்' (பாலை நடை;6) என்று இயம்பும். இக்கூற்று, தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றாகும்.

உடன்போக்கிடையீடு

தலைவி, தலைவனோடு உடன்போனதையறிந்த அவளது தமையன்மார் தேடிச் சென்று மீட்டு வரல் உடன்போக்கிடையீடாகும். இச்சூழலில் தலைவி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் சுட்டவில்லை. பிற அக இலக்கணங்களாகிய வீரசோழியம் (பாலை நடை.) ஒன்று, அகப்பொருள் விளக்கம் (198), மாறனகப்பொருள் (95), இலக்கண விளக்கம் (547), சுவாமிநாதம் (116) ஆகிய ஒவ்வொன்றிலும் முறையே நான்கு எனத் தலைவி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

உடன்போக்கில் சென்ற தலைவி, தன்னைப் பின்தொடர்ந்து உடன்போக்கினைத் தடுத்த உறவினருடன் சேராது தலைவன் வயத்தளாகவே இருப்பதை வீரசோழியம் (பாலை நடை ; 12) மொழியும். அகப்பொருள் விளக்கமானது உடன்போக்கில் செல்லும் தலைவி, தன் செலவைத் தோழியருக்கு அறிவிக்குமாறு தன்னெதிர் வருவோரிடம் சொல்லி அனுப்பல், நற்றாயிடம் உணர்த்தும்படி அந்தணரிடம் இயம்பல், அந்தணர் மொழிய அறிந்த நற்றாய், தமையன்மாருக்குக் குறிப்பால் அறத்தொடு நிற்க, தமர் சினந்து தன்னை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு செல்லும் பொருட்டுத் தம்மைப் பின்தொடர்ந்து வருவதைத் தலைவி கண்டு தலைவனுக்கு அறிவித்தல், தமருடன் செல்லும் தலைவி, அவன் புறங்காட்டிப் போதலை நோக்கிக் கவலைப்பட்டுத் தெளிதல் (198;1-6, 8-9) ஆகியனவாக விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் (95;1-6, 8-9) மொழியும். இதனை (95;1-6) இலக்கண விளக்கம் (547;1-5) பின்பற்றுவதோடு மாறனகப்பொருள் கூறும் 'தமருடன் செல்பவள் அவன் புறநோக்கிக் கவன்றாற்றல்' (95 ; 8-9) என்பதைத் 'தமரொடுஞ் செல்பவள் அவன்புற நோக்கிக் கவன்றரற்றல்' (547;6-7) என்று சிறிது

மாறுபட்டு மொழியும். இவற்றையே சுவாமிநாதமும் (116;2-7) குறிப்பிடும்.

மீட்சி

தலைவியை உடனழைத்துச் சென்ற தலைவன், தன்னூரில் அவளை வரைந்தோ, வரைந்து கொள்ளாமலோ அவளது பிறந்தவிடம் செல்லுதல் மீட்சியாகும். இச்சூழலில் தலைவி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறவில்லை. பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.23) உரை, தமிழ்நெறி விளக்கம் (23) ஒவ்வொன்றிலும் ஒன்று, வீரசோழியம் (பாலை நடை.) இரண்டு, அகப்பொருள் விளக்கம் (191), களவியற்காரிகை (53), மாறனகப்பொருள் (91), இலக்கண விளக்கம் (540), சுவாமிநாதம் (114) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கூற்றென இச்சூழலில் தலைவிக்குரியதாக வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

உடன்போக்கில் சென்றோர் சிலநாள் கழிந்த பின்னர் சுரத்திடைத் திரும்பிவருவர். அப்போது வழியிடையில் முன்னுறச் செல்வாரை நோக்கி, ஆயத்தாருக்கு எம் வரவினைச் சொல்ல வேண்டுதலை[53] இறையனாரகப்பொருள் (சூ.23) உரையும் தமிழ்நெறி விளக்கமும் (23;7) இயம்பும். வீரசோழியம், தலைவனுடன் சென்ற தலைவி, அவனது ஊரில் தங்கியிருந்து புதல்வரைப் பெறுதல், தலைவி, பெற்றோரது தொடர்பில்லாமலிருந்து தம்நிலை பற்றிப் பெற்றோருக்குச் செய்தி அனுப்பல் (பாலை நடை ; 21-22) ஆகியனவற்றைக் குறிப்பிடும். இறையனாரகப்பொருள் (சூ.23) உரைக் கூற்றையே அகப்பொருள் விளக்கம் (191;3-4), களவியற்காரிகை (53;5-6), மாறனகப்பொருள் (91;4-5), இலக்கண விளக்கம் (540;3-4), சுவாமிநாதம் (114;7-8) ஆகிய

நூல்களும் பின்பற்றுகின்றன. இக் கூற்றுகள் பிற்காலத்தில் தோன்றியுள்ள புதிய கூற்றுகளாகும்.

வரைவு மலிவு

தலைவியை, தலைவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க உறுதியான நிலையில் இல்லோர், வரைவிற்கான முயற்சிகளில் ஈடுபடுதலின்போது தலைவி கூற்று நிகழ்த்துவாள். இச்சூழலில் தலைவி கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் சுட்டவில்லை. பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (174), மாறனகப்பொருள் (70), இலக்கண விளக்கம் (531), சுவாமிநாதம் (108) ஆகிய ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் தலைவிக்குரியதாக வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தலைவி, தலைவன் விடுத்த பரிசப் பொருள்களைக் கண்டு மணக்காலம் வந்ததென்று நற்றாய் மகிழக்கூடிய உள்ளத்து மகிழ்ச்சியை நினைத்தல், தலைவனின் தமர் மணம் கூறி வந்தபோது தலைவியின் தமர் மணப்பரிசத்தை ஏற்றுக்கொண்டமையைத் தோழி, தலைவிக்குக் கூற அவள் தன் மகிழ்ச்சியை அடக்கமுடியாது தன் நெஞ்சிற்குக் கூறுதல் (174;2-3, 5) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் எடுத்தியம்பும். இவற்றையே மாறனகப்பொருள் (70;2-3, 5), இலக்கண விளக்கம் (531;2-3, 5), சுவாமிநாதம் (108;5-6) ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

மலிவு

இல்லறத்தில் தலைவனும் தலைவியும் மகிழ்ந்திருத்தல் மலிவாகும். மு.இராகவையங்கார், " 'மலிவு' என்பது கூடி மகிழ்தலாம்"[54] என்பர். தொல்காப்பியம் (1093) இத்தகைய சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாக மூன்றினை இயம்பும். அகப்பொருள்

விளக்கம் (203), மாறனகப்பொருள் (100), இலக்கணவிளக்கம் (552), சுவாமிநாதம் (118) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒன்று என இச்சூழலில் தலைவிக்குரிய கூற்று மொழியப்பட்டுள்ளது.

வீழ்ச்சி

மலிவின்போது தலைவி, தலைவன் தன்னை நினைப்பான் என்னும் அவனது அறிவு நலனை நன்றாக அறிவாளாகலின், அவனது இயல்புகளை உயர்த்திக் கூறுதற்கண்ணும் தலைவனது பண்பினைத் தோழி கூறியவற்றால் தலைவியும் நல்லொழுக்கமுடையவன் என்று நிறுத்துக் கூறுமிடத்தும் தலைவிக்கு இல்லற உரிமையைக் கொடுத்த தலைவன்மீது பெருமையினின்று நீங்காத அன்பு செய்து ஒழுகுதற்கண்ணும் தலைவி கூற்று நிகழ்த்துவாளெனத் (1093;1-4) தொல்காப்பியம் வரையறுக்கும். இவை பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

புதிய கூற்று

தலைவன், தலைவியைத் திருமணம் செய்ததன் பின்னர் தோழி, தலைவியிடம் ‘தலைவன் நின்னை மணக்குமளவும் நீ எவ்வாறு ஆற்றியிருந்தாய் என்று வினவ, தலைவி தான் ஆற்றியிருந்ததற்கான காரணத்தைக் கூறுவதை அகப்பொருள் விளக்கம் (203;4) மொழியும். இதனையே மாறனகப்பொருள் (100;5), இலக்கண விளக்கம் (552;4), சுவாமிநாதம் (118;3) ஆகியனவும் பின்பற்றும். இது தொல்காப்பியத்தில் இல்லாத புதிய கூற்றாகும்.

ஊடல்

தலைவன், பரத்தையரிடத்துச் சென்றவழி ஊடல் கொண்டு தலைவி கூற்று நிகழ்த்துதல் உண்டு. தொல்காப்பியம் (1093) இத்தகைய சூழலில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகப் பதினாறினைக் கூறும். பிற

அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.48, 49) உரை இரண்டு, தமிழ்நெறி விளக்கம் (25) மூன்று, வீரசோழியம் (மருத நடை.) பன்னிரண்டு, அகப்பொருள் விளக்கம் (205, 206, 207), மாறனகப்பொருள் (102, 103, 104), இலக்கண விளக்கம் (554, 555, 556) ஒவ்வொன்றிலும் பத்து, முத்துவீரியம் (861) பதினெட்டு, சுவாமிநாதம் (119, 120, 121, 122) இருபது என இச்சூழலில் தலைவிக்குரிய கூற்றுகளை வரையறுத்துள்ளன.

மாற்றமின்மை

தலைவன், தனது பரத்தையிற் பிரிவாகிய கொடுமை ஒழுக்கத்தினைப் பொறுக்க வேண்டி, தலைவியின் அடிமேல் வீழ்வான். உடனே தலைவி நின்மாட்டுக் காதலையுடைய எங்கையர் கண்டால் இப்பணிதல் நன்றாயிருக்கும் என்று கூறி, காதலமைந்த வகையின்கண் கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

"கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்று என
மாதர் சான்ற வகையின் கண்ணும்"

(தொல்.1093;28-31)

என்று சுட்டும். இதனையே அகப்பொருள் விளக்கமானது, 'இஃதெங்கையர் காணின் நன்றன் றென்றல்' (206;12-13) என்றுரைக்கும். இந்நூலையே மாறனகப்பொருள் (103;18), இலக்கணவிளக்கம் (555;12-13), சுவாமிநாதம் (121;6) ஆகியனவும் பின்பற்றும்.

வளர்ச்சி

தலைவி புதல்வனை ஈன்ற நிலையில் பரத்தையிடத்துச் சென்ற தலைவன் திரும்பி வந்து அவளை அடையும்போது அவனை நீக்குதல்,

தோழியல்லாத ஏனைய வாயில்களிடத்துக் கூற்று நிகழ்த்துதல், பரத்தையைக் கண்டது போல் கூறி ஊடல் கொண்டு பிறகு ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

யானைக்கன்று போன்ற புதல்வன் பிறந்தவிடத்துத் தலைவி நெய்யணிக் கோலம் கொண்ட நிலையில் தலைவன் நயந்து வருவான். அப்போது தலைவி, தலைவனை அவன் உள்ளம் புண்ணுறுமாறு தன்னை அடைதலினின்று நீக்கிய இளிவந்த நிலையில் கூற்று நிகழ்த்துவதைத் (1093;8-10) தொல்காப்பியம் இயம்பும்.

இதனையே வீரசோழியம், தோழியால் ஊடல் தணிக்கப்பட்டுப் பள்ளியிடத்தாளாகிய தலைவி, தலைவன் அணைந்தவழி எம்மேனி முழுதும் புதல்வனால் உண்டாக்கப்பட்ட பால் புலப்படும் தன்மையுடையதாயிருக்கின்றது. எனவே, எம்மேனியைத் தொடாதேயென்று 'புலவி கற்பொன்றால் நண்ணிச் சீறல்' (மருத.நடை;25) என்று மொழியும். இக்கருத்தினை அகப்பொருள் விளக்கம் (206;6), மாறனகப்பொருள் (103;7), இலக்கண விளக்கம் (555;6), முத்துவீரியம் (861;29) ஆகியனவும் பின்பற்றும். சுவாமிநாதம் தலைவி, 'வெள்ளணி அணிதல்,' 'அணிந்துவிடல்' (120;5) என்று மொழிவதோடு இலக்கண விளக்கத்தைத் (555;6) தழுவி 'அவள் ஓர்ந்து இறையோடு ஊடுதல்' (120;8) என்றும் மொழியும்.

வாயில்கள் மாட்டும் தலைவி கூற்று நிகழ்த்துதலை,

"வாயிலின் வரூஉம் வகை"

(தொல்.1093;42)

என்று தொல்காப்பியம் இயம்பும்.

இதனை தலைவன் பரத்தையரிடத்துச் சென்றவழி பாணன் வாயில் வேண்டத் தலைவி 'வாயில் மறுத்தல்,' 'தோழிக்கு வாயில் மறுத்தல்,' தலைவன் மீது ஊடல் கொண்டு 'தலைவி புலத்தல்' (25;1-3) ஆகிய கூற்றுகளைத் தமிழ்நெறி விளக்கம் இயம்பும். வீரசோழியம், பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்கு வாயிலாக வந்த பாங்கன், தோழி, பாணன் முதலியோர் வேண்டுகோளைத் தலைவி மறுத்தல், பின்பு பரத்தையரிடத்து வந்த தலைவனை 'உவந்தெதிர் கோடல்,' 'நீங்காத கோபத்துடன் தலைவனை வெறுத்துப் பேசல்,' மீண்டும் பரத்தையிற் பிரிந்த தலைவன், விருந்தினரோடும் புதல்வரோடும் சென்றவழித் தலைவி எதிர்கொண்டழைத்தல், தன் இல்லத்திற்கு வந்த தலைவனுடன் 'உண்ணிறை யுவகையோ டொண்ணுதல் உவற்றல்' (மருத நடை;13, 15-16, 18, 21) என்று விரித்துரைக்கும். இதனைப் (மருதநடை;13) பின்பற்றி, அகப்பொருள் விளக்கம் தலைவி 'பாணன் முதலாப் பாங்கன் ஈறாப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி மறுத்துரைத்தல்' (206;7-9) என்று கூறும். இதனையே மாறனகப்பொருளும் (103;8-9) இலக்கண விளக்கமும் (555;7-9) பின்பற்றும். தமிழ்நெறி விளக்கத்தைப் (25;2,1) பின்பற்றி முத்துவீரியம் தோழிக்குத் தலைவி 'வாயில் மறுத்தல்,' 'பாணனொடு வெகுளல்' (861;26-27) என்று இயம்பும். இலக்கண விளக்கத்தைத் (555;7-9) தழுவி சுவாமிநாதம் (121 ; 2) உரைப்பதோடு, தலைவி வாயில்களிடம் பரத்தையரது வருத்தத்தை நீக்க அருளுடைமையால் பிரிந்தாரென்று பொய் சொல்கின்றீரென்று 'முனிதல்,' அவர்களைப் 'பழித்துரைத்தல்,' மீண்டும் தலைவன் விருந்தினர்களோடு வரும்போது பொறுத்துக்கொண்டு வாயில் நேர்தல், பின்னும் தலைவனோடு ஊடல் கொள்ளல், பள்ளியிடத்துப் 'புறங்காட்டடல்' (121;2-4) என்று விரித்துரைக்கும்.

தலைவி, பரத்தையிடம் பிரிந்து பின் மீண்டு வந்தவனிடம் தனது தனிமைத் துயரத்தைக் காட்டி, தலைவன்மேற்சென்ற மனத்தைச் செல்லாமல் மீட்டு, அருகப்பண்ணி அவன் காதலித்த பரத்தையைக் கண்டதுபோல் கூறிப் புணர்ச்சியை மறுத்து, பின்பு அன்புடைமையால் அவனை ஏற்றுக்கொள்ளுதற்கண் கூற்று நிகழ்த்துதலைத் (1093;11-14) தொல்காப்பியம் இயம்பும்.

இதனை வீரசோழியம், தலைவன் பின்முறை வதுவை செய்துகொள்ளும் செய்தியைத் தலைவி கேட்டுத் தன் மனதில் தோன்றிய வெறுப்பினை அகத்தே அடக்கிக் கொண்டு, அவ்வதுவையைத் தானும் மகிழ்வுடன் ஏற்பவள் போல நடந்துகொள்ளல், இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் 'பண்ணி விடுதல்,' 'தானே எல்லா ஏற்பாடுகளையும் செய்தவள் போலப் பிறரிடம் கூறல்,' பரத்தையை 'எங்கை யென்றிசைத்தல்,' தன் இல்லத்திற்கு வரும் பரத்தையை மகிழ்ந்தெதிர் கோடல்,' தலைவனால் மணந்துகொள்ளப்பட்ட இரண்டாம் மனைவி, காமக்கிழத்தி ஆகியோரை விருப்புடன் வரவேற்று இல்லறத் தலைவிக்குரிய பண்பினைப் பெறுதல் (மருத நடை;28-33) ஆகியனவாக விரித்துரைக்கும். தலைவி, தலைவனிடம் காமக்கிழத்தி தெருவில் போய் விளையாடும் புதல்வனைத் தழுவி எடுக்க, நீயும் அவன் தாயே வருக என்றழைக்க, அவள் நாணம் கொள்ள அவளை எங்கை யென்றறிந்தேனென்று, 'காமக்கிழத்தியைக் கண்டமை பகர்வதை' அகப்பொருள் விளக்கம் (206;15) மொழியும். இதனையே மாறனகப்பொருளும் (103;20) இலக்கண விளக்கமும் (555;15) பின்பற்றும். முத்துவீரியம், தலைவன் பலருமறிய ஒருத்தியைப் புனலாட்டுவித்து பின்பு அச்செயல் செய்யாதார்போல என் மனைக்கண் வந்திருத்தல் எனக்குப் பொறுத்தல் அரிதென 'புனலாட்டுவித்தமை

கூறிப் புலத்தல்,' இவ்வாறு புலந்த தலைவியின் ஊடல் தீர்க்கத் தலைவன் நுதலையும் தோளையும் வருட, தலைவி நீ அன்று செய்த தலையளி எங்களுக்கு அன்று வேண்டுமாயினும், இன்று உமது திருவருள் நீ வந்ததே போதுமானது என்று 'கலவி கருதிப் புலத்தல்,' உயர்ந்த குடியிலுள்ளீர், எம்போல்வாரிடத்து இவ்வாறு புணர்ச்சி விரும்புதல் உமக்குச் சிறந்ததல்லவென்று 'மிகுத்துரைத்து ஊடல் கொள்ளல்,' தலைவனின் ஆற்றாமையுணர்ந்து 'துனியொழித்துப் புணர்ச்சிக்கு உடம்படுதல்,' மீண்டும் பரத்தையரிடத்துச் சென்ற தலைவன், புதல்வனை வாயிலாகக் கொண்டு வர 'புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்த்தல்,' (861;30-32, 34-35) ஆகியனவற்றை மொழிவதோடு இலக்கண விளக்கத்தைத் (555;15) தழுவிப் 'பரத்தையைக் கண்டமை பயன்படக் கூறல்' (861;37) என்று குறிப்பிடும். இதனை சுவாமிநாதம் (121;7-8) பின்பற்றுவதோடு தலைவி, தலைவன் மீது கொண்ட ஊடலைத் தோழி ஆற்றுவிக்கப் 'பொறுத்துக் கொள்ளாது ஊடல்,' 'பாலனைப் பழித்தல்' (122;1) என்று கூடுதலாக இரண்டினை மொழியும். அகப்பொருள் விளக்கம் (206;15), மாறனகப்பொருள் (103;20), இலக்கண விளக்கம் (555;15), சுவாமிநாதம் (121;7-8) ஆகியவை 'காமக்கிழத்தி' என்றுரைக்க, முத்துவீரியம் (861;37) 'பரத்தை' என்று மொழியும்.

வீழ்ச்சி

ஊடலின்போது பரத்தையிடம் தங்கிய ஒழுக்கத்தையுடைய தலைவன், தலைவியிடம் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு பணிந்த மொழிகளைக் கூற, அப்போது தலைவி ஊடற் குறிப்பினளாய் 'நீ கூறும் இம்மொழிகளை எங்கையர்க்கு உரை' என வேண்டிக் கூறும்போதும்

தலைவி, தன்னைப் பணிந்த தலைவன், இனிமேல் பரத்தையிடத்துச் செல்லான் என்பதை இடத்தாலும் காலத்தாலும் உணர்ந்தாலும் ஊடலுள்ளத்தால் தலைவனைக் கூடப்பெறாது அப்பரத்தையர்பால் செல்கெனக் கூறும்போதும்

தலைவன், மனையறத்திற்கு உரியவளாக வரைந்து கொண்ட காமக்கிழத்தி, மனைப்புறத்து விளையாடும் தலைவியின் புதல்வனைத் தழுவி எடுத்து அவனிடம் எம்மைப் பாதுகாப்பீரோவென வினவியவழி அவனும் அதற்கு உடன்பட்டான் போலக் கூற அதனைத் தலைவி, மறைந்து நின்று கண்டு பின்னர் கூற்று நிகழ்த்துமிடத்தும்,

தலைவி, தன் புதல்வனைத் தழுவி விளையாடும்போது அவ்விடத்து வரும் தலைவன், அவ்விளையாட்டு மகிழ்ச்சியாகிய மனையறத்தினைக் காண விரும்பிய நெஞ்சோடு, தன் வரவினைத் தலைவி அறியாமல் அவள் பின்னே நின்று தலைவியின் ஊடலைப் போக்குதல் வேண்டியவிடத்தும்

தலைவன் மீது கொண்ட ஊடலால், தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால் சிறப்புடைய மகனைப் பழித்தற்கண்ணும்

தலைவி, தலைவனது பரத்தையிற் பிரிவாகிய கொடுமை தன்னைச் சுடுகின்றதெனப் புணர்ச்சியை ஒடியாது காமம் விரும்பும் பரத்தையரைப் போலாது அறத்தை விரும்புதல் வேண்டும் என்று புகழை விரும்பினோர் சொல்லோடு உள்ளம் பொருந்தி, தலைவனை வேறுபடுத்திக் காணாது ஒன்றுபட்டு ஒழுகும் தகுதிக்கண்ணும்

பரத்தையர் அணிந்துவிட்ட நல்லணியோடு, அழகிய அணிகலன்களை அணிந்தவனாய் வரும் தம் புதல்வனைக் கண்ட

தலைவி, தலைவனது பொய்ம்மையுடைய பரத்தைத் தன்மையைக் கருதிய வழியும்

தலைவி, தன் புதல்வனைப் பரத்தையரிடம் செல்லவிடாமல் தன்னிடமே வைத்துக்கொள்ளுதலின் போதும்

தலைவி, தன் புதல்வனைத் தலைவனிடமிருந்து பிரித்தற்கண்ணும்

தீமை பயக்கக்கூடிய சூளுரையைத் தலைவன் கூறுதற்கண்ணும்

தலைவி, காமக்கிழத்தியின் நலத்தினைப் பாராட்டுவது போன்று தலைவனின் புறத்தொழுக்கமாகிய தீமையை அவன்மீது ஏற்றிக் கூறுமிடத்தும்

தலைவனது கொடுமை ஒழுக்கமாகிய பரத்தமையின்கண் தலைவி, தோழியிடம் தலைவனைச் சினப்பேன் என்றும் சினவாது மகிழ்ந்து கூறுவேன் என்றும் தன்னின் வேறாக்குவேன் என்றும் பின்பு அவன் சொல்லைக் கேட்டற்கு விரும்புவேன் என்றும் கூறுமிடத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவாள் (1093;15-27, 32-41). இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பிற அக இலக்கணங்களில் மொழியப்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

தலைவன், பரத்தையரிடத்துத் தொடர்புகொண்டு பிரிந்தவிடத்துத் தலைவி ஆற்றாமையுடன் காணப்படுதல், ஆற்றாமை வினவிய தோழியிடம் 'இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்,' பிறகு ஆற்றாமையே வாயிலாகப் புகுந்த தலைவனை, தலைவன் தம்மை அடைந்தால் தமக்குப் பேரழகு கிட்டும்,

இல்லையெனில் பசலை உண்டாகும். எனவே, தலைவனுடன் ஊடல் கொள்ளல் தகாது என்று உணர்ந்து 'முதிரா மென்முலை எதிர்கொண்டு பணிதல்' (205;3,5,13) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் எடுத்தியம்பும். இவற்றையே மாறனகப்பொருளும் (102;3,5,13) இலக்கண விளக்கமும் (554;3,5,13) உரைக்கும். முத்துவீரியம், தலைவி, தன் நலத்தைத் தலைவன் கவர்ந்துகொள்ள வேறு துணையில்லாமல் தமது மெல்லணையைத் தமக்குத் துணையாகக் கொண்டு ஆருயிரானது தேயுறும் மகளிர் நான் அல்லது வேறு யாருளரென்று 'பொதுப்படக் கூறி வாடியழுங்கல்,' கனவில் கூட வந்த தலைவனை, நனவென்று புலந்து புணராதிருந்தமையைத் தோழிக்குக் கூறி, கனவால் வந்த இன்பத்தையும் இழந்தேனென்று 'கனவிழந்துரைத்தல்,' தலைவனை வஞ்சித்துரைத்தல் தகுதியன்றென்று நீ கூட கூறவில்லையே என்று 'விளக்கொடு வெறுத்தல்,' வாயில் வேண்டி வந்த வாயில்களிடம் நான் தலைவனைப் பரத்தையருக்கே முழுமையாகக் கொடுத்தேன் என்று கூறி 'வாயில் மறுத்தல்,' பிறகு தலைவனை வாயில் நேர்ந்து பள்ளியிடத்தானாகிய தலைவனோடு மீண்டும் ஊடல் கொள்ளல், மீண்டும் பரத்தையிடத்துச் சென்ற தலைவனிடத்து இல்லோர் செவ்வணி விடுக்க நினைத்து நிற்ப, அயலார் முன்னே இவளால் இக்குறி அறிந்தவிடத்து ஒருத்தி இரங்கி, தலைவனை நமக்குத் தர நாம் அவனை எய்தும்படியாயிற்றென்று 'அயலறி வுரைத்தவ ளழுக்க மெய்தல்,' மீண்டு வந்த தலைவனிடத்துக் கொண்ட ஊடலைத் தீர்த்து, இன்புறப் புணர்ந்த தலைவி, இவ்வாறு தலைவன் நமக்கருளிய அருள் ஒருநாள் பிறர்க்குமாம் என்று 'கலவி கருதிப் புலத்தல்,' பரத்தைத் தலைவி, தன்னை வியந்து கூறினாளென்று கேட்ட தலைவி, எங்கைச்சியர், தமக்கொரு தங்கைச்சியர் தோன்றின் தம்முடைய இறுமாப்பு ஒழிவர். இதனை அறியாது தம்மை வியப்பது என்னவென்று பரத்தையை நோக்கி 'நகைத்துக் கூறல்', தலைவனை

'இயற்பட மொழிதல்' (861;2-6, 8, 13-14, 18, 20-21) என்று விரித்துரைக்கும். இலக்கண விளக்கத்தைச் (554;3,5,13) சுவாமிநாதம் (119;4-6 120;3)பின்பற்றுவதோடு தலைவனது புறத்தொழுக்கினைத் தோழியிடம் இயம்பிய நிலையில் தலைவி 'செவ்வணியைப் பாவை சேடியர்க்கு அணிதல்,' 'அணிந்து விடல்' (119;6-7) என்று கூடுதலாக இரண்டினை மொழியும்.

தலைவன் பரத்தையர் சேரிக்குத் தேரின் மீதேறிப் போகும்போது அணிகலன்கள் அணிந்த புதல்வன் நிற்க, அப்புதல்வனைத் தழுவி எடுத்துக் கொண்டும் பரத்தையரிடத்துப் பிரிந்த ஆற்றாமையும் வாயிலாக வர அவனை எதிர்கொள்ளல், பரத்தையர் சேரிக்குச் சென்ற தலைவனை, தன் மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தானென்று 'மணந்தவன் போயபின் வந்த புதல்வனைப் புகழ்ந்துரைத்தல்,' தலைவன் தன்னிடத்துக் கொண்ட அன்பு இந்நாள் வரைக்கும் ஒழிந்திலர் என்று 'தலைவனைப் புகழ்தல்' (207;1-5) ஆகியனவாக அகப்பொருள் விளக்கத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றையே மாறனகப்பொருளும் (104;1-5) இலக்கண விளக்கமும் (556;1-5) பின்பற்றும். இலக்கண விளக்கத்தைத் (556;1-4) தழுவி சுவாமிநாதம் (122;4-6) உரைக்கும். ஆனால் 'தலைவனைப் புகழ்தல்' (இல.விளக்.556;5) என்பதனை மட்டும் விடுத்துள்ளது.

தலைவன் மீது கொண்ட புலவியின் காரணமாகத் தலைவி, தான் உறையும் நாடு, ஊர், குடியையும் கூறித் 'தற்புகழ்தல்',[55] தலைவி, தலைவனிடத்துக் கொண்ட புலவியை நீக்குதற் பொருட்டு பரத்தையர் மாட்டுப் பிரிந்து ஒழுகுதல் 'மிக்கீர்க்கிது தக்கதன் றென்றல்'[56] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.48,49) உரையானது எடுத்துரைக்கும்.

பிரிவு

தலைவன் பிரிய, தலைவி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1093) இரண்டினை இயம்பும். பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.39, 41) உரை ஐந்து, தமிழ்நெறி விளக்கம் (24) நான்கு, வீரசோழியம் (முல்.நடை.) பதினொன்று, முத்துவீரியம் (856, 857, 859, 860) பத்து என இச்சூழலில் தலைவிக்குரிய கூற்றுகளை வரையறுக்கும்.

வளர்ச்சி

தலைவன் பொருள் முதலான காரணங்களால் பிரிவான். அப்போது தலைவி, தலைவனை நீங்கித் தனிமையுறும் காலம் பெரிதாகலின் அந்நிலையில் மனச்சுழற்சியோடு பெருகிய வேட்கையின்கண் தலைவியிடத்துக் கூற்று நிகழும். இதனை,

"கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்"

(தொல்.1093; 5-6)

என்று இயம்பும். இக்கூற்றானது பிற அக இலக்கணங்களில் ஓதல், வேந்தர்க்குற்றுழி, காவல், பொருள் ஆகிய காரணங்களால் தலைவன் பிரிந்தவிடத்து அவனது பிரிவைத் தோழியின் மூலமாகத் தலைவி அறிந்து ஆற்றாது கூற்றுகள் நிகழ்த்துவதாக விரித்துரைக்கப்பட்டுள்ளன.

ஓதற்பிரிவு

தலைவன், தலைவியைத் திருமணம் செய்துகொண்ட பின்னர் கல்வியின் சிறப்பினை எடுத்துரைத்து நீங்குவான். இதனை கு.சுந்தரமூர்த்தி, "வரைந்து கொண்ட பின்னர்த் தலைமகனுக்கு முதற்பிரிவு ஓதலாதலால் கல்வியின் மிகுதி கூறி நீங்காநிற்றல்"[57] என்பர்.

தலைவியிடம் தோழி ஓதற்காரணமாகப் பிரிவுணர்த்தியவழி, அவளுக்கு முன்னிலைப் புறமொழியாகத் தலைவன் நின்னைப் பிரியேன், பிரியின் ஆற்றேனென்று கூறியவர் இப்போது பிரிவராயின் இதற்கு நாம் சொல்லுவது என்னவென்று தலைவனது வாய்மொழி கூறி தலைவி வருந்துவதை (856;3-4) முத்துவீரியம் மொழியும்.

வேந்தர்க்குற்றுழிப் பிரிவு

அரசனுக்குப் பகை வேந்தர்களால் இடையூறு நேர்ந்தவழி அவனது வேண்டுகோளுக்கு இணங்கி உதவும் பொருட்டுப் பிரிதல் வேந்தர்க்குற்றுழிப் பிரிவாகும். இப்பிரிவின் காரணமாக வருந்தும் தலைவியின் ஆற்றாமையைத் தோழி ஆற்றுவிக்கத் தலைவி, அவர் பிரிய வருந்தவில்லை. இக்காரானது அவர் பாசறைக்கண் தோன்றினால் நம்மை நினைந்து ஆற்றாதவராய் அவ்வினை முடிக்கமாட்டாது வந்துவிடுவாரோவென்று வருந்துகின்றேனென்று 'கார்மிசை வைத்துரைப்பதை'[58] இறையனாரகப்பொருள் (சூ.39) உரை இயம்பும். வீரசோழியம், தலைவி, பிரிந்த தலைவன் வரும் வரை இல்லத்திலிருந்து மேற்கொண்ட வினை முடித்து மீளவேண்டுமென்று அவன் நினைவாகவே இருத்தல், தலைவன் மீது கொண்ட வேட்கையால் ஆற்றாதிருத்தல், ஆற்றுப்படுத்திய தோழியிடம் 'ஆற்றுவேன் என்றுரைத்தல்' (முல்.நடை ; 4-5, 7-8), இறையனாரகப்பொருள் (சூ.39) உரையைத் தழுவி 'அவள் பயமுரைத்தல் ' (முல்.நடை;8), முன்பு இன்பம் செய்த நிலவு, குழல் ஒலி முதலியன தலைவன் பிரிவிடைத் தனக்குத் துன்பம் தரும் வகையில் வேறுபட்டுவிட்டதாக 'வேற்றுமை கூறல்,' தலைவனது பிரிவு தாங்கமாட்டாமல் 'பெருமூச்செறிந்து வருந்தியுரைத்தல்,' மீண்டும் கார்கண்டு மெலிந்தவள் மொழிதல், தான் முன்பு கார்காலம் வந்துவிட்டதாகக் கருதிய கருத்து நீங்க 'இப்பருவம் கார்காலம் அன்று' என்று தானே தனக்குள் கூறிக்கொள்ளல், 'அந்தியும்

ஆம்பலும் மாலையும் மணியும் தென்றலும் திங்களும் போன்ற பொருள்களிடத்து ஆற்றாளாய்ப் புலம்புதல்' (முல்.நடை;9-10, 12-13, 16-18) ஆகியவற்றை விரித்துரைக்கும். இதனைப் (முல்.நடை ; 8) பின்பற்றி முத்துவீரியம் 'பிரிவாற்றாமை கார்மிசை வைத்துரைத்தல்' (859;1-2), தலைவன் கூதிர்கண்டு நம்மை நினைந்து அவ்வினை முடிக்கமாட்டாரென 'கூதிர்கண்டு கவலல்,' முன்பனிக் காலத்தில் இடையறாது விழுகின்ற பனியில் கிடந்து வாடித் துன்புறுக என்று என்னைப் பெற்றவளை நோவதல்லது, யாரை நோவேனென்று நொந்துரைத்தல், இளவேனில் பருவம் கண்டு இன்னலெய்தல், இவ்வாறு பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைவியிடம் தோழி, இது பருவமன்று என்று வற்புறுத்திக் கூற, தலைவி கார்ப்பருவமே என்று தோழியிடம் 'மறுத்துரை செய்தல்' (859;4-7, 9) என விரித்துரைக்கும்.

காவற்பிரிவு

தலைவன், நாடு காத்தற்பொருட்டுப் பிரிவதை கு.சுந்தரமூர்த்தி, "எல்லா வுயிர்களையும் அரசன் பாதுகாக்க வென்னும் தருமநூல் விதியான் அக்காவற்குப் பிரிதல்"[59] என்பர்.

நாடு காத்தற்குப் பிரியும் பிரிவின்போது, தலைவன் தன் பிரிவைத் தலைவிக்குத் தோழியால் உணர்த்த வேண்டுவான். தோழி, தலைவிக்குப் பிரிவுணர்த்த அவள் 'பிரிவு கேட்டிரங்குவதை' (857;1) முத்துவீரியம் மொழியும்.

பொருட்பிரிவுணர்த்தல்

தாம் தேடிய பொருள் கொண்டு இல்லறம் நடத்துதல் சிறப்பென்று கருதிய தலைவன் பொருள் காரணமாகப் பிரிந்து செல்வான். இதனை கு.சுந்தரமூர்த்தி, "குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால், அதனால் வரும்பயன்

அவர்க்காமத்துணை யல்லது தமக்காகாமையால், தமது பொருள்கொண் டில்லறஞ் செய்தற்குப் பொருள் தேடப் பிரியா நிற்றல்"[60] என்பர்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.39) உரையானது, பொருள்வயிற் பிரியலுற்ற தலைவன் தோழியால் தலைவிக்குப் பிரிவுணர்த்தத் தலைவி ஆற்றாது தோழியிடத்துப் புலம்பல்,[61] தோழி, தலைவனிடம் நீவிர் பிரிந்த காலத்துத் தலைவி எவ்வாறு இரவுப்பொழுதைக் கழிப்பாள் என்பதைக் கேட்டதையறிந்த தலைவி, தோழியிடம் நன்று செய்தாய், அவர் செல்லும் கானமும் அத்தகையது என்று 'கானத்தியல்புரைத்தல்,'[62] தலைவன் குறித்துச் சென்ற கார்ப்பருவம் வந்தும் வாராமையால் பிரிவினால் உளதாகிய பொறுத்தற்கரிய துயரைப் பொறுத்துக்கொள்ளாது வருந்துதல்[63] ஆகியனவற்றை விரித்துரைக்கும். இவ்வுரையைப் பின்பற்றித் தமிழ்நெறி விளக்கம் 'நறுநுதலினைதல்', 'வந்தது பொழுதென வருந்தல்' (24;4,6) தலைவன் பிரிந்தவிடத்து ஆற்றாளாதல், தலைவியின் ஆற்றாமை கண்டு வருந்திய தோழியிடம் 'ஆற்றுவேன் என்பதுபடக் கூறல்' (24;5,7) ஆகியனவற்றை இயம்பும். வீரசோழியம், பொருள்வயிற் பிரிய நினைத்தவழி தலைவி தன்னையும் உடன்கொண்டு செல்லுமாறு தலைவனிடம் தன் விருப்பத்தை இரந்து கூறல், தலைவன் தான் மீண்டு வருவதாகக் கூறிய கார்காலம் வந்த அளவில், தலைவி கார்காலத்து மேகங்களை நோக்கிக் கூறல் (முல்.நடை ; 19,22) என்று மொழியும். தமிழ்நெறி விளக்கத்தை (24;4) அடியொற்றி முத்துவீரியம் 'ஆற்றாது புலம்பல்' (860;2), தலைவன் தனக்கு, முன்பு அருளைக் கூறிய சொற்கள் எல்லாவற்றையும் மறந்து தன்னைப் பிரிந்து பொருள்தேடவுள்ளார். இது தகுமோவென்று பாலை நிலத்தனாகிய தலைவனை மருத நிலத்தனாக்கித் தலைவி தோழியிடம் புலந்து கூறல், தலைவன்

பிரிவாராயினும் இப்பொழுது பிரியாரென பிரிவு இகழ்ந்து இருந்தேன்; முன்னின்று பிரிவுணர்த்தின் இவள் உயிர் தரியாள் என்று அவர் உணர்த்துதலை இகழ்ந்து போயினார்; இத்தன்மையாகிய இரண்டு நிகழ்ச்சிகளும் என்னை அழிவிக்கின்றன என்று மனம் வாடுதல் *(860;3,6)* ஆகியனவற்றை விரித்துரைக்கும்.

இவ்வாறு தலைவன், பிரிந்துறையும்போது கால வரையறை குறித்துப் பிரிந்து செல்வான். அப்போது தலைவி ஆற்றாதிருப்பாள். இதனையறிந்த தோழி, ஆற்றாதிரு என்றுரைக்க, இவ்வேனிற் பருவத்து வெப்பம் காரணமாக, தான் மேற்கொண்ட வினை முடியாது மீள்வரோ என நினைத்து ஆற்றேனாகின்றேன் என்று 'தலைவி தோழிக்குரைப்பதை'[64] இறையனாரகப்பொருள் (சூ.41) உரை இயம்பும்.

வீழ்ச்சி

தலைவி, அலமரல் பெருகிய வேட்கையின்கண் தலைவனை எதிர்ப்பட்டவிடத்து இன்பமும் பிரிந்தவழித் துன்பமும் உண்டாகியவிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்"

(தொல்.1093;7)

என்று மொழியும். இக்கூற்றானது பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

தொகுப்புரை

தலைவி அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய குணங்களைக் கொண்டவள்.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் ஆகிய மூன்றிடங்களிலும் கூற்று மொழியல்லாத குறிப்பு மொழிகளே தலைவியிடத்துத் தோன்றும்.

தொல்காப்பியத்தில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகள் எழுபத்திரண்டு.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவி, தலைவனுக்கு உடன்படாது மறுத்தல், தலைவனை ஏற்றுக்கொள்ள விரும்பல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் இயம்பும் தலைவி நகைக் குறிப்புத் தோற்றுவித்தலை வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றியுரைக்கின்றன.

இயற்கைப் புணர்ச்சியில் கூறப்பெறும் தொல்காப்பியக் (1057;1-2, 5) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் சுட்டப்படவில்லை.

இடந்தலைப்பாட்டில் தலைவி, நாணம் மிக்குழிக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் மொழியும். இதனை வீரசோழியம் தலைவி தலைவனது தனிமைத் துயரைத் தீர்த்தல், தன் கண்களை மறைத்துக் கொள்ளுதல் என்று விரித்துரைக்கும். முத்துவீரியம்

தலைவனது நினைவால் மெலிதல், தன் நாணத்தை விடுதற்கு வருந்தல் என இயம்பும்.

பாங்கற் கூட்டத்தில் வீரசோழியம் தலைவி, தலைவனது தன்மையை உணர்வதாகக் கூறும்.

தோழி மதியுடம்பாட்டில் தோழி, தலைவியின் மேனி வேறுபாட்டினைக் கண்டு வினவ, தலைவி மறைத்துக் கூறுவதைத் தொல்காப்பியம் இயம்பும். களவியற்காரிகை, சுனையாடியதால் இவ்வேறுபாடு ஏற்பட்டதென்று மறைத்துரைப்பதை மொழியும்.

குறைநயத்தலில் சுட்டப்பெறும் தொல்காப்பியக் (1057;21, 17-20) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

தோழி, தலைவியிடம் குறைநயப்பிக்க நாணத்தால் நீங்குவதைத் தமிழ்நெறி விளக்கம் சுட்டும். வீரசோழியம் தலைவி, தலைவனைக் கூடுதற்கு உடன்படுவதை நவிலும். தலைவி, தோழியிடம் அறியாள் போன்று வேறொன்று கூறல், மறைத்துக் கூறல், முனிதல், கையுறை ஏற்றுக்கொள்ளல் ஆகியனவாக அகப்பொருள் விளக்கம் விரித்துரைக்கும். இதனைப் பின்பற்றிக் களவியற்காரிகை மொழியும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் பின்பற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் உரைக்கும். இதனைப் பின்பற்றி முத்துவீரியம் கூறுவதோடு தலைவனைக் காண நேர்தலையும் மொழியும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் உரைக்கும்.

இருவகைக் குறியில் தொல்காப்பியம் தலைவன் குறிவரக் காலம் நீட்டிக்கத் தலைவி வருந்துவதை இயம்பும். இதனை அகப்பொருள்

விளக்கமானது தலைவன் நீடத் தலைவி வருந்தல், முன்னிலைப் புறமொழி பகர்தல், தோழியிடம் கூறல், தலைவன் நீங்கற்கருமை நினைந்திரங்கல் என விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

தொல்காப்பியம் தலைவன் பிரிவுழித் தலைவி கலக்கமுறுவதைக் கூற இறையனாரகப்பொருள் உரையானது தலைவனைக் காணாப்பொழுது பெரிதாகலின் நெஞ்சொடு வருந்துதல் என்று கூறும். வீரசோழியம் மாலைப்பொழுதில் பல்வேறு பொருள்களுடன் இரந்து குறையுறல், அப்பொருள்களிடம் ஆற்றாது புலம்பல், ஆறுதல் மொழிகளைத் தன்னுள் கூறிக்கொள்ளல் என்று விரித்துரைக்கும். இதனைப் பின்பற்றி அகப்பொருள் விளக்கம் மொழியும். வீரசோழியம், அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றிக் களவியற்காரிகை சுட்டும். இந்நூலை அடியொற்றி மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் குறிப்பிடும்.

தோழி கூறுவதைத் தலைவி ஏற்றுக் கொள்ளாதபோது கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் கூறும். இதனை வீரசோழியம் தலைவன் வரும் வழி ஏதங் கருதி வருந்துதலென்று மொழியும். இதனை அகப்பொருள் விளக்கம் பின்பற்றுவதோடு தோழியிடம் உடம்பட்டுக் கூறலென்று கூடுதலாக ஒன்றையும் கூறும். இவற்றையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றும். முத்துவீரியம் வழி ஏதங் கூறல், குறைதனை நேர்தல் என்று நவிலும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் மொழியும்.

தலைவி, குறியின் ஒப்புமை மருடற்கண் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை, அகப்பொருள் விளக்கம் தோழிக்குத் தான் குறி மருண்டதைக் கூறல், வறுங்களங் கண்டு இரங்கல், இதனைத்

தோழியிடம் கூறல், குறி பிழைத்தது என்பிழைப்பன்றென்று நோதல் என்று விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள் பின்பற்றுவதோடு தலைவி நாட்டமுற்றினைவதைக் கூடுதலாக இயம்பும். இதனை இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் பின்பற்றும்.

அல்லகுறிப்பட்ட தலைவி தலைவனைக் காண வேட்கை கொண்டு வருந்துவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை முத்துவீரியம், காமம் மிக்குக் கூறல், காப்புச் சிறைமிக்கு வருந்தல், பிற பொருளின்மீது ஏற்றி வருந்தல், தனது துயரைக் கடலிடம் கூறல் என விரித்துரைக்கும்.

இருவகைக் குறியில் தொல்காப்பியம் (1053;1, 6-7, 8, 1057;9,10,34) கூறும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் எடுத்துரைக்கப்படவில்லை.

பகற்குறி இடையீட்டில் தலைவி ஆடிட நோக்கி அழிதல், இரவுக்குறியில் வழியருமை நினைந்து இரங்கல், தலைவனைக் குறி விலக்கல் ஆகிய கூற்றுகளை அகப்பொருள் விளக்கம் சுட்டும். இவற்றையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

இரவுக் குறியில் காதல் மிகவால் வாய்விட்டுப் புலம்பலை, தமிழ்நெறி விளக்கம் எடுத்துரைக்கும்.

இரவுக் குறியில் தலைவி தலைவனைச் சந்திக்க ஏற்படும் இடையூறுகளாக தாய், நாய், ஊர் தூங்காதிருத்தல், காவலர் சுற்றி வருதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி கூவுதல் ஆகியனவற்றால் சந்திக்க இயலாது வருந்துவதை அகப்பொருள் விளக்கம் கூறும். இக்கூற்றுகளையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

ஒருவழித்தணத்தலின்போது தலைவன் வாராது காலம் நீட்டிக்க வருந்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை அகப்பொருள் விளக்கம் நெஞ்சொடு வருந்தல், காம மிக்க நிலையில் கூறல் என்று விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றும். காமமிக்க நிலையில் தலைவி கூற்று நிகழ்த்துவதாக இலக்கண விளக்கம் கூறுதலை முத்துவீரியம் கடலிடம் வினவல், கடலொடு புலந்து கூறல், அன்னத்திடம் கேட்டல், கடலுக்கு உரைத்தல், கூடலிழைத்து வருந்தல், சுடரொடு புலந்து கூறல், பொழுது கண்டு வருந்தல், பறவையொடு வருந்தியுரைத்தல், தாமரை மலரானது என்மீது அன்புடையதென்று கூறல், அன்னமோடழிதல் என்று விரித்துரைக்கும். இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி சுவாமிநாதம் தலைவி நெஞ்சிடம் புலந்து கூறுவதை மட்டுமே கூறும்.

ஒருவழித்தணத்தலின்போது கூறும் தொல்காப்பியக் (1057;6-8) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

வரைவு வேட்கையின்போது தலைவி பொழுதும் ஆறும் கூறி மனமழிந்து வருந்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதை அகப்பொருள் விளக்கமானது தலைவன் தன்னைச் சந்திக்க வருதல் அரிது என்றல், அவனது ஊருக்குச் செல்ல மனம் துணிதல், இயற்பட மொழிதல், கனவு நலிபுரைத்தல், அழகு நலம் கெட்டதைக் கூறல், தனது துயரை உரைக்க வேண்டல், அலர் அச்சத்தைத் தோழியிடம் கூறல், வழியருமை நினைத்து அஞ்சுதல், தலைவனைக் காண வேட்கை கொண்டு கூறல், தனது துயரைப் பிற பொருளின்மீது ஏற்றியுரைத்தல், நெறி, குறி விலக்கென்றல் என விரித்துரைக்கும். இதனைப் பின்பற்றிக் களவியற்காரிகை கூறுவதோடு செயலற்றுக் கலங்கல், கடலிடம் கூறல், என்றும் இயம்பும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும்

பின்பற்றி மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கும்.

தனது களவொழுக்கத்தைச் செவிலி அறிந்ததாகத் தலைவி கூறும் தொல்காப்பியக் கூற்றை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றும்.

இற்செறித்தலின்போது காப்பு மிகுதியால் தானே தனித்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் இயம்பும். இறையனாரகப்பொருள், அஃறிணைப் பொருள்களிடம் தன் உள்ள வேட்கையை வெளிப்படுத்தல், காப்பு மிகவால் கையற்றுக் கலங்கல், ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி, தன்னுள் கையாறெய்தி உரைத்தல் ஆகிய கூற்றுகளை விரித்துரைக்கின்றன. இதனைப் பின்பற்றித் தமிழ்நெறி விளக்கம் இயம்பும்.

இற்செறிப்புப் பற்றிய தொல்காப்பியக் (1057;26, 12-13, 27-29) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

தொல்காப்பியம், செவிலி வெறியாட்டெடுக்க முற்படும் நிலையில் தலைவி அஞ்சுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதை மொழியும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் தலைவி ஆற்றாதிருத்தல், என்னுயிரைப் போக்கத் துணிந்துள்ளேன் என்றல், அறத்தொடு நிற்க வேண்டல் எனக் கூறும். இதனைப் பின்பற்றி வீரசோழியம் எடுத்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது வெறி விலக்கல் என்று மொழியும். வீரசோழியத்தை அடியொற்றிக் களவியற்காரிகை கூறுவதோடு வெறிவிலக்க நினைத்தல் என்றும் மொழியும். அகப்பொருள் விளக்கத்தை மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றும்.

களவியற்காரிகையை அடியொற்றி முத்துவீரியமும் இலக்கண விளக்கத்தைத் தழுவி சுவாமிநாதமும் மொழியும்.

நொதுமலர் வரையக் கருதும் நிலையில் அதனை நீக்கத் தலைவி தோழியிடம் வேண்டுவதைத் தொல்காப்பியம் கூறும். அகப்பொருள் விளக்கமானது பிறர் வரைவினை விலக்க வேண்டுதல், குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் என விரித்துரைக்கும். இவற்றையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் உரைக்கின்றன.

தலைவனின் தமர் வரைவொடு வந்த நிலையில் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் இயம்பும். தமிழ்நெறி விளக்கம் தம் தமர் தலைவனுக்கு வரைவு மறுத்தவழி ஆற்றாளாதல் என்று கூறும். வீரசோழியம் இதனைப் பின்பற்றுவதோடு தோழியிடம் அறத்தொடு நிற்க வேண்டுதல் என்று விரித்துரைக்கும். முத்துவீரியம் தான் செல்லுதலை நினைத்துக் கூறுதலென்று இயம்பும்.

தலைவி தோழியை வரைவுகடாவச் சொல்லும் தொல்காப்பியக் (1053;11-14) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

அறத்தொடு நிற்றலில் தனது களவினைச் செவிலியிடம் கூறுமாறு வேண்டும் தொல்காப்பியக் கூற்றைத் தமிழ்நெறி விளக்கம் தோழியிடம் தலைவி அறத்தொடு நிற்றல் எனக் கூறும். வீரசோழியம் தனது களவினைத் தோழியின் மூலம் செவிலியிடம் கூற வேண்டல் என்று குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது தனது துன்பத்திற்கான காரணத்தைக் கூறல், தலைவன் சூளுற்றதை மெய்யென்று தெளிந்து தோழியிடம் கூறல், தன்னைப் பிரிந்தான் என்றல், இயற்பட மொழிதல்,

தெய்வம் பொறுத்துக்கொள்ள வேண்டிச் செல்வோம் என்றல், இற்செறித்ததைக் கூறல், தலைவன் இருட்டபொழுதில் வந்ததைச் செவிலி கண்டதாகக் கூறல் என விரித்துரைக்கும். தமிழ்நெறி விளக்கத்தை அடியொற்றிக் களவியற்காரிகை இயம்பும். அகப்பொருள் விளக்கத்தைத் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறும். இந்நூலையும் களவியற்காரிகையையும் தழுவி முத்துவீரியம் குறிப்பிடும். இலக்கண விளக்கத்தைச் சுவாமிநாதம் பின்பற்றும்.

வரைவிடைப்பிரிவில் தலைவி இயற்பட மொழிதலாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை இறையனாரகப்பொருள் உரையும் களவியற்காரிகையும் பின்பற்றும்.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவில் தலைவி ஆற்றாது வருந்துவதாகத் தொல்காப்பியம் கூறுவதை இறையனாரகப்பொருள் உரையானது தலைவி ஊரவர் தன்மை கூறல் என்றுரைக்கும். அகப்பொருள் விளக்கம் தலைவி இரங்கல், கொடுஞ்சொற் சொல்லல், பருவங் கண்டு ஆற்றாதிருத்தல், தோழியிடம் கார்காலமேயென்று மறுத்தல், தலைவி ஆற்றல் என விரித்துரைக்கும். இவற்றை மாறனகப்பொருள் பின்பற்றுவதோடு தலைவி வன்பொறை எதிரழிதலைக் கூடுதலாக மொழியும். இதனைத் தழுவி இலக்கண விளக்கம் உரைக்கும். முத்துவீரியமானது நெஞ்சிடம் மொழிதல், வருந்தல், வன்புறையழிதல், தேறாது புலம்பல், தூது கண்டு வருந்தல் என்று கூறும். இலக்கண விளக்கத்தைச் சுவாமிநாதம் பின்பற்றும்.

வரைவிடைப் பிரிவில் தலைவிக்குரியதாகக் கூறப்பட்டுள்ள தொல்காப்பியக் (1057;33, 22, 1058;2, 1057;33, 1053;9) கூற்றுகள் தலைவனைக் காண அவனிருப்பிடத்திற்கே செல்ல விரும்புவதாகத்

தலைவி கூறும் தொல்காப்பியக் (1059;1-5) கூற்றுகள் ஆகியவை பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

வரைவிடைப் பிரிவில் வலம்புரிச் சங்கினைத் தலைவி வாழ்த்துவதாக அகப்பொருள் விளக்கம் கூற, களவியற்காரிகை முரசொலி கேட்டுத் தலைவி கலங்கல் என்று எடுத்துரைக்கும். மாறனகப்பொருள், கிளையொடும் தலைவி வலம்புரியை வாழ்த்துவதாகக் கூறும். அகப்பொருள் விளக்கத்தைத் தழுவியது இலக்கண விளக்கம். களவியற்காரிகையைப் பின்பற்றி முத்துவீரியமும் இலக்கண விளக்கத்தைத் தழுவி சுவாமிநாதமும் இயம்பும்.

உடன்போக்கில் தலைவி தன் நாணத்தைக் கைவிடுதலின்போது கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை இறையனாரகப்பொருள் உரையானது நாணிழந்து வருந்தல் என்றுரைக்கும். இதனையே தமிழ்நெறி விளக்கமும் வீரசோழியமும் பின்பற்றும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம் உரைப்பதோடு உடன்போக்குச் செல்லத் துணிதல், சுரவழியானது அன்னையைவிடக் கொடிதோ என்றல் எனவும் விரித்துரைக்கும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை மொழியும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் இயம்பும். முத்துவீரியம் தலைவனது துணிவு கேட்டல், இலக்கண விளக்கத்தை அடியொற்றித் தலைவி நாணத்தை விடல் ஆகியனவற்றைக் கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றியது சுவாமிநாதம்.

உடன்போக்கில் செல்லும்போது தலைவி தளர்வதை வீரசோழியம் மொழியும்.

உடன்போக்கிடையீட்டில் வீரசோழியம் தலைவி உறவினருடன் சேராது தலைவன் வயத்திருப்பதை இயம்பும். அகப்பொருள் விளக்கமானது தலைவி தன் செலவைத் தோழியருக்கு அறிவிக்க வேண்டல், அந்தணரிடம் மொழிதல், தமர் பின்தொடர்தலைத் தலைவனுக்கு உரைத்தல், தமருடன் செல்பவள் புறநோக்கிக் கவன்றாற்றல் என்று மொழியும். இவற்றையே மாறனகப்பொருளும் பின்பற்றும். இவற்றை இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் பின்பற்றுவதோடு தலைவி, தலைவனது புறநோக்கிக் கவன்றரற்றல் என்றுரைக்கும்.

மீட்சியில் தலைவி தம் வரவை ஆயத்தாருக்குக் கூற வேண்டுதலை இறையனாரகப்பொருள் உரையும் தமிழ்நெறி விளக்கமும் நவிலும். தலைவி புதல்வரைப் பெறுதல், தனது நிலையைக் கூற வேண்டிப் பெற்றோருக்குத் தூது விடுத்தல் என்று வீரசோழியம் விரித்துரைக்கும். இறையனாரகப்பொருள் உரையை அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் பின்பற்றியுரைக்கின்றன.

வரைவு மலிவில் தலைவி நற்றாயினது உள்ளத்து மகிழ்ச்சியை நினைத்தல், உவகை ஆற்றாது உளத்தொடு கிளத்தல் ஆகிய கூற்றுகளை அகப்பொருள் விளக்கம் கூறும். இவற்றையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றுகின்றன.

மலிவின்போது கூறும் தொல்காப்பியக் (1093;1-4) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

மலிவின்போது தலைவி தான் ஆற்றியிருந்த காரணத்தைக் கூறும் அகப்பொருள் விளக்கக் கூற்றை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றியுரைக்கின்றன.

ஊடலின்போது தன் அடிமேல் வீழ்ந்த தலைவனைத் தலைவி எங்கையர் கண்டால் நன்றாயிருக்கும் என்று கூறுதலைத் தொல்காப்பியம் மொழியும். இதனையே அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் உரைக்கின்றன.

தலைவி புதல்வனை ஈன்ற நிலையில் அவளைக் காணத் தலைவன் வர அவனை நீக்குமிடத்துத் தலைவி கூறும் தொல்காப்பியக் கூற்றை வீரசோழியம் புலவியின் காரணமாக ஊடல் கொள்ளல் என்று சுட்டும். இக்கருத்தையே அகப்பொருள் விளக்கம். மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியனவும் பின்பற்றும், சுவாமிநாதமும் இதனைப் பின்பற்றுவதோடு வெள்ளணி அணிதல், அணிந்து விடல் என்ற இரண்டினைக் கூடுதலாக மொழியும்.

தலைவி, வாயில்களிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் இயம்பும். இதனைத் தலைவி, தலைவனுக்கு வாயில் மறுத்தல், தோழிக்கு வாயில் மறுத்தல், தலைவன் மீது ஊடல் கொள்ளல் என தமிழ்நெறி விளக்கம் விரித்துரைக்கும். வீரசோழியம், பாங்கன் முதலிய வாயில்களிடத்து வாயில் மறுத்தல், தலைவனை ஏற்றுக்கொள்ளல், பேராச் சீற்றமொடு முனிந்து கூறல், மீண்டும் விருந்தினரோடு சென்ற தலைவனை ஏற்றுக்கொள்ளல், தலைவி உவற்றல் என்று மொழியும். வீரசோழியத்தைத் தழுவி அகப்பொருள் விளக்கமும் மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் உரைக்கும். தமிழ்நெறி விளக்கத்தைத் தழுவி முத்துவீரியம் நவிலும். இலக்கண விளக்கத்தைத் தழுவி சுவாமிநாதம் உரைப்பதோடு வாயில்களிடம் முனிதல், பழித்துக் கூறல், மீண்டும் வாயில் நேர்தல், ஊடல், புறங்காட்டுதல் என்று விரித்துரைக்கும்.

பரத்தையைக் கண்டதுபோல் கூறிப் புணர்ச்சியை மறுத்துப் பிறகு ஏற்றுக்கொள்ளுதலைத் தொல்காப்பியம் கூறும். இதனை வீரசோழியம், தலைவன் பின்முறை வதுவை செய்து கொள்ளலைத் தானும் மகிழ்வுடன் ஏற்பது போன்றிருத்தல், இதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், எல்லா ஏற்பாடுகளையும் தான் செய்தது போலப் பிறரிடம் கூறல், பரத்தையை எங்கை என்றல், பரத்தையை எதிர்கோடல், இல்லறத் தலைவிக்குரிய மாண்பினைப் பெறல் என்று விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது காமக்கிழத்தியைக் கண்டது கூறல் என்று கூற மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் இதனைப் பின்பற்றும் முத்துவீரியம் புனலாடியதைக் கூறி ஊடல் கொள்ளல், கலவி கருதி ஊடுதல், சினத்துடன் ஊடல் கொள்ளல், புணர்ச்சிக்கு உடன்படுதல், புதல்வன் மேல் வைத்து ஊடல் தீர்த்தல் என்று மொழிவதுடன், இலக்கண விளக்கத்தைத் தழுவும். இலக்கண விளக்கத்தைச் சுவாமிநாதம் பின்பற்றுவதோடு ஆறுகிலாது ஊடல், பாலனைப் பழித்துரைத்தல் என்பனவற்றையும் கூறும்.

ஊடலின்போது நிகழ்த்தும் தொல்காப்பியக் (1093;15-27, 32-41) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

தலைவன் பரத்தையரிடத்துப் பிரிந்துழி தலைவி ஆற்றாதிரங்கல், தலைவனது புறத்தொழுக்கினை இயம்பல், தலைவனை ஏற்றுக்கொள்ளல் ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் சுட்டும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றும். முத்துவீரியம் தலைவனது பிரிவால் வருந்துதல் நான் அல்லது பிறர் யாருளர் என்று வருந்தல், கனவால் வந்த இன்பத்தையும் இழந்தேனென்றல், விளக்கொடு வெறுத்துக் கூறல், வாயில் மறுத்தல் பள்ளியிடத்து ஊடுதல், அயலார் நமக்குத் தர நாம் அவனை

எய்தும்படியாயிற்றென்றல், கலவியைக் கருதிப் புலத்தல், பரத்தையை நோக்கி நகைத்துக் கூறல், இயற்படமொழிதல் என்று கூறும். சுவாமிநாதம் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றுவதோடு செவ்வணி அணிதல், அணிந்து விடுதல் என்று இரண்டு கூற்றுகளைக் கூடுதலாக மொழியும்.

அகப்பொருள் விளக்கமானது மைந்தனும் ஆற்றாமையும் வாயிலாக வர வரவெதிர்கோடல், மைந்தனை இனிதிற் புகழ்தல், தலைவனைப் புகழ்ந்துரைத்தல் என்று கூறும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் பின்பற்றும். சுவாமிநாதம் தலைவனைப் புகழ்ந்துரைத்தலை மட்டும் விடுத்து, பிற கூற்றுகளை இலக்கண விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கூறியுள்ளது.

இறையனாரகப்பொருள் உரையானது தலைவி தற்புகழ்தல், பரத்தையர்மாட்டுப் பிரிதல் தக்கதன்றென்றல் என்று மொழியும்.

தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி ஆற்றாது புலம்புவதாகத் தொல்காப்பியம் கூறுதலை முத்துவீரியம் மட்டும் தலைவன் ஓதற்பிரிவின்போது தலைவி வருந்துவதாக இயம்பும்.

வேந்தர்க்குற்றுழிப்பிரிவில் தலைவி கார்மீது வைத்துரைத்தலை இறையனாரகப்பொருள் உரை மொழியும். வீரசோழியம் தலைவன் நினைவாகவே இருத்தல், வேட்கையால் ஆற்றாதிருத்தல், ஆற்றுவேன் என்றல், முன்பு இன்பம் செய்தவை தற்போது வேறுபட்டதைக் கூறல், ஆற்றாமையால் வருந்தல், கார் கண்டு மொழிதல், கார் அன்று என்றல் அந்திப்பொழுது, ஆம்பல் போன்ற பொருள்களிடத்து தன் ஆற்றாமையைக் கூறல் என்றுரைப்பதோடு இறையனாரகப்பொருள் உரையைத் தழுவும். இதனைப் பின்பற்றி முத்துவீரியம் கூறுவதுடன்

கூதிர் கண்டு ஆற்றாதிருத்தல், முன்பனி கண்டு நோதல், இளவேனில் கண்டு துன்பமுறுதல், கார்ப்பருவமே என்றல் என்றும் மொழியும்.

காவற்பிரிவில் தலைவி, தலைவன் பிரிவு கேட்டு ஆற்றாதிருத்தலை முத்துவீரியம் இயம்பும்.

பொருள்வயிற் பிரிவில் தலைவி ஆற்றாதிருத்தல், கானத்தியல்பு உரைத்தல், வன்பொறை எதிரழிந்து மொழிதல் என்பனவற்றை இறையனாரகப்பொருள் உரை மொழியும். இதனைப் பின்பற்றித் தமிழ்நெறி விளக்கம் கூறுவதுடன் நோதல், ஆற்றுவேன் என்றல் என்று மொழியும். வீரசோழியம் தலைவி தன் விருப்பத்தை இரந்து கூறல், கார் கண்டுரைத்தல் என்று கூறும். தமிழ்நெறி விளக்கத்தைப் பின்பற்றி முத்துவீரியம் சுட்டுவதுடன் திணைபெயர்த்துரைத்தல், இகழ்ச்சி நினைந்து இரங்கல் என்று கூறும்.

இளவேனிற் பருவங்கண்டு ஆற்றேனாகின்றேன் என்று தலைவி தோழிக்குரைப்பதை இறையனாரகப்பொருள் உரை இயம்பும்.

இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்துத் தலைவி கூறும் தொல்காப்பியக் கூற்று பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

சான்றெண் விளக்கம்

1. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.55
2. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், பக்.33-34
3. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.27
4. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.34
5. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.232
6. செ.வை.சண்முகம் (ப.உ.), சுவாமிநாதம், ப.171
7. தொல்.1057, 1058, 1059, 1093
8. தொல்.1053, 1057, 1058, 1059, 1093
9. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகார்ம் (உரைவளம்) களவியல், ப.157
10. மேலது, ப.163
11. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், (6;34-35), ப.92
12. மேலது, பக்.118-120
13. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.130
14. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், பக்.177-178
15. க.ரத்தினம், சங்க அகப்பாடல்களில் கூற்று, பக்.31-32
16. வி.நாகராசன் (உ.ஆ.), குறுந்தொகை (மூலமும் உரையும்), ப.700
17. மேலது, ப.13

18. கா.சுப்பிரமணிய பிள்ளை, பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, பக்.105-109

19. S.Ilakkuvanar, Tholkappiyam (in English) with Critical Studies, P.179

20. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.162

21. மு.அருணாசலம் பிள்ளை (ஆ.உ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.424

22. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், பக்.163-177

23. மேலது, ப.192

24. மேலது, பக்.183-184

25. மேலது, ப.180

26. மேலது, ப.185

27. மேலது, ப.186

28. மேலது, ப.187

29. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.163

30. புலவர் குழந்தை (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பகுதி), ப.117.

31. தி.சு.பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார்), பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, ப.21

32. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.30), ப.76

33. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.106

34. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.40), ப.85

35. மேலது (உ.41), ப.86

36. மேலது (உ.64), ப.105

37. மேலது (உ.70), ப.113

38. மேலது (உ.65), ப.106

39. மேலது (உ.71), ப.114

40. ஈ.கோ.பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப.42

41. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.144

42. மேலது, ப.145

43. மேலது, ப.146

44. மேலது, ப.150

45. ஈ.கோ.பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப.52

46. மேலது, ப.63

47. புலவர் குழந்தை (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பகுதி), பக்.228-229

48. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.134

49. மேலது, ப.134

50. புலவர் குழந்தை (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பகுதி), ப.19

51. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.121

52. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.81), ப.122

53. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.130

54. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.96

55. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.185

56. மேலது, ப.185

57. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.366

58. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.165

59. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.368

60. மேலது, ப.377

61. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.169

62. மேலது, ப.170

63. மேலது, ப.171

64. மேலது, ப.178

இயல் நான்கு

தோழி கூற்று

தோழி கூற்று

அக இலக்கணங்களில் முக்கிய மாந்தராகக் கருதப்படுபவள் தோழி. இவள் நுண்ணறிவு வாய்ந்தவள். அனைவருடனும் உள்ளங் கலந்து உரிமையுடன் பழகக் கூடியவள். தலைவியின் பக்கத்தில் இருந்து அவளைப் பேணும் தகைமை பெற்றவள். தலைவிக்குத் தோழியர் பலர் இருப்பினும் இத்தோழியே சிறந்தவள். இயற்கைப் புணர்ச்சியின் மூலம் தலைவியின் மனநிலையை அறிந்து தோழியிற் கூட்டம் முதல் பல்வேறு சூழல்களில் குடும்பப் பண்பிற்கும் பெருமைக்கும் இழுக்கு ஏற்படாத வண்ணம் செயலாற்றக் கூடியவள். இத்தகைய சிறப்பிடம் பெற்ற தோழியின் கூற்றுகளைப் பிற அக இலக்கணங்களோடு ஒப்பிட்டு அறிவது இவ்வியலின் நோக்கமாக அமைகிறது.

தோழி

தோழி, தலைமக்கள் அக வாழ்க்கையில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு அவர்களுக்குத் துணைபுரிபவள். உலகியலறிவு மிக்கவள். இருவரது உள்ளக் குறிப்பையும் அறிந்து, நன்கு ஆராய்ந்து செயல்படக் கூடியவள். இத்தகைய சிறப்பிடம் பெற்ற தோழி செவிலியின் மகள். இதனைத் தொல்காப்பியம்,

"தோழி தானே செவிலியது மகளே"

(தொல்.1071)

என்று உணர்த்தும். மேலும் இவள், வருகின்ற இடையூறுகளை நீக்கிப் பாதுகாப்பைத் தனது கடமையாகக் கொண்டிருப்பதால் மன வலிமை உடையவள் (1185). இவள் தலைவியோடு ஒன்றின நெஞ்சையுடையவள் என்பதுபட "ஒன்றித் தோன்றும் தோழி" (985;10) என்றும் தலைவியின் அன்பிற்குரியவள் என்ற வகையில் "பெட்டவாயில்" (1048;10) என்றும் செயல் திறம் வாய்ந்தவள் என்ற வகையில் "தாங்கருஞ் சிறப்பின் தோழி"

(1060;46) என்றும் சுட்டப்பெறுவாள். தலைவியைக் குறித்துத் தன் மனத்துள்ளே ஆராய்தற்கும் தலைவிக்குச் சூழ்ச்சித் துணையாக இருந்து அறிவுரை வழங்குதற்கும் உரிய தோழமை நிலையிற் பொலிவு பெற்று விளங்குபவள் (1072).

தோழியின் இலக்கணத்தை, 'தோழியென்பாள் செவிலிக்கு மகளாய் நன்மையும் தீமையும் ஆராய்தலுடனே தலைமகட்கு உசாத்துணையாய் அவளது வருத்தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணையாம்' என்று கா.ர.கோவிந்தராச முதலியாரும்[1] புலவர் சேயொளியும்[2] இயம்புவர்.

ந.சுப்புரெட்டியார், "தலைவியினுடைய செயல்கள் யாவற்றையும் இவள் அறிவாள். இவள் தன்னலம் சிறிதும் இல்லாது, தலைவன் தலைவியரது நலத்தைமட்டிலும் கருதிப் பலவகை இடுக்கண்களுக்கிடையிலும் சாமர்த்தியமாகச் செயலாற்றும் திறனுடையவள். தலைவனைக் கண்டவுடன் மயங்கிவிடும் தலைவி போலாது, பல நாளும் தலைவனுடைய குணங்களை ஆராய்ந்து தேர்ந்து, முடிவில் தலைவியிடம் அவனைக் கூட்டுவிப்பாள். எனவே, அகப்பொருள் நூல்களில் காணப்பெறும் இவள் உலகியலறிவு மிக்கவளாகத் திகழ்கின்றாள்"[3] என்பர். தோழியின் அறிவுத் திறத்தை ஈ.கோ.பாஸ்கரதாஸ், "தலைவியின் வாழ்க்கையில் சிறப்புமிக்க பங்கு பெறுபவள் தோழி. எனவே, தோழி 'பாங்கி' எனப்பட்டாள். தலைவன், தலைவி ஆகியோர் தம் உள்ளக் குறிப்பை, அவ்வப்போது வெளிக்கொணர்வதில் தோழி வல்லவள். இதனால், அவள் பெறும் இடம் தன்னிகரற்றதாகும்"[4] என்றும் "தலைவன், தலைவி ஆகியோர்தம் உள்ளக் குறிப்பை அறிய முற்படும் தோழியின் உளவியல் அறிவு வியத்தற்குரியது. தன்னை ஒத்த வயதுடையோரின் பாலுணர்ச்சிகளை

ஆராய முற்படுகையில், தோழியின் பொறுப்புணர்ச்சி நம் உள்ளத்தைத் தொடுகிறது. தோழியே பாலுணர்ச்சிகளைப் பெறும் பருவத்தாள். அவள், தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினாள். அதனோடு மட்டுமல்லாமல், தன் தோழியாகிய தலைவியின் உணர்ச்சிகளையும், அவளை நாடி வரும் தலைவனின் உணர்ச்சிகளையும் நெறிப்படுத்தும் திறம், அவள் பண்பை உயர்த்திக் காட்டுகிறது. சிறிய வயதிலேயே முதிர்ந்த அறிவைப் பெற்ற அவளைச் 'சிறுமுதுக்குறைவி' எனப் போற்றுதல் தகும்"[5] என்றும் எடுத்துரைப்பர்.

கூற்று - வரையறை

தொல்காப்பியம் கூறும் தோழி கூற்றுகள் *(985, 1060, 1096)* ஐம்பத்தெட்டு. இவள் களவிலும் *(1445)* கற்பிலும் *(1446)* கூற்றுக்குரியவள். வாயில்களுள் *(1139)* ஒருவராகவும் திகழக்கூடியவள்.

சூழல்

தோழி, களவில் மதியுடம்பாடு, சேட்படை, மடல்விலக்கு, குறைநேர்தல், குறை நயப்பித்தல், இருவகைக் குறி, ஒருவழித்தணத்தல், வரைவு வேட்கை, வரைவு நீட்டிப்பு, வரைவுகடாதல், அறத்தொடு நிற்றல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு, உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், வரைவுமலிவு, வரைந்து கோடல், இல்வாழ்க்கை, ஊடல், பிரிவு ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்துவாள்.

மதியுடம்பாடு

தோழி, தன் அறிவோடு, தலைவன் தலைவி ஆகிய இருவரது அறிவையும் ஒன்றுபடுத்தி உணரும் மதியுடம்பாட்டினைத் தொல்காப்பியம்,

"குறையுற உணர்தல், முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்என
மதியுடம்படுத்தல் ஒரு மூவகைத்தே"

(தொல்.1073)

என்று இயம்பும். மதியுடம்படுத்தலை இறையனாரகப்பொருள், "தோழிக் குணர்ச்சி" (7;3) என்றும் அகப்பொருள் விளக்கம் "பாங்கி மதியுடன்பாடு" (138;3) என்றும் மாறனகப்பொருள் "மதியுடன்படல்" (30;1) என்றும் சுட்டும். இறையனாரகப்பொருளைப் (சூ.7;3) பின்பற்றி இலக்கண விளக்கம் (506;3) எடுத்தியம்பும்.

க.வெள்ளைவாரணன், "பாங்கி மதியுடம்பாடாவது, தலைவன் தலைவி என்னும் காதலர் இருவரது அறிவினையும் தோழி தன்னறிவினால் ஒருங்கு வைத்து ஆராய்ந்து அவ்விருவரிடையே நெருங்கிய தொடர்புண்மை துணிதல்"[6] என்பர். கா.ர.கோவிந்தராச முதலியார், "பாங்கி, தலைவியின் வேறுபாடு கண்டு புணர்ச்சி உண்மை அறிந்து ஆராய்ந்து தன் மதியை உடன்படுத்தல்"[7] என்றும் நா.பாலகிருட்டினன், "தோழி, தலைவன் தலைவி ஆகிய இருவர் கருத்தினையும் தன் கருத்தினோடு ஒன்றுபடுத்தி ஆராய்தல் பாங்கி மதியுடம்பாடு"[8] என்றும் இயம்புவர்.

இவற்றால் தோழி, தலைமக்கள் இருவரது உள்ளக் கருத்தையும் தன் அறிவோடு ஆராய்ந்து புணர்ச்சி உண்மையை அறிதல் மதியுடம்பாடு என்பது பெறப்படும்.

இச்சூழலில் தோழி நிகழ்த்தும் கூற்றுகள் தொல்காப்பியத்தில் இரண்டு (1060). இறையனாரகப்பொருள் உரையில் (சூ.6,7) எட்டு, தமிழ்நெறி விளக்கத்தில் (17) இரண்டு, வீரசோழியத்தில் (குறிஞ்.நடை..) ஒன்று, அகப்பொருள் விளக்கம் (139, 140, 141), களவியற்காரிகை (31,

32), மாறனகப்பொருள் (31, 32, 33), இலக்கண விளக்கம் (507) ஆகிய ஒவ்வொன்றிலும் எட்டு, முத்துவீரியத்தில் (840, 841, 842, 843) பன்னிரண்டு, சுவாமிநாதத்தில் (91, 92) இருபது என வரையறுக்கப்பட்டுள்ளன.

முன்னுறவுணர்தல்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், தலைவியின் உடல் வேறுபாட்டைக் கண்ட தோழி, பல்வேறு வகையில் அவளை மறைமுகமாக வினவி, கூட்டமுண்மையை அறிந்துகொள்ளுதல் முன்னுறவுணர்தல் எனப்படும். இதனை இளம்பூரணர், "அவன் குறையுறாவழித் தலைவி குறிப்புக் கண்டு உணர்தல்"[9] என்றும் நச்சினார்க்கினியர், "முன்உற உணர்தல் - முன்னம் மிக வுணர்தல்"[10] என்றும் சுட்டுவர். க.வெள்ளைவாரணன், "முன்னுறவுணர்தல் என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர்த் தலைமகளது வேறுபாடு கண்ட தோழி, 'இவளது மேனி வேறுபாடு தெய்வத்தாலாயிற்றோ பிறிதொருவாற்றான் ஆயிற்றோ என ஐயுற்றுக் குறிப்பினால் உணர்தல்"[11] என்பர். "முன்னுறவுணர்தல் என்பது - இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று அவள் கண்சிவப்பும் நுதல் வேறுபாடுங் கண்டு கரவு நாடி உணர்வதாயிற்று என்றவாறு"[12] என்று நக்கீரர் சுட்டுவர். "முன்னுறவுணர்தலாவது; பாங்கி தலைமகளது வடிவு வேறுபாடு கண்டு, அதனானே கூட்டம் உண்மையறிதல்"[13] என்பர் கா.ர.கோவிந்தராச முதலியார்.

வளர்ச்சி

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே முன்னுறவுண்மையைத் தோழி, நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு என்ற ஏழினாலும் தலைவியிடம் நிகழும் வேறுபாடு

கொண்டு தெளிந்து புணர்ச்சி உண்டென்பதை உணர்வாள். பிறகு தோழி, தலைவியிடம் மெய்யும் பொய்யும் கலந்து தலைவிக்குக் குற்றேவல் செய்யும் தன்மையில் தப்பாமல், பல்வகை மறைபொருள்படக் கூறி ஆராயுமிடத்துக் கூற்றுத் தோன்றும். இதனை,

"நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடுள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்"

(தொல்.1060;1-6)

என்று தொல்காப்பியம் நவிலும். இந்நூற்பாவடியிலுள்ள 'மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்' என்பதற்கு நச்சினார்க்கினியார், "பிறைதொழுவா மெனவும், கணை குளித்த புண்கூர் யானை கண்டனெனெனவும், தன் பெருமைக்கு ஏலாத சிறுசொற் கூறிக் குறைவுற்று நிற்கின்றான் ஒருவனுளன் அவனை நீயுங் காண்டல் வேண்டுமெனவும், அவன் என்னைத் தழுவிக் கொண்டு குறை கூறவும் நான் மறுத்து நின்றேனென்றாற் போலவும் மெய்யும் பொய்யும் விராயும் பிறவாறாகவுங் கூறுவன பல்வேறு கவர் பொருளாம்"[14] எனவும் உரைப்பர்.

இக்கூற்றினை இறையனாரகப்பொருள் (சூ.7) உரையானது தோழி, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர் தலைவியின் தோற்ற வேறுபாடு கண்டு தெய்வத்தினால் ஆயிற்றா, வேறொன்றால் ஆயிற்றா என்று ஐயுறல்,[15] இவ்வேறுபாடு சுனையாடியதால் நிகழ்ந்ததென்றால் நானும் சுனையாடுவேன் என்று 'சுனை வியந்துரைத்தல்,'[16] தலைவியின்

புணர்ச்சி உண்மையறிய தான் முதலில் திங்களைத் தொழுது பிறகு தலைவியைப் 'பிறை தொழுக என்றல்,'[17] தலைவி, பிறைதொழாது நாணி நிற்பதைக் கண்ட தோழி பின்னும் அவள் வழியே சென்று இதனை அறிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்து நீ போய்ச் சுனையாடி வாவென்று கூற அவளும் போய், சுனையாடாது தலைவனோடு சேர்ந்து தலைவியின் மேனி வேறுபட்டு வந்ததைக் கண்டு அவளை வரையுறை தெய்வமென்று புனைந்து கூறல்,[18] தலைவியிடத்து நெருங்கி நின்று ஒரு புலி ஒருவனை எதிர்ப்பட்டதென 'நடுங்க நாடல்,'[19] இறையனாரகப்பொருள் (சூ.6) உரையைத் தழுவி கூட்டம் உண்மையறிந்த தோழி, இருவருக்கும் உயிர் ஒன்றே என்று 'இருவர் நினைவும் ஒருவழி உணர்தல்'[20] என்பனவற்றை மொழியும். இதனை (சூ.7) அடியொற்றித் தமிழ்நெறி விளக்கமானது 'ஐயுறல்' (17;1) என்று கூறும். வீரசோழியமானது தலைவியின் கண் சிவப்பு வேறுபாடு கண்டு தான் ஐயுற்ற நிலையை நீக்கிக்கொள்ள, நீ வாடியது என்னவென்று வினவலைக் (குறிஞ்.நடை;28-29) குறிப்பிடும். தமிழ்நெறி விளக்கத்தைத் (17;1) தழுவி அகப்பொருள் விளக்கமானது 'நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு என்ற ஏழினாலும் ஐயுறல்' (139;1-3), இவ்வேழு வகையினாலும் புணர்ச்சி உண்டென்பதைக் கருதிய தோழி, தலைவியிடத்துள்ள 'ஐயத்தைத் தீர்த்துக்கொள்ளல்' (139;4), இறையனாரகப்பொருள் உரையைத் (சூ.7) தழுவி 'மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருள் சொல்லினாடல்' (139;5-6) ஆகியனவற்றை மொழியும். வீரசோழியத்தை (குறிஞ்.நடை;28-29) அடியொற்றிக் களவியற்காரிகை 'அயிர்த்துரைத்தல்' (31;1-2), இறையனாரகப்பொருள் (சூ.7) உரையைத் தழுவி 'சுனை வியந்து கூறல்,' 'அம்புலி,' 'சுனை மிகுத்துரைத்தல்,' 'நடுங்க நாடல்' (31;3-6) ஆகியனவற்றை எடுத்துரைக்கும். அகப்பொருள்

விளக்கத்தைத் (139;1-6) தழுவி மாறனகப்பொருளும் (31;2-6) இலக்கண விளக்கமும் (507;1-6) கூறும். களவியற்காரிகையைத் (31;1-2,4-6) தழுவி முத்துவீரியமானது 'வாட்டம் வினாதல்' (841;1), 'பிறைதொழுகென்றல்,' 'வேறுபடுத்தி உரைத்தல்' (843;1-2), இவ்வாறு வேறுபடுத்திக் கூற, தலைவி நாணுவதைக் கண்டு குங்குமம் அழியாது சுனையாடக் கூடுமாயின் நானும் சுனையாடலை விரும்புகின்றேன் என்று 'நகைத்துரைத்தல்,' இவ்வாறு நகைத்த தோழி, நீ ஆடிய சுனை கண் சிவப்பவும் வாய் வெளுப்பவும், உன் கூந்தலில் மலர்மாலை சூட்டவும் வல்லதோ என்று குறிப்பாகப் 'புணர்ச்சி இயம்பல்' (843;3-4), இறையனாரகப்பொருள் (சூ.6,7) உரையைத் தழுவி, 'பொதுவெனக் கூறி மதியுடம்படுதல்,' 'புலிமிசை வைத்துப் புகறல்' (843;4-5, 7) ஆகியனவாக எடுத்துரைக்கும். இலக்கணவிளக்கத்தைச் (507 ; 1-3, 5-6) சுவாமிநாதம் (91 ; 7-8, 92;1) பின்பற்றுவதுடன் முத்துவீரியத்தைத் (843;1-2,7) தழுவிப் 'பிறைதொழு என்றிடல்,' 'தகையணங்குறுத்தல்,' 'நடுங்க நாடுதல்' (92;1,3), 'களவினை உணர்ந்து கொள்ளல்', 'நாணமுறும்படிச் செய்தல்' (92 ; 2-3), களவியற்காரிகையைத் (31 ; 3) தழுவிச் 'சுனை வியத்தல்' (92;2) ஆகியனவாக விரித்துரைக்கும்.

குறையுற உணர்தல்

குறையுற உணர்தல் என்பதை நச்சினார்க்கினியர், "தலைவன் தோழியை இரந்து குறையுற்றவழி உணர்தல்"[21] என்றும் க.வெள்ளைவாரணன், "குறையுறவுணர்தல் என்பது தலைவன், தோழியின்பால் குறையிரந்து நின்ற நிலையில் 'இவன் என்னை இரந்து பின் நிற்கின்றது எது கருதியோ' என ஆராய்ந்துணர்தல்"[22] என்றும் விளக்குவர். நக்கீரர், "குறையுறவுணர்தல் என்பது - அவன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலைமுனியாது நிற்ப, ஒக்கும். இவன் இரந்து பின்னிற்கின்றது இவள் காரணமாகப்போலும் என உணர்வது"[23]

என்றுரைப்பர். கா.ர.கோவிந்தராச முதலியார், "குறையுறவுணர்தலாவது, தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பது கண்டு, அதனாலே கூட்டம் உண்மையறிதல்"[24] என்றும் கு.சுந்தரமூர்த்தி, "தலைமகன் குறையுறத் தோழி அதனைத் துணிந்துணரா நிற்றல்"[25] என்றும் எடுத்துரைப்பர்.

இவற்றால் தோழியிடம் தலைவன் குறையுற்று நிற்க, அவனது உள்ளக் கருத்தினை உணர்ந்து கூட்டமுண்மையை அறிந்துகொள்ளல் குறையுற உணர்தல் என்பது பெறப்படும்.

புதிய கூற்றுகள்

தலைவியின் தோழியை அறிந்த தலைவன், அவளைத் தூதாகப் பெற்று கண்ணியும் தழையும் ஏந்தி ஊர், பெயர், கெடுதியோடு ஒழிந்தனவும் வினவுவான். அப்போது தோழி, இவர் மனத்தெண்ணம் யாதோ எனத் தனது மனத்தில் ஆராய்வதை[26] இறையனாரகப்பொருள் (சூ.7) உரையானது இயம்பும். தமிழ்நெறி விளக்கமானது இவ்வாறு தலைவன் இரந்து பின்னிற்றல் தலைவியை அடைதற்காகவென்று துணிந்து தெளிவதைச் (17;3) சுட்டும். இறையனாரகப்பொருள் (சூ.7) உரையைத் தழுவி, அகப்பொருள் விளக்கம் மொழிவதுடன் இவ்வாறு வினவி நின்றவர் யாரோ (140;1-5) என்பதையும் கூடுதலாக இயம்பும். தமிழ்நெறி விளக்கத்தைத் (17;3) தழுவி 'எண்ணம் தெளிதல்' (140;5) என்று இயம்பும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை 'குறையுணர்தலை'க் (31;7-8) கூறும். அகப்பொருள் விளக்கத்தையும் (140;1-5) களவியற்காரிகையையும் (31;7-8) தழுவி மாறனகப்பொருளும் (32;1-5) இலக்கண விளக்கமும் (507;7-11) சுட்டும். முத்துவீரியம் குறையுற்று நின்றவனது குறிப்பு தலைவியிடத்து உள்ளதென்று 'அவனது குறிப்பையும்' தலைவியின் குறிப்பு

தலைவனிடத்துள்ளது என்று 'அவளது குறிப்பையும் அறிதல்' (842;1-2), இலக்கண விளக்கத்தைத் (507;11) தழுவி 'அவர் நினைவெண்ணல்' (842;2) என்று கூறும். இலக்கண விளக்கம் (507;7-11) ஒரு கூற்றாகக் கூறியதை சுவாமிநாதம் 'எண்ணம் யாது,' 'இவர் யார் என்று ஓர்தல்' (92;6) என்று இரண்டு கூற்றாக விரித்துரைப்பதோடு இலக்கண விளக்கத்தை (507;11) அடியொற்றி 'மெய் தெளிதல்' (92;7) என்றும் கூறும். இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்

தலைவியும் தோழியும் ஒருங்கிருக்கும்போது தலைவன் கையுறை கொண்டு வந்து ஊரும் பெயரும் பிறவும் வினவுவான். பிறகு இத்தழை நுமக்கு ஏற்றது எனவும் இவ்வணி நீவிர் அணிதற்கு ஏற்றது எனவும் கூறி அவள்பாற் குறை வேண்டுவான் போல நிற்பான். அப்போது தோழி, அவ்விருவர் மெய்ப்பாடுகளையும் உணர்ந்து கூட்டமுண்மையை உணர்வாள். இவ்வாறு இருவரும் உள்வழி அவன் வர உணர்தலை நச்சினார்க்கினியர், "தலைவியுந் தோழியும் ஒருங்கிருந்தவழித் தலைவன் வருதலால் தலைவன் குறிப்புந் தலைவி குறிப்புங் கண்டுணர்தல்"[27] என்று தோழி இருவரது குறிப்பினை உணர்தலை எடுத்தியம்புவர். தலைவன், தோழியிடம் பதியும் பெயரும் பிறவும் வினவ, அதன்மூலம் கூட்டமுண்மையை அறிவதை, "ஐயவுணர்வுகளோடு நின்ற தோழி தானும் தலைவியுமாகிய இருவரும் உடனிருந்த நிலைமைக்கண் தலைவன் அங்கு வந்து தோழியை நோக்கி ஊரும் பெயரும் பிறவும் வினவி நின்றானாக, அந்நிலையில் அவ்விருவர் குறிப்பும் உணர்ந்து தலைவியொடு தலைவனிடை முன்னேயுள்ள தொடர்பினையுணர்ந்து துணிதல்"[28] என்று க.வெள்ளைவாரணனும் 'ஐய வுணர்வோடு நின்றாள், இருவரும் உள்வழி அவன் வந்து நின்று பதியும் பெயரும் பிறவும்

வினாவத் துணிந்து உணரும்'[29] என்று நக்கீரரும் இயம்புவர். "இருவரு முள்வழி அவன்வர வுணர்தலாவது; தலைமகளும் தானும் ஒருங்கிருந்துழித் தலைமகன் அவ்வாறு வரக் கண்டு அதனாலே கூட்டம் உண்மை அறிதல்"[30] என்பர் கா.ர.கோவிந்தராச முதலியார். "தலைமகளும் தோழியுமுள்வழிச் சென்று, தலைமகன் கரந்த மொழியால் தன் கருத்தறிவிக்கத், தோழி யவனினைவறியா நிற்றல்"[31] என்பர் கு.சுந்தரமூர்த்தி.

வளர்ச்சி

தலைவன், இவ்விடத்து யானை வந்ததா, மான் வந்ததா என்று மாயம் சொல்லி வந்தபோது தலைவி சினவாமல் பொறுத்திருந்த காரணம் குறித்தவழியும் கூற்று நிகழ்த்துவதைத் (1060;14-15) தொல்காப்பியம் மொழியும்.

இக்கூற்றை இறையனாரகப்பொருள் (சூ.7) உரையானது, தலைவன், தலைவியும் தோழியும் ஒருங்கிருக்கும்போது தழை கொண்டு வந்து கரந்த மொழியால் தன் கருத்தறிவிக்கத் தோழி, தன் அறிவால் இருவரது மனக் கருத்தையும் உணர்ந்து கொள்ளல்[32] என இயம்பும். 'கையுறை ஏந்தி வந்து அவ்வகை வினாவுழி எதிர்மொழி கொடுத்தல்,' தலைவனை 'நகைத்துரைத்தல்' (141;1-2), இறையனாரகப்பொருள் (சூ.7) உரையைத் தழுவி 'மதியின் அவரவர் மனக் கருத்து உணர்தல்' (141;3) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் கூறும். களவியற்காரிகையானது யானையோடு ஏனம் வினவி பொய் சொல்லுகின்ற இவன் வேட்டையாட வந்தது மெய்யன்று என்று உணர்தல் (32;1-2) என்றும் அகப்பொருள் விளக்கத்தைத் (141;3) தழுவிக் 'கரவு நாட்டம்' (32;3-4) என்றும் மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் (141;1-2) தழுவி மாறனகப்பொருள்

(33;1-3) சுட்டும். இவற்றையே இலக்கண விளக்கம் (507;13-15) அடியொற்றும். களவியற்காரிகையைத் (32;1-2) தழுவி முத்துவீரியம் 'ஐயமழிதல்' (840;1) என்றும் இலக்கண விளக்கத்தைப் (507;15) பின்பற்றி 'அறிவு நாடல்' (840;1) என்றும் குறிப்பிடும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (507;13-14) தழுவி சுவாமிநாதம் (92;7-8) கூறும். இவ்வாறு தொல்காப்பியக் கூற்றானது பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

சேட்படை

தோழி, மதியுடம்பட்டதனை அறிந்த தலைவன், அவளை அணுகித் தன் குறையை முடித்துக் கொள்ள முயல்வான். அப்போது தோழியைப் பலவாறு வேண்டியும் அவன் மீது இரக்கம் காட்டாமல் மறுத்தும் நகையாடியும் அவனது குறையைத் தீர்க்க உடன்படாமல் மறுத்துரைப்பாள். இதனைச் சேட்படை என்பர். தலைவியின் பெருமையையும் தலைவன் தலைவிபால் கொண்ட அன்பைத் தான் உணர்ந்து கொள்வதற்காகவும் தனது முயற்சியினருமை தோன்றும்படிக் களவை நீட்டிக்காமல் விரைந்து மணந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவும் தோழி தலைவனைச் சேட்படுத்துவாள். இதனை இறையனாரகப்பொருள்,"சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்" (12;2) என்று இயம்பும். இதற்கு உரை வகுத்த நக்கீரர், "சிறை என்பது காப்பு, உற என்பது மிகுதி, கிளத்தல் என்பது சொல்லுதல், சேண் என்பது அகற்றல், பட என்பது நிகழ்தல், நிறுத்தல் என்பது தழீஇக்கோடல் என்றவாறு; காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தழீஇக் கோடலுறும் என்றவாறு; ஆற்றாத் தன்மைக்கண் நிறுத்தல் என்னுஞ் சொல் தழிஇக் கொள்ளும் என்பது; எனவே, தலைமகனை ஆற்றாமை செய்வனபோன்று வைத்து ஆற்றுவிப்பன சிலசொற் சொல்லும் என்பது போந்தது"[33] என்பர். கு.சுந்தரமூர்த்தி, "தலைமகளைக் குறைநயப்பித்துத்

தன்னினாய கூட்டங் கூட்டலுறுந் தோழி, தலைமகனது பெருமையும் தன் முயற்சியருமையும் தோன்றல் காரணமாகவும், இத்துணையருமையுடையாள் இனி நமக்கெய்துதற்கு அருமையுடையளென இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய வரைந்து கோடல் காரணமாகவும், தலைமகனுக்கியைய மறுத்துக் கூறல்"[34] என்று சுட்டுவர். தி.சு.பாலசுந்தரம்பிள்ளையவர்கள், "சேட்படுத்துதலாவது அகற்றுதல்; நடத்தல், நடை என்று நின்றவாறு போலச் சேட்படுத்தல் என்னுந் தல் விகுதியேற்ற இத்தொழிற் பெயர்ச் சொல்லே சேட்படை என்று ஐ விகுதியேற்று நின்றது. இங்குச் சேட்படுத்துதல் என்பது அணுக்கமாய் நினைத்த அவனது நெஞ்ச நினைப்பையேயென்று கொள்க"[35] என்பர். ந.சுப்புரெட்டியார், "சேட்படை என்பதற்குத் தூரவிடல், அகற்றல் என்பன பொருள்கள் ; மறுத்தல் என்பது கருத்து. தலைவியை அடைதல் எளிதென்று நினைத்த தலைவனது நினைவை, அஃது அத்துணை எளிதன்று என்று தோன்றும்படி தோழி அகற்றுதல்"[36] என்றும் புலவர் குழந்தை, "தலைவனைச் சேண்படுத்தல். சேண்-தொலைவு. அதாவது, தம்மையணுகாமல் செய்தல்"[37] என்றும் இயம்புவர். நா.பாலகிருட்டினன், "தோழி, தலைவனது குறையுணர்வாளாயினும் உடனே அதை முடிக்கமாட்டாள். தலைவியின் அருமையைத் தலைவன் உணர வேண்டியும், தலைவன் தலைவிபால் கொண்ட அன்பைத் தான் உணர வேண்டியும் அவனைச் சேட்படுத்துவாள்"[38] என்றுரைப்பர்.

இச்சூழலில் தொல்காப்பியம் (1060) தோழி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்வன ஒன்பது. இறையனாரகப்பொருள் (சூ.12) ஒன்று, உரை எட்டு, தமிழ்நெறி விளக்கம் (17) ஒன்பது, வீரசோழியம் (குறிஞ்.நடை.) பதினொன்று, அகப்பொருள் விளக்கம் (144), களவியற்காரிகை (உ.15,16,17,18, நூ.32,34), மாறனகப்பொருள் (36),

இலக்கண விளக்கம் (509) ஒவ்வொன்றிலும் பத்து, முத்துவீரியம் (846) பதினாறு, சுவாமிநாதம் (93, 94) பத்து எனத் தோழிக்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

தலைவன், தோழியிடம் குறை கூறும்போது, அவனது பெருமை கூறி அகற்றல், தலைவியின் அருமை கூறி அகற்றல், தலைவனது குறையைத் தலைவியிடம் சென்று அறிவித்துப் பின்னர் என்மாட்டு வாவென்றல், தலைவனது முன்னுறு புணர்ச்சியைக் கூறி, அவனது வருத்தத்தை நீக்குதல், தலைவியின் பேதைப் பருவம் கூறல் ஆகிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களிலும் அப்பொருள்படவே மொழியப்பட்டுள்ளன.

தலைவன், தோழியிடம் இரந்து குறை கூறத் தொடங்குவான். அப்போது தோழி, அக்களவினை அறிந்தும் அறியாள்போல, அவனது பெருமை கூறி அவன் குறிப்பினை மாற்றுவதைத் (1060;7-8) தொல்காப்பியம் குறிப்பிடும். இதனைத் தழுவி இறையனாரகப்பொருள் (சூ.12) உரை,[39] வீரசோழியம் (குறிஞ்.நடை;31), அகப்பொருள் விளக்கம் (144;1-2), களவியற்காரிகை,[40] மாறனகப்பொருள் (36;1-2), இலக்கண விளக்கம் (509;1-2), முத்துவீரியம் (846;7), சுவாமிநாதம் (93;5) ஆகியவையும் குறிப்பிடும்.

தொல்காப்பியம் தோழி, தலைவியைக் கிட்டுதற்கு அருமை கூறித் தலைவனை அகற்றுவதை (1060;9) இயம்பும். இதனையே இறையனாரகப்பொருள் (சூ.12) உரையானது 'சொல்லற்கு அருமை சாற்றல்'[41] என்று இயம்பும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் (17;6), வீரசோழியம் (குறிஞ்.நடை ; 31), அகப்பொருள் விளக்கம்

(144;5-6), களவியற்காரிகை,[42] மாறனகப்பொருள் (36;5-6), இலக்கண விளக்கம் (509;5-6), சுவாமிநாதம் (93;7) ஆகியனவும் மொழியும்.

தலைவன், தோழியிடம் மீண்டும் இரந்து குறையுற, நினது குறையை நின்னால் காதலிக்கப்பட்டவளிடத்துச் சென்று அறிவித்துப் பின்னர் என்னிடம் வாவென்றுரைப்பதைத் (1060;9-10) தொல்காப்பியம் மொழியும். இதனைத் தழுவி இறையனாரகப்பொருள் (சூ.12) உரை,[43] தமிழ்நெறி விளக்கம் (17;6), வீரசோழியம் (குறிஞ்.நடை;35), அகப்பொருள் விளக்கம் (144;7-8), களவியற்காரிகை (32;6), மாறனகப்பொருள் (36;7-8), இலக்கண விளக்கம் (509;7-8), முத்துவீரியம் (846;6), சுவாமிநாதம் (93;7-8) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தலைவனைத் தொடர்ந்து சேட்படுத்துவதால் அவன் மனம் வருந்துவதை அறிந்த தோழி, யான் நுமது புணர்ச்சியை அறிவேன் என்று கூறி அவனது வருத்தத்தை நீக்குவாள். இதனைத் தொல்காப்பியம்,

"முன்னுறு புணர்ச்சி முறைநிறுத்துரைத்தலும்"

(தொல்.1060;11)

என்று இயம்பும். இதனையே அகப்பொருள் விளக்கம் (144;11-12), மாறனகப்பொருள் (36;11-12), இலக்கண விளக்கம் (509;11-12), சுவாமிநாதம் (94;1) ஆகியனவும் பின்பற்றுகின்றன.

தோழி, தலைவனிடம் தலைவி பேதைப் பருவத்தாள் எனக் கூறி விலக்குவதை,

"பேதைமை ஊட்டலும்"

(தொல்.1060;10)

என்று குறிப்பிடும். இதனையே வீரசோழியம் 'பொருந்தா வென்றல்' (குறிஞ்.நடை;33) என்று மொழியும். அகப்பொருள் விளக்கம்

(144;9-10), மாறனகப்பொருள் *(36;9-10)*, இலக்கண விளக்கம் *(509;9-10)*, சுவாமிநாதம் *(93;8)* ஆகிய நூல்களும் இக்கருத்தினையே கூறும்.

வளர்ச்சி

தோழி, தலைவனிடம் உலகத்தாரைப் போல தலைவியை மணந்துகொள்ளென்றல், அச்சமுற்ற தன்மையைக் கூறல், நகைமொழி கூறல் ஆகிய பல்வேறு நிலைகளில் சேட்படுத்தல் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

தோழி, தலைவனிடம் உலகத்தாரைப் போல நீயும் தலைவியை மணந்துகொள் எனக் கூறுவதைத் தொல்காப்பியம்,

"உலகு உரைத்து ஒழிப்பினும்"

(தொல்.*1060;8*)

என்று இயம்பும்.

இதனை வீரசோழியம், தோழியிற் கூட்டத்தின்கண் தோழி, தலைவனிடம் தலைவியைக் களவில் கூட விரும்புவது ஊரார் பழிமொழிக்கு இடனாகுமென்று உணர்த்தல், உலகியல் முறைப்படி மணந்து கொள்ளென்று 'பார்த்து உறவு உரைத்தல்' (குறிஞ்.நடை*;32*) என்று விரித்துரைக்கும். இதனையே அகப்பொருள் விளக்கம் *(144;13-14)*, மாறனகப்பொருள் *(36;13-14)*, இலக்கண விளக்கம் *(509;13-14)*, சுவாமிநாதம் *(94;2)* ஆகியனவும் பின்பற்றுகின்றன.

தோழி, தானும் தலைவியும் அச்சமுற்று அஞ்சின தன்மையைத் தலைவனிடம் கூறுவதை,

"அஞ்சி அச்சுறுத்தலும்"

(தொல்.*1060;12*)

என்று இயம்பும். இதற்கு உரை வகுத்த இளம்பூரணர், "யாய் வருவளென்றானும் தமையன்மார் வருவரென்றானும் காவலர் வருவரென்றானும் கூறுதல்"[44] என்பர்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.12) உரை 'காப்புடைத்தென்று மறுத்தல்'[45] என்று கூறும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் (17;3) மொழியும். வீரசோழியமானது மகளிர் தனித்திருக்குமிடத்தில் வேட்கை மிகவால் உரையாடுதல் ஏற்றதன்று என்றல் (குறிஞ்.நடை;37), தமிழ்நெறி விளக்கத்தை (17;3) அடியொற்றி 'நீங்குமின் என்றல்' (குறிஞ்.நடை;37) என்று இயம்பும். இக்கருத்தினை அகப்பொருள் விளக்கம் (144;15), களவியற்காரிகை (32;4), மாறனகப்பொருள் (36;15), இலக்கண விளக்கம் (509;15), முத்துவீரியம் (846;5), சுவாமிநாதம் (94;3) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

தோழி, தலைவனிடம் எண்ணுதற்கரிய பல நகைமொழிகளைக் கூறிச் சேட்படுத்துவதைத் தொல்காப்பியம்,

"எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்"

(தொல்.1060;21)

என்று இயம்பும். இதனை நச்சினார்க்கினியர், "தலைவன் இளிவந்தொழுகுதற்குப் பொறாத தோழி அவன் இளிவரவு உணர்த்துங் கருத்தினளாய்ச் செயற்கையாக ஆராய்தற்கு அரியவாய்வரும் ஒன்றல்லாப் பலநகை குறித்த பகுதிக் கண்ணும்; அவை 'என்னை மறைத்த லெவனாகியர்' (இறை-சூ-12) என்றலும், அறியாள் போறலும், குறியாள் கூறலும், படைத்து மொழி கிளவியும், குறிப்பு வேறு கொளலும் பிறவுமாம்"[46] என்பர்.

இதனைத் தமிழ்நெறி விளக்கம் தலைவன் கையுறையாகக் கொண்டு வந்த தழையை இவ்விடத்துள்ளதன்றெனச் சொல்லி கையுறை

எமக்குத் தகாதென்றல், தலைவியின் குறிப்பறிந்து ஏற்றுக் கொள்வோம் என்றல் (17;8-10) என்று கூறும். வீரசோழியமானது தலைவன் எய்த அம்புடன் பிழைத்து ஓடிய மானைக் கண்டு, அவர் கையில் இருந்த வில், கொலைத் தொழிலில் மிகவும் வலிமையுடையது என்று தோழி நகைத்து மறுத்துரைத்தலை (குறிஞ்.நடை;38) இயம்பும். இதனையே களவியற்காரிகை 'நகைத்துரையாடல்,'[47] என்றும் தமிழ்நெறி விளக்கத்தைப் (17;8-10) பின்பற்றி 'தழை மறுத்துரைத்தல்,'[48] 'குறிப்பறிந்து ஏற்றல்' (34;1) என்றும் மொழியும். களவியற்காரிகையைத் (உ.17) தழுவி முத்துவீரியமானது, 'கோதண்டத்தொழில் வலி சொல்லி மறுத்தல்' (846;7-8), தலைவன், தோழி நகைத்துரைப்பது தழை வாங்குதற்காகவென்று நிற்ப, மீண்டும் தோழி, தழை ஏற்காமல் நிற்றற்குக் காரணமென்னவென்று 'இரங்கி மொழிதல்,' தலைவி தோன்றிய நாள் தொடங்கி இவள் மேனியின் நிறத்திற்குப் பயந்து மாமரங்கள் தளிரை ஈனாததால் இந்நிலத்தில் இல்லாதவற்றை நாங்கள் ஏற்றால் பலருக்கும் வினவுவதற்கு இடமாகும்; ஆதலால் தழை வேண்டாமெனச் 'சிறப்பின்மை கூறல்,' தலைவியின் இளமை கூறித் தழை வாங்க மறுத்தல், மீண்டும் இவளிளமை கூறுகின்றது தழை வாங்குதற்கு என்று நினைத்து நிற்ப, நீ என்னை மறைத்த காரியம் இனி நினக்கு முடியாதென அவனோடு 'நகைத்துக் கூறல்' (846;8-10) ஆகியனவற்றை மொழியும்.

தலைவன், தோழியிடம் கையுறை ஏந்திவந்து குறையுற, அதற்கு அவள் 'இன்னது என் குறை என்று வெளிப்படையாகக் கூறாமல் மறைக்கின்றாய்,' நினது குறையை மறைப்பதால் உனக்காவது என்னவென்பதை மறைக்காமல் சொல்வாயாக என்றுரைப்பதை இறையனாரகப்பொருள் (சூ.12) உரை, 'மறைத்தமை கூறல்'[49] என்று

மொழியும். இதனையே தமிழ்நெறி விளக்கம் (17;3-4), களவியற்காரிகை (32;4-6) ஆகிய நூல்களும் உரைக்கும்.

தோழி, தழையும் கண்ணியும் கொண்டு இரந்து குறையுற்ற தலைவனிடம் என்னுடைய தோழியர், எண்ணிறந்தாருளர். அவருள் நின்னுடைய நினைவு யாரிடத்தது என்று தானறியாதாள் போல வினவுவதை, ‘அறியாள் போன்று நினைவு கேட்டல்’[50] என்று இறையனாரகப்பொருள் (சூ.12) உரை மொழியும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் (17;2), வீரசோழியம் (குறிஞ்.நடை;33), அகப்பொருள் விளக்கம் (144;3-4), களவியற்காரிகை (32;7-8), மாறனகப்பொருள் (36;3-4), இலக்கண விளக்கம் (509;3-4), முத்துவீரியம் (846;11-12), சுவாமிநாதம் (93;6) ஆகிய நூல்களும் எடுத்துரைக்கின்றன.

தலைவன், தோழியிடம் கையுறை பாராட்டி நின்ற நிலையில், அதனை ஏற்றுக்கொள்ளாது மற்றொன்று சொல்லி நீக்குவதை, ‘குறியாள் கூறல்’[51] என்று இறையனாரகப்பொருள் (சூ.12) உரை மொழியும். இதனையே தமிழ்நெறி விளக்கம் (17;5) தழுவும். அகப்பொருள் விளக்கம், தலைவன் கொண்டு வந்த தழை, கண்ணி போன்றவற்றைத் தோழி ஏற்க மறுத்தல், தலைவனது துன்பத்தை ஆற்றுவித்து அஞ்சாதே, நாளை வா என்றுரைத்தல் (144;16-18) ஆகியனவற்றை இயம்பும். தமிழ்நெறி விளக்கத்தைப் (17;5) பின்பற்றிக் களவியற்காரிகை (32;8) கூறும். அகப்பொருள் விளக்கத்தைத் (144;16-18) தழுவி மாறனகப்பொருளும் (36;16-18) இலக்கண விளக்கமும் (509;16-18) மொழிகின்றன. தலைவன், சந்தனத்தழை கொண்டு செல்ல, இத்தழை இவருக்குக் கிடைத்தது எவ்வாறென்று ஆராயப்படுதலால், இத்தழை எமக்காகாதெனத் தோழி மறுத்துரைத்தல், அவன் மற்றொரு தழை

கொண்டு செல்ல, இக்குன்றில்லாத தழையை எமக்கு நீர் தந்தால் எம் குடிக்குப் பழியாகுமென்று மறுத்துரைத்தல், தலைவி இத்தழை வாங்க உடம்படுவாளோ என அவளது நினைவறிந்து ஏற்றுக்கொள்வேன் என்றல், தலைவியின் நினைவறிந்த தோழி, தலைவனிடம் இத்தழை யானேயன்றி அவளும் விரும்புவள் ஆயினும் இதை ஏற்றுக்கொள்ளேனென்று 'படைத்து மொழிதல்', தலைவன், கண்ணியைக் கையுறையாகக் கொண்டு சென்றால் மறுத்தல் இயலாதென்று கழுநீர் மலரைக் கொண்டு செல்வான். அதுகண்ட தோழி, செவிலியர் சூட்டிய கண்ணியின்மீது யானொன்று சூட்டினும் நாணுவாள், அதனால் எவ்வாறு சூட்டுவேனென்றல், வேங்கை மலரன்றி, தெய்வத்திற்குரிய கழுநீர் மலரைச் சூடமாட்டோம், இக்கண்ணி எங்குலத்திற்கு 'இசையாதெனக் கூறல்' (846;1-4) என முத்துவீரியம் விரித்துரைக்கும். இலக்கண விளக்கத்தை (509;16-18) அடியொற்றி சுவாமிநாதம் (94:4-5) இயம்பும்.

தலைவன், கையுறை பாராட்டிய நிலையில் தோழி, இவ்விடம் எம் ஐயன்மாரால் பலமுறை வந்து போகக் கூடியது. அவர் நும்மைக் கண்டால் துன்பம் செய்வர். நுமக்குக் குறை இருப்பினும் அகன்று நின்று முடித்துக் கொள்ள வேண்டும் என்று படைத்து மொழியான் மறுத்துரைப்பதை[52] இறையனாரகப்பொருள் (சூ.12) உரையானது மொழியும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் (17;5) சுட்டும்.

தோழி, குறையிரந்த தலைவனிடம் என்னிடம் நீ வந்ததும் யாம் உமக்குக் குறை நேர்ந்ததையும் தலைவி இன்னும் அறிந்திலள். தலைவி இன்னும் பக்குவம் பெறவில்லை. செவ்வி பெற்றபின் நீர் தழை கொண்டு வரலாம் என்றுரைப்பதை[53] இறையனாரகப்பொருள் (சூ.12) உரை மொழியும். இதனை வீரசோழியம் 'சீர்மலர்க் கோதைக்குச்

செவ்வியன்றென்றல்' (குறிஞ்.நடை;36) என்றும் முத்துவீரியம் 'செவ்வியிலள் என்றல்' (846;5) என்றும் குறிப்பிடும்.

வீழ்ச்சி

தோழி, தலைவன் குறைமுடிக்க உளங்கொண்டு கூட்டத்திற்கு உடம்பட்டு நின்னால் காதலிக்கப்பட்டவள் எத்தன்மையுடையவள் என வினவுவாள். அப்போது தலைவன், தலைவி இப்படிப்பட்டவள் எனச் சொல்வான். அதனைக் கேட்ட தோழி, தலைவனிடம் அவளும் நின் தன்மையள் எனத் தலைவனோடு கூட்டியுரைப்பதைத் (1060;12) தொல்காப்பியம் இயம்பும். இக்கூற்று, பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

மடல் விலக்கு

தலைவன் மடலேறுவேன் என்பதைக் கூறக் கேட்ட தோழி, 'நீவிர் மடலேறத் தகாது. நுமது குறையினை முடித்துத் தருவேன். நும்மால் விரும்பப்பெறுவாள் என்மாட்டுப் பேரருளுடையாள் என்று கூறித் தலைவனை மடல் விலக்குவாள். இத்தகைய சூழலில் பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.9) உரையில் ஐந்து, தமிழ்நெறி விளக்கத்தில் (17) ஒன்று, அகப்பொருள் விளக்கம் (145), களவியற்காரிகை (34), மாறனகப்பொருள் (37), இலக்கண விளக்கம் (509) ஒவ்வொன்றிலும் மூன்று, முத்துவீரியத்தில் (844) ஐந்து, சுவாமிநாதத்தில் (94, 95) மூன்று எனத் தோழி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தலைவன், தோழியிடம் என்குறை நின்னால் முடியாமையின் யான் மடலூர்ந்தாயினும் இக்குறை முடித்துக்கொள்வேன் என்றுரைப்பான். அப்போது தோழி, தலைவனிடம் நீ பேரருள்

வாய்ந்தவன். மடலேறுதல் நும் போன்றோர்க்கு அரியதாம் என்று 'அருளியல் கிளத்தல்,'[54] மடலேறுவார், மடலேறப்படுவார் உருவம் எழுதிக்கொண்டு மடலேறுவர். நுமக்கு அவளது 'மொழிநடை எழுதல் அரிது என்றல்,'[55] அவளது 'அவயவயங்களை எழுதல் அரிது என்றுரைத்தல்,'[56] தனக்கும் அவளுக்கும் உள்ள வேற்றுமையின்மை கூறி, நினது குறையை முடித்துத் தருவேன், தலைவி அருளுடையவள், நீ வருந்த வேண்டாமென்று 'உடம்பட்டு விலக்கல்,'[57] தலைவன் இறந்துபடுவானோ என்று அஞ்சி, அவனது உயிரைத் தாங்கிக் கொண்டு நிற்கும் சொற்களைக் கூறி, குறை முடிக்கும் 'கொண்டு நிலை கூறல்'[58] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.9) உரை இயம்பும். தமிழ்நெறி விளக்கமானது தலைவனின் அருளியல் கூறி 'மடலேற்று விலக்கல்' (17;11) என்று கூறும். இறையனாரகப்பொருள் (சூ.9) உரையைத் தழுவி அகப்பொருள் விளக்கமானது தோழி, தலைமகள் 'அவயத்து அருமை சாற்றல்,' தோழி தலைவனின் 'அருளியல் கிளத்தல்,' 'கொண்டுநிலை கூறல்' (145;4-5, 7-8) ஆகியனவற்றைக் குறிப்பிடும். தமிழ்நெறி விளக்கத்தைத் (17;11) தழுவிக் களவியற்காரிகை 'மடல் விலக்கல்' (34;4), இறையனாரகப்பொருள் (சூ.9) உரையைத் தழுவி 'எழுதரிது என்றல்' (34;5-6), அகப்பொருள் விளக்கத்தைப் (145;7) பின்பற்றி 'அருளுடையாள் என்றல்' (34;7-8) ஆகியனவற்றை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் (145;4-5, 8) தழுவி மாறனகப்பொருளும் (37;5,8-9) இலக்கண விளக்கமும் (509;22-23;25-26) கூறும். இதனைத் (509;25, 22-23) தழுவி முத்துவீரியமானது 'அருளால் அரிதென்றல்,' 'அவயவம் எழுதல் அரிதென விலக்கல்' (844;3-4), இறையனாரகப்பொருள் (சூ.9) உரையைத் தழுவி 'நடையால் அரிதென்றல்' (844;3), இவ்வாறு தோழி கூற, தலைவன் ஆற்றாதிருப்பதைக் கண்டு நும்மாற் கருதப்படுவாள்

என்மாட்டுப் பெரிதும் அருளுடையவள். தலைவியிடம் சென்று அவளது நினைவை அறிந்து வந்த பின்னர் நீயிர் வேண்டியவற்றைச் செய்வேன். அதுவரைக்கும் வருந்தாதே என்று 'உடம்படாது விலக்கல்,' (844;5), களவியற்காரிகையைத் (34;7-8) தழுவி 'உடம்பட்டு விலக்கல்' (844;5) ஆகியனவாக விரித்துரைக்கும். இதனையும் (844;3-4) இலக்கண விளக்கத்தையும் (509;26) அடியொற்றி சுவாமிநாதம் (94;7-8, 95;1) இயம்பும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

குறை நேர்தல்

தலைவன், தலைவியை அடைய முடியாத நிலையில் மடலூர்வேன் என்றுரைப்பான். அப்போது தோழி, இவன் மடலூர்ந்தாலும் ஊர்வான் என்று தனக்குள் நினைத்துக் கொண்டு நினது குறையை முடித்துத் தருவேன். அதுவரைக்கும் ஆற்றிக் கொண்டிரு என்றுரைப்பாள். இது குறைநேர்தல் எனப்படும். இவ்வகையில் தோழி நிகழ்த்தும் கூற்றுகளாக இறையனாரகப்பொருள் (சூ.12) உரை, தமிழ்நெறி விளக்கம் (17) ஒவ்வொன்றிலும் ஒன்று, அகப்பொருள் விளக்கம் (146) ஐந்து, களவியற்காரிகை (உ.26) ஒன்று, மாறனகப்பொருள் (38), இலக்கண விளக்கம் (509), முத்துவீரியம் (846), சுவாமிநாதம் (95) ஒவ்வொன்றிலும் ஐந்து எனத் தோழி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தோழி, தலைவனிடம் கையுறை ஏற்றல் எங்குடிக்குத் தகாததாயினும் நீ செய்த உதவிக்கும் நின் பேரன்பிற்கும் ஏற்கின்றேன் எனக் கூறி 'கையுறை ஏற்பதை'[59] இறையனாரகப்பொருள் (சூ.12) உரை இயம்பும். இதனையே தமிழ்நெறி விளக்கம் 'கையுறை கோடல்' (17;11)

என்று மொழியும். ‘தலைவி இளமைத் தன்மை தலைவனுக்கு உணர்த்தல்,’ ‘செவ்வி அருமை செப்பல்,’ நீவிர் என்னிடம் களவொழுக்கத்தை மறைக்கின்றீர். இவ்வாறு மறைப்பதால் களவொழுக்கம் நிகழ்தல் எளிதாகுமோ என்று ‘நகைத்தல்,’ இவ்வாறு கூறுவதைக் கேட்ட தலைவன் வருந்த தோழி, அவனைத் ‘தேற்றல்’ (146;1-8), தமிழ்நெறி விளக்கத்தைத் (17;11) தழுவிக் ‘கையுறை ஏற்றல்’ (146;8) ஆகியனவாக அகப்பொருள் விளக்கம் விரித்துரைக்கும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை ‘தழை கோடல்’[60] என்று கூறும். இதனையும் (உ.26) அகப்பொருள் விளக்கத்தையும் (146;1-8) அடியொற்றி மாறனகப்பொருளும் (38;1,3-7) இலக்கண விளக்கமும் (509;27-34) இயம்பும். இதனை (509;34) அடியொற்றி முத்துவீரியம் ‘கையுறை எதிர்தல்’ (846;13), கையுறை ஏற்றபின் தலைவியிடம் சென்று இந்நாள் வரைக்கும் தழையேலாமைக்குத் தக்க பொய் சொல்லி மறுத்தேன். இன்று அவன் நோக்கம் கண்டபின் பொய் சொல்லும் நெறி அறிந்திலேன். இனி அவனுக்குக் கூறுமாறு என்னவென்று தழையேற்பித்தற்குத் தலைவியின் ‘குறிப்பறிதல்,’ தலைவியிடம் அன்று நமக்குப் பேருதவி செய்தவருடைய கையில் தழை துவளாது நாம் அவரது குறை முடிக்க வேண்டுமென்று ‘குறிப்பறிந்து கூறல்’, இவ்வாறு கூறியவுடன் தலைவி நாணமுடையவளாகத் திகழ, அதனையறிந்து நமக்கு உதவி செய்தாருக்கு, நாமும் உதவி செய்தல் வேண்டுமென்று ‘வகுத்துரைத்தல்,’ எனவே, இக்கையுறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தலைவியைத் தழையேற்கச் செய்தல் (846;14-16) ஆகிய கூற்றுகளை விரித்துரைக்கும். இவற்றையும் (846;13) இலக்கண விளக்கத்தையும் (509;27-34) தழுவி சுவாமிநாதம் (95;1-5) மொழியும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை.

குறைநயப்பித்தல்

தலைவனை மடல் விலக்கிக் குறைநேர்ந்த தோழி, அவனது குறையை முடித்தற்குத் தலைவனின் குறை கூறி, அவளை உடன்படச் செய்தல் குறைநயப்பித்தல் ஆகும். இதனை நா.பாலகிருட்டினன், "தலைவனிடம் கூட்டத்திற்கு உடன்பட்டுக் கூறிய தோழி, தலைவியிடம் சென்று அவளையும் அக்கூட்டத்திற்கு நயந்து உடன்படுமாறு செய்வாள். இதுவே குறைநயப்பு எனப்படும்"[61] என்பர். இத்தகைய சூழலில் தோழி, தொல்காப்பியத்தில் (1060) நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன இரண்டு. இறையனாரகப்பொருள் (சூ.10) உரை இரண்டு, தமிழ்நெறி விளக்கம் (17) நான்கு, வீரசோழியம் (குறிஞ்.நடை.) பத்து, அகப்பொருள் விளக்கம் (147, 148) எட்டு, களவியற்காரிகை (உ.27, 28, 29, 31) நான்கு, மாறனகப்பொருள் (39, 40), இலக்கண விளக்கம் (509) ஒவ்வொன்றிலும் எட்டு, முத்துவீரியம் (845) ஐந்து, சுவாமிநாதம் (95,96) எட்டு எனத் தோழி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தலைவி, நாணம் மிகுதியால் தலைவன் மீது கொண்ட காதலை மறைத்துக் கூட்டத்திற்கு இசைவில்லாதவள் போல நிற்பாள். அப்போது தோழி, இருவருக்கும் உளதாகிய இயற்கைப் புணர்ச்சி முதலிய மூன்றினையுந் தான் அறிந்துள்ளமையைக் குறிப்பாக உணர்த்தியும் தலைவி பொருட்டுத் தலைவன் இரந்து பின்னின்ற பல்வேறு நிலைகளைக் கூறியும் தலைவியைக் குறைநயப்பிப்பாள். இதனை,

"............... .... மறைந்தவள் அருகத்
தன்னொடும் அவளொடும் முன்னமுன் தளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்"

(தொல்.1060;17-19)

என்று இயம்பும். இந்நூற்பா உரையில் இளம்பூரணர் "மறைத்தலாவது- தன் மனத்து நிகழ்ச்சியை ஒளித்தல். அருகுதலாவது- இசைவிலாதாரைப்போல நிற்றல். முன்ன முன் தளைதலாவது- கூற்றினானன்றிக் குறிப்பினானுணர்த்தல்"[62] என்றும் பின்னிலை நிகழும் பல்வேறு மருங்காவது என்பதற்கு "வழிபாடு கொடுவருங் கூற்று வேறுபாடு. எனவே தலைவிக்குத் தழையும் கண்ணியும் கொண்டு ஒருவன் நம் புனத்தயல் வாராநின்றான் எனவும், அவன் என்மாட்டு ஒரு குறையுடையன் போலும் எனவும், அருளுவார்க்கு இஃது இடமெனவும், அவன் குறை மறுப்பின் மடலேறுவல் எனக் கூறிப் போந்தான் பின்பு வரக் கண்டிலேன் எனவும், இந்நிகரன கூறுதல்"[63] என்றும் கூறுவர்.

இக்கூற்றினை இறையனாரகப்பொருள் (சூ.10) உரையானது, தோழி, தலைவியிடம் தலைவன் என்னிடத்தில் குறைநயப்பிக்க வந்தான். நானும் அவனது குறையை முடிப்பது போலப் பொய் மொழிந்தேன். அவனும் அதனை மெய்யென்று கருதிச் சென்றான். இன்று வந்தாலும் வருவான். வந்தால் தன் குறை முடியாததன் காரணமாக நான் கூறியது பொய்யென நினைப்பானோ என்று 'மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்,'[64] தலைவன் அலவனைக் கண்டு இதுவன்றே அறிவும் ஆண்மையும் உடையது என்றுரைத்து என்னையும் நோக்கி, அலவனையும் நோக்கித் தம்முணர்வொழியப் போயினான் என்று 'வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்'[65] ஆகியனவற்றை இயம்பும். இவற்றைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் 'விழைய உணர்த்தல்,' 'வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்' (17;12-13), தலைவி, தன் களவொழுக்கத்தை மறைக்க, அவளை நோக்கி உனக்கு நான் வேறோ என்று மகிழ்ச்சியாய்த் 'தழுவிக் கொள்ளல்,' தலைவியிடம் யானையை வென்று பேருதவி செய்தவருடைய குறையை

முடிக்க வேண்டாமோவென்று 'தழை ஏற்கச் செய்தல்' (17;14) ஆகியனவற்றைக் கூறும். தலைவனுக்குக் குறை முடிப்பதாக ஏற்றுக்கொண்ட தோழி, அவனது துயர நிலையைத் தலைவிக்கு எடுத்துக்கூறி, அவளைக் குறைநயக்குமாறு 'இரங்கி மொழிதல்,' தலைவியிடம் அவனது பண்பு நலன்களை எடுத்துக்கூறி அவனுடைய குறையினைத் தலைவி நயக்குமாறு 'ஏத்தி மொழிதல்,' தலைவன் படும் துயர நிலைக்குத் தான் கலங்கிய தன்மையை விளக்கிக் குறை நயக்குமாறு வேண்டல், தலைவி, தலைவனை அறியாள் போன்று குறித்தபோது வெகுண்டு கூறல், தழையை ஏற்றுக் கொள்ளும்படிக் கூறல் (குறிஞ்.நடை ; 39-40, 42), தமிழ்நெறி விளக்கத்தைத் (17;12-13) தழுவி 'இன்சொல்லின் இரக்கத்தால் கூறல்,' 'வன்சொலின் மயக்கத்தால் மொழிதல்' (குறிஞ்.நடை ;44), தலைவனிடமிருந்து பெற்ற கையுறையைப் புகழ்ந்து தலைவியிடம் கூறல், தலைவி உடன்படற்குக் காலம் தாழ்க்கத் தான் மனம் 'மயங்கிக் கூறல்,' தலைவியைத் தழையேற்கச் செய்து தலைவனது வருத்தத்தைத் தீர்த்தல் (குறிஞ்.நடை;45-46) என்று வீரசோழியம் விரித்துரைக்கும். இந்நூலானது 'இன்சொலின் இரக்கம்,' 'வன்சொலின் மயக்கம்' (குறிஞ்.நடை;44) என்று எடுத்துரைப்பதை அகப்பொருள் விளக்கமானது மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலில் தலைவிக்கு 'அவன் குறை உணர்த்தல்,' தலைவியின் வயத்தனாய் வந்தவனைக் 'கண்டமை பகர்தல்' (147;1-2, 4), தமிழ்நெறி விளக்கத்தைத் (17;14) தழுவி 'என்னை மறைப்பது என்னெனத் தழாஅல்' (147;5-6), வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை;45) தழுவி 'கையுறை புகழ்தல்' (147;7) என்றும் வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலில் ஓரலவன் தன் பெடைக்கு நாவற்கனியை நல்குவதைக் கண்டு பேய் கண்டாற் போல நின்றாள். அந்நிலையை நீ கண்டால் உயிர் வாழமாட்டாய் என்று

தலைவனது 'துயர நிலையை எடுத்துக் கூறல்,' தலைவி எதுவும் கூறாதிருக்க, இனி அவர் வரின் என்னால் 'மறுத்தற்கு அரிதெனக் கூறல்,' தலைவனது எண்ணமானது நம்மிடம் இரப்பவன்போல் தோன்றவில்லை, வேறு நினைப்பவன்போல் தோன்றியதென்று இயம்பல், இவ்வளவு கூறியும் தலைவி மறுமொழி கூறாதிருக்க நின் காதற் தோழியர்க்கு வெளிப்படக் கூறி நீ கருதியதைச் செய்வாய். நான் சொன்னதை உள்ளத்தில் கொள்ளத் தகாதென்று மறப்பாயாக எனப் 'புலந்து கூறல்' (148;1-4) என்றும் இயம்பும். களவியற்காரிகையானது தோழி, தலைவியின் குறிப்பறிதற்கு தலைவனது குறை கூறத் துணிந்து திடீரென்று கூறுவேனாயின் இவள் மறுக்கவும் கூடுமென நினைத்து வேலேந்தி ஒருவர் பலமுறை வந்து ஒன்றுரைப்பதும் செய்யார். அவரிடத்து யான் செய்யத் தக்கது யாதெனத் தானறியாதாள் போலக் கூறி அவளது நினைவறிதல்,[66] வீரசோழியத்தை (குறிஞ்.நடை;44) அடியொற்றி 'வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்,[67] 'மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்,'[68] எனவும் தோழி, தலைவியின் உடன்பாட்டால் 'முகங்கண்டு உள்ளுக்குளுரைத்தல்'[69] எனவும் மொழியும். அகப்பொருள் விளக்கத்தை (147;1-2, 4-7;148;1-4) மாறனகப்பொருள் (39;1-2, 4, 6-7;40;1-4), இலக்கண விளக்கம் (509;36-37, 39-46) ஆகிய நூல்கள் பின்பற்றுகின்றன. களவியற்காரிகையைத் (உ.27, 29, 28) தழுவி முத்துவீரியமானது 'குறிப்பறிதல்,' 'மென்மொழி கூறல்,' 'வன்மொழி கூறல்' (845;1,4), மென்மொழியோடு சிறிது வன்மொழிபட 'விரவிக் கூறல்' (845;2), இலக்கணவிளக்கத்தைத் தழுவி (509;46) 'புலந்து கூறல்' (845;3) என்று மொழியும். இதனையும் (845;3) இலக்கண விளக்கத்தையும் (509;36-37, 39-45) தழுவி சுவாமிநாதம் (95;5-8;96;1-2) இயம்பும். இவற்றின் மூலம் தொல்காப்பியக் கூற்று பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

வீழ்ச்சி

தலைவனுக்குக் குறை நேர்ந்த தோழி, அதனைச் சென்று தலைவியிடம் கூறுவாள். இதனைத் தொல்காப்பியம்,

"குறைந்த அவள் படரினும்"

(தொல்.1060;17)

என்று இயம்பும். இக்கூற்று, பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

இருவகைக் குறி

தலைவனின் குறை நேர்ந்த தோழி, தலைவியிடம் சென்று குறை நயப்பிப்பாள். அவனது குறையைத் தலைவி ஏற்றுக்கொள்ள, அவ்விருவரும் ஒருவரையொருவர் கூடுவதற்கேற்ற வகையில் தோழி, அவர்களைப் பகற்குறியிடமும் இரவுக் குறியிடமும் சந்திக்கச் செய்வாள். இத்தகைய சூழலில் தோழி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1060) மொழிவன ஆறு. இறையனாரகப்பொருள் (சூ.11, 17, 18) உரை பன்னிரண்டு, தமிழ்நெறி விளக்கம் (17, 18) பதினேழு, வீரசோழியம் (குறிஞ்.நடை.) பத்தொன்பது, அகப்பொருள் விளக்கம் (149, 154, 156, 158, 160) முப்பத்தேழு, களவியற்காரிகை (உ.32, 33, 34, 35, 39, 42, 43, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 54, 55, 56, 57, 58, 60, 61, 62) இருபத்து மூன்று, மாறனகப்பொருள் (41, 46, 48, 50, 52) முப்பத்தெட்டு, இலக்கண விளக்கம் (509, 513, 515, 517, 519) முப்பத்தேழு, முத்துவீரியம் (846, 847, 848) நாற்பத்து நான்கு, சுவாமிநாதம் (96, 97, 98, 99, 100, 101) முப்பத்தேழு என வரையறுத்துள்ளன.

மாற்றமின்மை

தோழி, விருந்தோம்புவதை விரும்பல், தலைவி, குறை அருளியவழி அதனைத் தலைவனுக்குக் கூற விரும்பல் ஆகிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களிலும் மொழியப்பட்டுள்ளன.

தலைவனுக்கு விருந்தோம்புவதை விரும்பியவிடத்துத் தோழி கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

"வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தும்"

(தொல்.1060;23)

என்று சுட்டும். இதனையே அகப்பொருள் விளக்கம் (149;9-10), மாறனகப்பொருள் (41;9-10), இலக்கண விளக்கம் (509;57-58), முத்துவீரியம் (847;6), சுவாமிநாதம் (96;7) ஆகிய நூல்களும் எடுத்துரைக்கின்றன.

தலைவனின் குறையினைத் தலைவி அருளப் பெற்றவழி, அதனைத் தோழி, தலைவனுக்குக் கூற விரும்புமிடத்துக் கூற்று நிகழ்த்துதலைத் தொல்காப்பியம்,

"நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்"

(தொல்.1060;20)

என்று குறிப்பிடும்.

இக்கூற்றினையே, தோழியால் தலைவனது குறைநயப்பினைக் கேட்ட தலைவி, கையுறையை ஏற்றுக் கொண்டு, தலைவனைக் காண வேட்கை கொள்வாள். இக்குறிப்பறிந்த தோழி, தலைவனிடம் சென்று, நீ தந்த தழையை யான் சென்று கொடுத்தேன். அதைக் கொண்டு அவள் செய்தது சொன்னால் பெருகுமென அவளது விருப்பங் கூறிக் குறை நேர்ந்தாளென்று தலைவனிடம் கூறுவதை[70] இறையனாரகப்பொருள் (சூ.11) உரை, தமிழ்நெறி விளக்கம் (17;15), அகப்பொருள் விளக்கம் (149;1-2), களவியற் காரிகை,[71] மாறனகப்பொருள் (41;1-2),இலக்கண விளக்கம் (509;49-50), முத்துவீரியம் (846;17), சுவாமிநாதம் (96;3-4) ஆகிய நூல்களும் எடுத்துரைக்கின்றன.

வளர்ச்சி

தலைவி, தலைவனொடு புணர்ந்த பின்பு அவளது அறிவு மடம்பட்ட சிறப்பாகிய அல்லகுறிப்பட்டதைத் தோழி தலைவனிடம் கூறுவாள். இதனைத் தொல்காப்பியம்,

"புணர்ந்துழி உணர்ந்த அறிமடச்சிறப்பினும்"

(தொல்.1060;24)

என்று குறிப்பிடும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.17) உரையானது தோழி, தலைவன் சிறைப்புறத்திருக்கத் தலைவி 'அல்லகுறிப்பட்டதை உணர்த்தல்'[72] என்று இயம்பும். இதனையே தமிழ்நெறி விளக்கம், 'அல்குறிச் சிறைப்புறமாகச் செப்பல்' (18;7-8) என்று கூறும். தலைவி தான் குறி மருண்டதைத் தோழிக்குக் கூற அவள் நாம் கருதாத அடையாளத்தை நமக்கறிவித்துத் தாம் அக்குறி வாராதொழிந்தாரென்று 'தலைவனது தீங்கினை எடுத்துரைத்தல்,' தலைவியின் துன்பத்தைக் கண்டு தலைவன் பிழை செய்யான், நம்மிடத்து அன்பு பூண்டவன் என்று 'அவளது துன்பத்தைத் தணித்தல்,' இரவுக்குறி வந்த தலைவன்மீது தோழி அல்லகுறிப்பட்ட குற்றத்தை ஏற்றிக் கூறல் (160;3, 6-7), தமிழ்நெறி விளக்கத்தைத் (18;7-8) தழுவி 'அவள் குறி மருண்டமை அவள் அவற்கு இயம்பல்' (160;9), தலைவியிடம், தலைவன் இரவுக்குறியிடத்து வந்து நிற்க நீ வராமையால் மீண்டு சென்றேன் என்று தலைவன் இயம்பினான் என்று அவன் கூறிய கொடுமையைத் தோழி, தலைவிக்கு உணர்த்துதல் (160;10) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் மொழியும். களவியற்காரிகையானது தலைவி அல்லகுறிப்பட்டதைத் தலைவனுக்கு உணர்த்துமிடத்து 'திங்கள் மீது வைத்துரைத்தல்,'[73] 'அன்னத்தொலி மீது வைத்துரைத்தல்'[74] தலைவி வாட நீ இரைகின்றாய், இது நினக்கு நன்றோவெனக் 'கடலொடு

புலத்தல்'[75] ஆகியனவற்றை இயம்பும். அகப்பொருள் விளக்கத்தை (160;3, 6-7, 9-10) மாறனகப்பொருள் (52;3,7-12) பின்பற்றுவதோடு தலைவிக்குத் 'தலைவன் வரவு உணர்த்துதலை'க் (52;1) கூடுதலாக மொழியும். இதனைத் (52;3, 7-12) தழுவி இலக்கண விளக்கம் (519;3,6-7, 9-10) குறிப்பிடும். முத்துவீரியமானது தலைவன் இரவுக்குறி வந்து நிற்ப நிலவு வெளிப்பாட்டாற் சென்றெதிர்ப்படமாட்டாமல் தாங்கள் வருந்தி நின்றமையை மதியொடு புலந்து கூறல் (848;15), இலக்கண விளக்கத்தைத் (519;9) தழுவி 'வேற்றுக்குறி கூறல்' (848;16), களவியற்காரிகையை (உ.62) அடியொற்றி 'கடலிடை வைத்துத் துயரறிவித்தல்' (848;16-17), தலைவன் குறியிடைச் சென்று நிற்கும்போது தோழி எதிர்ப்பட்டு நீயிரோ இருட்பொழுதில் கைவேலேந்தி அஞ்சாது வந்தாலும் தெய்வத்துக்கு அஞ்சுவோம். அதனால் இருளில் வரவேண்டாம் என்று தங்களது அச்சத்தைக் கூறி வரவு விலக்கல், தலைவனிடம் இரவில் வந்தால் கண்டவர் நின்னைத் தலைவி காரணமாய் வந்தாய் என்று கருதி நின்னை ஏதம் செய்வார்களாயின் அவள் உயிர் வாழாள் என்றுரைத்தல், குறியிடத்துத் தலைவியைச் சந்தித்தால் ஊரில் அலரெழும் என்று வரவு விலக்கல் (848;21, 23-24) ஆகியனவற்றை மொழியும். இதனையும் (848 ; 16) இலக்கண விளக்கத்தையும் (519;3, 6-7, 10) தழுவி சுவாமிநாதம் (101;2-3, 5-8) இயம்பும். இவ்வாறு தொல்காப்பியக் கூற்று, பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது.

வீழ்ச்சி

தோழி, தலைவனுக்குப் பலவகையிலும் அறிவுறுத்தவழிப் பின்னும் பகற்குறியும் இரவுக்குறியும் விரும்பிக் கூறுதல்,

தலைவன், தலைவியைப் புணர்ந்த பின்பு, முற்காலத்துத் தன்னைப் பணிந்து குறையிரந்து நின்றோனைத் தான் பணிந்து கூறுதல்,

தலைவனால் என்புருகுமாறு பிரியப்பட்ட தலைவியிடம் சென்று, தலைவன் அன்பை அவளிடத்துச் சேர்த்துக் கூறி ஆற்றுவித்து வற்புறுத்தல் (1060;22, 16, 27-28) என்பன தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

பகற்குறி, ஒருசார் பகற்குறி, பகற்குறி இடையீடு, இரவுக்குறி ஆகிய சூழல்களில் தோழி நிகழ்த்தும் கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

பகற்குறி

பகற்குறியில் தோழி, தலைவன் தன்னை எதிர்ப்பட்டவிடத்து இன்ன இடத்து வருக எனக் குறிப்பினால் 'குறியிடம் கொள்ளக் கூறல்,'[76] செங்காந்தட் பூ கொண்டு வருவேன், அவ்விடத்துத் தெய்வம் உள்ளது, அங்கு நீ வருதல் கூடாது, நான் வரும் வரையிலும் இவ்விடத்திரு என்று 'குறியிடத்துய்த்து மறைபவள் உரைத்தல்,'[77] பகற்குறி வந்து ஒழுகுகின்ற தலைவனைக் காணும் பொழுதிற் காணாப் பொழுது பெரிதாகலின் ஆற்றாளாகிய தலைவியினது உள்ளக் கவலை கண்டு, இவளது ஆற்றாமைக்குப் பரிந்து உடனாயிருந்த புள் போன்றவை நீங்கின காலத்து இவள் எங்ஙனம் ஆற்றியிருப்பாளோ என அஞ்சிக் கூறல்[78] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.18) உரை இயம்பும். இதனைப் பின்பற்றித் தமிழ்நெறி விளக்கமானது 'விரும்பிடமுரைத்தல்', 'குறியொடு நீங்கல்' (17;16), தோழி, தலைவியை அழைத்துக் கொண்டு ஆடிடம் கொண்டு சென்று தோழியிற் கூட்டத்துச் செலுத்தல் (17;18) என்று மொழியும். வீரசோழியமானது, தலைவனிடம் பகற்காலத்தில் தலைவியைக் கூடுமாறு 'பகற்குறி நேர்தல்,' தலைவியிடம் சென்று

தலைவன் நின்னைப் பகற்குறியில் சந்திக்கவுள்ளதை உரைத்தல் (குறிஞ்.நடை;47), தமிழ்நெறி விளக்கத்தைத் (17;16) தழுவிப் 'பகலிடங் காண்டல்' (குறிஞ்.நடை;48), தோழி, தலைவனிடம் பகற்குறியில் விளையும் ஏதங்களைப் பலவாக எடுத்துக்கூறல், தலைவனிடம் எம்மன்னை, அவளை உற்று நோக்கிப் புறத்திற்போய் விளையாட வேண்டாமெனக் கூறினாள். இனி இற்செறிப்பாள் போலுமெனக்கூறி 'இற்செறிவுரைத்தல்,' தலைவியை வரைந்துகொள்ள வேண்டுமென்று தலைவனை 'வரைவுகடாவல்' (குறிஞ்.நடை;48-49) ஆகியனவாக இயம்பும். இதனைப் (குறிஞ்.நடை;48) பின்பற்றி அகப்பொருள் விளக்கமானது 'குறியிடங் கூறல்' (149;2), தலைவியை ஆய வெள்ளத்திலிருந்து பிரித்துக் 'குறியிடத்திற்குக் கொண்டு செல்லல்' (149;3), தமிழ்நெறி விளக்கத்தைத் (17;16,18) தழுவிக் 'குறியிடத்துய்த்து நீங்கல்', 'மையுறை கண்ணியைத் தோழியிற் கூட்டல்' (149;4,7-8), தலைவன், தலைவியைக் குறியிடத்து எதிர்ப்பட்டு நீங்கியபின், தோழி தான் கையுறைக்குப் போன பாவனையாய்க் 'கையுறை காட்டல்' (149;6-7), தலைவனிடத்துச் சென்று, தலைவியை மறவாமை வேண்டும் என்றல் (149;8-9) என மொழியும். இதனைத் தழுவிக் (149;2-4, 7-8) களவியற்காரிகையானது 'இடங்காட்டல்'[79] 'இடத்துய்த்தல்,'[80] 'இடத்துய்த்து அகறல்,'[81] 'கொண்டு நீங்கல்,'[82] இறையனாரகப்பொருள் (சூ.18) உரையைத் தழுவிப் 'படாுருகிளவி,'[83] தோழி தலைவனிடம் நீ வரையாதொழியின் எம்பெருமாட்டி வருந்துவாள். வரைவுணர்த்துமிடத்து நீயிர் வருந்துதிர், இரண்டாலும் எனக்கே மிக 'வருத்தமுடைத்தெனக் கூறல்,'[84] எமது தந்தையுந் தாயரும் மலைக் கானவர், ஏனல் எங்காவல் என 'குடித்திறங்கூறல்,'[85] வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை;49) தழுவி 'இற்செறிவுரைத்தல்'[86] எனவும் தலைவன் சிறைப்புறமாக வேங்கைக்கு உரைப்பாளாய்க் கூறல்,'[87] எமக்கு இனி இத்தினைப்புனங் காவலில்லை. நீயிர் பலகால் வாரன்மின் என்று

'வெளிப்பட உரைத்தல்,'[88] இயற்கையாக வேங்கை பூத்து மலர்களைச் சொரிவதை, தினைப்புனங் கொய்கவென்று சோதிடஞ் சொல்லியதாகக் கருதி இனிப் புனங்காவலில்லையென்று தலைவியிடம் கூறுவாள் போன்று உரைத்தல்,[89] வேங்கை அரும்பிய அன்றே அவ்வரும்புகளைக் கொய்தோமின்றென வேங்கையொடு வெறுத்துரைத்தல்,[90] தோழி, தலைவனிடம் தலைவியின் பருவங்கண்டு பெற்றோர் ஏறு தழுவுவார்க்குத் தலைவியைக் கொடுக்க நினைந்ததாகக் கூறல்,'[91] ஏறு விடுத்தலை அறிந்த தலைவன், இன்னநாள் வரைந்து கொள்வேன். அதுவரைக்கும் இவளை ஆற்றிக் கொண்டிரு, நினக்கு அடைக்கலம் என்று கூற இதனைச் 'சூளென நினைத்தல்'[92] எனவும் விரித்துரைக்கும். இதனையும் (உ.33, 34, 35, 39), அகப்பொருள் விளக்கத்தையும் (149;6-7, 8-9) தழுவி மாறனகப்பொருளும் (41;3-4,6-9) இலக்கண விளக்கமும் (509;50-52, 54-57) சுட்டும். இதனைப் பின்பற்றி (509;50-52, 54-56) முத்துவீரியமானது 'குறியிடங் கூறல்,' 'குறியிடைச் சேறல்,' 'இடத்துய்த்து நீங்கல்,' 'தோழி வந்து கூடல்,' 'ஆடிடம் புகுதல்' (847;1-2, 5-6), தலைவியை யாம் போய் விளையாடுவோமென்று ஆயத்தோடு கொண்டு செல்லல், தலைவியின் பருவங் கூறி, அவளை விரைந்து மணந்து கொள்வாயாகவென்று 'அவளது பருவங் கூறி வரவு விலக்கல்' (847;1, 7-8), களவியற்காரிகையைத் (உ.45,43,46,51,49,50) தழுவி 'மெய்ம்மை உரைத்தல்,' 'வருத்தங் கூறல்', 'இற்செறி உணர்த்தல்,' 'ஏறுகோளியம்பல்,' 'தினைமுதிர்வு கூறல்,' 'சிறைப்புறமாக வேங்கையொடு வெறுத்தல்' (847;9-14, 16-17), தலைவனிடம் தலைவியை இனி மகட்பேசுவார்க்கு மாறாது கொடுக்கவும் கூடுமெனத் 'தாயச்சம் கூறல்,' அயலவர் மணம் பேச நினைக்கின்றாரெனத் தமர் நினைவுரைத்து வரைவு கடாவல், தலைவனிடம் நீ வரைவொடு வருவாயாயின் தமர் நின்னை எதிர்கொள்வர். எனவே, பலவற்றையும்

நினையாமல் பலருமறிய வரைவொடு வருவாயாகவென்று 'எதிர்கோள் கூறி வரைவுகடாவல்,' அயலவர் நாளைப் பொன் புனையக் கருதுகின்றார். இதற்குத் தீவினையேன் கூறுவதென்னவென்று 'அயலுரைத்தல்,' எமக்கு, இத்தினைப்புனங் காவலில்லை. நீயிர் இனிப் 'பகலில் வரவேண்டாமென்றல்,' தலைவன் மீது கொண்ட விருப்பினால் தினை விதைத்துக் காத்து, உள்ளம் மகிழ்ந்து நின்ற எங்களுக்கு, அக்காவல் போய், தீவினையை விதைத்து அதனைக் காத்து, அதன் விளைவையும் உண்டதாகி முடிந்தது என்று 'தினையொடு வெறுத்துரைத்தல்,' தலைவன் சிறைப்புறத்திருக்க, இனித் தினைப்புனங் காவலில்லை, அவனை எவ்வாறு எதிர்ப்படுவோமென்று இரக்கமுற்று வரைவுகடாதல், தலைவனை எதிர்ப்பட்டுத் தினை கொய்தாகிவிட்டது, இனி இப்புனங்காவலில்லை, நீயே அறிவீரென்று தினை 'கொய்தமை கூறல்,' தலைவியிடம் நாம் இவ்விடத்தை விட்டுப் போனால் நம் காதலர், இவ்விடத்தே வந்து நம்மைத் தேடுவாரோவெனப் 'பிரிவருமை கூறல்,' நாங்கள் இப்புனத்தினின்றும் போகின்றோம். தலைவன் வந்தால் அன்புடைய நாங்கள் பிரிந்திருக்கத் துணிந்தோம் என்று அவருக்குச் சொல்லுங்கள் என்று 'மயிலொடு கூறல்' *(847;10-13, 15-20)* ஆகியனவாக விரித்துரைக்கும். இவற்றையும் *(847;1-2, 5-6)* இலக்கண விளக்கத்தையும் *(509;56-57)* தழுவி சுவாமிநாதம் *(96;4-7)* மொழியும்.

ஒருசார் பகற்குறி

பகற்குறியில் தலைவியைச் சந்தித்த தலைவன் மீண்டும் மறுநாள் தன் வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்து வந்து நிற்பான். அப்போது தோழி, தலைவியைக் குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக் கூற வருந்திச் செல்வது ஒருசார் பகற்குறியாகும். அவ்வாறு தலைவன் பிரிந்து சென்றவழித் தலைவி, மாலைப்பொழுது கண்டு வருத்தம் கொள்ள, இனிமேல் என்ன ஆகும் என்று அறியேன் எனத் 'தோழி புலம்பல்,'

தலைவன் வாராது காலம் நீட்டிக்க, தலைவி வருந்துவதையறிந்து, இவ்வாறு வருந்துதல் ஆகாதென்று இடித்துரைத்தல், மீண்டும் தலைவியிடம் இவ்வாறு வருந்தி அழுதல் அழகல்ல என்று 'அச்சுறுத்தல்,' தலைவியிடம் தலைவன் வருதலைத் தெரிவித்தல், தலைவன் சிறைப்புறமாகக் குறியிடத்து வரத் தலைவியின் செறிப்பை அறிவுறுத்தல், தலைவன் முன்னிலையாய் நிற்க, தோழி அவனைக் காணாள் போல பறவைகளை நோக்கித் தலைவன் மறந்தாலும் நீங்கள் மறக்கும் தன்மையைப் பெறீராக என்று 'முன்னிலைப் புறமொழி பகர்தல்,' தமர் தினைக்கதிர் கொய்கின்றாராதலால் தினைப்புனங் காவலை இன்று ஒழிந்தோம் என்று 'முன்னின்றுணர்த்தல்,' தலைவிக்குப் பற்றுக்கோடு நின்னையன்றி வேறில்லையாதலின் எம்மை மறவாமை வேண்டும் என்று 'முன்னின்று உணர்த்தி ஓம்படை சாற்றல்' (154;2,4,6, 8-12) என்று அகப்பொருள் விளக்கம் மொழியும். இவற்றையே மாறனகப்பொருள் (46;2-3, 6-11), இலக்கண விளக்கம் (513; 2, 4, 6, 8-12), சுவாமிநாதம் (97;4-5, 7-8; 98;1-3) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

பகற்குறி இடையீடு

பகற்குறிக்கண் வந்த தலைவன், தோழியால் குறிக்கட் செல்லாது இடையீடுபட்டுச் செல்வான். இது பகற்குறி இடையீடு எனப்படும். இத்தகைய பகற்குறி இடையீட்டில் தோழி, தலைவனிடம் குறியிடத்திற்கு வருவதை விலக்கல், தலைவியிடம் சென்று அவளையும் குறியிடம் வருவதை விலக்கல், இதனால் தலைவி வருந்துவதையறிந்த தோழி அவள் விளையாடும் இடங்களை விட்டு நீக்கி, வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்லல் (156;1-4) என அகப்பொருள் விளக்கம் இயம்பும். இதனை அடியொற்றி மாறனகப்பொருளும் (48;1-2, 4) இலக்கண விளக்கமும் (515;1-4) சுட்டும். இந்நூலைத் தழுவுவதுடன்

இரு கூற்றாகக் (515;1-2) கூறியதைச் சுவாமிநாதம் (98;5-6) ஒரு கூற்றாக இயம்பும்.

இரவுக்குறி

தோழி, தலைவனிடம் அன்னை எம்மை உறுப்பில் குறிக்கொண்டு நோக்கினாள் என்றல்,[93] தினை அறுத்தலைக் கூறி இவ்விடத்து வரவேண்டாமென்று 'புனத்தொடு வைத்துக் குறிப்பாக அறிவுறுத்தல்,'[94] முன்னிலைப் புறமொழியாக வேங்கைக்கு உரைப்பாளாய் அவன் கேட்குமாறு தலைவியின் இற்செறிப்பினை அறிவுறுத்தல்,[95] இதனைக் கேட்ட தலைவன் இன்ன நாளில் தலைவியை வரைந்து கொள்வேன், அதுவரையிலும் அவளை நீ தேற்றிக் கொண்டிரு, நினக்கு அவள் அடைக்கலம் என்று சூளுரைத்துக் கூற, மணந்து கொள்கிறேன் என்று சொன்னாலே போதும், சூளுரைக்கவும் வேண்டுமோ என்றல்,[96] தலைவனிடம் 'குறியிடங்கூறல்,'[97] தலைவியைத் துயில் எழுப்பி தலைவன் குறியிடத்திற்கு 'வரவு உணர்ந்து கூறல்,'[98] தலைவியைக் 'குறியிடத்திற்குக் கொண்டு செல்லல்'[99] என இறையனாரகப்பொருள் (சூ.18) உரை மொழியும். தமிழ்நெறி விளக்கம், மாலைக்காலத்தில் உண்டாகும் வருத்தத்திலிருந்து தலைவியைக் காக்கும் தலைவன் தூரத்தில் உள்ளார். அன்னங்கள் இவ்விடத்தைவிட்டு உறங்குமிடத்தை அடைந்தன. இனி என்ன செய்வாள் என்று, தலைவன் 'சிறைப்புறமாகப் பிறிதின்மேல் வைத்துரைத்தல்' (18;2), இறையனாரகப்பொருள் (சூ.18) உரையைப் பின்பற்றி 'செறிப்பறிவுறுத்தல்,' 'சூளென நினைத்தல்,' 'குறியிடம் வகுத்தல்,' 'அவன் வரவுணர்த்தல்,' 'குறித்துழி உய்த்தல்' (18;3,5-7), தலைவனிடம் தலைவி ஆற்றாதவளாய்க் காணப்படுகிறாள் என்றல், தலைவன் ஆற்றாது இறந்துபடவும் கூடுமென நினைத்து 'இரவுக்குறி வரவேண்டல்,' இரவில் வருதல் அரிதென்று 'மறுத்துரைத்தல்,'

இரவுக்குறியில் தலைவன், தலைவியைச் சந்திக்கத் தோழி உடன்பட்டு இரவுக்குறி 'நேர்தல்,' தலைவனைக் குறியிடம் வரச் சொல்லித் தலைவி இரவுக்குறியை விரும்புமாறு உரையாடி இசையச் செய்தல், தலைவன் எதிர்ப்படுவானென்று தான் சந்தனத் தழை கொய்து வருகிறேன் என்று கூறி நீங்கல் (18;4-7) என இயம்பும். இதனைத் (18;4-7) தழுவி வீரசோழியமானது 'இரவரவிசைத்தல்,' 'வரவு விலக்கல்,' 'இரவுக்குறி நேர்தல்,' 'ஏந்திழை மகிழ்வுடன் குறியுரைத்தல்,' 'அது கேட்டுணர்த்தல்,' தோழி, தலைவனிடம் காந்தளும் வேங்கையும் சூடுவோம், சந்தனச் சாந்து பூசுவோம், வேங்கை மரத்தின்கீழ் விளையாடுவோம் என்று 'மெய்க்குறி உரைத்தல்,' 'ஏந்திழை எடுப்பல்,' 'இடப்புறத்து அகற்றல்' (குறிஞ்.நடை;50-55), இரவுக்குறிக்கண் செவிலி எதிர்பாரா வகையில் களவொழுக்கத்தை அறிந்தாளாகக் கூறல், களவொழுக்கத்தைத் தவிர்த்து வரைந்து கொள்ளுமாறு வேண்டல், களவொழுக்கம் புறத்தாரறிந்து 'கவ்வை பெரிதாயிற்று என்றல்,' ஊரார் 'அம்பலும் அலரும் தூற்றுகின்றனர் என்றல்,' தலைவனிடம் தலைவி நின்னைக் காணும் பொழுதிற் காணாப் பொழுது பெரிதாகலின் வாடிய மேனியளாய்க் காணப்படுகிறாள் என்றல் (குறிஞ்.நடை;57-60) ஆகியனவாக விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது தலைவன், தோழியிடம் இரவுக்குறி வேண்ட 'வழியருமை கூறல்,' தலைவன் நாட்டுப் பெண்கள் அணியும் 'அணியையும் இயலையும் வினவல்' (158;1-4), வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை;54-55) தழுவி 'அவற்குத் தன்னாட்டு அணியியல் சாற்றல்,' 'தலைவிக்குத் தலைவன் வரவறிவுறுத்தல்,' 'அவட்கொண்டு சேறல்' (158;5-6, 12-13), குறியிடத்து வந்த தலைவனை ஓரிடத்தில் நிறுத்திவிட்டுத் தலைவியிடம் 'அவனது குறையை அறிவித்தல்,' தலைவனது ஆற்றானாகிய நிலைமை கேட்டுத் தலைவி குறைநேர, தோழி, தலைவனிடம் சென்று 'அவள் குறைநேர்ந்தமை

கூறல்,' தலைவியைக் குறியிடத்துக் கொண்டு செல்லக் கருதிய தோழி, யாம் விளையாடிய பொழிலிடத்து யானை ஊசலைத் தள்ளியது. இதற்கு என்ன செய்வதென்று 'தாயின் துயிலறிதல்' (158;7,10-11), தமிழ்நெறி விளக்கத்தைத் (18;7) தழுவிக் 'குறியுய்த்து அகறல்' (158;13), தலைவியை அடைந்து 'கையுறை காட்டல்,' தலைவியை 'மனையிடத்திற்குக் கொண்டு செல்லல்,' இரவுப் பொழுதில் நீ வரவேண்டாம் என்று வரைவு பயப்பக் கூறி 'வரவு விலக்கல்,' இதனைக் கேட்ட தலைவன் ஆற்றாதிருக்க, நீ செல்லும் நெறிகள் இடையூறாகத் திகழுமென்ற அச்சத்தால் தலைவி இரங்கி நின்றாளென்று கூறி நீ ஊர் போய்ச் சேர்ந்த செய்தியை யாம் அறியும்படிக் குறிசெய் என்று கூறி விடுத்தல் (158;18-22) என்று விரித்துரைக்கும். இதனைத் (158;5-6,12,11,13) தழுவிக் களவியற் காரிகையானது 'இரவிடங் காட்டல்,'[100] வரவு உணர்ந்து உரைத்தல்,[101] 'தாய் துயிலறிதல்'[102] இரவுக்குறி உய்த்தல்,[103] 'நீங்குதல் உரைத்தல்,'[104] என மொழியும். இவற்றையும் (உ.54, 55, 56, 57, 58) அகப்பொருள் விளக்கத்தையும் (158;1-4, 7, 10, 18-22) தழுவி மாறனகப்பொருள் (50;1-2, 4, 6-7, 10-13, 19-23) இயம்பும். இவற்றை அடியொற்றி இலக்கண விளக்கம் (517, 1-7, 10-13, 18-22) குறிப்பிடும். இதனைத் (517;1-7,12,11,13,20-22) தழுவி முத்துவீரியமானது 'ஆற்றருமை கூறல்,' 'உட்கோள் வினாதல்,' 'குறியிடங் கூறல்,' 'குறைநயப்புரைத்தல்,' 'மயின்மேல் இசைத்து வரவுணர்ந்து உரைத்தல்,' 'தாய் துயிலறிதல்,' 'தலைவி துயிலெடுத்தல்,' 'இடத்துய்த்து நீங்கல்,' 'பள்ளியிடத்துய்த்து வரைவுகடாவி வரவு விலக்கல்,' 'அதரிடைச் செலவிற்கு இரக்கங் கூறல்' (848;1, 3-4, 6-9, 11-12, 14) வீரசோழியத்தை (குறிஞ்.நடை;51,53) அடியொற்றி 'நிலைகண்டு நேர்தல்,' 'குறி ஏற்பித்தல்' (848;2,4), தலைவியிடம் தலைவன் 'இரவில் வரவுரைத்தான் என்றல்' (848;5) என்று

விரித்துரைக்கும். இவற்றையும் (848;1, 3-4, 6-9, 11-12, 14) இலக்கண விளக்கத்தையும் (517;10, 18-20) தழுவி சுவாமிநாதம் (99;3-8, 100;1-2,5-7) மொழியும்.

ஒருவழித்தணத்தல்

தலைவன் தலைவியைப் பகலிலும் இரவிலும் சந்திப்பதுண்டு. இதனால் ஊரில் அலரெழும். இவ்வலரடங்கத் தலைவன் சில நாட்கள் தன் ஊருக்குச் சென்று வருகிறேன் என்று கூறிப் பிரிவான். இது ஒருவழித்தணத்தல் எனப்படும். புலவர் சேயொளி, "ஒருவழித்தணத்தல் நெட்டாறு சேறலன்றி, அணிமைக்கட் பிரிவென்று கோடும்"[105] என்பர்.

இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (1060) நிகழ்த்தும் கூற்று ஒன்று. பிற அக இலக்கணமாகிய அகப்பொருள் விளக்கம் (168), மாறனகப்பொருள் (60), இலக்கண விளக்கம் (525) ஒவ்வொன்றிலும் ஏழு, முத்துவீரியம் (849) மூன்று, சுவாமிநாதம் (105) ஏழு எனத் தோழிக்குரிய கூற்றுகளை வரையறை செய்துள்ளன.

வளர்ச்சி

தலைவன் அலராகுமென்றஞ்சி புணர்ச்சியை விரும்பாமல் ஒருவழித்தணத்தலை விரும்பினவிடத்துத் தோழி கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"வேண்டாப் பிரிவினும்"

(தொல்.1060;22)

என்று சுட்டும்.

இதனை அகப்பொருள் விளக்கமானது வரைவுடம்பட்ட தலைவன், தோழியிடம் அலரடங்கத் தன்னூருக்குப் போய்வருகிறேன் என்றுரைக்கத் தோழி அவனது செலவை விலக்கல், மீண்டும்

தலைவனிடம் அம்பலும் அலரும் அடங்க நின் ஊருக்குப் போய் வருக என்று கூறி 'விடுத்தல்,' தலைவியிடம் 'தலைவன் செலவுணர்த்தல்,' தலைவனது செலவினைக் கேட்ட தலைவி வேறுபட, தலைவன் நம்மைத் துறவான், நீ எதற்கு ஆற்றாதிருக்கின்றாய் என அவளது ஆற்றாமையை நீக்கல், ஒருவழித்தணந்த தலைவன் சில நாட்களில் திரும்பிவர, அதனைத் தலைவிக்கு உணர்த்துதல், தலைவன் வந்ததும் தலைவி வருந்தியதைக் கூறி 'வந்தோன் தன்னொடு நொந்து வினாதல்,' தலைவனிடம் நீ பிரியும்போது தலைவியின் மனம் வாடாமல் ஆற்றுவி என்று நீ கூறிய சொல்லை நினைத்து இவளது அரிய உயிரை நீங்காமல் காத்திருந்தேன் என்று 'தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்' (168;2-4, 7-12) என மொழியும். இவற்றையே மாறனகப்பொருளும் (60;2-4, 8-10, 12-13) இலக்கண விளக்கமும் (525;2-4, 7-12) குறிப்பிடும். இதனைத் தழுவி (525;3, 7-9) முத்துவீரியமானது, 'அகன்றணைவு கூறல்,' 'வரவுணர்ந்துரைத்தல்,' 'வருத்தங் கூறல்' (849;1, 6-7) ஆகியனவற்றை இயம்பும். இவற்றையும் இலக்கண விளக்கத்தையும் (525;2, 4, 7, 10-12) தழுவி சுவாமிநாதம் (105;5-8) மொழியும். இவற்றால் தொல்காப்பியம் கூறும் ஒருவழித்தணத்தல் கூற்று பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

வரைவு வேட்கை

தலைவி, தலைவனை வரைந்து கொள்ள விரும்புதல் வரைவு வேட்கையாகும். இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (1060) தோழி நிகழ்த்தும் கூற்றாக ஒன்றினை இயம்பும். வீரசோழியம் (நெய்.நடை.) ஒன்பது, அகப்பொருள் விளக்கம் (164) இரண்டு, களவியற்காரிகை (உ.66, 67, 68, 69, 72, 73, 74, 75) எட்டு, மாறனகப்பொருள் (56) மூன்று,

இலக்கண விளக்கம் (521) இரண்டு, சுவாமிநாதம் (102, 103) மூன்று என இச்சூழலில் தோழிக்குரிய கூற்றுகளை வரையறுத்துள்ளன.

வீழ்ச்சி

தலைவி வருந்தும்போது, அவ்வருத்தத்திற்குக் காரணமான தலைவனைக் கடுஞ்சொற்களால் இயற்பழிக்கும்போது தோழி கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

"செங்கடு மொழியால் சிதைவுடைத் தாயினும்"

(தொல்.1060;26)

என்று இயம்பும். செங்கடுமொழி என்பதற்கு இளம்பூரணர், "கொடிய கடுமொழியே யன்றி மனத்தினான் இனியளாகிக் கூறுங் கடுமொழி"[106] என்பர். இக்கூற்று தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

தலைவன், இரவுக்குறி வரும்போது அவன் வரும் வழியச்சத்தைக் கூறி வரவு விலக்கல், இரவுக்குறி வந்தால் ஊரார் அறிவதற்கு வாய்ப்பாக அமையும், ஊருக்குள் அம்பலும் அலரும் ஏற்பட வாய்ப்புண்டு எனக் கூறி,தலைவி அஞ்சுவதாகக் கூறல், தலைவனை 'இரவில் வரவேண்டாம் என்றல்,' தலைவி மீது கொண்ட வேட்கையால் தலைவன் பகலில் வர 'இரவில் வாவென்றல்,' இரவில் வந்த தலைவனிடம் இரவினது ஏதங் காட்டிப் 'பகலில் வாவென்றுரைத்தல்,' தலைவன், தலைவியை விரைவில் வரைதல் வேண்டும் என்பதற்காக 'இரவும் பகலும் வரவேண்டாம் என்றல்,' தலைவி நின்னைப் பிரிந்திருத்தல் இயலாதிருப்பதால் பகலிலும் இரவிலும் குறியிடத்திற்கு வரவேண்டும் என்றல், தலைவனிடம் இரவுக்குறியிடத்து வந்தால் கண்டோர் நும்மை வரையுறை தெய்வம் எண்ணாது உண்மையை உணர்வார்கள். அப்போது

தலைவி, அலராகிவிடுமே என்று அஞ்சி உய்வுபெறமாட்டாள் என்றுரைத்தல், தலைவனைக் காணும் பொழுதிற் காணாப்பொழுது களவுக்காலத்துப் பெரிதாக இருத்தலால் தலைவி வருந்தும் ஆற்றா வருத்தத்தைக் கூறல் (நெய்.நடை;22-27) ஆகியனவற்றை வீரசோழியம் மொழியும். தலைவன் மீது கொண்ட வேட்கை மிகவால் தலைவனிருக்கும் நகரத்திற்குச் செல்வோம் என்று கூற, தோழி அவனது இயல்புத் தன்மையைப் பழித்துரைத்தல், தலைவி, தான் துன்புறலைத் தலைவனிடம் நீ சென்று சொல்லெனக் கூறியதற்குத் தோழி, தலைவியை நோக்கி, உன் துயரமெல்லாம் அன்பரும் அறியாரல்லர் என்றுரைத்தல் (164;5, 9) என்பனவற்றை அகப்பொருள் விளக்கம் இயம்பும். வீரசோழியத்தைத் தழுவிக் (நெய்.நடை;22, 24, 25, 27) களவியற்காரிகை 'ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி என்றல்,'[107] பகல் வரல் என்றல்,[108] 'இரவு வரல் என்றல்',[109] 'இரவும் பகலும் வரவொழி என்றல்,'[110] 'ஆற்றாமை கூறல்,'[111] என்றும் தலைவியின் ஆற்றாத் தன்மையைக் கூறி விரைவில் திருமணம் செய்துகொள் என்று இயம்பல்,[112] இவ்வாறு கூறியும் வேட்கை மிகவால் பின்னும் தலைவன் குறியிடைச் சென்று நிற்ப, அக்குறிப்பு உணர்ந்து அன்னை என்னைக் குறித்து நோக்கினாள். இக்களவொழுக்கத்தை அறிந்தாள் போலும் என்று தலைவிக்குக் கூறுவாள் போன்று சிறைப்புறமாகத் தலைவனுக்கு வரைவுகடாவல்,[113] தலைவனிடம் சென்று இல்லது மொழிந்து வரைவுகடாவல்[114] என்றும் இயம்பும். மாறனகப்பொருள் (56;5,9) அகப்பொருள் விளக்கத்தைத் (164;5,9) தழுவுவதோடு தலைவியின் வருத்தத்தின் காரணத்தை வினவலைக் (56;1) கூடுதலாக மொழியும். இதனைத் தழுவி (56;5, 9) இலக்கண விளக்கம் (521;5, 9) கூறும். இவற்றையும் மாறனகப்பொருளையும் (56;1) தழுவி சுவாமிநாதம் (102;4-5, 7, 103;1-2) சுட்டும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

வரைவு நீட்டிப்பு

வரைவு நீட்டிப்புச் சூழலில் தொல்காப்பியம் (1060) தோழியின் கூற்றாக ஒன்றினைச் சுட்டும்.

வீழ்ச்சி

தோழி, தலைவியின் தமர் வரைவுடம்பட்ட செய்தியைக் கூறி, வரைவை நீட்டிக்காமல் விரைந்து வரைந்துகொள் என்று தொல்காப்பியம் உரைத்தலைப் (1060;43) பிற அக இலக்கணங்கள் மொழியவில்லை.

வரைவு கடாதல்

தமர் இற்செறிப்பர் என்றும் வழியாலும் பொழுதாலும் துன்பம் வருமென்றும் தோழி அச்சமுற்று, இவ்வாறு களவொழுக்கம் ஒழுகல் நினது குடிப்பிறப்புக்கும் சிறப்புக்கும் ஒவ்வாது என்று கூறித் தலைவனிடம் வரைவுகடாவுவாள். களவென்பது தோன்றாத வகையில் வரைவை முடித்து வைக்கத் தோழி, தலைவனிடம் வரைவுகடாதலை வ.சுப.மாணிக்கனார், "களவு நீடிப்பின், வெறியாட்டு நொதுமலர் வரைவு முதலான பல தொல்லைகளுக்கு இடம் ஏற்படும் என வருவது அறிந்த அறிவுடைத் தோழி களவென ஒன்று நடந்தது என்பது தோன்றாவகையில் மணத்தை முடித்து வைக்கப் பாடுபடுவாள். பல்வேறு வழிகளால் தலைவனை வற்புறுத்துவாள். இத்துறை வரைவுகடாவல் எனப் பெயர் பெறும்"[115] என்பர். நா.பாலகிருட்டினன், "தலைவன் இருவகைக் குறியிலும் தலைவியைக் காண இடையறாது வரலால் அலர் தோன்றுகின்றது. அலரே களவைப் புலப்படுத்துகின்றது. களவு புலப்படுதலால் தலைவிக்கு இற்செறிப்பு, வெறியாட்டு முதலிய கொடுமைகள் நேர்கின்றன. எனவே தோழி அலர் தோன்றியதிலிருந்து பல்வேறு சூழல்களில் தலைவனிடம் 'தலைவியை வரைந்து கொள்க'

என்று வேண்டுகின்றாள். இதுவே வரைவுகடாதல் எனப்படுகின்றது"[116] என்று மொழிவர்.

இவற்றால் தோழி, களவு வெளிப்படுதற்கு முன்பும் வெளிப்பட்ட பின்பும் வரைவை முடித்து வைக்கக் கருதிப் பல்வேறு வழிகளில் தலைவனை வற்புறுத்துதல் வரைவுகடாதல் என்பது புலனாகும்.

இச்சூழலில் தோழி நிகழ்த்தும் கூற்றுகள் தொல்காப்பியத்தில் (1060) நான்கு. பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.30) உரை, தமிழ்நெறி விளக்கம் (19) ஒவ்வொன்றிலும் ஆறு, வீரசோழியம் (நெய்.நடை.) பதினேழு, அகப்பொருள் விளக்கம் (166) இருபது, மாறனகப்பொருள் (58) பத்தொன்பது, இலக்கண விளக்கம் (523) இருபது, முத்துவீரியம் (851) பதின்மூன்று, சுவாமிநாதம் (104,105) இருபது என வரையறுத்துள்ளன.

வளர்ச்சி

தலைவி, இற்செறித்தலின்போது வருந்துதல், தலைவன் வரும் வழியருமையால் வருந்துதல், தலைவனது சிறப்புகளைக் கூறி வரைவுகடாதல் ஆகிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

இற்செறித்தலின் கடுமையால் தலைவி, செயலற்று வருந்துவதைத் தோழி, தலைவனிடம் கூறுவதைத் (1060;30) தொல்காப்பியம் இயம்பும்.

இதனை வீரசோழியம் தோழி, தலைவன் அறியும் வகையில் இக்களவொழுக்கத்தைத் தாய் அறிந்துவிட்டாள் என்றல், குறியிடத்து நீ வருவதற்கும் அவள் வருவதற்கும் இடையூறாகக் 'காவல்

மிகுந்ததென்று கூறல்,' இத்தகைய தன்மை வாய்ந்த தலைவி, நின்னைச் சந்திக்க இயலாதிருத்தலால் உயிர் வாழ்தல் அரிதென்றல் (நெய்.நடை;21-22) ஆகியனவற்றைக் கூறும். தலைவனிடம், தலைவி நின்னைச் சந்திக்க இயலாது வருந்துவாளிடத்து நின்னருள் இருக்கின்றதோவென்று அவளது வருத்தம் கூறி 'ஆற்றாத் தன்மையை ஆற்றுதல் செய்ய வேண்டும் என்றல்' (166;13), வீரசோழியத்தைத் (நெய்.நடை;21) தழுவி 'காவல் மிகவுரைத்தல்' (166;14), தலைவனிடம் நின் மீது தலைவி கொண்ட காம வேட்கையானது மிகுந்தது என்றல், தலைவி கனவினில் நின்னைக் கூடி மகிழ்ந்து, துயிலுணர்ந்த பின்பு நின்னைக் காணாளாய்க் கலங்கினாள் என்றல், நின் பொருட்டுத் தலைவியின் அழகு அழிந்ததென்றல் (166;14-15) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் குறிப்பிடும். இந்நூலையே மாறனகப்பொருளும் (58;15-17) இலக்கண விளக்கமும் (523;13-15) பின்பற்றும். இதனைத் (523;13) தழுவி முத்துவீரியம், 'வருத்தங் கூறல்' (851;2) என்று கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (523;14-15) தழுவி சுவாமிநாதம் (105;1-2, 104;8) இயம்பும்.

தலைவன் வரும் வழியின் தீமையைத் தலைவி அறிதலினால் உண்டாகிய கலக்கத்தின்போது தோழி கூற்று நிகழ்த்துவதை,

"ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்"

(தொல்.1060;29)

என்று குறிப்பிடும்.

இதனையே தமிழ்நெறி விளக்கமானது தோழி, தலைவன் வரும் வழியின் தீமையைச் சுட்டி, வரவு விலக்கல் (19;1) என்று இயம்பும். இதனையே அகப்பொருள் விளக்கமானது 'ஆறு பார்த்துற்ற அச்சம் கூறல்' (166;12) என்று மொழியும். இதனை அடியொற்றி

மாறனகப்பொருளும் (58;14) இலக்கண விளக்கமும் (523;12) இயம்பும். தலைவனிடம் தனது குலம், தொழில் போன்றவற்றைக் கூறி வரைவுகடாவல் (851;3), இலக்கண விளக்கத்தைத் (523;12) தழுவி 'ஏதங் கூறல்' (851;3), 'பகல் வரல் என்றல்' (851;4) ஆகியனவற்றை முத்துவீரியம் குறிப்பிடும். இதனைத் (851;3) தழுவி சுவாமிநாதம் (104;8) சுட்டும்.

இருவகைக் குறியிடமும் பொழுதும் விலக்கியும் தலைவியின் காதல் மிகுதி உட்படப் பிறவும் கூறியும் இவ்வாறெல்லாம் கூறுமிடத்துத் தலைவனது நாடு, ஊர், இல், குடி, பிறப்பு, சிறப்பு ஆகியனவற்றைக் கூறி, அவற்றில் அவனுக்கு வரைதல் விருப்புத் தோன்றும் சொற்களைத் தொகுத்துத் தோழி கூற்று நிகழ்த்துவதைத் (1060; 31-36) தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.30) உரையானது தலைவனிடம் தலைவி நின்னைப் பிரிந்திருத்தல் இயலாதிருப்பதால் இவள் பொருட்டு 'இரவிலும் பகலிலும் குறியிடத்திற்கு வரவேண்டும் என்றுரைத்தல்,'[117] தலைவன், தலைவியின் மீது கொண்ட வேட்கை காரணமாக இரவில் வர, 'பகலில் வாவென்றுரைத்தல்,'[118] பகலில் வந்த தலைவனை வரவு விலக்கி 'இரவில் வாவென்றுரைத்தல்,'[119] தலைவன் இரவிலும் பகலிலும் வந்தால் ஏதம் வருமென்றஞ்சி 'இவ்விரு பொழுதும் வரவேண்டாம் என்றுரைத்தல்,'[120] தலைவனிடம், இரவுக்குறியிடத்து வந்தால், கண்டோர் நும்மை முருகவேள் என்று கருதாது உண்மை உணர்வாராதலின் இவள் நாணத்தால் இறந்துபடுவள் என்று 'நிலைகண்டுரைத்தல்,[121] இரவுக்குறிக்கண் தலைவன் சிறைப்புறத்தானாவதறிந்து தலைவிக்குப் 'படைத்து மொழிதல்'[122] ஆகியனவற்றை மொழியும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம்,

'வருக என்றல்,' 'வாரல் என்றல்', 'படைத்து மொழிதல்' (19;3-4), தலைவனது நாடு, ஊர், குணம், மரபு, வாய்மை கூறி நீ வரையாது நடப்பது முறையன்று என்றல், தலைவனிடம் நினது பிரிவால் தலைவி துயருறுவது கொண்டு நம்மைப் போலத் துன்பத்துத் துவளும் மானிட மகளாதலை இன்றே அறிந்தேன் என்றல் (19;4-5) ஆகியனவற்றைக் கூறும். வீரசோழியம், தோழி, தலைவனை 'இரவுக்குறி நேர்தல்,' 'பகற்குறி மறுத்தல்' (நெய்.நடை;10), இறையனாரகப் பொருள் (சூ.30) உரையைத் தழுவி 'இரவிடங்காட்டல்,' 'பகலிடங்காட்டல்' (நெய்.நடை;11), தலைவியிடம் தலைவனின் 'வரவினை அறிவுறுத்தச் செல்லல்,' இவ்வாறு எடுத்துரைக்கச் செல்லும் தோழி, தாயின் துயிலைக் குறிப்பாக அறிந்து கொள்ளல், தலைவியைத் துயிலெடுப்பல், தலைவியை இரவுக் குறியிடத்திற்குக் கொண்டு சென்று, தலைவன் சந்திப்பதற்காக அவளைத் தனியாக நிறுத்திவிட்டு வேறொரு காரணம் காட்டி அவளிடமிருந்து பிரிந்து சேறல், தலைவன், தலைவியை எதிர்ப்பட்டுப் புணர்ந்த பிறகு தலைவியை எதிர்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கல், தோழி, தலைவனை எதிர்கொள்ளல், தலைவனது சிறப்புக்களை எடுத்துரைத்தல், 'அம்பலும் அலரும் ஆயின என்றல்,' இவ்வலரால் தலைவி ஆற்றாதவளாகக் காணப்படுகிறாள் என்றல், தலைவனை மீண்டும் குறியிடத்து வர வேண்டுதல் (நெய்.நடை;12-20) என்று விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது களவினைச் செவிலி அறிந்து தன்னை வினவியதாகவும் அதற்குத் தான் மறைத்துக் கூறியதாகவும் இயம்பல் (166;1), வீரசோழியத்திலிருந்து (நெய்.நடை;18) சிறிது மாறுபட்டு 'அலரறிவுறுத்தல்' (166;2), குறியிடத்து வந்த தலைவனிடம் இக்களவினைத் தாய் அறிந்துவிட்டாள் என்றல், தலைவனிடம் தலைவியின் வேறுபாட்டினை அறிந்த செவிலி, வெறியாட்டாளனை

அழைத்து வினவுதல் கொண்டாள் என்று அச்சமுறுத்தல், தலைவியைப் பிறர் வரைவு கூறி வந்ததை உணர்த்தல், தலைவனிடம் நீ வரைவு கூறி எங்கள் நகருக்கு வந்தாயாகில் எமர் எதிர்கொண்டு வருவரெனக் கூறல், தலைவியை வரையுநாளை வெளிப்படையாக உணர்த்தல், தலைவியின் அறிவுத் திறத்தைக் கூறல், இக்குறியிடத்து வருதல் இயல்பன்று, வேறொரு குறியிடை வருகவென்று கூறல் *(166;2-5)*, வீர சோழியத்தைத் *(நெய்.நடை;11)* தழுவிப் 'பகல் வருவானை இரவு வருகென்றல்,' 'இரவு வருவானைப் பகல் வருகென்றல்' *(166;6-7)*, தமிழ்நெறி விளக்கத்தைப் *(19;3)* பின்பற்றிப் 'பகலிலும் இரவிலும் பயின்று வருகென்றல்,' 'பகலிலும் இரவிலும் அகலிவன் என்றல்' *(166;8-9)*, 'உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்' *(166;8-11)* முதலியனவாக விரித்துரைக்கும். இவற்றைத் தழுவி மொழியும் மாறனகப்பொருள் *(58;1-13)* அகப்பொருள் விளக்கம் இயம்பிய 'பகலினும் இரவினும் அகலிவன்' என்றல் *(166;9)* என்பதை மட்டும் விடுத்துள்ளது. இதனையும் *(58;1-13)* அகப்பொருள் விளக்கத்தையும் *(166;9)* தழுவி இலக்கண விளக்கம் *(523;1-11)* சுட்டும். முத்துவீரியமானது பகல் வரவு விலக்கிய தோழி, மீண்டும் தலைவன் இரவில் வரக்கூடுமென நினைத்து இரவுப் பொழுதின் ஏதங்காட்டி இரவிலும் வராதேயென்று 'தொழுது இரந்து கூறல்,' மீண்டும் தலைவன், தலைவி மீது கொண்ட வேட்கை மிகவாற் குறியிடத்து வந்து நிற்க தோழி அன்னை என்னைக் குறிப்பாகப் பார்த்தாள். இக்களவொழுக்கத்தை அறிந்தாள் போலுமெனத் தலைவிக்குக் கூறுவாள் போன்று சிறைப்புறமாகத் தலைவனுக்குக் கூறல், தலைவனை எதிர்ப்பட்டு ஒரு கடுவன், தன் மந்திக்கு மாங்கனியைத் தேனில் தோய்த்துக் கொடுத்து இன்புறுவதைக் கண்டு இது நம் காதலருக்கு நம்மாட்டு அரிதாயிற்றென்று நீ வரையாமையை நினைத்து ஆற்றாளாயினாள்

என்று 'மந்திமேல் வைத்து வரைவுகடாதல்' (851;4-5), இலக்கண விளக்கத்தைத் (523;6, 7, 9) தழுவிப் 'பகலுடம்பட்டாள் போன்று இரவு வரலென்றல்,' 'இரவுடம்பட்டாள் போன்று பகல்வரல் என்றல்,' 'இரவும் பகலும் வரவொழி கென்றல்' (851 ; 7-9), இருபொழுதும் வரவு விலக்கிய தோழி, மதி முழுமை பெற்றது, வேங்கை பூத்தது, எனவே வரைவொடு வருவதற்குத் தகுந்த காலமென்று கூறி வரைவுகடாதல், தலைவியிடம் நம் துன்பத்தை நீயாகிலும் போய்க் கூறென்பது குறிப்பால் தோன்றத் தலைவன் வரைவுடம்படாமையைத் தலைவியிடம் கூறல், இவற்றையெல்லாம் சிறைப்புறமாகக் கேட்ட தலைவன், குறியிடை வந்து நிற்பத் தோழி எதிர்ப்பட்டு, நின்வயப்பட்ட தலைவி பொலிவழிந்து வருந்தியிருக்கின்றாள். இவளை வரைந்து கொள்ளாததற்குக் காரணமென்னவென்று 'பொலிவழிவு கூறி வரைவுகடாவல்' (851;10-11) ஆகியனவற்றைக் கூறும். இவற்றையும் (851;7-9) இலக்கண விளக்கத்தையும் (523;1-5, 8, 10-11) தழுவி சுவாமிநாதம் (104;1-8) சுட்டும்.

வீழ்ச்சி

செவிலி, தோழியிடம் தலைவியின் செய்கையில் ஐயங்கொண்டு வினவுவாள். அப்போது தோழி, பொய்யொன்று படைத்து மொழிந்து அதனைத் தாய் மெய்யென நம்புமாறு செய்ததைச் சொல்லியும் தலைவனை வரைவுகடாவுவாள் (1060;37-38). இக்கூற்று தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

அறத்தொடு நிற்றல்

தலைவியின் உடல் வேறுபாட்டினைக் கண்ட செவிலி, கட்டுவிச்சியை அழைத்துக் கட்டு வைப்பிப்பாள். இவள் முருகணங்கென்று கூறக் கேட்டு, வேலனை அழைத்து வெறியாட

முற்படுவாள். அப்போது தலைவி, தன் கருத்தைச் செவிலிக்குக் கூறும்படித் தோழியிடம் கூற, அறத்தொடு நிற்பாள். இத்தகைய அறத்தொடு நிற்றலைத் தொல்காப்பியம், "புரைதீர் கிளவி" (1060;42) என்றும் இறையனாரகப்பொருள், "மாறுகோள் இல்லா மொழி" (இறை.14;2) என்றும் சுட்டும். இதன் உரையில் நக்கீரர், "எற்றினொடு மாறுகொள்ளாமையோ எனின், தாயறிவினொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் கற்பினொடு மாறுகொள்ளாமையும், தோழி தனது காவலொடு மாறுகொள்ளாமையும், நாணினொடு மாறுகொள்ளாமையும், உலகினொடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க"[123] என்று தோழி, அறத்தொடு நிற்கும் திறத்தை இயம்புவர். தோழி, தலைவியின் கள வொழுக்கத்தைப் பெற்றோருக்கு அறிவித்தல் என்ற தன்மையில் தி.சு.பாலசுந்தரம்பிள்ளை, " 'அறத்தொடு நிற்ற' லென்பது தானுந் தன் தலைவியும் இதுகாறும் அறத்தோடு பொருந்தவே நடந்திருப்பதாகத் தோழி காட்டி நிற்றலென்று பொருள்படும். அறம் என்பதை இங்கு முறை, தக்கது என்று கொள்ளல் வேண்டும்"[124] என்பர். நா.பாலகிருட்டினன், "தோழி, தலைவனைப் பன்முறை வரைவுகடாவியும் அவன் வரைவு முயற்சி மேற்கொள்ளாது பின்னுங் களவின்பமே காமுற்று வரைவு நீட்டிக்கும்போது தலைவி சொல்லொணாத் துயருக்குள்ளாவாள். வெறியாட்டு, வேற்றுவரைவு முதலிய கொடுமைகள் பலவாக அவளுக்கு வந்து சேரும். எனவே தோழி 'இனி இக்களவினைப் பெற்றோர்க்கு வெளிப்படச் செய்து, அவராலேயே தலைவியை அவள் விரும்பிய தலைவனுக்குக் கொடுக்கச் செய்தல் தக்கது' என்று கருதி அவர்களுக்குக் களவொழுக்கத்தை வெளிப்படுத்துவாள். இதுவே அறத்தொடு நிற்றல் எனப்படும்"[125] என்று இயம்புவர்.

இத்தகைய சூழலில் தொல்காப்பியத்தில் (1060) தோழி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன நான்கு. பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.14) உரை மூன்று, தமிழ்நெறி விளக்கம் (22) ஐந்து, வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஆறு, அகப்பொருள் விளக்கம் (177) ஒன்று, களவியற்காரிகை (46, 47) ஐந்து, மாறனகப்பொருள் (72, 73, 74) நான்கு, இலக்கண விளக்கம் (533) ஒன்று, முத்துவீரியம் (852) ஆறு, சுவாமிநாதம் (109) ஆறு எனத் தோழிக்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

தலைவியை நொதுமலர் வரையக் கருதிய வழித் தோழி கூற்று நிகழ்த்துவாள். இதனை,

"பிறன் வரைவு ஆயினும்"

(தொல்.1060;40)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும். இதனையே மாறனகப்பொருள், தலைவியைப் பிறர் வரையவரின் அறத்தொடு நின்று நீக்குவதை, 'அயலவர் மணமுரசாயிடை விலக்கல்' (74;1) என்றும் மொழியும்.

வளர்ச்சி

செவிலி, கட்டும் கழங்குமிட்டுக் குறிபார்க்குமிடத்தும் வெறியாடல் நிகழ்த்துமிடத்தும் தலைவி, தலைவன் மீது கொண்ட காதலைச் செவிலித்தாய் மனத்துட் படுமாறு கூறுமிடத்தும் தோழி நிகழ்த்தும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவி, காப்பு மிகுதியால் உடல் மெலிந்து வேறுபாட்டுடன் காணப்படுவாள். அப்போது அவளது மெலிவு தீர, செவிலி அறிவரை வினாவிக் கட்டும், கழங்கும் இட்டுக் குறிபார்ப்பாள். அப்போது தோழி, கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"அவள் விலங்குறினும்"

(தொல்.1060;39)

என்று சுட்டும். இதனைத் தமிழ்நெறி விளக்கம், தலைவியின் மெலிவு குறித்துச் செவிலி வெறியாட்டு நிகழ்த்தத் துணிந்தவழி, நாம் வீணே வருந்தி அழியாத வகையில், செவிலிக்கு அறத்தொடு நிற்பதில் தடையாது உள்ளது என்று வினவல், செவிலி வெறியாட்டு நிகழ்த்துவதாகக் கூறுவது பொய் என்று கூறி ஆற்றாளாய் நின்ற தலைவியை ஆற்றுவித்தல் (22;5-6) ஆகியனவற்றைக் குறிப்பிடும். முத்துவீரியமானது செவிலி, கட்டுவிச்சியை அழைத்துக் கட்டு வைக்க, அப்போது தோழி, அவள் தன் உள்ளத்தில் ஓடிய அனைத்தையும் வெளிப்படச் சொல்லி, தன் குடியினையும் குற்றப்படுத்திச் சொல்ல அதனைக் கேட்டு இனி என்ன செய்வது என்று 'கலக்கமுறுவதைச்' (852;12) சுட்டும்.

செவிலி, வேலனை அழைத்துக் களம் அமைத்து வெறியாடல் நிகழ்த்துமிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம்,

"களம் பெறக்காட்டினும்"

(தொல்.1060;39)

என்று இயம்பும். இதில் வரும் 'களம்' என்பதற்கு நச்சினார்க்கினியர், "களமாவது - கட்டுங் கழங்கும் இட்டுரைக்கும் இடமும் வெறியாட்டிடமுமாம்"[126] என்பர்.

இக்கூற்றினை இறையனாரகப்பொருள் (சூ.14) உரையானது, தோழி, வெறியாடு களத்திற்குச் சென்று தலைவி நீரில் மூழ்க அங்கு வந்து உதவியவன் இந்நோய்க்குக் காரணமாக, வேறொரு உபாயத்தைக் கருதும் உன்னைப்போல அறிவுடையார் இவ்வுலகத்தில் இல்லையென்று அறத்தொடு நிற்கும் திறத்தில் 'வெறி விலக்கல்,'[127] செவிலி, தலைவிக்குற்ற நோயானது முருகனால் வந்ததென்று

வெறியாட்டு எடுத்தாள். முருகனே, இதனை நீ அறியாமையால் அறிவற்றவனேயாவாய் என்று 'அறிவிலன் வேலன் என்று அயலோர்க்கு உரைத்தல்'[128] ஆகியனவற்றை மொழியும். தமிழ்நெறி விளக்கமானது தலைவி அறத்தொடு நிலையினை மறுத்தவழித் தோழி, அவளை அறத்தொடு நிற்றலை ஏற்குமாறு செய்தல் (22;7), இறையனாரகப்பொருள் (சூ.14) உரையைத் தழுவி, 'வெறிக்கட் படர்க்கை முன்னிலையால் கூறல்' (22;8) ஆகியனவற்றைக் கூறும். இறையனாரகப்பொருள் (சூ.14) உரையை அடியொற்றி களவியற்காரிகையானது 'வெறி விலக்கல்' (47;3), தமிழ்நெறி விளக்கத்தைத் (22;8) தழுவி 'முருகற்கு உரைத்தல்' (47;4) என்று மொழியும். செவிலி வெறியாட்டெடுக்க, அதனை அறிந்த தலைவி எம்பெருமானுக்குப் பழிவருமோ என்று ஐயுற்ற அவளது குறிப்பினை அறிந்த தோழி, நம் குடிக்குப் பழி வந்தாலும் அவற்குப் பழி வராமல் காக்கும் வழி யாதோ என்று தலைவியைப் பாதுகாத்தல் தோன்ற 'ஐயந்தீரக் கூறல்' (852;15), களவியற்காரிகையைத் (47;3) தழுவி 'வெறிவிலக்கல்' (852;16) ஆகியனவற்றை முத்துவீரியம் கூறும். இதனைத் தழுவி சுவாமிநாதம் (109;6-7) சுட்டும்.

தலைவியின் தமர், தலைவனுக்கு வரைவு மறுத்தபோதும் தோழி, பிறரை முன்னிலைப்படுத்திக் கூறுமுகத்தானோ, அறத்தொடு நின்றோ தலைவி, தலைவன் மீது கொண்ட களவுக் காதலைச் செவிலித்தாய் மனத்துட் படும்படி புலப்படுத்துவதைத் தொல்காப்பியம்,

"................. அவன் வரைவு மறுப்பினும்
முன்னிலை அறன் எனப்படுதல் என்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்"

(தொல்.1060;40-42)

என்று குறிப்பிடும். இதனை நச்சினார்க்கினியர், "அறனென்று

சொல்லப்படுந் தன்மை இருவர் கண்ணுங் குற்றந் தீர்ந்த எதிர்ப்பாடென்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்துச் செலுத்தினும்"[129] என்று குறிப்பிட்டு, "புனறருபுணர்ச்சியும், பூத்தரு புணர்ச்சியும், களிறுதரு புணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவளை நற்றாய்க்குக் கூறுதலை நிகழ்த்துவித்தலாம். எனவே அவள் தந்தைக்குந் தன்னையர்க்கும் உணர்த்துதலும் அதனை மீண்டு வந்து தலைவிக்கு உணர்த்துதலும் பெற்றாம்[130] என்பர்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.14) உரையானது, செவிலி, தலைவியை அடியிற் கொண்டு முடிகாறும் நோக்கி, அவளது வேறுபாட்டினை அறிந்து வினவ தோழி மாறுகோள் இல்லா மொழியால் 'அறத்தொடு நிற்றலை'[131] மொழியும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் 'தோழி உணர்த்தல்' (22;3) என்று கூறும். இதனைத் தழுவி வீரசோழியமானது 'அவ்விய லொட்டாண் மொழிதல்' (குறிஞ்.நடை;66), ஒருவன் நல்ல நிறமுடைய மலர் ஒன்றினை ஏந்திவர, அதனைத் தன் பாவைக்கு வேண்டுமென்று கூறிப் பெற்றுக் கொண்டாள் என்று 'பூத்தரு புணர்ச்சியைக் கூறல்,' நின் மகள் சுனையாடப் புகுந்தவிடத்து அழுந்துபடக் கண்டு ஒருவன் கரையேற்றினான் என்று 'புனல் தரு புணர்ச்சியைக் கூறல்,' நீவிர் புனங் காக்கச் சொல்ல நாங்கள் போய்ப் புனங்காக்க அப்போது மதங்கொண்ட யானையிலிருந்து காத்தான் என்று 'களிறுதரு புணர்ச்சியைக் கூறல்,' தலைவியின் தமர் வரைவு மறுத்தவழி அவளது வருத்தத்தை நீக்கல், தலைவி, தோழியை அறத்தொடு நிற்குமாறு வேண்ட, அவள் அறத்தொடு நிற்றல் (குறிஞ்.நடை;66-68, 72-73) ஆகியனவற்றைக் குறிப்பிடும். இதனைத் தழுவி (குறிஞ்.நடை;66-68) அகப்பொருள் விளக்கமானது 'பூவே புனலே களிறே என்றிவை ஏதுவாகத் தலைப்பாடியம்பும்' (177;2-4) என்று ஒரே கூற்றாக மொழியும். இதனைத் தழுவிக்

களவியற்காரிகையானது (46;1-6) மூன்று கூற்றாக இயம்பும். தலைவனது பிரிவால் தலைவி ஆற்றாதவளாயிருக்க, அவளது 'கண்ணீரைத் துடைத்தல்,' தலைவனின் பண்புகளை இகழ்ந்துரைப்பதோடு (72;1, 4) அகப்பொருள் விளக்கத்தை (177;2-4) அடியொற்றி மாறனகப்பொருள் (73;3-4) இயம்பும். இதனைத் தழுவி இலக்கண விளக்கம் (533;11-13) சுட்டும். வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை;66) தழுவி முத்துவீரியமானது 'செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்' (852;16-17), அறத்தொடு நிற்கும்போது தலைவனின் தேரொலி கேட்டு தலைவிக்கு அவன் வரவெடுத்துக் கூறல், தமர் வேண்டியபடியே நம் இல்லின்முன் நிதியுடன் வந்துள்ளார். இதனைக் காண்பாயாகவென 'நிதி காட்டல்' (852;18,20) ஆகியனவற்றை இயம்பும். மாறனகப்பொருளைத் (72;1, 4) தழுவுவதுடன் இலக்கணவிளக்கத்தை (533;11-13) அடியொற்றி சுவாமிநாதமும் (109;1-3, 7-8) மூன்று கூற்றாக மொழியும்.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு

தலைவன், தலைவியை வரைந்து கொள்ளுதல் வேண்டிப் பொருள்வயிற் பிரிதல் உண்டு. இத்தகைய சூழலில் தோழி நிகழ்த்தும் கூற்றாகத் தொல்காப்பியம் (1060) ஒன்றைக் குறிப்பிடும். பிற அக இலக்கணங்களான இறையனாரகப்பொருள் (சூ.25) உரை ஒன்று, அகப்பொருள் விளக்கம் (170) ஒன்பது, களவியற்காரிகை (50) இரண்டு, மாறனகப்பொருள் (62) பத்து, இலக்கண விளக்கம் (527), முத்துவீரியம் (852), சுவாமிநாதம் (106, 107) ஒவ்வொன்றிலும் முறையே ஒன்பது என இச்சூழலில் தோழி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

பொருள்வயிற் பிரியும் தலைவனிடம் தோழி, தலைவியைப் பாதுகாத்துக் கொள்ளென்று கூறுவாள். இதனைத் தொல்காப்பியம்,

"ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்"

(தொல்.1060;25)

என்று குறிப்பிடும்.

இக்கூற்றினை இறையனாரகப்பொருள் (சூ.25) உரையானது தலைவன் பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைவியின் ஆற்றாமை கண்டு தோழி அவனை 'இயற்பழித்தல்'[132] என மொழியும். தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதித் தோழியிடம், எனது பிரிவைத் தலைவியிடம் கூற வேண்டுமென்று கூற, அவள் உனது பிரிவை நீயே கூறென்றல், தலைவன் வரைவு காரணமாகப் பிரிந்துள்ளானாதலால் நமக்கு இன்பமேயெனத் தலைவி வருத்தமுறாதவாறு அவனது செலவுணர்த்தல், இவ்வாறு கூறியும் தலைவி வருந்த, 'கொடுஞ்சொற் சொல்லல்,' தலைவன், கூறிச் சென்ற காலத்தில் திரும்பி வருவரென வலிந்து கூறல், தலைவி கார்ப்பருவம் கண்டு புலம்ப, அவளைத் தேற்றும் வண்ணம் இது காலத்தில் வந்த மேகமன்று, காலமல்லாக் காலத்தில் தோன்றியவை, தலைவன் குறிப்பிட்ட காலமன்று, நீ வருந்தற்க என்று ஆற்றுவித்தல், தலைவன் தான் வருகின்ற செய்தியை அறிவித்தற்கு விடுக்க, இக்கார் தூதாய் வந்தடைந்ததென்று கூறல், தலைவனது வலம்புரியோசையைக் கேட்டு அவன் வரவை அறிவுறுத்தல், தலைவன் வந்தவிடத்து பிரிந்து சென்ற இடத்தில் தலைவியை நினைத்ததுண்டோ என்று வினவல், தலைவனிடம் தலைவியை ஆற்றுவித்திருந்தமை கூறல் (170;2-7, 9-11,14-19) ஆகியனவாக அகப்பொருள் விளக்கம் விரித்துரைக்கும். இறையனாரகப்பொருள் (சூ.25) உரையைத் தழுவிக் களவியற்காரிகை 'விளம்பு மியல்பைப் பழித்தல்' (50;1), ஆற்றாளாகிய

தலைவியிடம், தலைவன் காலம் தாழ்க்காமல் விரைந்து வருவான், நீ வருந்தாதே என்றல் (50;3-4) என்பனவற்றை மொழியும். மாறனகப்பொருள் (62;2-4, 6-8, 10, 12-13, 17, 19, 21-23) அகப்பொருள் விளக்கத்தைப் (170;2-7, 9-11, 14-19) பின்பற்றுவதுடன் தோழி வம்பென்றுரைத்த நிலையில் மீண்டும் ஆற்றாதிருக்க, நினது மேனி வேறுபாட்டினைக் கண்டு அயலோர் ஐயுறுவராதலால் நீ ஆற்றவேண்டுமென்று 'வற்புறுத்தலை'க் (62;11) கூடுதலாக மொழியும். இதனைத் தழுவி (62;2-4, 6-8, 10, 12-13, 17, 19, 21-23) இலக்கண விளக்கம் (527;2-7, 9-11, 14-19) கூறும். முத்துவீரியமானது தலைவன் தோழியிடம் தலைவியை வரைந்து கொள்ள அவள் ஐயன்மாரிடம் பரிசப்பொருள் கேட்பாயாக என்று கூற, தோழி அவளுக்கு ஏழுலகும் விலை போதாதெனப் 'பரிசப் பொருள் கூறல்,' இவ்வாறு கூறி எமரால் கேட்கப்பட்ட பொருளை விரைவாகக் கொண்டு வந்து வரைந்து கொள்வாயாகவென்றல் (852;1) என்றும் இலக்கண விளக்கத்தைத் (527;2, 3-4, 9-11) தழுவி 'நீ கூறு என்றல்,' 'பிரிந்தமை கூறல்,' 'கால மறைத்துரைத்தல்,' 'தூது வர உரைத்தல்' (852;3-4, 8-9) என்றும் களவியற்காரிகையைத் (50;3-4) தழுவி 'வருத்தங் கண்டு உரைத்தல்' (852;5) என்றும் மாறனகப்பொருளை (62;11) அடியொற்றி 'வற்புறுத்தல்' (852;6), மீண்டும் தலைவன் காலம் நீட்டிக்க, தலைவி வருந்துவதைக் கண்டு தோழி, தலைவன் கூறிய வார்த்தை நினக்குப் பொய்யாகத் தோன்றினால், இவ்வுலகத்தில் மெய்யென்பது இல்லையென வாய்மை கூறி வருத்தந் தணித்தல் (852;7) என்றும் கூறும். இவற்றையும் (852;3-4,8-9) இலக்கண விளக்கத்தையும் (527;5-7, 14-19) தழுவி சுவாமிநாதம் (106;4-8, 107;1-2, 4-7) சுட்டும். இவ்வாறு தொல்காப்பியக் கூற்று பிற அக இலக்கணங்களில் வளர்ச்சிபெற்றுள்ளது.

உடன்போக்கு

தலைவனும் தலைவியும் இருவகைக் குறியிலும் கூட்டம் நிகழ்த்துவர். இக்களவொழுக்கம் வெளிப்பட்டு அலராகும். இவ்வலரறிந்த தலைவன், தலைவியைத் தோழியின் துணைகொண்டு தன்னூருக்கு அழைத்துச் செல்வான். இவ்வுடன்போக்கின்கண் தோழி, நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியத்தில் (985) கொள்ளப்படுவன ஆறு. இறையனாரகப்பொருள் (சூ.23) உரை, தமிழ்நெறி விளக்கம் (20,23) ஒவ்வொன்றிலும் ஏழு, வீரசோழியம் (பாலை நடை.) நான்கு, அகப்பொருள் விளக்கம் (182) ஆறு, களவியற்காரிகை (உ.76, 77, 78, 79, 80, 82 ; நூ.51) ஏழு, மாறனகப்பொருள் (80), இலக்கண விளக்கம் (536) ஒவ்வொன்றிலும் ஆறு, முத்துவீரியம் (850) பதினெட்டு, சுவாமிநாதம் (111) ஏழு எனப் பிற அக இலக்கணங்களில் தேர்ழி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

தோழி, தலைவனிடம் தலைவியை உடனழைத்துக் கொண்டு செல்லாவிடில் அவளுக்கு ஏற்படும் துன்பங்களை எடுத்துக் கூறுவதைத் (985;1) தொல்காப்பியம் சுட்டும்.

இதனையே முத்துவீரியமானது தோழி, தலைவனிடம் நீ தலைவியை உடன்கொண்டு போகவில்லையெனில் அலராலும் காவல் மிகுதியாலும் நின்னை எதிர்ப்படுதல் அரிதாகலின் தடந்துறந்த கயல்போல இறந்துபடுவள் (850;8) என்று இயம்பும்.

வளர்ச்சி

தலைவியை உடன்போக்கற்குத் துணிதல், தலைவியைத் தலைவனோடு செல்கவென்று விடுத்தல் ஆகிய கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவனோடு தலைவியைப் போக்கற்குத் துணிந்தபோது கூற்று நிகழ்த்துவதைத் (985;2) தொல்காப்பியம் சுட்டும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது தோழி, தலைவனிடம் தலைவியின் ஆற்றாமை அலராயிற்றென்று 'அலரறிவுறுத்தல்,'[133] தலைவனிடம் தமர் மகட் பேசுவாருக்குக் கொடுக்கக் கூடும், நீ விரைவில் வரைந்துகொள்ளென்று அயலவர் 'மகட்பேசுவதைக் கூறல்,'[134] தலைவிக்கு நாளை பொன்னணிந்து மணமுரசறையுமெனக் கூறி, இனிச் செய்ய வேண்டியதைச் செய்வாயாக வென்றல்,[135] தலைவன், தோழியிடம் பரிசப்பொருள் கூறுவாயாக வெனக் கேட்ட நிலையில் தலைவியின் சிறிய இடைக்கே எல்லா உலகமும் நல்கினாலும் விலை போதாது, அப்படியிருக்கப் பெரிய மார்பகத்திற்கு விலை கூறுவது எப்படியென்று விலையருமை கூறல்,[136] தலைவன், தலைவி வெஞ்சுரத்தில் வந்தால் ஆற்றாதவளாய்க் காணப்படுவாளென்று கூற, தோழி அவனிடம் தலைவி நின்னொடு வரப்பெறின் அவளுக்கு வெஞ்சுரமும் தண்சுரமாகும். நீ அவளது அருமை கூறாது அவளைக் கொண்டு போ என்றல்,[137] செவிலி, மகளது வேறுபாடு கண்டு தோழியிடம் வினவ, அவள் தன்னால் அறியப்பட்டதைக் கூறி அறத்தொடு நிற்பாள். செவிலி, பிறருக்கு அறத்தொடு நிற்ப, அவர்களும் இன்புற்ற மனத்தினராய் வரைதற்கு உடன்படுவர். இதனையறிந்த தோழி, தலைவி தலைவனுடன் சுரத்திடைச் சென்று ஏன் வருந்தவேண்டும் என்று எண்ணி, உடன்போக்குச் 'செல்லும் தலைவனைச் செலவழுங்குவித்தல்'[138] ஆகியனவாக விரித்துரைக்கும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கமானது 'அலர் பெரிது என்றல்,' 'அயல் வரைவு உரைத்தல்' 'சுரஞ்செலவாற்று நின்னோடு என்றல்' (20;1,3), தலைவனிடம் திருமணம் செய்துகொள்ளும் உலக மரபை எடுத்துக் கூறி, தலைவி

தமரை எய்திப் பரிசப்பொருள் பற்றி அறியுமாறு தலைவனுக்கு அறிவுறுத்தல், 'வருந்திறம் உரைத்தல்,' தலைவியிடம், தலைவன் நின்னைத் தம்மோடு உடன்செல்லக் கருதுகின்றான் என்று உடன்போக்குச் செல்ல நயப்பித்தல் (20;2, 4) ஆகியனவற்றைக் கூறும். இதனைத் (20;3) தழுவி வீரசோழியமானது 'உடன்போக்குணர்த்தலை' (பாலை நடை;3) இயம்பும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம் (182;1) சுட்டுவதுடன் தலைவனை உடன்போக்குச் செல்ல உடன்படுத்தல் (182;2) என மொழியும். தமிழ்நெறி விளக்கத்தைத் (20;1) தழுவிக் களவியற்காரிகையானது 'அலர் அறிவுறுத்தல்,'[139] 'அயன்மணம் உரைத்தல்,'[140] இறையனாரகப்பொருள் (சூ.23) உரையைத் தழுவி 'மணமுரசு அறைதல்,'[141] 'பரிசங் கிளத்தல்,'[142] 'செலவழுங்குவித்தல்,'[143] அகப்பொருள் விளக்கத்தைத் (182;1) தழுவி 'உடன்போக்கு உரைத்தல்'[144] ஆகியனவற்றைக் கூறும். இதனையும் (உ.80) அகப்பொருள் விளக்கத்தையும் (182;2) தழுவி மாறனகப்பொருளும் (80;1-2) இலக்கண விளக்கமும் (536;1-2) சுட்டும். முத்துவீரியமானது தலைவனிடம் தலைவியின் 'பருவ முதிர்வினைக் கூறல்,' படைத்து மொழியால் அயலவர் பலரும் பொன்னணியக் கருதுவதை எடுத்துரைத்தல் (850;1), களவியற்காரிகையைத் (உ.77, 78, 79) தழுவி 'மகட்பேச்சுரைத்தல்,' 'பொன்னணிவுரைத்தல்,' 'பொருள்விலை கூறல்' (850;2-3), தலைவனிடம் தலைவி கடலையும் கானலையும் நோக்கிக் கண்ணீர் கொண்டு தன் ஆயத்தாரையெல்லாம் புல்லிக் கொண்டாள். அவள் கருதியது இன்னதென்று தெரியாதென அவளது 'தளர்வறிந்துரைத்தல்,' தலைவி, தன்னுடைய பூவையும் பந்தையும் இன்று என் கையில் தந்தாள். இது நின்னோடு உடன்போதலைக் கருதிப்போலும் என்று 'உளம் நினைந்துரைத்தல்' (850;5-6), இலக்கண விளக்கத்தைத் (536;1) தழுவி

'ஆதரங் கூறல்' (850;7) என்று சுட்டும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (536;2) தழுவி சுவாமிநாதம் (111;3-4) மொழியும்.

தோழி, தலைவியிடம் தலைவன் உடன்போக்குச் செல்ல ஒத்துக்கொண்டதைக் கூறி, அவனோடு செல்கவென்று விடுக்கும்போது கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

"விடுத்தற் கண்ணும்"

(தொல்.985;2)

என்று இயம்பும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது தலைவனைப் போக்குடன்படுத்திய தோழி, அவனிடம் இவளிடத்து நின்னருள் திரியாமல் பாதுகாப்பாயாகவென்று 'ஓம்படுத்துரைப்பதை'[145] மொழியும். இதனை அடியொற்றித் தமிழ்நெறி விளக்கம் 'கையடை' (23;1) என்று கூறும். வீரசோழியமானது தலைவியிடம் தலைவன், நின்னை உடன்கொண்டு செல்லக் கருதுகின்றான் என்றுரைத்தல், இவ்வாறு உடன்போக்குணர்த்தியதும் தலைவி, தலைவனுடன் சென்றால் தன் நாணம் அழிந்துவிடுமேயென்று வருந்த, தோழி நாணை விடக் கற்புச் சிறந்ததென்று கூறி உடன்போக்குத் துணியக் 'கற்புநலங் கூறல்' (பாலை நடை ; 3,5), தமிழ்நெறி விளக்கத்தை (23;1) அடியொற்றி 'கையுய்த்து மொழிதல்' (பாலை நடை ;5) என மொழியும். இவற்றைத் (பாலை நடை;3,5) தழுவி, அகப்பொருள் விளக்கமானது தலைவிக்கு 'உடன்போக்கு உணர்த்தல்,' 'கற்பு மேம்பாடு புகறல்,' 'கையடை கொடுத்தல்' (182;3-6, 8-9), 'நீயிர் நும் பதியிடைச் சேர்வீரென இருள் பொதிந்த இடை யாமத்தில் விடுத்தல்' (182;9) ஆகியனவற்றை விரித்துரைக்கும். இதனைத் (182;8-9) தழுவிக் களவியற்காரிகையானது 'உற்ற நெறி கையடை' (51;1) என்று சுட்டும். இதனையும் அகப்பொருள்

விளக்கத்தையும் (182;3-6, 9) தழுவி மாறனகப்பொருள் (80;3-6, 9) குறிப்பிடும். இதனை அடியொற்றி இலக்கண விளக்கம் (536;3-6, 8-9) இயம்பும். இதனைத் (536;5-6, 8-9) தழுவி முத்துவீரியமானது 'கற்பின் புனைநலன் உரைத்தல்,' 'ஓம்படுத்துரைத்தல்,' 'வழிப்படுத்துரைத்தல்' (850;9, 15), தலைவியிடம் நின்னை நீரில்லாத வெய்ய சுரத்தில் உடன்கொண்டு செல்லத் துணிந்தாரென்று கூறல், அப்போது தலைவி, உடன்போகத் துணிந்த காரணமென்னவென்று கேட்க, நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் இருக்கின்றீர். நின்மீது கொண்ட அன்பால் தலைவன் வர, வழி வருத்தம் கருதி வரவு விலக்க, அவனும் அவ்வாறு வருதலை ஒழித்து வரைவொடு பொன் முதலியவற்றை நினக்குப் பரிசப் பொருளாகக் கொடுத்தாலும் தமர் நின்னைத் தலைவனுக்குக் கொடார். இதுதான் தலைவன் உடன்போகக் காரணமென்று 'துணிவறிவித்தல்,' தலைவனிடம் தலைவி, நின்னோடு போகுமிடத்து நீ செல்லும் கற்சுரம் அவள் சிற்றடிக்கு நற்றளிராம் எனத் 'துணிவெடுத்துரைத்தல்,' தலைவியை இவ்விருட் காலத்தில் கொண்டு போவாயாக என்றல், தலைவியைக் கொண்டு வந்து நீ இவளைக் கைக்கொள்ளென அவனோடு கூட்டுவித்தல், தலைவியைக் காணாது தேடிய செவிலியிடம் 'அறத்தொடு நிற்றல்' (850;10-12, 14, 26) ஆகியனவாக விரித்துரைக்கும். இதனையும் (850;9-10, 15) இலக்கண விளக்கத்தையும் (536;3-4) அடியொற்றி சுவாமிநாதம் (111 ; 4-7) மொழியும்.

வீழ்ச்சி

தமரினின்று தலைவியை நீக்கப் பெறுதலால் தலைவிக்கும் தனக்கும் ஏற்பட்ட துன்பத்தைக் கூறுதல்,

மெய்யும் பொய்யும் பகுத்துணர்ந்தோர் சுட்டிய நெறி இஃதென்று கூறித் தலைவியைத் தேடிச் செல்ல முற்பட்ட தாயைச் செல்லவிடாது

மீட்டுக் கொள்ளல்,

உடன்போக்கில் சென்ற தலைவியை நினைத்துத் தாய் பிரிவாற்றாது வருந்துவாள். அவ்வாறு வருந்திய தாயிடம் தோழி, நடந்தவற்றை மறந்து, நடக்க வேண்டியவற்றை நினைத்தல் வேண்டுமென்று கூறி வற்புறுத்துமிடத்தும் (985;3, 4-5, 6-10) கூற்று நிகழ்த்தல் தொல்காப்பியத்தில் மட்டும் மொழியப்பட்டுள்ளன. பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

கற்பொடு புணர்ந்த கவ்வை

தலைவி, தலைவனுடைய உடைமையாய்க் கற்பொடு கூடியதை அனைவரும் அறிதல் கற்பொடு புணர்ந்த கவ்வையாகும். இச்சூழலில் சுவாமிநாதம் (112, 113) இரு இடங்களில் தோழி கூற்று நிகழ்த்துவதாக வரையறுக்கும்.

புதிய கூற்றுகள்

செவிலி, தலைவியைக் காணாது தோழியிடம் வினவ, அவள் தலைவி, தலைவனுடன் உடன்போனமையைக் கூறல், தலைவியை நினைத்துத் தோழி புலம்பல் (112;6-7, 113;2) ஆகியனவற்றைச் சுவாமிநாதம் மொழியும். இவை புதிய கூற்றுகளாகும்.

மீட்சி

உடன்போக்கில் சென்ற தலைவனும் தலைவியும் திரும்பி வருதல் மீட்சியாகும். இத்தகைய சூழலில் பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (191), மாறனகப்பொருள் (91), இலக்கணவிளக்கம் (540), சுவாமிநாதம் (115) ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்று

உடன்போக்கில் சென்ற தலைவி, தலைவனுடன் திரும்பி வரும்போது தன் ஊருக்கு முன்னே செல்வோரிடம் தங்களின் வரவினைத் தோழிக்குக் கூறவேண்டும் என்றுரைக்க, அவர்கள் தோழியிடம் கூற, அவள் நற்றாய்க்கு உணர்த்துவதை (191;5-6) அகப்பொருள் விளக்கம் சுட்டும். இதனையே மாறனகப்பொருள் (91;6-7), இலக்கண விளக்கம் (540;5-6), சுவாமிநாதம் (115;1) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன. இவை தொல்காப்பியம் குறிப்பிடாத புதிய கூற்றுகளாகும்.

தன்மனை வரைதல்

தலைவன், தலைவியைத் தன் நகருக்கு அழைத்துச் சென்று, தன் மனையில் மணம் செய்து கொள்ளல் தன்மனை வரைதல் ஆகும். இச்சூழலில் பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (194), மாறனகப்பொருள் (92), இலக்கண விளக்கம் (543), சுவாமிநாதம் (115) ஆகிய ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு கூற்றுகள் வரையறுக்கப் பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தலைவன், தலைவியைத் தன் வீட்டிலேயே திருமணம் செய்துகொண்டதைத் தோழி, செவிலியிடம் கூறல், தலைவன், தோழியிடம் யான் மணம் புரிந்த செய்தியை நுமருக்குச் சொல்லுக என்றதும் தோழி 'தான் அதனை முன்னே சாற்றியதை உரைத்தல்' (194;2-3, 7) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் கூறும். இதனைத் தழுவி மாறனகப்பொருள் (92;2-3, 7-8), இலக்கண விளக்கம் (543;2-3,7), சுவாமிநாதம் (115;5-6, 8) ஆகிய நூல்களும் உரைக்கின்றன. இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

வரைவு மலிவு

தலைவியின் இல்லத்தார் தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்ய ஒப்புக்கொண்டதைக் கூறி, தலைவன் தமருடன் வரைந்து கொள்ள வருகின்றமையைத் தோழி, தலைவிக்கு மகிழ்வுடன் தெரிவித்தல் வரைவு மலிவாகும். இத்தகைய வரைவு மலிவில் தொல்காப்பியத்தில் (1060) தோழி நிகழ்த்தும் கூற்று ஒன்று. பிற அக இலக்கணங்களாகிய தமிழ்நெறி விளக்கம் (22) ஒன்று, அகப்பொருள் விளக்கம் (174) நான்கு, களவியற்காரிகை (48, 49) மூன்று, மாறனகப்பொருள் (70), இலக்கண விளக்கம் (531) ஒவ்வொன்றிலும் நான்கு, முத்துவீரியம் (854) இரண்டு, சுவாமிநாதம் (108) நான்கு என இச்சூழலில் கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தோழி, தலைவியிடம் தமர் வரைவுடன்பட்ட தன்மையால் விரைவில் வரைவு நிகழும். அதுவரையிலும் ஆற்றிக் கொண்டிரு என்று வற்புறுத்துவதைத் (1060;44) தொல்காப்பியம் சுட்டும்.

இதனைத் தமிழ்நெறி விளக்கமானது வரைவுணர்ந்த தோழி, தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்குக் கூறி அவளை ஆற்றுவித்தல் (22;10) என்று மொழியும். அகப்பொருள் விளக்கமானது தலைவன், தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டிப் பரிசப்பொருள் கொடுத்ததைத் தலைவிக்கு உணர்த்தல் (174;1-2), தமிழ்நெறி விளக்கத்தைத் (22;10) தழுவி, 'தமர் வரைவெதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல்' (174;3-4), தலைவனிடம் தலைவியின் மீது உண்டான அலரை, இன்று பலரும் அறிய நீக்கினாய் என்று வாழ்த்தல், தலைவி, மணம் பொருட்டாகத் தெய்வத்துக்குச் சிறப்புச் செய்து வாழ்த்திக்கொண்டு நிற்கும் நிலையைத் தலைவனுக்கு உணர்த்தல்

(174;6-8) என்று மொழியும். இந்நூலை (174;3-4) அடியொற்றிக் களவியற்காரிகையானது 'வரைவு மலிதல்' (48;4), தலைவனிடம் அவனது மேம்பாட்டையும் தலைவியின் சிறப்புடைமையும் கூறி எமர் வரைவை உடன்படுவர் என்று உணர்த்தல் (48;4), இதனைக் கேட்ட தலைவன் பொருள்முற்றி, நிதியுடன் வர, அவனது முரசு முழக்கங்கண்டு, நம் காரணமாக யானையை அழித்தவருடைய முரசு முழங்குகின்றது. இனியென்ன குறையுடையோமென வரைவு தோன்றத் தந்தை முதலானோர் கேட்கும்படிச் சொல்லல் (49;2) ஆகியனவற்றைக் கூறும். இதனையும் (48;4) அகப்பொருள் விளக்கத்தையும் (174;1-2, 6-8) தழுவி மாறனகப்பொருளும் (70;1-4, 6-7) இலக்கண விளக்கமும் (531;1-4, 6-8) இயம்பும். களவியற்காரிகையைத் (49;2) தழுவி முத்துவீரியமானது 'மணமுரசு கூறல்' (854;2), தலைவி, தலைவன் கொடுத்த பெறுதற்கரிய தழைகளை வாடாமல், அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தன்னுள் 'மகிழ்ந்துரைத்தல்' (854;2) ஆகியனவற்றை மொழியும். இலக்கணவிளக்கத்தைத் (531;1-4, 6-8) தழுவி சுவாமிநாதம் (108;4-8) கூறும். இவ்வாறு தொல்காப்பியக் கூற்று பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ள நிலையை அறிய முடிகிறது.

வரைந்து கோடல்

தலைவன், தலைவியை வரைந்து கொள்ளல் சூழலில் தோழி நிகழ்த்தும் கூற்றுகளாக மாறனகப்பொருள் (82) இரண்டினைக் குறிப்பிடும்.

புதிய கூற்றுகள்

திருமண நாளன்று தலைவன், தலைவிக்கு அருந்ததியைக் காட்டியதைக் கண்ட தோழி, தலைவனிடம் நீயும் தலைவியும்

மீனராசியில் வந்த குருதிசை போலப் பொலிவுடன் வாழ்க என வாழ்த்தல், திருமணம் முடிந்த பின்பு, தோழி, தலைவனிடம் இன்று இளமையுடன் அழகுடன் திகழும் தலைவி, எதிர்காலத்தில் மூப்புற்று தோற்றம் மாறுபடினும் அவளிடம் கொண்டுள்ள அன்பு மாறாமல் அவளைக் காப்பாற்றுவாயாக என்றல் (82;5, 9) என்பன மாறனகப்பொருள் விளம்பும் புதிய கூற்றுகளாகும்.

இல்வாழ்க்கை

களவு முற்றி மணந்து கொண்ட தலைவனும் தலைவியும் இல்லத்தில் இன்புற்று வாழ்வர். இத்தகைய இல்வாழ்க்கையின்போது தொல்காப்பியத்தில் (1096) தோழி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன மூன்று. பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (203), மாறனகப்பொருள் (100), இலக்கண விளக்கம் (552), ஒவ்வொன்றிலும் ஐந்து, முத்துவீரியம் (854) ஒன்று, சுவாமிநாதம் (118) ஐந்து என வரையறுக்கின்றன.

வீழ்ச்சி

தலைவன், பெறுதற்கரிய பரிசப் பொருளைக் கொடுத்துத் தலைவியைத் திருமணம் செய்து கொண்ட பின்பு தோழி, தலைவனிடம் களவுக் காலத்துப் பிரிவாற்றியிருந்ததைச் சிறப்பித்துக் கூறுதல்,

களவுக் காலத்து ஏற்பட்ட வருத்தத்திலிருந்து நீங்கினமை கூறும்போது தோழி கூற்று நிகழ்த்துதல்,

களவொழுக்கம் புலப்பட ஒழுகுதல் இல்லாத தலைவியைக் குற்றமில்லாத் தலைவன் வரைந்து கொள்ளுதல் குறித்துப் பரவிய தெய்வம் அதனை முடித்தலின், அத்தெய்வத்திற்குப் பரவுக்கடன் கொடுத்தல் வேண்டுமெனத் தலைவற்குக் கூறுதல் (1096;1-4) என்பன

தொல்காப்பியத்தில் மட்டுமே சுட்டப்பட்டுள்ளன. இவை பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

தலைமக்கள் இல்லறம் நிகழ்த்தும்போது தோழி, நீவிர் இருவரும் பிரியாதிருக்க வேண்டும் என்று 'தலைவனை வாழ்த்தல்,' தலைவியிடம், தலைவன் நின்னை மணக்குமளவும் நீ எவ்வாறு ஆற்றியிருந்தாய் என்று வினவுதல், தலைவனை நோக்கி, நீ 'தலைவியை வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினவுதல்,' இவர்களது இல்லற வாழ்க்கைத் தன்மை அறியத் தலைவியின் இல்லிற்குச் சென்ற செவிலியிடம் தோழி, தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய், தலைவன் தலைவி வழி ஒழுகி நின்றமை உணர்த்துதல், செவிலியிடம் இல்வாழ்க்கை இனிது நடக்கிறது என்று 'வாழ்க்கை நலமுரைத்தல்' (203;2-8) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் இயம்பும். இதனையே மாறனகப் பொருளும் (100;2-10) இலக்கண விளக்கமும் (552;2-8) பின்பற்றும். இதனைத் தழுவி (552;7-8) முத்துவீரியமானது 'வழிபாடு கூறலை' (854;3) மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (552;2-6, 8) தழுவி சுவாமிநாதம் (118;1-6) கூறும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

ஊடல்

தலைவனது பரத்தையிற் பிரிவின் காரணமாகத் தலைவி ஊடல் கொள்வாள். இச்சூழலில் தோழி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1096) கூறுவது பதினைந்து. பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.40) உரை நான்கு, தமிழ்நெறி விளக்கம் (25) இரண்டு, வீரசோழியம் (மருத நடை.)

இரண்டு, அகப்பொருள் விளக்கம் (205, 206, 207) எட்டு, மாறனகப்பொருள் (102, 103, 104) ஒன்பது, இலக்கண விளக்கம் (554, 555, 556), முத்துவீரியம் (861), சுவாமிநாதம் (119, 120, 121, 122) ஒவ்வொன்றிலும் எட்டு எனத் தோழி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

களவில் பெருமை வாய்ந்தவனாகத் திகழ்ந்த தலைவன், இப்போது இரங்கத் தக்கவனாய்த் திகழ்தல், தலைவன் பரத்தையரொடு தொடர்புண்ட குற்றமுடையனாதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள். பிற அக இலக்கணங்களிலும் அவ்வாறே மொழியப்பட்டுள்ளன.

களவுக் காலத்தில் அரியராயும் பெருமையுடையராயும் இருந்த தலைவன், இப்போது எளியராய் இருக்கும் இரங்கத்தக்க நிலையைக் கூறும்போது கூற்று நிகழ்த்துவாள் (தொல்.1096;23-24). இதனையே தமிழ்நெறி விளக்கமானது 'விழைகுநன் விழையான் இவனென விளம்பல்' (25;4) என மொழியும்.

தலைவன், புறத்தே சென்று பரத்தையரொடு ஆறும், குளமும், காவும் ஆடிய விளையாட்டினைப் பொருந்திய குற்றத்தின்போது கூற்று நிகழ்த்துவாள். இதனை,

"புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியும்"

(தொல்.1096;11)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனையே இறையனாரகப்பொருள் உரையானது தோழி, பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனிடம், நீர் நேற்று நுங்காதலியைப்

புனலாட்டிய ஈரம் புலர்த்திவந்து, எமக்குச் செய்யும் அருளைச் செய்யீர்[146] என்று மொழியும்.

வளர்ச்சி

தலைவி, வாயில் நேராமையைக் கருதி வருந்துமிடத்தும் தலைவனது பரத்தமையினால் தலைவி நாணுமிடத்தும் தலைவியின் புலவியைத் தீர்த்தற்கண்ணும் தோழி, தலைவனை வாயில் நேராது பெயர்த்தற்கண்ணும் கூற்று நிகழ்த்துதல் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவன், இருவருக்கும் சிறந்த புதல்வனை வாயிலாகக் கொண்டு புக, தலைவி வாயில் நேராமையை நினைத்துத் தலைவன் வருந்துதற்கண் தோழி கூற்று நிகழ்த்துவதைத் (1096;12) தொல்காப்பியம் உரைக்கும்.

இதனை, பரத்தையிற் பிரிந்த தலைவன், தலைவியிடம் மகனை வாயிலாகக் கொண்டு புகுவான். அப்போது தோழி, தலைவியின் பொறாமை நீக்கத் தலைவனைத் தவறாக எண்ணி வாயில் மறுக்காது நம்மரசற்குக் குற்றேவல் செய்வாயாகவென ஊடற்றணிவித்தல்,[147] மகனை வாயிலாகக் கொண்டு புகுந்ததனால் தலைவியின் சினம் தணிந்ததையறிந்த தோழி, தலைவனிடம் கூறுதல்[148] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.40)உரை மொழியும். வீரசோழியமானது தலைவனால் மணக்கப்பட்ட இரண்டாம் மனைவி, காமக்கிழத்தி ஆகியோரிடம் அன்பாகப் பழகுதலைக் கண்டு, தலைவியின் செயல் இல்லறத் தன்மைக்கு ஏற்றது என்று புகழ்ந்து கூறலை (மருத.நடை.;37) மொழியும். இறையனாரகப்பொருள் (சூ.40) உரையைத் தழுவி முத்துவீரியம், 'ஊடற்றணிவித்தல்' (861;29), பரத்தையைக் கண்டமை கூறிப் புலந்து வேறுபட்ட தலைவியிடம் அன்பானன்றி அருளால்

பரத்தையருக்கும் தலையளி செய்ய வேண்டும்; நாமும் புறப்பெண்டிரைப் போலப் புலக்காமல், அவன் வரும்போதும் போகும்போதும் தொழுது புதல்வனைப் பயத்தலே நமக்குக் கடனெனத் தலைவியின் ஊடல் தீர்த்தல் (861;38) ஆகியனவற்றை இயம்பும்.

தலைவன், பரத்தமையொழுக்கம் காரணமாக, தலைவியைப் பேணாதவனாகக் காணப்படுவான். இத்தகைய தலைவனது ஒழுக்கத்தினால் தலைவி நாணுவதைக் கூறும்போது கூற்று நிகழும். இதனைத் தொல்காப்பியம்,

"பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்"

(தொல்.1096;14)

என்று சுட்டும்.

இதனை, தலைவன் பரத்தையரிடத்துச் சென்று புனலாடுவது அவனுக்குத் தகாத பழியென்று கருதி, தலைவி நாணம் கொண்டு அதனை மறைத்திருந்தமை கண்ட தோழி, இவளது நாணம் முதலிய இயல்புகள் நல்ல தன்மையன என்று சிறப்பித்துக் கூறல், பாணன் நம் தலைவற்குத் துயிலெழு மங்கலம் பாட வந்துள்ளாரென்று 'பாணன் வரவினைக் கூறல்,' தலைவி வருந்துவதைக் கண்டு, தலைவன் அயலாரிடத்துத் தங்குதலால் தகுதியுடையவனல்லன் என்று 'இயற்பழித்தல்' (861 ;18-19) ஆகியனவற்றை முத்துவீரியம் கூறும்.

தோழி, தலைவன் பரத்தையிற் பிரிந்தவிடத்து அவன் சென்று பொருந்த இயலாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவி பக்கத்தளாய் நின்று அப்புலவியைத் தீர்த்தற்கண் கூற்று நிகழ்த்துவதைத் (1096;17-19) தொல்காப்பியம் மொழியும்.

இதனை அகப்பொருள் விளக்கமானது தலைவி, புதல்வனைப் பயந்து நெய்யாடியதனைத் தோழி தலைவனுக்குக் கூறல், இச்செய்தியறிந்த தலைவன், பரத்தையர் சேரியிலிருந்து வருவதையறிந்து தலைவிக்கு உணர்த்துதல், தலைவி, தலைவன் மீது கொண்டுள்ள ஊடலைத் தணித்தல், தணியாதிருந்த தலைவியை நோக்கித் தலைவன் ஊடல் கொள்ளத் தோழி, அவனை அன்பிலாய், கொடியாய் என்று இகழ்தல், தலைவன், புதல்வனை வாயிலாகக் கொண்டு வர ஊடல் தணிய, தோழி தலைவியைப் புகழ்தல் *(206;3,5,16,18-19, 207;5-6)* ஆகியனவாக விரித்துரைக்கும். இதனைத் தழுவி மாறனகப்பொருள் *(103;3-6, 21, 23-24, 104;5-6)* மொழிவதுடன் தலைவியின் ஊடலைத் தீர்க்கப் பாணன் வர அவனைப் பழித்துரைத்தலைக் *(103;10)* கூடுதலாக மொழியும். இதனைத் தழுவி *(103;3-6, 21, 23-24, 104;5-6)* இலக்கண விளக்கமும் *(555;3, 5, 16, 18-19, 556; 5-6)* சுவாமிநாதமும் *(120;6-8;121;8, 122;2,6)* கூறும்.

தோழி, பரத்தையிற் பிரிந்து தலைவியைக் கைவிட்ட தலைவனை, தலைவியோடு இல்லறத்தில் இருத்தல் வேண்டி முன்பு வாயில் நேர்ந்தாள். இப்போது அவ்வாறு இல்லாமல் தலைவனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற்கண் கூற்று நிகழ்த்துவதைத் *(1096;27-28)* தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.40) உரையானது பரத்தையிற் பிரிந்த தலைவன் மீண்டும் தோழியை வாயில் வேண்ட 'வாயில் மறுத்தலென்று'[149] இயம்பும். தமிழ்நெறி விளக்கமானது, தலைவன் பொருட்டுத் தோழி வாயில் வேண்ட வாயில் மறுத்ததை அவனுக்கு உரைத்தலைக் (25;2) கூறும். முத்துவீரியமானது வாயில் வேண்டிய தலைவனிடம் தோழி, அன்று எம்மீது அருள்

கொண்டவராகத் திகழ்ந்தீர், இன்று பரத்தையிடத்துச் செல்கின்றீர். இதுவோ நுமது அருளெனக் கூறல், தலைவியிடம் சென்று, நம் தலைவன், நம் வாயிற்கண் வேட்கைப் பெருக்கத்தோடு நிற்கின்றார். இதற்கு யான் செய்யுமாறு என்னவென்று தலைவியைத் தோழி 'வாயில் வேண்டல்' *(861;24-25)* ஆகியனவற்றை மொழியும்.

இவ்வாறு ஊடல் குறித்த கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

வீழ்ச்சி

தலைவன், சிறப்புப் பொருந்திய இல்லறத்தில் தலைவியை நிலைநிறுத்தி அறத்திற்காகவும் பொருளிற்காகவும் இசையும் கூத்தும் முதலாகிய இன்பம் நுகர்வதற்காகவும் பிரிவான். அவ்வாறு பிரிந்தவன் தலைவியை மறந்து ஒழுகுமிடத்தும்

தலைவி, தலைவனது பரத்தமையொழுக்கம் காரணமாக மனம் அழிந்து வேறுபட்டவளாகக் காணப்படுவாள். அப்போது தோழி, தலைவியிடம் தலைவன் புறத்தொழுக்கமின்றி நின்மேல் அன்புடையரென்று, அவ்வேறுபாடு நீங்கக் கூறுமிடத்தும்

தலைவன், பரத்தை மனையினின்று மீண்டு வந்து இல்லின் புறத்தே தங்கியிருப்பான். அப்போது தோழி, தலைவனைக் கழறி, தலைவியின் ஊடல் தணிப்பாள். பிறகு தலைவனிடம் சென்று தலைவியை அளிக்குமாறு கூறி, அவனிடத்து உரிமையாக்கிக் கொடுக்குமிடத்தும்

தலைவன், பரத்தையிற் பிரிந்து மீண்டு வருவான். அப்போது தோழி, பரத்தையிற் பிரிவு கூடாதெனத் தாழ்ந்த இயல்பினையுடைய மொழியால் வணங்கற் கண்ணும்

தோழி, தலைவனிடம் நின்னிடத்துத் தலைவி இழந்த நலத்தினைத் தந்துவிட்டுச் செல்க எனக் கூறுமிடத்தும்

தலைவன், பரத்தையை இனி நாடேன் என்று சூளுற்றது பொய்ம்மையுடையது எனக் கருதித் தலைவி மனம் அழிந்து வருந்துமிடத்தும்

தலைவன், தலைவியைப் பெறும் தகைமையில்லாத பரத்தமைச் செயலில் ஈடுபடுவான். அப்போது தோழி, பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கூறி, அத்தகு ஒழுக்கம் பிறழ நடக்கின்றாயே எனக் கூறுமிடத்தும்

தலைவன், தலைவியின் ஊடல் தீர்க்கவும் அதன்வழி வாராத ஊடலுற்றோளிடத்து அவ்வூடலைத் தீர்க்க வேண்டிய தோழி, தலைவன் பக்கத்தளாய் நின்று தலைவியை வெகுண்டு கூறி, அவளது ஊடலைத் தணித்து தலைவன்மாட்டு அன்புண்டாக்கிய தகுதிக் கண்ணும் தலைவன் பொருட்டு பாணர், கூத்தர், விறலியர் ஆகிய மூவரும் வாயிலாய் வந்து இரந்து குறையுறுவர். அப்போது தோழி அவர்கட்கு வாயில் மறுத்தலும் நேர்தலும் செய்யுமிடத்தும் (1096; 5-10, 13, 15-17, 20-22, 25-26) கூற்று நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

தலைவி, தோழியை செங்கோலஞ் செய்து, பூப்புற்றதை அறிவிக்கும் பொருட்டுப் பரத்தையர் சேரிக்கு அனுப்பச் செல்வத்தை வீரசோழியம் (மருத.நடை;19) மொழியும். அகப்பொருள் விளக்கமானது தலைவி, முன்னிலைப் புறமொழியாகத் தலைவனது கொடுமை நினைந்து என்னைப் போல உறக்கமின்றி இருப்பவர்

யாரென்று அழுது புலம்ப, இதனையறிந்த தோழி, தலைவியை நோக்கி நீ அழுது கொண்டிருத்தற்குக் காரணம் என்னவென்று வினவல், தலைவன் இத்தன்மையரென்று, விருப்பமில்லாததாக அவரது புறத்தொழுக்கைக் கூறுவது நமக்கு முறையன்று என்றல், தலைவன் பரத்தையர் சேரியிலிருந்து திரும்பி வர, அதனைத் தலைவிக்கு உணர்த்தல் (205;4,6,12) ஆகியனவாக விரித்துரைக்கும். இதனையே மாறனகப்பொருளும் (102;4,6,12) இலக்கண விளக்கமும் (554;4,6,12) பின்பற்றுகின்றன. முத்துவீரியமானது பரத்தையர் சேரிக்குச் சென்ற தலைவனைப் பரத்தையர் எதிர்கொண்டமை கேட்ட தலைவி, நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாமற் பொறுத்தமை கண்ட தோழி, அவளை வியந்து கூறல் (861;1-2) என்று இயம்பும். இலக்கண விளக்கத்தைத் (554;4,6,12) தழுவி சுவாமிநாதம் (119;5-6, 120;2-3) கூறும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

பிரிவு

தலைவன் ஓதல், பகை, வேந்தன், காவல், பொருள்வயிற் பிரிவு காரணமாகப் பிரிந்து செல்லல் உண்டு. இத்தகைய பிரிவின்போது தோழி, நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியத்தில் (1096) கொள்ளப்படுவன இரண்டு. பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.39, 41, 55) உரை எட்டு, தமிழ்நெறி விளக்கம் (24) ஐந்து, வீரசோழியம் (முல்.பாலை.நடை;) ஐந்து, முத்துவீரியம் (856, 857, 858, 859, 860) பதினேழு என இச்சூழலில் தோழிக்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி

தோழி, தலைவன் முன்னின்று கூறிய கூற்றைத் தவிரப் பிரிவில் வேறு சில கூற்றுகளையும் நிகழ்த்துவாள். இதனை,

"........................... பிறவும்

வகைபட வந்த கிளவி"

(தொல்.1096;30-31)

என்று தொல்காப்பியம் சுட்டும். இதற்கு உரை வகுத்த இளம்பூரணர், "பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறுதலும், பருவங் கண்டு கூறுதலும், வற்புறுத்தலும் நிமித்தங் கண்டு கூறுதலும், வந்தான் எனக் கூறுதலும், இந்நிகரனவும் மேற்சொல்லப்பட்ட இடங்களிற் கூற்று வேறுபாடாகி வருவனவுங் கொள்க"[150] என்பர். இக்கூற்றானது பல்வேறு பிரிவுகளின்போது பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

ஓதற்பிரிவு

தலைவன் செலவழுங்காது நெஞ்சிற்குக் கூறி ஓதற்குப் பிரியக் கருதுவான். அப்போது தோழி, நினது பிரிவைத் தலைவியிடம் கூறி, அவளது நிலையை அறிந்து வந்து நின்னிடம் கூறுகின்றேன் என்றுரைத்தல், தலைவியிடம் தலைவன் கல்வி நலங் கூறி ஓதற்குப் பிரிய நினைந்தமை கூறல், தலைவன், தனித்துச் செல்லமாட்டான், நின்னையும் உடன்கொண்டு செல்வான் என ஆறுதல் கூறல், இவ்வாறு கூறியும் ஆற்றாதிருந்தமை கண்டு தோழியும் ஆற்றாதிருத்தல், தலைவன் குறித்துச் சென்ற பருவம் கண்டு ஆற்றாதிருந்த தலைவியிடம் இது பருவம் அன்றெனக் கூறி ஆற்றுவித்தல் (24;2-4, 6-8) ஆகியனவற்றைத் தமிழ்நெறி விளக்கம் இயம்பும். இதனைத் (24;3) தழுவி, முத்துவீரியம் 'பிரிவு நினைவுரைத்தல்' (856;2), தோழியின் மூலம் ஓதற்குப் பிரிய நினைத்ததைக் கேட்டதும் தலைவியின் செவியில் காய்ந்த வேல்போல் சென்றெய்திக் கலக்கமுற, இதனை அறிந்த தோழி, இனிப் பிரிவை

எவ்வாறு ஆற்றுவாள் என்று தன்னுள்ளே கூறல் (856;3) ஆகியனவற்றை மொழியும்.

பகைதணிவினைப் பிரிவு

தோழி, தலைவியிடம் பகை வேந்தரது பகை தணிக்கத் தலைவன் 'பிரிவதைக் கூறல்,' இப்பிரிவுரைப்பக் கேட்ட தலைவி, வருத்தம் கொள்ள உன்னைவிட்டுத் தலைவன் பிரியான், வருந்தாதேயென்று அவளது 'வருத்தந் தணித்தல்' (858;1) ஆகியனவற்றை முத்துவீரியம் மொழியும்.

வேந்தர்க்குற்றுழிப் பிரிவு

வேந்தர்க்குற்றுழிப் பிரிவில் தலைவன் வினைமுடித்து, அவனது தேர் வருவதைக் கண்டு, இனி நமக்கொரு குறையில்லையென அவனது 'வரவெடுத்துரைத்தல்,'[151] பிரிவின்கண் வேறுபட்ட தலைவியிடம் தோழி, வினைமுற்றி மீள்வார் அனுப்பிய தூதாக அப்பருவம் வந்ததென்று உரைத்தல்[152] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.39) உரையானது மொழியும். வீரசோழியமானது பிரிவுரைப்பக் கேட்டுத் தலைவி வருந்த, தலைவன் குறித்த பருவத்தில் வந்துவிடுவான் ஆற்றாதிரு என்றுரைத்தல், பருவம் வந்தும் தலைவன் இன்னும் வரவில்லையே என்று ஆற்றாதிருந்த தலைவியிடம், வம்ப காலத்தில் தன் மடமையாற் பருவமென்று கருதிக் காந்தள் மலர்ந்தன; எனவே கலங்காதிரு என்று 'கால மறுத்தல்,' தலைவன் மீள்வதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வந்துவிட்டதால் நீ பிரிதல் துன்பத்தை நீக்குவாயாக என்று கூறி விரைவில் வந்துவிடுவான் என்றல், பருவம் வந்ததால் நம்மைக் கலந்தவர் தேர், அவர் கூறிச் சென்றபடி நம்மில்லின்கண் வந்துசேரும் என்றுரைத்தல் (முல்.நடை;6-7, 11, 14-15) ஆகியனவாக விரித்துரைக்கும். முத்துவீரியமானது தலைவியிடம், தலைவன் வேந்தர்க்குற்றுழிப் 'பிரிந்ததைக் கூறல்' (859;1), வீரசோழியத்தைத்

(முல்.நடை;14,11,15) தழுவி 'இது அவர் குறித்த பருவமாமெென வரவு கூறல்,' 'பருவ மறைத்துரைத்தல்,' 'தேர்வரவு கூறல்' (859;7-10), இறையனாரகப்பொருள் (சூ.39) உரையைத் தழுவி 'வரவெடுத்துரைத்தல்' (859;12) என்று மொழியும்.

காவற்பிரிவு

தலைவன், நாடு காத்தற்குப் பிரியக் கருதுவதைத் தோழி, தலைவியிடம் கூறுதல் (857;1) முத்துவீரியத்தில் மட்டும் மொழியப்பட்டுள்ளது.

பொருள்வயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவின்போது தோழி, தலைவனிடம் சென்று, நினது பிரிவு நினைவுரைப்பினைக் கேட்டதும் தலைவியின் கண்களிலிருந்து நீர் சொரிந்தது என்று அவளது ஆற்றாமையைக் கூறல்,[153] தலைவனிடம் நீ பொருள்வயிற் பிரிந்தால் இரவுப் பொழுதை எவ்வாறு கழிப்பாள் என்று பிரிவுத் துயரத்தைக் கூறல்,[154] பிரிந்த தலைவன் தனது வினையை முடித்துக்கொண்டு வந்தானென்று தேர் வரவு கூறல்[155] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.39) உரையானது கூறும். வீரசோழியமானது தலைவன், அருஞ்சுரம் சென்று பொருள்தேட நினைப்பதைத் தலைவியிடம் கூறுவதை (பாலை.நடை;28) மொழியும். இதனைத் தழுவி முத்துவீரியமானது 'பிரிவு நினைவுரைத்தல்' (860;1), இறையனாரகப்பொருள் (சூ.39) உரையைத் தழுவி 'ஆற்றாமை கூறல்,' 'பிரிவாற்றாமையால் இரவுறு துயரத்திற்கு இரங்கி உரைத்தல்,' 'தேர் வரவு கூறல்' (860;2,4-5, 11), தலைவியிடம் நினது ஆற்றாமையைத் தலைவனுக்கு உணர்த்தியும் அவனது நினைவு பொருள் தேடுதலையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்று 'பொருத்தமறிந்துரைத்தல்,' தலைவன், நின் முன்னின்று பிரிவுணர்த்தினால் நீ வாடுவாய் என நினைத்துப் பொருள் தேடி

விரைவில் மீள, வினைவயிற் சென்றாரெனப் 'பிரிந்தமை கூறல்,' தலைவன் குறித்த பருவத்தில் வாராது வரவு நீட்டிக்கத் தலைவி வருந்துவதைக் கண்டு அவன் பிரிந்த 'நாளை எண்ணி வருந்துதல்' *(860;3-4, 8)* ஆகியனவாக விரித்துரைக்கும்.

நாட்குறித்துப் பிரியலுறுந் தலைவனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைவியிடம் நாட் குறித்துப் பிரியலுற்றும் நம் மனமானது கவலையுறுகின்றது என்றல்,[156] இளவேனில் பருவங் குறித்துத் தலைவன் பிரிந்தவிடத்து அப்பருவ வரவின்கண் இவ்விளவேனிற் காலம் எவ்வாறு கழியுமோ என்று தலைவியின் ஆற்றாமையைக் கண்டு தோழியுரைத்தல்[157] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.41) உரை மொழியும்.

தலைவனது பிரிவின்கண் தலைவி ஆற்றாளாவாள். அப்போது வினை முற்றுப்பெற்றுத் தலைவன் வருமிடத்து சங்கு போன்ற இசைக் கருவிகள் இசைத்தன. அப்போது, தலைவன் வருகையை உணர்த்திய சங்கினைத் தோழி வாழ்த்துதலை[158] இறையனாரகப்பொருள் (சூ.55) உரையானது இயம்பும்.

வீழ்ச்சி

தலைவன், சேயிடைப் பிரியுங் காலத்தில் முன்னின்று அவனது கூற்றுக்கு எதிர்மொழி கூறுதலின்போது கூற்று நிகழ்த்துவதை,

'பிரியுங்காலை எதிர் நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்பட"

(தொல்.1096;29-30)

என்பது சுட்டும். இக்கூற்றானது தொல்காப்பியத்தில் மட்டும் மொழியப்பட்டுள்ளது. பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

தொகுப்புரை

தோழி, செவிலியின் மகள். இவள் தலைமக்களுக்கு உறுதுணை புரிபவள்.

தொல்காப்பியம் தோழி நிகழ்த்தும் கூற்றுகளாக ஐம்பத்தெட்டினைக் குறிப்பிடும்.

முன்னுறவுணர்தலில் தோழி, தலைவியின் தோற்ற வேறுபாடு கண்டு அவளிடம் பல்வேறு மறைபொருள்படக் கூறி ஆராய்வதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை இறையனாரகப்பொருள் உரையானது ஐயுற்றுக் கூறல், சுனையாட்டினை வியந்து கூறல், பிறையைத் தொழுமாறு கூறல், வரையுறை தெய்வமாகப் புனைந்து மொழிதல், நடுங்க நாடுதல், இருவருக்கும் உயிர் ஒன்றே என்றல் என மொழியும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் ஐயுறல் என்று இயம்பும். வீரசோழியமானது ஐயுறு நிலைமை அறிய உரைத்தல் என்று கூறும். தமிழ்நெறி விளக்கம், இறையனாரகப்பொருள் உரையைத் தழுவுவதுடன் ஐயத்தைத் தீர்த்தல், மறைபொருள்படக் கூறி வினவல் ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் இயம்பும். வீரசோழியத்தையும் இறையனாரகப்பொருள் உரையையும் தழுவிக் களவியற்காரிகை விளம்பும். அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் இயம்பும். முத்துவீரியமானது களவியற்காரிகை, இறையனாரகப்பொருள் உரையைத் தழுவுவதுடன் நகைத்துக் கூறல், புணர்ச்சி மொழிதல் என்றும் குறிப்பிடும். இதனையும், களவியற்காரிகை, அகப்பொருள் விளக்கம் ஆகிய நூல்களையும் அடியொற்றி சுவாமிநாதம் மொழியும்.

குறையுற உணர்தலில் இறையனாரகப்பொருள் உரையானது தோழி, தலைவனது மனத்தெண்ணம் யாதென ஆராய்தலைச் சுட்டும் தமிழ்நெறி விளக்கம் துணிதலை மொழியும். இறையனாரகப்பொருள்

உரையையும் தமிழ் நெறி விளக்கத்தையும் அடியொற்றி அகப்பொருள் விளக்கம் குறிப்பிடும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் விளம்பும். முத்துவீரியமானது தலைவன் குறிப்பறிதல், தலைவி குறிப்பறிதல் என்று கூறுவதோடு இலக்கண விளக்கத்தைத் தழுவியும் உரைக்கும். இலக்கண விளக்கத்தைச் சுவாமிநாதம் அடியொற்றும்.

இருவரும் உள்வழி அவன் வர உணர்தலில் தொல்காப்பியம் தலைவன் மாயம் சொல்லி வந்தவிடத்துத் தலைவி பொறுத்திருந்த வழித் தோழி கூற்று நிகழ்த்துவதை இறையனாரகப்பொருள் உரையானது தலைவனது மனக் கருத்தை உணர்தல் என்று கூறும். அகப்பொருள் விளக்கமானது இறையனாரகப்பொருள் உரையைத் தழுவுவதுடன் எதிர்மொழி கூறல், நகைத்துக் கூறல், மனக் கருத்தை உணர்ந்து கொள்ளல் என்றும் மொழியும். களவியற்காரிகை தலைவன் மொழிவது மெய்யன்று என்று உணர்ந்து கொள்ளுதல் என்று கூறுவதுடன் அகப்பொருள் விளக்கத்தை அடியொற்றியும் இயம்பும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். முத்துவீரியம் களவியற்காரிகை, இலக்கண விளக்கம் ஆகிய நூல்களை அடியொற்றி இயம்பும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

சேட்படையில் தோழி, தலைவனது பெருமை கூறி அகற்றுவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்று இறையனாரகப்பொருள் உரை, வீரசோழியம் (குறிஞ்.நடை.), அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

தோழி, தலைவியைக் கிட்டுதற்கு அருமை கூறி அகற்றும் தொல்காப்பியக் கூற்றினை இறையனாரகப்பொருள் உரை, தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் மொழியும்.

தோழி தலைவனிடம் நினது குறையைத் தலைவியிடம் அறிவித்துப் பின் என்னிடம் வாவென்றுரைப்பதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்று இறையனாரகப்பொருள் உரை, தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம் (குறிஞ்.நடை;), அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

தோழி, தலைவனிடம் நினது புணர்ச்சியை அறிவேன் என்றுரைத்து அவனது வருத்தத்தை அகற்றுவதாக மொழியும் தொல்காப்பியக் கூற்றானது அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியனவும் குறிப்பிடும்.

தோழி, தலைவனிடம் தலைவியின் பேதைப் பருவம் கூறி விலக்குவதாகத் தொல்காப்பியம் கூறுதலை வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கின்றன.

தொல்காப்பியம் தோழி, தலைவனிடம் தலைவியை மணந்துகொள்ளென்று உரைப்பதை வீரசோழியமானது பழித்தக உணர்த்தல், பார்த்துறவுரைத்தல் என்று மொழியும். இதனையே அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம். சுவாமிநாதம் ஆகியனவும் பின்பற்றுகின்றன.

தோழி, தானும் தலைவியும் அச்சமுற்ற தன்மையை மொழிவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை இறையனாரகப்பொருள் உரையானது காப்புடைத்தென்று மறுத்துரைத்தல் என்று கூறும். இதனை அடியொற்றித் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும். வீரசோழியமானது நீர்மையன்றென்றல் என்று உரைப்பதுடன் தமிழ்நெறி விளக்கத்தையும் அடியொற்றி இயம்பும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம், களவியற் காரிகை, மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியனவும் மொழியும்.

தோழி 'எண்ணரும் பன்னகை கண்ணிய வகையில்' கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை தமிழ்நெறி விளக்கம் கையுறை ஒவ்வாது என்றல், தலைவி குறிப்பறிந்து ஏற்றுக்கொள்வோம் என்றுரைத்தல் எனக் கூறும். வீரசோழியமானது தோழி முகமலர்ந்து மறுத்துரைத்தலை மொழியும். இதனையும் தமிழ்நெறி விளக்கத்தையும் அடியொற்றிக் களவியற்காரிகை இயம்பும். இதனைத் தழுவி உரைப்பதுடன் இரங்கி உரைத்தல், சிறப்பின்மை மொழிதல், சிறியளென்றுரைத்தல், மறைத்தமை கூறி நகைத்துரைத்தல் எனவும் முத்துவீரியம் மொழியும்.

தோழி, தலைவனிடம் நினது குறையை மறைக்காது உரைப்பாயாக என்று இறையனாரகப்பொருள் உரை கூறுதலைத் தமிழ்நெறி விளக்கம், களவியற்காரிகை ஆகிய நூல்களும் குறிப்பிடும்.

அறியாள் போன்று நினைவு கேட்டுரைப்பதாக இறையனாரகப்பொருள் உரை மொழிதலைத் தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியனவும் குறிப்பிடும்.

தோழி கையுறை ஏற்காது மற்றொன்று கூறி நீக்குவதை இறையனாரகப்பொருள் உரை குறிப்பிடும். இதனையே தமிழ்நெறி விளக்கமும் சுட்டும். அகப்பொருள் விளக்கமானது தோழி, தழை ஏற்க மறுத்தல், தலைவனை ஆற்றுவித்து அகற்றல் என்று மொழியும். தமிழ்நெறி விளக்கத்தைப் பின்பற்றிக் களவியற்காரிகை குறிப்பிடும். அகப்பொருள் விளக்கத்தைத் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் இயம்பும். முத்துவீரியமானது தழை தகாதென மறுத்தல், நிலத்தின்மை கூறல், தலைவியின் நினைவறிந்து ஏற்றுக்கொள்வேன் என்றல், படைத்து மொழிதல், நாண் உரைத்தல், கண்ணி எங்குலத்திற்கு இசையா தென்றல் என மொழியும். இலக்கண விளக்கத்தை அடியொற்றியது சுவாமிநாதம்.

இறையனாரகப்பொருள் உரை மொழியும் படைத்து மொழியான் மறுத்துரைப்பதைத் தமிழ்நெறி விளக்கமும் கூறும்.

தலைவி தன் குறிப்பினல்லள் என்று தலைவனிடம் மொழிவதை இறையனாரகப்பொருள் கூறும். இதனையே வீரசோழியமும் முத்துவீரியமும் இயம்பும்.

சேட்படையில் தொல்காப்பியம் (1060;12) மொழியும் கூற்றானது பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

மடல்விலக்கில் தோழி, தலைவனின் அருளியல் மொழிதல், மொழிநடை எழுதல் அரிதெனக் கூறல், அவயவம் எழுதுதல் அரிதென்றுரைத்தல், நினது குறையை முடித்துத் தருவேன் என்று உடம்பட்டு விலக்கல், கொண்டுநிலை மொழிதல் என்பனவற்றை இறையனாரகப்பொருள் உரை மொழியும். தமிழ்நெறி விளக்கமானது மடல் விலக்கலை இயம்பும். இறையனாரகப்பொருள் உரையைத்

தழுவி, அகப்பொருள் விளக்கம் குறிப்பிடும். இறையனாரகப்பொருள் உரை, தமிழ்நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம் ஆகியனவற்றை அடியொற்றிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறும். இலக்கண விளக்கம், இறையனாரகப்பொருள் உரை, களவியற்காரிகை ஆகியவற்றை முத்துவீரியம் தழுவி உரைப்பதோடு உடம்படாது விலக்கலையும் குறிப்பிடும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் இயம்பும்.

குறைநேர்தலில் தோழி, தலைவனிடம் தழையேற்றலை இறையனாரகப்பொருள் உரை கூறும். இதனையே தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது தலைவியின் இளமைத் தன்மை கூறல், செவ்வி அருமை மொழிதல், என்னை மறைப்பின் எளிதென நகுதல், தலைவனைத் தேற்றல் என்றுரைப்பதோடு தமிழ்நெறி விளக்கத்தையும் தழுவிக் குறிப்பிடும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை மொழியும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறும். இந்நூலைப் பின்பற்றி முத்துவீரியம் உரைப்பதோடு கையுறை எதிர்கொள்ளல், முகம்புக் உரைத்தல், முகங்கண்டு கூறல், வகுத்துரைத்து மொழிதல், தழை ஏற்குமாறு செய்தல் ஆகியனவற்றையும் மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் குறிப்பிடும்.

குறைநயப்பித்தலில் தோழி, தலைவன் இரந்து நின்ற பல்வேறு நிலைகளைக் கூறித் தலைவியிடம் குறைநயப்பதாகத் தொல்காப்பியம் கூறுதலை இறையனாரகப் பொருள் உரையானது மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல், வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல் என்று கூறும்.

இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் மொழிவதுடன் தலைவியைத் தழுவிக் கொள்ளுதல், தழையேற்பித்தல் எனக் கூறும். வீரசோழியமானது தமிழ்நெறி விளக்கத்தைத் தழுவுவதுடன் தலைவியிடம் இரங்கிக் கூறல், ஏத்தி மொழிதல், கலங்கி மொழிதல், கழறி மொழிதல், தழையேற்கச் செய்தல், கையுறை புகழ்தல், மயங்கி உரைத்தல், கவற்சி தீர்த்தல் என்று வீரசோழியம் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலில் தமிழ்நெறி விளக்கம், வீரசோழியத்தை அடியொற்றி உரைப்பதுடன் தலைவனது குறை உணர்த்தல், தலைவனைக் கண்டமை பகர்தல் என்றும் வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலில் தலைவனது துயர்நிலை கிளத்தல், மறுத்தல் அரிதென்றல், தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல், தலைவியை முனிதல் என்று விரித்துரைக்கும். களவியற்காரிகையானது வீரசோழியத்தை அடியொற்றிக் கூறுவதுடன் தலைவியின் குறிப்பறிவுறுத்தல், தலைவியின் முகம்கண்டு மொழிதல் என மொழியும். அகப்பொருள் விளக்கத்தை அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். களவியற்காரிகை இலக்கண விளக்கத்தைத் தழுவி முத்துவீரியம் கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் மொழியும்.

குறைநயப்பித்தல் சூழலில் தொல்காப்பியம் (1060;17) மொழியும் கூற்றானது பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

இருவகைக் குறியின்போது தோழி, தலைவனுக்கு விருந்தோம்புவதை விரும்பியவிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் இயம்பும். இதனையே அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றும்.

தொல்காப்பியம், ‘நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்’ கூற்று நிகழ்த்துவதை இறையனாரகப்பொருள் உரை, தமிழ்நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியனவும் உரைக்கும்.

அல்லகுறியில் தோழி தலைவனிடம் ‘புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பின்போது’ மொழியும் தொல்காப்பியக் கூற்றை இறையனாரகப்பொருள் உரையானது அல்லகுறிப்பாட்டினை அண்ணற்குணர்த்தல் என்று கூறும். இதனையே தமிழ்நெறி விளக்கம் மொழியும். அகப்பொருள் விளக்கமானது தமிழ்நெறி விளக்கத்தை அடியொற்றி உரைப்பதுடன் தலைவன் தீங்கெடுத்து இயம்பல், தலைவி அவலம் தணித்தல், தலைவன்மீது குறிபிழைப்பு ஏற்றல், தலைவனது மொழிக்கொடுமை உணர்த்துதல் என்று குறிப்பிடும். களவியற்காரிகையானது தலைவி அல்லகுறிப்பட்டதைத் தலைவனுக்கு திங்கள், அன்னம், கடலின்மீது வைத்துரைத்தல் என்று குறிப்பிடும். மாறனகப்பொருள் அகப்பொருள் விளக்கத்தைத் தழுவியுரைப்பதோடு தலைவன் வரவு உணர்த்துதலைக் கூடுதலாக மொழியும். இதனைத் தழுவி இலக்கண விளக்கம் கூறும். நிலவு வெளிப்பட வருந்துதல், ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி, நிலை கண்டுரைத்தல், அலரறிவித்தல் என்று மொழிவதுடன் களவியற்காரிகை, இலக்கண விளக்கம் ஆகியனவற்றையும் தழுவி முத்துவீரியம் குறிப்பிடும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் இயம்பும்.

இருவகைக் குறியின்போது தொல்காப்பியம் (1060;22, 16, 27-28) மொழியும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

பகற்குறியின்போது குறியிடம் தலைவன் கொளக் கூறுதல், குறியிடத்துய்த்து மறைபவள் கூறல், தலைவன் நீங்கின காலத்தில் தலைவி எவ்வாறு ஆற்றியிருப்பாளோ என்று அஞ்சி மொழிதல் என்பனவற்றை இறையனாரகப்பொருள் உரை மொழியும். இதனைத் தழுவிக் கூறுவதுடன் தோழியிற் கூட்டத்துச் சேர்த்தல் என்பதையும் தமிழ்நெறி விளக்கம் கூறும். வீரசோழியமானது பகற்குறி நேர்தல், குறி உரைத்தல், ஏதங்கூறல், இற்செறிவுரைத்தல், வரைவுகடாதல் என்றுரைப்பதோடு தமிழ்நெறி விளக்கத்தையும் தழுவிக் குறிப்பிடும். இதனையும் தமிழ்நெறி விளக்கத்தையும் அடியொற்றி அகப்பொருள் விளக்கம் கூறுவதோடு குறியிடத்துத் தலைவியைக் கொண்டு சேறல், கையுறை காட்டுதல், தலைவனிடம் ஓம்படை சாற்றல் என்றும் மொழியும். இதனையும், இறையனாரகப்பொருள் உரையையும் வீரசோழியத்தையும் தழுவி, களவியற்காரிகை மொழிவதுடன் வேங்கைக்கு உரைத்தல், வெளிப்பட உரைத்தல், புனங்காவலில்லையென்றல், வேங்கையொடு வெறுத்துரைத்தல், ஏறுதழுவுவார்க்கு உரைத்தல், சூளென நினைத்தல் என்றும் குறிப்பிடும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறும். இதனையும் களவியற்காரிகையையும் பின்பற்றுவதுடன் முத்துவீரியம் ஆடிடம் படர்தல், பருவங் கூறி விலக்கல், தாயச்சம் கூறல், தமர் நினைவுரைத்தல், எதிர்கோள் கூறல், அயலுரைத்தல், பகலில் வாரல் என்றல், தினையொடு வெறுத்துரைத்தல், இரக்கமுறுதல், தினை கொய்தமை கூறல், பிரிவருமை கூறல், மயிலொடு கூறல் என்றும் விரித்துரைக்கும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றியது சுவாமிநாதம்.

ஒருசார் பகற்குறியில் அகப்பொருள் விளக்கமானது தோழி புலம்புதல், தலைவியைக் கழறல், அச்சுறுத்தல், தலைவிக்கு அவன் வரல்

சாற்றல், சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல், முன்னிலைப் புறமொழி மொழிந்து அறிவுறுத்தல், முன்னின்று உணர்த்தல், ஓம்படை சாற்றல் என மொழியும். இதனைத் தழுவி மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் உரைக்கும்.

பகற்குறி இடையீட்டில் தோழி, தலைவனைக் குறி வரல் விலக்கல், தலைவியைக் குறிவரல் விலக்கல், ஆடிடம் விடுத்துக் கொண்டகறல் என அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றும்.

இரவுக்குறியில் தோழி தலைவனிடம் அன்னை குறிப்பாக நோக்கினாள் என்றல், புனத்தொடு வைத்துக் குறிப்புரை கிளத்தல், கணியொடு கூறல், சூளுறுந் தலைவனிடம் மொழிதல், குறியிடம் கூறுதல், தலைவன் குறியிடத்திற்கு வருவதை அறிந்து கூறுதல், குறியிடத்திற்குக் கொண்டு செல்லல் ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் உரை இயம்பும். தமிழ்நெறி விளக்கமானது, இறையனாரகப்பொருள் உரையைத் தழுவுவதுடன் தோழி, சிறைப்புறமாகக் கிளத்தல், தலைவியின் ஆற்றாமை கூறல், இருள்வர வேண்டல், மறுத்தல், நேர்தல், தலைவியை இரவுக்குறிக்கு இசையச் செய்தல், தோழி நீங்கல் என்று விரித்துரைக்கும். இந்நூலைத் தழுவியுரைப்பதோடு செவிலி களவொழுக்கத்தை அறிந்தாளாகக் கூறுதல், வரைந்து கொள்ளுமாறு கூறல், கவ்வை பெரிதாயிற்றென்றல், அம்பல், அலர் ஆயினவென்று மொழிதல், தலைவியின் வாட்டம் மொழிதல் ஆகியனவாக வீரசோழியம் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம் ஆகியனவற்றைப் பின்பற்றுவதுடன் தோழி, நெறியருமை கூறல், தலைவன் நாட்டு

அணியியல் வினாதல், தலைவனது குறையறிவுறுத்தல், குறைநேர்ந்தமை கூறல், தாயினது துயிலறிதல், தலைவியிடம் கையுறை காட்டல், இற்கொண்டேகல் தலைவனை வரவு விலக்கல், தலைவி துயர்கிளந்து விடுத்தல் என்று விரித்துரைக்கும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை இயம்பும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் பின்பற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். முத்துவீரியமானது தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகியனவற்றைப் பின்பற்றுவதுடன் தலைவியிடம் இரவு வரவு உரைத்தல் என்றும் குறிப்பிடும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் இயம்பும்.

ஒருவழித்தணத்தலின்போது தலைவன் வேண்டாப் பிரிவின்கண் தோழி கூற்று நிகழ்த்துவதை அகப்பொருள் விளக்கமானது தோழி தலைவனது செலவை விலக்கல், விடுத்தல், தலைவிக்கு அவன் செலவுணர்த்தல், தலைவியின் ஆற்றாமையை நீக்குதல், தலைவன் வந்தமை உணர்த்தல், வந்தோனொடு நொந்து வினவுதல், தலைவியை ஆற்றுவித்தமை கூறல் ஆகியனவற்றைக் கூறும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். இதனைத் தழுவி முத்துவீரியம் இயம்பும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் மொழியும்.

வரைவுவேட்கையின்போது தொல்காப்பியம் மொழியும் (1060;26) கூற்று பிற அக இலக்கணங்களில் கூறப்பெறவில்லை.

தோழி, தலைவன் வரும் தலச் செலவருமை கூறல், தலைவி வன்பழிக்கு அஞ்சுவதை மொழிதல், இரவு வரவேண்டாம் என்றல், இரவில் வாவென்றல், பகல்வா என்றல், இரவும் பகலும் வரவேண்டாம் என்றல், அவ்விரு பொழுதும் ஆய்ந்து வரலென்றல், கவ்வை உரைத்தல்,

களவுக்காலத்து வருந்தும் வருத்தத்தைக் கூறல் ஆகியனவற்றை வீரசோழியம் மொழியும். அகப்பொருள் விளக்கமானது தலைவனைப் பழித்தல், தலைவியிடம் உன் துயரம் தலைவன் அறிந்தானல்லன் என்றல் ஆகியனவற்றை இயம்பும். வீரசோழியத்தைத் தழுவி, களவியற்காரிகை மொழிவதுடன் தலைவனிடம் வரைந்துகொள் என்றல், குறிப்புரை கிளத்தல், இல்லது மொழிதல் என்றும் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கத்தை மாறனகப்பொருள் தழுவுவதுடன் தலைவியின் வருத்தத்தை வினவலைக் கூடுதலாக மொழியும். இந்நூலைத் தழுவி இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் இயம்பும்.

வரைவு நீட்டிப்புச் சூழலில் தொல்காப்பியம் (1060;43) மொழியும் கூற்றானது பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

வரைவுகடாதலில் இற்செறித்தல் காரணமாகத் தலைவி வருந்துவதைத் தோழி தலைவனிடம் எடுத்துரைப்பதாகத் தொல்காப்பியம் கூறுதலை வீரசோழியமானது களவொழுக்கத்தைத் தாய் அறிந்துவிட்டதை மொழிதல், காப்பு மிகுதி கூறல், தலைவி உயிர் வாழ்தல் அரிதென்றல் என்று குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது வீரசோழியத்தைப் பின்பற்றுவதுடன் தலைவியின் ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறல், காமம் மிகவுரைத்தல், கனவு நலிவுரைத்தல், கவினழிவுரைத்தல் என மொழியும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் இயம்பும். இதனை அடியொற்றி முத்துவீரியம், குறிப்பிடும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றி சுவாமிநாதம் இயம்பும்.

தொல்காப்பியம் தலைவன் வரும் வழியருமை அறிந்து தலைவி கலங்குதலின்போது தோழி கூற்று நிகழ்த்துவதை, தமிழ்நெறி

விளக்கமானது தலைவனை வாரல் என்றுரைத்தலை இயம்பும். இதனைத் தழுவியே அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகியனவும் குறிப்பிடும். இதனை அடியொற்றி முத்துவீரியம் மொழிவதுடன் உள்ளது கூறல், பகல் வரல் என்றல் என்றும் மொழியும். இதனை அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

தோழி, தலைவனிடம் வரைதல் விருப்புத் தோன்றும் சொற்களைக் கூறுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதை இறையனாரகப்பொருள் உரையானது தலைவனிடம் இரவும் பகலும் வருகென்றல், பகல் வருகென்றல், இரவு வருகென்றல், இரவும் பகலும் வாரல் என்றல், தலைவியின் நிலைகண்டுரைத்தல், படைத்து மொழிதல் என இயம்பும். இதனைத் தழுவுவதுடன் தமிழ்நெறி விளக்கமானது தலைவனது குடித்திறங் கூறல், தலைவி மானிட மகளாதலை அறிந்தேன் என்றல் என்றும் குறிப்பிடும். வீரசோழியமானது இறையனாரகப்பொருள் உரையைத் தழுவிக் கூறுவதுடன் தலைவனை இரவுக்குறி நேர்தல், பகற்குறி மறுத்தல், வரவறிவுறுத்தல், தாய் துயிலறிதல், தலைவியைத் துயிலெடுத்தல், ஏதில் கூறல், இடத்துய்த்து அகற்றல், மீண்டு எதிர்கோடல், சிறப்புறக் கிளத்தல், அம்பலும் அலரும் ஆயின என்றல், தலைவியின் வருத்தத்தைக் கூறல், குறியிடத்து வர வேண்டல் என்றும் விரித்துரைக்கும். அகப்பொருள் விளக்கமானது செவிலிக்கு மறைத்தமை விளம்பல், அலரறிவுறுத்தல், தாயறிவுணர்த்தல், வெறியச்சுறுத்தல், பிறர் வரைவுணர்த்தல், வரைவெதிர் உணர்த்தல், வரையுநாள் உணர்த்தல், அறிவறிவுறுத்தல், குறிபெயர்த்திடுதல், தலைவனது சிறப்புக்களைக் கூறல் என்று மொழிவதுடன் தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம் ஆகிய நூல்களையும் பின்பற்றி இயம்பும். இதனைத் தழுவி மாறனகப்பொருள் மொழிந்து, பகலிலும் இரவிலும் அகலிவன் என்றலை மட்டும் விடுத்துள்ளது.

இதனை அடியொற்றி இலக்கண விளக்கம் குறிப்பிடும். இதனைத் தழுவி முத்துவீரியம் மொழிவதுடன் தலைவனிடம் தொழுது இரந்து மொழிதல், சிறைப்புறங்கூறல், மந்திமேல் வைத்தல், வரைவொடு வருதற்குக் காலம் கூறல், நம் துன்பத்தை நீயே கூறென்று தலைவியிடம் மொழிதல், தலைவியின் பொலிவழிவுரைத்தல் என்றும் மொழியும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

வரைவுகடாதலில் மொழியும் தொல்காப்பியக் (1060;37-38) கூற்றானது பிற அக இலக்கணங்களில் மொழியப்பெறவில்லை.

அறத்தொடு நிற்றலில் தலைவியை நொதுமலர் வரையக் கருதிய வழித் தோழி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை மாறனகப்பொருளும் குறிப்பிடும்.

செவிலி, அறிவரை வினவிக் குறி பார்க்குமிடத்துத் தோழி, கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை, தமிழ்நெறி விளக்கம் செவிலிக்கு அறத்தொடு நிற்பதில் தடை யாதென்று வினவல், பொய்யென மொழிதல் எனக் கூறும். முத்துவீரியமானது தோழி கலக்குற்று நிற்றலை இயம்பும்.

தொல்காப்பியம் செவிலி 'களம் பெறக் காட்டினும்' தோழி கூற்று நிகழ்த்துவதாக மொழிவதை, இறையனாரகப்பொருள் உரையானது வெறியினை விலக்குதல், அறிவிலன் வேலன் என்று அயலோர்க்கு மொழிதல் என்று குறிப்பிடும். தமிழ்நெறி விளக்கமானது தலைவியை அறத்தொடு நிற்பதை ஏற்கச் செய்தலுடன் இறையனாரகப்பொருள் உரையைப் பின்பற்றும். இதனையும் இறையனாரகப்பொருள் உரையையும் தழுவிக் களவியற்காரிகை இயம்பும். முத்துவீரியமானது

ஐயந் தீர்த்தலைக் கூறுவதுடன் களவியற்காரிகையையும் தழுவும். இதனைத் தழுவி சுவாமிநாதம் குறிப்பிடும்.

தோழி, தலைவியின் களவினைச் செவிலிக்குப் புலப்படுத்துவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்றை இறையனாரகப்பொருள் உரையானது தோழி அறத்தொடு நிற்றல் என்று கூறும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் தழுவும். இதனைத் தழுவி வீரசோழியம் மொழிவதுடன் பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி, தலைவியின் வருத்தத்தைத் தீர்த்தல் என மொழியும். இதனை அடியொற்றி அகப்பொருள் விளக்கமும், களவியற்காரிகையும் இயம்பும். மாறனகப்பொருள் தலைவியின் கண்ணீர் துடைத்தல், தலைவனை இயற்பழித்தல் என்று மொழிவதுடன் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவும். இதனை இலக்கண விளக்கம் பின்பற்றும். வீரசோழியத்தை அடியொற்றி முத்துவீரியம் கூறுவதுடன் தேர்வரவு உரைத்தல், நிதி காட்டல் என்றும் மொழியும். மாறனகப்பொருளையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் உரைக்கும்.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலில் தோழி, 'ஓம்படைக் கிளவிப் பாங்கின்கண்' கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை இறையனாரகப்பொருள் உரையானது தலைவனை இயற்பழித்தல் என்று கூறும். அகப்பொருள் விளக்கமானது தோழி, தலைவனிடம் நினது பிரிவை நீயே கூறென்றல், தலைவன் செலவு உணர்த்தல், தலைவியைக் கொடுஞ்சொற் கூறல், வருகுவர் மீண்டெனக் கூறல், வம்பென்றல், தலைவன் தூதாய் இப்பொழுது வந்ததெனக் கூறல், வலம்புரி கேட்டு வரவறிவித்தல், தலைவன் வந்துழி நினைத்தமை வினாதல், தலைவியை ஆற்றுவித்தமை கூறல் என

இயம்பும். இறையனாரகப்பொருள் உரையைத் தழுவிக் களவியற்காரிகை மொழிவதுடன் தலைவியிடம் விரைந்து வருவான் என்று கூறுவதையும் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கத்தை மாறனகப்பொருள் மொழிவதுடன் தோழி, தலைவியிடம் ஆற்றவேண்டுமென்று வற்புறுத்தலைக் கூடுதலாக இயம்பும். இந்நூலை அடியொற்றியது இலக்கண விளக்கம். முத்துவீரியமானது தோழி, பரிசப்பொருள் இயம்பல், வரைவு உடம்படுத்தல், தலைவியிடம் வாய்மை கூறி வருத்தந் தணித்தல் என்று கூறுவதுடன் களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகியனவற்றையும் தழுவி உரைக்கும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

உடன்போக்கில் தோழி, தலைவனிடம் தலைவியை உடனழைத்துக்கொண்டு செல்லாவிட்டால் ஏற்படும் துன்பத்தைக் கூறுவதாகத் தொல்காப்பியம் மொழிதலை முத்துவீரியம் குறிப்பிடும்.

தோழி, தலைவியை உடன்போக்கற்குத் துணிந்தபோது கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை இறையனாரகப்பொருள் உரையானது தலைவியின் ஆற்றாமை அலராயிற்றென்றல், மகட்பேச்சுரைத்தல், பொன்னணிவுரைத்தல், பரிசப்பொருள் கூறல், ஆதாரங்கூறல், தலைவனைச் செலவழுங்குவித்தல் என்று மொழியும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் உரைப்பதுடன் உலகியல் கூறி நீயுரை என்றல், வருந்திறம் உரைத்தல், வழிநயப்பித்தல் என்றும் கூறும். இதனை அடியொற்றி வீரிசோழியம் குறிப்பிடும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம் கூறுவதுடன் தலைவியை உடன்படுத்தல் என்றும் கூறும். களவியற்காரிகையானது இறையனாரகப்பொருள் உரை, தமிழ்நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம் ஆகிய நூல்களைத்

தழுவியுரைக்கும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் மொழியும். முத்துவீரியமானது தலைவியின் பருவங்கூறல், படைத்து மொழிதல், தளர்வறிந்துரைத்தல், உளநினைவுரைத்தல் என்று கூறுவதுடன் களவியற்காரிகையையும் இலக்கண விளக்கத்தையும் தழுவும். இதனையும் இலக்கணவிளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் மொழியும்.

தொல்காப்பியம் தோழி தலைவியை விடுத்தற் கண் கூற்று நிகழ்த்துவதை ஓம்படுத்துரைத்தல் என்று இறையனாரகப்பொருள் உரை இயம்பும். இதனை அடியொற்றித் தமிழ்நெறி விளக்கம் கூறும். வீரசோழியமானது தலைவியிடம் போக்குரைத்தல், கற்பியல் காட்டல் என்று மொழிவதுடன் தமிழ்நெறி விளக்கத்தை அடியொற்றியும் உரைக்கும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கம் கூறுவதுடன் தலைவியை வைகிருள் விடுத்தல் எனவும் இயம்பும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை குறிப்பிடும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறும். இதனைத் தழுவுவதுடன் முத்துவீரியமானது தலைவியிடம் துணிந்தமை கூறல், துணிவறிவித்தல், துணிவெடுத்துக் கூறல், கொண்டகலென உரைத்தல், தலைவனோடு கூட்டுவித்தல், அறத்தொடு நிற்றல் என்றும் மொழியும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றியது சுவாமிநாதம்.

உடன்போக்குச் சூழலில் தொல்காப்பியம் மொழியும் (985;3, 4-5, 6-10) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்பெறவில்லை.

கற்பொடு புணர்ந்த கவ்வையில் செவிலியிடம் போக்கு உணர்த்தல், தோழி புலம்பல் ஆகியனவற்றை சுவாமிநாதம் இயம்பும்.

மீட்சியில், உடன்போக்கில் சென்றோர் திரும்பி வரலை நற்றாய்க்கு உணர்த்துவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் சுட்டும்.

தன்மனை வரைதலில், செவிலிக்கு வரைந்தமை உணர்த்தல், வரைந்தமை முன்னே சாற்றியது உணர்த்தல் ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியன குறிப்பிடும்.

வரைவு மலிவில் தோழி, தலைவியிடம் விரைவில் வரைவு நிகழும், அதுவரை ஆற்றிக்கொண்டிரு என்று உரைப்பதாகத் தொல்காப்பியம் கூறுதலைத் தமிழ்நெறி விளக்கமானது தலைவியை ஆற்றுவித்தல் என்று கூறும். அகப்பொருள் விளக்கமானது தமிழ்நெறி விளக்கத்தைத் தழுவுவதுடன் தலைவன் பரிசப்பொருள் விடுத்தமை தலைவிக்கு உணர்த்தல், தலைவனை வாழ்த்தல், தலைவி மணம் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல் எனவும் மொழியும். இதனைத் தழுவுவதுடன் களவியற்காரிகை வரைவை உடன்படல், மணமுரசம் வினாதல் என்பனவற்றையும் குறிக்கும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் கூறும். களவியற்காரிகையைத் தழுவி முத்துவீரியம் மொழிவதுடன் தோழி தன்னுள் மகிழ்ந்துரைத்தலையும் கூறும். இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி சுவாமிநாதம் கூறும்.

வரைந்துகோடலில் தலைவியைத் தலைவன் வரைந்து கொண்ட நாளில் வாழ்த்தல், கையடை பணித்தல் ஆகியனவற்றை மாறனகப்பொருள் இயம்பும்.

இல்வாழ்க்கையின்போது தொல்காப்பியம் (1096;1-4) மொழியும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

இல்வாழ்க்கையின்போது தோழி, தலைவனை வாழ்த்தல், தலைவியை வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை வினவல், தலைவனிடம், தலைவியை வரையுநாளளவும் ஆற்றிய நிலைமை வினவுதல், இருவரது அன்புறவு உணர்த்தல், வாழ்க்கை நலமுரைத்தல் ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனை அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். இதனைத் தழுவி முத்துவீரியம் இயம்பும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

ஊடலில் தொல்காப்பியம் களவுக் காலத்தில் பெருமையுடையனாகத் திகழ்ந்த தலைவன் இப்போது இரங்கத்தக்கனாய் திகழ்வதாகத் தொல்காப்பியம் கூறுதலைத் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும்.

தலைவன் பரத்தையரொடு சென்று விளையாடிய குற்றத்தினைத் தொல்காப்பியம் மொழியும். இதனையே இறையனாரகப் பொருள் உரையும் இயம்பும்.

தலைவன், புதல்வனை வாயிலாகக் கொண்டு சென்றும் வாயில் நேராமை நினைத்து வருந்துமிடத்துத் தோழி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் இயம்புவதை, தலைவியின் பொறாமை நீக்கக் கூறல், தலைவி ஆறியதைக் கூறல் என இறையனாரகப்பொருள் உரை மொழியும். வீரசோழியமானது தலைவியின் செயல் இல்லறத் தன்மைக்கு ஏற்றது என்றல் என்று இயம்பும். இறையனாரகப்பொருள்

உரையைத் தழுவி முத்துவீரியம் குறிப்பிடுவதுடன் தலைவியின் ஊடல் தீர்த்தலையும் குறிப்பிடும்.

தலைவனது பேணா ஒழுக்கத்தினால் தலைவி நாணுவதைக் கூறுமிடத்துத் தோழி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை முத்துவீரியம் தலைவியின் நாண் கண்டியம்பல், பாணன் வரவுரைத்தல், தலைவனை இயற்பழித்தல் என்று இயம்பும்.

தோழி, தலைவியின் புலவியைத் தீர்த்தற்கண் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் சுட்டும். அகப்பொருள் விளக்கமானது தலைவி நெய்யாடியதைக் கூறல், தலைவன் வரவு கூறல், ஊடலைத் தணித்தல், தலைவனை இகழ்தல், தலைவியைப் புகழ்தல் என்று மொழியும், இதனைத் தழுவி மாறனகப்பொருள் குறிப்பிடுவதுடன் பாணனைப் பழித்துரைத்தலைக் கூடுதலாக இயம்பும். இதனைத் தழுவி இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் குறிப்பிடும்.

தலைவனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற்கண் தோழி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுதலை இறையனாரகப்பொருள் உரை இயம்பும். தமிழ்நெறி விளக்கமானது தலைவி வாயில் மறுத்ததைத் தலைவனுக்கு உரைத்தலைக் குறிப்பிடும். முத்துவீரியமானது தலைவன் வாயில் வேண்டத் தோழி கூறல், தோழி வாயில் வேண்டல் ஆகியனவற்றைக் கூறும்.

ஊடலின்போது தொல்காப்பியத்தில் (1096;5-10, 13, 15-17, 20-22, 25-26) கூறப்பட்டுள்ள கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

தலைவி பூப்புற்றதைத் தெரிவிக்க, சேடி பரத்தையர் சேரிக்குச் செல்லலை வீரசோழியம் குறிப்பிடும். அகப்பொருள் விளக்கமானது தலைவியிடம் அழுது கொண்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று வினவல், தலைவியைக் கழறல், தலைவன் வரவினை உணர்த்தல் ஆகியனவற்றைக் குறிப்பிடும். இதனை அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் சுட்டும். முத்துவீரியமானது தலைவியின் பொறுமையை வியத்தலைக் கூறும். இலக்கண விளக்கத்தை அடியொற்றியது சுவாமிநாதம்.

பிரிவின்போது தோழி கூற்று நிகழ்த்துதற்குரியள் என்று தொல்காப்பியம் மொழியும். ஓதற் பிரிவில் தமிழ்நெறி விளக்கம் தலைவன் பிரிவின்போது தலைவி நிலையை அறிந்து நின்னிடம் கூறுகின்றேன் என்றல், ஓதற்குப் பிரிய நினைத்ததை மொழிதல், தலைவியிடம் ஆறுதல் கூறல், நொந்துரைத்தல், ஆற்றுவித்தல் எனக் குறிப்பிடும். இதனைத் தழுவி முத்துவீரியம் உரைப்பதுடன் தலைவியின் கலக்கங் கண்டுரைப்பதையும் இயம்பும்.

பகைதணிவினைப் பிரிவில் முத்துவீரியம் தலைவனது பிரிவு கூறல், தலைவியின் வருத்தந் தணித்தல் என்பனவற்றைத் தோழி கூற்றாகச் சுட்டும்.

வேந்தர்க்குற்றுழிப் பிரிவில் இறையனாரகப்பொருள் உரையானது தலைவன் வரவெடுத்துரைத்தல், தலைவன் அனுப்பிய தூதாக பருவம் வந்ததென்று கூறல் என்று மொழியும். வீரசோழியமானது தலைவியை ஆற்றாதிரு என்றல், கால மறுத்துரைத்தல், விரைவில் தலைவன் வந்துவிடுவான் என்றல், வருவர் நமரென வாய்மொழி வலித்தல் எனக் குறிப்பிடும். முத்துவீரியமானது

தலைவன் பிரிந்ததைக் கூறுவதோடு இறையனாரகப்பொருள் உரை, வீரசோழியம் ஆகியவற்றையும் தழுவி இயம்பும்.

காவற்பிரிவில் முத்துவீரியம் தலைவன் பிரிவு அறிவித்தலைச் சுட்டும்.

பொருள்வயிற் பிரிவில் இறையனாரகப் பொருள் உரையானது தலைவி நிலைமை கூறல், தலைவி இரவுப் பொழுதை எவ்வாறு கழிப்பாள் என்றல், தலைவன் வரவு கூறல் ஆகியனவற்றை மொழியும். வீரசோழியமானது தலைவன் பொருள்தேட நினைப்பதைக் கூறுவதை இயம்பும். இதனையும் இறையனாரகப்பொருள் உரையையும் தழுவுவதுடன் தலைவனது குறிப்பு, பொருள் தேடுதலை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றல், பிரிந்தமை கூறல், நாளெண்ணி வருந்தல் ஆகியனவற்றை முத்துவீரியம் விளம்பும்.

இறையனாரகப்பொருள் உரையானது தலைவன் நாட்குறித்துப் பிரிந்தும், மனம் கவலையுறுகிறது என்றல், தலைவியின் ஆற்றாமை கவன்றுரைத்தல், வினைவயிற் பிரிந்த தலைவன் வரவினை உணர்த்திய சங்கினை வாழ்த்தல் என்று குறிப்பிடும்.

பிரிவின்போது மொழியும் தொல்காப்பியக் (1096;29-30) கூற்றானது பிற அக இலக்கணங்களில் மொழியப்பெறவில்லை.

சான்றெண் விளக்கம்

1. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.56
2. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.67
3. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக்.53-54
4. ஈ.கோ.பாஸ்தரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, பக்.1-2
5. மேலது, ப.28
6. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.453
7. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.299
8. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.77
9. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.451
10. மேலது, ப.451
11. மேலது, ப.453
12. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.69
13. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.91
14. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.339
15. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.72
16. மேலது, ப.69
17. மேலது, ப.70

18. மேலது, ப.70

19. மேலது, ப.71

20. மேலது, ப.68

21. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.451

22. மேலது, ப.453

23. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.72

24. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.91

25. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.261

26. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.72

27. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.451

28. மேலது, பக்.453-454

29. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், பக்.72-73

30. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.91

31. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.259

32. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.72

33. மேலது, ப.85

34. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.), முத்துவீரியம், ப.274

35. தி.சு.பாலசுந்தரம் பிள்ளை யவர்கள் (இளவழகனார்), பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, ப.40

36. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.104

37. புலவர் குழந்தை (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பகுதி), ப.142

38. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.32

39. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.91

40. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.16), ப.64

41. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.90

42. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.15), ப.63

43. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.87

44. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.296

45. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.85

46. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.358

47. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.17), ப.66

48. மேலது (உ.18), ப.66

49. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.86

50. மேலது, ப.88

51. மேலது, ப.88

52. மேலது, ப.88

53. மேலது, ப.90

54. மேலது, ப.76

55. மேலது, ப.77

56. மேலது, ப.77

57. மேலது, ப.77

58. மேலது, ப.78

59. மேலது, ப.92

60. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.26), ப.72

61. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.80

62. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.301

63. மேலது, ப.301

64. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.79

65. மேலது, ப.80

66. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.27), ப.73

67. மேலது (உ.28), ப.74

68. மேலது (உ.29), ப.75

69. மேலது (உ.31), ப.77

70. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.84

71. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.32), ப.78

72. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.103

73. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.60), ப.102

74. மேலது (உ.61), ப.102

75. மேலது (உ.103), ப.103

76. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.105

77. மேலது, ப.105

78. மேலது, ப.106

79. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.33), ப.80

80. மேலது (உ.34), ப.81

81. மேலது (உ.35), ப.81

82. மேலது (உ.39), ப.84

83. மேலது (உ.42), ப.87

84. மேலது (உ.43), ப.88

85. மேலது (உ.45), ப.89

86. மேலது (உ.46), ப.90

87. மேலது (உ.47), ப.91

88. மேலது (உ.48), ப.92

89. மேலது (உ.49), ப.93

90. மேலது (உ.50), ப.94

91. மேலது (உ.51), ப.94

92. மேலது (உ.52), ப.95

93. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.107

94. மேலது, ப.108

95. மேலது, ப.108

96. மேலது, ப.109

97. மேலது, ப.111

98. மேலது, ப.111

99. மேலது, ப.112

100. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.54), ப.97

101. மேலது (உ.55), ப.97

102. மேலது (உ.56), ப.98

103. மேலது (உ.57), ப.99

104. மேலது (உ.58), ப.100

105. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.178

106. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.314

107. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.66), ப.109

108. மேலது (உ.67), ப.111

109. மேலது (உ.68), ப.111

110. மேலது (உ.69), ப.112

111. மேலது (உ.72), ப.115

112. மேலது (உ.73), ப.115

113. மேலது (உ.74), ப.116

114. மேலது (உ.75), ப.117

115. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.82

116. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகார வழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.84

117. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.148

118. மேலது, ப.149

119. மேலது, ப.149

120. மேலது, ப.149

121. மேலது, ப.151

122. மேலது, ப.151

123. மேலது, ப.95

124. தி.சு.பாலசுந்தரம்பிள்ளையவர்கள் (இளவழகனார்), பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, ப.118

125. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகார வழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.92

126. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.392

127. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.98

128. மேலது, ப.99

129. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.397

130. மேலது, ப.397

131. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.96

132. மேலது, ப.134

133. மேலது, ப.118

134. மேலது, ப.119

135. மேலது, ப.119

136. மேலது, ப.120

137. மேலது, ப.120

138. மேலது, ப.122

139. இரா.இளங்குமரன் (ப.ஆ.), களவியற்காரிகை (உ.76), ப.118

140. மேலது (உ.77), ப.119

141. மேலது (உ.78), ப.120

142. மேலது (உ.79), ப.120

143. மேலது (உ.82), ப.124

144. மேலது (உ.80), ப.121

145. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.123

146. மேலது, ப.175

147. மேலது, ப.175

148. மேலது, ப.175

149. மேலது, ப.174

150. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.156

151. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.168

152. மேலது, ப.168

153. மேலது, ப.169

154. மேலது, ப.170

155. மேலது, ப.170

156. மேலது, ப.176

157. மேலது, ப.177

158. மேலது, ப.198

இயல் ஐந்து

பிற மாந்தர் கூற்று

பிற மாந்தர் கூற்று

அகவொழுக்கத்தில் தலைமக்கள் சிறப்புடைய வாழ்க்கை வாழ்வதற்கு பல்வேறு மாந்தர் உறுதுணை புரிவர். தொல்காப்பியம் களவிலும் கற்பிலும் கூற்றுக்குரியோராக பார்ப்பான், பாங்கன், செவிலி பற்றியும் கற்பில் கூற்றுக்குரியோராக பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் பற்றியும் கூறும். இவ்வாறு கூற்றுக்குரியோராக வரையறுத்துக் கூறப்படாத நற்றாய், காமக்கிழத்தி, இளையர், வாயில்கள் கூற்றுகள் தொல்காப்பியத்திலும் பிற்கால அக இலக்கணங்களிலும் இடம்பெற்றுள்ளன. பாகன், கட்டுவிச்சி, உழையர், இல்லோர், கலந்துடன்வருவோர், தமர், ஊரார், அயலோர் ஆகியோரது கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற்கால அக இலக்கணங்களில் காணப்படுகின்றன. இவற்றைத் தொகுத்துப் பகுத்து ஒப்பிட்டு ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

பார்ப்பான்

பார்ப்பான் என்போர் அறிவிற் சிறந்தவராகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றத் தக்கவராகவும் திகழ்பவர் ஆவர். இவரை அகப்பொருள் விளக்கம் (188;2), இலக்கண விளக்கம் (538;17), மாறனகப்பொருள் (88;2), சுவாமிநாதம் (113;7) ஆகிய நூல்கள் 'முக்கோற் பகவர்' என்று மொழிவதோடு அகப்பொருள் விளக்கமும் (188;2) இலக்கண விளக்கமும் (538;17) 'மிக்கோர்' என்றும் மாறனகப்பொருள் (88;3) 'தக்கோர்' என்றும் குறிப்பிடும்.

கூற்று-வரையறை

தொல்காப்பியம் (1123) பார்ப்பான் நிகழ்த்தும் கூற்றுகளாக ஆறினைக் குறிப்பிடும். இவன் களவிலும் (1445) கற்பிலும் (1446)

கூற்றுகள் நிகழ்த்துதற்கு உரியன். தலைமக்களது ஊடல் தீர்க்கும் வாயில்களுள் (1139) ஒருவன்.

சூழல்

பார்ப்பான், கற்பொடு புணர்ந்த கவ்வை, உடன்போக்கிடையீடு, பிரிவு ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்துவான்.

கற்பொடு புணர்ந்த கவ்வை

கற்பொடு புணர்ந்த கவ்வையில் அகப்பொருள் விளக்கம் (188), மாறனகப்பொருள் (88), இலக்கண விளக்கம் (538), சுவாமிநாதம் (113) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கூற்று பார்ப்பானுக்குரியதாக வகுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்று

உடன்போக்கில் சென்ற தலைவியைத் தேடிச் செல்வாள் செவிலி. அப்போது வழியிடை எதிர்ப்படும் முக்கோற்பகவரை வினவ, அவர்கள் இது உலக இயல்பென்று, காரணம் எடுத்துக்காட்டலை அகப்பொருள் விளக்கம் (188;2-3) கூறும். இதனையே மாறனகப்பொருள் (88;3), இலக்கண விளக்கம் (538;17-18), சுவாமிநாதம் (113;8) ஆகியனவும் எடுத்துரைக்கின்றன.

உடன்போக்கிடையீடு

இத்தகைய சூழலில் பார்ப்பானுக்கு உரிய கூற்றாக அகப்பொருள் விளக்கம் (198), மாறனகப்பொருள் (95), இலக்கண விளக்கம் (547), சுவாமிநாதம் (116) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்று

உடன்போக்கில் தலைவனுடன் செல்லும் தலைவி, தன் போக்கினை நற்றாய்க்கு உணர்த்துமாறு அந்தணரிடம் கூறுவாள். அந்தணர், நற்றாயிடம் மொழிதலை (198;4) அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனை அடியொற்றி மாறனகப்பொருள் (95;3-4), இலக்கண விளக்கம் (547;3-4), சுவாமிநாதம் (116;4) ஆகிய நூல்கள் குறிப்பிடும்.

பிரிவு

பிரிவின்போது தொல்காப்பியம் (1123) பார்ப்பான் நிகழ்த்தும் கூற்றுகளாக ஆறினைக் குறிப்பிடும்.

வீழ்ச்சி

பார்ப்பான், தலைவனிடம் நீ பிரிந்தால் தலைவியின் காமமானது மிகும் என்றல்,

இவ்வாறு தலைவனிடம், தலைவியின் காம மிகுதியைக் கூறினும் ஆராய்ச்சி நிலையால் ஏதுக்கள் காட்டிக் கூறுதல்,

தலைவனது புறவொழுக்கக் குறிப்பினைத் தலைவிக்கு எடுத்துரைத்தல்,

ஆவொடு பட்ட நிமித்தம் உரைத்தல்,

தலைவன் பிரியுமிடத்து நன்னிமித்தம் கூறிச் செலவு மேற்கொள்ளுமாறு கூறுதல்,

தீ நிமித்தம் கூறித் தலைவனைச் செலவழுங்கல் வேண்டுமெனக் கூறுதல் (1123) ஆகிய கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளன. இவை பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

பாங்கன்

தலைவனின் உயிர்த்தோழன் பாங்கனாவான். இவன் தலைவனைப் பல்வேறு வகையில் இடித்துரைத்து உற்ற துணைவனாக இருப்பவன். இவனைப் பற்றி நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, "பாங்கன்-தோழன்"[1] என்றும் புலவர் குழந்தை, "பாங்கன்-தலைவனது தோழன்"[2] என்றும் ந.சுப்புரெட்டியார், "பாங்கன் என்பவன் தலைவனுக்குத் தோழனாக இருப்பவன். தலைவன் களவு ஒழுக்கத்தில் ஒழுகும்போது அவனுக்கு உற்ற துணைவனாக இருந்துகொண்டு அவன் செயல்களில் உதவி புரிபவன். தலைவியைச் சந்தித்து, அவளுடன் மறைந்து ஒழுகும் ஒழுக்கத்தால் அவன் உடலில் காணும் தோற்ற வேறுபாடுகளைக் கண்டு, காரணத்தை வினவியறிந்து, அது முதல் இவனுக்குத் துணைவனாக இருப்பவன்"[3] என்றும் நவில்வர். மொ.அ.துரை அரங்கசாமி, "பாங்கன், தலைவிக்குத் தோழி போலத் தலைவன் பக்கத்திலிருந்து ஆக்கச் செயல் புரிபவனாவன். களவிலும் கற்பிலும் தலைவனுக்கு இவன் துணையாக இருப்பன்"[4] என்றும் நா.பாலகிருட்டினன், "தலைவனுக்கு உயிர்த்தோழன் பாங்கன்"[5] என்றும் இயம்புவர்.

கூற்று - வரையறை

பாங்கன் களவிலும் (1445) கற்பிலும் (1446) கூற்று நிகழ்த்துதற்குரியோராகவும் வாயில்களுள் (1139) ஒருவராகவும் தொல்காப்பியம் குறிப்பிடும். இவனுக்குரிய கூற்றுகள் தொல்காப்பியத்தில் தனித்துக் கூறப்படவில்லை. பிற அக இலக்கணங்களில் சுட்டப் பட்டுள்ளன.

சூழல்

பாங்கன், பாங்கற் கூட்டத்தின்போது கூற்றுகள் நிகழ்த்துவான்.

பாங்கற் கூட்டம்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைச் சந்தித்த தலைவன் பாங்கனைக் கூடுதல் பாங்கற் கூட்டமாகும். இத்தகைய சூழலில் பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.3) உரை, தமிழ்நெறி விளக்கம் (16) ஒவ்வொன்றிலும் ஏழு, வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஆறு, அகப்பொருள் விளக்கம் (137) பதின்மூன்று, களவியற்காரிகை (26, 27) எட்டு, மாறனகப்பொருள் (29) பதினைந்து, இலக்கண விளக்கம் (505) பதின்மூன்று, முத்துவீரியம் (837) பதினொன்று, சுவாமிநாதம் (90, 91) பதின்மூன்று எனப் பாங்கனுக்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

பாங்கற் கூட்டத்தில் தலைவனுக்குரியதாகக் கூறப்பட்டுள்ள,

"நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்"

(தொல்.1048;8)

"குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்"

(தொல்.1048;9)

என்னும் இரண்டு கூற்றுகள் வாயிலாக உலகத்து நிலைநிற்கும் நல்லொழுக்கங்களை நினைப்பித்துக் கூறல், தலைவியை நினைத்தால் ஏற்படக்கூடிய குற்றங்களை வெளிப்படக் கூறி, அவனது வருத்தத்தை நீக்குவதற்கு முயல்தல் ஆகியவை பாங்கனுக்கும் உரியவை என்று உணர இயலும்.

இச்சூழலில் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தலைவியிடம் 'நின்னைப் பிரியேன், பிரியின் ஆற்றேன்' என்று கூறிப் பிரிவான். இந்நிலையில் தன்னைக் காணாத நிலையில் தலைவி எவ்வாறு வருந்துகின்றாளோ எனவும் பிரிவின் காரணமாக ஏற்பட்ட

வேறுபாட்டினை அயலாருக்கு மறைக்க இயலாது வருந்துகின்றானோ எனவும் நினைத்து ஆற்றாதவனாயிருப்பான். இந்நிலையில் பாங்கனை எதிர்ப்படுவான். அப்போது பாங்கன், தலைவனை அடியிலிருந்து முடிவரைக்கும் நோக்கி, நின் தோள்கள் மெலிந்து இவ்வாறாதற்குக் காரணமென்னவென்று வினவல்,[6] உற்றது உரைப்பக் கேட்ட பாங்கன், தலைவனிடம் இன்னதோர் இடத்து இன்னதோர் உருவுகண்டு என் உணர்வு அழியப் போந்தேன் என்பது தகாதென்று 'கழறியுரைத்தல்,'[7] ஒரு காலத்தும் கலங்காத உள்ளம் இவ்வாறு கலங்குதற்குக் காரணமென்னவென்று வருந்திக் கூறல்,[8] தலைவனோடு கூட வருந்தும் பாங்கன், இவனோடு தானும் வருந்தினால் ஆற்றுவிப்பார் யாருமில்லையென்று கருதி, நின்னால் காணப்பட்ட உருவுக்கு 'இயல், இடம் யாது என்று வினவல்,'[9] தலைவன் கூறிய குறியிடத்திற்குச் சென்ற பாங்கன், தன்னை அவள் காணாமல், தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்று, அவன் சொன்ன இயலும் இடமும் இதுவே என்று ஐயமறத் தெளிந்து தலைவியைக் காண்டல்,[10] தலைவன், தலைவியின் கண் வலையில் சிக்கி, அந்நிலையிலேயே நம்மிடம் வந்து, யான் கழறவும் ஆற்றி, அனைத்தையும் தப்பாமல் கூறிய தலைவன் திறமையுடையவன் என்று தலைவியைக் கண்டதும் வியந்துரைத்தல்,[11] இவ்வாறு சென்ற பாங்கன், தலைவியைக் கண்டதைத் தலைவனிடத்துக் கூறல்[12] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.3) உரையானது இயம்பும். இதனைத் தழுவி 'வினாதல்,' 'கழறல்', 'யாண்டௌன' வினவல், 'மாதரைக் காண்டல்,' 'மன்னிய வகுத்தல்,' 'கிழவோற்கிசைத்தல்' (16 ; 1-4), தலைவன், பாங்கனிடம் நான் செய்த நல்வினையும் எனக்குப் பயன்தரவில்லையென்று தன் ஆற்றாமையைக் கூற, பாங்கன் எம்பெருமான் இவ்வாறு ஆற்றானாய்க் கூறினால் யான் அதற்கு என்ன செய்வேன் என்று தன் மனதிற்குள் நோதல் (16;2) ஆகியனவற்றைத்

தமிழ்நெறி விளக்கமானது மொழியும். இதனைத் (16;1-3) தழுவி வீரசோழியமானது 'பழியெனக் கூறல்,' 'கேடெனக் கூறல்,' 'இளையவன் வடிவு மிடனு மீதல்,' 'சென்றவன் காண்டல்' (குறிஞ்.நடை;18, 20-21, 23), நினது குலப்பெருமைக்குத் தகாது என்று கழறல், 'வெறிகமழ் கோதை மிகுநலம் புணர்தல்' (குறிஞ்.நடை;20, 24) ஆகியனவற்றை எடுத்துரைக்கும். தமிழ்நெறி விளக்கத்தைப் (16;1, 3-4) பின்பற்றி அகப்பொருள் விளக்கமானது 'உற்றது வினாதல்,' 'தலைவனை வியத்தல்,' 'தலைவன் தனக்குத் தலைவி நிலை கூறல்' (137;1-2, 12-13), வீரசோழியத்தைத் (குறிஞ்.நடை;20, 18, 20-21, 23-24) தழுவிக் 'கழறல்,' 'கிழவோற் பழித்தல்,' 'தன் மனத்து அழுங்கல்,' 'எவ்விடத்து எவ்வியற் றென்றல்,' 'இறைவியைக் காண்டல்', 'தலைவியை வியத்தல்' (137;3-8, 11-12), விதியொடு நொந்துரைத்த தலைவனிடம், எனது தீவினையின் பயன்தான் இத்தன்மையென்று தானும் அவனோடு கூட வருந்தல், தலைவனிடம், நீ வருந்த வேண்டாம், நீ சொன்ன குறியிடத்திற்குச் சென்று தலைவியைக் கண்டு வருகின்றேன், அதுவரைக்கும் ஆற்றிக் கொண்டிரு என்று தேற்றல், அவ்விடம் நோக்கிச் செல்லல், தலைவியின் பேரழகைக் கண்ட பாங்கன், அவளைக் காண்பதற்கு முன்னர் தான் அறிவில்லாமல் தலைவனை இகழ்ந்தோமே என்று 'இகழ்ந்ததற்கு இரங்கல்' (137;7, 9-11) என்று விரித்துரைக்கும். இதனைத் (137;1-4, 6-8, 10-13) தழுவிக் களவியற்காரிகை (26;1-4, 27;1-4) மொழியும். இவற்றுள் அகப்பொருள் விளக்கம் 'எவ்விடத்து எவ்வியற் றென்றலை' (137;8) 'வீக்கமழ் தாழ்பொழில் சூழிடந் தன்னை வினவுதல்' (26;4) என்று களவியற்காரிகை இடம் வினவுதலை மட்டும் குறிக்கும். இவற்றையும் அகப்பொருள் விளக்கத்தையும் (137;5,7, 9-12) அடியொற்றி மாறனகப்பொருள் (29;1-11, 14-17) மொழிவதுடன் தலைவியைக் காணச் செய்த இறைவனை வணங்கல், அழகே

வடிவமாகக் கொண்ட தலைவியைக் கண்டு வியந்துரைத்தல் (29;11-13) என்பதைக் கூடுதலாக மொழியும். இதனை (29;1-11, 14-17) அடியொற்றி இலக்கண விளக்கம் (505;1-13) குறிப்பிடும். இதனை (505;1-2, 3-4, 7-13) அடியொற்றி முத்துவீரியம் 'வினாதல்,' 'கழறல்,' 'நொந்து கூறல்,' 'இயலிடங்கேட்டல்,' 'வற்புறுத்தல்,' 'குறிவழிச் சேறல்,' 'காண்டல்,' 'வியந்துரைத்தல்,' 'செவ்வி செப்பல்' (837;1-2, 4-9), இறையனாரகப்பொருள் (சூ.3) உரையைத் தழுவிக் 'கவன்றுரைத்தல்' (837;2), தலைவியைக் 'கண்டமை கூறல்' (837;7-8) என்று இயம்பும். இதனையும் (837;1-2, 4-9) இலக்கண விளக்கத்தையும் (505;5-7, 11-12) தழுவி சுவாமிநாதம் (90;2-8, 91;1-2) குறிப்பிடும். இவையனைத்தும் தொல்காப்பியத்தில் இல்லாமல் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த புதிய கூற்றுகளாகும்.

செவிலி

செவிலி, தலைவியை வளர்த்த தாய். இவள் தலைவிக்கு உயிரொத்தவளாகவும் அறிவிற் சிறந்த தோழியைப் பெற்றெடுத்த பெருமை வாய்ந்தவளாகவும் திகழ்பவள். தலைமக்களின் அறிதற்கரிய அன்புரிமை ஒழுகலாற்றினைக் கூறுவதற்கு உரிமையுடையவள். ஆதலின் களவு நிகழ்ச்சியில் 'தாய்' என்று சிறப்பித்துக் கூறப்பெறுவாள். இதனைத் தொல்காப்பியம்,

"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவோள் செவிலியாகும்"

(தொல்.1070)

என்று இயம்பும். இதன் உரையில் இளம்பூரணர், "நற்றாய் இத்துணைச் சிறப்பிலள் என்றவாறு"[13] என்பர். இதனால் செவிலிக்குரிய முதன்மை தெளிவாகும்.

செவிலி, தலைவியின் நற்றாய்க்குத் தோழியாய், தலைவிக்கு வருங் குற்றங்களைக் களைந்து நல்லறிவும் ஆசாரமுங் கொளுத்தித் தலைவியை வளர்த்த தாய் என்று கா.ர.கோவிந்தராச முதலியாரும்[14] புலவர் சேயொளியும்[15] குறிப்பிடுவர். ந.சுப்புரெட்டியார், "இவள் தலைவியிடம் பேரன்பு கொண்டவள். தலைவிக்கு உணவு முதலியன கொடுத்து, அவளைப் பாதுகாத்து, இரவிலும் தன் அருகே அவளைத் துயில் கொள்ளச் செய்து காவல் புரிபவள். தலைவியின் கரந்த ஒழுக்கத்தைத் தோழியின் மூலம் இவள் அறிவாள். தலைவி, தலைவனுடன் உடன்போகும் காலத்து வருந்தி அவளைத் தேடிச் செல்வாள். காட்டில் எதிரில் வரக்கூடிய அந்தணர், கண்டோர் ஆகியவர்களிடம் தன் மகளைப் பற்றி வினவுவாள். நற்றாயுடன் சேர்ந்து கொண்டு தலைவியின் தோற்ற வேறுபாடுகளின் காரணத்தை அறியக் குறத்தி முதலியோரைக் கொண்டு குறி பார்த்து ஆராய்வாள். இவள் தலைமகளைப் பெற்ற நற்றாயினும் பெரிதும் அன்பும் அந்தரங்கமும் உடையவளாதலாள், இக்களவு வரலாற்றிற்குச் சிறந்தவளாய்த் தாய் என்றே சிறப்பித்துக் கூறப்பெறுவாள்"[16] என்பர்.

கூற்று - வரையறை

செவிலி மொழியும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1061, 1099) பதினைந்தினை இயம்பும். இவள் களவிலும் (1445) கற்பிலும் (1446) கூற்று நிகழ்த்துதற்குரியள்.

சூழல்

அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், இல்வாழ்க்கை ஆகிய சூழல்களில் செவிலி கூற்றுகள் நிகழ்த்துவதாக அக இலக்கணங்கள் வரையறுத்துள்ளன.

அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் சூழலில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகளாகத் தொல்காப்பியம் (1061) கூறுவன ஒன்பது. பிற அக இலக்கணங்களாகிய தமிழ்நெறி விளக்கம் (22) இரண்டு, வீரசோழியம் (குறிஞ்.நடை.) நான்கு, அகப்பொருள் விளக்கம் (177,178), களவியற்காரிகை (46,47,48), மாறனகப்பொருள் (73, 75), இலக்கண விளக்கம் (533) ஒவ்வொன்றிலும் மூன்று, முத்துவீரியம் (852) நான்கு, சுவாமிநாதம் (109, 110) மூன்று என வரையறுத்துள்ளன.

மாற்றமின்மை

அறத்தொடு நிற்றலில் செவிலி, தலைவியின் உடல் வேறுபாட்டைக் கண்டு வினவல், தோழியிடம் வினவல் ஆகிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களிலும் மொழியப்பட்டுள்ளன.

பெதும்பைப் பருவத்தாளாகிய தலைவிக்குப் புணர்ச்சியால் தோளும் மார்பும் பிறவும் பெருக்கும். இதனையறியும் செவிலி கூற்று நிகழ்த்துவாள். இதனை,

"அளவு மிகத் தோன்றினும்"

(தொல்.1061;2)

என்று தொல்காப்பியம் சுட்டும். இதனையே தமிழ்நெறி விளக்கம், தலைவியின் தோற்ற வேறுபாட்டைக் கண்டு, அடியிலிருந்து முடிவரைக்கும் நோக்கி, யாரோ இவளை எய்துதற்குரிய பெருந்தகை என்று புகழ்ந்துரைப்பதாக (22;3) இயம்பும்.

தலைவியின் வேறுபாட்டைக் கண்ட செவிலி, தோழியிடம் வினவுவதைத் (1061;7) தொல்காப்பியம் கூறும். இதனை அடியொற்றி அகப்பொருள் விளக்கம் (177;1), மாறனகப்பொருள் (73;1), இலக்கண

விளக்கம் (533;10), முத்துவீரியம் (852;10), சுவாமிநாதம் (109;7) ஆகியவை குறிப்பிடும்.

வீழ்ச்சி

களவொழுக்கமானது புறத்தாருக்குப் புலனாகி அலர் தூற்றப்பட்டவிடத்தும்

தலைவி, தலைவன் மீது கொண்ட காதலால் அளவிறந்த வேட்கையுடன் காணப்பட, அதனை அறிந்து, தோழியை வினவுமிடத்தும்

தலைவன் மனையிடத்து வருதலையும் தலைவி புறத்துப் போதலையும் கண்டவிடத்தும்

செவிலி, வெறியாடச் சென்றவழி தலைவி வருந்துமிடத்தும்

தலைவி, காதல் மிகுதியால் தலைவனை நினைத்துக் கனவின்போது அரற்றுமிடத்தும்

தோழி, தலைவியின் களவொழுக்கத்தைக் கூறியவழி, இதனை நற்றாய்க்கும் தந்தைக்கும் கூறலாற்றாது தெய்வத்தை வேண்டி வாழ்த்துமிடத்தும் (1061;1-2, 5-7) செவிலி கூற்றுகள் நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் மொழியப்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

செவிலி கட்டுவிச்சியிடம், தலைவி உடல் நலம் பெறற்கு, அவளுற்ற நோயை ஆராய்ந்தறிந்து கூறவேண்டுமென்று அவர்களது கருத்தை வினவல், தலைவியின் உடல் மெலிவிற்குத் தெய்வக் குற்றம் ஆதலால் தெய்வம் மகிழ வழிபாடு செய்தல் வேண்டும் என்பதைக் கேட்டு செவிலி கூறல், பிறகு செவிலி முருகணங்கென்று கூறக்கேட்டு வெறியாட்டெடுக்க வேலனை அழைத்தல் (குறிஞ்.நடை;63-64) என மொழியும். இதனைத் (குறிஞ்.நடை;63-64) தழுவிக் களவியற்காரிகையும் (46;7, 47;1) முத்துவீரியமும் (852;11, 13) குறிப்பிடும்.

செவிலி, வெறியாடச் சென்றவழி தோழி, வெறியாட்டெடுப்பதால் தலைவியின் நோய் தீராதென்று அதனை விலக்க இதனால் ஐயுற்ற செவிலி, வெறி விலக்கியதற்குக் காரணம் என்னவென்று வினவுவதை (177;2) அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனை மாறனகப்பொருள் (73;2), இலக்கண விளக்கம் (533;11), சுவாமிநாதம் (109;7) ஆகியனவும் பின்பற்றும்.

நற்றாய், தலைவியின் உடல் வேறுபாடு கண்டு செவிலியை வினவுவாள். தோழி, அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி, இளமைப் பருவத்தே அறிவு முதிர்ந்தாள் என்று தலைவியின் கற்பு மிகுதி தோன்ற நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். இதனைத் தமிழ்நெறி விளக்கம் (22;9), வீரசோழியம் (குறிஞ்.நடை;69), அகப்பொருள் விளக்கம் (178), களவியற்காரிகை (48;1), மாறனகப்பொருள் (75), இலக்கண விளக்கம் (533;14-15), முத்துவீரியம் (852;17-18), சுவாமிநாதம் (110;2) ஆகிய நூல்களும் குறிப்பிடும். இவை பிற அக இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள புதிய கூற்றுகளாகும்.

உடன்போக்கு

உடன்போக்குச் சூழலில் தொல்காப்பியத்தில் (1061) செவிலி நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன மூன்று. வீரசோழியம் (பாலை.நடை.), களவியற்காரிகை (51), முத்துவீரியம் (850) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒன்று என செவிலி கூற்று பிற அக இலக்கணங்களில் வகுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள் என்பதையறிந்த வழி, செவிலி தோழியுடன் பொருந்தி, நற்றாயிடம் சென்று, தலைவி தலைவனுடன் கற்புக்கடம் பூண்டாள் என்று தெரிவித்தலைத் (1061;8-9) தொல்காப்பியம் கூறும். இதனை வீரசோழியம் (பாலை.நடை;13), களவியற்காரிகை (51;8), முத்துவீரியம் (850;28) ஆகியனவும் பின்பற்றும்.

வீழ்ச்சி

தலைவி நெஞ்சமானது உடன்போக்குச் செல்லத் துணிந்ததைக் கருதுமிடத்தும் தலைவன் குடியானது, தன் குடியோடு ஒக்குமென்று ஆராயுமிடத்தும் (1061;10-11) செவிலி கூற்றுகள் நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளன.

கற்பொடு புணர்ந்த கவ்வை

கற்பொடு புணர்ந்த கவ்வையின்போது தொல்காப்பியத்தில் (1061) செவிலி நிகழ்த்தும் கூற்று ஒன்று. பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.23) உரை ஆறு, தமிழ்நெறி விளக்கம் (23), வீரசோழியம் (பாலை.நடை.) ஒவ்வொன்றிலும் மூன்று, அகப்பொருள் விளக்கம் (184, 188) பத்து, களவியற்காரிகை (51, 52) எட்டு, மாறனகப்பொருள் (84, 88) பதினான்கு, இலக்கண விளக்கம் (538)

பத்து, முத்துவீரியம் (850) பதினைந்து, சுவாமிநாதம் (112, 113,114) பன்னிரண்டு என செவிலி கூற்றுகளை வரையறுத்துள்ளன.

வளர்ச்சி

தலைவி, தலைவனுடன் உடன்போனவழிச் செவிலி, அவளைத் தேடிப் பின் செல்லாது இல்லிருந்து வருந்துவாள். இதனை,

"பிரிவின் எச்சத்தும்"

(தொல்.1061;10)

என்று தொல்காப்பியம் சுட்டும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது தலைவி, தலைவனுடன் போதலைக் குறிப்பால் அறிவித்தும் அதனை அறிந்து கொள்ளாத தன் அறிவின்மையைக் கவன்றுரைத்தல்,[17] கொடிய பாலை நிலத்தில் என் மகள் எவ்வாறு செல்வாளோ என்று 'சுரம் நினைந்திரங்கல்,'[18] மென்மையான என் மகளின் திருப்பாதங்கள் கொடிய சுரத்தில் எவ்வாறு சென்றனவென்று 'அடி நினைந்திரங்கல்'[19] என மொழியும். தமிழ்நெறி விளக்கமானது, தலைவியின் உடன்போக்கையறிந்த செவிலி, இச்செயல் இவள் பருவத்திற்குத் தகாது என்றாலும் அவளுக்கு நன்மையாவது அவனை வழிபடுவதன்றிப் பிறிதில்லையென அவளது கற்புநிலைக்கு இரங்குவதைக் (23;2) கூறும். செவிலி, தனக்கு ஆறுதல் கூறுவோருக்கு எதிரே மனம் வருந்திக் கூறல் (184;1-2), இறையனாரகப்பொருள் (சூ.23) உரையைத் தழுவி 'தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தல்' (184;3), இவ்வாறு வருந்திய செவிலி, தலைவி தலைவனுடன் பாலைவனத்தில் செல்வதையொழித்து, விரைவில் மீண்டு வருமாறு செய்யவேண்டுமென்று 'தெய்வத்தை வாழ்த்தல்' (184;4) ஆகியனவற்றை அகப்பொருள் விளக்கம் இயம்பும். களவியற்காரிகையானது செவிலி, தோழியிடம் தலைவியை ஆடிடத்துக்

காணாது வினவல் (51;5), தமிழ்நெறி விளக்கத்தைத் (23;2) தழுவி 'செவிலி இரங்கல்' (51;6), இறையனாரகப்பொருள் (சூ.23) உரையைத் தழுவி 'மென்மை கூறல்' (51;7-8) ஆகியனவற்றை மொழியும். இதனையும் (51;5) அகப்பொருள் விளக்கத்தையும் (184;1-4) தழுவி மாறனகப்பொருள் (84;1-4) குறிப்பிடும். இதனை (84 ; 2-4) அடியொற்றி இலக்கண விளக்கம் (538;1-4) சுட்டும். மாறனகப்பொருளைத் (84 ; 1) தழுவி முத்துவீரியமானது 'பாங்கியைக் கிட்டி மதிநுதலாளை வளர்த்தவள் கேட்டல்,' (850;24-25), களவியற்காரிகையை (51;6-8) அடியொற்றி 'அது கேட்டழுங்கல்,' 'அடிநினைந்திரங்கல்' (850;26,28) இலக்கண விளக்கத்தை (538;3) அடியொற்றிக் 'கவன்றுரைத்தல்' (850;27) ஆகியனவற்றை மொழியும். இதனையும் (850;24-25, 27) இலக்கண விளக்கத்தையும் (538;1-2, 4) தழுவி சுவாமிநாதம் (112;6-8) இயம்பும். இவ்வாறு தொல்காப்பியக் கூற்று பிற அக இலக்கணங்களில் பெற்ற வளர்ச்சி நிலையை இவை காட்டுகின்றன.

புதிய கூற்றுகள்

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்றதையறிந்த செவிலி 'குராமரத்தொடு புலம்பல்,'[20] எதிரில் வரும் முக்கோற்பகவரை நோக்கி, என் மகளொருத்தியும் பிறள் மகன் ஒருவனும் இவ்வழியே செல்லக் கண்டீரோ என்று வினவல்,[21] இவ்வாறு பலரையும் வினவிச் சென்ற செவிலி, தன் மகள் நின்ற நிலையையும் அவனது கைவேலினால் வேங்கை வீழ்ந்து கிடப்பதைக் கண்டு 'வியந்துரைத்தல்'[22] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது குறிப்பிடும். தலைவி சென்ற சுரத்தில் கண்ட பொருள்களுடன் வருந்திக் கூறல், செவிலியிடம் கண்டோர், இவ்விருவரும் எவ்வித இடுக்கணின்றித் தம்முள் இயைந்து செல்கின்றனர். நீயோ மீள்வதே நல்லது என்று கூறவும் செவிலி மீளல்

(23;3-4) ஆகியனவற்றைத் தமிழ்நெறி விளக்கம் விளம்பும். வீரசோழியமானது செவிலி, தலைவியின் இளமை நினைந்து வருந்திய நற்றாயிடம் நீ வருந்தி மெலிய வேண்டாம்; நான் அவள் சென்ற இடம் நோக்கித் தேடுவேன் என்று தலைவியைத் தேட முற்படல் (பாலை.நடை;17), தமிழ்நெறி விளக்கத்தை (23;3-4) அடியொற்றி 'சென்றவள் வினவல்,' 'ஒன்றிய உள்ளமொடு உவந்தவள் மீண்டல்' (பாலை நடை;18-19) என்று மொழியும். அகப்பொருள் விளக்கமானது தலைவி, தலைவனுடன் உடன்போக்குச் சென்றதைச் செவிலியால் அறிந்த நற்றாய், மிகுந்த வருத்தத்துடன் காணப்பட, இதனையறிந்த செவிலி 'ஆற்றாத் தாயைத் தேற்றல்' (188;1), இறையனாரகப்பொருள் (சூ.23) உரையைத் தழுவி 'ஆற்றிடை முக்கோற்பகவரை வினவல்,' 'குரவொடு புலம்பல்' (188;1-2, 4), 'எயிற்றியொடு புலம்பல்,' தலைவியின் காலடிகள் தவிசின்மீது மிதிப்பினும் கொப்புளம் கொள்ளும் இச்சீறடி, இன்னொரு விடலையின் பின் போவதற்கு எவ்வாறு ஆற்றவல்ல ஆயின என்று 'சுவடு கண்டிரங்கல்,' உடன்போக்குச் சென்ற தலைமக்கள் போல அன்பு கலந்து ஆற்றிடை வருவோரைக் கண்டு வினவல், தன் புதல்வியைக் காணாது கவலை கொள்ளல் (188;3-7) ஆகியனவற்றை விளம்பும். வீரசோழியத்தைத் (பாலை நடை ;17-18) தழுவிப் 'பின் சேறல்,' 'சுரத்துற்றாள் இரங்கல்' (52;4-5), சுரத்திடைக் கண்ட புறாவிடம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தல் (52;5-6), அகப்பொருள் விளக்கத்தைத் (188;4) தழுவி 'அடிச்சுவடு உரைத்தல்' (52;6-7), சுரத்தின்கண் வருவோரிடம் வினவல் (52;7-8) என்று களவியற்காரிகை இயம்பும். இதனையும் (52;6-7) அகப்பொருள் விளக்கத்தையும் (188;1-7) தழுவி மாறனகப்பொருள் (88;1-2, 4-5, 7-9) மொழிவதுடன் குரவொடு புலம்பிய நிலையில் களவியற்காரிகையைத் (52;5-6) தழுவி, 'சுள்ளியம் புரவுடன்

உள்ளியுசாவல்' *(88;6)*, புதல்வியைக் காணாத நிலையில், உடன்போக்குச் சென்ற தலைவியைத் தேடிக் காணாது திரும்பிய செவிலி, நற்றாயிடம் தலைவி தலைவனுடன் அவனுடைய ஊருக்குச் சென்றுவிட்டதைக் கூறல், உடன்போக்கில் சென்ற தலைமக்கள் இருவரும் மீண்டு தம் இல்லத்திற்கு வருவதற்கு அருள்புரியுமாறு தெய்வத்தை வேண்டல் *(88;10-12)* என்று விரித்துரைக்கும். இதனைத் *(88;1-2, 4-5, 7-9)* தழுவி இலக்கண விளக்கம் *(538;16-22)* இயம்பும். களவியற்காரிகையை *(52;4)* அடியொற்றி முத்துவீரியமானது 'நாடத் துணிதல்' *(850;32)*, சோதிடரிடம் இம்மனையில் திருமணம் செய்ய அவ்விருவரையும் பெறுவோமாவென்று ஆராய்ந்து கூறுவீரென்று வினவல், 'சுவடு கண்டறிதல்' *(850;34)*, இலக்கண விளக்கத்தைத் *(538;19, 16-17, 20)* தழுவி 'ஏதமுற்றவை கண்டிரங்கி உரைத்தல்', 'குரவொடு வருந்தல்,' 'வேதியர் தம்மை விரும்பி வினாதல்,' 'புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்' *(850;35, 37, 40-41)*, சுரத்திடை வருந்திச் செல்லும் செவிலி எதிரில் வரும் 'வேட்ட மாதரைக் கண்டு வினவல்,' 'திறலருந் தவத்தொடு செல்கின்ற மாவிரதியரை வழியிடை வினவல்' *(850;36,38-39)*, மாறனகப்பொருளை *(88;6)* அடியொற்றி 'புறவொடு புலத்தல்' *(850;37)*, இறையனாரகப்பொருள் *(சூ.23)* உரையைத் தழுவி 'வேங்கை பட்டது கண்டு வியத்தல்' *(850;42-43)* ஆகியனவாக விரித்துரைக்கும். இதனையும் *(850;32, 35, 37, 40-41)* இலக்கண விளக்கத்தையும் *(538;16, 18, 21-22)* தழுவி சுவாமிநாதம் *(113;6-8;114;1-3)* இயம்பும். இக்கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் பெற்ற வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன.

மீட்சி

மீட்சியின்போது அகப்பொருள் விளக்கம் (191), இலக்கண விளக்கம் (540), சுவாமிநாதம் (114) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு இடத்தில் செவிலி கூற்று நிகழ்த்துவதாக மொழியப்பட்டுள்ளது.

புதிய கூற்று

தலைவி, தலைவனுடன் நீண்ட தூரத்திலுள்ள அவனூருக்குச் சென்று சார்ந்தமையைச் செவிலி, நற்றாய்க்கு உணர்த்துவதை அகப்பொருள் விளக்கம் (191;1) இயம்பும். இதனை அடியொற்றி இலக்கண விளக்கமும் (540;1) சுவாமிநாதமும் (114;5-6) குறிப்பிடும்.

தன்மனை வரைதல்

உடன்போய் மீண்டு வந்த தலைவன், தலைவியைக் கொண்டு சென்று தன் மனையில் வரைந்து கொள்ளுதல் தன்மனை வரைதல் எனப்படும். இத்தகைய சூழலின்போது செவிலி நிகழ்த்தும் கூற்றாக அகப்பொருள் விளக்கம் (194), மாறனகப்பொருள் (92), இலக்கண விளக்கம் (543), சுவாமிநாதம் (115) ஆகியவை முறையே ஒன்றினை வரையறுக்கும்.

புதிய கூற்று

உடன்போய் மீண்ட தலைவன், தலைவியைத் தன்னூரின்கண் மணந்துகொண்டு, மீண்டு வருவான். அப்போது நற்றாய், தலைவியைத் தன் மனையில் மணம் செய்யும் விருப்பினால் செவிலியை வினவுவாள். அப்போது உடன்போக்கில் சென்ற தலைவன், தலைவியைத் தனது ஊரில் திருமணம் செய்துகொண்டு இன்று இம்மனைக்கு வருவர் என்று சில தூதர் கூறிய செய்தியைத் தோழியின் மூலம் அறிந்த செவிலி, நற்றாய்க்கு உணர்த்துவதாக (194;3-4) அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனையே மாறனகப்பொருள் (92;4-5), இலக்கண

விளக்கம் (543;3-4), சுவாமிநாதம் (115;6) ஆகிய நூல்களும் பின்பற்றுகின்றன.

இல்வாழ்க்கை

தலைமக்கள் இல்லின்கண் வாழும் வாழ்க்கையின் மேன்மையைக் கூறுதல் இல்வாழ்க்கை. இச் சூழலில் தொல்காப்பியம் (1099) மொழியும் கூற்றுகள் இரண்டு. பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.53) உரையில் ஒன்று, அகப்பொருள் விளக்கத்தில் (203) மூன்று, களவியற்காரிகையில் (53, 54) மூன்று, மாறனகப்பொருளில் (100) ஒன்று, இலக்கண விளக்கத்தில் (552) மூன்று, முத்துவீரியத்தில் (854) ஆறு, சுவாமிநாதத்தில் (118) மூன்று என செவிலி கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வீழ்ச்சி

கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்தினும் தன் குலத்திலுள்ளார் வழிகொள்ளுமாறு நல்லவற்றை உரைக்குமிடத்தும் இவ்வாறு நல்லவற்றை உரைப்பதோடு மட்டுமின்றித் தீயவற்றைக் கடியுமிடத்தும் (1099) செவிலி கூற்றுகள் நிகழ்த்துவாள். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

கற்புக் காலத்தில் கடிமனை சென்ற செவிலி, நற்றாயிடம் நின் மகளுடைய இல்வாழ்க்கைக்கு உவமை கூறின் , நின்னுடைய இல்வாழ்க்கை நலமல்லது வேறு உவமை இல்லையென்றுரைப்பதை[23] இறையனாரகப்பொருள் (சூ.53) உரையானது மொழியும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கமானது ‘மணமனைச் சென்று வந்த செவிலி

பொற்றொடி கற்பியல் நற்றாய்க்கு உணர்த்தல்' (203;9-10), தலைவியின் கற்பு அந்திக்காலத்து வடமீனையும் வெல்லுமென்று 'வாழ்க்கைத் தன்மை உணர்த்தல்,' தலைவன் வேந்தர்க்குற்றுழிப் பிரிந்தாலும் வினைமுடித்து பிறிதோரிடத்துத் தங்காதவன் ; தலைவியும் தலைவனையே தெய்வமாக நினைப்பாள் என்று இருவர் காதலையும் அறிவித்தல் (203;11-12) என்று கூறும். செவிலி, உடன்போக்கில் சென்ற தலைவியின் மீது நற்றாய் வைத்திருக்கும் பேரன்புத்திறம் கூறிப் புகழ்தல் (53;8), அகப்பொருள் விளக்கத்தைத் (203;12, 9-10) தழுவிக் 'கற்புநிலை விளம்பல்,' 'மகள் நிலை கூறல்' (54;1-4) என்று களவியற்காரிகை இயம்பும். இந்நூலும் (54;1-4) அகப்பொருள் விளக்கமும் (203;11) கூறிய மூன்று கூற்றினையும் தழுவி 'நன்னுதற் பயந்த நற்றாய்க்கு அவள் சென்றதைப் பகர்தல்' (100;10-11) என்று ஒரே கூற்றாக மாறனகப்பொருள் கூறும். களவியற்காரிகையையும் (54;1-4), அகப்பொருள் விளக்கத்தையும் (203;11) பின்பற்றி இலக்கண விளக்கம் (552;9-12) குறிப்பிடும். இதனைத் (552;9-12) தழுவி முத்துவீரியமானது 'வாழ்க்கை நலங் கூறல்,' 'கற்புப் பயப்புரைத்தல்,' 'காதல் மருவுரைத்தல்' (854;3,5), தலைவன், தலைவி மீது வைத்திருக்கும் காதல் மிகுதியைக் கூறல், 'கற்பறி வித்தல்,' இவர்களது கலவியின்பமானது மாறுபடாது என்றல் (854 ; 4,6) ஆகியனவாக மொழியும். இதனை (854;3,5) அடியொற்றி சுவாமிநாதம் (118;6-8) குறிப்பிடும். இக்கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மட்டும் வளர்ச்சி பெற்றுள்ளன.

நற்றாய்

நற்றாய், தலைவியைப் பெற்றெடுத்த தாய் ஆவாள். இவள் தலைவியின் தோற்ற வேறுபாடுகளைக் கண்டு, காரணத்தை அறியக் கூடியவள். நற்றாயின் இயல்புகளை ந.சுப்புரெட்டியார், "தன் மகளது

களவொழுக்கத்தைச் செவிலியின் மூலந்தான் இவள் அறிவாள். தலைவியின் கரந்த ஒழுக்கத்தின் விளைவால் அவளுடைய உடலில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு இவளும் செவிலித்தாயும் வெறியாடும் வேலன், கட்டுவிச்சி முதலியவர்களைக் கொண்டு அவ்வேறுபாடுகளின் காரணத்தை ஆராய்வர்”[24] என்பர்.

கூற்று-வரையறை

தொல்காப்பியம் நற்றாயைக் கூற்றுக்குரியோராக வரையறுக்கவில்லை. ஆனால் நற்றாய் நிகழ்த்தும் கூற்றுகளாகப் (982) பத்தினைக் குறிப்பிடும். செவிலிக்கு உரியனவாகக் கூறப்படும் பதின்மூன்று (1061) கூற்றுகள் நற்றாய்க்கும் பொருந்தி வரும் என்று இயம்பும். எனவே, நற்றாய் நிகழ்த்தும் கூற்றுகள் இருபத்து மூன்று.

சூழல்

நற்றாய், அறத்தொடு நிற்றல், கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன்மனை வரைதல், உடன்போக்கிடையீடு, பரத்தையிற்பிரிவு ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்துவாள்.

அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் சூழலில் பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.28) உரை ஒன்று, தமிழ்நெறி விளக்கம் (22) இரண்டு, வீரசோழியம் (குறிஞ்.நடை.), களவியற்காரிகை (48), மாறனகப்பொருள் (76), சுவாமிநாதம் (110) ஒவ்வொன்றிலும் நற்றாய், ஒவ்வொரு இடத்தில் கூற்று நிகழ்த்தற்குரியள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூற்றுகள்

தலைவன் வரைவு மறுக்கப்பட்டான் என்பதை உணர்ந்த தலைவி, ஆற்றாளாய்த் திகழ்வாள். அப்போது தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்க, செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய், அவள் தந்தை, தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்பதை[25] இறையனாரகப்பொருள் (சூ.28) உரை இயம்பும். இதனைத் தமிழ்நெறி விளக்கம் (22;11) குறிப்பிடுவதோடு இளையோர், வரைவை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தலையும் (22;12) மொழியும்.

செவிலி தலைவியின் வேறுபாட்டிற்கான காரணத்தைக் கூற, நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்றலை வீரசோழியம் (குறிஞ்.நடை;70) குறிப்பிடும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை (48;1-2), மாறனகப்பொருள் (76) ஆகியவை மொழியும். நற்றாய், தலைவியிடம் கணப்படும் வேறுபாடு கண்டு செவிலியை வினவுவதைச் (110;1) சுவாமிநாதம் சுட்டும்.

கற்பொடு புணர்ந்த கவ்வை

கற்பொடு புணர்ந்த கவ்வையின்போது தொல்காப்பியத்தில் (982) நற்றாய் நிகழ்த்தும் கூற்றுகள் பத்து. தமிழ்நெறி விளக்கம் (23) ஒன்று, வீரசோழியம் (பாலை.நடை.) இரண்டு, அகப்பொருள் விளக்கம் (185, 186) ஒன்பது, களவியற்காரிகை (52) மூன்று, மாறனகப்பொருள் (85, 86) பத்து, இலக்கண விளக்கம் (538) ஒன்பது, முத்துவீரியம் (850) ஐந்து, சுவாமிநாதம் (113, 116) எட்டு எனப் பிற அக இலக்கணங்களில் நற்றாய்க்குரிய கூற்றுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாற்றமின்மை

உடன்போக்கில் சென்ற தலைவி மீண்டு வரப் புள்நிமித்தம் பார்த்தல், வழியினது தன்மை கூறல் ஆகியவை தொல்காப்பியத்தில் கூறப்பட்டவாறே பிற அக இலக்கணங்களிலும் இயம்பப்பட்டுள்ளன.

உடன்போக்கில் சென்ற தலைவி, மீண்டு வருவதற்குப் புள் நிமித்தம் போன்றவை பார்க்குமிடத்து நற்றாய் கூற்று நிகழ்த்துவாள். இதனை,

"மன்னு நிமித்தம்"

(தொல்.982;2)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனையே உடன்போக்கில் சென்ற தலைவியை நற்றாய் தேடிச் செல்ல முற்படுவாள். அப்போது காகத்தை நோக்கி, உடன்போக்கில் சென்ற அவ்விருவரும் இப்பொழுதே வரும் வண்ணம் நீ கரைவாயாக; அவ்வாறு கரைந்தால் நான் உன்னை வழிபடும் கடவுளாகப் போற்றிச் சிறந்த உணவினைத் தருவேன் என்றுரைப்பதாக அகப்பொருள் விளக்கம் (186;1), மாறனகப்பொருள் (86;1), இலக்கண விளக்கம் (538;9), முத்துவீரியம் (850;32-33), சுவாமிநாதம் (113;3) ஆகியவை இயம்பும்.

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்ற கொடிய வழி கருதி அச்சம் சார்ந்தவிடத்து நற்றாய் கூற்று நிகழ்த்துவதைத் (982;3) தொல்காப்பியம் சுட்டும்.

இதனை உடன்போக்கில் செல்லும் தலைவி, பாலை நிலத்தில் கொடிய விலங்குகள் எழுப்பக் கூடிய குரலைக் கேட்டு அஞ்சும் தன்மையை நினைத்து நற்றாய் அச்சமுற்று இரங்கல் என்று அகப்பொருள் விளக்கம் (186;4), மாறனகப்பொருள் (86;4-5), இலக்கண விளக்கம் (538;12), சுவாமிநாதம் (113;5) ஆகியன குறிப்பிடும்.

வளர்ச்சி

நற்றாய் தன்னையும் தலைவனையும் தலைவியையும் குறித்துக் கூற்று நிகழ்த்தல், உடன்போக்கில் சென்ற இருவருக்கும் நன்மை பற்றிக்

கருதுதல், தோழியிடத்துப் புலம்புதல் ஆகிய கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

தலைவியின் உடன்போக்கினைச் செவிலி வழியாக அறிந்த நற்றாய், தன்னையும் தலைவனையும் தலைவியையும் குறித்துக் கூற்று நிகழ்த்துவதைத் (982;1) தொல்காப்பியம் இயம்பும்.

இதனைத் தமிழ்நெறி விளக்கமானது தலைவியின் உடன்போக்கினைச் செவிலியின் மூலம் அறிந்த நற்றாய், தன்னைத் துறந்து ஒரு அயலான் பின்னால் சென்றனளே என்று வருந்துவதை (23;2) இயம்பும். இதனைத் தழுவி வீரசோழியம் 'ஈன்றோள் இரங்கல்' (பாலை நடை ; 14), பல ஆண்டுகள் தலைவியுடன் தொடர்பு கொண்டிருந்த தம் நிலை குறித்து வருந்தல் (பாலை நடை;23) என்று சுட்டும். அகப்பொருள் விளக்கமானது அயலாரொடும், தலைவி பழகி விளையாடிய இடங்களொடும் வருந்திப் புலம்பல் (185;3) என்று கூறும். வீரசோழியத்தை (பாலை நடை;14) அடியொற்றிக் களவியற்காரிகை 'நற்றாய் இரங்கல்' (52;1) என்று சுட்டும். அகப்பொருள் விளக்கத்தை (185;3) அடியொற்றி மாறனகப்பொருளும் (85;3) இலக்கண விளக்கமும் (538;7) குறிப்பிடும். களவியற்காரிகையைத் (52;1) தழுவி முத்துவீரியம் 'மடவரல் போக வாடியுரைத்தல்' (850;29), இவ்வாறு பிரிவாற்றாது வருந்தியவள் 'என்னுடைய அன்னை போயினள்; இனி என்னைப் பருந்து கொன்றுவிடும் என்ற கிளியின் சொல்லானது தலைவியின் போக்குடன் என் நெஞ்சை அறுக்கின்றது என்று 'கிளி மொழிக்கு இரங்கல்' (850;30) என இயம்பும். இதனைத் (850;29) தழுவி சுவாமிநாதம் (113;1) சுட்டும்.

நற்றாய், தலைவன் தலைவியருக்கு நன்மை பற்றிக் கருதுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் (982;3) தொல்காப்பியம் குறிப்பிடும்.

இதனை நற்றாய், தலைவி சென்ற கற்கள் நிறைந்த சுரமானது வெம்மை தணிந்து குளிர வேண்டுமென்றல், தலைவியின் மென்மைத் தன்மைக்கு இரங்கல், இளமைத் தன்மைக்கு உளமெலிந்து இரங்கல் (186;1-3) என்று அகப்பொருள் விளக்கம் மொழியும். நற்றாய், கதிரவனை நோக்கி எனது மகளை நின் கதிர்களால் வாட்டாது தாமரை மலர்போல் மலர்த்துவாயாக என்று இரந்து கூறல் (52;1-2), அகப்பொருள் விளக்கத்தைத் (186;3) தழுவி 'அருமா மகளுக்கு உரைத்தல்' (52;2-4) ஆகியனவற்றைக் களவியற்காரிகை இயம்பும். இவற்றையும் அகப்பொருள் விளக்கத்தையும் (186;1-2) அடியொற்றி மாறனகப்பொருள் (86;1-4) குறிப்பிடும். இதனைத் (86;3-4) தழுவி இலக்கண விளக்கம் (538;9-11) உரைக்கும். மாறனகப்பொருளைப் (86;1-2) பின்பற்றி முத்துவீரியமானது 'கிளர்சுடர்ப் பராய்தல்' (850;30), இலக்கண விளக்கத்தை (538;11) அடியொற்றி 'அளிபெறு பருவத்திற்கு அவள் கவன்றுரைத்தல்' (850;31) என்று இயம்பும். இதனையும் (850;31) இலக்கண விளக்கத்தையும் (538;9-10) அடியொற்றி சுவாமிநாதம் (113;3-5) விளம்பும்.

நற்றாய், தலைவி உடன்போகியவழித் தோழியிடத்துப் புலம்புவதைத் தொல்காப்பியம்,

"தோழி தேஎத்தும்" (தொல்.982;6)

என்று சுட்டும்.

இதனை அகப்பொருள் விளக்கமானது செவிலி, தலைவியின் உடன்போக்கினை நற்றாய்க்குச் சொல்ல 'தோழி தன்னொடும்,' 'தோழியர் தன்னொடும்' புலம்புவதைக் (185;1-2) கூறும். இதனையே மாறனகப்பொருளும் (85;1-2) இலக்கண விளக்கமும் (538;5-6) இயம்பும். நற்றாய் அயலார் தோழியொடு புலம்பல் (113;2) என்றுரைப்பதோடு இலக்கண விளக்கத்தையும் (538;5-6) தழுவி சுவாமிநாதம் (113;3) மொழியும்.

வீழ்ச்சி

நற்றாய், பிறர் தம்முள் கூறும் மொழிப் பொருளாகிய விரிச்சியை நிமித்தமாகக் கொள்ளல்,

உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினார் ஆவேசித்துக் கூறும் சொல்லின்போது கூற்று நிகழ்த்தல்,

தலைவன் தலைவியர்க்கு ஏற்படக் கூடியத் தீமை பற்றிக் கருதுதல்,

தலைவி முன்பு இத்தன்மையளாக இருந்தாள், இப்பொழுது இத்தன்மையளானாள், இனி, எத்தன்மையள் ஆவாளோ என்று முக்காலமும் ஒருங்கு தோற்றுவித்து விளக்குதல்,

தலைவி உடன்போகியவழி கண்டோரிடத்துப் புலம்புதல் (982;2-7) ஆகிய சூழல்களில் நற்றாய் கூற்றுகள் நிகழ்த்துதல் தொல்காப்பியத்தில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன.

மீட்சி

உடன்போக்கில் சென்ற தலைவனும் தலைவியும் திரும்பி வருதல் மீட்சியாகும். இத்தகைய சூழலில் இறையனாரகப்பொருள் (சூ.23) உரை, அகப்பொருள் விளக்கம் (191), களவியற்காரிகை (53) ஒவ்வொன்றிலும் ஒரு கூற்றும் மாறனகப்பொருளில் (91) இரண்டும் இலக்கண விளக்கம் (540), சுவாமிநாதம் (115) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கூற்றும் வரையறுக்கப்பட்டுள்ளன.

தலைவனுடன் உடன்போக்கில் சென்ற தலைவி, வருகின்றாள் என்பதைக் கேட்ட நற்றாய், தலைவன் என் மகளை நம் நெடுநகர்க்குக் கொண்டு வருமோ தன் கடிமனைக்குக் கொண்டு செல்லுமோ என அவனது உள்ளக் குறிப்பை உணர்வதற்கு 'வேலனை வினவுவதை'[26] இறையனாரகப்பொருள் (சூ.23) உரை மொழியும். இதனை அடியொற்றி அகப்பொருள் விளக்கமும் (191;6-7), களவியற்காரிகையும் (53;7) சுட்டும். இதனைத் தழுவி மாறனகப்பொருள் (91;7-8)

குறிப்பிடுவதுடன் 'இறைவனைப் பயந்தவ ளெமரில்வரைந்தமை யிறைவி நற்றாயுற வெய்தவ ணென்றல்' (91;1-2) என்று கூடுதலாக ஒன்றினை இயம்பும். இதனைத் தழுவி (91;7-8) இலக்கண விளக்கமும் (540;6-7) சுவாமிநாதமும் (115;1-2) குறிப்பிடும். இக்கூற்றுகள் தொல்காப்பியம் குறிப்பிடாத புதிய கூற்றுகளாகும்.

தன்மனை வரைதல்

தன்மனை வரைதலின்போது பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.23) உரை, அகப்பொருள் விளக்கம் (194), களவியற்காரிகை (54), மாறனகப்பொருள் (92), இலக்கண விளக்கம் (543), சுவாமிநாதம் (115) என ஒவ்வொன்றிலும் நற்றாய் ஒரு இடத்தில் கூற்று நிகழ்த்துவதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

தலைவன், தன்னகத்தே எம் தலைவியைக் கொண்டு செல்லினும், தலைவனின் தாய் எம் அகத்தே அவர்களுக்குக் கடிமணம் செய்ய ஒப்புக்கொள்வாளோ என நற்றாய், செவிலியை வினவுவதை[27] இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது மொழியும். இதனையே அகப்பொருள் விளக்கம் (194;1-2) குறிப்பிடும். களவியற்காரிகையானது தலைவன், தன்மனைக்கண் வரைந்து கொண்டான் என்பதறிந்து மொழிதலை (54;1) இயம்பும். அகப்பொருள் விளக்கத்தைத் (194;1-2) தழுவி மாறனகப்பொருள் (92;1-2), இலக்கண விளக்கம் (543;1-2), சுவாமிநாதம் (115;4-5) ஆகியனவும் மொழியும். இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் மட்டும் இடம்பெற்றுள்ள புதிய கூற்றுகளாகும்.

உடன்போக்கிடையீடு

உடன்போக்கிடையீட்டுச் சூழலில் நற்றாய், சுவாமிநாதத்தில் (116) ஓரிடத்தில் கூற்று நிகழ்த்துவதாக வரையறுக்கப்பட்டுள்ளது. தலைவியின் உடன்போக்கினை அறிந்த நற்றாய் தமருக்கு

மொழிவதாகச் (116;5) சுவாமிநாதம் இயம்பும். இது தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றாகும்.

பரத்தையிற் பிரிவு

இச்சூழலில் நற்றாய் தமிழ்நெறி விளக்கத்தில் (25) ஓரிடத்தில் கூற்று நிகழ்த்துவதாக இயம்பும். பரத்தையிடத்துப் பிரிந்த தலைவன், புதல்வனை வாயிலாகக் கொண்டு புகுந்தும் தலைவி ஊடல் தணியாதவளாகக் காணப்படுகிறாள் என்று 'தாய் கண்டுரைத்தலைத்' (25;5) தமிழ்நெறி விளக்கம் மட்டும் மொழியும். இது தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றாகும்.

செவிலி நற்றாய் இருவர்க்கும் பொதுவானது

செவிலியும் நற்றாயும் அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை ஆகிய சூழல்களில் கூற்று நிகழ்த்துவதற்குரியர் .

அறத்தொடு நிற்றல்

இச்சூழலில் செவிலியும் நற்றாயும் தொல்காப்பியம் (1061), வீரசோழியம் (குறிஞ்.நடை.) ஒவ்வொன்றிலும் முறையே ஒரு இடத்தில் கூற்று நிகழ்த்துவோராக வரையறுக்கப்பட்டுள்ளனர்.

மாற்றமின்மை

கட்டுவிச்சியும் வேலனும் கட்டு வைத்தும் கழங்கு வைத்தும் கூறிய சொற்கேட்டு, செவிலியும் நற்றாயும் தம்முட் பொருந்தி வெறியாட்டெடுக்கக் கருதுவர். இதனை,

"கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" (தொல்.1061;3-4)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும். இதனையே வீரசோழியமானது 'நற்றாய், செவிலி என்றிவர் நன்னுதற்கு உற்றதை அறியாது நற்றிறம் படர்தல்' (குறிஞ்.நடை ; 61-62) என்று இயம்பும்.

வீழ்ச்சி

செவிலி, அறத்தொடு நிற்றல் (1061 ; 1-2, 5-7), உடன்போக்கு (1061 ; 8-11), கற்பொடு புணர்ந்த கவ்வை (1061 ; 10) ஆகிய சூழல்களில் நிகழ்த்தும் பன்னிரண்டு கூற்றுகள் நற்றாய்க்கும் பொருந்திவரும். இக் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

உடன் போக்கு

உடன்போக்குச் சூழலில் செவிலியும் நற்றாயும் நிகழ்த்தும் கூற்றாகத் தமிழ்நெறி விளக்கம் (23) ஒன்றினைக் குறிப்பிடும்.

உடன்போக்கில் சென்றோர் திரும்பி வருதலை அறிந்த தாயர் கூற்று நிகழ்த்துவதைத் (23 ; 7) தமிழ்நெறி விளக்கம் மட்டும் குறிப்பிடும் புதிய கூற்றாகும்.

பாணன்

பாணன் என்பவன் பண்ணுக்கு உரியவராக யாழிசைத்துப் பாடவல்லவன். தலைவன் தலைவியரது ஊடற்காலத்தில் ஊடலைத் தீர்த்து வைக்கக் கூடியவன். இவனைப் பற்றி மு.இராகவையங்கார், "பண்ணுக்கு உரியரானமையால், இவர்க்கு இப்பெயர் வழங்கியது. இவர் யாழ்வாசினை முதலியவற்றால் தமிழ்த் தலைவரை மகிழ்வுறுத்துபவர்"[28] என்றும் வெ.வரதராசன், "பண் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்து முதல் நீண்டதுதான் பாண் என்பதாகும். பாண் என்பது பாண்குடி, பாண்சேரி, பாண்கடன் எனப் பல சொற்களின் வேர்ச்சொல்லாகும். பாண் என்பது 'அர்' என்னும் பலர்பால் ஈறு பெற்றுப் பாணர் என்றாயிற்று. பண் இசைப்போர் பாணர் எனத் தொழிலாகு பெயராகவோ பண்பாகு பெயராகவோ அமைந்து உள்ளது"[29] என்றும் இயம்புவர். ந.சுப்புரெட்டியார், "பாணன் அகத்திணை நாடகத்தில் வரும் சிறுமாந்தர்களுள் ஒருவன். பண் என்பது, இசை. இசையில் வல்லுநனாக இருப்பவன் பாணன். யாழினை இயக்கி அதனைப் பக்க வாத்தியமாகக் கொண்டு பாடவல்லவனாதலின்

இவன் யாழ்ப்பாணன் எனவும் வழங்கப்பெறுவான்"[30] என்றும் நா.பாலகிருட்டினன், "யாழிசைத்துப் பாடிப் பிறரை மகிழ்விப்பதில் வல்லவன் பாணன்"[31] என்றும் மொழிவர்.

கூற்று - வரையறை

பாணன், கற்பில் (1446) கூற்றுக்குரியோராகவும் தலைமக்கள் வாழ்க்கையில் தொடர்புடைய வாயில்களுள் (1139) ஒருவராகவும் திகழ்பவன். கூத்தருக்குக் கூறப்பட்ட கூற்றுகளுள் இறுதி இரண்டினைப் (1115) பாணருக்கு உரியனவாகத் தொல்காப்பியம் குறிப்பிடும்.

சூழல்

பாணன், பரத்தையிற் பிரிவு, வினைவயிற்பிரிவு ஆகிய சூழல்களில் கூற்று நிகழ்த்துதற்குரியன்.

பரத்தையிற் பிரிவு

பரத்தையிற் பிரிவின்போது பாணன் நிகழ்த்தும் கூற்றுகளாக இறையனாரகப்பொருள் (சூ.40, 46) உரையில் இரண்டு, தமிழ்நெறி விளக்கம் (25), மாறனகப்பொருள் (103), முத்துவீரியம் (861) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒன்று என வரையறுக்கப்பட்டுள்ளன.

தலைவன், பரத்தையரிடத்துத் தொடர்புள்ளதையறிந்த தலைவி, அவன் மீது ஊடல் கொள்வாள். அப்போது பாணன், தலைவனுக்கு வாயில் வேண்டி வர, தலைவி வெகுண்டு வாயில் மறுப்பாள். அப்போது தலைவியிடத்து வாயில் பெறாத 'பாணன் புலந்துரைப்பதை'[32] இறையனாரகப்பொருள் (சூ.40) உரை மொழியும். இதனையே தமிழ்நெறி விளக்கம் (25;1), மாறனகப்பொருள் (103;11), முத்துவீரியம் (861;27) ஆகிய நூல்களும் பின்பற்றும்.

பாணன், தலைவி எக்காலத்தும் ஒரு தன்மையள், தலைவன் தன்மாட்டு உறைந்த காலத்துத் தக்காளாய், பரத்தையர் மாட்டுச் சென்று

உறைந்த காலத்துத் தகாளாய்க் காணப்படுவாளோ எனின் ஆகாள் என்று அவளது பெருமை உணர்த்துவதை[33] இறையனாரகப்பொருள் (சூ.46) உரை மொழியும்.

இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

வினைவயிற் பிரிவு

இச்சூழலில் இரு இடங்களில் பாணன் கூற்றுகள் நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் (1115) சுட்டும். தலைவன் வினைவயிற் பிரிந்தவிடத்துப் பாணன் தலைவியிடம் கூறுதல், தலைவியின் நிலையை வினையிடத்துத் தலைவனிடம் மொழிதல் (1115) என்பன அக் கூற்றுகள் ஆகும். இவை தொல்காப்பியத்தில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன. பிற்கால அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

கூத்தர்

கூத்தர், நாடகக் கலையில் வல்லவர்களாகத் திகழ்பவர். தலைவன் தலைவியர் கடைப்பிடித்து ஒழுக வேண்டியதை, அவர்கள் மனத்துட்படுமாறு நடித்துக்காட்டி நல்லவழிப்படுத்தக் கூடியத் தன்மை வாய்ந்தவர். இத்தகைய தன்மை வாய்ந்த கூத்தரைப் பற்றி இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, "கூத்தர்-நாடகர்"[34] என்று இயம்பும். புலவர் குழந்தை, "கூத்தர் - கூத்தாடுவோர், கூத்து - நாடகம், பழந்தமிழ்க் கூத்தர்கள் முத்தமிழும் உணர்ந்த மூதறிவாளர்களாவர்; மக்கள் கடைப்பிடித் தொழுகவேண்டிய நல்லனவற்றையும், விலக்க வேண்டிய தீயனவற்றையும் அப்படியே மனத்தில் பதியுமாறு நடித்துக்காட்டி, மக்களை நல்வாழ்வு வாழ்வித்து வந்த நல்லோர்கள். அதனாலேயே கூத்தர் தலைமகட்கு இங்ஙனம் அறிவு கொளுத்தும் தகுதியுடையராயினர்"[35] என்று மொழிவர். மு.இராகவையங்கார், "இவர் நாடகமாடித் தமிழ் மக்களை மகிழ்விப்பவர்"[36] என்றும் ந.சுப்புரெட்டியார், "கூத்தர் என்பார், தலைவனுக்கு இன்றியமையாத

கூத்து நடத்தும் ஆண்கள்"[37] என்றும் நா.பாலகிருட்டினன் "நாடகக் கலையில் வல்லவர்கள் கூத்தர்"[38] என்றும் உரைப்பர்.

கூற்று-வரையறை

தொல்காப்பியம், கூத்தர் நிகழ்த்தும் (1114, 1115) கூற்றுகளாகப் பத்தினை இயம்பும். இவர் கற்பில் (1446) கூற்று நிகழ்த்துவதற்கு உரிமை படைத்தவராகவும் வாயில்களுள் (1139) ஒருவராகவும் திகழ்வர்.

சூழல்

கூத்தர், ஊடலின்போது கூற்றுகள் நிகழ்த்துவர்.

ஊடல்

ஊடலின்போது தொல்காப்பியத்தில் (1114, 1115) கூத்தர் நிகழ்த்தும் கூற்றுகள் பத்து என வரையறுக்கப்பட்டுள்ளன. கூத்தர் ஊடலின்போது தலைவன் தலைவியிடம் முன்பு அன்பு மிக்க இருவர் இன்பம் நுகர்ந்தவற்றை உரைத்தல்,

தலைவன் தலைவியின் நுகர்ச்சியினைப் புகழ்ந்து கூறுதல்,

தலைவியிடம் இவ்வூடல் இல்லறவொழுக்கத்திற்கு இயல்பன்று என்றும் அன்புடையார் செய்யாரென்றும் மனைக்கிழத்தியர் செயலன்று என்றும் பலநெறியாலும் தலைவன்மீது கொண்ட ஊடலின்றுந் தலைவியை மீட்டல்,

தலைவி, தலைவன்மீது கொண்ட ஊடல் தணிந்தால் பயனிதுவெனவும் நன்மை பயக்குமெனவும் வாழ்க்கையின் உறுதிப் பயன்களைக் கூறுதல்,

தலைவி, மெய்யின்கண் ஊடுதற்கு மிக்கத் துணிவினால் கெட்ட அறிவை, இது தக்கதன்றென அறிவுறுத்தி நல்வழிப்படுத்தல்.

தவறு செய்தால், இவ்வாறு குற்றம் பயக்குமென காரணங் காட்டிக் கூறுதல்.

கழிகாமத்தால் கெட்டாரை எடுத்துக்காட்டிக் கூறுதல்.

இவ்வாறு உளதாகிய அணியைப் புலரவிடுகின்றதனாற் பயன் என்னவெனக் கூறுதல் (1114),

தலைவன், வினைவயிற் பிரிந்தவிடத்துத் தலைவியிடம் கூறுதல்,

தலைவியின் நிலையை வினையிடத்துத் தலைவனிடம் மொழிதல் (1115) என்பன அக் கூற்றுகள் ஆகும். இவை தொல்காப்பியத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளன. பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

விறலி

விறலி ஆடலும் பாடலும் நிகழ்த்த வல்லவள். இவளது தன்மையை நச்சினார்க்கினியர், "தாமே ஆடலும் பாடலும் நிகழ்த்தும் விறலியர்"[39] என்றும் விறலி என்பதன் விளக்கத்தினை க.வெள்ளைவாரணன், "சங்க காலத் தமிழ் மகளிர், நாடகத் தமிழிலும் நல்ல பயிற்சி பெற்று விளங்கினர். உள்ளக் குறிப்பினைத் தம் உடம்பிற் றோன்றும் மெய்ப்பாடுகளால் புலப்படுத்தும் முறை நாடகத்தின் பாற்பட்டதாகும். இம்முறையினை 'விறல்' என்ற சொல்லாற் குறிப்பிடுவர். விறல்பட ஆடுந்திறம் மகளிர்க்கே உரியதாகும். விறல்பட ஆட வல்லவள் 'விறலி' என வழங்கப்பெற்றாள்"[40] என்றும் இயம்புவர். ந.சுப்புரெட்டியார், "விறலியர் என்பார், ஆடலும் பாடலும் நிகழ்த்தும் ஒருவகைச் சாதிப்பெண்டிர்"[41] என்று மொழிவர்.

கூற்று - வரையறை

விறலி கற்பில் (1446) கூற்றுக்குரியோராகவும் வாயில்களுள் (1139) ஒருவராகவும் தொல்காப்பியம் இயம்பும். ஆனால் தொல்காப்பியமும் பிற அக இலக்கணங்களும் இவளுக்குரிய கூற்றுகளைக் கூறவில்லை.

பரத்தை

பரத்தையர், களவொழுக்கத்தில் ஈடுபடாமலும் திருமணம் செய்துகொள்ளாமலும் காமத்திற்காக ஆடவருடன் கூடிவாழும்

பெண்டிராவர். இவளைப் பற்றி இளம்பூரணர், "பரத்தையராவார் யாரெனின் அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகு மிளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார்"[42] என்பர்.

கூற்று-வரையறை

தொல்காப்பியம் (1446) பரத்தையைக் கற்பில் கூற்றுக்குரியோராகக் குறிப்பிட்டு, இவளுக்குரிய கூற்றுகளைக் கூறவில்லை.

சூழல்

பரத்தை, பரத்தையிற் பிரிவுச் சூழலில் கூற்று நிகழ்த்துதற்குரியவள்.

பரத்தையிற் பிரிவு

இத்தகைய சூழலில் பரத்தை நிகழ்த்தும் கூற்றுகளாக இறையனாரகப்பொருள் (சூ.47) உரை, அகப்பொருள் விளக்கம் (205), மாறனகப்பொருள் (102), இலக்கண விளக்கம் (554) ஆகியனவற்றில் ஒவ்வொரு இடங்களிலும் முத்துவீரியத்தில் (861) மூன்றும் சுவாமிநாதத்தில் (119, 120) இரண்டும் என வகுக்கப்பட்டுள்ளன.

தலைவி, பூத்தகாலை நீராடியபின் சேடியைப் பரத்தையர் சேரிக்கு அனுப்ப, அவளைக் கண்டு பரத்தையர் பழிப்பதை (205;9) அகப்பொருள் விளக்கம் விளம்பும். இதனையே மாறனகப்பொருளும் (102;9) இலக்கண விளக்கமும் (554;9) பின்பற்றும். முத்துவீரியமானது புனலாட்டு விழாவிற்கு வரும் தலைவன் தேர்வரவு கண்டு பரத்தையர் தம்முள் மகிழ்தல், தலைவனுடன் புனலாடுகின்ற பரத்தையர் அரமங்கையரைப் போலப் புனலாடுபவர்களே, நாம் எல்லாம் இத்தன்மையேமாக, வானர மங்கையரென்று கூறுமாறு மற்றொருத்தி வந்து இவனை அழைத்துச் செல்லக் கொடுத்துப் பின் வருந்தாது

முன்னுறக் காப்போமெனத் தம்முளுரைத்தல், இவ்வாறு பரத்தையர் தம்முள் கூறுவன கேட்டு, தலைவனை அணுகும் பரத்தையர்மாட்டு இவன் அருள் செல்லாது விலக்குவேன், அவ்வாறு செய்யேனாயின் என்மாட்டுத் தலைவனைத் தந்து அழுகின்ற மனைக்கிழத்தி ஆகின்றேன் எனப் பரத்தையர் தலைவி 'தன்னை வியந்துரைத்தல்' (861;16-17) என்பனவற்றை இயம்பும். இலக்கண விளக்கத்தைத் (554;9) தழுவி சுவாமிநாதம் (119;8) மொழிவதுடன் பரத்தையர் தலைவி நீராடியபின் தங்கள் சேரியில் தலைவன் இருத்தல் உலக முறைக்கு இயலாதென்று விடுத்தலைக் (120;1) கூடுதலாக மொழியும்.

பரத்தை தன்னைப் புகழ்ந்துரைப்பதை இறையனாரகப்பொருள் (சூ.47) உரையானது 'பரத்தை தற்புகழ்தல்'[43] என்று இயம்பும்.

இவ்வாறு பரத்தையருக்குரிய கூற்றுகளாக கூறப்பெறுவன தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

காமக்கிழத்தி

காமக்கிழத்தியை 'இற்பரத்தை' என்று அழைப்பர். இவள் காமங் காரணமாகத் தலைவனால் வரைந்து கொள்ளப்பட்டவள். இற்கிழத்தி போன்று இல்லறம் நிகழ்த்தும் தன்மை வாய்ந்தவள். இவளைப் பற்றி, இளம்பூரணர், "காமக்கிழத்தியராவார் பின் முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர். ஒத்த கிழத்தியரும் இழிந்த கிழத்தியரும் வரையப்பட்டாரும் என. ஒத்த கிழத்தியர் முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல். இழிந்தாராவார் - அந்தணர்க்கு அரச குலத்தினும் வணிக குலத்தினும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசருக்கு ஏனையிரண்டு குலத்தினுங் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண் குலத்திற் கொடுக்கப்பட்டாரும், வரையப்பட்டார் -

செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல். அவர் கன்னியில் வரையப்பட்டாரும் அதன்பின்பு வரையப்பட்டாரும் என இருவகையர் - அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக்கிழத்தியர் பாற்பட்டனர்”[44] என்பர். நச்சினார்க்கினியர், “காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமை பூண்டு இல்லற நிகழ்த்தும் பரத்தையர்”[45] என்றுரைப்பர். தொல்காப்பியம், காமக்கிழத்தி கூற்றுகளைத் தொகுத்துச் சொல்லி முடிக்கும்போது “கண்ணிய காமக் கிழத்தியர் மேன” (1097;14) என்று இயம்பும். இதற்கு நச்சினார்க்கினியர் உரையெழுதும்போது, “‘கண்ணிய காமக்கிழத்திய’ ரெனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர் கூத்தும் பாட்டும் உடையராகிவருஞ் சேரிப்பரத்தையருங் குலத்தின்கண் இழிந்தோரும் அடியரும் வினைவல பாங்கினரும் பிறருமாம்”[46] என்று மொழிவர். ‘காமக்கிழத்தியரென்பார் சேரிப்பரத்தையர் போலப் பலர்க்கும் உரியாரன்றி ஒருவற்கே உரிமை பூண்டு வரும் குலப்பரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டார்’ என்று கா.ர.கோவிந்தராச முதலியாரும்’[47] புலவர் சேயொளியும்[48] சுட்டுவர். பெருஞ்சொல்லகராதி,“இற்பரத்தை-காமக்கிழத்தியாகக் கொண்ட பரத்தை”[49] என்றும் புலவர் குழந்தை, “காமக்கிழத்தி-காமத்திற்காகக் கொண்ட மனைவி; காமத்திற்காக மனைவி நிலையில் இருப்பவள் என்றுமாம். இவர் இற்பரத்தையர் எனவும் படுவர். இல்-இல்லறம், குடும்பம். இல்பரத்தையர் - ஒருவனோடு கூடி மனைவியர் போலக் குடும்பம் நடத்தும் அயல் மகளிர்”[50] என்பர்.

கூற்று-வரையறை

தொல்காப்பியம், காமக்கிழத்தியைக் கூற்றுக்குரியோராக வரையறுக்கவில்லை. ஆனால் இவளது கூற்றுகளாக (1097) எட்டினை மொழியும். இவள், ஊடல், இல்வாழ்க்கை ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்துதற்குரியவள்.

ஊடல்

ஊடலின் போது தொல்காப்பியம் (1097), காமக்கிழத்தி நிகழ்த்தும் கூற்றுகளாக எட்டினை இயம்பும். இக்கூற்றுகள் அனைத்தும் பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

பரத்தை, தலைவன் தன்னிடத்துச் சில நாளும், தலைவியிடத்துச் சில நாளும் தங்குவதால் தலைவி புலந்து கூறுதலின்போதும்

இல்வாழ்க்கையினராகிய தலைவனும் தலைவியும் ஊடியும் கூடியும் செய்த செயல்களைக் கேட்டு இகழ்தலின் போதும்

பல்வகைப் புதல்வரைக் கண்டு மிகவும் உவந்து கூறுதலின்போதும்

களவின் வழிவந்த தலைவியின் செயல்கள், பொறுத்தற்கரிய மிகுந்த துன்பத்தைத் தருதலின்போதும்

தலைவன், தலைவி மீது கொண்ட காதலையும், இல்லறக் கடமையாற்றும் ஆண்மையையும் மறந்து, காமக்கிழத்தியிடத்துத் தங்கும் நிலையில் தலைவி, துன்பம் கண்டு, காமக்கிழத்தி, தலைவனைத் தாய்போல் கழறிப் பிறகு தலைவியிடத்துச் சென்று, அவளது துன்பத்தைப் போக்கித் தலைவியைத் தலைவனோடு கூட்டுவிக்கும் போதும்

காமக்கிழத்தியின் ஊடலைத் தணிக்க, தலைவன் பல வாயில்களை விடுக்க காமக்கிழத்தி அவர்களை மறுக்க, தலைவன்,

இனிய நகையையுடைய புதல்வனை வாயிலாகக் கொண்டு புகுமிடத்தும்

காமக்கிழத்தி, தன்னைத் தலைவியோடு ஒப்பக்கருதி, தன்னை ஒக்கும் மற்றைய பெண்களினும் தான் சிறந்தவளாகக் குறித்துக் கொள்ளுமிடத்தும்

தலைவனொடு ஆறும், குளனும், காவும் ஆடி மகிழ்ந்து இன்பம் நுகருதலின்போதும் கூற்று நிகழ்த்துவாள்.

இல்வாழ்க்கை

இத்தகைய சூழலில் காமக்கிழத்தி கூற்று நிகழ்த்துதலைத் தொல்காப்பியம் சுட்டவில்லை. வீரசோழியம் (மருத நடை.) மட்டும் ஒன்றினைக் குறிப்பிடும்.

தம் இல்லத்துத் தலைவி வந்தவழித் தலைவனுடைய காமக்கிழத்தி மனம் விரும்பித் தலைவியை எதிர்கொண்டழைத்து உபசரித்தலை (மருத நடை;34) வீரசோழியம் குறிப்பிடும். இதில் காமக்கிழத்தியோடு இரண்டாம் மனைவியும் தலைவியை எதிர்கொண்டழைத்ததாகக் கூறியிருப்பது சுட்டத்தக்கதாகும்.

அறிவர்

துறவுள்ளமும் முக்காலத்தை அறியும் ஆற்றலும் உடைய பெரியோர் அறிவர் எனப்படுவர். இதனைத் தொல்காப்பியம்,

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்"

(தொல்.1021;4-5)

என்று இயம்பும். இதனை இளம்பூரணர்,"குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கமும்"[51] என்றும் "அறிவன் என்றது

கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன்வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன்கூறல். ஆதலான் மூவகைக் காலமும் 'நெறியின் ஆற்றிய அறிவன்' என்றார்"[52] என்றும் கூறுவர். நச்சினார்க்கினியர், "காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைத்த முழுதுணர்வுடையோன் பக்கமும்"[53] என்பர்.

இவற்றால் அறிவன் என்பதற்குக் கணியன் எனப் பொருள் கொள்ளுவதும் முக்காலத்தை உணரும் ஆற்றலுடையவர் என்பதும் தெளிவாகும்.

அறிவர் என்போர், 'தலைவனுக்கும், தலைவிக்கும் உறுதியைப் பயக்கும் உபதேசங்களைச் சொல்லும் குரவர்' என்று கா.ர.கோவிந்தராச முதலியாரும்[54] புலவர் சேயொளியும்[55] இயம்புவர். ஆ.சிவலிங்கனார், "அறிவர் என்பார் தம் அறிவால் மக்கள் அறிவைத் தீதின் நீக்கி நன்றின்பால் உய்ப்பவர்"[56] என்றும் க.வெள்ளைவாரணன், "மக்கள் தங்கள் உள்ளத்து நடுவு நிலைமையுடன் தங்களுக்குரிய தொழில்களைப் பெருக்கித் திருந்திய வாழ்வு நடத்தற்குரிய நல்லறிவு வழங்கும் அறிவான் நிறைந்த பெரியோர் 'அறிவர்' எனப் போற்றப்பெறுவர்"[57] என்றும் ந.சுப்புரெட்டியார், "அறிவர் என்பார், தலைவன் தலைவியருக்குக் குரவர்களாக இருப்பவர்களும் துறவுள்ளம் படைத்த அறிஞர்களும்"[58] என்றும் குறிப்பிடுவர்.

இவற்றால் அறிவர், துறவுள்ளம் படைத்தவராகவும் தம் அறிவால் மக்களை நல்வழிப்படுத்தக் கூடியப் பெரியோராகவும் திகழ்பவர்.

கூற்று-வரையறை

தொல்காப்பியம் அறிவரைக் கற்பில் (1446) கூற்றுக்குரியோருள் ஒருவராகவும் ஊடல் தீர்க்கும் வாயில்களுள் (1139) ஒருவராகவும் சுட்டும். செவிலிக்குரிய கூற்றுகள் (1099) இரண்டும் இவருக்கும் உரியதாக இயம்பும். இவை பிற்கால அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

கண்டோர்

கண்டோர் தலைவன், தலைவிக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாதவர். தலைவனும் தலைவியும் உடன்போக்கில் செல்லும்போது அவர்களை இடைச்சுரத்தில் சந்திக்கும் பாலை நில எயிற்றியர். இவர்களுள் உயர்ந்த தன்மை வாய்ந்தவரே கண்டோராவர்.

செந்தமிழ் அகராதி, "கண்டார்-சம்பந்தமில்லாதவர்"[59] என்று இயம்பும். க.வெள்ளைவாரணன், "கண்டோர்-வழியிடையே எதிர்ப்பட்டோர்"[60] என்றும், மு.இராகவையங்கார்,"கண்டோர்-இவர் வரையறையிலர்"[61] என்றும் தமிழண்ணல், "கண்டோர் என்பவர் வழிப்போக்கர்கள்"[62] என்றும் புலவர் குழந்தை, "கண்டோர்-வழிப்போக்கர்"[63] என்றும் ந.சுப்புரெட்டியார், "கண்டோர் என்பார், களவுக் காலத்தில் தன் பெற்றோர் தன் களவினை உணர்ந்து தன்னை வேற்றவர்க்கு மணம் நிச்சயிக்கப்போகும்போதும், தலைவி தலைவனுடன் சென்று அவன் மனையில் வரைந்து கொள்ளும் நோக்குடன் செல்லும்போதும் காட்டு வழியில் சந்திக்கும் மாந்தர்."[64] என்றும் மொழிவர். மொ.அ.துரைஅரங்கசாமி, "உடன்போக்கு முதலியவற்றில் வழியில் கண்டு தலைவன் தலைவியரிடத்தே இரக்கம்

காட்டி, அவருடைய உடனுறைவிற்கு ஆவன செய்பவர் கண்டார் எனப்படுவர்"[65] என்றும் சொக்கப்ப நாவலர், "கண்டோராவார்-பாலை நிலத்து எயிற்றியர்"[66] என்றும் குறிப்பிடுவர். ச.பாலசுந்தரம், "கண்டோர்- என்றது; தலைவனும் தலைவியும் உடன்போக்கின்கண் இடைச்சுரத்துக் கண்டோரை, அதனான் அஃது அவர்க்குக் காரணப் பெயராயிற்று"[67] என்றும் இயம்புவர். சு.இராசாராம், "கண்டோர் தலைமக்கள் உடன்போகும் பொழுது இடைவழியில் எதிர்வரும் மாந்தராக இருந்தாலும் அனைவரையும் அவ்வாறு கூற இயலாது. அவர்களுள்ளும் நல்லோர்களும், உயர்ந்தோர்களுமே கண்டோராகக் கொள்ளத்தக்கவர்கள்"[68] என்று குறிப்பிடுவர்.

கூற்று - வரையறை

தொல்காப்பியம், கண்டோரைக் கற்பில் (1446) கூற்றுக்குரியோராகவும் வாயில்களுள் (1139) ஒருவராகவும் இயம்பும். இவரது கூற்றுகளாக (986) ஏழினைக் குறிப்பிடும்.

சூழல்

கண்டோர் வரைவு முடுக்கம், உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, வரைந்துகோடல், பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களில் கூற்று நிகழ்த்துதற்குரியவர்.

வரைவு முடுக்கம்

இத்தகைய சூழலில் மந்திமேல் வைத்து வரைவுகடாவப்பட்ட தலைவன், இரவுக்குறியில் சென்று நிற்கும்போது அந்நிலையில் இவ்விடத்துள்ளார், இவள் காவற்பறை கேட்குந்தோறும்

கண்துயிலாமைக்குக் காரணமென்னவெனக் கண்டோர் தம்முள் மொழிவதை (851;6) முத்துவீரியம் நவிலும். இது புதிய கூற்றாகும்.

உடன்போக்கு

உடன்போக்கின்போது தொல்காப்பியம் (986) கண்டோர் கூற்று நிகழ்த்துவதாக ஆறினை மொழியும். இறையனாரகப்பொருள் (சூ.23) உரை ஐந்து, தமிழ்நெறி விளக்கம் (23) மூன்று, வீரசோழியம் (பாலை நடை.) ஆறு, அகப்பொருள் விளக்கம் (182) மூன்று, களவியற்காரிகை (51, 53) ஆறு, மாறனகப்பொருள் (80), இலக்கண விளக்கம் (536) ஒவ்வொன்றிலும் மூன்று, முத்துவீரியம் (850) ஏழு, சுவாமிநாதம் (112) மூன்று எனப் பிற அக இலக்கணங்களில் கண்டோருக்குரிய கூற்றுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

வளர்ச்சி

உடன்போக்கில் செல்வோரிடம் வழியருமை கூறல், சேய்மையில் செல்லுமிடத்துக் கூறல், உடன்போக்கில் செல்வோரிடம் நகரணிமை கூறல், செவிலியைப் போக விடாமல் தடுத்தல் ஆகிய சூழல்களில் கண்டோர் கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

உடன்போக்கில் செல்லக் கூடிய தலைவன் தலைவியருக்கு மாலைக்காலமும் வழியின் அருமையும் குறித்து அச்சம் தோன்றக் கூறி அவற்றால் வரும் துன்பங்கள் இவையென்று எடுத்துக் கூறும்போது கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் (986;1-2) சுட்டும்.

இதனை உடன்போக்கில் செல்லும் தலைவன் தலைவியை இடைச்சுரத்தில் கண்டோர் தலைவியின் அயர்வினை அகற்றிக்

கொண்டு போகும் தலைவனை நோக்கி, நீங்கள் செல்லும் வழியானது அச்சம் வாய்ந்தது, மேலும் பொழுதும் சென்றது, இவ்விடத்தில் தங்கிப் போவீராக என்று அவ்விடத்திலுள்ளோர் வழியைக் கூறிப் போக வேண்டாமென்று வழி விலக்கிக் கூறுதல்[69] என இறையனாரகப்பொருள் (சூ.23) உரை இயம்பும். இதனைத் தழுவி வீரசோழியம் 'எதிர்ந்தோர் மொழிதல்' (பாலை நடை ;8), தலைவன் தலைவியைக் கண்டோர் அவர்களது கற்பொழுக்கத்தைப் புகழ்ந்து மொழிதல் (பாலை நடை ;9) என மொழியும். இதனை (பாலை நடை;8) அடியொற்றிக் களவியற்காரிகையும் (51;2-3) முத்துவீரியமும் (850;19) இயம்பும்.

தலைவனும் தலைவியும் சேய்மையிடத்து அகன்று செல்லுதலின்போது கண்டோர் கூற்று நிகழ்த்துவர். இதனைத் தொல்காப்பியம்,

"சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும்"

(தொல்.986;8)

என்று இயம்பும். இதனையே இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது சுரத்திடைச் செல்லும் தலைமக்களைக் கண்டு எதிர்வருகின்றோர் 'இவர்கள் யார்' என்று ஐயுற்றுக் கூற்று நிகழ்த்துவதாக[70] மொழியும். இதனையே தமிழ்நெறி விளக்கமும் (23;1) சுட்டும். வீரசோழியமானது தலைமக்களைக் கண்டோர் 'இவர்களுக்கு நிகர் இவரே' என்று அவர்களது வடிவழகையும் காதல் தன்மையையும் எடுத்துரைப்பதை (பாலை நடை ;7) மொழியும். தமிழ்நெறி விளக்கத்தைத் (23;1) தழுவி அகப்பொருள் விளக்கம் (182;12),

களவியற்காரிகை (53;1-2), மாறனகப்பொருள் (80;12), இலக்கண விளக்கம் (536;12) ஆகிய நூல்கள் குறிப்பிடும். வீரசோழியத்தை (பாலை நடை ;7) அடியொற்றி முத்துவீரியமானது 'நெறியிடைக் கண்டவர் செறிவெடுத்துரைத்தல்' (850;19-20) என்று கூறும். இலக்கண விளக்கத்தை (536;12) அடியொற்றி சுவாமிநாதம் (112;1-2) மொழியும்.

உடன்போக்கில் செல்லும் தலைவன், தலைவியிடம் கண்டோர், தம் ஊரினது அணிமையையும் அவர்கள் செல்லவிருக்கும் ஊரினது சேய்மையையும் கூறி, தம்மூர் வந்து தங்கிச் செல்லும்படி அன்புடன் வேண்டுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதாகத் (986;3-4) தொல்காப்பியம் இயம்பும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது தலைவன், இவ்விடத்தில் நும் ஊரில் தங்குதல் இயலாது. எம்பதிக்குச் செல்ல வேண்டும் என்று கூற, கண்டோர், அக்குன்றைக் கடந்தால் நும்பதியாக நகர் விளங்கித் தோன்றும், விரைவில் செல்லுங்கள் என்று 'நகரணிமை கூறலை'[71] மொழியும். அகப்பொருள் விளக்கமானது உடன்போக்கில் செல்லும் தலைவன் தலைவியைக் கண்ட கண்டோர் அவர்களது உடல் அயர்வைக் கண்டு, அவர்கள்மீது அன்பு கொண்டு எங்கள் வீட்டில் தங்கிச் செல்லுங்கள் என்றல் (182;12) என்றும் இறையனாரகப்பொருள் (சூ.23) உரையைத் தழுவித் 'தம்பதி அணிமை சாற்றல்' (182;13) என்றும் கூறும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை 'பதியின் அளவுரைத்தல்' (51;4) என்று இயம்பும்.

இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் (182;12) தழுவி மாறனகப்பொருளும் (80;12-13), இலக்கண விளக்கமும் (536;12-13) மொழியும். இதனைத் (536;13) தழுவி முத்துவீரியம் 'வழியெதிர் வருவோர் எழினகர் அணிமை இதுவென உரைத்தல்' (850;21-22) என்று கூறும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் (536 ; 12) அடியொற்றி சுவாமிநாதம் (112 ; 2) குறிப்பிடும்.

செவிலி, உடன்போக்கில் சென்ற தலைவியைத் தேடிச் செல்வாள். அப்போது கண்டோர், அவளது நிலையைக் கண்டு போகவிடாமல் தடுத்தற்கண் கூற்று நிகழ்த்துவாள். இதனைத் தொல்காப்பியம்,

"............ .... ஆங்குஅத்
தாய்நிலை கண்டு தடுப்பினும்"
(தொல்.986;6-7)

என்று குறிப்பிடும்.

இதனை இறையனாரகப்பொருள் (சூ.23) உரையானது, உடன்போக்கில் சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலியிடம் கண்டோர், அவர்களிருவரும் இன்னதோரிடம் சேர்வார்கள் என்று 'அழுங்கு தாய்க்கு உரைத்தல்,[72] செவிலியிடம் தலைவி, இனிமேல் பிறந்தவிடத்திற்குப் பயன்படாள், தன் கணவனுக்கே உரிமையுடையவள். எனவே, நீ கவலைப்பட வேண்டாமென்று 'உலகியல்புரைத்தல்'[73] என இயம்பும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் 'கண்டோர் தெளித்தல்' (23;3) என்று சுட்டும். வீரசோழியம் செவிலியிடம், அவர்களிருவரும் தம்முள் இயைந்து செல்கின்றனர் வருந்தாதே என்றல் (பாலை நடை ; 14) என்பதையும் தமிழ்நெறி விளக்கத்தை (23;3) அடியொற்றிக் 'கண்டோர் தெருட்டல்' (பாலை நடை;18) என்பதையும் இயம்பும். இறையனாரகப்பொருள் (சூ.23)

உரையைத் தழுவிக் களவியற்காரிகையானது 'சேர்விடஞ் சொல்லுதல்' (53;2) என்பதையும் வீரசோழியத்தைத் (பாலை நடை ;18) தழுவி 'செவிலியை யாற்றல்' (53;3), உலகியல்புரைத்துக் கூறியும் மீளாதவளிடம் இருவரும் அவர்கள் சேருமிடத்திற்குச் சென்றிருப்பர், இனி இடரில்லை என்று தம்முள்ளும் செவிலிக்கும் கூறி அவளது துயரத்தைத் தணித்து அவளை மீட்டுக்கொண்டு செல்லல் (53;4) என்பனவற்றையும் மொழியும். வீரசோழியத்தைத் (பாலை நடை ;14) தழுவி முத்துவீரியமானது 'ஆங்கவர் இயைபணி அவட்கு எடுத்துரைத்தல்' (850;44), செவிலியை மீள்வதே நல்லது என்று 'மீளவுரைத்தல்' (850;45), களவியற்காரிகையைத் (53;3-4) தழுவி 'மீளாதவளுக்கு ஊழ்முறை இதுவென உலகியல்புரைத்தல்,' 'அழுங்குதாய்க்கு உரைத்தல்' (850;45-47) ஆகியனவற்றைக் குறிப்பிடும்.

வீழ்ச்சி

உடன்போகும் தலைமக்கள்பால் அன்புகொண்ட நெஞ்சினராய், அவர்கள் நிலைமைக்கு மனம் கலங்கி, அவர்கள் கூற்றுக்கு எதிர்மொழி கூறி விடுத்தலின்போதும் செவிலியைத் தொடர்ந்து செல்ல விடுக்கும்போதும் கண்டோர் கூற்று நிகழ்த்துவர் (986;5-6, 7). இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

புதிய கூற்று

தலைவி, தலைவனுடன் உடன்போக்கில் சென்றாள் என்பதையறிந்து தலைவியை மீட்க முற்பட்ட அவளுடைய தமருக்கு உலகியல்பு கூறி அவர்களது சினத்தைத் தணித்து இருவருக்கும் மணமுடித்து வைக்குமாறு அறிவுரை கூறும் 'அயலோர் மொழிதலைத்' (23;5) தமிழ்நெறி விளக்கம் இயம்பும். இதனையே வீரசோழியம்

‘அமைந்தோர் திருத்தல்’ (பாலை நடை ;12) என்று கூறும். இக்கூற்று புதிய கூற்றாகும்.

கற்பொடு புணர்ந்த கவ்வை

கற்பொடு புணர்ந்த கவ்வையில் அகப்பொருள் விளக்கம் (187), மாறனகப்பொருள் (87), இலக்கண விளக்கம் (538), சுவாமிநாதம் (113) ஆகிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூற்றை கண்டோருக்குரியதாக வரையறை செய்துள்ளது.

தலைவி, தலைவனுடன் உடன்போன நிலையில் தலைவியின் ஆயத்தாரும் நற்றாயும் இரங்குவதைக் கண்டு அவர்கள் மீது கொண்ட அன்பினால் கண்டோர் இரங்குவதை (187) அகப்பொருள் விளக்கம் இயம்பும். இதனை அடியொற்றி மாறனகப்பொருள் (87) இலக்கண விளக்கம் (538;13-15), சுவாமிநாதம் (113;5-6) ஆகியவையும் குறிப்பிடும். இக்கூற்று தொல்காப்பியத்தில் இல்லாத புதிய கூற்றுகளாகும்.

மீட்சி

மீட்சியின் போது தொல்காப்பியம் (986) கண்டோர் கூற்றாக ஒன்றை இயம்பும். பிற அக இலக்கணங்களாகிய அகப்பொருள் விளக்கம் (191), மாறனகப்பொருள் (91), இலக்கண விளக்கம் (540), சுவாமிநாதம் (114) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மாற்றமின்மை

உடன்போக்கில் சென்ற தலைவி, தலைவனுடன் சேய்மைக்கண் அகன்று மீண்டு வருவர். அப்போது தலைவி, முன் செல்வோரிடம் தன் வரவைத் தோழிக்கு உணர்த்தும்படிக் கூறுவாள். அவர்கள் தோழியிடம்

கூறுவதை,

"வரவினும்"

(தொல்.986;8)

என்று தொல்காப்பியம் இயம்பும். இதனையே அகப்பொருள் விளக்கம் 'ஆங்கவர் பாங்கியர்க் குணர்த்தல்' (191;4-5) என்று சுட்டும். இதனை அடியொற்றி மாறனகப்பொருள் (91;5-6), இலக்கண விளக்கம் (540;4-5), சுவாமிநாதம் (114;8) ஆகியவையும் கூறும்.

வரைந்து கோடல்

உடன்போக்கில் சென்ற தலைவன், போக்கு இடையீடுபட்டவழி மீண்டும் தலைவி இல்லத்திற்கு வந்து அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு வரைந்துகொள்ளுதல் 'வரைந்து கோடல்' எனப்படும். இத்தகைய சூழலில் மாறனகப்பொருளும் (82) சுவாமிநாதமும் (116) கண்டோருக்குரிய கூற்றாக ஒவ்வொன்றினை இயம்பும்.

திருமண நாளன்று தலைமக்களது மணக்கோலத்தினைக் கண்டோர், தலைவனிடம் நீ, தலைவியோடு கொண்டுள்ள மணக்கோலக் காட்சியைக் கண்ட எம் கண்கள் போல உயிரும் மகிழ்கிறது என்று மகிழ்வதை (82;4) மாறனகப்பொருள் இயம்பும். இதனையே சுவாமிநாதம் 'கண்டோர் மகிழ்தல்' (116;7) என்று குறிப்பிடும். இது புதிய கூற்றாகும்.

பரத்தையிற் பிரிவு

இச்சூழலில் அகப்பொருள் விளக்கம் (205), மாறனகப்பொருள் (102), இலக்கண விளக்கம் (554) ஒவ்வொன்றிலும் ஒன்று, முத்துவீரியம் (861) நான்கு, சுவாமிநாதம் (119) ஒன்று எனக் கண்டோருக்குரிய கூற்றுகள் வகுக்கப்பட்டுள்ளன.

புதிய கூற்றுகள்

தலைவன், பரத்தையர் சேரியின்கண் சென்று நிற்ப, அப்பரத்தையர் அவனை எதிர்கொண்டு நிற்க, இது இவன் காதலிமாட்டு என்னாகுமென அவ்விடத்துக் கண்டோர் இது தலைவியின் ஊடலுக்குக் காரணமாகும் என்றுரைத்தலை (205;1-2) அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனை அடியொற்றி மாறனகப்பொருளும் (102;1-2) இலக்கண விளக்கமும் (554;1-2) இயம்பும். இதனைத் தழுவி முத்துவீரியமானது 'கண்டவர் கூறல்' (861;1), பரத்தையிற் பிரிந்த தலைவன், செவ்வணி கண்டு வந்தான் என்று இயம்புமளவில் தலைவியின் கண்கள் சிவந்தன. அப்புலவி நோக்கிற்கு எதிராகத் தலைவன், தலைவியை நோக்க, சிவப்பாறி முகம் மலர்ந்தது என்று கண்டவர் கூறல், தலைவன், தலைவியின் புலவி தீர்த்து இன்புற்று மகிழ்ந்ததை அவ்விடத்துள்ளோர் எடுத்துரைத்தல், இவ்வாறு தலைவன், தன் தலைவியுடன் மனையில் தங்கியிருக்கும்போது தலைவனது தோள்களைப் பரத்தையர் பொருந்தி மகிழப் பொய்கையில் புதுப்புனல் வந்து பாய்ந்தது. இனிப் புனலாட்டினால் பரத்தையரை மகிழ்வித்துத் தன் காதலியை வெகுள்விக்கும் போலும் எனக் கண்டவர் கூறல் (861;11-13, 15) என எடுத்துரைக்கும். இதனைத் (861;1) தழுவி சுவாமிநாதம் (119;3-4) குறிப்பிடும். இக்கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெறாத புதிய கூற்றுகளாகும்.

இளையோர்

இளையோர் என்போர் தலைவனுடைய தோழர்களுள் ஒருவர். இவர் தலைவன், தலைவியரை விட்டுப் பிரியாது அவர்களுடனிருந்து குற்றேவல் செய்யக் கூடிய திறமுடைய மாந்தர். இவரை கா.ர.கோவிந்தராச முதலியாரும்[74] புலவர் சேயொளியும்[75] 'இளையராவார், தலைவனுக்கு இரவும் பகலும் நீங்காக் கவசம்போலும்

தன்மையர்’ என்று சுட்டுவர். புலவர் குழந்தை, “இளையர்- பருவமுறாதவர்; தலைவனுடனிருந்து, அவ்வப்போது ஏவுந் தொழிலைச் செய்துகொண்டு, தலைவனுக்கு மெய்காப்பாளராக இருப்பவர்”[76] என்றும் ந.சுப்புரெட்டியார், “இளையர் என்பார், தலைவனை விட்டுப் பிரியாது அவனுடன் இருந்து, அவனுக்குக் குற்றேவல் செய்யும் ஏவலர்”[77] என்றும் நா.பாலகிருட்டினன், “தலைவிக்கு அமைந்த தோழியர் பலர். அதேபோலத் தலைவனுக்கு அமைந்த தோழர்களும் பலராவர். அவர்களே இளையர் என்று கூறப்படுகின்றனர்”[78] என்றும் சுட்டுவர்.

கூற்று - வரையறை

தொல்காப்பியம் இளையோரைக் கூற்று நிகழ்த்துதற்குரிய மாந்தர்களுள் ஒருவராக மொழியவில்லை. ஆனால் வாயில்களுள் (1139) ஒருவராகவும் இயம்பும். இவரது கூற்றுகளாக (1116) ஏழினைக் குறிப்பிடும்.

சூழல்

இளையோர் பொருள்வயிற் பிரிவுச் சூழலில் கூற்றுகள் நிகழ்த்துதற்குரியர்.

பொருள்வயிற் பிரிவு

பொருள்வயிற் பிரிவுச் சூழலில் தொல்காப்பியத்தில் (1116) இளையோர் நிகழ்த்தும் கூற்றுகளாகக் கொள்ளப்படுவன ஏழு. பிற அக இலக்கணங்களான வீரசோழியம் (முல்.நடை.), முத்துவீரியம் (860) ஒவ்வொன்றிலும் ஒன்று என இளையோருக்குரிய கூற்றுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

வீழ்ச்சி

இளையோர் தலைவன், தலைவியுடனோ தனித்தோ போகத் துணிந்தவிடத்து இக்காலம் தண்ணிது, வெய்து என்றும் போகுமிடம் சேய்த்து, அணித்து என்றும் வழியின் நிலைமை கூறுதல்,

ஒன்றாகச் சென்றுவந்து, செய்பொருள் முடிக்கும் திறத்தை அறிந்து கூறுதல்,

இன்னவிடத்து, இன்னது செய்கவென ஏவியக்கால் அதனை முடித்து வந்தமை கூறுதல்,

தலைவனிடம் செய்வன என்னவெனக் கேட்டல்,

தலைவிக்கு வேண்டியவற்றைத் தலைவன்பாற் சொல்லல்,

தான் செல்லும் சுரத்திடைக் கண்ட நிமித்தம் முதலிய பொருள்களைத் தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதிபயக்குமாறு கூறுதல்,

மாவும், புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றைச் சுட்டிக் கூறுதல் (1116) ஆகிய கூற்றுகள் தொல்காப்பியத்தில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன.

புதிய கூற்று

பொருள்வயிற் பிரிந்த தலைவனின் தேர்வரவினைத் தோழி, தலைவிக்குக் கூற, இந்நிலையில் இளையர், இனி இவளாவி செல்வதற்கு முன்னே நிதியோடு அன்பர் தேர் வந்தது. இனி ஊழின் வலியது வேறொன்றும் இல்லையெனப் பொருள் முடித்து வருகின்ற தலைவனை எதிர்கொள்வதை (முல். நடை ;32) வீரசோழியம் மொழியும். இதனையே முத்துவீரியம் 'இளையர் எதிர்கோடல்' (860;11) என்று குறிப்பிடும்.

வாயில்கள்

அகவொழுக்கம் சிறப்பாக நடைபெற தலைமக்களுக்கு வாயிலாகத் திகழ்வோர் வாயில்களாவர். பன்னிரண்டு வாயில்களும் தலைமக்களிடத்து மனமகிழ்ச்சியை உண்டாக்குவதையே தமக்குப் பொருளாகவுடையவர். இதனைத் தொல்காப்பியம்,

"எல்லாவாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப"

(தொல்.1124)

என்று இயம்பும். தலைவன், தலைவியோடு மனம் பிணிப்புண்ட சிறப்புடைய வாயில்களாகத் திகழ்வதை,

"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,
பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"

(தொல்.1139)

என்று தொல்காப்பியம் குறிப்பிடும்.

வாயில்கள், அகமாந்தர்களின் உள்ளுணர்வை வெளியிட்டு, அவர்களது உறவுகளை வலுப்படுத்துபவர். இத்தகைய தன்மையை புலவர் குழந்தை, "வாயில்; துணை, தூது, தலைவன் தலைவி இருவர் சொல்லையும் கேட்டும், அவர்க்குக் கூறியும், இருவரையும் கூட்டியும் பிரித்தும் அகவொழுக்கம் நிகழ்தற்கு வாயில் போறலின் வாயில் எனப்பட்டனர்"[79] என்றும் ஆ.இராமகிருஷ்ணன்,"களவிலும் கற்பிலும் தலைவன் தலைவியர்க்குத் துணை நிற்பவர்கள் வாயில்கள் ஆவர். இவ்வாயில்கள் அகமாந்தர்களின் உணர்வு வெளியீட்டிற்கும் உறவு நிலைபேற்றுக்கும் வாயில் போன்று அமைந்து விளங்குபவர்கள்"[80] என்றும் இரா.இளங்குமரன், "தலைவனையும் தலைவியையும்

இடைநின்று கூட்டும் தூது 'வாயில்' எனப்படும்"[81] என்றும் குறிப்பிடுவர். தலைமக்களது ஊடலைத் தீர்த்து வைக்கக் கூடியவர் என்ற அடிப்படையில் மீ.பொன்.இராமநாதன் செட்டியார், "வாயில்-தலைவன் தலைவியர்க்குப் பிணக்கு நேர்ந்துழி அதனைப் போக்கி அவர்களை ஒற்றுமைப்படுத்துவோர் ; அவர், தோழி, பாணன், பாடினி முதலிய பலராவர்'[82] என்றும் ப.கொழந்தசாமி, "தலைவன், தலைவியரிடையே ஊடல் ஏற்பட்டபோதும், தலைவியின் வருத்த நிலையைத் தலைவனுக்கு உரைக்க வேண்டியும் சில மாந்தர்கள் அகப்பாடல்களில் சுட்டப்படுவர். இவர்கள் 'வாயில்கள்' என்று அழைக்கப்படுவர்'[83] என்றும் இயம்புவர்.

கூற்று-வரையறை

வாயில்களைத் தொல்காப்பியம் கூற்றுக்குரியோராகக் குறிக்கவில்லை. ஆனால் இவரது கூற்றுகளாக (1098, 1455) இரண்டினை மொழியும்.

சூழல்

வாயில்கள் பரத்தையிற் பிரிவு, பொருள்வயிற்பிரிவு ஆகிய சூழலில் கூற்றுகள் நிகழ்த்துவர்.

பரத்தையிற் பிரிவு

இத்தகைய சூழலில் தொல்காப்பியம் (1098) வாயில்களின் கூற்றுகளாக இரண்டினை மொழியும். பிற அக இலக்கணங்களாகிய இறையனாரகப்பொருள் (சூ.44, 45) உரை மூன்று, வீரசோழியம் (மருத நடை.) இரண்டு, அகப்பொருள் விளக்கம் (205), மாறனகப்பொருள் (102), இலக்கண விளக்கம் (554) ஒவ்வொன்றிலும் ஒன்று, முத்துவீரியம் (861), சுவாமிநாதம் (120, 121) ஒவ்வொன்றிலும் மூன்று என வாயில்களுக்குரிய கூற்றுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

வீழ்ச்சி

தலைவி கற்பென்னும் திண்மை உடையவள்; தலைவனது உயிரினும் தன் உயிர் வேறெனாது அன்பால் உயிர்நிறைவு உடையவள்; எவ்வாற்றானும் தம் குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமுடையவள்; வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் யானைபோலாது, மெல்லென்ற நெஞ்சினளாய்ப் பொறுக்கும் பொறையுடையவள். மறை புலப்படாமல் நிறுக்கும் நெஞ்சுடையவள். வறுமையும் செல்வமும் குறியாது, வல்லவாற்றான் விருந்தினரைப் பாதுகாத்து, அவருடைய மனம் மகிழ்விப்பவள். கொண்டோன் புரக்கும் நண்புடை மாந்தரும், சுற்றத்தாரும், குஞ்சரம் முதலிய கால்நடை உயிர்களும் பல படை மாக்களும் உள்ளிட்ட சுற்றங்களைப் பாதுகாத்து அவை உண்டபின் உண்ணும் இயல்பினள். அவை போல்வனவாகிய பிற மாட்சிகளை உடையவள் என்றெல்லாம் தலைவனிடம் எடுத்துரைத்து, அவள் மனம் தன்னிடம் என்றும் மகிழ்ச்சியுடன் நிலைபெற்று நிற்குமாறு அவளிடம் நீங்காத அன்புகொண்டு நிற்கும்படி தலைவனை நெறிப்படுத்தும் நிலையில் வாயில்கள் கூற்று அமையும் (1098).

தலைவியின் மனையற மாண்புகளைத் தலைவனுக்கு உரைத்தலேயன்றித் தம்முள் தாமே கூறிக் கொள்ளுதலும் உண்டு (1455). இவை தொல்காப்பியத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளன. பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

புதிய கூற்றுகள்

பரத்தையிற் பிரிந்த தலைவனை மீண்டும் தலைவிமாட்டுச் சேர்த்தற்குப் பாங்கன், தோழி, பாணன் முதலியோர் அப்பரத்தையிடம் தலைவனை விடுத்துத் தலைவியிடம் அவன் மீண்டு வர இசையுமாறு

இரந்து வேண்டல், மேலும் இவர்கள் தலைவனுடைய தவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டியது தலைவியின் கடமையென்று கூறி, அவளை வேண்டிப் புலவி தீர்த்தல் (மருத நடை ;10-12, 14) ஆகியனவற்றை வீரசோழியம் இயம்பும்.

வாயில்கள், தலைவன் நின் வாயிலின்கண் வந்துள்ளான் என்று தலைவியிடம் கூறிய அளவில் கோபம் கொள்ள, இவ்வாறு கோபித்துக் கொள்வது இயல்பன்று என்று தலைவியின் ஊடலை ஆற்றுவித்தலை[84] இறையனாரகப்பொருள் (சூ.44) உரையானது இயம்பும். அகப்பொருள் விளக்கமானது தலைவி நீராடிய ஞான்று பரத்தையர், தங்கள் சேரியில் தலைவன் இருத்தல் உலக முறைக்கு இயலாதென்று விடுத்தலின், தலைவன் வருதலைக் கண்டு வாயில்கள், தோழிக்கு மொழிதலைக் (205;9-11) குறிப்பிடும். இதனையே மாறனகப்பொருளும் (102;10-11) இலக்கண விளக்கமும் (554;9-11) சுட்டும். முத்துவீரியம், தலைவியிடமிருந்து, தலைவனுக்கு உலகியல் உரைக்க வேண்டி, நம் மனையின்கண் வந்து தோன்றின என்று 'செவ்வணி கண்ட பரத்தை வாயிலவர் மொழிதல்,' செவ்வணி கண்ட தலைவன், பரத்தையிடத்தினின்றும் வந்து தடையின்றி மனைவயிற் புகுவான். அப்போது வாயிலவர், தலைவன் வாயில் பெறாது வருந்தும் நிலையை அடையாமல் மனைக்கண் புகுந்தான். மனைக்கடன் பூண்டலால் இனிப் புலந்து அடங்காதார் ஒருவருமில்லையெனத் தலைவி வாயிலவர் தம்முள் கூறல், தலைவி, செவ்வணி விடுக்க, தலைவியின் மெலிவறிந்து தலைவன் விரைவில் வந்தமையால் அவனை 'மெய்யே தக்க வாய்மையன்' என வாழ்த்துதல் (861;9-10, 15) ஆகியனவற்றை இயம்பும். இலக்கண விளக்கத்தைத் (554;9-11) தழுவி சுவாமிநாதம் (120;2) சுட்டும்.

தலைவி, புதல்வனை ஈன்று நெய்யாடியதை அறிவிக்க வெள்ளாடை முதலியன அணிவித்துச் சேடியை விடுவிப்பாள். இதனையறிந்த தலைவன், பரத்தையிடத்தினின்றும் மீண்டு வந்து வாயில் வேண்ட, வாயில் மறுப்பாள். அப்போது தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க பாணன் முதலிய வாயில்களை அனுப்புவான். இவர்கள் தலைவியிடத்து வாயில் வேண்டல், அப்போது தலைவி, வெகுண்டுரைத்து வாயில் மறுத்ததை வாயில்கள், தலைவனிடம் சென்று இயம்பல் (121;1-3) என சுவாமிநாதம் இயம்பும்.

தலைவன், தலைவிமாட்டு உறைந்தானாயின் 'தக்கான் என்றல்'[85] பரத்தையர்மாட்டு உறைந்தானாயின் 'தகான் என்றல்'[86] ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.45) உரையானது மொழியும். இக்கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன.

பொருள்வயிற் பிரிவு

இத்தகைய சூழலில் இறையனாரகப்பொருள் (சூ.53, 54) உரை மூன்று கூற்றுகளை வாயில்களுக்குரியதாக வரையறுக்கும்.

தலைவன், பொருள்வயிற் பிரிந்தவிடத்து, வாயில்கள் பருவ வரவின்கண் ஆற்றாளாகிய தலைவியை ஆற்றுவித்தற்குப் படைத்து மொழிந்து 'பருவமன்று என்றல்,'[87] தலைவன் குறித்த பருவம் வந்ததாகலின் அவரும் பொய்யார், 'வருவரென்று வற்புறுத்தல்,'[88] தலைவன் பிரிவின்போது, தலைவி ஆற்றாளாகியவிடத்து வாயில்கள் சிறைப்புறமாக ஆற்றுவித்தல்[89] என்பனவற்றை இறையனாரகப்பொருள் (சூ.53, 54) உரையானது குறிப்பிடும். இக்கூற்றுகள் அனைத்தும் தொல்காப்பியம் குறிப்பிடாத புதிய கூற்றுகளாகும்.

தொல்காப்பியம் குறிப்பிடாத மாந்தர்

தொல்காப்பியம் கூற்றுக்குரியோராக வரையறுத்துக் கூறாத மாந்தர்கள் பாகன், கட்டுவிச்சி, உழையர், இல்லோர், கலந்துடன் வருவோர், தமர், ஊரார், அயலோர் ஆகியோராவர். இம்மாந்தர்களது கூற்றுகள் தொல்காப்பியம் தவிர்த்த பிற அக இலக்கணங்களில் மொழியப்பட்டுள்ளன.

பாகன்

பாகன், தலைவனுடைய தேரோட்டியாகச் செயல்படுபவன். இவன் யானை, குதிரை இவற்றின் இயல்பறிந்தும் தலைவனின் இயல்பறிந்தும் தேரை ஓட்டிச் செல்வதில் வல்லவன். இவனது இயல்புகளை நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, "பாகர்-யானை, குதிரை முதலியவற்றை நடத்துவோர்"[90] என்றும் செந்தமிழ் அகராதி, "பாகன் - செலுத்துவோன், பக்குவமடைந்தவன், காரியத்துணைவன், புதன்"[91] என்றும் எடுத்துரைக்கும். ந.சுப்புரெட்டியார், "தேர்ப்பாகன் என்பவன், தலைவனுடைய தேரோட்டி; அவன் தலைவியை விட்டுப் பிரியும்போதும் மீண்டும் தலைவன் தலைவியை நாடி வரும்போதும், தேரை நடத்தி வருபவன். குதிரையின் இயல்பை அறிந்து விரைவாக ஓட்டிச் செல்வதில் வல்லவன்"[92] என்று இயம்புவர்.

சூழல்

பாகன், பொருள்வயிற் பிரியும் சூழலில் கூற்று நிகழ்த்துதற்குரியன்.

பொருள்வயிற் பிரிவு

இத்தகைய சூழலில் வீரசோழியம் (முல்.நடை.) பாகனுக்குரியதாக ஒரு கூற்றை மொழியும்.

பொருள்வயிற் பிரிந்து தேர்மீது திரும்பி வரும் தலைவன், தனது தேர்ப்பாகனை நோக்கி விரைந்து தேரைச் செலுத்துவாயாக என்று மொழிய, பாகன் விரைந்து செலுத்தும் 'பாகனைக் கடாவெனப் பன்மணி நெடுந்தேர் வேக நிலைமையின் விரைந்துநனி கடாவுதலை' (முல்.நடை ;28-29) வீரசோழியம் இயம்பும்.

கட்டுவிச்சி

கட்டுவிச்சி என்பவள் வேலன் இனத்தைச் சார்ந்த குறி சொல்லும் குறமகள். இவள் முறத்தில் நெற்களைப் பரப்பி எண்ணிக் குறி சொல்வது இவளது வழக்கம். இத்தன்மையினளை புலவர் குழந்தை, "கட்டுவிச்சியர் - வேலர் மகளிர். வேலன் கழங்கு பார்த்தும், கட்டுவிச்சி கட்டெடுத்தும் குறிஞ்சி நில மக்களுக்குக் குறி சொல்லுவர்"[93] என்றும் வ.சுப.மாணிக்கனார், "ஒரு தாய் கட்டுவிச்சியை அழைத்துத் தன் மகளின் நோய்க் காரணத்தை வினவினாள். முறத்தில் நெற்களைப் பரப்பி எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்"[94] என்றும் கூறுவர். கே.ராஜகோபாலாச்சாரியார், "கட்டுவிச்சி அல்லது கட்டுவித்தி - குறி சொல்லும் குறமகள். நெல்லைப் பரப்பி அதில் குறி கொள்பவள்"[95] என்றுரைப்பர். ஈ.கோ.பாஸ்கரதாஸ், "நெல்லை முறத்திலிட்டுக் குறியைப் பார்த்து உரைப்பவள் 'கட்டுவிச்சி' எனப்படுவாள்"[96] என்றும் "வேலன் இனத்தைச் சேர்ந்த மகளிரைக் கட்டுவிச்சியர் என்பர். கட்டுவிச்சியர் இரு வகையில் தலைவியின் மனநிலையை அறிய முற்படுவர். கழங்கு பார்த்தல், கட்டெடுத்தல் என்னும் முறைகளைக் கட்டுவிச்சி மேற்கொள்ளல் வழக்கமாகும். கழற்சிக் காய்களைக் கொண்டு குறிபார்த்துப் பலன் சொல்லுதல் கழங்கு பார்த்தலாகும். முறத்தில் கொஞ்சம் நெல்லையிட்டு முக்கூறு செய்து, அவற்றினுள் ஒரு கூற்றைக் கொண்டு ஒற்றை இரட்டை பார்த்து அதற்கு ஏற்பப் பலன் கூறுதல் கட்டெடுத்தலாகும்"[97] என்றும் இயம்புவர்.

சூழல்

கட்டுவிச்சி, அறத்தொடு நிற்றலின்போது கூற்று நிகழ்த்துதற்குரியள்.

அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் சூழலில் தமிழ்நெறி விளக்கம் (22) களவியற்காரிகை (46), முத்துவீரியம் (852) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு கூற்று கட்டுவிச்சிக்குரியதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி, தலைவனது நினைவால் உடல் மாற்றத்துடன் காணப்படுவாள். இதனையறிந்த செவிலி, தலைவியின் பருவங்கூறி, இவளுக்குற்ற நோயைத் தான் தெரிந்துகொள்ளும்படி, அறிந்து உரைப்பாயாகவெனக் கட்டுவிச்சியிடம் கேட்க, அவள் இவளுக்கு முருகணங்கொழியப் பிறிதொன்றுமில்லையெனக் கூறுவாள். இதனைத் தமிழ்நெறி விளக்கம் (22;4), களவியற்காரிகை (46;8), முத்துவீரியம் (852;12) ஆகியவை இயம்பும்.

உழையர்

உழையர், தலைவன் தலைவியருக்கு அருகில் இருந்து ஏவல் செய்யக்கூடிய தன்மையர். "உழையர் - ஏவல் செய்வோர், மந்திரிகள்" என்று இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதியும்[98] நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதியும்[99] குறிப்பிடும். மணிமேகலைத் தமிழ்ச்சொல் அகராதி, "உழையர்-ஏவலாளர், பணியாளர், அருகில் இருப்போர், ஒற்றர், அமைச்சர்"[100] என்றும் பெருஞ்சொல்லகராதி 'உழையர் (உழையவர், உழையோர்), - பக்கத்தில் இருப்பவர், ஏவலாளர், கப்பலோட்டி'[101] என்றும் மொழியும். மீ.பொன்.இராமநாதன் செட்டியார் "உழையர்-ஏவலாளர்; அயலில் உள்ளாருமாம்"[102] என்று இயம்புவர்.

சூழல்

உழையர், பரத்தையிற் பிரிவின்போது கூற்றுகள் நிகழ்த்துதற்குரியர்.

பரத்தையிற் பிரிவு

பரத்தையிற் பிரிவுச் சூழலில் அகப்பொருள் விளக்கம் (205), மாறனகப்பொருள் (102), இலக்கண விளக்கம் (554) ஆகிய ஒவ்வொரு நூல்களிலும் ஒன்று, முத்துவீரியம் (861) நான்கு, சுவாமிநாதம் (119) ஒன்று என உழையருக்குரிய கூற்றுகளை வரையறுக்கும்.

தலைவி, செவ்வணி அணிந்து சேடியைப் பரத்தை வீட்டிலுள்ள தலைவன்பால் அனுப்புவாள். அவ்வலங்காரத்தைக் கண்டு அயல்மனையிலுள்ளார் இரங்கிக் கூறலை (205;6-8) அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனை அடியொற்றி மாறனகப்பொருளும் (102;7-8) இலக்கண விளக்கமும் (554;6-8) இயம்பும். பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனால் ஏற்பட்ட ஆற்றாமையுடன் தலைவி திகழ, தலைவன் ஆற்றானாய் இல்லிடத்துப் புகுவான். அப்போது உழையர், தலைவியிடம் ஊடல் கொள்ளல் கூடாதென்று மொழிதல், புலவி தீர்ந்து தலைவனும் தலைவியும் பள்ளியிடத்திருக்கும்போது தலைவனிடமிருந்து ஒரு குறிப்பு வேறுபாடு கண்டு புலந்து இப்பள்ளி பலரைப் பொறுக்காது என்று பள்ளியினின்று இறங்கி நிற்பாள். இவள் இவ்வாறிகழ்தற்குக் குறிப்பென்னவென்று 'குறிப்பறிந்து புலந்தமை கூறல்,' தலைவனோடு, அன்புடைய தலைவி வருந்த, அன்பில்லாத பரத்தையருடன் தலைவன் உறைவதால் தலைவன் தகவிலன் என்று இயற்பழித்தல், பிறகு தலைவன், புதல்வனை வாயிலாகக் கொண்டு புலவி தீர்ந்து பள்ளியிடத்திருக்கும்போது தலைவி, ஏதோ ஒரு காரணத்தால் வெகுண்டு தலைவனின் மார்பகத்தில் உதைப்பாள். அப்போது தலைவன், அக்கோபம் தீர வேண்டி, அவள் காலைத் தன்

தலைமேல் ஏற்றுக்கொண்டான். அப்போது தலைவி, தலைவனைப் போன்ற கள்வன் இல்லை என்று கருதித் தலைவியின் கண்கள் நீரைச் சொரிந்தன. இதுதான் தலைவி புலத்தற்குக் காரணம் போலும் என்று 'கலவியின் போது ஊடலைத் தம்முள் கூறல்' *(861;12,14,20,36)* எனபனவற்றை முத்துவீரியம் இயம்பும். இலக்கண விளக்கத்தை *(554;6-8)* அடியொற்றி சுவாமிநாதம் *(119;7-8)* கூறும்.

இல்லோர்

இல்லோர், வரைபொருட் பிரிதல், வரைந்துகோடல்,பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்துதற்குரியர்.

வரைபொருட் பிரிதல்

இத்தகைய சூழலில் இல்லோர் கூற்று நிகழ்த்துவதாக முத்துவீரியம் *(852)* ஒரு கூற்றைச் சுட்டும்.

தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டித் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவான். இவ்வாறு பிரிந்த தலைவன், பெருநிதியுடன் திரும்பி வருவான். திரும்பிய தலைவனின் தேர் வரவினைத் தோழி, தலைவிக்குக் கூறுவாள். அந்நிலையில் மணமுரசு கேட்டு மனையிலுள்ளோர் மனையை அலங்கரிப்போமென மகிழ்வொடு கூறுவர் *(852;19)*. இதனை முத்துவீரியம் இயம்பும்.

வரைந்து கோடல்

வரைந்துகோடலின் போது இல்லோர் கூற்றுகள் நிகழ்த்துவதாக மாறனகப்பொருள் *(82)* மூன்றினை வரையறுக்கும்.

தலைவனது இல்லோர், தலைவியைத் திருமணத்திற்கு எதிர்கொண்டழைத்தல், தலைமக்கள் இருவரையும் திருமண

இல்லத்திற்கு அழைத்து வருதல், வரையும் நாளன்று தலைமக்கள் இருவரையும் அணிசெய்வதில் வல்லவர்கள் பலவாறாக அலங்காரம் செய்தல் (82;1-2) ஆகியனவற்றை மாறனகப்பொருள் குறிப்பிடும்.

பரத்தையிற் பிரிவு

இத்தகைய சூழலில் இல்லோர் மூன்று இடங்களில் கூற்றுகள் நிகழ்த்துவதாக முத்துவீரியம் (861) வரையறுக்கும்.

தலைவன், பரத்தையரிடத்துப் பிரிந்தபோது, அப்பரத்தையர் மனைக்குச் செவ்வணி அணிந்து செல்கின்ற மாதர், இக்குறியைத் தலைவனிடம் அறிவிக்கச் செல்வது நமக்கு இழிவுடையதாகுமென்று இல்லோர் தம்முள் கூறல், தோழி, தலைவியிடம் தலைவன் வந்தான் என்று இயம்புமளவில் தலைவியின் கண்கள் சிவந்தன. இதனையறிந்த இல்லோர் இனி என்ன நிகழுமோவென்று 'மனையோர் தம்முள் மகிழ்தல்,' தலைவி யாவருக்கும் வாயினேராது வெகுண்டுரைத்தலால் தலைவன் விருந்தொடு வருவான். இதனையறிந்த தலைவி ஊடல் தீர்வாள். இதனையறிந்த இல்லோர், தலைவியை மனையற மாண்புடையவள் என்று வியந்து 'விருந்தொடு செல்லத் தணிந்ததைக் கூறல்' (861;7, 26, 28) என்பனவற்றை முத்துவீரியம் மொழியும். .

கலந்துடன் வருவோர்

உடன்போக்கில் சென்ற தலைவன், தலைவியைப் போன்று எதிரில் வருபவர் கலந்துடன் வருவோராவர். இவரை மீ.பொன்.இராமநாதன் செட்டியார், "காதலனும் காதலியுமாகத் தன்னெதிர் வருகின்ற இருவர்"[103] என்றும் சொக்கப்ப நாவலர் "உடன்போக்குப் போய்த் தலைவனும் தலைவியும் போல அன்பு கலந்து ஆற்றிடை வருவோர் இருவர்"[104] என்றும் இயம்புவர்.

சூழல்

கலந்துடன் வருவோர் கற்பொடு புணர்ந்த கவ்வையின் போது கூற்று நிகழ்த்தற்குரியர்.

கற்பொடு புணர்ந்த கவ்வை

இத்தகைய சூழலின்போது கலந்துடன் வருவோர் அகப்பொருள் விளக்கம் (188), மாறனகப்பொருள் (88), இலக்கண விளக்கம் (538), சுவாமிநாதம் (114) ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இடத்தில் கூற்று நிகழ்த்துவதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

செவிலி உடன்போக்கில் சென்றோரைத் தேடிச் செல்வாள். அப்போது எதிர்வந்தோரிடம் இரங்கிப் புலம்ப, அவர்கள் தேற்றிக் கூறுவதை (188;5-6) அகப்பொருள் விளக்கம் மொழியும். இதனையே மாறனகப்பொருள் (88;8), இலக்கண விளக்கம் (538;20-21), சுவாமிநாதம் (114;2) ஆகியவையும் பின்பற்றும்.

தமர்

தமர், கிளை, சுற்றத்தார் இம்மூன்றும் தொடர்புடைய சொற்களாகும்.

தமர் எனப்படுபவர் சுற்றத்தாரைக் குறிக்கும். இச்சுற்றத்தார் உடம்பினாலும் பிறவற்றாலும் தம்மிடம் தொடர்புடையவராகக் காணப்படுவர். தமர் என்பதற்கு நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி "உறவோர், துளை, மூடர்"[105] என்றும் செந்தமிழ் அகராதி "சுற்றத்தார், சிறந்தார், பரிசனம், துளை, துளையிடுங்கருவி"[106] என்றும் குறிப்பிடும்.

கிளை என்பதற்கு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்பெயரகராதியும்[107] நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழிஅகராதியும்[108] 'கிளை - உறவு,

ஒளி, ஓர்பண், கிளையென்னேவல், கூட்டம், கைக்கிளையென்னு மிசை, தளிர், மந்தை, மரக்கிளை, மூங்கில், வீணையினோர் நரம்பு' என்று மொழியும்.

சுற்றத்தார் என்பதற்கு நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி "இனத்தார், துணைவர், பரிசாரகாரர்"[109] என்றும் செந்தமிழ் அகராதி "உறவினர்"[110] என்றும் சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் "புதல்வர், வீரர், இளைஞர்"[111] என்றும் இயம்பும். தி.சு.பாலசுந்தரம்பிள்ளையவர்கள் "சுற்றமெனப்படுவார் உடம்பின் தொடர்பாலும் பிறவற்றாலும் தம்மைச் சூழ்ந்து நிற்பவராவர். இருக்கும் இடத்தின் தொடர்பாலும் அலுவற்றொடர்பாலுந் தம்மைச் சூழ்ந்து நிற்பவரெல்லாரும் 'சுற்ற'மென்னும் இவ்வகையுள் அடங்குவர்"[112] என்று குறிப்பிடுவர்.

சூழல்

தமர் அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, உடன்போக்கிடையீடு, இல்வாழ்க்கை ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்துவர்.

அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் சூழலின்போது தமிழ்நெறி விளக்கம் (22) ஒன்று, வீரசோழியம் (குறிஞ்.நடை .) இரண்டு, களவியற்காரிகை (48) இரண்டு எனத் தமருக்குரிய கூற்றுகளை வரையறுக்கும்.

தலைவியின் தமர், தலைவனுக்கு வரைவு மறுத்துரைப்பதைத் (22;10) தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும். தலைவனின் தமர், தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டி, தலைவி இல்லிற்குப் புகுதல் (குறிஞ்.நடை ;71), தமிழ்நெறி விளக்கத்தைத் (22;10) தழுவி 'வரைவவர் மறுத்தல்' (குறிஞ்.நடை ;71) ஆகியனவற்றை வீரசோழியம் மொழியும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை 'வரைவு மறுத்தல்'

(48;2-3), இவ்வாறு வரைவு மறுத்ததும் தலைவியின் தமர் வேண்டியபடி நிதியுடன் தலைவனின் தமர் வருதல் (48;3) ஆகியனவற்றை இயம்பும்.

உடன்போக்கு

உடன்போக்கின்போது தமிழ்நெறி விளக்கம் (23) இரண்டு, வீரசோழியம் (பாலை நடை.) ஒன்று, களவியற்காரிகை (53) ஒன்று என்று தமரின் கூற்றுகளை வரையறுக்கும்.

உடன்போக்கில் சென்ற தலைவியை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வரும் பொருட்டு, உறவினர் அவர்கள் பின் செல்லும் 'இளையோர் செல்லல்,' உடன்போக்கில் சென்ற தலைவி தமரால் பெயர்ந்து வருதலை முன்னர் அறிந்த கிளைகள் மகிழ்ச்சி அடைதல் (23;4, 6) ஆகியனவற்றைத் தமிழ்நெறி விளக்கம் கூறும். தலைவி, தலைவனோடு உடன்போனது அறிந்த அவளது அண்ணன்மார் வெகுண்டு, பின்தொடர்ந்து தலைவனோடு போரிட்டு அவளை மீட்டற்குப் புறப்படும் 'தாங்கரும் பூசல் தன்னைய ரெழுச்சியை (பாலை நடை;11) வீரசோழியம் சுட்டும். தமிழ்நெறி விளக்கத்தைத் (23;6) தழுவிக் களவியற்காரிகை (53;6) குறிப்பிடும்.

உடன்போக்கிடையீடு

உடன்போக்கிடையீட்டின்போது ஓரிடத்தில் தமர் கூற்று நிகழ்த்துவதாகச் சுவாமிநாதம் (116) இயம்பும்.

தலைவியின் உடன்போக்கினை அறிந்த நற்றாய் தமருக்குக் கூற அவர்கள் சேர்ந்து கொள்ளலைச் (116;5) சுவாமிநாதம் குறிப்பிடும்.

இல்வாழ்க்கை

இத்தகைய சூழலின்போது தமர் இரண்டு இடங்களில் கூற்று நிகழ்த்துவதாக வீரசோழியம் (பாலை நடை.) மொழியும்.

உடன்போன தலைவியிடமிருந்து மகப்பேறு வாய்த்த பிறகு செய்தி வந்ததாகத் தலைவி தமர் தலைவியைத் தம்மூருக்கு அழைத்து வரச் செல்லல், தம்முடைய ஊருக்கு அழைத்து வரல் (பாலை நடை ; 23-24) ஆகியனவற்றை வீரசோழியம் குறிப்பிடும்.

ஊரார்

ஊரார் என்பது ஊர் மக்களைக் குறிக்கும். இவ்வூராரை, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதியும்[113] நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியும்[114] 'ஊரவர், பிறர்' என்றும் செந்தமிழ் அகராதி "ஊரவர், அன்னியர்"[115] என்றும் இயம்பும். ச.பாலசுந்தரம் "ஊரார் என்றது உள்ளூரினரை"[116] என்றும் புலவர் குழந்தை "ஊரார் - ஊர் மகளிர்"[117] என்றும் இயம்புவர்.

சூழல்

ஊரார் உடன்போக்கு, பரத்தையிற் பிரிவு ஆகிய சூழல்களில் கூற்றுகள் நிகழ்த்தற்குரியர்.

உடன்போக்கு

இத்தகைய சூழலின்போது வீரசோழியம் (பாலை நடை.) ஓரிடத்தில் ஊரார் கூற்று நிகழ்த்துவதாக இயம்பும்.

தலைவி, உடன்போனதை அறிந்த ஊரார் அம்பல், அலர் தோற்றுவிப்பதை (பாலை நடை ;15) வீரசோழியம் குறிப்பிடும்.

பரத்தையிற் பிரிவு

பரத்தையிற் பிரிவின்போது ஒரு இடத்தில் ஊரார் கூற்று நிகழ்த்துவதாக வீரசோழியம் (மருத நடை.) சுட்டும்.

தலைவி, தலைவனுடைய இரண்டாம் மனைவி, காமக்கிழத்தி ஆகியோருடன் வெறுப்பின்றி நட்புறவோடு பழகுவதைக் கண்ட ஊர்மக்கள், தலைவியின் பெருங்கற்பினைப் புகழ்வதை (மருத நடை;35) வீரசோழியம் இயம்பும்.

அயலோர்

அயலோர் என்போர் தம் ஊருக்குள், வீட்டிற்குப் பக்கத்தில் உள்ளவரைக் குறிக்கும். இவ்வயலோர் பற்றி, நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி, "அயலவர் - பக்கத்தார்"[118] என்றும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், "அயலோர் - பக்கத்துள்ளோர்"[119] என்றும் இயம்பும். புலவர் குழந்தை, "அயலார் - பக்கத்து வீட்டுப் பெண்டிர்"[120] என்றும் ச.பாலசுந்தரம், "அயலார் என்றது ஊர்ப்புறத்தவரை"[121] என்றும் மொழிவர்.

சூழல்

அயலோர் உடன்போக்குச் சூழலின்போது கூற்று நிகழ்த்துவர்.

உடன்போக்கு

உடன்போக்கின்போது அயலோர் ஓரிடத்தில் கூற்று நிகழ்த்துவதாக வீரசோழியம் (பாலை நடை.) மொழியும்.

தலைவி, தலைவனோடு உடன்போனது குறித்து வருந்திய நற்றாய்க்கு அயலிலுள்ளோர், தலைவி கற்பு மேம்பாட்டால் செய்த அச்செயல் தக்கதே என்று எடுத்துக்கூறி ஆறுதல் அளித்தலை (பாலை நடை;15-16) வீரசோழியம் எடுத்துரைக்கும்.

தொகுப்புரை

பார்ப்பான் உயர்ந்தோராகத் திகழ்பவர். இவனது கூற்றுகளாக, தொல்காப்பியம் ஆறினை மொழியும். கற்பொடு புணர்ந்த கவ்வையில் பார்ப்பான், செவிலியிடம் உலகியல்பை உணர்த்துவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகியவை குறிப்பிடும்.

உடன்போக்கிடையீட்டின் போது, தலைவியின் உடன்போக்கினை பார்ப்பான் நற்றாய்க்கு மொழிவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை இயம்பும்.

பிரிவின்போது தொல்காப்பியம் (1123) மொழியும் பார்ப்பானுக்குரிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

பாங்கன், தலைவனுக்கு உற்ற துணையாக இருப்பவன். இவன் பாங்கற் கூட்டத்தின்போது தலைவனை வினவல், கழறிக் கூறல், கவன்றுரைத்தல், தலைவனிடம் இயல் இடம் கேட்டல், தலைவியைக் குறிவழிக் காண்டல், தலைவனை வியந்துரைத்தல், தலைவியைக் கண்டதை மொழிதல் ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் உரையானது இயம்பும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் மொழிவதுடன் தன் மனத்துள்ளே நொந்துரைத்தலையும் மொழியும். இதனை அடியொற்றி வீரசோழியம் கூறுவதுடன் தலைவனைக் கழறல், தலைவியின் அழகுநலம் கூறல் ஆகியனவற்றைக் குறிப்பிடும். தமிழ்நெறி விளக்கம், வீரசோழியத்தைத் தழுவி அகப்பொருள் விளக்கம் மொழிவதுடன் தலைவனோடு வருந்துதல், அவனைத் தேற்றல், குறிவழிச் சேறல், தலைவனை இகழ்ந்ததற்கு இரங்கி மொழிதல்

ஆகியனவாக விரித்துரைக்கும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை இயம்பும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் பின்பற்றி மாறனகப்பொருள் கூறுவதுடன் கடவுளைக் கண்ணுற்றிறைஞ்சல், தலைவியை வியந்துரைத்தல் என்பதைக் கூடுதலாக மொழியும். இதனைப் பின்பற்றி இலக்கண விளக்கம் இயம்பும். இந்நூலையும் இறையனாரகப்பொருள் உரையையும் அடியொற்றி உரைப்பதுடன் தலைவியைக் கண்டதைக் கூறலையும் முத்துவீரியம் குறிப்பிடும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் கூறும்.

தலைவியை வளர்த்த தாய் செவிலியாவாள். தொல்காப்பியம் இவளது கூற்றுகளாக பதினைந்தினைக் கூறும். அறத்தொடு நிற்றல் சூழலில் தலைவியின் அளவு மிகத் தோன்றினும் செவிலி கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுவதை தமிழ்நெறி விளக்கமும் மொழியும்.

செவிலி தலைவியின் வேறுபாட்டினை வினவுவதாகத் தொல்காப்பியம் கூறுதலை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் பின்பற்றும்.

செவிலி, கட்டுவிச்சியிடம் தலைவியின் நோயைக் கூறவேண்டுமென்றல், கட்டுவிச்சியிடம் மொழிதல், வெறியயர்தல் என்று வீரசோழியம் கூறும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகையும் முத்துவீரியமும் சுட்டும்.

அறத்தொடு நிற்றல் சூழலில் தொல்காப்பியம் (1061;1-2, 5-7) கூறும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

வெறி விலக்கியவழி செவிலி வினவுவதாக அகப்பொருள் விளக்கம் மொழிதலை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவையும் குறிப்பிடும்.

செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நிற்றலைத் தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் இயம்பும்.

உடன்போக்கின்போது செவிலி, நற்றாயிடம் தலைவி கற்புக்கடம் பூண்டலைத் தெரிவித்தலாகத் தொல்காப்பியம் கூறுதலை வீரசோழியம், களவியற்காரிகை, முத்துவீரியம் ஆகியனவும் கூறும்.

உடன்போக்குச் சூழலில் தொல்காப்பியம் (1061;10-11) கூறும் சில கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

கற்பொடு புணர்ந்த கவ்வையின்போது செவிலி, தலைவி உடன்போனவழி இல்லிருந்து வருந்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதை இறையனாரகப்பொருள் உரையானது செவிலி, கவன்றுரைத்தல், சுரம் நினைந்து இரங்கி மொழிதல், தலைவியின் அடி நினைந்து இரங்கல் என மொழியும். தமிழ்நெறி விளக்கமானது தலைவியின் கற்பிற்கு இரங்கலைக் கூறும். அகப்பொருள் விளக்கமானது தனக்கு ஆறுதல் கூறுவோரிடத்து மனம் அழிந்து வருந்தல், தெய்வம் வாழ்த்தல் என்று மொழிவதுடன் இறையனாரகப்பொருள் உரையையும் தழுவிக் கூறும். களவியற்காரிகையானது தலைவியைக் காணாது வினவுவதுடன் தமிழ்நெறி விளக்கத்தையும், இறையனாரகப்பொருள் உரையையும் தழுவிக் கூறும். அகப்பொருள் விளக்கத்தைத் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும்

கூறும். இந்நூலையும் களவியற்காரிகையையும் அடியொற்றி முத்துவீரியம் குறிப்பிடும். இதனையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் மொழியும்.

தலைவி உடன்போக்கில் சென்றதையறிந்து குரவொடு வருந்தல், வேதியரை வினாதல், தலைவனை வியந்துரைத்தல் என்று இறையனாரகப்பொருள் உரையானது மொழியும். தமிழ்நெறி விளக்கமானது சுரத்தில் கண்ட பொருள்களிடம் இரங்கிக் கூறல், மீளல் ஆகியனவற்றைக் குறிப்பிடும். தலைவியைத் தேட முற்படுதலை மொழிவதுடன் தமிழ்நெறி விளக்கத்தை அடியொற்றி வீரசோழியம் இயம்பும். அகப்பொருள் விளக்கமானது நற்றாயைத் தேற்றல், எயிற்றியுடன் புலம்புதல், சுவடு கண்டு இரங்கி மொழிதல், கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல், தலைவியைக் காணாது கவலை கொள்ளல் ஆகியவற்றுடன் இறையனாரகப்பொருள் உரையையும் தழுவிக் கூறும். களவியற்காரிகையானது புறவோடுரைத்தல், சுரத்து வினாதல் என்பதுடன் வீரசோழியத்தையும் அகப்பொருள் விளக்கத்தையும் பின்பற்றும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருள் கூறுவதுடன் நற்றாயிடம் தலைவி, தலைவனுடைய ஊருக்குச் சென்றுவிட்டதை மொழிதல், கடவுட் பராவல் ஆகியனவற்றையும் இயம்பும். இதனை அடியொற்றியது இலக்கண விளக்கம். இறையனாரகப்பொருள் உரை, களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களை அடியொற்றி முத்துவீரியம் மொழிவதுடன் சோதிடங் கேட்டல், சுவட்டினைக் கண்டறிதல், வேட்ட மாதரிடம் வினவல், மாவிரதியரிடம் வினவுதல் ஆகியனவற்றையும் இயம்பும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

மீட்சியில் தலைவி, தலைவன் ஊருக்குச் சென்றதை நற்றாய்க்குக் கூறுவதை அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை குறிப்பிடும்.

தன்மனை வரைதலில் தலைவன், தலைவியை வரைந்தமை நற்றாய்க்கு மொழிவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியன இயம்பும்.

இல்வாழ்க்கையின்போது தொல்காப்பியம் (1099) மொழியும் செவிலிக்குரிய கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்பெறவில்லை.

செவிலி, நற்றாய்க்கு தலைவியின் இல்வாழ்க்கை இயம்பலை இறையனாரகப்பொருள் உரை இயம்பும். இதனை அடியொற்றி அகப்பொருள் விளக்கம் கூறுவதுடன் வாழ்க்கைத் தன்மை இயம்பல், இருவர் காதல் அறிவித்தல் ஆகியனவற்றையும் மொழியும். களவியற்காரிகையானது நற்றாயைப் புகழ்தலுடன் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் தழுவி மாறனகப்பொருள் ஒரு கூற்றாக மொழியும். களவியற்காரிகை, அகப்பொருள் விளக்கம் இரண்டையும் அடியொற்றியது இலக்கண விளக்கம். இதனைத் தழுவி முத்துவீரியம் மொழிவதுடன் தலைமக்களது காதல் கட்டுரைத்தல், கற்புத் திறத்தை அறிவித்தல், கலவியுரைத்தல் என்பனவற்றையும் இயம்பும். இதனை அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

நற்றாய் தலைவியை ஈன்ற தாய். இவளது கூற்றுகளாகத் தொல்காப்பியம் இருபத்து மூன்றினை மொழியும். இவள் அறத்தொடு நிற்றல் சூழலில் வரைவு மறுக்கப்பட்ட நிலையில் நற்றாய்அறத்தொடு நிற்றலை

இறையனாரகப்பொருள் உரை இயம்பும். இதனைத் தழுவித் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடுவதோடு இளையோர்க்கு எதிர்தலையும் சுட்டும்.

தலைவியின் வேறுபாட்டினை அறிந்த நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்பதை வீரசோழியம், களவியற்காரிகை, மாறனகப்பொருள் ஆகியவை மொழியும். தலைவியின் வேறுபாடு கண்டு நற்றாய் செவிலியை வினவுதலைச் சுவாமிநாதம் சுட்டும்.

கற்பொடு புணர்ந்த கவ்வையின்போது தொல்காப்பியம் இயம்பும் நற்றாய் புள் நிமித்தம் போன்றவை பார்த்தலை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் இயம்பும்.

தொல்காப்பியம் தலைவி உடன்போக்கில் சென்ற கொடிய வழி நினைத்து அச்சம் சார்ந்தவிடத்துக் கூற்று நிகழ்த்துவதையே அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை விளம்பும்.

தலைவியின் உடன்போக்கினை அறிந்த நற்றாய் தன்னையும் தலைவனையும் தலைவியையும் நினைத்துக் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிவதைத் தமிழ்நெறி விளக்கமானது தன்னைத் துறந்து சென்றனளே என்று வருந்துதலை இயம்பும். இதனைத் தழுவி வீரசோழியம் கூறுவதுடன் பல ஆண்டுகள் தலைவியுடன் இருந்த நிலை நினைத்து வருந்துதலையும் கூறும். அகப்பொருள் விளக்கமானது அயலாரொடும், பயிலிடந்தம்மொடும் புலம்பலைக் கூறும். களவியற்காரிகை, வீரசோழியத்தை அடியொற்றியது. அகப்பொருள் விளக்கத்தைத் தழுவி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் இயம்பும். களவியற்காரிகையைத் தழுவுவதுடன் கிளி மொழிக்கு

இரங்கி மொழிதலை முத்துவீரியம் சுட்டும். இதனைத் தழுவி சுவாமிநாதம் குறிப்பிடும்.

நற்றாய் தலைமக்களுக்கு நன்மை பற்றிக் கருதுமிடத்துக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் இயம்பும். இதனை அகப்பொருள் விளக்கமானது சுரம் தணிய வேண்டுமென்றல், தலைவியின் மென்மை, இளமைத் தன்மைக்கு இரங்கல் ஆகியனவற்றை மொழியும். இதனைத் தழுவுவதுடன் களவியற்காரிகையானது செஞ்சுடர் தன்னைப் பரவல் என்றும் கூறும். இதனையும் அகப்பொருள் விளக்கத்தையும் பின்பற்றி மாறனகப்பொருள் இயம்பும். இதனைத் தழுவி இலக்கண விளக்கம் சுட்டும். மாறனகப்பொருளையும் இலக்கண விளக்கத்தையும் அடியொற்றி முத்துவீரியம் குறிப்பிடும். இந்நூலையும் இலக்கண விளக்கத்தையும் தழுவி சுவாமிநாதம் இயம்பும்.

தலைவி உடன்போகியவழித் தோழியிடம் புலம்புவனதத் தொல்காப்பியம் குறிப்பிடும். இதனை அகப்பொருள் விளக்கமானது தோழி, தோழியரொடு புலம்பல் என்று குறிப்பிடும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் தழுவும். இந்நூலைத் தழுவி சுவாமிநாதம் கூறுவதுடன் அயலார் தோழியொடு புலம்பல் என்றும் குறிப்பிடும்.

நற்றாய் மொழியும் தொல்காப்பியக் (982;2-7) கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்பெறவில்லை.

மீட்சியின்போது தலைவனது உள்ளக் கருத்தை அறிதற்கு வேலனை வினவுவதை இறையனாரகப்பொருள் உரை இயம்பும். இதனைத் தழுவி அகப்பொருள் விளக்கமும் களவியற்காரிகையும் குறிப்பிடும். இதனை அடியொற்றி மாறனகப்பொருள் மொழிவதுடன்

இறைவி நற்றாய் உறவெய்தவ ணென்றலைக் கூடுதலாகவும் கூறும். இதனைத் தழுவி இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் இயம்பும்.

தன்மனை வரைதலின்போது மணனயர் வேட்கையால் செவிலியை வினவலை இறையனாரகப்பொருள் உரை குறிப்பிடும். இதனைத் தழுவியது அகப்பொருள் விளக்கம். களவியற்காரிகை மணங்கண்டுரைத்தலைச் சுட்டும். அகப்பொருள் விளக்கத்தை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் பின்பற்றும்.

உடன்போக்கிடையீட்டின் போது தலைவியின் உடன்போக்கினைத் தமருக்குக் கூறுதலைச் சுவாமிநாதம் சுட்டும்.

பரத்தையிற் பிரிவுச் சூழலில் தாய் கண்டு மொழிவதைத் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும்.

அறத்தொடு நிற்றல் சூழலில் தொல்காப்பியம் கூறும் செவிலியும் நற்றாயும் தம்முட் பொருந்தி வெறியாட்டெடுக்கக் கருதுவதை வீரசோழியம் குறிப்பிடும். இச்சூழலில் (1061 ; 1-2, 5-7, 8-11) மொழியும் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை. உடன்போக்கில் சென்றோர் திரும்பி வருவதையறிந்த தாயர் கூற்று மொழிவதைத் தமிழ்நெறி விளக்கம் இயம்பும்.

பாணன் தலைமக்களது ஊடலைத் தீர்த்து வைக்கக்கூடியவன். இவனது கூற்றுகளாகத் தொல்காப்பியம் கூறுவன இரண்டு. பரத்தையிற் பிரிவின்போது தலைவியிடத்து வாயில் பெறாது பாணன் புலந்துரைப்பதை இறையனாரகப்பொருள் உரை இயம்பும். இதனையே தமிழ்நெறி விளக்கம், மாறனகப்பொருள், முத்துவீரியம் ஆகியவையும் குறிப்பிடும். மேலும், இறையனாரகப்பொருள் உரையானது பாணன், தலைவியின் பெருமை உணர்த்துவதைக் குறிப்பிடும்.

வினைவயிற் பிரியுமிடத்தில் தொல்காப்பியம் (1115) மொழியும் இரண்டு கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்படவில்லை.

கூத்தர், நடிப்புத் திறத்தால் தலைமக்களை நல்வழிப்படுத்துபவர். இவர் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் (1114, 1115) குறிப்பிடும் பத்து கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

உள்ளக் குறிப்பை உடம்பால் தோற்றுவிக்கும் விறலியின் கூற்றுகள் அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

பரத்தை, அழகும் இளமையும் காட்டி ஆடவரை மயக்கக் கூடியவள். இவள் பரத்தையிற் பிரிவுச் சூழலின்போது சேடியைக் கண்டு பழித்தலை அகப்பொருள் விளக்கம் விளம்பும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். முத்துவீரியமானது தேர்வரவு கண்டு மகிழ்தல், தம்முள்ளுரைத்தல், பரத்தைத் தலைவி தன்னை வியத்தல் ஆகியனவற்றை இயம்பும். இலக்கண விளக்கத்தைத் தழுவி சுவாமிநாதம் குறிப்பிடுவதோடு தலைவனை விடுத்தலையும் கூறும்.

பரத்தை தற்புகழ்தலை, இறையனாரகப்பொருள் உரையானது மொழியும்.

காமக்கிழத்தி, இல்லற உரிமை வாய்ந்தவள். இவள் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் (1097) இயம்பும் எட்டு கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் இயம்பப்பெறவில்லை.

இல்வாழ்க்கையின்போது தலைவனின் காமக்கிழத்தியும் இரண்டாம் மனைவியும் தலைவியை எதிர்கொள்ளலை வீரசோழியம் சுட்டும்.

அறிவர், முக்காலத்தை அறியும் ஆற்றலுடையவர். இத்தகைய அறிவர் நிகழ்த்தும் தொல்காப்பியக் (1099) கூற்றுகள் இரண்டினைப் பற்றிப் பிற அக இலக்கணங்களில் சுட்டப்பெறவில்லை.

கண்டோராவர், தலைமக்கள் பாலை நிலத்தில் சந்திக்கும் உயர்ந்த தன்மை வாய்ந்த எயிற்றியராவர். இவரது கூற்றுகளாகத் தொல்காப்பியம் மொழிவன ஏழு. இவர் வரைவு முடுக்கத்தின்போது தலைவி கண்டுயிலாமை கண்டார் உரைத்தலை முத்துவீரியம் மட்டும் சுட்டும்.

உடன்போக்கின்போது தலைமக்களுக்கு வழியருமையை எடுத்துக்கூறிக் கூற்று நிகழ்த்துவதைத் தொல்காப்பியம் இயம்பும். இதனை நெறி விலக்கிக் கூறல் என்று இறையனாரகப்பொருள் உரையானது குறிப்பிடும். இதனைத் தழுவி வீரசோழியம் குறிப்பிடுவதுடன் தலைமக்களது கற்பொழுக்கத்தைப் புகழ்தலையும் இயம்பும். இதனைப் பின்பற்றிக் களவியற்காரிகை சுட்டும்.

சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிதலை இறையனாரகப்பொருள் உரையானது குறிப்பொடு கூறல் என இயம்பும். இதனையே தமிழ்நெறி விளக்கம் சுட்டும். வீரசோழியமானது தம்முள் நேர் என்றுரைத்தலைக் குறிப்பிடும். தமிழ்நெறி விளக்கத்தைத் தழுவி அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகியவை

மொழியும். வீரசோழியத்தைத் தழுவி முத்துவீரியமும், இலக்கண விளக்கத்தை அடியொற்றி சுவாமிநாதமும் குறிப்பிடும்.

கண்டோர் தலைமக்களிடம் தம்மூர் வந்து தங்கிச் செல்லுமாறு அன்புடன் வேண்டுவதைத் தொல்காப்பியம் இயம்பும். இதனையே இறையனாரகப்பொருள் உரையானது நகரணிமை கூறுதல் என்று சுட்டும். அகப்பொருள் விளக்கமானது தங்கள் வீட்டில் தங்கிச் செல்லுமாறு மொழிதலோடு இறையனாரகப்பொருள் உரையையும் தழுவிக் கூறும். இதனை அடியொற்றிக் களவியற்காரிகை சுட்டும். இந்நூலையும் அகப்பொருள் விளக்கத்தையும் அடியொற்றி மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் குறிப்பிடும். இதனைத் தழுவி முத்துவீரியம் சுட்டும். இந்நூலையும் இலக்கணவிளக்கத்தையும் தழுவியது சுவாமிநாதம்.

தலைவியைத் தேடிச் சென்ற செவிலியைப் போகவிடாமல் தடுத்தற்கண் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் மொழிதலை இறையனாரகப்பொருள் உரையானது அழுங்கு தாய்க்கு மொழிதல், உலகியல்பு உரைத்தல் எனக் குறிப்பிடும். இதனையே தமிழ்நெறி விளக்கமும் சுட்டும். வீரசோழியம், இதனைத் தழுவுவதுடன் எதிர்ந்தோர் கூறல் என்றும் மொழியும். இறையனாரகப்பொருள் உரையையும் வீரசோழியத்தையும் தழுவிக் களவியற்காரிகை மொழிவதுடன், செவிலியின் துயரத்தைத் தணித்தலையும் கூறும். வீரசோழியம், களவியற்காரிகை ஆகியனவற்றைத் தழுவி முத்துவீரியம் கூறுவதுடன் செவிலியிடம் மீள்வதே நல்லது என்றுரைத்தலையும் இயம்பும்.

உடன்போக்குச் சூழலில் தொல்காப்பியத்தில் (986;5-6, 7) இடம்பெற்றுள்ள கண்டோர் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் கூறப்பெறவில்லை.

உடன்போக்கில் சென்ற தலைவியை மீட்க முற்பட்ட தமரிடம் அயலோர் அறிவுரை கூறலைத் தமிழ்நெறி விளக்கம் சுட்டும். இதனையே வீரசோழியமும் தழுவும்.

கற்பொடு புணர்ந்த கவ்வையின்போது கண்டோர் இரங்குவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் இயம்பும்.

மீட்சியின்போது கண்டோர் தலைவியின் வரவினைத் தோழியிடம் கூறுதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றினை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை குறிப்பிடும்.

வரைந்து கோடலின்போது கண்டோர் மகிழ்வதை மாறனகப்பொருளும் சுவாமிநாதமும் மொழியும்.

பரத்தையிற் பிரிவின்போது கண்டோர் தலைவியின் ஊடலுக்குரிய காரணத்தை மொழிவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகியவை இயம்பும். இதனை அடியொற்றி முத்துவீரியம் கூறுவதுடன் தலைவியின் முகமலர்ச்சி கூறல், கலவி எய்துதலை எடுத்துரைத்தல், புனல் வரவுரைத்தல் ஆகியனவாக மொழியும். இதனை அடியொற்றி சுவாமிநாதம் குறிப்பிடும்.

தலைவனது தோழர்களுள் ஒருவர் இளையோராவர். இவர் பொருள்வயிற் பிரிவுச் சூழலில் தொல்காப்பியம் (1116) நிகழ்த்தும் ஏழு கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் குறிப்பிடப்படவில்லை.

பொருள் முடித்து வரும் தலைவனை இளையோர் எதிர்கொள்வதை வீரசோழியமும் முத்துவீரியமும் இயம்பும்.

வாயில்கள் தலைமக்களுக்கு வாயில்களாகத் திகழ்பவர். பரத்தையிற் பிரிவின்போது வாயில்கள் மொழியும் தொல்காப்பியக் (1098, 1455) கூற்றுகள் இரண்டு. இவை பிற அக இலக்கணங்களில் மொழியப்படவில்லை.

வாயில்கள் பரத்தையிடம் இரந்து வேண்டுதல், தலைவியை பொறுத்துக்கொள்ள வேண்டுமாறு கூறல் ஆகியனவற்றை வீரசோழியம் இயம்பும்.

வாயில்கள் தலைவியின் கோபத்தை ஆற்றுவித்தலை இறையனாரகப்பொருள் உரையானது குறிப்பிடும். பரத்தையர் சேரியிலிருந்து வரும் தலைவன் வரவினை உவந்து மொழிதலை அகப்பொருள் விளக்கம் இயம்பும். இதனையே மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் சுட்டும். முத்துவீரியமானது செவ்வணி கண்டு பரத்தை வாயில்கள் மொழிதல், தலைவன் மனைபுகல் கண்டு கூறல், தலைவனை வாழ்த்துதல் ஆகியனவற்றை மொழியும். இலக்கண விளக்கத்தைத் தழுவி சுவாமிநாதம் கூறும்.

வாயில்கள் தலைவியிடத்து வாயில் வேண்டல், தலைவி வாயில் மறுத்ததைத் தலைவனிடம் கூறல் ஆகியனவற்றைச் சுவாமிநாதம் கூறும்.

தலைவனைத் தக்கான் என்றும் தகான் என்றும் வாயில்கள் கூறுவதை இறையனாரகப்பொருள் உரையானது கூறும்.

தலைவன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து வாயில்கள் தலைவியிடம் பருவமன்றென்றும் வருவரென வற்புறுத்தியும் ஆற்றுவித்தல், சிறைப்புறமாக ஆற்றுவித்தல் ஆகியனவற்றை இறையனாரகப்பொருள் உரையானது குறிப்பிடும்.

பாகன், கட்டுவிச்சி, உழையர், இல்லோர், கலந்துடன்வருவோர், தமர், ஊரார், அயலோர் ஆகியோரது கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் மட்டுமே மொழியப்பட்டுள்ளன.

தலைவனது தேரோட்டி பாகன். இவன் பொருள்வயிற்பிரிவுச் சூழலில் தேரினை விரைந்து செலுத்துவதை வீரசோழியம் இயம்பும்.

கட்டுவிச்சி குறி சொல்லும் தன்மை வாய்ந்தவள். இவள் அறத்தொடு நிற்றல் சூழ்நிலையில் தலைவிக்கு ஏற்பட்ட நோய் முருகணங்கென்று கூறுவதைத் தமிழ்நெறி விளக்கம், களவியற்காரிகை, முத்துவீரியம் ஆகியவை மொழியும்.

உழையர், தலைமக்களுக்கு ஏவல் செய்பவர். பரத்தையிற் பிரிவின்போது உழையர் செவ்வணி கண்டு அழுங்கிக் கூறலை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகியவை குறிப்பிடும். முத்துவீரியமானது தலைவியிடம் கால நிகழ்வுரைத்தல், குறிப்பறிந்து புலந்தமை மொழிதல், இயற்பழித்துரைத்தல், கலவியிடத்து ஊடல் ஆகியனவற்றைக் குறிப்பிடும். இலக்கண விளக்கத்தைத் தழுவி சுவாமிநாதம் மொழியும்.

இல்லோர் வரைபொருட் பிரிதலின்போது மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தலை முத்துவீரியம் கூறும்.

வரைந்துகோடலில் இல்லோர் தலைவியை எதிர்கோடல், தலைமக்களை இல்லத்திற்கு அழைத்து வருதல், அலங்காரம் செய்தல் ஆகியனவற்றை மாறனகப்பொருள் இயம்பும்.

பரத்தையிற் பிரிவுச் சூழலில் இல்லோர் செவ்வணி விடுக்க கூறல், இல்லோர் மகிழ்தல், தலைவன் விருந்தொடு செல்லத் தணிந்ததைக் கூறல் ஆகியனவற்றை முத்துவீரியம் குறிப்பிடும்.

கலந்துடன் வருவோர் தலைமக்களைப் போன்றவர். இவர்கள் கற்பொடு புணர்ந்த கவ்வையின்போது செவிலியின் புலம்பலைத் தேற்றுவதை அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவை குறிப்பிடும்.

தமர் என்பது கிளை, சுற்றத்தாரைக் குறிக்கும். அறத்தொடு நிற்றல் சூழலின்போது தலைவியின் தமர், தலைவனுக்கு வரைவு மறுத்தலைத் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடும். வீரசோழியமானது தலைவனின் தமர் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள இல்லிற்குப் புகுதலோ்டு தமிழ்நெறி விளக்கத்தையும் தழுவிக் கூறும். இதனைத் தழுவிக் களவியற்காரிகை மொழிவதுடன் தலைவனின் தமர் பரிசமொடு வருதலையும் குறிப்பிடும்.

உடன்போக்கின்போது தலைவியை மீட்டுக் கொண்டு வர இளையோர் செல்லல், தலைவி வருவதையறிந்து மகிழ்ச்சி அடைதல் ஆகியனவற்றைத் தமிழ்நெறி விளக்கம் கூறும். தலைவியை மீட்டற்குப் புறப்படலை வீரசோழியம் இயம்பும். தமிழ்நெறி விளக்கத்தைத் தழுவிக் களவியற்காரிகை சுட்டும்.

உடன்போக்கிடையீட்டின்போது தலைவியின் உடன்போக்கினை அறிந்து தமர் சேர்தலைச் சுவாமிநாதம் இயம்பும்.

இல்வாழ்க்கையின்போது தலைவி தமர், தலைவியை அழைத்து வரச் செல்லுதல், தம் வாழ்பதி புகுதல் என்று வீரசோழியம் இயம்பும்.

ஊர் மக்களை ஊரார் என்பர். உடன்போக்குச் சூழலின்போது ஊரார் அம்பலும் அலரும் மொழிவதை வீரசோழியம் குறிப்பிடும்.

பரத்தையிற் பிரிவின்போது ஊரார் தலைவியை ஏத்தியுரைப்பதை வீரசோழியம் சுட்டும்.

அயலோராவர் பக்கத்தில் உள்ளவரைக் குறிக்கும். உடன்போக்குச் சூழலின்போது அயலோர், தலைவியின் கற்பு மேம்பாட்டினைக் கூறுவதை வீரசோழியம் மொழியும்.

சான்றெண் விளக்கம்

1. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.994
2. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.141
3. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.55
4. மொ.அ.துரைஅரங்கசாமி, தொல்காப்பிய நெறி, ப.298
5. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.119
6. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.48
7. மேலது, ப.50
8. மேலது, ப.51
9. மேலது, ப.52
10. மேலது, ப.54
11. மேலது, ப.54
12. மேலது, ப.55
13. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) களவியல், ப.445
14. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்) ப.56
15. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.67
16. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.53
17. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.125
18. மேலது, ப.126
19. மேலது, ப.126

20. மேலது, ப.126

21. மேலது, ப.127

22. மேலது, ப.127

23. மேலது, ப.195

24. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக்.54-55

25. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.138

26. மேலது, ப.130

27. மேலது, ப.131

28. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.91

29. வெ.வரதராசன், தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும், ப.7

30. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், பக்.397-398

31. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.121

32. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.174

33. மேலது, ப.183

34. பி.இராமனாதன், தொகுதி - ஒன்று, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, ப.461

35. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.144

36. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.93

37. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.57

38. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.120

39. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.294

40. க.வெள்ளைவாரணன், சங்க காலத் தமிழ் மக்கள், ப.90

41. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.57

42. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.179

43. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.184

44. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், பக்.178-179

45. மேலது, ப.189

46. மேலது, ப.189

47. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.56

48. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், பக்.67-68

49. முத்து.சண்முகம்பிள்ளை, பெருஞ்சொல்லகராதி, தொகுதி - இரண்டு, ப.601

50. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.137

51. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் புறத்திணை இயல் உரைவளம், ப.178

52. மேலது, ப.179

53. மேலது, ப.190

54. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.56

55. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.67

56. ஆ.சிவலிங்கனார் (தொ.கு.), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல், ப.214

57. க.வெள்ளைவாரணன், சங்க காலத் தமிழ் மக்கள், ப.42

58. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.57

59. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.143

60. க.வெள்ளைவாரணன் (ஆ.உ.), தொல்காப்பியம் - செய்யுளியல் உரைவளம், ப.925

61. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.95

62. Thamzhannal (Peria Karuppan, R.M.), Tradition and Talent in Cankam Poetry, P.179

(The by standers are passers - by or travellers or way farers)

63. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.141

64. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக்.56-57

65. மொ.அ.துரைஅரங்கசாமி, தொல்காப்பிய நெறி, ப.301

66. சொக்கப்பநாவலர் (உ.ஆ.), தஞ்சைவாணன் கோவை, ப.267

67. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம் III செய்யுளியல் & மரபியல், ப.155

68. சு.இராசாராம், அக மாந்தர்களில் கண்டோர், ப.95

69. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.125

70. மேலது, ப.127

71. மேலது, ப.125

72. மேலது, ப.128

73. மேலது, ப.128

74. கா.ர.கோவிந்தராச முதலியார், அகப்பொருள் விளக்கம் (பழைய உரையுடன்), ப.55

75. புலவர் சேயொளி (ப.ஆ.), இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும், ப.66

76. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.141

77. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.57

78. நா.பாலகிருட்டினன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர் ஆய்வு, ப.122

79. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், பக்.141-142

80. ஆ.இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு, ப.209

81. இரா.இளங்குமரன், பாணர், ப.118

82. மீ.பொன்.இராமநாதன் செட்டியார், அம்பிகாபதி கோவை, ப.276

83. ப.கொழந்தசாமி, தமிழ்ப் புதுக்கவிதைகளில் அகப்பொருள் மரபுக் கூறுகள், ப.9

84. நக்கீரனார் (உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், ப.181

85. மேலது, ப.182

86. மேலது, ப.182

87. மேலது, ப.193

88. மேலது, ப.194

89. மேலது, ப.197

90. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.993

91. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.466

92. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.57

93. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.194

94. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.72

95. கே.ராஜகோபாலாச்சாரியார், இலக்கண விளக்கம் (பொருளியல்), ப.180

96. ஈ.கோ.பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப.51

97. மேலது, ப.52

98. பி.இராமனாதன், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, தொகுதி - ஒன்று, ப.269

99. நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழியகராதி, ப.296

100. மணிமேகலைத் தமிழ்ச்சொல் அகராதி, ப.112

101. பழனி.அரங்கசாமி (ப.ஆ.), பெருஞ்சொல்லகராதி, தொகுதி - மூன்று, பக்.421-422

102. மீ.பொன்.இராமநாதன் செட்டியார், அம்பிகாபதிகோவை, ப.258

103. மேலது, ப.241

104. சொக்கப்பநாவலர் (உ.ஆ.), தஞ்சைவாணன்கோவை, ப.285

105. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.752

106. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.317

107. பி.இராமனாதன், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, தொகுதி - ஒன்று, ப.420

108. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.469

109. மேலது, ப.696

110. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.287

111. இரா.சாரங்கபாணி, சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம், தொகுதி - ஒன்று, ப.293

112. தி.சு.பாலசுந்தரம்பிள்ளையவர்கள் (இளவழகனார்), பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, பக்.180-181

113. பி.இராமனாதன், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி, தொகுதி - ஒன்று, ப.277

114. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ.), நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ப.313

115. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.98

116. ச.பாலசுந்தரம், தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம் III செய்யுளியல் & மரபியல், ப.154

117. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.144

118. நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி, ப.108

119. இரா.சாரங்கபாணி, சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி- ஒன்று, ப.55

120. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.144

121. ச.பாலசுந்தரம், தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம் III செய்யுளியல் & மரபியல், ப.154

முடிவுரை

முடிவுரை

தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகளுள் ஒன்று கூற்று. இக்கூற்றைக் குறித்திட கிளவி, உரைத்திறம், செப்பல், மொழிதல் என்பனவற்றையும் சுட்டும். தொல்காப்பியத்தில் கூற்று என்ற சொல் பதினான்கு இடங்களில் பயின்று வந்துள்ளது. இக்கூற்று என்பதற்கு உரையாசிரியர்கள் சொல்லக்கருதுதல், கூற்று, இயல்பு, கூறுபாடுகள், துறை, கூற்றாற் கூறுதல், சொல், மொழி ஆகிய சொற்களையும் சுட்டுவர்.

தன் உள்ளக் கருத்தைக் கேட்பவருக்கு இன்னார் என்பது புலப்படும்படி நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உணர்த்துவது கூற்று ஆகும்.

இயற்கைப் புணர்ச்சியில் தொல்காப்பியம் குறிப்பிடும் தலைவனது கூற்றுகளுள் மெய்தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல், தலைவியைத் தழுவ விரும்பிக் கூறல், இடையூறு கிளத்தல், புணர்ச்சி நிகழாது காலம் நீட்டிக்க வருந்துதல் என்பன பிற்கால அக இலக்கணங்களில் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளன. தலைவன் விரும்பிய புணர்ச்சியைப் பெற்றவழி முன்னிலைக் கூற்று, நலம் பாராட்டல், முறுவற் குறிப்பை அறிதல், புணர்ச்சிக்கு உடன்படல், தெளிவுபடுத்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. இச்சூழலில் கூறப்பட்டுள்ள (1047 ; 1, 3-4) மூன்று கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

வன்புறையில் தலைவன், தலைவியைத் தேற்றிக் கூறுதலாகத் தொல்காப்பியம் கூறுதல் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. பிரிவுழி மகிழ்ச்சியில் தலைவன், தலைவி தன்னை விட்டுப் பிரிந்துபோகும் நிலையில் மகிழ்ந்து பாகனிடம் எடுத்துரைத்தல் புதிய கூற்றாகும்.

பிரிவுழிக் கலங்களில் தலைவன், தலைவி பிரிந்து செல்லும்போது வருந்துதல், இடந்தலைப்பாட்டில் தலைவியைப் பெற்றவழி மகிழ்தல், பாங்கற்கூட்டத்தில் பாங்கன் மொழியும் நல்லொழுக்கங்களை மறுத்துரைத்தல், ஆற்றாமை நீக்க முற்படுதல், தோழி மதியுடம்பாட்டில் தோழியை இரந்து பின்னிற்றல், குறையுறல், தோழியிற்கூட்டத்தில் தலைவன், தலைவியைப் பற்றிக் கூறல், நகையாடல், இரந்து குறையுறல், மடலேறுவேன் என்றல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சி அடைந்துள்ளன. இச்சூழலில் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (1049 ; 1, 1048 ; 15-18) நான்கு கூற்றுகள் வீழ்ச்சி பெற்றுள்ளன.

இருவகைக் குறியில் தொல்காப்பியம் குறிப்பிடும் தலைவன் பரிவுற்று மெலிதல், தலைவியைப் பெற்று மகிழ்தல், வழியருமை கூறியவிடத்துக் கூறல் ஆகிய கூற்றுகள் பின்வந்த அக இலக்கணங்களில் வளர்ச்சியை எய்தியுள்ளன. வரைவு முடுக்கத்தின் போது குறியிடத்துச் சென்ற தலைவனிடம் வரைவுகடாவ மறுத்துரைத்தல், ஒருவழித்தணத்தல், வரைவிடைப் பிரிவு ஆகிய சூழல்களில் தலைவன் திரும்பி வந்து தோழியிடம் கூற்று நிகழ்த்துதல் ஆகியவை புதிய கூற்றுகளாகும்.

உடன்போக்குச் சூழலில் தொல்காப்பியம் கூறும் தலைவன், தலைவியை உடன்கொண்டு செல்ல மறுத்தல், துணிதல் என்பன பிற்கால அக இலக்கணங்களில் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளன. உடன்போக்கிற்குரிய பருவம் குறித்து ஆராய்தல், சுரத்திடைச் செல்லல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் மொழியும் (987 ; 1, 3-6) இரண்டு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. தோழி, தலைவனிடம் வரைவு கடாவியவிடத்துத்

தன் நெஞ்சொடு மொழிதல், உடன்போக்கிடையீட்டில் தலைவன், தலைவியின் தமரென்று அறிந்து மறைதல், மீட்சியில், உடன்போக்கில் சென்றோர் திரும்பி, தம் ஊரினை அடைதல், தன்மனை வரைதலில் தலைவன், திருமணம் செய்துகொண்டதைச் சுற்றத்தாருக்குக் கூறென்றல், வரைவு மலிவில் தலைவி கடவுளை வணங்குவதைத் தலைவன் கண்டு மகிழ்தல், வரைந்து கோடலில் தலைவன், தலைவியை மணத்தல் ஆகிய சூழல்களில் மொழிதல் புதிய கூற்றுகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

மலிவில் தொல்காப்பியம் கூறும் (1-30) பதினைந்து கூற்றுகள் பிற்கால அக இலக்கணங்களில் வீழ்ச்சியாகவும் தலைவன், தோழியைப் புகழ்ந்துரைத்தல் புதிய கூற்றாகவும் இடம்பெற்றுள்ளன.

ஊடலில் தொல்காப்பியம் மொழியும் தலைவன், தலைவியிடம் இரத்தல், தன்னிடத்துத் தவறில்லையென்றல், தலைவியின் சீறடி தொழல், வாயில்களோடு உரையாடல் ஆகியன வளர்ச்சியடைந்துள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1092 ; 35-36) கூறும் ஒரு கூற்று வீழ்ச்சியடைந்துள்ளது. பரத்தையிடத்துச் சென்ற தலைவன், திரும்பி வந்து மகிழ்ந்திருத்தல் சூழலில் இயம்பும் கூற்றுகள் புதிய கூற்றுகளாகும்.

ஓதல் போன்ற பல்வேறு பிரிவுகளின்போது தலைவன் குறிப்பிடும் தொல்காப்பியக் கூற்று, கல்வி காரணமாகப் பிரிதலென்று முத்துவீரியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகைவயிற் பிரிவில் தொல்காப்பியம் இயம்பும் (987 ; 14, 17-18) நான்கு கூற்றுகள் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வீழ்ச்சியடைந்துள்ளன. வேந்தர்க்குற்றுழிப் பிரிவில் தலைவன் மொழியும் தொல்காப்பியக் கூற்று வளர்ச்சி அடைந்துள்ளது. பிரிந்த

தலைவன் வினைமுற்றி மீளும் நிலையில் மொழிதல் புதிய கூற்றுகளாகவும் தூதிற்பிரிவில் தொல்காப்பியம் (987 ; 15) சுட்டும் ஒரு கூற்று வீழ்ச்சியாகவும் இடம்பெற்றுள்ளன. காவற்பிரிவில் தலைவன் நாடு காத்தற்குப் பிரியும் தொல்காப்பியக் கூற்று மாற்றமின்றி உள்ளது. பொருள்வயிற் பிரியும் சூழலில் தொல்காப்பியம் குறிப்பிடும் தலைவன் வேற்று நாட்டிற்குப் பிரிதல், பிரியேன் என்றவன் பிரிந்து செல்லல், இடைச்சுரத்தில் மீண்டுவர நினைத்தல் ஆகியன வளர்ச்சி அடைந்துள்ளன. பொருள்வயிற் பிரிவில் தொல்காப்பியம் (1092 ; 37-39, 43-44, 40-41, 987 ; 7-11) கூறும் ஏழு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் குறித்த பருவத்தில் மீண்டு வந்து பள்ளியிடத்து மகிழ்ந்துரைக்கும் நிலையில் நிகழ்த்தும் கூற்றுகள் முத்துவீரியம் குறிப்பிடும் புதிய கூற்றுகளாகும்.

வினையிடச் சூழலில் தலைவன் பாசறையில் புலம்பும் தொல்காப்பியக் கூற்று வீரசோழியத்தில் வளர்ச்சி பெற்றுள்ளது. இச்சூழலில் தொல்காப்பியம் (1092 ; 47, 987 ; 19-20) மொழியும் இரண்டு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. வினைமுற்றி மீளலில் தலைவன் தேர்ப்பாகனோடு கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் கூறும் கூற்று வளர்ச்சியும் ஒரு கூற்று (1092 ; 53-54) வீழ்ச்சியும் பெற்றுள்ளன. இனிதிருத்தலில் (1092 ; 49-52, 55-56) மூன்று கூற்றுகள் வீழ்ச்சி பெற்றுள்ளன. வினைமுற்றி மீண்ட தலைவன் இல்லத்தில் இனிதிருத்தல் சூழலில் நிகழ்த்தும் கூற்றுகள் வீரசோழியம் குறிப்பிடும் புதிய கூற்றுகளாகும்.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவி, உடன்படாது மறுத்தல், தலைவனை ஏற்றுக்கொள்ள விரும்பல், பழிதீர் முறுவலைத்

தோற்றுவித்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் அவ்வாறே கூறப்பட்டுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1057 ; 1-2, 5) குறிப்பிடும் நான்கு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இடந்தலைப்பாட்டில் தலைவி 'நாணுமிக வரினும்' மொழியும் தொல்காப்பியக் கூற்று வளர்ச்சி பெற்றுள்ளது.

பாங்கற் கூட்டத்தில் தலைவி, தலைவனது பெருந்தன்மையை உணர்வதாக வீரசோழியம் குறிப்பிடுவது புதிய கூற்றாகும்.

தோழி மதியுடம்பாட்டில் நிகழ்ந்ததை மறைத்துத் தலைவி கூறுதலாகச் சுட்டும் தொல்காப்பியக் கூற்று பின் தோன்றிய அக இலக்கணங்களில் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளது. குறைநயத்தலில் தொல்காப்பியம் (1057 ; 21, 17-20) கூறும் இரண்டு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. தலைவி, தலைவனை அறியாதவள் போலக் கூறி, பிறகு மடலேறத் துணிகின்றாள் என்பதைக் கேட்டவுடன் ஆற்றாதவளாய்த் தலைவனைக் காண வேட்கை கொண்டு கையுறை ஏற்றுக்கொள்ளல் சூழலில் மொழிதல் புதிய கூற்றுகளாக அறியப் பெறுகின்றன.

இருவகைக் குறியில் தொல்காப்பியம் குறிப்பிடும் தலைவன் குறிவரக் காலம் தாழ்க்கும்போது வருந்துதல், பிரிந்தவழிக் கலங்குதல், தோழி கூறியதை ஏற்றுக்கொள்ளாதிருத்தல், குறியிடம் சென்று மயங்கல், தலைவனைக் காண வேட்கை கொள்ளுதல் என்பன பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1053 ; 1, 6-7, 8, 1057; 9, 10, 34) மொழியும் ஆறு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. தலைவி தான் விளையாடிய இடங்களை நோக்கி வருந்துதல், வழியருமை கூறி குறி விலக்கல், தலைவனைக் காணாது காதல் வேட்கையால் புலம்பல், தலைவி

பல்வேறு இடையூற்றால் சந்திக்க இயலாது வருந்துதல் ஆகிய சூழல்களில் மொழிதல் புதிய கூற்றுகளாகும்.

ஒருவழித்தணத்தலில் தலைவி, தலைவன் வாராது வரவை நீட்டிக்க வருத்தமுற்றிரங்கலாகத் தொல்காப்பியம் மொழிதல் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது. இச்சூழலில் தொல்காப்பியம் (1057 ; 6-8) இயம்பும் ஐந்து கூற்றுகள் வீழ்ச்சி பெற்றுள்ளன.

வரைவுவேட்கைச் சூழலில் செவிலி களவினை அறியுமிடத்தும் வரைவிடைப் பிரிவில் தலைவனை இயற்பட மொழியுமிடத்தும் தொல்காப்பியம் குறிப்பிடும் கூற்றுகள் பின்தோன்றிய அக இலக்கணங்களில் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளன. தலைவன் இரவுக்குறியில் வருங்கால் பொழுதும் வழியருமையும் நினைத்து வருந்துதல், இற்செறித்தலால் புலம்பல், வெறியாட்டிடத்து அஞ்சுதல், நொதுமலர் வரைவை நீக்க வேண்டல், தலைவனின் தமர் வரைவொடு வருமிடத்துக் கூற்று நிகழ்த்தல், அறத்தொடு நிற்றலில் களவொழுக்கத்தைச் செவிலியிடம் கூற வேண்டல், வரைவிடைப் பிரிந்தவிடத்து ஆற்றாளாதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சியடைந்துள்ளன. இற்செறிப்பு (1057 ; 26, 12-13, 27-29), தோழியை வரைவுகடாவச் செய்தல் (1053 ; 11-14) ஆகிய ஒவ்வொன்றிலும் மூன்று, வரைவிடைப் பிரிவில் (1057 ; 33, 22, 1058; 2, 1057 ; 33, 1053 ; 9, 1059 ; 1-5) ஏழு ஆகிய தொல்காப்பியக் கூற்றுக்ள் வீழ்ச்சி பெற்றுள்ளன. வரைவிடைப் பிரிந்த தலைவனது வரவு அறிந்து தலைவி வாழ்த்துதல் புதிய கூற்றாகும்.

உடன்போக்கில் தலைவி, தனது நாணத்தைக் கைவிடுதலின்போது கூற்று நிகழ்த்துவதாகக் கூறும் தொல்காப்பியக் கூற்று பிற்கால அக

இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. தலைவி, தலைவனுடன் சுரத்தில் செல்லும்போது தளர்வடைவதாக வீரசோழியம் மொழிதல் புதிய கூற்றாகும். உடன்போக்கிடையீட்டில் தலைவி, தலைவன் வயத்தளாகவே இருத்தல், தலைவி உடன்போக்கில் சென்றதை அறிந்த தமர், தன்னுடன் மீட்டுக்கொண்டு வருதல், மீட்சியில் தலைவனுடன் சென்ற தலைவி சிலநாள் தங்கியிருந்து திரும்பி வருதல், வரைவு மலிவில் தலைவன் விடுத்த பரிசப் பொருள்களைக் கண்டு மகிழ்தல் ஆகிய சூழல்களில் மொழிதல் புதிய கூற்றுகளாக அறியப்பெறுகின்றன.

மலிவில் தொல்காப்பியம் (1093 ; 1-4) குறிப்பிடும் மூன்று கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வீழ்ச்சியடைந்துள்ளன. தலைவி, தான் ஆற்றியிருந்ததற்கான காரணம் கூறல் புதிய கூற்றாகும். ஊடலில் தொல்காப்பியம் கூறும் தலைவி, தலைவனிடம் இஃதெங்கையர் கண்டால் நன்றாயிருக்கும் என்றல் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளது. தலைவி, தலைவன் மீது ஊடல் கொண்டு நீக்கல், வாயில்களிடத்துக் கூறல், தலைவனை ஏற்றுக்கொள்ளல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1093 ; 15-27, 32-41) இயம்பும் பன்னிரண்டு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. ஊடல் கொண்ட தலைவி, தலைவனை ஏற்றுக்கொள்ளல், புதல்வனை வாயிலாகக் கொண்டு செல்ல வாயில் நேர்தல், தற்புகழ்தல் என்பன புதிய கூற்றுகளாக இடம்பெற்றுள்ளன.

பிரிவில் தொல்காப்பியம் குறிப்பிடும் தலைவி, தலைவன் மீது கொண்ட வேட்கையின்கண் கூற்று நிகழ்த்துதல் பிற அக இலக்கணங்களில் ஓதல், வேந்தர்க்குற்றுழி, காவல், பொருள் பிரிவுகளின்போது கூற்றுகள் மொழிவதாக வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1093 ; 7) சுட்டும் ஒரு கூற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

தோழி முன்னுறவுணர்தலில் பல்வகை மறைபொருள்படக் கூறி ஆராயுமிடத்து நிகழ்த்தும் தொல்காப்பியக் கூற்று பின் தோன்றிய அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. குறையுற உணர்தலில் தோழி, தலைவன் தழையும் கண்ணியும் கொண்டுவந்து குறையுற்று நிற்குமிடத்து ஆராய்ந்து குறிப்பு உணர்தலில் மொழியும் பல்வேறு கூற்றுகள் புதிய கூற்றுகளாக இடம்பெற்றுள்ளன. இருவரும் உள்வழி அவன்வர உணர்தலில் தொல்காப்பியம் குறிப்பிடும் தோழி, தலைவி பொறுத்திருந்த காரணம் குறித்த வழிக் கூறுதல் வளர்ச்சி அடைந்துள்ளது. சேட்படையில் தோழி, தலைவனது பெருமை, அருமை கூறி அகற்றுதல், நின் குறையைத் தலைவியிடம் அறிவித்துப் பின் என்மாட்டு வாவென்றல், வருத்தத்தை நீக்கல், பேதைப் பருவம் கூறல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் மாற்றமின்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. தோழி தலைவனிடம் உலகத்தாரைப் போல மணந்துகொள்ளென்றல், அச்சத்தைக் கூறல், நகைமொழி மொழிதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சியாகவும் இச்சூழலில் தொல்காப்பியம் (1060 ; 12) மொழியும் ஒரு கூற்று வீழ்ச்சியாகவும் குறிக்கப்படுகின்றன. மடல் விலக்கில் தோழி, தலைவனது மடலேற்றினை விலக்கல், குறைநேர்தலில் தோழி தழையேற்று, தலைவியிடம் சென்று தழையேற்கச் செய்தல் சூழல்களில் மொழிதல் புதிய கூற்றுகளாகும்.

குறைநயப்பித்தலில் தொல்காப்பியம் குறிப்பிடும் தோழி, தலைவியைக் குறை நயப்பிப்பதாகக் கூறுதல் பின் வந்த அக இலக்கணங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது. இச்சூழலில் தொல்காப்பியம் (1060 ; 17) கூறும் ஒரு கூற்று வீழ்ச்சி பெற்றுள்ளது.

இருவகைக் குறியில் தோழி, விருந்தோம்பலை விரும்பல், தலைவி குறை அருளியதைத் தலைவனுக்குக் கூறவிரும்பல் என்பன பின் தோன்றிய அக இலக்கணங்களில் மாற்றமில்லாமல் குறிப்பிடப் பட்டுள்ளன. தலைவி அல்லகுறிப்பட்டதைத் தோழி, தலைவனிடம் கூறுதலாகத் தொல்காப்பியம் மொழிதல் வளர்ச்சி பெற்றுள்ளது. இச்சூழலில் தொல்காப்பியம் (1060 ; 22, 16, 27-28) கூறும் மூன்று கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. பகற்குறியில் தோழி, தலைவியைக் குறியிடத்துய்த்து பிறகு ஆடிடம் விடுத்து தலைவனிடம் வரைவு கடாவுதல், ஒருசார் பகற்குறியில் தலைவியைக் குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக் கூற, வருந்திய நிலையில் சிறைப்புறமாகக் குறியிடத்து வந்த தலைவனிடம் ஓம்படை சாற்றல், பகற்குறி இடையீட்டில் தலைவனையும் தலைவியையும் குறியிடம் விலக்கி, தலைவியை இல்லிற்கு அழைத்துச் செல்லல், இரவுக்குறி வந்த தலைவனிடம் தலைவியைக் குறியிடத்துக் கொண்டு சென்று, பிறகு பல்வேறு வகையில் வரைவுபயப்பக் கூறல் ஆகிய நிலைகளில் மொழிதல் புதிய கூற்றுகளாக அறியப்பெறுகின்றன.

தலைவன் ஒருவழித்தணத்தலை விரும்பியவிடத்துத் தோழி நிகழ்த்தும் தொல்காப்பியக் கூற்று பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. வரைவு வேட்கையில் தொல்காப்பியம் (1060 ; 26) கூறும் ஒரு கூற்று வீழ்ச்சியடைந்துள்ளது. தலைவியின் வேட்கை அறிந்த தோழி, தலைவனிடம் பல்வேறு வகையில் வரைவு கடாவுதலாக மொழியும் கூற்றுகள் புதிய கூற்றுகளாகும். வரைவு நீட்டிப்புச் சூழலில் தொல்காப்பியம் (1060 ; 43) மொழியும் ஒரு கூற்று வீழ்ச்சியாகும். வரைவு கடாவுதலில் தலைவி இற்செறிப்பு, வழியருமையாகிய நிலைகளில் வருந்துதல், தலைவனது சிறப்புக் கூறி வரைவுகடாவுதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. இச்சூழலில்

தொல்காப்பியம் (1060 ; 37-38) சுட்டும் ஒரு கூற்று வீழ்ச்சியாகும். அறத்தொடு நிற்றலில் தலைவியை நொதுமலர் வரையக் கருதியவழி மொழியும் தொல்காப்பியக் கூற்று மாற்றமின்றி அமைந்துள்ளது. செவிலி, கட்டும் கழங்குமிட்டுக் குறிபார்த்தல், வெறியாடல் நிகழ்த்தல், தலைவி தன் காதலை செவிலி மனத்துட்படுமாறு கூறல், வரைவிடைப் பிரிவில் தோழி, தலைவனிடம் தலைவியைப் பாதுகாத்துக் கொள்ளென்றல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

உடன்போக்கில் தொல்காப்பியம் கூறும் தோழி, தலைவியை உடனழைத்துக்கொண்டு செல்லாவிடில் நேரும் துன்பத்தைக் கூறுதலை முத்துவீரியம் சுட்டுகின்றது. தலைவியை உடன்போக்கற்குத் துணிதல், விடுத்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பிற்கால அக இலக்கணங்களில் வளர்ச்சி அடைந்துள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (985 ; 3, 4-5, 6-10) குறிப்பிடும் மூன்று கூற்றுகள் வீழ்ச்சி பெற்றுள்ளன. கற்பொடு புணர்ந்த கவ்வையில் தலைவி உடன்போக்கில் சென்றதைச் செவிலியிடம் கூறிப் புலம்பல், மீட்சியில் உடன்போக்கில் சென்றோர் மீண்டு வருவதை நற்றாய்க்கு உணர்த்தல், தன்மனை வரைதலில் தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொண்டதைக் கூறல் ஆகிய பல்வேறு நிலைகளில் மொழிதல் புதிய கூற்றுகளாக இடம்பெற்றுள்ளன. வரைவு மலிவில் தோழி, தலைவியிடம் விரைவில் வரைவு நிகழும் என்று வற்புறுத்துவதாகத் தொல்காப்பியம் கூறுதல் வளர்ச்சி அடைந்துள்ளது.

வரைந்து கோடலில் தோழி, தலைவனிடம் வாழ்த்துரைத்து எப்போதும் தலைவி மீது கொண்டுள்ள அன்பு மாறாதிருக்கும்படிக் கூறுதலில் நிகழ்த்தும் கூற்றுகள் மாறனகப்பொருளில் கூறப்பட்டுள்ளன.

இல்வாழ்க்கையில் தொல்காப்பியம் (1096 ; 1-4) மொழியும் மூன்று கூற்றுகள் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வீழ்ச்சியடைந்துள்ளன. தலைமக்களின் இல்வாழ்க்கை குறித்துத் தோழி மொழியும் கூற்றுகள் புதிய கூற்றுகளாகும். ஊடலின்போது தலைவன் இரங்கத்தக்க நிலையில் திகழ்தல், குற்றமுடையனாதல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் மாற்றமின்மை என்றும் தலைவி, வாயில் நேராமை கருதி வருந்துதல், நாணம் கொள்ளல், புலவி தீர்த்தல், தோழி வாயில் நேராதிருத்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சி என்றும் அறியப்பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1096 ; 5-10, 13, 15-17, 20-22, 25-26) கூறும் ஒன்பது கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. தலைவனது புறத்தொழுக்கினால் தலைவி வருத்தமுற்று பொறுத்திருக்கும் நிலையில் மொழிதல் புதிய கூற்றுகளாகும்.

பிரிவில் தொல்காப்பியம் குறிப்பிடும் தோழி கூற்று பிற அக இலக்கணங்களில் ஓதல், பகைதணிவினை, வேந்தர்க்குற்றுழி, காவல், பொருள்வயிற் பிரிவு ஆகிய பல்வேறு சூழல்களில் வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (1096 ; 29-30) கூறும் ஒரு கூற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

கற்பொடு புணர்ந்த கவ்வையில் பார்ப்பான் உலக இயல்பென்று எடுத்துரைத்தல், உடன்போக்கிடையீட்டில் நற்றாயிடம் கூறல் என்பன பிற அக இலக்கணங்களில் இடம்பெற்றுள்ள புதிய கூற்றுகளாகும். பிரிவின்போது பார்ப்பானுக்குரியதாகத் தொல்காப்பியம் (1123) மொழியும் ஆறு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. பாங்கற் கூட்டத்தில் பாங்கன், தலைவனுக்குப் பல்வேறு அறிவுரைகளைக் கூறியும் கேளாத நிலையில் தலைவியோடு கூட்டியுரைத்தலில் நிகழும் கூற்றுகள் புதிய

கூற்றுகளாக அமைகின்றன. அறத்தொடு நிற்றலில் செவிலி, தலைவியின் உடல் வேறுபாடு கண்டு வினவல், தோழியை வினவல் என்பன மாற்றமின்மையாகவும் இச்சூழலில் தொல்காப்பியம் (1061 ; 1-2, 5-7) குறிப்பிடும் ஆறு கூற்றுகள் வீழ்ச்சியாகவும் இடம்பெற்றுள்ளன. செவிலி, கட்டுவிச்சியிடம் வினவி வேலனை அழைத்தல், வெறி விலக்கற்குக் காரணமென்னவென்று வினவல், தலைவியின் கற்பு மிகுதி தோன்ற அறத்தொடு நிற்றல் ஆகியவை புதிய கூற்றுகளாகும்.

உடன்போக்கில் தொல்காப்பியம் கூறும் செவிலி, தலைவி கற்புக் கடம் பூண்டாள் என்றுரைத்தல் பிற்கால அக இலக்கணங்களில் மாற்றமின்றிக் கூறப்பட்டுள்ளது. இச்சூழலில் தொல்காப்பியம் (1061 ; 10-11) மொழியும் இரண்டு கூற்றுகள் வீழ்ச்சி பெற்றுள்ளன. கற்பொடு புணர்ந்த கவ்வையில் செவிலி, தலைவியைத் தேடிப் பின் செல்லாது வருந்துவதாகத் தொல்காப்பியம் மொழிதல் வளர்ச்சி பெற்றுள்ளது. செவிலி, வழியிடைக் கண்ட பொருள்களுடன் நிகழ்த்தும் கூற்றுகள், மீட்சியில் செவிலி, தலைவி தலைவனது ஊருக்குச் சென்றதை நற்றாயிடம் கூறல், தன்மனை வரைதலில் தலைவியைத் திருமணம் செய்துகொண்டு இன்று இம்மனைக்கு வருவர் என்றல் ஆகிய சூழல்களில் குறிப்பிடும் கூற்றுகள் புதிய கூற்றுகளாகத் திகழ்கின்றன. இல்வாழ்க்கைச் சூழலில் செவிலி மொழியும் தொல்காப்பியக் (1099) கூற்றுகள் இரண்டு வீழ்ச்சியாகவும் தலைவியின் இல்வாழ்க்கைத் தன்மையை அறிந்த செவிலி நற்றாய்க்குக் கூறும் பல்வேறு கூற்றுகள் புதிய கூற்றுகளாகவும் கண்டறியப்பட்டுள்ளன.

நற்றாய் வரைவு மறுக்கப்பட்ட நிலை, தலைவியின் வேறுபாட்டிற்கான காரணம் வினவுதல் ஆகிய சூழல்களில் அறத்தொடு நிற்றல் பிற அக இலக்கணங்கள் குறிப்பிடும் புதிய கூற்றுகளாகும்.

கற்பொடு புணர்ந்த கவ்வையில் தொல்காப்பியம் குறிப்பிடும் புள் நிமித்தம் பார்த்தல், வழியினது இயல்பு கூறல் ஆகியன மாற்றமின்றி மொழியப்பட்டுள்ளன. நற்றாய் தன்னையும் தலைவி, தலைவனையும் குறித்துக் கூற்று மொழிதல், நன்மை பற்றிக் கருதுதல், தோழியிடம் புலம்பல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் வளர்ச்சிபெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (982 ; 2-7) மொழியும் ஐந்து கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. மீட்சியில் வேலனை வினவல், தன்மனை வரைதலில் தலைவனின் தாய் எம் அகத்து அவர்களுக்குக் கடிமணம் நிகழ்த்த ஒப்புக்கொள்வாளோ என்றல், உடன்போக்கிடையீட்டில் தலைவியின் உடன்போக்கினை நற்றாய் தமருக்கு மொழிதல், பரத்தையிற்பிரிவில் தலைவி ஊடல் தணியாதவளாகக் காணப்படுகின்றாள் என்றல் ஆகிய கூற்றுகள் புதிய கூற்றுகளென்று அறியப்பெற்றுள்ளன.

செவிலிக்குரிய பதின்மூன்று கூற்றுகள் நற்றாய்க்கும் பொருந்தி வரும். நற்றாய் அறத்தொடு நிற்றலில் தொல்காப்பியம் கூறும் வெறியாட்டெடுக்கக் கருதுதலை வீரசோழியம் சுட்டுகின்றது. இச்சூழலில் (1061 ; 1-2, 5-7) மொழியும் எட்டுக் கூற்றுகள், உடன்போக்கில் (1061 ; 8-11) மூன்று கூற்றுகள், கற்பொடு புணர்ந்த கவ்வையில் (1061 ; 10) ஒரு கூற்று என்பன வீழ்ச்சி பெற்றுள்ளன. உடன்போக்கில் சென்றோர் திரும்பி வருதலை அறிந்த தாயர் கூற்று நிகழ்த்துதலைத் தமிழ்நெறி விளக்கம் குறிப்பிடுகின்றது.

பாணன், பரத்தையிற் பிரிவில் புலந்துரைத்தல், தலைவியின் பெருமை கூறல் ஆகியன பின் வந்த அக இலக்கணங்கள் மொழியும் புதிய கூற்றுகளாகும். வினைவயிற்பிரிவில் தொல்காப்பியம் (1115) கூறும் இரண்டு கூற்றுகள், கூத்தர் ஊடலின்போது தொல்காப்பியம் (1114, 1115) இயம்பும் பத்து கூற்றுகள் ஆகியன வீழ்ச்சி பெற்றுள்ளன.

விறலிக்குரிய கூற்றுகளைத் தொல்காப்பியமும் பின் தோன்றிய அக இலக்கணங்களும் குறிப்பிடவில்லை.

பரத்தை, பரத்தையிற் பிரிவின்போது சேடியைப் பழித்து தலைவனது தேர்வரவு கண்டு தம்முளுரைக்கும் கூற்றுகள் புதிய கூற்றுகளாகும்.

ஊடலில் காமக்கிழத்திக்குரியதாகத் தொல்காப்பியம் (1097) இயம்பும் எட்டுக் கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வீழ்ச்சி பெற்றுள்ளன. இல்வாழ்க்கையில் காமக்கிழத்தியும் இரண்டாம் மனைவியும் தலைவியை எதிர்கொண்டழைத்து உபசரிப்பதை வீரசோழியம் குறிப்பிடுகின்றது.

இல்வாழ்க்கைச் சூழலில் அறிவருக்குரியதாகத் தொல்காப்பியம் (1099) மொழியும் இரண்டு கூற்றுகள் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வீழ்ச்சி அடைந்துள்ளன.

கண்டோர் வரைவு முடுக்கத்தில் தலைவி, கண்துயிலாமைக்குக் காரணமென்னவென்று கூறலை முத்துவீரியம் சுட்டுகின்றது.

உடன்போக்குச் சூழலில் உடன்போக்கில் செல்வோரிடம் வழியருமை கூறுதல், சேய்மையில் செல்லுமிடத்து மொழிதல், நகரணிமை இயம்பல், செவிலியைத் தடுத்தல் ஆகிய தொல்காப்பியக் கூற்றுகள் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வளர்ச்சி பெற்றுள்ளன. இச்சூழலில் தொல்காப்பியம் (986 ; 5-6, 7) கூறும் இரண்டு கூற்றுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. வீரசோழியம் குறிப்பிடும் தமருக்கு அறிவுரை கூறுதல் புதிய கூற்றாகும். கற்பொடு புணர்ந்த கவ்வையில் கண்டோர் இரங்குதல் புதிய கூற்று என்றும் மீட்சியில் தொல்காப்பியம் இயம்பும் தலைவியின் வரவினைத் தோழிக்கு உணர்த்துதல் மாற்றமின்மை

என்றும் அறியப்பெறுகின்றன. வரைந்துகோடலில் தலைவியின் மணக்கோலத்தினைக் கண்டு கண்டோர் மகிழ்தல், பரத்தையிற் பிரிவில் தலைவியின் ஊடலுக்குரிய காரணங்களை எடுத்துரைத்தல் என்பன புதிய கூற்றுகளாகும்.

இளையோர் பொருள்வயிற் பிரிவில் தொல்காப்பியம் (1116) மொழியும் ஏழு கூற்றுகள் பின் தோன்றிய அக இலக்கணங்களில் வீழ்ச்சி பெற்றுள்ளன. பொருள் முடித்து வருகின்ற தலைவனை எதிர்கொள்ளல் புதிய கூற்றாகும்.

வாயில்கள் பரத்தையிற் பிரிவில் தொல்காப்பியம் (1098, 1455) மொழியும் இரண்டு கூற்றுகள் பிற அக இலக்கணங்களில் வீழ்ச்சியடைந்துள்ளன. தலைவியின் புலவி தீர்த்தல், தலைவியின் செவ்வணி கண்டு கூறல், தலைவி வாயில் மறுத்ததைத் தலைவனிடம் கூறல், தக்கான், தகான் என்றல், பொருள்வயிற் பிரிவில் தலைவியை ஆற்றுவித்தல் ஆகிய சூழல்களில் நிகழும் கூற்றுகள் புதிய கூற்றுகளாகும்.

பாகன், பொருள்வயிற் பிரிவில் வீரசோழியம் கூறும் தேரை விரைந்து செலுத்துதல், அறத்தொடு நிற்றலில் கட்டுவிச்சி, தலைவிக்கு முருகணங்கொழியப் பிறிதொன்றுமில்லையென்றுரைத்தல், உழையர் பரத்தையிற் பிரிவில் செவ்வணி கண்டு இரங்கிய நிலையில் தலைவியின் புலவிக்குக் காரணமென்னவென்று ஆராய்தல், இல்லோர் வரைபொருட் பிரிதலில் தலைவனின் வரவினை அறிந்த இல்லோர் மணமுரசு கேட்டு மகிழ்தல், வரைந்துகோடலில் தலைமக்களை எதிர்கொண்டழைத்து அலங்காரம் செய்தல், பரத்தையிற்பிரிவில் செவ்வணி விடுத்த நிலையில் தலைவன் இல்லிற்கு வர ஊடல்கொண்டு பிறகு வாயில் நேர்தல், கலந்துடன்வருவோர் கற்பொடு புணர்ந்த கவ்வையில் செவிலியைத் தேற்றல், தமர் அறத்தொடு நிற்றலில்

தலைவியின் தமர் வரைவு மறுக்க, தலைவனின் தமர் நிதியுடன் வருதல், உடன்போக்கில் சென்ற தலைவியை மீட்டுக்கொண்டு வரப் புறப்படல், உடன்போக்கிடையீட்டில் தலைவியின் உடன்போக்கினை அறிந்த தமர் சேர்ந்து கொள்ளல், இல்வாழ்க்கையில் மகப்பேறு வாய்த்த பிறகு தம்மூருக்கு அழைத்து வருதல், ஊரார், உடன்போக்குச் சூழலில் அம்பல், அலரைத் தோற்றுவித்தல், பரத்தையிற்பிரிவில் தலைவியின் கற்பினைப் புகழ்தல், அயலோர், உடன்போக்கில் நற்றாயிடம் தலைவியின் செயல் தக்கதென்றல் ஆகிய சூழல்களில் பிற மாந்தர் மொழிவன புதிய கூற்றுகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

துணைநூற் பட்டியல்

<u>முதன்மை நூல்கள்</u>

1. *அடிகளாசிரியர், திரு., (ப.ஆ.),* **தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் இளம்பூரணர் உரை,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *1985.*

2. *அருணாசலம் பிள்ளை, மு., (ஆ.உ.),* **தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம்,** மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, இரண்டாம் பதிப்பு, *1994.*

3. *இராமாநுஜையங்கார், கி. (செ.உ.ப.),* **ஸ்ரீ மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்,** செந்தமிழ்ப் பிரசுரம் - ருரு, மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, *1932.*

4. *இளங்குமரன், இரா.(ப.ஆ.),* **களவியற்காரிகை,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, *1973.*

5. இளம்பூரணர் — **தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்,**
திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
சென்னை,
2001.

6. கந்தசாமியார் & தேவநேயப்பாவாணர், ஞா., (தி.கு.உ.), — **தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை,**
திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை,
பதினாறாம் பதிப்பு, 2000

7. கனகசபாபதி பிள்ளை, எஸ்.,(ப.ஆ.), — **தொல்காப்பியப் பொருளதிகார முதற்பாகம் (நச்சினார்க்கினியம்),**
சாது அச்சுக்கூடம்,
சென்னை,
1934.

8. கோபாலையர், தி.வே., (ப.ஆ.), (மற்றும் பலர்), — **தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணம், வாழ்வியல் விளக்கம் இரா.இளங்குமரனார்,**
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2003.

9. மேலது, **தொல்காப்பியம்-பொருளதிகாரம்**
நச்சினார்க்கினியம்
(மூன்றாம் பகுதி) செய்யுளியல்,
வாழ்வியல் விளக்கம்
இரா.இளங்குமரனார்,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2003.

10. மேலது, **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**
சேனாவரையம்,
வாழ்வியல் விளக்கம்
இரா.இளங்குமரனார்,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2003.

11. மேலது, **தொல்காப்பியம் பொருளதிகாரம்**
பேராசிரியம் (முதல் பகுதி),
வாழ்வியல் விளக்கம்
இரா.இளங்குமரனார்,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2003.

12. கோவிந்தராச முதலியார், கா.ர., **அகப்பொருள் விளக்கம்**
(பழைய உரையுடன்),
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக்
கழகம், லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1963.

13. சண்முகம், செ.வை., (ப.உ.), **சுவாமிநாதம்,**
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்,
1975.

14. சாமிநாதையர், உ.வே., (ப.ஆ.), **தமிழ்நெறி விளக்கம் பொருளியல்**
(பழைய உரையுடன்),
சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம்,
மயிலாப்பூர்,
1937.

15. சிவலிங்கனார், ஆ., (தொ.கு.), **தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) கற்பியல்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1993.

16. மேலது, **தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) களவியல்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1994.

17. மேலது, **தொல்காப்பியம்-பொருளதிகாரம் (உரைவளம்) பொருளியல்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1994.

18. சுந்தரமூர்த்தி, கு., (வி.உ.), **தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1965.

19. மேலது, (ப.ஆ.), **முத்துவீரியம்,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1972.

20. சுப்பிரமணியன், ச.வே., **தொன்னூல் விளக்கம்,** தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.

21. மேலது, **தொல்காப்பியம் தெளிவுரை,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

22. சேயொளி, (ப.ஆ.), **இலக்கண விளக்கம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) மூலமும் உரையும்,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1976.

23. நக்கீரனார், (உ.ஆ.), **களவியல் என்ற இறையனார் அகப்பொருள்,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1953.

24. நாகராசன், ப.வெ., (ப.உ.), **அறுவகை இலக்கணம்,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.

25. பேராசிரியர் உரை, **தொல்காப்பியம் - பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1951.

26. வெள்ளைவாரணன், க., (ஆ.உ.), **தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
1986.

27. மேலது, **தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
1989.

28. மேலது, **தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் உரைவளம்,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
1994.

29. மேலது, **தொல்காப்பியம் புறத்திணை இயல் உரைவளம்,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
2001.

30. .... **தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை,**
திருநெல்வேலி,
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1956.

31. .... **தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1959.

துணைமை நூல்கள்

I. இலக்கிய நூல்கள்

32. நாகராசன், வி., (உ.ஆ.), **குறுந்தொகை (மூலமும் உரையும்),** புத்தகம் - 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

33. மேலது, **குறுந்தொகை (மூலமும் உரையும்),** புத்தகம் - 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

II. திறனாய்வு நூல்கள்

34. அமிர்தகௌரி, ஆ., **சங்க இலக்கியத்தில் உரையாடல்,** பாரி நிலையம், சென்னை, 1989.

35. இராகவையங்கார், மு., **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி,**
பதிப்பாளர்
மு.ரா.நாராயண ஐயங்கார்,
அட்வொகேட்,
மானாமதுரை,
மூன்றாம் பதிப்பு, 1960.

36. இராஜ இராஜேஸ்வரி, பு.பா., **நாலாயிரத்தில் அக மரபுகள் (நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அகப்பொருள் மரபுகள்),**
அருண்மொழி பதிப்பகம்,
சென்னை,
2001.

37. இராசாராம், சு., **அகமாந்தர்களில் கண்டோர்,**
பாக்யா வெளியீடு,
கல்லல்,
1995.

38. இராசாராம், துரை., **இறையனார் அகப்பொருள்,**
முல்லை நிலையம்,
சென்னை,
1997.

39. இராமகிருஷ்ணன், ஆ., **அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு,**
சர்வோதய இலக்கியப் பண்ணை,
மதுரை,
1982.

40. இராமநாதன் செட்டியார், மீ.பொன்., **அம்பிகாபதி கோவை,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, *1952.*

41. இலக்குவனார், சி., **தொல்காப்பிய ஆராய்ச்சி,** வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, *1961.*

42. இளங்குமரன், இரா., **பாணர்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், *1987.*

43. மேலது, **இலக்கண வரலாறு,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, திருத்திய பதிப்பு, *1999.*

44. கடிகாசலம், ந., & சிவசாமி, ச., (ப.ஆ.), **தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1999.*

45. கமலா, பொ.நா., **தொல்காப்பியத்தில் நவீன சிந்தனைகள்,**
காவ்யா,
பெங்களூர்,
1997.

46. காளிமுத்து, கா., **தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்,**
பூம்புகார் பிரசுரம் பிரஸ்,
சென்னை,
1983.

47. குழந்தை, **தொல்காப்பியர் காலத் தமிழர்,**
பாரி நிலையம்,
சென்னை,
1959.

48. மேலது, **தொல்காப்பியம் பொருளதிகாரம் குழந்தையுரை** (முதற்பகுதி),
வேலா பதிப்பகம்,
ஈரோடு,
1968.

49. கொழந்தசாமி, ப., **தமிழ்ப் புதுக்கவிதைகளில் அகப்பொருள் மரபுக் கூறுகள்,**
சிவமணி நூலகம்,
மொடக்குறிச்சி,
1991.

50. சண்முகம், இராம., **சங்க இலக்கியங்களில் வரைவுகடாதலும் அறத்தொடு நிற்றலும்,**
சரவணா பதிப்பகம்,
மதுரை,
1992.

51. சரளா ராசகோபாலன், **சங்க இலக்கியத்தில் தோழி,**
ஒளிப் பதிப்பகம்,
சென்னை,
1986.

52. சாம்பசிவனார், ச., **காப்பியர் வழியில்.....!**
வளவன் வெளியீடு,
மதுரை,
1992.

53. சிதம்பரனார், சாமி., **தொல்காப்பியத் தமிழர்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்.,
சென்னை,
2002.

54. சிவகாமி, ச., **இலக்கியப் பொருட் பகுப்பாய்வு (பக்தியும் அறமும்),**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1991.

55. சீனிவாசன், ம.பெ., **திருமங்கையாழ்வார் மடல்கள்,** அன்னம் (பி) லிட்., சிவகங்கை, 1987.

56. சுப்பிரமணிய பிள்ளை, கா., **பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1968.

57. மேலது, **பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து,** தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம், சேலம், 1939.

58. சுப்புரெட்டியார், ந., **அகத்திணைக் கொள்கைகள்,** பாரி நிலையம், சென்னை, 1981.

59. சுப்புரெட்டியார், நா., **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை,** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, நான்காம் பதிப்பு, 2002.

60. செகதீசன், இரா., **தொல்காப்பியப் பொருளதிகாரவழி அகநானூறு - ஓர் ஆய்வு,** முருகு பதிப்பகம், ஆம்பூர், 2002.

61. செயராமன், நா., **தமிழ் இலக்கிய நெறிகள்,** குமரன் பதிப்பகம், மதுரை, 1979.

62. சொக்கப்ப நாவலர், (உ.ஆ.), **தஞ்சைவாணன் கோவை,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1967.

63. சோமசுந்தர பாரதியார், ச., **தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை (அகத்திணையியல்),** நாவலர் புத்தக நிலையம், மதுரை, திருத்திய பதிப்பு, 1972.

64. சௌந்தரபாண்டியன், சு., **தமிழில் கோவை இலக்கியம்,** பாரதி புத்தகாலயம், சென்னை, 2000.

65. துரை அரங்கசாமி, மொ.அ., — **தொல்காப்பிய நெறி,**
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை,
1963.

66. தேவநேயன், ஞா., — **ஒப்பியன் மொழிநூல் முதன்மடலம் திராவிடம்**
(முதற்பாகம்), (தமிழ்),
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம், லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1971.

67. நீலகண்டன், ப., — **நாடக மேடை,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
1981.

68. பலராம ஐயர், ந., (உ.ஆ.), — **நாடகவியல்,**
வி.சூ.சுவாமிநாதன், பிரசுரகர்த்தர்,
சென்னை,
நான்காம் பதிப்பு, 1956.

69. பாஸ்கரதாஸ், ஈ.கோ., — **அகப்பொருள் பாடல்களில் தோழி,**
திருமனை,
கோவை,
1979.

70. பாலகிருட்டினன், நா., **தொல்காப்பியப் பொருளதிகார வழி நற்றிணை - ஓர் ஆய்வு,** இளங்கோ பதிப்பகம், சென்னை, 1988.

71. பாலசுந்தரம், ச., **தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை பொருளதிகாரம் III செய்யுளியல் & மரபியல்,** தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், 1991.

72. பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார்), தி.சு., **பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை,** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1983.

73. மாணிக்கம், வ.சுப., **தமிழ்க்காதல்,** பாரி நிலையம், சென்னை, 1962

74. மோகன், இரா., **இலக்கிய வளம்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1989.

75. ராஜகோபாலாச்சாரியார், கே., **இலக்கண விளக்கம் (பொருளியல்),**
ஸ்டார் பிரசுரம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1968.

76. வசந்தாள், த., **தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பார்வை,**
சென்னைப் பல்கலைக் கழகம்,
1990.

77. வரதராசன், வெ., **தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும்,**
பண்ணன் பதிப்பகம்,
சென்னை,
1973.

78. விசுவநாதன், அ., **சங்க இலக்கியச் சிந்தனைகள்,**
மங்கை பதிப்பகம்,
காரைக்குடி,
1995.

79. வெள்ளைவாரணன், க., **சங்ககாலத் தமிழ் மக்கள்,**
நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1950.

80. வெள்ளைவாரணன், க., **தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம்,**
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்,
1957.

III. கலைக் களஞ்சியங்கள்

81. அருணாசலம், ப., (ப.ஆ.), **சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்,**
தொகுதி - மூன்று,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
1988.

82. இலட்சுமணன், எஸ்., **வாழ்வியற் களஞ்சியம்,** தொகுதி-ஏழு,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
1988.

83. சாரங்கபாணி, இரா., (ப.ஆ.), **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்,**
தொகுதி-ஒன்று,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
1986.

IV. அகராதிகள்

84. அரங்கசாமி, பழனி., (ப.ஆ.), **பெருஞ்சொல்லகராதி,**
தொகுதி-மூன்று,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
1992.

85. இராமனாதன், பி., **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி,** தொகுதி - ஒன்று,
இன்ஸ்டிடியூட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடீஸ்,
சென்னை,
மறுபதிப்பு, 1991.

86. கதிரைவேற்பிள்ளை, நா., **தமிழ்மொழியகராதி,**
ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ்,
புதுதில்லி,
ஆறாம் பதிப்பு, 1984.

87. கந்தையா, ந.சி., **செந்தமிழ் அகராதி,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
மறுபதிப்பு, 1999.

88. கோபாலையர், தி.வே., **தமிழ் இலக்கணப் பேரகராதி,**
பொருள் - அகம் - ஒன்று,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2005.

89. மேலது, **தமிழ் இலக்கணப் பேரகராதி,**
பொருள் - அகம் - இரண்டு,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2005.

90. மேலது, **தமிழ் இலக்கணப் பேரகராதி,**
பொருள் - அகம் - மூன்று,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2005.

91. மேலது, **தமிழ் இலக்கணப் பேரகராதி,**
பொருள் - அகம் - நான்கு,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
2005.

92. கோபாலகிருஷ்ணக் கோனார், இ.மா., **மதுரைத் தமிழ்ப் பேரகராதி**
(முதல் பாகம்),
இரண்டாம் பதிப்பு, (ஆ.இ).

93. கௌமாரீஸ்வரி, எஸ்., (ப.ஆ.), **நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி,**
சாரதா பதிப்பகம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 2003.

94. சண்முகம்பிள்ளை, முத்து., **பெருஞ்சொல்லகராதி,**
தொகுதி - இரண்டு,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்,
1989.

95. சிங்காரவேலு முதலியார், ஆ., **அபிதான சிந்தாமணி,**
சாரதா பதிப்பகம்,
சென்னை,
2001.

96. .... **தமிழ் லெக்சிகன்,** தொகுதி-இரண்டு,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை,
1962.

97. .... **தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி முதலியன,**
சாது அச்சுக்கூடம்,
சென்னை,
1935.

98. .... **மணிமேகலைத் தமிழ்ச்சொல் அகராதி,**
மணிமேகலைப் பிரசுரம்,
சென்னை,
1979.

99. .... **கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,**
சென்னை,
மறுபதிப்பு, *1997.*

IV. ஆய்வுக் கட்டுரைகள்

100. அருள்மொழி, பா., ‘நம்பியகப்பொருளில் இலக்கணக் கோட்பாடுகளின் வரன்முறை’, **இருபதாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை,** தொகுதி - நான்கு, ச.அகத்தியலிங்கம், (ப.ஆ.), மற்றும் பலர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், *1988.*

101. இந்திரா மனுவேல், ‘தொல்காப்பியத்தில் பொருள் தளமும் பொருள் கூறுகளும்’, **தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்),** செ.ஜான் லாறன்ஸ், & கு.பகவதி (ப.ஆ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1998.*

102. சுந்தரம், மெ., ‘அகத்திணை இலக்கியத்தின் சிறப்பியல்புகள் சில’, **இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்,** ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, *1973.*

103. சிவகாமி, ச., 'தொல்காப்பியக் கூற்றுப் பகுப்பாய்வு',
தொல்காப்பிய ஆய்வுகள்,
இ.ப.த.மன்றம்,
அறிஞர் வ.சுப.மாணிக்கனார்
அறக்கட்டளைக் கட்டுரைகள்,
மு.முருகையன், (ப.ஆ.), மற்றும் பலர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
2000.

V.மலர்கள்

104. பெரியகருப்பன், இராம., சங்க இலக்கியத்தில் தலைமகன் கூற்று,
வையை மலர் ஐந்து,
மதுரைப் பல்கலைக் கழகம்,
மதுரை,
1980.

105. முத்துச்சண்முகன், (ப.ஆ.), **வையை மலர் ஐந்து,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
1980.

VI.ஆய்வேடுகள்

106. இராசாராம், சு., **சங்க இலக்கியங்களால் அறியலாகும் நடைமுறை வாழ்க்கை,**
முனைவர் பட்ட ஆய்வேடு,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி,
1998.

107. ரத்தினம், க., **சங்க அகப்பாடல்களில் கூற்று,**
முனைவர் பட்ட ஆய்வேடு,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை,
1976.

108. இரமேஷ், சா. **அகப்பாடல்களில் செவிலி,**
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி,
1990.

VII. ஆங்கில நூல்கள்

109. Ilakkuvanar, S., **Tholkappiyam (in English) with Critical Studies,**
'Kural Neri' Publishing house,
Madurai,
1963.

110. Thamzhannal (Periakaruppan, RM.) **Tradition and Talent in cankam Poetry,**
Madurai Publishing house,
Madurai,
1976.

பின்னிணைப்பு

அட்டவணை - 1

தலைவன் கூற்று

	இயற்கைப் புணர்ச்சி	வன்புறை	பிரிவுழி மகிழ்ச்சி	பிரிவுழிக் கலங்கல்	இடந்தலைப்பாடு	பாங்கற் கூட்டம்	தோழி மதியுடம்பாடு	தோழியிற் கூட்டம்	இருவகைக் குறி	வரைவு முடுக்கம்	ஒருவழித்தணத்தல்	வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்	உடன்போக்கு	உடன்போக்கிடையீடு	மீட்சி	தன்மனை வரைதல்	வரைவு மலிவு	வரைந்து கோடல்	மலிவு	ஊடல்	ஓதற் பிரிவு	பகைவயிற் பிரிவு	வேந்தர்க்குற்றுழிப் பிரிவு	தூதிற் பிரிவு	காவற் பிரிவு	பொருள்வயிற் பிரிவு	வினையிடம்	வினைமுற்றி மீளல்	இனிதிருத்தல்	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	14	1	-	1	1	2	2	8	3	-	-	-	6	-	-	-	-	-	15	5	1	4	1	1	1	10	3	2	3	84
இறையனாரகப் பொருள்	1	1	-	1	2	5	5	1	1	-	-	-	1	-	-	-	-	-	-	2	1	-	6	-	1	3	-	-	-	31
தமிழ்நெறி விளக்கம்	3	1	-	3	-	5	3	4	3	-	-	-	1	1	1	-	-	-	-	1	-	-	-	-	-	3	-	1	-	30
வீரசோழியம்	5	1	-	4	8	5	1	4	3	1	-	-	6	-	-	-	-	-	-	18	-	-	-	-	-	9	6	5	5	81
அகப்பொருள் விளக்கம்	15	6	2	5	5	11	-	18	21	-	3	6	6	1	1	1	1	-	1	7	-	-	-	-	-	-	-	-	-	110
களவியற் காரிகை	2	1	-	4	6	4	6	3	7	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	34
மாறனகப் பொருள்	17	7	2	5	5	12	-	20	21	-	3	6	6	1	1	1	1	3	1	9	-	-	-	-	-	-	-	-	-	121
இலக்கண விளக்கம்	15	6	2	5	5	11	-	18	21	-	3	6	6	1	1	1	1	-	1	7	-	-	-	-	-	-	-	-	-	110
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
முத்துவீரியம்	5	4	-	3	10	6	11	8	16	1	-	2	9	-	-	-	-	-	-	5	1	-	6	-	-	9	-	-	-	96
சுவாமிநாதம்	15	6	2	5	5	11	7	18	21	-	3	6	6	1	1	1	1	-	2	10	-	-	-	-	-	-	-	-	-	121
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
																														818

அட்டவணை - 2

தலைவி கூற்று

						வரைவு வேட்கை																	
	இயற்கைப் புணர்ச்சி	இடந்தலைப்பாடு	பாங்கற் கூட்டம்	தோழி மதியுடம்பாடு	குறை நயத்தல்	இருவகைக் குறி	ஒருவழித்தணத்தல்	பொழுதும் வழியுநமை யும் மொழிதல்	செவிலி அறிந்தமை	இற்செறிப்பு	வெறியாட்டு	வேற்று வரைவு	தோழியை வரைவு கடாவச் செய்தல்	அறத்தொடு நிற்றல்	வரைவிடைப் பிரிவு	உடன்போக்கு	உடன்போக்கிடையீடு	மீட்சி	வரைவு மலிவு	மலிவு	ஊடல்	பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	7	1	-	1	2	11	6	1	1	4	1	1	4	1	9	1	-	-	-	3	16	2	72
இறையனாரகப்பொருள்	-	-	-	-	-	1	-	-	-	4	-	-	-	-	2	1	-	1	-	-	2	5	16
தமிழ்நெறி விளக்கம்	-	-	-	-	1	1	-	-	-	1	3	-	1	1	-	1	-	1	-	-	3	4	17
வீரசோழியம்	3	2	1	-	1	4	-	-	-	-	1	-	2	1	-	2	1	2	-	-	12	11	43
அகப்பொருள் விளக்கம்	3	-	-	-	4	21	2	12	1	-	1	2	-	7	6	3	4	1	2	1	10	-	80
களவியற்காரிகை	-	-	-	1	1	2	-	4	-	-	2	-	-	1	2	1	-	1	-	-	-	-	15
மாறனகப்பொருள்	2	-	-	-	4	22	2	12	1	-	1	2	-	7	7	3	4	1	2	1	10	-	81
இலக்கண விளக்கம்	3	-	-	-	4	21	2	12	1	-	1	2	-	7	6	3	4	1	2	1	10	-	80
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
முத்துவீரியம்	-	2	-	-	3	6	10	-	-	-	2	-	1	2	6	2	-	-	-	-	18	10	62
சுவாமிநாதம்	3	-	-	-	4	21	1	12	1	-	1	2	-	7	6	3	4	1	2	1	20	-	89
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
																							555

அட்டவணை - 3

தோழி கூற்று

	மதியுடம்பாடு	சேட்படை	மடல் விலக்கு	குறைநேர்தல்	குறைநயப்பித்தல்	இருவகைக் குறி	ஒருவழித்தணத்தல்	வரைவு வேட்கை	வரைவு நீட்டிப்பு	வரைவு கடாதல்	அறத்தொடு நிற்றல்	வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு	உடன் போக்கு	கற்பொடு புணர்ந்த கவ்வை	மீட்சி	தன்மனை வரைதல்	வரைவு மலிவு	வரைந்து கோடல்	இல்வாழ்க்கை	ஊடல்	பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	2	9	-	-	2	6	1	1	1	4	4	1	6	-	-	-	1	-	3	15	2	58
இறையனாரகப்பொருள்	8	9	5	1	2	12	-	-	-	6	3	1	7	-	-	-	-	-	-	4	8	66
தமிழ்நெறி விளக்கம்	2	9	1	1	4	17	-	-	-	6	5	-	7	-	-	-	1	-	-	2	5	60
வீரசோழியம்	1	11	-	-	10	19	-	9	-	17	6	-	4	-	-	-	-	-	-	2	5	84
அகப்பொருள் விளக்கம்	8	10	3	5	8	37	7	2	-	20	1	9	6	-	1	2	4	-	5	8	-	136
களவியற்காரிகை	8	10	3	1	4	23	-	8	-	-	5	2	7	-	-	-	3	-	-	-	-	74
மாறனகப்பொருள்	8	10	3	5	8	38	7	3	-	19	4	10	6	-	1	2	4	2	5	9	-	144
இலக்கண விளக்கம்	8	10	3	5	8	37	7	2	-	20	1	9	6	-	1	2	4	-	5	8	-	136
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
முத்துவீரியம்	12	16	5	5	5	44	3	-	-	13	6	9	18	-	-	-	2	-	1	8	17	164
சுவாமிநாதம்	20	10	3	5	8	37	7	3	-	20	6	9	7	2	1	2	4	-	5	8	-	157
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
																						1079

அட்டவணை - 4

பார்ப்பான் கூற்று

	கற்பொடு புணர்ந்த கவ்வை	உடன்போக்கிடையீடு	பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-	6	6
இறையனாரகப்பொருள்	-	-	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-	-	-
வீரசோழியம்	-	-	-	-
அகப்பொருள் விளக்கம்	1	1	-	2
களவியற்காரிகை	-	-	-	-
மாறனகப்பொருள்	1	1	-	2
இலக்கண விளக்கம்	1	1	-	2
தொன்னூல் விளக்கம்	-	-	-	-
முத்துவீரியம்	-	-	-	-
சுவாமிநாதம்	1	1	-	2
அறுவகை இலக்கணம்	-	-	-	-
				14

அட்டவணை - 5

பாங்கன் கூற்று

	பாங்கற் கூட்டம்	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	7	7
தமிழ்நெறி விளக்கம்	7	7
வீரசோழியம்	6	6
அகப்பொருள் விளக்கம்	13	13
களவியற்காரிகை	8	8
மாறனகப்பொருள்	15	15
இலக்கண விளக்கம்	13	13
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	11	11
சுவாமிநாதம்	13	13
அறுவகை இலக்கணம்	-	-
		93

அட்டவணை - 6

செவிலி கூற்று

	அறத்தொடு நிற்றல்	உடன் போக்கு	கற்பொடு புணர்ந்த கவ்வை	மீட்சி	தன்மனை வரைதல்	இல் வாழ்க்கை	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	9	3	1	-	-	2	15
இறையனாரகப்பொருள்	-	-	6	-	-	1	7
தமிழ்நெறி விளக்கம்	2	-	3	-	-	-	5
வீரசோழியம்	4	1	3	-	-	-	8
அகப்பொருள் விளக்கம்	3	-	10	1	1	3	18
களவியற்காரிகை	3	1	8	-	-	3	15
மாறனகப்பொருள்	3	-	14	-	1	1	19
இலக்கண விளக்கம்	3	-	10	1	1	3	18
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-	-	-
முத்துவீரியம்	4	1	15	-	-	6	26
சுவாமிநாதம்	3	-	12	1	1	3	20
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-	-	-
							151

அட்டவணை - 7

நற்றாய் கூற்று

	அறத்தொடு நிற்றல்	கற்பொடு புணர்ந்த கவ்வை	மீட்சி	தன்மனை வரைதல்	உடன் போக்கி டையீடு	பரத்தையிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	10	-	-	-	-	10
இறையனாரகப்பொருள்	1	-	1	1	-	-	3
தமிழ்நெறி விளக்கம்	2	1	-	-	-	1	4
வீரசோழியம்	1	2	-	-	-	-	3
அகப்பொருள் விளக்கம்	-	9	1	1	-	-	11
களவியற்காரிகை	1	3	1	1	-	-	6
மாறனகப்பொருள்	1	10	2	1	-	-	14
இலக்கண விளக்கம்	-	9	1	1	-	-	11
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-	-	-
முத்துவீரியம்	-	5	-	-	-	-	5
சுவாமிநாதம்	1	8	1	1	1	-	12
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-	-	-
							79

அட்டவணை - 8

செவிலி, நற்றாய் இருவர்க்கும் பொதுவான கூற்று

	அறத்தொடு நிற்றல்	உடன்போக்கு	கற்பொடு புணர்ந்த கவ்வை	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	9	3	1	13
இறையனாரகப்பொருள்	-	-	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	1	-	1
வீரசோழியம்	1	-	-	1
அகப்பொருள் விளக்கம்	-	-	-	-
களவியற்காரிகை	-	-	-	-
மாறனகப்பொருள்	-	-	-	-
இலக்கண விளக்கம்	-	-	-	-
தொன்னூல் விளக்கம்	-	-	-	-
முத்துவீரியம்	-	-	-	-
சுவாமிநாதம்	-	-	-	-
அறுவகை இலக்கணம்	-	-	-	-
				15

இங்கு செவிலிக்குரிய தொல்காப்பியக் (1061) கூற்றுகள் நற்றாய்க்குக் கூறப்பட்டுள்ளன.

அட்டவணை - 9

பாணன் கூற்று

	பரத்தையிற் பிரிவு	வினைவயிற்பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	2	2
இறையனாரகப்பொருள்	2	-	2
தமிழ்நெறி விளக்கம்	1	-	1
வீரசோழியம்	-	-	-
அகப்பொருள் விளக்கம்	-	-	-
களவியற்காரிகை	-	-	-
மாறனகப்பொருள்	1	-	1
இலக்கண விளக்கம்	-	-	-
தொன்னூல் விளக்கம்	-	-	-
முத்துவீரியம்	1	-	1
சுவாமிநாதம்	-	-	-
அறுவகை இலக்கணம்	-	-	-
			7

அட்டவணை - 10

கூத்தர் கூற்று

	ஊடல்	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	10	10
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	-	-
அகப்பொருள் விளக்கம்	-	-
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	-	-
இலக்கண விளக்கம்	-	-
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	-	-
சுவாமிநாதம்	-	-
அறுவகை இலக்கணம்	-	-
		10

அட்டவணை - 11

பரத்தை கூற்று

	பரத்தையிற்பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	1	1
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	-	-
அகப்பொருள் விளக்கம்	1	1
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	1	1
இலக்கண விளக்கம்	1	1
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	3	3
சுவாமிநாதம்	2	2
அறுவகை இலக்கணம்	-	-
		9

அட்டவணை - 12

காமக்கிழத்தி கூற்று

	ஊடல்	இல்வாழ்க்கை	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	8	-	8
இறையனாரகப்பொருள்	-	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-	-
வீரசோழியம்	-	1	1
அகப்பொருள் விளக்கம்	-	-	-
களவியற்காரிகை	-	-	-
மாறனகப்பொருள்	-	-	-
இலக்கண விளக்கம்	-	-	-
தொன்னூல் விளக்கம்	-	-	-
முத்துவீரியம்	-	-	-
சுவாமிநாதம்	-	-	-
அறுவகை இலக்கணம்	-	-	-
			9

அட்டவணை - 13

அறிவர் கூற்று

	இல்வாழ்க்கை	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	2	2
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	-	-
அகப்பொருள் விளக்கம்	-	-
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	-	-
இலக்கண விளக்கம்	-	-
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	-	-
சுவாமிநாதம்	-	-
அறுவகை இலக்கணம்	-	-
		2

அட்டவணை - 14

கண்டோர் கூற்று

	வரைவு முடுக்கம்	உடன் போக்கு	கற்பொடு புணர்ந்த கவ்வை	மீட்சி	வரைந்து கோடல்	பரத்தையிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	6	-	1	-	-	7
இறையனாரகப்பொருள்	-	5	-	-	-	-	5
தமிழ்நெறி விளக்கம்	-	3	-	-	-	-	3
வீரசோழியம்	-	6	-	-	-	-	6
அகப்பொருள் விளக்கம்	-	3	1	1	-	1	6
களவியற்காரிகை	-	6	-	-	-	-	6
மாறனகப்பொருள்	-	3	1	1	1	1	7
இலக்கண விளக்கம்	-	3	1	1	-	1	6
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-	-	-
முத்துவீரியம்	1	7	-	-	-	4	12
சுவாமிநாதம்	-	3	1	1	1	1	7
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-	-	-
							65

அட்டவணை - 15

இளையோர் கூற்று

	பொருள்வயிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	7	7
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	1	1
அகப்பொருள் விளக்கம்	-	-
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	-	-
இலக்கண விளக்கம்	-	-
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	1	1
சுவாமிநாதம்	-	-
அறுவகை இலக்கணம்	-	-
		9

அட்டவணை - 16

வாயில்கள் கூற்று

	பரத்தையிற் பிரிவு	பொருள்வயிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	2	-	2
இறையனாரகப்பொருள்	3	3	6
தமிழ்நெறி விளக்கம்	-	-	-
வீரசோழியம்	2	-	2
அகப்பொருள் விளக்கம்	1	-	1
களவியற்காரிகை	-	-	-
மாறனகப்பொருள்	1	-	1
இலக்கண விளக்கம்	1	-	1
தொன்னூல் விளக்கம்	-	-	-
முத்துவீரியம்	3	-	3
சுவாமிநாதம்	3	-	3
அறுவகை இலக்கணம்	-	-	-
			19

அட்டவணை - 17

பாகன் கூற்று

	பொருள்வயிற் பிரிவு	மொத்தக் கூற்று
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	1	1
அகப்பொருள் விளக்கம்	-	-
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	-	-
இலக்கண விளக்கம்	-	-
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	-	-
சுவாமிநாதம்	-	-
அறுவகை இலக்கணம்	-	-
		1

அட்டவணை - 18

கட்டுவிச்சி கூற்று

	அறத்தொடு நிற்றல்	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	*1*	*1*
வீரசோழியம்	-	-
அகப்பொருள் விளக்கம்	-	-
களவியற்காரிகை	*1*	*1*
மாறனகப்பொருள்	-	-
இலக்கண விளக்கம்	-	-
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	*1*	*1*
சுவாமிநாதம்	-	-
அறுவகை இலக்கணம்	-	-
		3

அட்டவணை - 19

உழையர் கூற்று

	பரத்தையிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	-	-
அகப்பொருள் விளக்கம்	1	1
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	1	1
இலக்கண விளக்கம்	1	1
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	4	4
சுவாமிநாதம்	1	1
அறுவகை இலக்கணம்	-	-
		8

அட்டவணை - 20

இல்லோர் கூற்று

	வரைபொருட் பிரிதல்	வரைந்து கோடல்	பரத்தையிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-	-	-
இறையனாரகப்பொருள்	-	-	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-	-	-
வீரசோழியம்	-	-	-	-
அகப்பொருள் விளக்கம்	-	-	-	-
களவியற்காரிகை	-	-	-	-
மாறனகப்பொருள்	-	3	-	3
இலக்கண விளக்கம்	-	-	-	-
தொன்னூல் விளக்கம்	-	-	-	-
முத்துவீரியம்	1	-	3	4
சுவாமிநாதம்	-	-	-	-
அறுவகை இலக்கணம்	-	-	-	-
				7

அட்டவணை - 21

கலந்துடன் வருவோர் கூற்று

	கற்பொடு புணர்ந்த கவ்வை	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	-	-
அகப்பொருள் விளக்கம்	1	1
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	1	1
இலக்கண விளக்கம்	1	1
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	-	-
சுவாமிநாதம்	1	1
அறுவகை இலக்கணம்	-	-
		4

அட்டவணை - 22

தமர் கூற்று

	அறத்தொடு நிற்றல்	உடன் போக்கு	உடன்போக் கிடையீடு	இல்வாழ்க்கை	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-	-	-	-
இறையனாரகப்பொருள்	-	-	-	-	-
தமிழ்நெறி விளக்கம்	1	2	-	-	3
வீரசோழியம்	2	1	-	2	5
அகப்பொருள் விளக்கம்	-	-	-	-	-
களவியற்காரிகை	2	1	-	-	3
மாறனகப்பொருள்	-	-	-	-	-
இலக்கண விளக்கம்	-	-	-	-	-
தொன்னூல் விளக்கம்	-	-	-	-	-
முத்துவீரியம்	-	-	-	-	-
சுவாமிநாதம்	-	-	1	-	1
அறுவகை இலக்கணம்	-	-	-	-	-
					12

அட்டவணை - 23

ஊரார் கூற்று

	உடன்போக்கு	பரத்தையிற் பிரிவு	மொத்தக் கூற்றுகள்
தொல்காப்பியம்	-	-	-
இறையனாரகப்பொருள்	-	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-	-
வீரசோழியம்	1	1	2
அகப்பொருள் விளக்கம்	-	-	-
களவியற்காரிகை	-	-	-
மாறனகப்பொருள்	-	-	-
இலக்கண விளக்கம்	-	-	-
தொன்னூல் விளக்கம்	-	-	-
முத்துவீரியம்	-	-	-
சுவாமிநாதம்	-	-	-
அறுவகை இலக்கணம்	-	-	-
			2

அட்டவணை - 24

அயலோர் கூற்று

	உடன்போக்கு	மொத்தக் கூற்று
தொல்காப்பியம்	-	-
இறையனாரகப்பொருள்	-	-
தமிழ்நெறி விளக்கம்	-	-
வீரசோழியம்	1	1
அகப்பொருள் விளக்கம்	-	-
களவியற்காரிகை	-	-
மாறனகப்பொருள்	-	-
இலக்கண விளக்கம்	-	-
தொன்னூல் விளக்கம்	-	-
முத்துவீரியம்	-	-
சுவாமிநாதம்	-	-
அறுவகை இலக்கணம்	-	-
		1